தமிழ் இலக்கியத்தில் உலகாயதம்

Samaj Foundation Chenn

omain. Gurukul Kangri Co

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கியத்தில் உலகாயதம்

டாக்டர் க. நெடுஞ்செழியன்



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

DONATION

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கியத்தில் உல்காய்தம்

(1985ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு)

7948

DONATION

முனைவர் க. நெடுஞ்செழியன்
தமிழ்த் துறை
பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி
திருச்சி

Forwarded free of cost and
with the Compliments of the
Dept: of Education. Govt: of India,
New Delhi;

விற்பனை உரிமை
பாரி நிலையம்
184 பிரகாசம் சாலை
சென்னை-600 108

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல் விளக்கக் குறிப்பு

நூலின் பெயர்	தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம் MATERIALISM OF ANCIENT TAMILS
ஆசிரியர்	முனைவர் க. நெடுஞ்செழியன்
மொழி	தமிழ்
பதிப்பு	முதற்பதிப்பு
வெளியீட்டு நாள்	சூன் 1990
பதிப்புரிமை	மனிதம் பதிப்பகம், திருச்சி-21.
தாள்	14.2 கி. வெள்ளைத்தாள்
நூலின் அளவு	22×14 செ. மீ.
எழுத்து	10 புள்ளி
பக்கம்	உ0+476=496
படிகள்	1200
அச்சிட்டோர்	கவிக்குயில் அச்சகம். திருவல்லிக்கேணி, சென்னை-600 005
நூல் கட்டு	தாள் அட்டை
அட்டை வடிவமைப்பு	மருது
விலை	உருபா அறுபத்தைந்து
விற்பனை உரிமை	பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை-600 108
பொருள்	தமிழகத்தில் நிலவிய உலகாய்தம் எனும் மெய்யியல் பற்றிய டாக்டர் பட்ட ஆய்வேடு

சென்னைப் பல்கலைக்கழகம் வாயிலாகப் பல்கலைக்கழக நல்கை ஆணையம் (UGC) வழங்கிய நிதியுதவியுடன் வெளியிடப்பட்டது.

விலை : உருபா : 65-00

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

க. அன்பழகன்,
கல்வி அமைச்சர்.

தலைமைச் செயலகம்,
சென்னை-9.

நாள் : 03-06-1990

அணிந்துரை

தமிழ் இலக்கியத்தில் 'உலகாய்தம்' என்னும் ஆய்வு நூலைப் படித்தேன். கற்றுத் தேர்ந்து தெளிந்த சிந்தனையுடன் வரையப் பட்ட பயனுள்ள நூல் என்பது கண்டு மகிழ்ந்தேன்.

பலவற்றைப் படித்தறிவது ஒரு நிலை. அவற்றை ஒரு முறை யான சிந்தனைக்கு உளப்படுத்தி, கருத்து விளக்கம் அமையத் தொடுப்பதும், அவற்றின்வழி தெளியப்படாத உண்மைகளைத் தெளிவிப்பதும் - சில முடிவுகளை நாட்டுவதும் ஆய்வுத்திறனுடை யார்க்கே ஒல்லுவதாம்.

இந்த நூலை வரைந்த முனைவர் க. நெடுஞ்செழியன் அவர் களின் அறிவாற்றலும், ஆய்வுத் திறனும், நுண்ணுணர்வும், நடைத் தெளிவும், ஏது காட்டலும், கொள்கை நாட்டும் திறனும் பாராட் டத்தக்கவை என்பேன்.

பழந்தமிழர் வாழ்க்கை - இயற்கை நலம் ஓங்கிய சூழலில் அமைந்ததாகலின், இயற்கையுடன் இயைந்த வாழ்க்கை முறையால் விளைந்த நலன் தேர்ந்து, அதனை ஓம்பும் இயல்பினதாயிற்று. அந்த இயல்புடனேயே நாகரிக வளர்ச்சி கொண்டு மலர்ந்து மணம் பரப்புவதாயிற்று. சங்ககாலத் தமிழர் நாகரிகம் இதற்குச் சான்று.

பழக்கத்தால் மாந்தர்தம் உணவும், உடுக்கையும், அணிகலனும், சுவையிலும் வடிவத்திலும் வண்ணத்திலும் மாறிவருவது போன்று, வடபுலத்துச் சமயவாதிகள் வைதிகர்கள் ஆகியோரின் தாக்குர வால், சமயவழிப்பட்ட சில கருத்துக்களும் நம்பிக்கைகளும் தமிழர் களிடையே கால்கொண்டன. அவை நெடிது நிலைத்த பண்பாடு என்னும் கனியின் புறணியாக - மேல் தோலாகவே சூழ்ந்தது எனலாம்.

இயற்கையுடன் இயைந்த வாழ்வுடையரானார்க்கு, உலகோர் வாழ்வை மேம்படுத்தும் உயர்நோக்கே, உயர்ந்தோர் வழக்காக, அறநெறியாக அமைதல் இயல்பாகும். அவ்வகையில் எல்லோரும் மகிழ்ந்திருக்கச் செய்யும் நோக்கே மேம்பட்டு, பிறர் துன்பம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துடைத்துத் துணை நிற்பதே அவர்தம் மேற்கோள் ஆதலும் இயல்பே.

உழவுப் பயன் கண்டு, வேளாண்மை பெருக்கி, விருந்தோம்பலில் மகிழ்ந்து, ஒப்புரவு வளர்த்தோர்க்கு, இயற்கையின் வியத்தகு மாட்சியில் நாட்டம் செல்லும். அதனால், இயற்கையின் கூறுகளை நுணுகிக் காண்பதும், விரிவை அளப்பதும், அணு முதல் அண்டம் வரை நிலம், நீர், வளி, ஒளி, வெளி என்னும் வகைப்பட்ட இயற்பியல் மூலக்கூறுகளான ஐம்பூதங்களை-ஆய்ந்து அவற்றின் இயல்பைத் தெளிவதும் அறிவின் பயனாகும்.

அதன் பயனே, அக்காலத்தில் பிறநாட்டார் தெளியாத இயற்கையின் நுட்பங்கள் பலவற்றைத் தமிழர்கள் அறிந்தவராயினர் எனலாம்.

தமிழ் நிலத்து - அறிவரும் கணியரும் - அவர்தம் அறிவுத்திறத்தால் மக்களின் பெருமதிப்பிற்குரியராயினர். தொன்னூலாம் தொல்காப்பியம் கண்டார் தகுதியும் - நெறிநூலாம் திருக்குறள் வகுத்தார் சிறப்பும் அறிவரும் போற்றும் உயர்வுடைத்தன்றோ! சங்கப்புலவர்தம் சிந்தனை மாட்சியும் சான்றாவதன்றோ!

ஆயினும் மக்கள், சமுதாயப் பழக்கமாக இடம் பெற்று, பின் பற்றப்பட்டுவந்த பல தெய்வ வழிபாடுகளையும் சடங்குகளையும் ஒட்டி வளரும் நம்பிக்கைகளை ஏற்றவராதல் உலகியற்கை. முன்னோரை நினைந்து போற்றும் உணர்வினாலும், மறைந்த வீரர்களை நடுகல்லாய் நிறுவி வழிபட்ட பழக்கத்தாலும், ஊர்க் காவல் தெய்வம், பொதுத் தெய்வம் எனப்போற்றி வழிபட்ட வகையாலும், தெய்வ நம்பிக்கை பரவலாக நிலைபெறுவதாயிற்று.

அதை ஒட்டி-வழிபடுவதற்கான நாள், பொழுது குறிக்கப்பட்டு நல்ல நாள்-தீயநாள் எண்ணம் இடம்பெற்று. இறப்பிற்குப்பின் என்னாகும் என்னும் கேள்வியும் எழுந்து, மறுபிறவி, முற்பிறப்பு, பிறப்புக்கு ஏதுவாகும் கருமம, நல்வினை, தீவினை, சுவர்க்கம், நரகம் என்னும் முறையில் தெளிவற்ற பல எண்ணங்கள் உருப்பெற்றிருக்க வேண்டும். அந்தப் பழைய நிலையில் மந்திர - தந்திரங்களும் பிறந்திருக்கலாகும்.

பழந்தமிழ் மக்கள் இப்படிப்பட்ட நம்பிக்கைகட்கு இடம் கொடுத்தவரே எனினும், சடங்குகள் செய்வதற்குப் பூசாரிகளையும் குருமார்களையும் ஏற்றவரே எனினும், ஒரு குறிப்பிட்ட மதம் என்று சொல்லும் அளவில் ஒரு வரையறுக்கப்பட்ட நம்பிக்கைக்கு முழுவதும் ஆட்பட்டவரல்லர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்கள் பொதுவாகத் தெய்வநம்பிக்கை வழிப்பட்டதாகவும், மற்றவை பற்றி அவரவர் நிலைக்கேற்ப ஆராய்ந்து தெளியும் அறிவும் கொண்டவராக வாழ்ந்திருத்தல் வேண்டும். அவரவரும் தம் தம் மனநிலையைப் பொறுத்து - மதக்கட்டுப்பாடு எதுவும் உருவாகாத சூழலில் தம் எண்ணங்களில் உரிமை நிலையுடையவராய் வாழ்ந்திருக்க வேண்டும்.

மக்களிடம் இடம்பெற்ற நம்பிக்கைகளைத் துணையாகக் கொண்டே 'மதங்கள்' நாட்டப்பட்டன. மதங்களின் புனிதக்கொள்கைகளாக வகுத்துக் கூறப்பட்டவை கொண்டே அம்மதங்கள் மக்களிடம் இடம் பெற்றன. அதற்குரிய நம்பிக்கைகள், புராணங்களாலும் சாத்திரங்களாலும் வளர்க்கப்பட்டன. அவற்றின் விளைவாக-நம்பிக்கை வழிப்பட்ட சமய உணர்வே மக்களிடம் தழைக்கலாயிற்று. சமயக் கொள்கைகளும்—தத்துவங்களும், சமய வழிகாட்டிகளின் உய்த்துணர்வு ஆக அமைந்தமையினால், அவற்றை ஒப்புநோக்கி, எது சரி என்று தெளிவது மக்களுக்கு இயல்வதாக இல்லை. எந்தக் 'கற்பனை' அவர்களை ஆட்கொண்டதோ, அன்றி எந்த நம்பிக்கை அவர்கட்குப் பழக்கப்பட்டதோ அதற்கே அவர்கள் தம்மை ஒப்படைத்தனர்.

பழந்தமிழர் 'சமயம்' எது என்பது ஆய்வுக்குரியது. வழிபடு தெய்வங்களின் பெயர் கொண்டு; பிற்காலத்தில இடம் பெற்ற சமயங்கள் என்னும் சாளரத்தின் வழியாகக் காணப்படுவதால், அக்காலச் சமயத்தின் தோற்றமும் அதுவே ஆகிறது; நிறமுள்ள கண்ணாடிவழிக் காண்போருக்குப் பொருளும் அந்நிறத்தவாதல் போன்று!

குறிஞ்சி நில வழிபடு தெய்வமான முருகன்—சிவநெறிக்கு உரியதானதும முல்லை நிலத்து மாயோள் சக்தியாகி—சிவன் மனைவியானதும், முல்லை நிலத்துக் கண்ணன்—மால் வழிபடு தெய்வமாய் திருமாலிய மதத்துக்குரியதானதும்—நிலத்து வழிபடு தெய்வங்கள் ஆக நிலவியவை மதவழி முகவர்கள் ஆயினமைக்குச் சான்றாம். தென்னக மக்கள் தெய்வங்களிடையே பொதுநிலைத் தெய்வம் காண முயன்றதன் சான்றே—'சிவம்' ஆகலாம். தென்னாடுடைய 'சிவன்', பின்னர் 'ருத்திரன்' ஆகி—'பார்வதி மணாளனாய்'—'பரமேசுவரனும்' ஆயினன் எனலாம். இவ்வாறு சமயச் சாயம் பூசப்பெற்றது என்பதற்கு மேலும் பல காட்டலாகுமெனினும் விரிவஞ்சி விளக்கம் தவிர்க்கப்படுகிறது.

தமிழர்களின் வாழ்விலும், அறிவர் சிந்தனையிலும், உலகாய்தக் கொள்கைகள் இயல்பாக இடம் பெற்றிருந்த தொன்னாட்களில்—அவை அறிவு அடியாக நிலவியதாகலின்—நம்பிக்கை வழிபட்ட ஒரு கட்டுக்கோப்புடைய சமயமாக நிலவிட வாய்ப்பில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அக்காலத்தில் மக்கள் வழிபடும் தெய்வங்கள் பலவாயினும் 'சமய' 'மத' நோக்கும் அதனால் அழுத்தமான வேறுபாடும் தோன்ற இடமில்லை. வழிபடும் மக்களும் தெய்வங்களும் வேறு வேறு நிலத்தினவாகலின், ஒருவர் எந்தச் சமயத்தினர் என்னும் எண்ணமே, வடவரின் வேத வைதிக மதம் புகுந்த போதே தென்னகத்தில் அரும்பி இருக்கவேண்டும். மேலும், சமண—புத்த மதக் கொள்கைகள் இங்குப் பரப்பப்பட்ட காலத்திலேயே வைதிக ஆதிக்கத்தை வளர்க்க விரும்பியோரால் சமய வேறுபாட்டு உணர்வு வலுப்பெற்றதாக வேண்டும்.

பழந்தமிழர் பழக்கவழக்கங்களை அடியாகக்கொண்டு—வைதிக சமயம் தனது வருண தருமத்தை நிலைநாட்டும் வகையில் புரோகிதரைக் கொண்டு மக்கள்மீது ஆதிக்கம் செலுத்த முற்பட்டபோது, புத்த—சமண சமயங்கள் தென்னகத்தில் நிலை பெறாதவாறு செய்திட, தொடரப்பட்ட போராட்டங்களில் நால்வரும்—பன்னிரு ஆழ்வார்களும் பெற்ற வெற்றிகள் பலவாகும். அவர்தம் தேவாரமும் பாசுரமும் புராணங்களும் இந்த வெற்றிகளைப் பாராட்டிக் குறிப்பிடுகின்றன.

சமணமும் புத்தமும் அறிவு வழிபட்ட அடிப்படையில் சமுதாய அறநெறி வகுத்தனவாதலின் கற்பனை மிகுந்த நம்பிக்கைகளை வளர்த்த வைதிக சமயங்களின் செல்வாக்குடன் ஈடுகொடுக்க முடியாமற் போயிற்று எனலாம். பக்தி வழியில் உணர்வை ஆட்கொள்ளும் இயல்பு புத்தத்திலும் சமணத்திலும் அதிகமில்லாததும், அவை துறவுக்கு அதிகச் சிறப்பளித்ததும்—மக்களின் ஆதரவைப் பெருமளவில் பெறமுடியாமைக்குக் காரணமாகலாம்.

எளியோரின் இயல்பான அச்சத்தை நீக்கவும்—ஆசையை நிறைவேற்றவும் வல்லவை என்று நம்பப்படும் தெய்வமும்—மதமும், மக்களால் ஏற்கப்படுவது இயற்கை என்பதற்குத் தமிழகத்தில் வைதிகச் சார்புநிலை வளர்ந்ததே சான்றாம். 'உலகாய்தம்' என்னும் பெயரே—பிற்காலத்தில் அறிவியல் வழிப்பட்ட உலகியல் சிந்தனைக்கு வழங்கப்பட்ட பெயர். அந்தப் பெயர் சுட்டும் சிந்தனை, அந்நாளையத் தமிழர்தம் சிந்தனையாக மலர்ந்திருந்தது என்பதும் தெளிவு. அதன் அடியாக ஆசீவகம் எழுந்ததும், அறிவர்கள் சிந்தனையில் ஒருவகைச் சமயத்தாக்கம் ஏற்பட்டதன் விளைவேயாகும்.

"வேதச் சிந்தனைகள் வளர்ச்சி பெற்று 'ஒரு கடவுள்' கொள்கை தோன்றியது...... மனத்தில் பல கடவுளர் பக்தி இருந்ததை ஒரே கடவுளாக மாற்ற அது தத்துவத்துறையில் முயற்சி செய்தது. இது ஒன்றேதான் 'ஒரு கடவுள்' வணக்கம் தோன்றக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரணம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அரசுகள் தோன்றிய பகுதிகளில் ஒரே கடவுள் வணக்கமும் தோன்றியது.''

திரு. நா. வானமாமலையின் இந்தக் கூற்று—முழு உண்மையாகாது. அரசின் தோற்றம் இதற்குக் காரணம் என்பதும் சரியல்ல. தத்தம் மதத்தை—குறிப்பாக வைதிக ஆதிக்க மதத்தை நிலை நிறுத்த—தத்துவங்களைக் கூற வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானோர்—'ஒரே கடவுளை' முழுமுதற் கடவுளாகச் சுட்ட வேண்டிய நிலைக்கு ஆட்பட்டனர். ஆனால் வேதங்களின் தொடக்க காலத்தில்—தமது இன முன்னோரான எதிரிகளை அழித்த வீரர்கள் பலரைத் தம் தெய்வங்களாக—யாகத்தின் மூலம் அழைத்து அவிப்பலி தந்தனர் என்பதும், வேதங்களின் இறுதிக் காலத்திலும் பிரும்மா—விட்ணு—ருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளையும் போற்றினர் என்பதும் ஆய்வாளர் அறிவிக்கும் உண்மைகள். தெய்வங்கள் பலவற்றைப் போற்றுவதே வேதசாரம்.

ஆனால்—மக்கள் பழக்கத்தில் வெவ்வேறு தெய்வங்களை வணங்கி வழிபட்டாலும்—அறிவர் நிரம்பிய தென்னகத்தில் தத்துவச் சிந்தனையை வளர்த்த சித்தர்கள் "நட்டகல்லும்—எடுத்த கோயிலும்—வடித்த சிலையும் தெய்வமாகாது; உள்ளத்தினுள்ளே உருக்கொள்வதே அது'' என்று தாமுணர்ந்த வகையில் உணர்த்தியவர்கள், கடவுள் ஒன்றே என்னும் கருத்துக்கு வழி கோலியவர்கள் எனில் மிகையாகாது. வடபுலத்திலும் சித்தர்களாகத் திகழ்ந்தவர்களே தென்னக, திராவிடப் பண்பாட்டில் ஊறிய சிந்தனையினைக் கொண்டவர்களே—'ஒரு கடவுள்' கொள்கைக்கு வித்தூன்றினர் என்று கருதுவது தவறல்ல.

தெய்வ நம்பிக்கை—பல படிகளில் நீடித்து—'ஒரு கடவுள்' கொள்கை தத்துவச் சிந்தனையாக மலர்ந்தது தென்னகத்தில் என்று கருத நியாயமுண்டு. கடவுள் உண்டா—இல்லையா? இருப்பதற்கு என்ன சான்று? என்னும் கேள்விக்கு அடுத்தபடி, கடவுள் ஒன்றா? பலவா? தனித்தனி தன்மை—திறமை—தொழில் உடையனவா? எல்லாமாய் எங்குமாய் யாவற்றிற்கும் காரணமாய் நிலவும் ஒன்றேதானா? என்னும் கேள்வியும் மக்கள் எண்ணப் போக்கில் உருவாவதே! எனவே—'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் திருமூலர் கருத்து, வழிவழி வந்த சித்தர் சிந்தனை என்பது கருதத் தக்கது.

ஒருவகையில் பற்பல தெய்வங்கள் போற்றப்பட்டு, அவைகள் தனித்தனி மதச் சார்பு பெற்று—அவை பெயரால் மாறுபாடுகளும் வளர்க்கப்பட்ட நிலையில் "அரியும் அரனும் ஒன்று; அறியாதவர் வாயில் மண்ணு'' என்பன போன்ற கருத்துக்கள் உரம் பெற்றன எனினும், கடவுளை உள்ளத்து உணர்வாலேயே அறிவதாகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருதிய சித்தர்கள் 'கடவுள்' ஒன்று—பொது—அடையாளமற்றது—செம்பொருள்—ஆணுமல்ல—பெண்ணுமல்ல என்பன போன்ற இலக்கணத்துக்குரியதாகக் கொண்டனர்.

'கடவுள் ஒன்று' என்னும் அடியாக எழும் இலக்கணத்தை முற்றிலும் நுணுகி ஆய்வோர், 'அது' உண்டு என்று சொல்வதைத் தவிர—பிற வகையில் 'இல்பொருள்' விளக்கமாக, 'அது' அமைவதைத் தெளிவர்.

'கடவுள்' கொள்கையினை—அறிவு வழியில் ஆய்வு செய்வோர்க்கு அதை உண்டெனக் கூற இடமில்லை என்பதையும்—'நம்பிக்கை' வழியில் சிந்திப்போர்க்கு அதன் 'இருப்பற்ற தன்மையை' ஏற்க மனமிடந்தராது என்பதையும் நாம் தெளியலாம்.

ஒருவாறு தெளிவார்க்குக் 'கடவுள்' என்பது ஓர் எண்ணம். தெய்வ நம்பிக்கை வழியில் தழைத்த விழைவின் சின்னம். மனிதனின் மனோவாற்றலை வழிப்படுத்தும் ஓர் எண்ணம்; ஒரு குறியீடு. அந்த நினைவு, எண்ணம் கொள்ளாமலும்—அப்படி ஒரு கடவுள் இல்லை என்னும் கருத்துடனும்—மனிதன் தனது மனவாற்றலைப் பெருக்கிக் கொள்ளமுடியும். அது அவரவர் மனத்தில் படிந்து பதிந்து பயிற்சிக்குரியதாகிவிட்ட எண்ணங்களின் தொகுப்பின் பயனே என்பதுடன் அவரவர் மனப்பழக்கம் உருவாவதற்குரிய சூழல் வாய்ப்பதைப் பொறுத்தது என்றும் தெளியலாம். கடவுள் உண்டெனும் கொள்கையை ஏற்காத தருக்க வாதிகளே பலராக இருந்தனர் என்பது—அறிவார்ந்த சிந்தனை வழியின் முடிவாகும் உண்மை ஒன்றாகத்தான் இருக்க முடியும் என்பதற்குச் சான்று. பல்வேறு மதச் சார்பினராய் இருந்து பகுத்தறிவு வழியில் சிந்திக்க முற்பட்ட உலகெங்கும் உள்ள அறிஞர்களும் அதே முடிவுக்கு வருகின்றனர் என்பதும் நாம் காண்பது.

அதனால் பகுத்தறிவு வாதம் 'ஒரு சமயம், மதம், தத்துவம்' என்னும் இலக்கணத்திற்கு உரியதாகாது. அதேபோன்று உலகியல் தெளிந்த சிந்தனை உடையரான தமிழரும், அதை ஒரு சமய வழிப்பட்ட தத்துவமாகக் கருதியிருக்க இடமில்லை. இந்நிலையில் 'உலகாய்தம்' தமிழர்களின் தொல்சமயம் என்று கொள்வதைவிட—உறுதி செய்வதைவிட தமிழர்தம் உலகியல் தெளிந்த கொள்கை வழியில் அதனை அடித்தளமாகக் கொண்டு 'ஆசீவகம்' கட்டப்பட்டது என்றே நான் கருதுகிறேன்.

ஆசீவகம் ஓர் ஆழ்ந்த தத்துவக் கேள்வியின் விளைவு என்னும் முறையில், தமிழ் மொழி இலக்கியத்தில் அதற்குரிய வேர்கள்—அடிப்படை எண்ணங்கள் மிகப் பலவாக இடம் பெற்றிருப்பதை இதன் ஆசிரியர் முனைவர் க. நெடுஞ்செழியன் அவர்கள் எடுத்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டி விளக்கி இருக்கும் திறன் எண்ணி மகிழவும், சிந்தித்துத் தெளியவும் ஏதுவாவன.

தமிழினம்—தன்மானமுள்ள இனமாகத் தலைநிமிர்ந்திட மூட நம்பிக்கைகளை அலசி ஆராய்ந்து நீக்கிப் புத்துணர்வு பெற்றிட, தந்தை பெரியார்—ஈன்று புறந்தந்து வளர்ந்த 'சுயமரியாதை இயக்கம்', அந்தநாள் தமிழர்களிடையே மலர்ந்திருந்த உலகாய்தச் சிந்தனைகளின் மறுதாக்கம்—புதிய விளைவு என்று எடுத்துக்கூறும் திறன் போற்றத் தகும்.

தமிழர் வாழ்வினில் ஆர்வம் கொண்டவர்களும், தத்தம் சமய வழிச் சிந்தனைகளை—மறு ஆய்வு செய்யக் கருதுபவர்களும்—வைதிகப் போலிச் சமய மயக்கத்திலிருந்து மக்களை விடுவிக்க விழைவாரும், தவறாது படித்தறிய வேண்டிய பலப்பல கருத்துக்களைச் சிந்தனைக்கு விருந்தாக்கியுள்ளார் இதன் ஆசிரியர் எனது பாராட்டுக்குரிய முனைவர் க. நெடுஞ்செழியன் அவர்கள்.

அவரது ஆய்வு முயற்சிகள் தொடரவும், குறிக்கோள் வெற்றி பெறவும் வாழ்த்துகின்றேன்.

அன்பன்,

க. அன்பழகன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முனைவர் மா. செல்வராசன்,
இணைப் பேராசிரியர்,
தமிழ் மொழித்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை-600 005.

புதுவழிப் போக்கு

இந்தியாவில் உள்ள பேச்சு மொழிகளில் இலக்கிய வளம் பெற்ற இணையிலா மொழி தமிழ். மூவாயிரம் ஆண்டு இலக்கிய வரலாற்றை முறையாகக் கொண்டது அது இலக்கியம் வாழ்க்கையின் வெளிப்பாடு என்பதைச் சங்க இலக்கியம் சாற்றுகின்றது. எனவே தமிழ் இலக்கியத்தை ஆய்வது மிக்க பயன் அளிப்பதாகும்.

தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம் என்னும் பொருள் குறித்து முனைவர் க. நெடுஞ்செழியன் ஆற்றியுள்ள ஆய்வு அரிய உழைப்பின் ஆக்கம்; சிக்கலான சிந்தனைகளைத் தெளிவாக்கும் விளக்கம்.

உலகாய்தம் என்பது ஓர் அறிவியல் வாழ்க்கை முறை. இதனைப் பொருள்முதல் வாதக் கோட்பாடு எனக் குறிப்பர். பூதவாதம், சாருவாகம், நாத்திகம், ஏதுவாதம், இயல்பு வாதம், விதண்டாவாதம் என்று பல பெயர்களால் இது வழங்கப்பட்டுள்ளது.

ஆய்வுப் பொருளைத் தெளிவுற உணர்தலே ஆய்வாளனின் அடிப்படை நெறி. இந்த ஆய்வாளர் 'உலகாய்தம்' என்பதனை முழுமையாக உணர்ந்துள்ளார் என்பது முதல் இயலால் விளங்குகின்றது. உலகாய்தம் என்பது தமிழ்ச் சொல் என்றும் உலகினை ஆய்கின்ற முறை என்பது பொருள் என்றும் இவர் தரும் விளக்கம் ஏற்புடையது ஏனெனில் அது ஒருகாலத் தமிழ் நெறி எனக் காட்டுகின்றார். 'லோகாயூதா' என்னும் வடசொல், தமிழின் திரிவு என்பது சாலவும் பொருந்தும். தமிழ் அறிவுத் திறன் வடமொழியில் ஏறித் தமிழர்க்கு உரிய மேன்மைகள் பல மறைக்கப்பட்டு விட்டன. எத்தனையோ அறிவாக்கங்கள் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்று, பின்னர் முழுவதும் வடமொழி என வாதிடுதல் இந்நாட்டு வரலாறு. உலகாய்தம் ஒரு சான்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகாய்த வளர்ச்சி
உலகாய்த வீழ்ச்சி
உலகாய்த எதிர்ப்பு
உலகாய்த எழுச்சி

எனப் பாகுபடுத்தி ஆராயும் பாங்கு பாராட்டத்தக்கது. சங்க காலத்தோடு உலகாய்தத்தின் வளர்ச்சி முடிந்து மீண்டும் இருபதாம் நூற்றாண்டில்தான் எழுச்சி கொள்கின்றது எனல் உணரத்தக்கது.

இரண்டாவது இயல் புதிய உண்மைகளைப் புலப்படுத்துவதாகும். தமிழ் என்னும் சொல் தரும் பொருள்களாக ஏழனைக் குறிக்கின்றார் ஆய்வாளர்.

1. வேத வைதிக மறுப்பு
2. மறுமைப் பயன் கருதாமை
3. கண்ணோட்டம்
4. கற்பியல் இன்பம்—காதல் வாழ்வு
5. வீரம்—போர்க்களம்
6. பொருள் இலக்கணம்
7. அழகு சாயல் இனிமை

ஒவ்வொன்றிற்கும் உரிய சான்றுகளைத் தந்து உண்மையை வெளிப்படுத்துகின்றார்.

அசுரர்கள் யார்? அவர்களின் கோட்பாடு யாது? ஆன்மாவை மறுத்ததேன்? வேள்வியை எதிர்த்ததேன்? என்னும் அரிய சிக்கல்களுக்கு முடிவுகளை ஆய்ந்து அளிக்கின்றார்.

தொல்லிந்தியர்களாகிய திராவிடத் தமிழர்களே அசுரர்கள் எனவும், அவர்கள் மேற்கொண்ட கோட்பாடு உலகாய்தமே எனவும் தெளிவுபடுத்துவதற்குத் தேர்ந்த சான்றுகளைப் பயன்படுத்தியுள்ளார்.

தந்திரக் கோட்பாட்டை விளக்குவதற்கு ஆய்வாளர் மேற்கொண்டுள்ள முயற்சி போற்றத்தக்கது. தந்திர வழிபாடு தாய்த் தெய்வ வழிபாடாகத் தொடங்கிப் பின்னர் வெற்றிக்கு உரிய கொற்றவை வழிபாடாகச் செல்வாக்குப் பெற்றது எனக் காட்டுகின்றார்.

கபாலிகம் பற்றிய ஆய்வு விளக்கமானது; விவரமானது. ஆடற்கலையின் அடிப்படையில் கபாலிகம் தோன்றியுள்ளதாக அவர் காட்டுகின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஐந்திர மரபும் அறிவியல் கோட்பாடும் என்னும் மூன்றாவது இயல் புதிய உண்மைகளைப் புகல்வது. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்னும் தொடருக்கு, 'அய்ந்து பூதங்களின் இயல்புகளை அதாவது அய்ந்தன் திறங்களைப் பற்றிய பூதவியலாகிய உலகாய்தக் கோட்பாட்டை முற்றாக அறிந்தவர்' எனப் பொருள் கூறும் ஆய்வாளர், பல்வேறு சான்றுகளால் அதனை மெய்ப்பிக்க முயன்றுள்ளார்.

ஐந்திரம் இந்திரன் எழுதிய வடமொழி இலக்கணம் என்னும் மரபுவழிக் கருத்துக்கு மாறாகப் பேச்சுக்கலை உள்ளிட்ட பல்வேறு அறிவியல் துறைகளின் விளக்கமாக—மெய்யியல் பள்ளியாக விளங்கியது என்பதும் அது வேதங்களைவிட உயர்வாக மதிக்கப்பட்டது என்பதும் தெளிவாகும் என ஆய்வாளர் புதிய உண்மையை எடுத்துரைக்கின்றார்.

உயிரியல் கோட்பாடு என்னும் பகுதி ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான தொல்காப்பியரின் விளக்கத்தை ஆய்கின்றது. மனம் பற்றிய ஆய்வு சிறப்பானது. அறிவியல் கோட்பாடு என்னும் பகுதி சங்ககாலத் தமிழரின் வானியல் அறிவை ஆய்கின்றது. ஞாயிற்றின் வீதி, அதன் இயக்கம், அவ்வியக்கத்தால் சூழப்படும் பார் வட்டம், காற்று இயங்கும் திசை, காற்று வெளியின்றி வறிதாய் நிலை பெற்றுள்ள ஆகாயம் ஆகியவற்றைச் சங்கத் தமிழர் அறிந்திருந்தனர் என்பது விளக்கமாகின்றது.

நான்காவது இயல் ஆசிவகம் என்பதாகும். உலகாய்தத்திற்கும் ஆசிவகத்திற்கும் உள்ள தொடர்பை ஆய்வாளர் திறனுற உணர்த்தியுள்ளார். ஆசிவகம் பற்றிய இந்த ஆய்வுப் பகுதி அரியது, இவ்வியலில் ஆய்வாளர் காணும் பல முடிவுகள் பாராட்டத்தக்கன. ஆசிவகம் சங்க காலத் தமிழகத்தில் அடைந்திருந்த செல்வாக்கு அறியத்தக்கது. கோப்பெருஞ்சோழன் ஓர் ஆசிவகன் என்பது குறிக்கத்தக்கது.

ஆசிவகக் கோட்பாட்டை உருவாக்குவதில் மற்கலி கோசாலருக்குத் துணைபுரிந்த ஆறு பேரறிஞர்களுள் ஒருவர் தமிழர் என்பது ஆய்வாளர் முடிவு. கணியாரா என்றும் பக்குட காச்சாயனர் என்றும் ஆசிவக மரபில் குறிக்கப்பெறுபவரே அத்தமிழர் என்றும் அவர் பக்குடுக்கை நன்கணியார் என்னும் தமிழ்ப் புலவரே என்றும் ஆய்வாளர் நிறுவ முயன்றுள்ளார்.

ஆசிவகத் தலைமைத் துறவியர் மூவருள் நந்தவச்சா என்பவர் ஒருவர். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வெளியிட்ட கல்வெட்டில் குறிக்கப்பெறும் கணி நந்தா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிரியன் இயக்கன் என்பவரும், நந்தவச்சா என்பவரும் ஒருவரே என்கிறார் ஆய்வாளர்.

ஆசிவகர் என்போர் சணியன் எனத் தமிழில் அழைக்கப் பெற்றனர். எனவே, கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் பாடிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் புறப்பாடல் முழுவதும் ஆசிவகக் கோட்பாட்டை அடியொற்றியது என்னும் விளக்கம் அரியது. ஆசிவகத்தின் உயிர் நாடியாக அமைவது ஊழ். அந்த வினைக் கோட்பாடு பற்றிய ஆய்வாளரின் விளக்கம் விழையத் தக்கது. தொல்காப்பியத்தின் வினைக்கோட்பாடு பற்றி ஆய்வாளர் துருவிக் கண்டுள்ளார். இவ்வாறே திருவள்ளுவரின் ஊழ் பற்றிய கோட்பாட்டையும் தெளிவாக விளக்கியுள்ளார். திருவள்ளுவரைப் பார்சுவநாதரோடும், கோசாலரோடும், கணியரோடும் ஒப்பிட்டுள்ளார்.

ஐந்தாவது இயல் உலகாய்தத்தின் வாழ்க்கை நெறி என்பதாகும். இவ்வியல் நான்கு பகுதிகளாக அமைந்துள்ளது. அறிவியல் கோட்பாடாகிய உலகாய்தம், மூடநம்பிக்கைகளும் சுரண்டல்களும் இல்லாத சமத்துவ நோக்கத்தை வற்புறுத்தும் ஒரு வாழ்க்கை நெறி என்பதை இவ்வியலில் ஆராய்கின்றார் ஆய்வாளர். புதிய செய்திகள் பலவற்றைப் புகலுகின்றார்.

கடவுள் பற்றிய ஆராய்ச்சி விரிவானது; சங்க இலக்கியத்தில் கடவுள் என்னும் சொல் கையாளப் பெற்றுள்ள பொருள் நோக்கைச் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றார் ஆய்வாளர். முருக வணக்கம் இனக் குழுவிலிருந்து தோன்றியது என்பதும், முருகனுக்கு உரிய மயில் அவன் தலைமை ஏற்றிருந்த இனக் குழுவின் அடையாளம் என்பதும், முருகனின் கொடியில் உள்ள வேலும் சேவலும் அவனது ஊர்தியாகிய மயில் மிதித்துக் கொண்டிருக்கும் பாம்பும் மற்ற இனக் குழுக்களின் அடையாளங்கள் என்பதும் ஆய்வாளரால் தெளிவாக நிறுவப்படுகின்றன. இவ்வாறே சிவன், திருமால், குறித்தும் மரவழிபாடு குறித்தும் செய்திகள் சிறந்துள்ளன.

கடவுள் மறுப்புப் பற்றியும் ஆய்வாளர் நன்கு கருதியுள்ளார். உலகாய்தக் கருத்துப்படி மன்னனே கடவுள் என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றார். சங்க காலப் புலவர், கடவுள் பேரால் மன்னரை வாழ்த்தாமைக்குத் தரும் காரணம் பொருந்துவதே! ஆ பயன் குன்றும் என்னும் குறளுக்கு ஆய்வாளர் அளிக்கும் விளக்கம் புதியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமூகவியற் கோட்பாடு என்னும் பகுதி தமிழ்ச் சமூகம் தொழில்களின் அடிப்படையில் அமைந்திருந்தது என்பதை விளக்குகின்றது. இன்பியற் கோட்பாடு என்னும் பகுதி தமிழ் அகத்திணை உலகாய்தத்தின் ஒரு கூறாகவே விளங்குவது என்பதைச் சுட்டுகிறது. கணிகை, நகரத்தான் என்னும் சொற்கள் பற்றிய ஆராய்ச்சி சுவையும் உண்மையும் சுரப்பது. வாத்சாயனரின் காமசூத்திரத்தைத் தமிழ் அகத்திணை மரபுகளோடு ஒப்பிடும் ஆய்வாளர், தமிழ்நாட்டுப் பாலியல் அறிவையே வாத்சாயனர் பயன்படுத்தியுள்ளார் என்று வழக்கிடுகின்றார்.

ஆறாவது இயல் பெரியாரியல். இவ்வியல் மரபு வழியாக வந்த உலகாய்தத்திற்குப் புதிய வடிவத்தையும் வீச்சையும் வழங்கிய பெரியாரின் மெய்யியல் குறித்த ஆய்வை மேற்கொள்வது. சுரண்டலற்ற ஒரு சமூகத்தை அமைக்கப் பெரிதும் முனைகிறது எனப் பெரியாரியலை விளக்குகின்றார் ஆய்வாளர். சாதி, சமயம், கடவுள், பெண், மொழி, உடைமை, தொழிலாளர் முதலியவற்றில் ஏற்படும் சுரண்டலையும் வல்லாண்மையையும் சுட்டெரிப்பதே சுயமரியாதை இயக்கப் பணி என்பதைச் சான்றுகளோடு நிறுவும் ஆய்வாளரின் முயற்சி சாலவும் பாராட்டத்தக்கது.

சிக்கலான ஒரு பொருளைத் தேர்ந்தெடுத்த ஆய்வாளர், தெளிவும் சிறப்பும் விளங்குமாறு ஆய்வை நிகழ்த்தியுள்ளார். ஆழ்ந்த நூற் பயிற்சியும் அரிய ஆய்வுத் திறனும் இவருடைய ஆய்வில் வெளிப்படுகின்றன. உயர்ந்த மேற்கோள்களைப் பொருந்துமாறு உணர்த்தியுள்ளார். சான்றுகளை வெறும் குறிப்புகளாகக் கூறாமல், அளவையியல் அடிப்படையில் ஆண்டுள்ளார். ஆய்வாளர்க்கு வேண்டிய இத்திறன் இந்நூலில் மிகவும் சிறந்துள்ளது.

ஆய்வு என்பது மேற்கோள்களின் தொகுப்பு என்று மிகப் பலர் கருதுகின்றனர். அரிய உழைப்பும் ஆழ்ந்த புலமையும் அறிவியல் அணுகுமுறையும் அளவையியல் திறனும் கருத்துறுதியும் ஆற்றோட்டப் புலப்பாடும் அடிப்படைகளாய் அமையப் புதியவை காணும் புலன் உடையது ஆய்வு!

புதிய உண்மைகளைப் புலப்படுத்தும் வேட்கையே இந்த ஆய்வின் போக்காக உள்ளது. எனவே, புதிய முடிவுகள் பலவற்றைப் புகலுகின்றார் ஆய்வாளர்; பொருந்தாதவை என அவற்றைப் புறக்கணித்தல் இயலாது; கருத்து வளர்ச்சியின் கால்கள் என வரவேற்றலே ஆய்வு வளர்வதற்கு வழியாகும். புதியது காணும் ஆய்வாளரின் புலன்மிகு வேட்கையில் கருத்துணர்த்தும் திறனே காணத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நண்பர் நெடுஞ்செழியன் நல்ல நோக்கினர்; நழுவாக் கொள்கையர்; உயர்ந்த குறிக்கோளர்; உறங்கா உளத்தர்! ஆய்வுலகில் அவரது அடி ஒவ்வொன்றும் புதுவழிப் போக்காகும். சொந்தச் சிந்தனை சுரக்கும் அவரது ஆய்வுலக அடி உலாவாக உயர வேண்டும் என விழைகின்றேன்.

மா. செல்வராசன்.
3—6—90

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னுரை

திருவிழாவில் தொலைந்துபோன செல்வக் குடும்பத்துக் குழந்தை தன் பெற்றோர்களின் முகவரியை இழந்து நிற்பதைப் போல, தமிழினம் வாழ்ந்த வாழ்க்கையை உலகிற்கு வழங்கிய கொடைகளை—பேணி வளர்த்த அறிவியல் மரபுகளை முற்றாக மறந்து நிற்கின்றது இன்றைய தமிழினம். இந்நிலையில், இவ் வினத்தின் கடந்தகால மாண்புகளை உள்ளது உள்ளபடி எடுத்துக் காட்ட வேண்டியது ஆய்வாளரின் தலையாய கடமை ஆகும்.

ஓர் இனத்தின் கடந்தகால வரலாற்றை மீண்டும் தொகுத்துப் பார்ப்பது என்பது அதன் பெருமைகளைப் புதுப்பிப்பதற்காக மட்டு மன்று; அவ்வினத்தின் விழிப்புக்கும், எழுச்சிக்கும் ஓர் அடித் தளத்தை அமைத்துக் கொடுக்க முடியும் என்ற எதிர்பார்ப்புடனும் ஆகும்.

அவ்வகையில், 'தமிழ் இலக்கியத்தில் உலகாய்தம்' என்ற இந் நூல், தமிழரின் அறிவியல் கோட்பாடுகளையும் அவ் அறிவியல் வளர்ச்சிக்கு அடித்தளமாய் அமைந்த மெய்யியல் கோட்பாட்டை யும் அடையாளம் கண்டுள்ளது.

எந்த ஒரு சிந்தனைப் போக்கிற்கும், அதன் வெளிப்பாடான இலக்கியத் தோற்றங்கட்கும் ஒரு மெய்யியல் பள்ளி பின்தளமாக இருந்தாக வேண்டும் என்ற நியதிக்கேற்ப சங்க இலக்கியங்களின்—அவற்றின் அகப் புறப் பாகுபாடுகளின் பின்தளமாக அமைந்த மெய் யியல் பள்ளி 'உலகாய்தம்' என்பதும் இவ் உலகாய்தமே—அய்ந்திர மாகச் சுட்டப்பட்டுள்ளது என்பதும் இவ் ஆய்வின் முடிவுகளாக அமைந்துள்ளன.

எவ்வாறு அரசியல், பொருளியல், இயங்கியல் மற்றும் கலை இலக்கியப் பண்பாட்டுக் கூறுகளில் ஒரு சமூக அறிவியலாய் மார்க்சியம் திகழ்கின்றதோ அதைப் போன்றுதான் தமிழர் போற் றிய அய்ந்திர மரபும் திகழ்ந்தது. மார்க்சியத்தின் மூலவேர் கிரேக்கத்துப் பொருள்முதல் கோட்பாட்டில் இல்லை என்பதையும், அது, கிரேக்கத்திற்கும் முன்னோடியாய் விளங்கிய தமிழர் கண்ட அய்ந்திரக் கோட்பாட்டில்தான் நிலைத்துள்ளது என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும். வானியல், உயிரியல், அணுவியல் மற்றும் அண்டங்களின் தோற்றம் குறித்த தமிழ் இலக்கியக் கோட் பாடுகள் உலக நாடுகள் அறியாதவை, இன்றைய அறிவியலோடு முற்றாகப் பொருந்துபவை என்ற சான்றுகளே மேற்கூறிய கருத்தை அரண் செய்யவல்லவை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமக்குரிய பல்வேறு அலுவல்களுக்கு இடையேயும் இந்நூலிற்கு அணிந்துரையாய் ஓர் ஆய்வுரையை வழங்கியவர், மாண்புமிகு கல்வி அமைச்சர், பேராசிரியர் க. அன்பழகனார் அவர்கள். தமிழினத்தின் மேன்மையை—மீட்டுயிர்ப்பை இலட்சியமாகக் கொண்ட எங்கள் இனமானப் பேராசிரியர் அவர்களின் அன்பிற்கு என்றும் நன்றியுடையேன்.

சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்காக இவ் ஆய்வினை நான் மேற்கொண்டபோது எனக்கு வழிகாட்டியாய் அமைந்தவர் முனைவர் மா. செல்வராசன் அவர்கள். அவர், திராவிடர் இயக்கத்தின் இலக்கியங்களை—அவற்றின் விளைவுகளை ஆய்வதே தம் இலட்சியமாகக் கொண்டு செயல்படும் கொள்கையாளர். நண்பராய், ஆசிரியராய், வழிகாட்டியாய் (Friend, Philosopher and Guide) நின்று அவர் தந்த ஊக்கமே இவ் ஆய்வின் வெற்றிக்கு உறுதுணையாய் அமைந்தது. அத்துடன் இந்நூலுக்கு நல்லதொரு முன்னுரையையும் வழங்கி இந்நூலினைச் சிறப்பித்துள்ளார். அவர் ஆற்றிய உதவிக்கு ஒப்பிட்டால் இஞ்ஞாலம் சிறிதாகும்.

மெய்ப்புத் திருத்தம் முதல் இந்நூலாக்கத்தின் ஒவ்வொரு நிலையிலும் மெய் வருத்தம் பாராது உழைத்தவர் என் இனிய தோழர் ப. தமிழ்க்குரிசில். அவரே இந்நூலாகிய குழந்தையின் செவிலித்தாய் ஆவார். அவருக்கு நான் கடன்பட்டவனாவேன்.

பல்கலைக்கழக நல்கை ஆணையத்தின் நிதியுதவி வழங்குவதில் ஆர்வம் காட்டி, உரிய நேரத்தில் ஆவன செய்தவர் முனைவர் வ. செயதேவன். என் உழைப்பிற்கு உந்து விசையாய்த் திகழ்பவரும், இந்நூல் வெளிவருவதில் உறுதுணையாய் நின்றவருமாகிய என் துணைவியார் முனைவர் இரா. சக்குபாய், அன்பு இளவல் பூ. துரைசாமி ஆகியோரும் என் நன்றிக்கு உரியவர்கள்.

இந்நூலினை, நல்லவண்ணம் அச்சிட்ட கவிக்குயில் அச்சகத்தாருக்கு என் நன்றி.

இறுதியாக,

> எம்போன்றோரின் படைப்பில் அகன்ற பல குறைகள் இருக்கலாம். ஆனால் இந்நூலுக்கு ஒரு கோவையான கட்டமைப்பு உண்டு. செருமானிய அறிவியல் கண்ட ஒரு வெற்றியே அக் கட்டமைப்பாகும். தனது சொந்தத் தகுதியால் வந்த ஒரு வெற்றி என்று சொல்வதைவிட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்னுடைய செருமானிய நாட்டிற்கு இருக்கிற தகுதியால் வந்த ஒரு வெற்றியே அதுவென ஒரு செருமானியர் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு வெற்றி அதுவாகும்.

என்று தமது நூல் பற்றி காரல்மார்க்சு எங்கல்சுக்கு எழுதிய மடல் ஒன்றில் குறிப்பிட்டார். உலகப் பேராசானாகிய மார்க்சே, ஒரு செருமானியன் என்ற வகையில் பெருமை கொள்ளும்போது, மாந்த இனத்தின் அறிவுப் பண்ணையான இத்தமிழ் நிலத்தின்—இனத்தின் மாண்புகளை அறியும்போது அது தமிழகத்தின் வெற்றி என்றும் தமிழர் தெரிந்து கொள்ளக்கூடிய வெற்றி என்றும் சொல்லலாம் தானே!

15—6—90. ச. நெடுஞ்செழியன்,
மனிதம், திருச்சி-21.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளடக்கம்

	பக்க எண்
முன்னுரை	1
உலகாய்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்	9
தமிழும் தந்திரமும்	36
அய்ந்திரமும் அறிவியல் கோட்பாடுகளும்	123
ஆசீவகம்	207
உலகாய்தத்தின் வாழ்க்கை நெறி	299
பெரியாரியல்	417
முடிவுரை	447
துணைநூற் பட்டியல்	449
பிழை திருத்தம்	475

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை

புனல்சூழ்ந்து வடிந்து போன
நிலத்திலே புதிய நாளை
மனிதப்பைங் கூழ்மு ளைத்தே
வகுத்தது! மனித வாழ்வை
இனியநற் றமிழே நீதான்
எழுப்பினை! தமிழன் கண்ட
கனவுதான், இந்நாள் வையக்
கவின்வாழ்வாய் மலர்ந்த தன்றோ?

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,
அழகின் சிரிப்பு - தமிழ்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை

ஆய்வின் நோக்கம்

'உலகாய்தம்' மக்கள் வாழ்வை அடிப்படையாகக் கொண்டது; இந்திய மெய்யியல்களுள் மிகவும் தொன்மைசான்றது; மனித வாழ்வின் இனிமையை உணர்த்துவதையும் மனிதப் பண்புகளை உயர்த்துவதையும் அடிப்படை நோக்கமாகக் கொண்டது.[1]

அரசியலில் செங்கோன்மையும், சமூகவாழ்வில் ஒப்புரவும், தனிமனித வாழ்வில் சான்றாண்மையோடு கூடிய இன்பியலும் இக் கோட்பாட்டினால் வற்புறுத்தப்பட்டன. கடவுளை—வேதங்களின் மேலாண்மையை—வேள்விப் பண்பாட்டை முற்றாக மறுத்த இம் மெய்யியலின் பல்வேறு கூறுகளும் சங்கத் தமிழ் இலக்கியத்தில் விரவிக் கிடக்கின்றன.[2]

உலகாய்தம் விளக்கிய பேச்சாற்றலும் அறிவியலும் தொல்காப்பியத்தின் தந்திர உத்திகளாய், உயிரியல் கோட்பாடுகளாய், திருக்குறளின் முப்பாலாய், சங்க இலக்கியத்தின் உள்ளுறையாய் ஊடாடிக் கிடக்கின்றன.

திருக்குறளின் 'செங்கோன்மை' என்னும் அதிகாரம் உலகாய்தம் போற்றிய 'அரசின்' வரைவிலக்கணமாக ஒளிர்கிறது. மேலும்,

> புலிபுறங் காக்குங் குருளை போல
> மெலிவில் செங்கோல் நீபுறங் காப்ப[3]

எனக் கட்டளையாகவும்,

> நினவ கூறுவ லெனவ கேண்மதி
> அறம்புரிந் தன்ன செங்கோ னாட்டத்து

1. Animasen Gupta, Essays on Sankya and other systems of Indian Philosophy, p. 290.
2. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், பக். 190—191.
3. புறம். 42 : 10—11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முறைவேண்டு பொழுதிற் பதனளி யோரீண்
டுறைவேண்டு பொழுதிற் பெயல்பெற் றோரே
ஞாயிறு சுமந்த கோடுதிரள் கொண்மூ
மாக விசும்பி னடுவுநின் றாங்குக்
கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயின்மறைக் கொண்டன்றோ வன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ[4]

என வேண்டுகோளாகவும் அமைந்துள்ள புறப் பாடல்களில் 'தன்னாட்சி' செலுத்துகின்றது.

இக் கோட்பாட்டின் ஒப்புரவியல், திருக்குறளின் 'ஒப்புரவு' அதிகாரத்திலும், புறத்திணை ஆற்றுப்படை இலக்கியங்களிலும் பரந்து கிடக்கின்றது.

இதன் சான்றாண்மை கலந்த இன்பியல்,

நின்ற சொல்லர் நீடுதோன் றினியர்
என்றும் என்றோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்டா தூதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
நறுநுதல் பசத்த லஞ்சிச்
சிறுமை உறுபவோ செய்பறி யலரே[5]

என்று நற்றிணையின் ஊற்றுக்கண்ணாய் அமைந்து கிடக்கின்றது.

இதன் வேதமறுப்பு, 'நானுற்ற காதல் நோயைப் போக்கவல்ல மருந்து, எழுதாக் கற்பினதாகிய உனது வேதத்தில் உண்டா?'[6] எனப் பார்ப்பன மகனைப் பார்த்துக் கேட்கும் குறுந்தொகைப் பாடலில் எதிரொலிக்கின்றது.

கடவுளைப் பற்றி கவலை கொள்ளாத பாடல்களே சங்க இலக்கியத்தில் மிகுதியாக உள்ளன,

இவ்வாறு உலகாய்தத்தின் வீச்சுக்கள் சங்க இலக்கியத்தில் ஒளி வீசி நிற்றற்கான காரணங்களையும் அவற்றிற்கான பின்புலங்களையும் ஆராய்தலும்,

4. புறம். 35 : 13—21.

5, நற்றிணை. 2.

6. குறுந்தொகை. 156.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> லோகாயத வாதம் என்ற சொல்லின் அர்த்தத்தைப் பற்றியும் ஒரு குழப்பம் இருக்கின்றது. அதையும் ஆரம்பத்திலேயே சொல்லி விடுகின்றோம். லோகாயதவாதி என்றாலே லௌகீக விஷய சுகங்களில் மூழ்கித் திளைப்பதைப்பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பவன், வேறெதைப் பற்றியும் சிந்திக்காதவன் என்றுதான் பொதுவாக நினைக்கிறார்கள். லோகாயதவாதம் என்ற தொடர்மொழியில் லோகாயதம் (உலக சம்பந்தப்பட்டது) என்ற சொல் அடங்கி இருப்பதைக்கொண்டு அதற்கு ஒரு முற்றிலும் தவறான அர்த்தத்தைப் பலர் கற்பிக்கின்றனர். லோகாயதவாதத்தை நாம் விஞ்ஞான ரீதியாகப் பயிலும் காலத்தில் அதன் உண்மையான அர்த்தத்தை மீண்டும் நிலைநாட்டுவோம். லோகாயதவாதியாக இருப்பவனுக்கு லட்சியம் எதுவும் இருக்கமுடியாது; லட்சியத்தின் வெற்றிக்காகப் போராடுவது என்பதும் இருக்கமுடியாது என்று நினைப்பதெல்லாம் தவறு என்று அப்போது தெரியும்.[7]

என விளக்கும் சார்சு பொலிட்சரின் கூற்றுக்கு ஏற்ப, உலகாய்தம் பற்றிய உண்மைப் பொருளை நிலைநாட்டுவதும், சங்ககாலத் தமிழர் வாழ்வை நெறிப்படுத்திய மெய்யியல் இதுவே என்பதை வெளிப்படுத்துவதும் இவ்வாய்வின் நோக்கம்.

ஆய்வின் வகை

தமிழ் இலக்கியத்தில் உலகாய்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும் என்பது தலைப்பு. தமிழரின் அறிவாராய்ச்சி மற்றும் மெய்யியல் குறித்து மேற்கொள்ளப்படும் ஆய்வு இது. இத்தகைய ஆய்வை,

> அறிவு வேறு; உணர்வு வேறு. அறிவு ஐயம் திரிபு அறக் கற்பதால் அமைவது. உணர்வு அனுபவமாக அமைவது. அறிவுத்துறை விளக்கம் பற்றிய ஆராய்ச்சி மேலும் மேலும் உண்மையை நாடிச் செல்கிறது. மெய் விளக்கத்துறையின் ஒரு பிரிவுதான் இவ்வாராய்ச்சி எனலாம்.[8]

என விளக்குவர். எனவே இவ் ஆய்வு அறிவு ஆராய்ச்சி வகையைச் சார்ந்தது.

---

7. சார்ஜ் பொலிட்சர், மார்க்சீய மெய்ஞ்ஞானம், (த. ஆ.) ஆர். கே. கண்ணன், ப. 13.
8. இராம. பெரியகருப்பன், எம். எஸ். இலக்குமணன், ஆய்வியல் அறிமுகம், ப. 169.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்விற்கு ஏற்பட்ட தடைகள்

உலகாய்தம் பற்றிக் கிடைக்கும் சான்றுகள் அனைத்தும் பர பக்கமாக (மாற்றார் கூற்றாக)க் கிடைப்பன. கிடைக்கும் செய்திகள் அளவில் குறைவாகவும் தன்மையில் ஒன்றுபோலவுமே உள்ளன. இந்நிலையில் உலகாய்தம் பற்றிய செய்திகளாகக் கிடைத்தனவும், அதன் வகைகளாக ஆய்வாளர்கள் குறித்தனவும் இவ் ஆய்விற்கு அடிப் படைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

சான்றுகள்

மூலச்சான்றுகள்

தொல்காப்பிய இலக்கணமும், சங்க இலக்கியமும், திருக் குறளும், பெரியாரால் பேசியும் எழுதியும் வெளியிட்ட நூல்களும், கட்டுரைகளும் மூலச்சான்றுகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

துணைச் சான்றுகள்

மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் (பரபக்கம்) ஆகிய தமிழ் நூல்களும், பாலி, பிராகிருதம், சமற்கிருதம் ஆகிய மொழி களில் உள்ள நூல்களின் ஆங்கில வடிவங்களும் துணைச் சான்று களாகப் பயன்பட்டுள்ளன.

மேலும், உலகாய்தம் பற்றி விரிவான ஆய்வு நூலான தேவி பிரசாத் சட்டோபாத்தியாயாவின் உலகாய்தம் (Lokayata) ஏ. எல். பாசம் அவர்களின் ஆசீவகம் (Ajivikas) நா. வானமாமலை யின் 'தமிழர் பண்பாடும் தத்துவமும்' ஆகிய நூல்கள் துணைச் சான்றுகளாகவும், மற்ற அறிஞர்களின் நூல்கள் சார்புச் சான்று களாகவும் பயன்பட்டுள்ளன.

கால எல்லை

உலகாய்தம் பற்றிய தோற்ற—வளர்ச்சி குறித்த ஆய்வாகலின் சிந்து சமவெளி நாகரிக காலம் முதல் பெரியார் காலம் வரை இவ்வாய்விற்குரிய கால எல்லையாகக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்கோள்

உலகாய்தம் குறித்த அடிப்படைச் சான்றுகள் ஒரே தன்மையன வாக உள்ளமையால் சில மேற்கோள்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் இடம் பெற்றுள்ளன. சில செய்திகள் ஓரிடத்தில் குறிப்பாகவும், பிறிதோரிடத்தில் விரிவாகவும், தேவை கருதியும் தேவைக்கேற்பவும் சொல்லப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல்கள்

முன்னுரை, முடிவுரை நீங்கலாக இவ்வாய்வேடு ஆறு இயல் களைக் கொண்டுள்ளது.

இயல் ஒன்று

'உலகாய்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்' என்பது. இவ் வியல், இம்மெய்யியலின் தொன்மையையும், பெயர்க் காரணத் தையும் பௌத்த, சமண, சைவ மெய்யியல் நூல்களான மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் ஆகியன காட்டும் உலகாய்தம் பற்றிய செய்திகளையும் மற்றும் இம்மெய்யியல் கொண்ட தற்காலப் புதுவடிவம் பற்றிய செய்திகளையும் ஆராய் கின்றது.

இயல் இரண்டு

'தமிழும் தந்திரமும்' என்பது. 'தமிழ்' என்ற சொல் உணர்த் தும் பல்வேறு பொருட்களுக்கும் உலகாய்தக் கோட்பாட்டிற்கும் இடையே உள்ள தொடர்பு, உலகாய்தத்திற்கும் அசுரர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு, அசுரர்கள் யார் என்பது, அசுரர்க ளோடும் உலகாய்தத்தோடும் தொடர்புடைய தந்திரம், கபாலிகம் ஆகிய கோட்பாடுகள், தமிழ் நூல்களில் அவை பெற்றுள்ள இடங் கள் குறித்து இவ்வியல் விளக்குகின்றது.

இயல் மூன்று

'அய்ந்திரமும் அறிவியல் கோட்பாடுகளும்' என்னும் இவ்வியலில் அய்ந்திரம், அய்ந்திரக் கோட்பாட்டின் பிறப்பீடம் ஆகியனவும் அதன் அறிவுத்துறைகளான வானியல், அறிவியல் மற்றும் உயிர் களின் படிமுறை வளர்ச்சி ஆகிய செய்திகள் இன்றைய அறிவியல் முடிவுகளுடன் ஒப்பிட்டும் ஆராயப்பட்டுள்ளன.

இயல் நான்கு

'ஆசீவகம்' என்பது, இக்கோட்பாடு திராவிடச் சிந்தனையின் கிளையாகக் கருதப்படுவது. அறிவியல், அணுவியல், உயிரியல் ஆகிய அறிவுத்துறையின் வளர்ச்சியில் தோன்றிய புதிய மெய்யிய லாகும் இது. கடவுள் மறுப்பு—பார்ப்பன மறுப்பு—வேத, வேள்வி மறுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. மேலும் கருத்துமுதலியலைத் தழுவியதாயினும், உலகாய்தத்தோடு தொடர்பு கொண்டதாக உள்ளதாலும், இதனைத் தோற்றுவித்த அறிஞர்களுள்ளும், தலைமையேற்று நடத்தியவர்களுள்ளும் சங்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலத் தமிழ்ப் புலவர்கள் இடம் பெற்றுள்ளதாலும் இவ்வியல் தனி இயலாகவே அமைக்கப்பட்டுள்ளது.

இயல் ஐந்து

'உலகாய்தத்தின் வாழ்க்கை நெறி' என்னும் இவ்வியல், இம் மெய்யியலின் கடவுள் மறுப்பு, அரசியல், சமூகவியல், இன்பியல் ஆகிய பல துறைகளும் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள தன்மைகள் குறித்து ஆராய்கின்றது.

இயல் ஆறு

'பெரியாரியல்' எனப்படும் இவ்வியல் மரபு வழியாக வந்த உலகாய்தத்திற்குப் புதிய வடிவத்தையும் வீச்சையும் வழங்கிய பெரியாரின் மெய்யியல் குறித்த ஆய்வை மேற்கொள்வது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல் – ஒன்று

உலகாய்தத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

சில கேள்விகளுக்குச் சரியாக, கணக்காக விடையளிக்க விரும்புகிறவன்தான் மெய்ஞ்ஞானி. இந்த உலகம் எங்கிருந்து வந்தது? நாம் எங்கே போகிறோம்? என்னும் படியான பிரபஞ்சத்தின் பிரச்சினைகளுக்கு விளக்கம் தரவே மெய்ஞ்ஞானம் விரும்புகிறது என்பதைக் கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்கள். அப்படிப் பார்த்தால், அந்தக் கேள்விகளுக்கு விடையளிக்கப் புறப்பட்ட மெய்ஞ் ஞானி பல விஷயங்களுடன் கட்டிப் புரள்வதைப் பார்ப் பீர்கள்........

சார்சு பொலிட்சர்
மார்க்சீய மெய்ஞ்ஞானம், ப. 12

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகாய்தம்-
தோற்றமும் வளர்ச்சியும்

மனித வாழ்வை அடித்தளமாகக் கொண்டதோர் உலகியல் கோட்பாடே உலகாய்தம். இந்திய மெய்ப்பொருள் வரலாற்றில் மிகவும் தொன்மைவாய்ந்த ஒன்றாகக் குறிக்கப்படுவதைப் போன்றே தமிழகத்தில் வழங்கிய மெய்ப்பொருள்களிலும் காலத்தால் மிகவும் முந்தியதாக இக்கோட்பாடு திகழ்ந்துள்ளது.[1]

இக்கோட்பாட்டிற்கெனத் தனியாக நூல்கள் வழங்கி வந்ததாகவும், அரசர்கள் கற்கவேண்டிய தலையாய கல்வித்துறைகளை இது உள்ளடக்கி இருந்ததாகவும் ஆய்வாளர்கள் குறித்துள்ளனர்.[1-அ] இருப்பினும் இக்காலத்தில் உலகாய்தத்தை அடிப்படையாகக் கொண்ட மூலநூல்கள் ஏதும் இல்லை. கிடைக்கும் சான்றுகள் அனைத்தும் இதனை எதிர்த்தோரும் மறுத்தோரும் குறித்துள்ள குறிப்புகளாகவே உள்ளன.

தொன்மை

ஆரியர் வருகைக்கு முன்னரே இக்கோட்பாடு இந்தியாவில் செல்வாக்குப் பெற்றிருந்தது. ''கடவுளை மறுப்பவர்களாகவும் வேதவேள்விகளைப் புறக்கணித்தவர்களாகவும் இருக்கு வேதத்தில் குறிக்கப்படுபவர்கள் இம்மெய்யியலைச் சார்ந்தவர்களே'' என்பார் சதீச் சந்திரா.[2] பிரகதாரண்ய உபநிடதத்திலும் உலகாய்தம் பற்றிய குறிப்பு உண்டு. (2. 4. 12)

உலகாய்தம் குறித்து ஆராய்ந்த அறிஞர்கள் பலரும், வடமொழி இலக்கியச் சான்றுகளைக்கொண்டே தங்களின் ஆய்வை

---

1. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும்' ப. 194.

1-அ. Sathish Chandra, History of Indian Logic, p. 9.

2. நா. வானமாமலை, மு. கு. நூ., பக். 198, 199.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்கொண்டனர். ஆனால், தமிழ் இலக்கியங்களில் பரந்து கிடக்கும் மெய்யியலின் மூலச்சான்றுகளை அவர்கள் பயன்படுத்தவில்லை. தமிழ் இலக்கியங்களின் சான்றுகளைக் கொண்டு இம் மெய்யியலை ஆராய்ந்த வானமாமலை,

> இந்தியத் தத்துவவாதிகள் அனைவருடைய நூல்களும் சமஸ்கிருதத்தில் இருப்பதால், அம்மொழியில் புலமை உடையவர்கள் வடஇந்தியாவில் வழங்கி வந்த உலகாயதத்தைப்பற்றி ஆராய்ந்து அதனை விளக்கியுள்ளார்கள். இதே போன்று தென்னிந்தியச் சான்றுகளை ஆராய்ந்து உலகாயதத்தை விளக்கிய ஆய்வாளர்கள் யாரும் இல்லை. எனவே வடமொழி ஆய்வாளர்கள் செய்திருப்பதைப் போன்று பூர்வபட்சமாகவும், பழந்தமிழ் நூல்களில் காணும் நேரடிச் சான்றுகளைத் தொகுத்தும் தமிழ்நாட்டில் வழங்கிய உலகாயதத்தின் தத்துவக் கூறுகளை ஆராய முற்படலாம்......... இவ்வாராய்ச்சியில் வடமொழிச் சான்றுகளில் காணப்படும் உண்மையோடு ஒப்பிடுவதும் அவசியமாகலாம்.[3]

என்று குறிப்பது இம் மெய்யியல் பற்றி வந்துள்ள ஆய்வின் தன்மைகளை விளக்கும்.

பெயர்க்காரணம்

பூதவாதம், சாருவாகம், நாத்திகம், ஏதுவாதம், இயல்புவாதம், பொருள்முதல் வாதம் (பிரகிருதி வாதம்), விதண்டாவாதம் போன்ற பல பெயர்களால் உலகாய்தம் குறிக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியப் பாயிரத்துள் பனம்பாரனார் ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' எனச் சுட்டுவதும் இம் மெய்யியலையாகும்.

உலகாய்தம் என்னும் இம்மெய்யியல் வடமொழி இலக்கியங்களுள் 'லோகாயதா' என்றும் 'லௌகாயதா' என்றும் குறிக்கப்பட்டுள்ளது. தமிழ் அறிஞரான உமாபதி சிவாசாரியார்,

> உலோகாயதம்—புறப்புறச்சமயம் ஆறனுள் ஒன்று.
> உலோக, ஆயதம்—பற்றுடைமை, ஆ+யத:
> ஆ—முற்றாக என்னும் பொருள்படும் உபசர்க்கம்.
> யத்—ஆசைகூர்தல், அவாக் கொள்ளுதல்[4]

---

3. சிவப்பிரகாசம், பக். 250.
4. D. Chattopadhyaya, Lokayata, p. 10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று உலகாய்தத்தை வடசொல்லாகவே கொண்டு பொருள் விளக்கம் தந்துள்ளார். தேவிபிரசாத் சட்டோபாத்தியாயா, 'லோகேசு + ஆயதா = லோகாயதா எனப் பிரித்து, மக்கள் நடுவே செல்வாக்குப் பெற்ற ஒன்று' என்று பொருள் விளக்கம் தருகின்றார்.[5]

கி. பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவரும் சமண உரையாசிரியருமாகிய குணரத்னா, "பண்பாடு அற்ற சிந்திக்க மறுக்கும் ஒரு கூட்டத்தாரே லோகாயதர் (லோகாயதிகா)" என்று குறித்துள்ளார். பிரும்ம சூத்திரத்திற்கு உரை கண்ட சங்கராச்சாரியும், 'சர்வதர்சன சங்கிரகம்' என்னும் நூலின் ஆசிரியரான மாதவரும் உலகாய்தர்களை இழிவுபடுத்தியே கூறியுள்ளனர்.[6]

மெய்யியல் அகராதி தரும் விளக்கமாவது:

> லோகாயதா: பண்டை இந்தியாவில் திகழ்ந்த ஒரு பொருள்முதல்வாதக் கோட்பாடு. இது பற்றிய மிகவும் தொன்மையான குறிப்புகள் பௌத்த அறநூல்களில்தான் முதன் முதல் காணப்படுகின்றன. மரபு வழியாக இக் கோட்பாடு பிரகஸ்பதி என்னும் புராண மாந்தரோடு இணைத்துப் பேசப்படுகின்றது. வேதங்களில் நாத்திகர்கள் என்ற தாக்குதல்களுக்கு ஆளானவர்கள் சார்வாகர்கள் எனப்படுவோராவர். பல்வேறு பழைய நூல்களும் இப்பொருள்முதல்வாதக் கோட்பாட்டை சார்வாகம் என்றே குறித்துள்ளன. நிலம், நீர், தீ, வளி ஆகிய மூலக் கூறுகளின் கலப்பால் உருவானதே இவ்வண்டம் என்பது இதன் அடிப்படை. (சில நூல்கள் விசும்பை அய்ந்தாவது மூலப்பொருளாகக் குறித்துள்ளன) பொருள்களின் இயல்பு, அவற்றுள் கலந்துள்ள மூலப்பொருள்களின் அளவிற் கேற்பவே அமையும்........ கடவுள், மோட்சம், நரகம், ஆன்மா ஆகியவற்றை முற்றாக மறுப்பது; இன்பியல் கோட்பாடு இம்மெய்யியலில் முதன்மையான இடத்தை வகிக்கிறது......[7]

என்பதாகும்.

---

5. D. Chattopadhyaya, Lokayata, p. 11.
6. Ibid., p. 12.
7. Dictionaries of Philosophies, P. 233.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"இராதாகிருட்டினன் உலகாய்தம் என்ற சமற்கிருதச் சொல் 'பார்க்கப்படும் புலனுலகு' என்ற பொருளில் வழங்கும் பொருள் முதல் கோட்பாட்டை உணர்த்தும் என்பார். தாசுகுப்தா 'மக்கள் வாழ்வில் காணப்படும் ஒரு வாழ்க்கை நெறி' என்றும், 'சார்வாகத் தைத் தழுவிய அனைத்துக் கோட்பாடுகளையும் குறித்த ஒரு பொதுப்பெயர்' என்றும் இச்சொல்லிற்கு விளக்கம் தருகின்றார்."[8]

தேவநேயப்பாவாணர், 'லோக என்னும் வடசொல் பார்க்கப் படுவது என்ற பொருளில்தான் வழங்கப்பட்டுள்ளது' என்பார்.

உல்-உலக்கை (நெல்குற்றும் கழி)

உல்-உலா, உலவு (காலாரா உலவுதல்)

உல்-உருண்டை

உல்-உலகம் சுழல்வது (உருண்டையானது)

என்பது அவரின் விளக்கம்.[8அ]

மக்கள் நடுவே செல்வாக்குப் பெற்றிருந்ததாலேயே ஒரு மெய் யியலுக்கு 'உலகாயதம்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கும் என்ற தேவி பிரசாத் சட்டோபாத்தியாயாவின் கருத்து பொருந்துமா றில்லை. கடவுள் மறுப்பையும் ஆன்மா, வீடு, வேதம், வேள்வி, பாவம், புண்ணியம் ஆகிய அனைத்தையும் முற்றாகக் கண்டித்த இக்கோட்பாடு மக்கள் கூட்டத்தின் அனைத்துப் பிரிவிலும் செல் வாக்குப் பெற்றிருக்க வழியில்லை. மாறாக, உலகாய்தம் இந்தியா வில் தோன்றிய அனைத்துச் சமயங்களைச் சார்ந்தவர்களாலும் பெரிதும் கண்டிக்கப்பட்டே வந்துள்ளது.

உமாபதிசிவாசாரியார் கூறுவது போன்று உலகத்தின்மீது பற்றுடைமை என்ற பொருளும் இம்மெய்யியலின் தன்மைகளை முழுமையும் உணர்த்துவதாக இல்லை.

பவுத்த அற இலக்கியங்களில் உலகாய்தம் என்ற சொல் அறிவியலை உணர்த்தி நிற்கின்றது. திக்கநியாயம், அங்குத்தாரா, திவ்வியவதானா ஆகிய நூல்கள் உலகாய்தத்தைச் சிறந்த அறிவியல் கலையாகவும் கற்க வேண்டிய சிறப்பிற்குரிய பாடத்திட்டமாகவும் குறித்துள்ளன. அத்துடன் உலகாய்த சாத்திரங்களுக்குச் சிறந்த உரை நூல்கள் இருந்ததையும் குறிக்கின்றன.[9]

---

8. D. Chattopadhyaya, Lokayata, p. 3.
8அ. தேவநேயப்பாவாணர், வேர்ச்சொல் கட்டுரைகள்.
9. Sathish Chandra, History of Indian Logic, pp. 2—3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாணக்கியர் தம் பொருள்நூலில் குறித்துள்ள 'ஆன்விக்சி' என்ற தருக்கசாத்திரமும் உலகாயதக் கோட்பாட்டையே உணர்த்துகின்றது.[10]

சொல்லும் பொருளும்

உலகாயதம் ஒரு கூட்டுச்சொல். இது உலகு+ஆயதம் எனப் பிரியும். 'உலகைப் பற்றிய ஆராய்ச்சி' என்பது இச்சொல்லின் பொருளாகும். ஆயதம் என்ற சொல் 'ஆய்' என்ற அடிச்சொல்லின் வழியாகப் பிறந்தது. ஆய்—ஆய்தல்—ஆராய்ச்சி—ஆய்தம் ஆகிய சொற்கள் நுண்மை, ஒரு பொருளின் நுண்மை குறித்த ஆய்வு என்னும் பொருள்களில் வழங்குவன. தொல்காப்பியர்,

> **ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
> **ஆவயின் நான்கும் உளஎதன் நுணுக்கம்**[11]

என்பார்.

இந்நூற்பாவிற்குத் தெய்வச்சிலையார்,

> ஓய்தல் என்னும் சொல்லும், ஆய்தல் என்னும் சொல்லும், நிழத்தல் என்னும சொல்லும, சாஅய் எனனும சொல்லும ஆகிய அந்நான்கு சொல்லும் ஒரு பொருட்குள அளவின் நுணுக்கத்தைக் காட்டும்.[12]

என்று விளக்குவார்.

ஆய்தம் என்ற தமிழ்ச் சொல் நுண்மைவாய்ந்த ஒலியமைப்புடைய எழுத்தின் பெயராக வருவதும், அவ்வாய்தம் சார்பெழுத்துக்களில் ஒன்றாகக் கருதப்படுவதும் அதன் நுண்மை கருதியேயாகும்.

நா. கதிரைவேற்பிள்ளை அகராதியும் ஆய்தம் என்ற சொல்லிற்கு அஃகேனம், சிறுமை, நுண்மை என்றே பொருள்கூறும்.[13]

உலகம்

உருண்டையானது, சுற்றுவது, சுழல்வது போன்ற பொருள்களைத் தரும் 'உல்' என்ற வேர்ச் சொல்லிலிருந்து பிறந்ததே

---

10. Sathish Chandra, Op. Cit., pp. 2-3.
11. தொல், உரியியல், 326.
12. தொல், தெய்வச்சிலையார் உரை.
13. நா. கதிரைவேற்பிள்ளை அகராதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உலகம்' என்ற சொல்லாகும். உலகத்தைச் சுட்டும் வேறொரு பெயராகிய 'ஞாலம்' என்ற சொல்லிற்கும் 'எந்தப் பிடிப்பும் இல்லாமல் தொங்குவது' என்பது பொருள். உலகத்தைக் குறிக்கும் இத்தகைய சொற்கள் இவ்வுலகின் இயக்கத்தையும், அதன் இயல்பையும் முற்றாக அறிந்திருந்த ஆய்வின் வெளிப்பாடு என்பது உறுதி.

எனவே உலகாய்தம் என்ற பெயர் உலகைப் பற்றிய ஆய்வை அடிப்படையாகக்கொண்ட ஒரு மெய்யியலின் காரணப்பெயர் என்பது தெளிவு. இக்கருத்தை அரண்செய்யும் வண்ணம் குணா,

> 'உலகாய்தம்' என்னும் சொல்லே வடமொழியில் 'லோகாய்தம்' என மருவியது. 'உலகாய்தம்' உலகினை ஆய்கின்ற முறை எனப்படும்.[14]

என விளக்குவார்.

உலகாய்தத்தை உணர்த்தும் மற்றொரு பெயராகிய பூதவாதம் என்பதும், பூதம் என்ற தமிழ்ச் சொல்லின் அடியாகப் பிறந்ததே ஆகும். மெய்யியல் வரலாற்றில் இது மிகவும் தொன்மை வாய்ந்தது. இதன் சிறப்பினை,

> ''பூதம்'' என்னும் தமிழ்ச்சொல் 'பூ—பூத்தல்' எனும் வேர்ச்சொற்களிலிருந்தே அரும்பியது என்று பாவாணர் சான்றுகளுடன் எடுத்துரைக்கின்றார். அச்சொல்லுக்குப் பின்னால் ஒரு மெய்யியல் பள்ளியே மறைந்து கிடக்கின்றது. 'பூதங்களை' (தனிமங்களை) நடுவமாக வைத்துப் பின்னப்பட்ட ''உலகாய்தம்'' எனப்பெறும் மெய்யியல் முழுவதுமே பார்ப்பனியச் சிந்தனைக்குப் பரிசிலாகத் தரப் பெற்றது. முன்னோடி அறிவுப் பள்ளிகளில் ஒன்றாகிய சாங்கியமும், அதனை ஒட்டிப் பிறந்த அத்துணை அறிவுப் பள்ளிகளும், அத்தகைய அய்ம்பெரும் தனிமங்களைப் பற்றிச் சொல்லாமல் விட்டதில்லை. அவை யாவும் பூதவியலின் தொன்மையையே உரைப்பன.[15]

என்று குணா கூறுவதும் ஒப்புநோக்கத்தக்கது.

கலந்த மயக்கம் உலகம்

அய்ந்து வகையான பூதங்கள் அல்லது மூலப்பொருட்களால் ஆனது இவ்வுலகம். கூட்டுப்பொருள்களான பூதங்கள் அவற்றின்

---

14. குணா, தமிழர் மெய்யியல், பக். 38.
15. மே. நூ. ப. 69.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல்புகளிலிருந்து மாறுபடுதலே அழிவு என்பது. அய்ந்துவகை மூலப்பொருள்களையும் அவற்றின் இயல்புகளையும் நன்கு ஆராய்ந்த அறிஞர்கள் அக்காலத் தமிழகத்தில் நிறைந்திருந்தனர். அத்தகைய அறிஞர்களைப் பவுத்த இலக்கியங்கள் பூதவாதிகள் என்றும், சமற்கிருத நூல்கள் லோகாயதர்கள், லௌகிகதர்கள் என்றும் சுட்டின. தமிழ் இலக்கியங்கள் அவ்வறிஞர்களை 'உயர்ந்தோர்' எனப் பாராட்டின. தொல்காப்பியர்,

> வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட் டாக லான.[16]

என்பார்.

உலகைப் பற்றிய ஆராய்ச்சியைக் குறித்தே உலகாய்தம் என்ற தமிழ்ச்சொல் வழங்கப்பட்டது என்பதை மேற்காட்டிய சான்றுகள் நிறுவுகின்றன. அறிவியலுக்கும் உலகாய்தத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை. சார்சு பொலிட்சர்,

> விஞ்ஞானங்களுடன் பிறந்தது லோகாயதவாதம். அது அவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பது. லோகாயதவாதம் விஞ்ஞானங்களைச் சார்ந்து நிற்பது. எனவே விஞ்ஞானங்கள் வளர வளர, அவற்றோடு கூடவே லோகாயதவாதமும் முன்னேறி வளர்ந்து பரிணமித்தது. அப்படி வளர்ந்த லோகாயதவாதத்தின் வாரிசாக நவீன காலத்திய லோகாயதவாதமாக மார்க்சு, எங்கல்சு வகுத்த இயக்கவியல் லோகாயதவாதம், மெய்ஞ்ஞானத்தையும் விஞ்ஞானத்தையும் மீண்டும் புதிதாய் ஒன்றுபடுத்தி வைப்பதில் வெற்றி கண்டிருக்கிறது.[17]

என்று விளக்குவார்.

தமிழ் மரபும்—வடமரபும்

பூதங்கள் நான்கே என்று வடநாட்டில் வழங்கிய உலகாய்தம் கூறும். விசும்பை ஒரு மூலக்கூறாக அது ஏற்சவில்லை. உலகாய்தம் காட்சி அளவையை அறிவின் வாயிலாகக் கொண்டது. காட்சி அளவையால் விசும்பைக் காணவோ—காட்டவோ இயலாது எனக் கருதி அதனை ஒரு மூலக்கூறாக அவர்கள் ஏற்கவில்லை. ஆனால், தமிழ் மரபில் விசும்பு ஒரு பூதமாக ஏற்கப்பட்டு 'பூதங்கள் அய்ந்து' என்ற வழக்கும் நிலைபெற்றது.

---

16. தொல். மரபியல், 638.

17. சார்சு பொலிட்சர், மார்க்சீய மெய்ஞானம், (தமிழில் ப. கண்ணன்) ப. 41.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அண்டங்கள் தோன்றவும் வளரவும் களமாக இருப்பது விசும்பு. இதனை மணிமேகலை,

> ஆக்கும் ஆகாயம் எல்லாப் பொருட்கும்
> பூக்கும் இடம்கொடுக்கும் புரிவிற் றாகும்.[18]

என நிக்கந்தரின் கோட்பாடாகக் குறிக்கும்.

இயல்புவாதம்

பூதங்கள் ஒவ்வொன்றும் தனித்தனி இயல்புகளைக் கொண்டவை. இவ்வியல்புகளை அடிப்படையாகக் கொண்டு உருவான கோட்பாட்டைச் சுபாவ வாதமென்றும் இயல்பு வாதமென்றும் அழைப்பர். இதனைப் பிற்கால உரையாசிரியர்கள் தனிப்பட்ட கோட்பாடாகக் குறித்தாலும், இது உலகாய்தத்தின் மாற்று வடிவமே ஆகும்.

பூதங்களின் சேர்க்கையால் உலகம் உருவாகின்றதைப் போன்றே பூதங்கள் அவ்வவற்றிற்குரிய அணுக்களின் திரட்சியால் உருவாகின்றன. அணுக்களின் இயல்பே பூதங்களின் இயல்புகளாகும்.

> தீயின் தன்மை சுடுதல் (வெம்மை)
> நீரின் தன்மை குளிர்ச்சி
> காற்று இரண்டும் இல்லாதது
> இவ்வேறுபாடுகளை உண்டாக்கியது யார்?
> அவற்றின் சுபாவத்தால் அவை அவ்வாறிருக்கின்றன.[19]

என்று பொருள்களின் இயல்புகளை விளக்கினர் உலகாய்தர்.

உலகின் மாறுதல்களுக்கும் உயிர்களின் படிநிலை வளர்ச்சிக்கும் காரணமாக இருப்பவை பொருட்களின் இயல்புகள். இவ்வியல்புகளைத் தவிர வேறொன்றின் பங்கு எந்த வகையிலும் இடம் பெறுவதில்லை என்பதை இக்கோட்பாடு வற்புறுத்தியது.

> சுபாவவாதத்தை இயற்கைவாதம் என்று அழைக்கலாம். இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் உண்டு. அவற்றை மனிதர் அறியலாம். இக்காரணங்கள் இயற்கையில் உள்ளார்ந்து உள்ளன. ஒரு நிகழ்ச்சிக்குக் காரணம் கடவுள் என்று நம்பினால் அறிவு ஸ்தம்பித்துப் போய்

18. மணி. 27:193-194.
19. நா. வானமாமலை, இந்திய நாத்திகமும் மார்க்சீய தத்துவமும், ப.30.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடும். பொருள்களின் இயற்கையே அவற்றின் மாறுதல்களுக்குக் காரணம். இது சுபாவவாதம்.[20]

என்று விளக்குவர்.

இவ் இயல்புவாதத்தினைப் புறநானூற்றுப் பாடல் ஒன்று பூதங்களின் இயற்கை என விளக்கும்.

மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
அய்ம்பெரும் பூதத்து இயற்கை போல[21]

என்பது பாடல்.

உலகம் அய்ந்து பூதங்களின் கலந்த மயக்கத்தால் உருவாவது என்பதைத் தொல்காப்பியர்,

நிலம்தீ நீர்வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்......[22]

என்பார். இந்நூற்பாவிற்கு இயல்புக் கோட்பாட்டை ஒட்டியே உரை கூறுவார் பேராசிரியர்.

நிலம்வலிது, தீவெய்து, நீர் தண்ணென்றது,
வளியெறிந்தது, விசும்பு அகலியது.[23]

என்பது அவ்வுரை.

நிலத்திற்கு வன்மையும், தீக்கு வெம்மையும், நீருக்குத் தண்மையும், காற்றிற்கு எறிதலும் இயல்புகளாய் இருப்பதைப் போன்றே விசும்பிற்கு அகற்சி (விரிவடைதல்) இயல்பாகும். விசும்பின் இவ்வியல்பை 'அகலிரு விசும்பு' என்ற தொடர் உணர்த்தும். இத்தொடர் வினைத்தொகையாய் நின்று பொருள் தருவதும் எண்ணத் தகும்.

இவ்வாறு அண்டங்களின் தோற்ற ஒடுக்கங்கட்குக் களமாக இருப்பதுடன், விரிந்து கொண்டிருக்கும் இயல்பும் விசும்பிற்கு

20. நா. வானமாமலை, இந்திய நாத்திகமும் மார்க்சிய தத்துவமும், ப. 28.
21. புறம், 2:1-6.
22. தொல், மரபியல், 638,
23. தொல், மரபியல், 638, பேராசிரியர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்டு என்பதை அறிந்து தமிழ் மரபாளர்கள் இதனை அடிப்படைப் பூதங்களுள் ஒன்றாக ஏற்றுக்கொண்டனர்.

வடமரபில் பூதங்கள் நான்கு என்ற மரபு தோன்றினாலும், பவுத்த சமண இலக்கியங்கள் தமிழ் மரபைப் பின்பற்றிப் பூதங்கள் அய்ந்து என்பதை ஏற்றுள்ளன. தமிழ் இலக்கியங்களுள் பூதவாதம் என அவை குறிப்பது தமிழக மரபாகிய உலகாய்தத்தையே ஆகும்.

மணிமேகலை

உலகாய்தம் பற்றிய செய்திகளைத் தொகுத்துக் கூறுவதில் காலத்தால் மிகவும் முற்பட்டது மணிமேகலை ஆகும். வஞ்சி நகரில் கூடியிருந்த பல்வேறு சமயக் கணக்கர்களையும் கண்டு, அவர் தம் கோட்பாடுகளை மணிமேகலை அறிந்ததாகச் சாத்தனார், 'சமயக் கணக்கர் தந்திறம் கேட்ட காதை'யில் விளக்குவார். அவ்வாறு வினவிய மெய்யியல்களுள் பூதவாதமும் ஒன்று. பிற மெய்யியலாளரைத் தன் பேச்சாற்றலால் மடக்கி அவர்களைத் தோல்வியுறச் செய்து, தனது கோட்பாட்டை நிலைநாட்டும் பாங்கில் அக்காதை அமைந்துள்ளது. பூதவாதி, மணிமேகலைக்குத் தந்த விளக்கம் வருமாறு:

> பூதவாதியை உன் தத்துவத்தை விளக்கு என்றாள். அவன் கூறுவான்: அத்திப்பூவையும் கருப்புக்கட்டியையும் வேறு பொருள்களையும் கலந்தபோது கள்ளும், அதனிடத்தே களிப்பூட்டும் புதிய பண்பும் தோன்றினாற் போல அயம்பூதங்களின் கூட்டத்தால் உணர்வு தோன்றும். பூதங்களின் கூட்டம் நீங்கியபோது அவ்வுணர்வு அழியும். உணர்வு அழிந்தால் அய்ம்பூதங்களாய்ப் பிரியும். இது பறையின் ஒலி தூரம் செல்லச் செல்லக் குறைந்து அழிவதுபோல உணர்வு அழியும். உணர்வோடு கூட்டப்பட்ட பூதத்திலிருந்து உணர்வுள்ள பூதம் பிறக்கும். உணர்வில்லாத உடல் உணர்வில்லாத பூதங்களின் சேர்க்கையால் உண்டாகும். உயிர் உணர்வுள்ள பூதங்களால் தோன்றும். உண்மைநெறி இதுவே. இவை தவிர வேறுவிதமாகவும் உலகாயதரில் பல பிரிவினர் கூறுவர். காட்சியே அறிவுக்குப் பிரமாணமாம். இம்மையும் இம்மைப்பயனும் இப்பிறப்பிலேயே கழிவனவாம். மறுமைப் பிறப்பு உண்டென்பதும், அப்பிறப்பில் இறப்பின் வினைப்பயனை நுகர்தல் வேண்டும் என்பதும் பொய்.[24]

24. தொல், மரபியல், 638, பேராசிரியர் உரை, ப. 242.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7948

பூதவாதியின் கூற்றில்,

பிரபஞ்சத் தோற்றத்தின் அடிப்படை,

உயிருக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பு,

உயிராகிய உணர்வு இப்பிரபஞ்சத்தை அறியும் தன்மை.[25]

ஆகிய மூன்று கூறுகளுக்குமான விளக்கம் பொதிந்து கிடப்பதை அறியலாம்.

மணிமேகலை பூதவாதியைப் பிரபஞ்சத்தின் தோற்றம் குறித்தோ, உயிருக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பு குறித்தோ ஏதும் கேட்கவில்லை. மாறாக, உலகாய்தர்களின் காட்சி அளவையைக் குறைகூறும் வகையில் வினாவைத் தொடுக்கின்றாள்.

நின் தாய்தந்தையரை உய்த்துணர்வால் அன்றி வேறு எவ்விதம் அறிவாய்? என்பது அவள் வினா. அவ்வினாவிற்குரிய விடையைப் பூதவாதியால் அளிக்க இயலவில்லை என்பது மணிமேகலையின் முடிவு. உண்மையில் இத்தகைய வினாக்களுக்கு உலகாய்தர்கள் அளித்துள்ள விடைகளை அவர்கட்குரிய நூல்களின் வாயிலாக அறிய முடியவில்லை. இருப்பினும், ஆய்வுக்குழாய்களின் மூலம் குழந்தைகளைப் பிறப்பிக்கும் இக்கால அறிவியல் வளர்ச்சி மணிமேகலையின் வினாக்களைப் பொருளற்றனவாக்கிவிட்டது.

காட்சி அளவையை அறிவின் முதன்மைவாயிலாகக்கொண்ட உலகாய்தர்கள் உய்த்துணர்வை முற்றாகப் புறக்கணித்தனர் என்பது மணிமேகலையின் முடிவு. ஆனால் அறிவுக்குப் பொருந்தும் வண்ணம் உய்த்துணர்வை உலகாய்தர்கள் ஏற்றுக்கொண்டனர் என்பது உண்மை. பட்டறிவிற்கு மாறான வகையில் இயற்கையை மீறிய ஆற்றல்களை நிறுவுவதற்கு உய்த்துணர்வு பயன்படுத்தப்படுவதையே உலகாய்தர்கள் மறுத்தனர்.

நீலகேசி

உலகாய்தம் குறித்து ஆராயும் நூல்களுள் மணிமேகலையை அடுத்து வருவது நீலகேசியாகும். மணிமேகலையில் உலகாய்தம் பவுத்தர்களின் நோக்குடன் அணுகப்பட்டது. நீலகேசியிலோ சமணர்களால் திறனாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

மணிமேகலையைவிட நீலகேசி உலகாய்தம் பற்றிய செய்திகளைச் சற்று விரிவாக விளக்கியுள்ளது. இருப்பினும், இரண்டு

25. தொல். மரபியல், 638, பேராசிரியர் உரை, ப. 248.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காப்பியங்களின் தலைவியரும் தங்கட்கு வாய்க்கப்பெற்ற இயற்கையை மீறிய ஆற்றல்களைக்கொண்டே உலகாய்தர்களைத் தோல்வியுறச் செய்துவிட்டதாகப் புனையப் பெற்றுள்ளனர்.

பூதவாதச் சருக்கம்

மதனசித்து என்னும் மன்னனின் அவை கூடியுள்ளது. அதன்கண் பூதவாதி தனது கோட்பாட்டை விளக்குவதாக நீலகேசி தொடங்குகின்றது. பூதவாதியை அறிமுகப்படுத்தும்போதே கண்டார் வெறுக்கும் வகையில் 'பிணிகொள் மூஞ்சிப் பிசாசகன்' எனப் புனைகின்றது.

மன்னவனின் அவையில் உள்ளோர் கேட்குமாறு பூதவாதி தனது மெய்யியலை எடுத்துரைக்கின்றான்.

பொறிபுலன்களின் தோற்றம்

'திண்மை வாய்ந்த தீ, நிலம், நீர், வளி, வானம் ஆகிய அய்ம்பெரும்பூதங்களிலிருந்து கண், மூக்கு, நாக்கு, மெய், செவி ஆகிய அய்ந்து பொறிகளும் தோன்றுகின்றன. இப்பொறிகளிலிருந்து முறையே புலன்கள் அய்ந்தும் தோன்றுகின்றன.

தீயிலிருந்து ஒளியும் கண்ணும், நிலத்திலிருந்து மூக்கும் நாற்றமும், நீரிலிருந்து சுவையும் நாவும், காற்றிலிருந்து உறும் மெய்யும், விசும்பிலிருந்து ஒலியும் செவியும் உண்டாகின்றன.[26]

அறிவு, இன்பம் ஆகியவற்றின் தோற்றமும் மறைவும்

'மா முதலாகிய அய்ந்து பொருள்களையும் கூட்டி உருவாக்கிய கள்ளில் களிப்புத் தோன்றுவதைப்போல, நிலம் முதலிய அய்ம்பெரும் பூதங்களின் கூட்டத்தினால் அறிவு, இன்பம் முதலியன தோன்றி, அவை வளரத் தாமும் வளர்ந்து, அந்தப் பூதங்கள் பிரிந்தால் முன்பு சொன்ன அப்பொறி புலன்கள் தம் இனமாகிய பூதங்களோடு சென்று சேரும்'.[27]

உயிர் என்பது பொய்யெனல்

'உலகம் என்பது அந்த அய்ம்பெரும் பூதங்களின் கூட்டமேயாம்; சிலர் உயிர் முதலிய பொருள்களும் உண்டு என்று தங்கள் நலங்கருதி கூறக் கேட்டு, அறிவில்லாதார் கலகங்களைச் செய்வர். அவற்றால் பயன்பெறுவதும் இலர்.

---

26. நீலகேசி, பூதவாதச் சருக்கம், உரை. பக். 701.
27. மே. நூ. ப. 701.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எக்காலத்தும் இவ்வய்ந்துமே பொருள்; இந்நிகழ்ச்சியே நிகழ்ச்சி. இவை அன்று என்போர் அறிவில்லாதாரே.[28]

இவ்வாறு பூதவாதி தன் கோட்பாடுகளை விளக்கிய பின்னர் நீலகேசி அவனது கூற்றை மறுக்கத் தொடங்குகின்றாள். பூதவாதியின் விளக்கத்தைவிட, நீலகேசியின் வினாக்கள் மிகுதியாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நீலகேசியின் வினாக்களை வகைப்படுத்துவதன் மூலம் அவர்கள் எதிர்நோக்கிய சிக்கல்களைத் தெரிந்து கொள்ளலாம்.

முதல்நூல் ஆசிரியன் இல்லை

'பூதவாதியே! உனக்கு வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் இல்லை. ஆதலால் நீ சொல்லும் ஒவ்வொரு சொல்லும் புனைந்துரையாகிய பொய்யே. உண்மையில்லை.

உயிரில்லை என்பதால் துறக்க நரகங்களும் இல்லை. இம்மைக் கண் தவம் முதலியன செய்தல் வீண். மனம் போனவாறு ஒழுகுதலே நன்று. அப்படித்தானே!' என்றாள்.

பூதவாதியின் செயல் பயனற்றது

'அம்பெரும்பூதமே உண்மைப்பொருள். அவையல்லது இறைவனும், நல்லொழுக்கும், நற்பயன் யாதும் இல்லை என்கிறாய். அப்படி இல்லாதவற்றை நீ இல்லை என்று வாதிடுதல் எதற்கு? ஆகவே, நின் முயற்சி மாந்தர்க்குச் சிறிதும் பயன்விளைக்காத முயற்சியாம்.

பூதங்களன்றி வேறு இல்லை எனில் நீ யார்? என்னோடு வாதிடும் நீ வெறும் வாதமா? (காற்றா?) இல்லை எனில் அய்ம்பூதங்களில் எப்பூதம்?

அய்ம்பூதக் கூட்டத்தினாலே அறிவும் இன்பமும் உண்டாவதாகக் கூறினாய். மா முதலிய பொருட்களால் மது உண்டாவதையும், அதனுள் களிப்புத் தோன்றுவதையும் உன் கூற்றுக்கு உவமையாகக் காட்டினாய். மதுவும் மதுவிற்குரிய காரணப் பொருட்களும் உருவுடையன. அப்படியாயின் அறிவும் இன்பமும் உருவுடையனதானா?

அறிவு உருவப் பொருளாகிய நிலம் முதலிய பூதங்களின் காரியம் எனின் அதுவும் உருவப்பொருள் என்றே உணர். அன்றி

28. நீலகேசி, பூதவாதச் சருக்கம், உரை, ப. 702.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அருவப் பொருளின் காரியமாயின் அறிவு ஆகாயத்தின் காரியம் ஆதல் வேண்டும். நீயோ அறிவை உயிரின் காரியமன்று என்கிறாய். அப்படியாயின் அறிவு தோன்றுகின்ற காரண காரியங்கள்தான் எவ்வாறு?

அய்ம்பூதங்களிலிருந்து அய்ம்பொறிகளும் அவற்றிலிருந்து உணர்வும் அறிவும் தோன்றுகின்றன என்று நீ கூறுகிறாய். ஒவ்வொரு புலனும் ஒவ்வொரு பொறியில் இருந்து தோன்றுமானால் அய்ந்து பூதங்களின் சேர்க்கையால் உணர்வு உண்டாகிறது என்ற உன் வாக்கு மாறுபடவில்லையா?

பூதங்களின் சேர்க்கையின் விளைவான உணர்வு அதன் பௌதீக அடிப்படை நீடிக்கும் வரை இருக்கும் என்றும், அய்ம் புலன்களின் கூட்டு கலைந்தவுடன் மறைந்துவிடும் என்றும் கூறினாய். மயக்கத்தால் உணர்விழந்தவன் உடலோடுதானே இருக்கின்றான்? உடலோடு இருக்கும்பொழுது, அய்ம்பூதங்களின் கூட்டு கலையாதபோது உணர்வில்லாமல் இருக்கிறானே இது எவ்வாறு? அய்ம்பூதங்களைத் தவிர வேறு எதனையும் இதற்குக் காரணம் என்று நீ கூறுவாயானால் உன் அடிப்படைத் தத்துவமான அய்ந்து பூதங்களே அண்டத்தின் அழியாத உண்மைகள் என்பது பொய்யாகிப் போய்விடும். ......இப் பிறப்புக்கு முன்னும், நாம் இறந்த பின்னும் சீவன் இருப்பதை யார் காண்பது என்று கேட்கலாம். உன்னுடைய பூதங்கள் நீ பிறக்குமுன் இருந்ததையோ, நீ இறந்தபின் இருப்பதையோ உன்னால் காணமுடியுமா? அது போலவே கர்மத்தின் விளைவை அனுபவிக்க வேண்டிய சீவன் நிரந்தரமானது. அது செயலுக்கேற்ற கதி அடையும்'[29] என்பது அவளின் மறுப்புரை.

நீலகேசியின் வினாக்கள் பூதவாதியின் கோட்பாட்டை மறுத்தாகவேண்டிய கட்டாயத்தில் உருவானவை. அய்ந்து பூதங்கள் பொருட்களின் தோற்றத்திற்கு அடிப்படை என்பதால் அவற்றைத் தனித்தனியாகப் பிரித்துக் காட்டவேண்டும் என்ற தேவையில்லை. தண்ணீரில் உயிர்க் காற்றும், அய்ட்ரசனும் முறையே இரண்டு பங்கு, ஒரு பங்கு (2:1) என்ற அளவில் கலந்துள்ளன என்பது அறிவியல். ஆனால், தண்ணீரில் அவ்விரண்டையும் காணமுடியவில்லை என்பதால் அவ்விரண்டும் தண்ணீரில் இல்லை என்று முடிவு செய்வதைப்போல நீலகேசியின் கூற்று அமைந்துள்ளது.

நீலகேசியின் வினாக்களுக்குப் பூதவாதி எத்தகைய விடைகளை அளித்தான் என்று நூலாசிரியர் குறிப்பிடவில்லை. ஆனால்

29. நீலகேசி, பூதவாதச் சருக்கம், உரை, பக். 705-710.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகாய்தத்தின் அடிப்படையில் வளர்ந்த இன்றைய அறிவியல் அவளின் வினாக்களுக்குத் தெளிவான விடைகளை வழங்கிவிட்டது.

> ......இயற்கை விஞ்ஞானம் அவனுடைய (பூதவாதி) காலத்தில் இவ்வளவு வளரவில்லை. எனவே அவன் பூதங்களின் கூட்டினால் உணர்வு தோன்றுகிறது என்று தான் கூறமுடியும். பொருள்களின் கூட்டு என்பது எத் தன்மையது என்பதைத் தற்கால விஞ்ஞானங்கள் அனைத்தும் சேர்ந்து விளக்குகின்றன. இது அவனுக்குத் தெரியாது. ஆயினும் அவனுடைய சிந்தனைப் பாதை சரியான வழியில்தான் சென்றது. பொருளில் இருந்துதான் பிரபஞ்சத்தில் உயிரும் சிந்தனையும் உட்பட அனைத்தும் தோன்றியுள்ளன என்ற கருத்தை இன்றைய விஞ்ஞான அறிவினால் மெய்ப்பிக்கிறோம்.[30]

என்ற வானமாமலையின் விளக்கம் நீலகேசிக்குத் தந்த இக்கால விடையாகும்.

சிவஞான சித்தியார்

தமிழ் இலக்கியங்களுள் உலகாய்தம் பற்றிய செய்திகளைத் தரும் நூல்களுள் காலத்தால் பிந்தியது சிவஞான சித்தியார் ஆகும். சைவசித்தாந்தம் தோற்றம் கொண்டதற்குப் பின்னர் அதன் அடிப்படையில் உலகாய்தத்தை மறுத்த செய்திகளை இந்நூல் விளக்கியுள்ளது. மணிமேகலை, நீலகேசி ஆகிய இரு நூல்களும் உலகாய்தர்களைப் பூதவாதிகளாகவும், பூதங்களை அய்ந்தாகவும் குறித்துள்ளன. ஆனால் சித்தியாரோ பூதங்களை நான்கு என்றும், பூதவாதிகளை உலகாய்தர்கள் என்றும் குறித்துள்ளது. அத்துடன், தன் காலத்தில் உலகாய்தத்தில் ஏற்பட்ட சில புதிய போக்குகளையும் குறித்துள்ளது.

மாற்றுக் கோட்பாடுகளை மறுக்கும் வகையில் அமைந்துள்ள இந்நூலின் பரபக்கத்தில் முதல் இடத்தை வகிப்பது உலகாய்தம். இவ்வைப்பு முறையே இதன் சிறப்பை உணர்த்தும்.

உலகாய்தக் கோட்பாடு

காட்சி அளவையையே அறிவின் வாயிலாகக் கருதும் உலகாய்தன் அக்காட்சியை ஆறு வகையாகப் பிரிக்கின்றான்.

அய்யக்காட்சி
வாயிற்காட்சி

30. நா. வானமாமலை, த. ப. த., ப. 253.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விகற்பக்காட்சி
அந்வயக்காட்சி
வெதிரேகக்காட்சி
திரிவுக்காட்சி[31]

என்பவை அவை ஆறும்.

அய்யக்காட்சி	—	இருளில் பழுதையைப் பாம்பென அய்யுறல்
வாயிற்காட்சி	—	பொறிகளால் காண்பது
விகற்பக்காட்சி	—	பெயர், குணம், சாதி, கன்மம், பொருள் ஆகிய இவற்றால் காண்பது.
அந்வயக்காட்சி	—	பட்டறிவை ஒட்டிய உய்த்துணர்வை அடிப்படையாகக்கொண்டது. புகை உள்ள வழி நெருப்பை அறிதல்.
வெதிரேகக்காட்சி	—	நாற்றத்தால் பூவறிதல்
திரிவுக்காட்சி	—	பழுதையைப் பாம்பென்று கொள்வது.

தொல்காப்பியர் காட்சி, அய்யம், தெளிதல் என்று காட்சி அளவையின் தன்மைகளை வகைப்படுத்துவார்.[32] அவரால் சொல்லப்பட்ட இம்மூன்று நிலைகளே சித்தியாரில் அறுவகைக் காட்சிகளாக விரித்துரைக்கப்பட்டுள்ளன.

பூதங்களின் பண்புகள்

''(நிலம், நீர், தீ, வளி என) பூதங்கள் நான்கே என்பதுடன் அவற்றின் பண்புகளும் சொல்லப்பட்டுள்ளன. அப்பண்புகள் உருபம் எனக் குறிக்கப்பட்டுள்ளன. அவை கடினம், குளிர்ச்சி, வெம்மை, சலனம் என்பவை. பூதங்கள் இவற்றுடன் கூடும். கூடியபின் அவற்றின் பெயர்கள் தலம், புனல், கனல், காற்று என்பனவாம். இவற்றின் குணங்கள் நாற்றம், இரத்தம், உருவம், பரிசம் என்பன. இவை கூடுமிடத்து மேலான வாயு பூதத்திலே நின்று மூன்று பூதங்களில் ஒன்றி ஒன்றாக அடைவே கூடப்படும்.''[33]

31. சிவஞான சித்தியார், உலகாயதன் மதம்.
32. தொல். பொருள், மரபியல், 659.
33. நா. வானமாமலை, த. ப. த. ப. 257.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பூதங்களின் கூட்டுறவின் பயன்

''அப்பூதங்களின் சொரூபங்களும், குணங்களும் தம்மில் ஒத்துக்கூடுகிற கூட்டத்திலே வடிவுகள் பல உண்டாகும். குயவனது சக்கரத்தில் வைத்த மண்ணிலிருந்து பல உருவமுடைய பாண்டங்கள் தோன்றுவதுபோல, நீரில் கிளம்பிய குமிழியைப்போல. புத்தியும், குணமும், பொறிபுலன்களும் இவ்வுருவினிடத்துத் தோன்றும்''.[34]

பூதங்களின் பிரிவு

பூதங்களிலிருந்து வாயு பிரிய இந்திரியங்கள் கெடும். (புலன் இறக்கும். எனவே, புலன் காரணமாகிய பொறி, குணம், புத்தி முதலியவும் இறக்கும்.) இம்முறையாலே தாவர சங்கமங்களும் இறக்கும். இவை இறந்தால் பூதங்கள் எஞ்சும். இவ்வாறு பூதங்கள் கூடுவதால் உருக்கள் தோன்றி, வாயு கெட, இறத்தல் இன்றி முன்செய்த கர்மம் பின்தொடரும் என்றும், இதனைப் புசிக்கத் தக்கதோர் ஆன்மா உண்டென்றும், இவற்றைக் கூட்டுவான் ஒரு கர்த்தா உண்டென்றும் சமயிகள் உலகத்தாரை மயக்குகின்றனர், இவ்வாறு பிற சமயத்தார் கூறுவது மலடி பெற்ற மகன் முயலின் கொம்பேறி ஆகாயத்தில் பூத்த பூவைப் பறித்தான் என்று சொல்லுவதோடு ஒக்கும்.[35]

இப்பிறப்பில் செய்த கன்மங்கள் இவ்வுடம்பு கெட, கெடக் காண்கிறோம். பின்னர் அடுத்துவரும் பிறப்புக்களுள் கூடுவது எவ்வாறு? பூதவுடல் போய், சூக்குமமாய் நிலவுமென்பது திரியோடு கூடி நிற்கும் விளக்கொளி அத்தீயை நீக்கித் தனியே நின்று ஒளிரும் என்று கூறுவது போலும்.

இன்பம் துன்பம் எல்லாம் அவரவர் வினைப்பயனால்தான் கூடும் எனின் குளிர்ந்த நீர் சந்தனத்தோடு கூடி மணக்கவும், அனலோடு கூடிக்கொதிக்கவும் செய்கிறது. அதனால் புனலுக்குரிய வினைப்பயன் என்னவென்றா ஆராய்வது? பொருட்களின் இயல்பே மணத்திற்கும் அனலுக்கும் காரணமாவதன்றி வினைப்பயன் அன்று.[36]

வெற்றிலை, பாக்கு, சுண்ணம் ஆகியவை உமிழ்நீரோடுங் கூடிச்சிவப்பாதல் போல, பூதக் கூட்டத்தில் ஓர் உணர்வு உண்டாம். அதுவன்றி ஆன்மா ஒன்றில்லை.

---

34. சிவஞான சித்தியார், உலகாயதன் மதம், பாடல் 15.

35. மே. நூ. பாடல் 16-17.

36. மே. நூ. பாடல் 21.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடவுள் உருவமற்றவன் என்றால் அறிவல்லாதவனாய் ஆகாயம்போல் ஆவான். உருவமுடையவன் என்றால் பூதக்கூட்டத்தினால் தோன்றுதல் வேண்டும். இரண்டும் உடையவன் எனில் உருவமற்ற ஆகாயத்தில் உருவமுடைய கல்லை விட்டெறிந்தால் கூடி நிற்குமோ?

நிலமாகிய பூதத்தே உணவு தோன்றி, அவ்வுணவால் உடலும், அவ்வுடலில் புத்தியும், புத்தியிலே பேதிக்கப்பட்ட மனமும் உண்டாகி வேறுபட்டன என்று உங்கள் வேதமே சொல்லுகிறது. உங்கள் வேதம் அப்படிச் சொல்லவும் பிரபஞ்சத்தில் உள்ளோர் எல்லாம் வருத்தத்திலே வீழ்ந்து வேறு வழியல்லா வகையைக் கேட்டு அதனை மேற்கொள்வது எதற்கோ?

வானுலகத்தில் உளதென்று நம்பும் வீட்டின்பத்தை நாடித் தவத்தை மேற்கொண்டு தடுமாறி மெலிவது எதற்கு? அப்படி ஒரு வீடு இருப்பதைக் கண்டவர்கள் யார்? காட்டியவர்கள் யார்? அதனைக் கேட்டவர்கள் யார்? இருந்தால் காட்டுவீர். அவ்வாறு காட்ட மாட்டீராயின், உலகத்தில் அரசனின் செங்கோலாட்சிக்குக் கட்டுப்பட்டு நடந்து நாளும் தேடிய பொருள்கொண்டு கண் முன்னே கிடைக்கும் இன்பத்தில் மகிழ்வீர்.[37]

உலகாய்தர் மறுதலை

உலகாய்தர்களின் கூற்றை மணிமேகலை, நீலகேசி ஆகியவை மறுத்ததைப் போன்றே சித்தியாரும் மறுக்கின்றது.

உலகாய்தர்களின் காட்சி அளவையை உய்த்துணர்வால் வந்ததாகக் கூறும் சித்தியார்,

> மேகம் இடித்து மின்னி இருண்டு பரந்தெழுந்தவிடத்து இதனால் மழை பெய்யுமென்று நினைப்பு உண்டாவதும் ஆறு, அகில், சந்தனம் முதலியவற்றைத் தள்ளி அலைத்தொழுகு நீரைக் கொண்டுவந்திட அதனைக் கண்டு பெரிய மலையின்கண் மேகம்கூடி மழை பெய்ததென்று துணிவதும், இவையிரண்டும் உலகாய்தனே நீ கூறிய காட்சியன்று. அனுமானமே ஆகும்.[38]

'அத்துடன் நூல்களின் துணையால் நிலத்திற்குள் இருக்கும் புதையலை அறிய முடிகிறது. சோதிடர்கள் எதிர்கால நட்புகளைக் கூறுகின்றனர். இதைத்தான் நாங்கள் ஆகமப் பிரமாணம் என்கின்றோம்' என்று விளக்குவார்.

---

37. சிவஞான சித்தியார், உலகாயதன் மதம், பாடல் 22-26.

38. மே. நூ. உலகாயதன் மறுதலை, பாடல் 34.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருமக் கோட்பாடு

கருமக் கோட்பாட்டை வற்புறுத்தும் சித்தியார் ''கன்மம் இல்லையாயின் உயிரினங்களின் பேதங்களை எவ்வாறு விளக்குவாய்? என வினவுகின்றது. அறிவால் அறியப்படும் எழுத்துக்களும், நுகர்ச்சிகளும், குணபேதங்களும் பூதக்கூட்டத்தால் உண்டாகா. கரும்த்தால்தான் சாதிபேதமும் குணபேதமும் ஏற்படக் கூடும்.''[39]

இறைவன் செயல்

பூதக்கூட்டமே பொருத்தப்பட்ட உடலுக்குக் காரணமாயின் பெண்ணை ஆண்கள் காதலோடு புணரும் புணர்ச்சி காரணமாக உருக்கள் காரியப்படுவானேன்? அங்ஙனமானது அநாதியே கர்த்தா நாயகியோடு கூடிப் போகத்தை விரும்ப அது காரணமாக உருக்கள் காரியப்பட்டு வருதலன்றி, பூதக்கூட்டம் காரணம் எனப்படாது.

நீ கூறிய பூதங்கள் காரியப்பட்டுப் பேர்லிவினையுடைத்தாய்ப் புசிப்பளவு நிலை பெற்று மீளவும் அழியா நிற்கும். ஆதலால் இவற்றை ஆக்கியும், அழித்துஞ் செய்வான் ஒரு கர்த்தா உண்டென்று அறிவாயாக''.[40]

'அறிவென்று வேறு ஒரு முதல் இல்லை; உடற்குணமேதான் அறிவென்று நீ கூறுகின்றாய். அப்படியானால் பெரிய உடலைப் பெற்றுள்ள யானைக்கு அறிவு பெரிதாகவும், சிறிய உடலைப் பெற்றுள்ள எறும்புக்கு அறிவு குறைவாகவும் அல்லவா இருக்க வேண்டும்? அவ்வாறில்லாமல் யானைக்கு அறிவு குறைவாகவும் மனிதனுக்கு அறிவு அதிகமாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன? ஆகையால் அறிவு உடற்குணம் அன்று. வேறு காரணம் இருந்தால் சொல்[41] என்று கேட்கிறார். உலகாயதன் இதற்கு விடையளிக்க முடியவில்லை என்றும் சித்தியார் கூறுகின்றது.

உலகாய்தர்களின் கூற்றாக வருவனவும், அக்கூற்றுகளுக்கு மறுப்பாகச் சொல்லப்படுவனவும் ஆகிய அனைத்தும் சித்தியார் வகுத்துக் கொண்டவையே. இக்கேள்விகளுக்கு உலகாய்தர்களின் மூலநூல்கள் எத்தகைய விடைகளை அளித்தன என்பதற்கான சான்றுகள் இல்லை. ஆயினும், உலகாய்தத்தின் அடிப்படையில்

---

39. நா. வானமாமலை, த. ப. த. ப. 260.

40. மே. நா. ப. 260.

41. மே. நூ. ப. 266.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வளர்ந்த இன்றைய அறிவியல் சித்தியாரின் வினாக்களுக்கு உரிய விடைகளைத் தருகின்றது.

> ......அறிவு ஒரு தனிப்பொருளல்ல. அதற்குச் சிறிது பெரிது என்ற பரிமாணம் கிடையாது. அது மூளையின் செயல். மூளையிலுள்ள மடிப்புக்கள் அதிகம் இருந்தால் அறிவு கூர்மையாய் இருக்கும். மடிப்புக்கள் குறைவாய் இருந்தால் கூர்மை குறையும். யானையின் மூளையையும் மனிதன் மூளையையும் சோதித்தறிந்த விஞ்ஞானிகள் யானையின் மூளையில் மனித மூளையைவிட மடிப்புக் குறைவென்று கண்டுள்ளார்கள். மடிப்பு அதிகமாயிருந்தால் ஒரே பரப்பில் செல்கள் எண்ணிக்கை அதிகமாயிருக்கும். ஒரு சதுர அங்குலத்தில், யானையின் மூளையிலுள்ளதை விடப் பலமடங்கு எண்ணுள்ள செல்கள் மனித மூளையிலுள்ளன..... எனவே, மூளை மூலக்கூறுகளின் கூட்டமாயினும் ஒரே பரப்பில் உள்ள செல்களின் எண்ணைப் பொறுத்துச் செயல் திறனில் வேறுபடும்.[42]

மேற்கூறிய தமிழ் நூல்களைப் போலவே வடமொழியில் உலகாய்தம் பற்றிய செய்திகளைத் தருவது சர்வதரிசன சங்கிரகம் என்ற நூலாகும். இதனை இயற்றியவர் தென்னகத்தைச் சார்ந்த மாதவ வித்தியாரணியர் என்பவர். இவரது காலம் கி. பி. 14ஆம் நூற்றாண்டு என்பர். இந்நூல் மற்றத் தமிழ் நூல்களைவிடக் காலத்தால் மிகவும் பிற்பட்டது. ஆயினும் தமிழ் நூல்களைப்போல உலகாய்தத்திற்கு ஏற்பட்ட தடைளையும் சிக்கல்களையும் பற்றி இந்நூலில் எவ்விதக் குறிப்பும் இல்லை. இருப்பினும் உலகாய்தத்தின் வளர்ச்சியை, அது தமிழகத்தில் பெற்றிருந்த செல்வாக்கை இந்நூலால் அறிய முடிகின்றது

தோற்றம்

இந்தியச் சிந்தனையில் பொருள்முதலியல் பற்றிய சிந்தனையே மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். இதன் தோற்ற வளர்ச்சியினை விளக்கும் தட்சிண் ரஞ்சன் சாத்திரி பின்வருமாறு கூறுவார்.

> இந்தியப் பொருள்முதலியலின் வளர்ச்சி நான்கு கட்டங்களாக அமைந்துள்ளது. வெறும் கேள்வி நிலையிலும், எதிர்ப்பு நிலையிலும் தன் முதற் கட்டத்தைக் கடந்தது, அறிவின் பல கூறுகளையும் கேள்வியினால் மட்டுமே அறிய முனைந்த இம்மெய்யியல், காட்சியையும்,

42. நா. வானமாமலை, த. ப. த. ப. 266.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(அறிவின் அடிப்படையில் எழுந்த) உயத்துணர்வையும் கூட விட்டுவிடவில்லை. வேத மேலாண்மையை இது முற்றாக மறுத்தது.

இரண்டாவது கட்டம் இயல்புவாதம். காட்சி அளவையை அறிவின் வாயிலாக ஏற்றுக்கொண்டது. உடலையும் உடலைச் சார்ந்த ஆன்மாவையும் பற்றிய தெளிவான வரன் முறைகளை வகுத்தனர். இக்கட்டத்தில் இது முழுமையான மெய்யியல் வடிவத்தை அடைந்தது. இவ்வடிவத்தில் குறைபாடுகள் இருந்தாலும்கூட, அக்கால எல்லையில் மெய்யியல் என்ற தகுதியைப் பெற்றிருந்த ஒரே ஒரு மெய்யியல் இதுவே என்பதில் தடையில்லை. இந்தக் காலம் இந்திய மெய்யியல் வரலாற்றில் மறுமலர்ச்சிக் காலம் எனலாம். இக்காலத்தில் இது உலகாய்தம் என்று அறியப்பட்டது.

மூன்றாவது கட்டத்தில் இது இன்பியல் கோட்பாடாக உருமாறுகிறது. அறிவு விடுதலையின் வரம்பற்ற நிலையில் சமூக, சமய, அரசியல் துறைகளில் ஏற்பட்ட சீர்குலைவின் காரணமாக இம்மாற்றம் நிகழ்ந்திருக்கலாம்.

நான்காவது கட்டத்தில் இது வரம்பற்ற இன்பியலை வற்புறுத்தும் சார்வாகம் எனப் பெயர் பெற்றது. இக்கட்டத்திலேதான் 'உண்ணுக, தின்னுக, குடிக்க; ஏனெனில் நாளை என்பது உறுதியில்லை' என்பது இதன் பாடமாயிற்று.

புத்த, சமண சமயங்களின் வரிசையில் ஒன்றாக இது இடம் பெற்ற காலம் இதன் நான்காவது கட்டமாகும். வேதங்களை மறுத்ததால் இது மற்றவற்றைப் போன்றே நாத்திகம் என்று அழைக்கப்பட்டது. நாத்திகம் என்ற சொல்லே வேதமறுப்பு என்ற பொருளையே உணர்த்தும்.

நாத்திகோ—வேத நிந்தகா[43]

என்பது அவர் தரும் விளக்கம்.

---

43. Indian Materialism has passed through four stages of development. In its first stage, it was a mere tendency of opposition. It called in question all kinds of knowledge immediate as well as mediate and all evidence perception as well as inference. It denied the authority of even Veda.

—Dhashin Ranjan Sastri, Short History of Indian Materialism, p. 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகாய்தத்தின் வளர்ச்சியைப் பாகுபடுத்தும் சாத்திரி குறிக்கின்ற 'வரம்பற்ற இன்பியல் கோட்பாடு' தான் அதன் இறுதிக் கட்டமாக இருக்கவேண்டும். ஏனெனில் புத்தர் காலத்தில் அனைத்துத் துறைகளின் களஞ்சியமாக விளங்கியது உலகாய்தமே ஆகும். இதன் படிநிலை வரலாற்றைத் தமிழ் இலக்கியங்களில் பரக்கக் காணலாம்.

தமிழ் இலக்கியங்களில் உலகாய்தத்தின் தோற்றம்

உலகாய்தத்தின் தொடக்கம்பற்றி அறிதற்கான சான்றுகள் ஏதும் தமிழ் இலக்கியங்களில் காணப்படவில்லை. மாறாக இதன் வளர்ச்சி நிலை குறித்த சான்றுகளோ மிகத் தொன்மையவாய் உள்ளன.

முதற்சங்கத்திற்குரிய நூல்களான மா புராணம், பூத புராணம், வியாழ மாலை என்பவை உலகாய்தம் பற்றிய அறிவியல் நூல்களே என்பதை அவற்றின் பெயர்களே உணர்த்தும்.

மேலும் முதற் சங்கத்திற்குரிய புலவராகக் குறிக்கப்படும் முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய புறநானூற்றின் இரண்டாவது பாடல் பூதங்களின் இயற்கையை அடிப்படையாகக் கொண்டது என்பதும், அது இயல்புக் கோட்பாட்டைக் குறிப்பது என்பதும் முன்னர்க் கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் அய்ந்திரம் நிறைந்தவராகப் புகழப்படுகிறார். அய்ந்திரம், பூதவியல் என்றும் உலகாய்தம் என்றும் அழைக்கப் படுவது. இது அக்காலத்தில் அனைத்துப் பிரிவினரும் கற்றாக வேண்டிய கல்வியாகவும் வற்புறுத்தப்பட்டது.

சங்க இலக்கியங்களின் அகத்திணை, புறத்திணைப் பற்றிய பாகுபாட்டை உணர்த்தும் 'பொருள் இலக்கணம்' பொருள்முதலியல் கோட்பாட்டை உணர்த்தும். பொருள் இலக்கணத்தில் அகத் திணைப் பெற்றுள்ள இடமும் உலகாய்தத்தின் இன்பியல் கூறினை உள்ளடக்கியதே ஆகும்.

எனவே, முதற் சங்கத்திலிருந்து மூன்றாம் சங்கம் வரையிலான காலத்தை—அதாவது தனிநிலைப் பாடல்கள் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தை உலகாய்தத்தின் வளர்ச்சிநிலைக் காலம் எனலாம்.

நெடும் பாடல்களின் தொடர்ச்சியில் ஆற்றுப்படை இலக்கியங்கள் செல்வாக்குப் பெறும் காலத்தை உலகாய்தத்தின் வீழ்ச்சிக்கான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடக்கநிலையாகக் கொள்ளலாம். விறலியின் உடலழகைப் புனைந்து அவளின் உறுப்புக்களை வியந்து புகழ்ந்துரைக்கும் போக்கு இன்பநாட்டத்தின் அடையாளத்தை உணர்த்தும்.

தமிழகத்தில் வேதங்களுக்கு ஏற்பட்ட செல்வாக்கும், அதனை ஒட்டி வேதங்கற்ற பார்ப்பனருக்குக் கிட்டிய சமூக மதிப்பும் உலகாய்தக் கோட்பாட்டிற்கு ஒரு புதிய நெருக்கடியைத் தோற்று வித்தன. அறிவியல் சார்ந்த இம்மெய்யியலின் தனித்தன்மை மறைந்து, இன்பநாட்டத்தையே வாழ்வின் அடிப்படை நோக்க மாகச் சொல்லும் புதிய போக்கு உருவாகத் தொடங்கிற்று.

இன்பியல் நாட்டத்தை வற்புறுத்தியும் வேத மரபுகளை எள்ளி நகையாடியும் அமைந்த பரிபாடல்கள் பல இப்புதிய போக்கின் அடையாளச் சின்னங்கள்.

நாமமார் ஊடலும் நட்பும் தணப்பும்
காமமும் கள்ளும் கலந்துடன் பாராட்டத்
தாமமர் காதலரொ டாடப் புணர்வித்தல்
பூமலி வையைக் கியல்பு[44]

என்று புகழப்படும் வையையில் பார்ப்பனர் நீராடாது ஒழிந்தனர். இதனை,

ஈப்பாய் அடுநறாக் கொண்டதிவ் யாறெனப்
பார்ப்பார் ஒழிந்தார் படிவு[45]

என்ற வரிகள் உணர்த்தும்.

பரிபாடலில் வேதநெறியை மறுக்கும் உலகாய்தத்தை, பிற் கால பவுத்த, சமண, சைவ இலக்கியங்கள் கடுமையாக எதிர்த் தன. இதனை மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் ஆகிய நூல்கள் உணர்த்தும். பக்தி இயக்கம் வளர்ந்தபோது இவ் எதிர்ப் புணர்வும் கூடியது. இவ் எதிர்ப்பின் உச்சத்தை,

உலகாயத னெனும் ஒண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம்[46]

என்ற மாணிக்கவாசகரின் கூற்றால் அறியலாம். எனவே, இக்கால கட்டத்தை உலகாய்த எதிர்ப்பு அல்லது மறுப்புக்குரிய காலமாகக் குறிக்கலாம்.

---

44. பரிபாடல் 20; 108-111.
45. மே. நூ. 24: 58-59
46. மாணிக்கவாசகர், திருவாசகம். போற்றித் திருவகவல் 56—57.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்மான இயக்கம்

இவ்வாறு எதிர்ப்புக்கும் மறுப்புக்கும் உட்பட்டு வந்த உலகாய்தம், இருபதாம் நூற்றாண்டில் மீண்டும் புதிய பொலிவோடு தன்மான இயக்கமாக உருவாகின்றது. இவ்வியக்கத்தைத் தோற்றுவித்து, நாத்திகத்தின் பரந்துபட்ட பொருளை உள்ளடக்கிய பகுத்தறிவுக் கோட்பாட்டை உருவாக்கியவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி ஆவார்.

> மதத்தாலும் மதக் குருக்களின் போதனைக்குட்பட்ட கருணையற்ற ராஜாக்களின் கொடுமையாலும் முன் தோன்றின சீர்திருத்தக்காரர்கள் அழிந்தாலும் அவர்கள் சொன்னவை அழியவில்லை; அவற்றைச் சிறிது காலத்திற்கு முன்னிருந்த அறிவாளிகளும் ஒத்துக்கொள்கிறார்கள். அவற்றையே இராமசாமிப் பெரியாரும் பிரசாரம் செய்கிறார். இவ்விருபதாம் நூற்றாண்டில், தென் தேசத்தில் உண்டான அறிவின் பயனை எல்லாம் அனுபவிக்கச் செய்த தீர புருஷன் இராமசாமிப் பெரியாரே என்பது பின் சரித்திரங்களில் எழுதப்படும்.[47]

என்று இவரின் அறிவார்ந்த தொண்டினைப் புகழ்வார் கைவல்ய சுவாமிகள்.

புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் உணர்ச்சியைத் தூண்டி அடிமை மயக்கத்திலிருந்து அதனை உயிர்ப்பிக்கச் செய்த ஒரு புரட்சிக் கோட்பாடாகவும் மனிதநலக் கோட்பாடாகவும் பெரியாரின் மெய்யியல் அமைந்தது.

பெரியார் காண விரும்பிய சமூகம் பகுத்தறிவின் அடிப்படையில் அமைந்த ஒரு நிகரமைச் சமூகம். அச்சமூகத்தின் தன்மைகளைப் பின்வருமாறு வகைப்படுத்துவர்.

1. மக்கள் சமூக வாழ்வில் ஒருவருக்கொருவர் எவ்வித உயர்வு தாழ்வும் இருக்கக்கூடாது.
2. மனித சமூகம் பொருளாதாரத் தன்மையில் ஒருவருக்கொருவர் பணக்காரன், ஏழை என்கிற வித்தியாசமில்லாமல் எல்லாப் பொருளும் பூமியில் எல்லோருக்கும் சரிசமமாய் இருக்கவேண்டும்.
3. மனித சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் சகல துறைகளிலும் சரிசமத்துவம் இருக்கவேண்டும்.

47. இரா. சக்குபாய், பெரியாரின் இலக்கியக் கொள்கை (ஆய்வேடு), மேற்கோள், ப. 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. மனித சமூகத்தில் சாதி, மதம், வருணம், தேசம், கடவுள் ஆகிய அபிமானங்களை அறவே ஒழித்து உலக மனித சமூக நேய ஒருமையே நிலவவேண்டும்.

5. உலகில் உழைப்பாளி என்றும் முதலாளி என்றும் பிரிவினையே இல்லாமல் சகல தேவைகளுக்கும், சகல மனிதர்களும் சரிசமமாய்ப் பாடுபட்டு அவற்றின் பயனை எல்லோரும் சரிசமமாக அனுபவிக்க வேண்டும்.

6. ஒவ்வொரு மனிதனும் எவற்றிற்கும், எவ்விதத்தும் அடிமையாகாமல் அவனவன் அறிவு, ஆராய்ச்சி, உணர்ச்சி, காட்சி ஆகியவைகளுக்கு இணங்கி நடக்கச் சர்வ சுதந்திரமும் இருக்கவேண்டும்.[48]

மேற்கூறிய கொள்கைகளைப் பரப்புவதையே தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு உழைத்தவர் பெரியார். அவரது கொள்கைகளுக்கு அவர் காலத்திலேயே இலக்கிய வடிவம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. இத்தகைய இலக்கிய வடிவத்தைக் கொடுத்தவர்களுள் தலையாயவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆவார். பெரியாரியலின் தாக்கம் புரட்சிக் கவிஞரின் கவிதைகளில் எத்தகைய விளைவினை உண்டாக்கிற்று என்பதை, ''அவன் தான் புரட்சிக் கவிஞன்'' என்ற தமது கவிதையில் கவிஞர் புலமைப் பித்தன் தெளிவுபடுத்துவார்.

மண்டும் மதங்களில் சாய்த்த தமிழினை
    மாற்றிக் கரையினில் ஏற்றியவன்—தமிழ்த்
தொண்டு புரிபவர் சாவதில்லை என்னும்
    தூய்மைப் பொருள்நிலை நாட்டியவன்
                                    —(அவன்தான்)
தந்தை பெரியார் தத்துவக் கப்பலைத்
    தமிழ்க்கவி கொண்டு நடத்தியவன்....,[49]

என்பது அப்பாடல்.

பாரதிதாசனாக இருந்தவரைப் புரட்சிக் கவிஞராக மாற்றியது பெரியாரின் தன்மான இயக்கமே என்பதை மா. செல்வராசன் இவ்வாறு விளக்குவார்.

48. பகுத்தறிவாளர் நாட்குறிப்பு, 1985, ப. 3.
49. புலமைப்பித்தன் கவிதைகள், சொன்னவர்: நா. இராமநாதன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதிதாசன் அரசியல் கண்ணோட்டத்தை விட்டுச் சமுதாய நாட்டம் கொள்வதற்குத் தன்மதிப்புக் கழகத்தின் தாக்குரவு காரணமாக இருந்திருக்கிறது. பாரதியாரோடு நெருங்கிப் பழகி பாடல் எழுதி வந்த காலத்தில் கிடைக்காத 'புரட்சிக் கவிஞர்' என்ற பட்டம் பகுத்தறிவு நெறிக் கருத்துக்களை அஞ்சா நெஞ்சுடன் பரப்பத் தொடங்கியபோது மக்களால் மகிழ்ந்து வழங்கப் பட்டது.[50]

கி. பி. 20ஆம் நூற்றாண்டின் சமூகப் போக்கிலும், இலக்கியப் போக்கிலும் பெரியாரியல் பெருத்த மாற்றத்தை விளைவித்தது என்றாலும், உலகாய்தத்தின் வளர்ச்சியில் பெரியாரின் பங்களிப்பே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

50. மா. செல்வராசன், பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர், பக். 20-21.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல் - இரண்டு

தமிழும் தந்திரமும்

ஹாரப்பா வாசகங்களைப்பற்றிய ஆய்வுகள் ஆழமடைய அடைய ஹாரப்பா மொழியிலும் திராவிட மொழிக் குடும்பத்திலும் நிலவும் சில கூறுகளுக்கிடையே அமைப்பு முறையில் தென்பட்ட சில நேரிணையான தன்மைகள், பல்வேறு மொழியியல் மட்டங்களிலும் மேலும் தெளிவாகப் புலனாயின. பண்டைய சிந்துமொழி வாசகங்கள் ஒரு திராவிட மொழியிலேயே எழுதப்பட்டிருந்தன என்ற ஊகத்துக்கு ஆதரவாகவே அவையாவும் இருந்தன...... தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தை எடுத்துக் கொள்வோம். அதில் ஆறு வகையான பதச் சேர்க்கைகள் வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. பண்டைய சிந்து மொழியின் வாசகங்களின் சில பதங்கள் அவற்றோடு அமைப்பு ரீதியில் ஓர் ஒத்த தன்மையைக் கொண்டுள்ளன.

பேராசிரியர் ஒய். கினோரோஜோவ்
எம். அபெல்தில்
'சிந்துவெளி நாகரிக ஆராய்ச்சியில் ஒரு புதிய கட்டம்' சோவியத் நாடு—ஏப். 85'
பக். 31—32

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்-சொல்லும் பொருளும்

இந்திய மெய்யியலின் வரலாற்றை நடுநிலையோடு ஆராய்வாருக்கு, அது இரண்டு மாறுபட்ட இனங்களுக்கு இடையேயான முரண்பாடுகள் அல்லது போராட்டங்களின் வரலாறாகவே அமைந்திருக்கின்றது என்ற உண்மை தெரிய வரும். பழமைக் கோட்பாடு (Orthodoxy) என்றும், கருத்து முதலியல் என்றும் அழைக்கப்படும் கடவுள் கோட்பாட்டிற்கு ஆரியர்களின் வேதங்களே அடிப்படையாக அமைந்துள்ளன. அதைப் போன்றே மறுப்புக் கோட்பாடு (Hetrodoxy) என்றும், பொருள் முதலியல் (Materialism) என்றும் அழைக்கப்படும் கடவுள் மறுப்பியலாகிய பூதவாதத்திற்குத் தமிழர்களின் மரபு வழிப் பண்பாடே அடித்தளமாக அமைந்துள்ளது. இதனை எச். சிம்மர்,

> இந்திய மெய்யியல்களின் வரலாறு, படையெடுப்பால் வெற்றி கண்ட வைதிக ஆரியருக்கும், ஆரியரல்லாதாரும் தொடக்க காலத் தமிழ(திராவிட)ர்களுமாகிய இவ்விரு இனத்திற்கும் இடையே நடந்த இடைவிடாத முரண்பாடுகளாலும், சிந்தனைப் போராட்டங்களாலுமே ஒரு வடிவிற்குக் கொண்டுவரப்பட்டது[1]

என்று விளக்குவார். பண்டித நேரு, 'ஆரிய திராவிடப் போராட்டமே இராமாயணம்' என்று கூறியுள்ளதும் இங்கே ஒப்பு நோக்கத் தக்கதாகும்.[1-அ]

---

1. ....The History of Indian Philosophy has been characterized largely by a series of crisis of intraction between the invasive Vadic Aryan and the non-Aryan earlier Dravidlan Style of thought and spiritual experience.

   ,.......Henrich Zimmer, philosophies of India, pp. 218—219.

   1-அ தந்தை பெரியார், திராவிடர் ஆரியர் உண்மை, மேற்கோள், ப. 9.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்காட்டிய கடவுள் கோட்பாடு, பொருள் முதலியல் அதாவது—கடவுள் மறுப்புக் கோட்பாடு ஆகிய இரண்டினுள்ளும் பொருள் முதலியல் மிகவும் தொன்மையானதாகவும், ஆரியர் வருகைக்கு முற்பட்டதாகவும் அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டு வருகின்றது. இந்தியப் பொருள் முதலியல் பற்றி ஆராய்ந்த தட்சின் ரஞ்சன் சாத்திரி கூறும் கருத்துக்களாவன:

1. இந்திய மெய்யியல் பிரிவுகள் அனைத்திலும் பொருள் முதலியலே மிகப் பழமையானதாகும். சில அறிஞர்கள் இதனை மிகமிகத் தொன்மையானதாகக் கருதுகின்றனர்.

2. இந்திய மெய்யியலாளர் பலரும், பொருள் முதலியலாரின் மெய்ப்பொருளை மறுக்கவே பெரிதும் முயன்றுள்ளனர். இம் முயற்சியே, பொருள் முதலியலின் தொன்மையை உணர்த்தும்.

3. மெய்யியலைக் குறிக்கப் பயன்படும் 'தர்சனா' என்னும் சொல்லிற்குரிய அடிப்படைப் பொருள் 'பார்த்தல்' (நோக்கு) என்பதே ஆகும். சாத்திரங்கள் அல்லது வரி வடிவங்கள் நோக்கின் அடிப்படையிலேயே அமைக்கப்பட் டுள்ளன.

4. இன்னும் சில அறிஞர்கள், 'இந்திய மெய்யியல்களில் பிற வற்றைப் பின்பற்றாது தற்சிந்தனையின் அடிப்படையில் பிறந்த மெய்யியலே பொருளியல் ஆகும். பிற மெய்யியல் கள் அனைத்தும் இதனை மறுக்கவோ அல்லது அழிக் கவோதான் உருவாக்கப்பட்டன.'[2] என்பர்.

மேலே காட்டிய சான்றுகள் பொருள் முதலியலாகிய பூத வாதத்தின் தொன்மையை—எல்லா மெய்யியல்களின் அடிப்படை யாக அமைந்த அதன் பெருமையை உணர்த்துவதுடன் அதற்கு ஏற்பட்ட எதிர்ப்பையும் வெளிப்படுத்துகின்றன.

இத்தகைய போராட்டங்கள் நடந்ததற்கான சான்றுகளைத் திராவிட மொழிக் குடும்பத்தின் தலைமையானதும், தொன்மை யானதுமாகிய தமிழ் மொழியில் அமைந்த சங்க இலக்கியங்களுள் பரக்கக் காணலாம்.

---

2. Dhakshin Ranjan Sastri, Materialist sceptics and agnostics Cultural Heritage of India, voi. III, p. 168-189.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதிர்ப்பும்—எதிர்ப்புக்கு மறுப்பும்

சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனை ஆவூர் மூலங்கிழார் பாடிய புறநானூற்றுப் பாடல், வேதப்புலமை மிக்க கௌணியன் விண்ணந்தாயன், வேதநெறிக்கு மாறான நெறிகளை எப்படிச் சாய்த்தான் என்பதுபற்றி விளக்கமாகக் குறிப்பிடுகின்றது.

நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுதுநூல்
இகல்கண்டோர் மிகல்சாய்மார்
மெய்யன்ன பொய்யுணர்ந்து
பொய்யோரது மெய்கொளீஇ
மூவேழ் துறையும் முட்டின்று போகிய
உரைசால் சிறப்பின் உரவோர் மருக[3]

என்ற இந்தப் பாடலின் கருத்து,

> பெரிதும் ஆராயப்பட்ட மிக்க நீண்ட சடையினையுடைய முதிய முதல்வனது (சிவபெருமானது) வாக்கைவிட்டு நீங்காது வீடு (மோட்சம்) ஒன்றையே மேவிய நான்கு கூற்றை உடைத்தாய், ஆறு அங்கத்தாலும் உணரப்பட்ட பழைய நூலாகிய வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புறச் சமயத்தோரது மிகுதியைச் (செல்வாக்கை) சாய்க்க வேண்டி அவர்களது மெய் போன்ற பொய்யை உளப்பட்டறிந்து, அப் பொய்மையை மெய்யென்று கருதாமல், உண்மைப் பொருளை அவர்களுக்கு ஏற்பச் சொல்லி, இருபத்தோரு வேள்வித்துறைகளையும் குறையின்றிச் செய்து முடித்த புகழமைந்த தலைமையையுடைய அறிவுடையோர் மரபில் உள்ளானே

என்பதாகும். இப்பாடலில் அமைந்த கருத்துக்களைப் பின்வருமாறு காணலாம்:

1. வேதம் சிவபெருமானது நாவை விட்டு நீங்காதது. 2. மோட்சத்தை நோக்கமாகக்கொண்ட வேதம், நான்கு கூறுகளையும் ஆறு அங்கங்களையும் உடையது, 3. இதற்கு மாறான நூல்களைக் கொண்டவர்கள் மெய் போலத் தோற்றமளிக்கும் பொய்மையைக் கற்பித்தவர்கள். 5. அப்பொய்மையை அகற்றி

---

3. புறம். 166:1-7.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்களுக்கு மெய்ப்பொருளைச் சொன்னவர்களின் மரபில் வந்தவன் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன்.

வேதம் மோட்சத்திற்குரிய (வீட்டிற்குரிய) கருவியானால், அங்குச் செல்வோர் வேதங்களை உணர்ந்தவர்களாகவோ அல்லது வேதங்கற்ற பார்ப்பனர்களின் அருளைப் பெற்றவர்களாகவோ தான் இருக்கமுடியும். வீட்டிற்குரிய வழிகாட்டிகளாகப் பார்ப்பனர்கள் மதிக்கப்பட்டனர் என்பதைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் வலியுறுத்தும்.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வரைப் பெறாஅ தீரும்.[4]

இப்பாடலில் 'பசுவும் பசுவினது இயல்புகளை உடைய பார்ப்பன மாக்களும்' எனவரும் பகுதி ஆய்விற்கு உரியதாகும். பசுவிற்கும் பார்ப்பனர்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையை பி. வி. கானே தெளிவுபடுத்துகின்றார்.

> ''பாவங்களில் (தீமைகளில்) இருந்து விடுதலை பெற்று வீட்டிற்குச் செல்ல விரும்பும் மனிதன் பார்ப்பனர்கட்குத் தானம் செய்யவேண்டும். அவ்வாறு செய்யப்படும் தானத்தை நீரட்டிக் கொடுக்க வேண்டும். இறக்கும் தறுவாயில் இருக்கும் மனிதன் தன் பாவங்களிலிருந்து விடுபடவும், யமனுலகின் முன்பாக ஓடுவதும், குருதிப் பெருக்கினையே நீராகக் கொண்டதும், கொடிய விலங்குகளும், கொலைக்கருவிகள் நிறைந்ததுமான வைத்திராணி என்னும் ஆற்றிலிருந்து நலமுடன் மீளவும், அவன் பார்ப்பனர்கட்குப் பசுவைத் தானமாகக் கொடுக்க வேண்டும். தானம் கொடுத்தவன் இறந்தபின், அவனால் கொடுக்கப்பட்ட பசு வைத்திராணி ஆற்றங்கரையில் நின்றுகொண்டிருக்கும். அதன் வாலைப் பிடித்தபடி அவன் அவ்வாற்றைத் தீங்கின்றிக் கடந்து மேலுலகம் சேர்வான். அவ்வாறு அவனுக்குப் பாதுகாப்பளிக்கும் பசுவிற்கு வைத்திராயணி என்று பெயர்''[5]

பசுவைத் தானம் செய்யும்போது, தானமாகக் கொடுக்கப்படும் பசுவின் வாலைத் தானம் அளிப்பவன் பிடித்தபடி இருக்க, வேத

4. புறம். 9:1-4.
5. P. V. Kane, History of Dharmasastras, vol. IV p. 545.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறிந்த பார்ப்பனன், 'காமத்துதி' என்ற மந்திரத்தை ஓதுவான். இக் காமத்துதி கொடையாளியின் இறுதி விருப்பத்தை அதாவது மேலுலகு அடைவதைக் குறிப்பதாகும்.

இச் செய்திகளால் மனிதனை, நரகத்தில் ஆழ்த்திவிடாமல் அவனைப் பாதுகாப்பாக வீட்டுலகிற்கு அழைத்துச் செல்வது வைத்திராயணி என்ற பசு என்பதும், இம்மை வாழ்வில் மனிதன் செய்த பாவங்களிலிருந்து அவனை மீட்டு, மறுமைக்குரியவனவாக மாற்ற வல்லவன் பார்ப்பனன் என்பதும் புலனாகின்றன.

இந்த வைதிக மரபை ஒட்டித்தான் 'ஆ' என்பதற்குத் தீய ஆற்றிலிருந்து கடக்க உதவும் பசு என்றும், 'ஆனியல் பார்ப்பன மாக்கள்' என்பதற்கு அத்தகைய பசுக்களின் இயல்புகளை அதாவது மனிதன் பாவங்களால் நரகத்திற்குப் போகாமல் தடுக்கும் இயல்புகளை உடைய பார்ப்பன மாக்கள் என்றும் நெட்டிமையார் விளக்குகின்றார்.

இக்கருத்தை அரண் செய்யும் வகையில்தான் 'பாத்திரம் அறிந்து பிச்சையிடு' என்ற பழமொழியும் தமிழில் வழக்காறு பெற்றது. பாத்திரம் என்ற சொல் கீழே விழாமல் தடுப்பது அதாவது நரகத்திற்குச் செல்லவிடாமல் தடுப்பது என்ற பொருளை உணர்த்தும்.

சமுதாயத்தில் வேத வைதிகச் சமயம் செல்வாக்குப் பெற்று வந்த இந்தச் சூழலில்தான், நாடாண்ட மன்னர்களும் வைதிகர்களின் தாள்பணிந்து நிற்றலைப் பெருமையாகக் கருதினர். அப்படி நிற்பதைப் புலவர்களும் புகழ்ந்து பாடினர்.

''வேதங்களைக் கற்றவர்கள் நின்னை வாழ்த்த
உயர்த்திய கைகளுக்கு முன்னால் நீ இறைஞ்சுக பெரும''[6]

என்று பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை வற்புறுத்துவார் காரிகிழார்.

சேரன் செங்குட்டுவன் பல்வேறு வெற்றிகளைக் குவித்தவன். ஆரிய அரசர்களைப் போரில் வென்று தமிழர் வீரத்தை நிலைநாட்டி, அவர்கள் தலையிலே கல்லைச் சுமக்க வைத்தவன். அத்தகைய மன்னனை இறுதியில் வேத வழிபட்ட அறக்கள வேள்விகளைச் செய்யுமாறு வேண்டியதுடன் தன் வேண்டுகோளை நிறைவேற்றவும் செய்தான் மாடல மறையோன். இதனைச் சிலப்பதிகாரம் விரிவாகக் கூறும்.

---

6. புறம். 6:19-21.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருபுறம் வைதிகச் செல்வாக்கு, மறுபுறம் வேதக் கல்வி, மறுமைக்குரிய வழிகாட்ட வல்லவர்கள் என்ற பெருமை இவற்றால் பார்ப்பனர்கள் மதிக்கப்பட்டு வந்த அதே காலத்தில் அவர்களின் கோட்பாடுகளுக்கு எவ்வளவு கடுமையான எதிர்ப்பும், வருண நெறிக்குட்பட்ட சமூக அமைப்பில் அவர்கள் தங்களை நிலைப் படுத்திக்கொண்ட சமூகத் தலைமைக்கு எவ்வளவு மறுப்பும் இருந்தன என்பதையும் சங்க இலக்கியங்கள் விளக்கத் தவறவில்லை.

பார்ப்பன மேலாண்மையையும், அவர்களது சமூகச் சுரண்டல் களையும் எதிர்க்கும் வகையில் உருவான பௌத்த சமண மெய் யியலைச் சாராத நிலையிலும் தமிழ்ப் புலவர்கள் பலர், அத்தகைய எதிர்ப்புணர்ச்சி கொண்டவர்களாக விளங்கினர்.

ஆய் அண்டிரன் என்ற வள்ளலைப் பாராட்டும் ஏணிச்சேரி முடமோசியார்,

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆய்அலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே[7]

என்று மறுமைப்பயன் கருதிச் செய்யும் செயல்களை 'அறவிலை' என்றும் அத்தகு செயல்களைச் செய்வோர் வணிகர்களேயன்றி வள்ளல்கள் அல்லர் என்றும் குறிப்பிடுகின்றார். அத்துடன் அமை யாது, ஆய் அண்டிரன் சான்றோர்கள் காட்டிய நெறியில் செல்லும் இயல்பினன் என்பதன் வாயிலாகச் சான்றோர் காட்டும் நெறி வேத நெறியன்று என்பதையும் குறிப்பால் உணர்த்துகின்றார்.

மேலும், இறந்து மேலுலகில் இருக்கும் தன் முன்னோரின் பசியைப் போக்க இவ்வுலகில் ஒருவன் உணவு படைக்கின்றான். திதி உணவு எனப்படும் அதனைப் பார்ப்பனர்கள் உண்பர். அதன் மூலம், அவ்வுணவு மேலுலகில் இருப்போரின் பசியைப் போக்கும் என்பது வைதிகம். இறக்கும் தருவாயில் இருக்கும் மனிதனின் பாவங் களைத் தமதாக்கி அவர்களைத் தூய்மையாக்குவதைப் போன்றே, இறந்த பின்னரும் அவர்களின் பசியைப் போக்க, இவர்கள் இங்கிருந்தே நல்ல உணவை உண்பர். பார்ப்பனர்களின் இப் போக்கினை,

7. புறம். 134.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்
இறந்தவ ராய்உமை இவ்விடை இருத்திப்
பாவனை மந்திரம் பலபட உரைத்தே
உமக்கவர் புத்திரர் ஊட்டிய போது
அடுபசியால் குலைந்து ஆங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது கண்டதார்? புகலீர்;
அருந்திய உண்டியால் யார்பசி கழிந்தது?[8]

என்று எள்ளும் கபிலரகவல்.

நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று[8]-அ

என்ற குறள், பார்ப்பனர்க்கென்று வழங்கும் தானத்தையும் அதன் நோக்கமாகிய மேலுலகப் பரிசையும் கண்டிக்கும் வகையில் அமைந்துள்ளது ஆராயத்தக்கது.

முரசு கட்டிலில் அதன் உண்மை தெரியாது உறங்கிய புலவரை வாளால் வெட்டிக்கொல்லாது புலவருக்கு, கவரி வீசிய மன்னனைப் பார்த்து,

அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉஞ் சாலுநற் றமிழ்முழு தறிதல்
அதனொடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசி யோயே வியலிடங் கமழ
இவணிசை யுடையோர்க் கல்ல தவணது
உயர்நிலை யுலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குரிசில்நீ ஈங்கிது செயலே[9]

என்று வியப்புடன் பாராட்டுவார். அத்துடன் அமையாது மன்னனது பெருந் தன்மைக்குரிய செயலை,

அதூஉஞ் சாலும் நற்றமிழ் முழுதறிதல்

என்ற அடியில், 'நல்ல தமிழை முழுதாக அறிந்தமைக்கு அதுவும் அமையும்' என்றே நிறைவு காணுகின்றார்.

---

8. கபிலரகவல், 55-61.

8-அ குறள். 222.

9. புறம். 50:8-17.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள ''நற்றமிழ் முழுதறிதல்'' என்ற தொடர் வைதிக நெறிக்கு மாறானதும் தமிழர்க்கே உரியது மான ஒரு பண்பாட்டு மரபை—மெய்யியல் கோட்பாட்டைப் பற்றியது என்பது தெளிவு.

பரிபாடலில் முருகனைப் பற்றிய குன்றம் பூதனாரின் பாடல் இது தொடர்பான சிக்கல்களைத் தெளிவுபடுத்துகின்றது.

நான்கு மறைகளைக் கற்றுப் பெருமையுடன் விளங்கும் வைதிகப் புலவர்களைப் பார்த்துச் சொல்லும் வகையில் அமைந்த அப்பாடல் வருமாறு:

நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின்! சிறந்தது
காதற் காமம், காமத்துச் சிறந்தது
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி!
புலத்தலிற் சிறந்தது கற்பே! அதுதான்
இரத்தலும் ஈதலும் இவையுள் ளீடாப்
பரத்தையுள் ளதுவே! பண்புறு கழறல்
தோள்புதி துண்ட பரத்தையிற் சிவப்புற
நாளணிந் துவக்குஞ் சுணங்கறை யதுவே!
கேளணங் குறமனைக் கிளந்துள சுணங்கறை!
சுணங்கறைப் பயனும் ஊடலுள் ளதுவே!
அதனால்
அகறல் அறியா அணியிழை நல்லார்
இகறலைக் கொண்டு துணிக்கும் தவறிலரித்
தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் வந்திலார்
கொள்ளாரிக் குன்று பயன்.[10]

இப்பகுதி வேதப் புலவர்களை முன்னிறுத்திக் கூறும் கூற்றாக அமைந்து, இல்லற இன்பத்தின் மாட்சியை விளக்கி, இத்தகைய சிறப்புக்களை எல்லாம் தள்ளாப் பொருள் இயல்பின் தண்டமிழை ஆராய்ந்து உணர்ந்தவர்களால் மட்டும் அறிய முடியுமே தவிர வேதப் புலமை இதனை அறிய உதவாது என்பதைத் தெளிவாக்கு கின்றது.

இப்பகுதியில் 'தமிழ்' என்ற சொல் இல்லறச் சிறப்பிற்குக் காரணமான 'கற்பியல்' என்ற பொருளில் வந்துள்ளதும் அது வேத வழக்கிற்கு மாறானது என்பதும் அறியத்தகும்.

10. பரிபாடல் 9:12-26.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறுந்தொகையில் வரும் இன்னொரு பாடல் பிரமச்சரியங் காக்கும் ஒரு பார்ப்பன இளைஞனைப் பார்த்துக் கேள்வி கேட்கும் வகையில் அமைந்துள்ளது. பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணன் பாடிய அப்பாடல்,

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
செம்பூ முருக்கின் நன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்க மண்டலத்துப்
படிவ உண்டிப் பார்ப்பன மகனே
எழுதாக் கற்பின் நின்சொல் உள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்தும் உண்டோ மயலோ விதுவே[11]

என்பதாகும்.

இப் பாடலில் வேதங்கற்று, அதன்வழி ஒழுகும் ஒரு வைதிகனை நேருக்குநேர் சந்தித்து வாதிடும் தன்மையைக் காண முடிகின்றது.

வேதநெறியில் 'பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்புகள் இல்லை' என்பதும், 'அப்படிப்பட்ட பண்புகள் தமிழ் மரபிலேதான் உண்டு' என்பதும் புலவர் உணர்த்தும் செய்திகளாகும்.

இத்தகைய மோதல்கள் ஒருபுறம் இருக்க, ஒரே அரசனை வாழ்த்தும்போது வைதிகச்சார்புடைய புலவர்கள் தங்கள் கோட்பாடுகளுக்கேற்பவும், பூதவாதத்தைச் சார்ந்தோர் தங்கள் கோட்பாடுகளுக்கேற்பவும் வாழ்த்தியுள்ளனர்.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடிய பாடலில்,

தொன்று மூத்த உயிரினும் உயிரொடு
நின்று மூத்த யாக்கை யன்னநின்
ஆடுகுடி மூத்த விழுத்திணைச் சிறந்த
வாளின் வாழ்நர் தாள்வலம் வாழ்த்த
இரவன் மாக்கள் ஈகை நுவல
ஒண்டொடி மகளிர் பொலன்கலத் தேந்திய
தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி பெரும ஆங்கது
வல்லுநர் வாழ்ந்தோர் என்ப! தொல்லிசை
மலர்தலை உலகத்துத் தோன்றிப்
பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே[12]

என்பார்.

11. குறுந். 156.
12. புறம். 24:26-36.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பாடலில் வற்புறுத்தப்படும் செய்திகளாவன:

உயிரோடு தொடர்புடைய உடம்பைப்போல, நினது
பெருமைக்குரிய குடியோடு நெடுங்காலமாய்த்
தொடர்பு கொண்டவர்களும் வாட்போரைச் செய்தலே
தம் வாழ்வெனக் கொண்டு வாழும் வீரர்கள் உனது
வலிமையை வாழ்த்தவும், பரிசிலர்கள் நினது கொடைச்
சிறப்புக்களை வாழ்த்தவும்,
நீதான்,
ஒளிவிடும் வளையல்களை அணிந்த அழகிய பெண்கள்
பொற்கலத்தில் ஏந்திய குளிர்ந்த மணம் மிக்க மதுவை
ஊட்ட, அதனை உண்டு மகிழ்ச்சி மிக்கு இனிதாக
நடப்பாயாக! பெரும,
இத்தகைய வாழ்க்கையை உடையவர்களையே வாழ்வின்
பயனைப் பெற்றவர்கள் என்று அறிஞர்கள் சொல்லுவர்.
இத்தகைய வாழ்வைப் பெறாமல் வாழ்ந்தோர்
வாழ்ந்தார் எனப்படார்.

மாங்குடி மருதனார் வற்புறுத்தும் இக்கருத்திற்கு நேர்முரணான வேத வேள்விகளையும் அதே மன்னன் சிறப்புறச் செய்துள்ளான். இதனை,

> ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை
> நான்மறை முதல்வர் சுற்ற மாக
> மன்னர் ஏவல்செய்ய மன்னிய
> வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே[13]

என்ற பாடல் உணர்த்தும்.

வையாபுரிப் பிள்ளை தொகுத்த சங்க இலக்கியத்தொகையுள் இப்பாடல்கள் இரண்டும் மாங்குடி மருதனார் இயற்றியதாகக் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் உ. வே. சாமிநாதய்யர் பதிப்பான புறநானூற்றில் மாங்குடி கிழார் எனக் குறித்து, பாடபேதமாக மாங்குடி மருதனார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது.

மேற்காட்டிய இரண்டு பாடல்களையும் ஒப்பிட்டு நோக்க இரண்டிற்கும் உள்ள முரண்பாடுகளை உணர முடிகின்றது. எனவே இவ்விரண்டு பாடல்களையும் இயற்றிய புலவர் ஒருவர் தானா? அன்றி, இருவரா என்பதும் ஆய்விற்குரியதாகும்.

இரண்டு புலவர்களால் பாடப்பட்டதாயின் இது வெறும் கருத்து மோதல் மட்டுமன்று; இரண்டு இனங்களுக்கு இடையேயான வாழ்வியல் மோதலுமாகும் என்பது வெளிப்படை.

---

13. புறம். 26:12-15.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and with the Compliments of the Deptt. of Education Govt. of India. New Delhi

தமிழ் மரபின் வீழ்ச்சி

தமிழ் மரபுக்குரிய அன்பின் அய்ந்திணை, வைதிக மரபிற்குரிய எட்டுவகை மணத்துள் கந்தருவமணத்தை ஒத்தது என்பார் தொல்காப்பியர். ஆனால், தர்ம சாத்திரங்களுள் 'கந்தருவ மணம்' சூத்திரர்கட்குரிய ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. [13].அ-அது மட்டுமில்லாமல், கந்தருவ மணம் உட்பட்ட பின்னைய நான்கு மணங்களுக்கும் சமூக ஒப்புதலும் மறுக்கப்பட்டது.

> எட்டு வகை மணத்துள் முதல் நான்காகிய பிரமம், தெய்வம், ஆரிடம், பிரசாபத்தியம் ஆகியவை ஆரியர் களுக்குரியனவாக, அதாவது தந்தை வழிச் சமூகத்திற்குரி யனவாகக் கொள்ளப்பட்டன. அடுத்த நான்காகிய கந்தருவம், இராக்கதம், ஆசுரம், பைசாசம் ஆகியவை ஆரியரல்லாதாருக்கு உரியனவாக அதாவது தாய்வழிச் சமூகத்திற்குரியனவாக கருதப்பட்டன.[14]

தமிழ் இனம் தாய்வழி மரபைப் பின்பற்றியது என்பதனை, இவர்களின் தாய்த் தெய்வ வழிபாடாகிய கொற்றவை வழிபாடு உணர்த்தும். முருகனை மகன் என்ற பொருளில் 'சேயோன்' (சேய்—மகன்) என வழங்குவதும் இதன் அடிப்படையில் அமைந்ததேயாகும். இன்றளவும் தமிழர் சமுதாயப் பண்பாட்டில் தாய்க்குரிய ஈமச்சடங்குகளைச் செய்யும் உரிமை அவளின் மூத்த மகனுக்

13.அ- க நெடுஞ்செழியன், இந்தியப் பண்பாட்டில் தமிழும் தமிழகமும், பக். 116-117.

14. The first four forms i. e. Brahma, Daiva, Arsa and Prajapatya seem to be adopted from the customs of the paternal type of family consisting of Aryans and non-Aryans who were divided into four Varnas. The last four viz., Rakshasa, Ghandharva, Asura anp Paisasa were adopted from the customs of the Materinal type of family.

,......Hindu Law Books recognize eight different kind of marriages. The first four were approved forms, while the rest were unapproved according to the ancient Hindu Law.

......T. S. Devadoss, Hindu Family and Marriage, ps. 90 & 98.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும், தந்தைக்குரிய ஈமச்சடங்குகளைச் செய்யும் உரிமை அவன் கடைசி மகனுக்கும் உரியதாக வழக்கில் உள்ளதும் இதனை வற்புறுத்தும்.

இவ்வாறு தமிழர்களின் பொருள் வாழ்வில் சிறப்பாகப் பேசப் படும் 'அன்பின் அய்ந்திணை' தரும சாத்திரங்களின் அடிப்படையில் சூத்திரர்க்குரியதாக சமூக ஒப்புதல் மறுக்கப்பட்ட அந்த நாளில் தான் தமிழகம் வந்த ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவிக்கக் கபிலர் குறிஞ்சிப்பாட்டைப் பாடினார். அதுவும் அன்பின் அய்ந்திணையில் களவின் பெருமையை விளக்கி, 'தோழி அறத்தொடு நிற்றல்' என்ற துறையில்,

ஆற்றல்சால் கேள்வி யறம்பொருள் இன்பத்தைப்
போற்றிப் புனைந்த பொருளிற்றே—தேற்ற
மறையோர் மணமெட்டின் அய்ந்தா மணத்திற்
குறையாக் குறிஞ்சிக் குணம்[15]

எனப் போற்றப்படும் குறிஞ்சிப் பாட்டைப் பாடியது தற்செய லான நிகழ்ச்சியாக இருக்க முடியாது.

பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே[16]

எனப் பார்ப்பனர்களின் தலைமையை வற்புறுத்தும் கபிலர், தமிழ் அறிவுறுத்த அகப்பொருளைத் தேர்ந்தெடுத்தது, தமிழ் மரபின் செல்வாக்கை—பண்பாட்டுச் செழிப்பை—தமிழரின் வாழ்வியல் நெறிகளை விளக்குதற்காகவே என்பதை உணரலாம்.

மேலும், பார்ப்பனர்களின் தோற்றம் தமிழ் மக்களின் நகைப் பிற்கு இலக்காகியது என்பதை,

அன்னாய் வாழிவேண் டன்னை நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமுங்
குடுமித் தலைய மன்ற
நெடுமலை நாடன் ஊர்ந்த மாவே![17]

என்ற அய்ங்குறுநூற்றுப் பாடலால் அறியலாம்.

'தலைவன் ஊர்ந்து வரும் குதிரைக்கும் குடுமி இருக்கின்றது. எதைப்போல? நம்மூர்ப் பார்ப்பனச் சிறுவர்களின் குடுமியைப்

---

15. குறிஞ்சிப்பாட்டு இறுதி வெண்பா,
16. பதிற்றுப்பத்து 63:1
17. அய்ங். 202.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போல' என்பதில் உள்ள எள்ளல் குறிக்கத்தக்கது. நகைச்சுவை பிறக்கும் இடங்களுள் ஆசிரியர் கூறும் தமிழ் அடங்கும் என்பார் பேராசிரியர்.

மேற்காட்டிய சான்றுகள் வைதிக மரபிற்குத் தமிழகத்தில் ஏற்பட்ட எதிர்ப்பையும் மறுப்பையும் விளக்கின. அத்துடன் தமிழ் மரபை உணர்த்தும் இடங்களில் 'தமிழ்' என்ற சொல்லைப் பயன்படுத்துவதற்கான காரணங்களையும் இங்கு ஆராயலாம்.

தமிழ் உணர்த்தும் பொருள்

மோசிகீரனார் முரசு கட்டிலில் உறங்கியதைக் கண்டும் அரசன் அவரை வாளால் வெட்டிக் கொல்ல முற்படவில்லை. மாறாக, தானே கவரி கொண்டு வீசுகின்றான். இச்செயல், அவனது கண்ணோட்டத்தை—உயர்ந்த மனித அன்பை உணர்த்துவதாகப் புலவர் கருதுகின்றார். அத்தகைய செயலை,

> அதூவுஞ் சாலும் நற்றமிழ் முழுதறிதல்

எனச் சுட்டுகின்றார்.

அரசர்க்கு வேண்டிய இன்றியமையாப் பண்புகளுள் மனித அன்பு எனப்படும் கண்ணோட்டம் முதன்மையானதாகும். இதனையே வள்ளுவரும்,

> கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
> உண்மையான் உண்டிவ் வுலகு[18]

எனச் சிறப்பிக்கின்றார். செங்கோல், அறம், தண்ணளி போன்ற சொற்களால் கண்ணோட்டத்தைத் தமிழ் இலக்கியங்கள் குறிக்கின்றன.

'மனித நேயமும் இந்தியச் சிந்தனையும்' என்ற ஆங்கில நூலில் அ. சக்கரவர்த்தி நயினார் குறிக்கும் செய்தி இங்கே ஒப்பு நோக்கத்தக்கது. அரிச்சந்திரன் வசிட்டரின் அறிவுரைப்படி மனிதப்பலிக்கு ஏற்பாடு செய்கின்றான். அப் பலிக்காக ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த 'சுனச்சேபன்' என்ற சிறுவனை பலிபீடத்தில் பிணித்து வைத்துள்ளனர். இந்நிலையில் விசுவாமித்திரர் அங்கே வந்து சுனச்சேபனை மீட்கின்றார். இந்நிகழ்ச்சியைச் சக்கரவர்த்தி நயினார் பின்வருமாறு விளக்குவார்.

---

18. குறள். 571.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுனச்சேபனின் கதை, தொன்மைக்கால இந்தியாவில் மனித நலத்தின் தொடக்கநிலை பற்றிய எல்லைக் கல்லாக நின்று நமக்குச் சுவையூட்டுகின்றது. புகழ் மிக்க புரோகிதன் தன் அரசனை மகிழ்விப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த உயிர்ப்பலிச் சடங்கு இங்கே குறிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிகழ்ச்சியின் வாயிலாக, விசுவாமித்திரன் மூலம் நடந்த அரசர் (சத்திரியர்) பார்ப்பனர் மோதலை-வைதிக நெறிக்கு முற்றிலும் மாறுபட்டதும், உயிர்ப்பலிகளையும் சடங்குகளையும் எதிர்ப்பதுமாகிய வேறொரு சிந்தனைப் போக்கின் சார்பைக் காணலாம்.

இதைவிட, இரண்டு மாறுபட்ட சிந்தனைகளின் தோற்றத்தை—அதாவது யாகத்தை, உயிர்ப்பலியிடுவதை ஆதரிக்கும் ஒரு பிரிவின் தோற்றத்தையும், அவற்றை மறுத்து யோகத்தையும் தவத்தையும் ஆதரிக்கும் வேறொரு பிரிவின் தோற்றத்தையும் இங்கே காணலாம்.[19]

இக்கருத்தின்படி கண்ணோட்டம் என்னும் மனித நலச் சிந்தனை, வேதங்கள் வற்புறுத்தும் வைதிகக் கோட்பாடுகளுக்கு மாறானது என்பது விளங்கும். எனவேதான், முரசு கட்டில் என்று அறியாது அதில் படுத்து உறங்கிய நிலையிலும் வாளால் தன்னைக் கூறுபடுத்தாமல் விட்டதுடன் அமையாது, விசிறி கொண்டு வீசிய அரசனின் பெருந்தன்மையைப் புலவர், 'தமிழ் முழுதறிந்த செயலாகக் கருதி'ப் பாராட்டுகின்றார்.

இத்தகைய கண்ணோட்டம் இல்லாது தன் காவல் மரத்தின் மாங்கனியை உண்டாள் என்பதற்காக நன்னன் ஒரு பெண்ணைக் கொலை செய்து விடுகின்றான். அதனால் புலவர்கள் அவனைப் 'பெண் கொலை புரிந்த நன்னன்'[20] என்று தூற்றுகின்றனர் என்பதும் இங்கே கருதத்தக்கது. எனவே மோசிகீரனார் 'தமிழ்' என்ற சொல்லைக் கண்ணோட்டம் என்ற பொருளில் வழங்கியுள்ளார் என்பது தெளிவாகின்றது.

தமிழ்—காதல்

மதுரையையும், மதுரையை வளப்படுத்தும் வையை ஆற்றையும் குறிக்கும்போது புலவர்கள் அவற்றைத் தமிழோடு தொடர்பு படுத்தியுள்ளனர். இதற்கான காரணங்கள் ஆய்விற்கு உரியன.

19. A. Chakravarti Nayinar, Humanism and Indian Thought, p. 9.

20. குறுந். 292.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறுபாணாற்றுப்படையில் மதுரை நகரத் தெருக்களைப் பற்றிப் பாடும்போது,

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும்......[21]

எனப் பாராட்டுகின்றார் புலவர். பரிபாடலில் வையை,

கரையழி வாலருவிக் கால்பா ராட்ட
இரவிற் புணர்ந்தோ ரிடைமுலை யல்கல்
புரைவது பூந்தாரான் குன்றெனக் கூடார்க்கு
உரையோ டிழிந்துரா யூரிடை யோடிச்
சலப்படை யானீரவிற் றாக்கிய தெல்லாம்
புலப்படப் புன்னம் புலரியின் நிலப்படத்
தான்மலர்ந் தன்றே
தமிழ்வையைத் தண்ணம்புனல்[22]

எனப் போற்றப்படுகிறது.

முதல் எடுத்துக்காட்டில் மதுரை மாநகரில் தமிழ் நிலை பெற்றுள்ளது என்பதுடன், மதுரை மாநகரத் தெருக்கள் கள்ளுண்ட மகிழ்ச்சியால் நிறைந்துள்ளன என்பதும் சுட்டப்படுகின்றன. இதனை வலியுறுத்தும் வகையில் நெடுநல்வாடையும், 'ஆறு போன்ற அகன்ற மதுரை தெருக்களில் முழுவலிமாக்கள், வண்டுகள் மொய்க்கும் இனிய மதுவை உண்டு மகிழ் சிறந்து, மழையைக் கூட பொருட்படுத்தாது செல்வர்'[23] என்று குறிப்பிடுகின்றது.

இச்சான்றுகளின்படி இரண்டு உண்மைகள் புலனாகின்றன.

1. மதுரையில் தமிழ் நிலை பெற்றமை
2. மதுரை நகர வீதிகளில் கள்ளில் விளைந்த மகிழ்ச்சி எங்கும் நிறைந்தமை.

இரண்டாவது எடுத்துக்காட்டு பரிபாடலில் வருவது. திருப்பரங்குன்றம்பற்றி முன்னர் விளக்கிய 'தமிழ் ஆய்வு' போன்றதே இதுவும். வையையைப் பற்றிய இப்பாடல்,

தென்றல் தவழும் இனிய இரவில் தலைவியைக் கூடித் தலைவன் அவளது முலையிடைத் துயில் கொள்ளுதற்கு ஏற்ற இடம் பூந்தாரணிந்த முருகனது 'திருப்பரங்குன்றமே என்ற செய்தியை மதுரையில் உள்ளார்க்கு அறிவிப்பது போலத் தமிழ் வையைப் புனல் பரவிச் சென்றது

21. சிறுபாண். 66—67.
22. பரிபாடல் 6 : 53—59.
23. நெடுநல்வாடை 30—35,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதை உணர்த்துகின்றது. அத்துடன் அமையாது புலவர் குறிப்பிடும் பிறிதொரு செய்தி வருமாறு: 'புதுப்புனலில் தமிழ் இளைஞர்கள் தம் துணையுடன் குடைந்து ஆடி மகிழ்கின்றனர். அதனால் வையை சந்தனக் குழம்பு, குங்குமச் சேறு, சூடிய மலர் இவை மணக்கச் செல்கிறது. இதனைக் கண்ணுற்ற வேதம் ஓதும் பார்ப்பனர்களோ வையையைக் கண்டு மருண்டு, அது தூய்மை கெட்டது என்று கருதிக் கலங்கி ஒதுங்குகின்றனர்.'

பரிபாடல் உணர்த்தும் செய்திகளைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

1. தலைவியருடன் கூடி மகிழும் இன்பத்தைத் துய்க்கச் சிறந்த இடம் திருப்பரங்குன்றம்.

2. அங்குச் சென்று அக்காதல் இன்பத்தைத் துய்க்காதவர்க்கு அவ்வுண்மையைச் சொல்லுவது போல் மதுரையில் பரவி ஓடுகிறது தமிழ் வையை.

3. காதலர்களின் புதுப்புனல் ஆட்டத்தினால் வையையின் நீர் கலங்குகிறது. அவர்கள் பூசியும் புனைந்தும் இருந்த மணப் பொருட்களால் வையையின் நீர் நிறம் மாறுபட்டுத் தோன்று கிறது. இத்தமிழ் வையையின் உண்மையை அறியாத வேதம் ஓதும் பார்ப்பனர்கள் வையையைக் கண்டு தூய்மை கெட்டதாகக் கருதி அஞ்சி மருண்டு ஒதுங்கினர்.

இவ்வாறு இருசான்றுகளையும் ஒப்பிட்டுக் காணும்போது 'தமிழ் வையை' என்பதும், 'தமிழ் நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ் நனை மறுகின் மதுரை' என்பதும் ஒரே பொருளில்—அதாவது 'காதல் இன்பம்' என்ற பொருளில் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

இறையனார் களவியல் உரையில், 'இது எந்நுதலிற்றோ வெனின் தமிழ் நுதலிற்று'[24] என்ற பகுதியில் தமிழ் என்ற சொல் பொருளிலக்கணம் அதுவும் அகப்பொருள் இலக்கணம் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. இதைப் போன்றே புறநானூற்றில்,

தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து[25]

எனப் புறத்திணைக்குரிய பொருளில் 'தமிழ்' என்ற சொல் பயன் படுத்தப்பட்டுள்ளது. வீரர்கள் மோதும் போர்க்களத்தை இச்சொல்

24. இறையனார் களவியல், ப. 4

25. புறம் 19;2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுட்டுவதைப் போன்றே சிந்தாமணி, அழகிய சாயலை உடைய இளம் பெண்களின் கூட்டம் என்ற பொருளில்,

தமிழ் தழீஇய சாயலவர்[26]

எனக் குறிக்கும்.

மேற்கண்ட சான்றுகளை வகைப்படுத்திக் காணும்போது 'தமிழ்' என்ற சொல் பின்வரும் பொருட்களை வற்புறுத்தக் காணலாம். அவைகளாவன:

1. வேத வைதிக மறுப்பு
2. மறுமைப்பயன் கருதாமை
3. கண்ணோட்டம்
4. கற்பியல் இன்பம்—காதல் வாழ்வு
5. வீரம்—போர்க்களம்
6. பொருள் இலக்கணம்
7. அழகு, சாயல், இனிமை

என்பவைகளாகும்.

இத்தகைய கோட்பாடுகள் அனைத்தையும் பொருள்முதல் இயலைச் சார்ந்த உலகாய்தர்கள் அல்லது சார்வாகர்களின் வாழ்க்கை நெறியாக வரையறை செய்வர் மெய்யியல் ஆய்வாளர்கள். அனிமாசென் குப்தா, சார்வாகர்களைப் பற்றிக் கூறுவதாவது :

> சார்வாகர்கள் தொன்மைக்கால இந்தியாவின் பொருள் முதல் இயல் சிந்தனையாளர்களுள் ஒரு பிரிவினராவர். இவர்கள் உபநிடதங்களின் காலத்தில் தோன்றிய புதிய மறுமலர்ச்சி இயக்கத்தில் முழுமையான பங்காற்றியவர்கள். இப்புதிய மறுமலர்ச்சி இயக்கம், பார்ப்பனர்களின் பழமைக் கோட்பாட்டையும், பரம்பரை யான அவர்களின் புரோகிதத் தன்மைகளையும் வெளிப் படையாக எதிர்த்து இயங்கியது. எனவே இவ்வியக்கத்தின் தலைவர்கள் வேதங்கள் வற்புறுத்தும் கருமக் கோட் பாட்டை அடிப்படையாகக் கொண்ட பார்ப்பனிய மரபிற்கு மாறானவர்கள் என்பது இயற்கையே.

26. சிந்தாமணி 20-26

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> அறிவுச்சுடரை ஏற்றியவர்களான இப்புதிய இயக்கத்தைச் சார்ந்தவர்கள், வேதத்தை முற்றாக மறுத்தனர். உண்மையில் பார்ப்பனியக் கோட்பாடுகள் அனைத்தும் வெறும் ஏய்ப்பே தவிர வேறு அதில் ஒன்றுமே இல்லை என்பதைத் துணிவுடன் பறைசாற்றினர்.[27]

இத்துடன் அமையாது சார்வாகர்களின் கோட்பாடு பற்றித் தொடர்ந்து குறிப்பிடும் அவர்,

> சார்வாகர்களின் இன்றியமையா நோக்கம், மனிதப் பண்புகளுக்கு மெருகூட்டி, சிந்தனை உரிமைகளைத் தடைப்படுத்தாமலும் மதச்சார்பற்றதுமான ஒரு சமூக அரசியல் சூழலை உருவாக்குவதே ஆகும். அவர்களுடைய கோட்பாடுகள் எல்லாம், மனித இனத்தின் மீதும் இவ்வுலக வாழ்வின் மீதும் நம்பிக்கையும் அன்பும் அருளும் கொண்ட மனிதநலக் கோட்பாடே ஆகும்'[28]

என்கிறார்.

இந்தப் பின்புலத்தில் 'தமிழ்' என்ற சொல் உணர்த்திய பொருட்களை வகைப்படுத்திக் கண்டால், அவை உலகாய்தம் அல்லது சார்வாகம் குறித்த விளக்கமாகவே அமைகின்றன.

மனிதநலச் சிந்தனையின் முழு வளர்ச்சியையும் தமிழ் அகப்புற இலக்கியங்கள் பறைசாற்றி நிற்கின்றன. இந்த உலகம் அழிந்து படாமல் இருப்பதற்குக் காரணமே இத்தகு மனிதநலச் சிந்தனையாளர்கள் இருப்பதால்தான் என்பதை வற்புறுத்துகிறது புறநானூற்றுப் பாடல். அது வருமாறு :

---

27. Carvakas are generally grouped as a class of materialist thinkers of ancient India who participated in a new movement of thought, which started in the Upanisadic period. This new movement was actually directed against the heriditary priest-hood and Brahmanic orthodoxy. Naturally, therefore, the leaders of this movement were not members of the Brahmanical traditions based mainly on the Karma-kanda of Vedas.

    The torch-bearers of the new movement, did not accept the authority of Vedas, infact they were bold to declare that entire Brahmanical system was nothing but a fraud.

    ....Animasen Gupta, Essays on Sankya and other Systems of Indian Philosophy, p. 281.

28. Ibid, p. 282.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்டா லம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே, முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே![29]

புறநானூற்றில் அமைந்துள்ள பொதுவியல் துறைக்குரிய பாடல்கள் பெரும்பான்மை இத்தகைய உயரிய கருத்துக்களைத் தாங்கி நிற்கின்றன. 400 பாடல்கள் உள்ள இத்தொகுப்பில் 66 பாடல்கள் 'பொதுவியல்' துறையில் அமைந்துள்ளன. இந்திய மொழிகளில் திராவிட மொழிகளின் தாக்கம் பற்றிய ஆய்வுகளைப்போல், இந்திய எண்ண வளர்ச்சியில் திராவிடக் கூறுகளின் தாக்கம் பற்றிய விரிவானதும் நடுவுநிலையானதுமான ஓர் ஆய்வு முழு அளவில் தொடங்கப்பட வேண்டும். அந்தகைய ஆய்வு முறையினால் மட்டுமே திராவிடப் பண்பாட்டின் மேன்மையை—தமிழின் பெருமையை முற்றாக வெளிப்படுத்த முடியும். புறத்திணையைச் சார்ந்த பொதுவியல் துறையும், காஞ்சித்திணையும்கூட இத்தகைய ஆய்வில் இடம்பெறல் வேண்டும். இந்திய மெய்யியல் வரலாற்றின் போக்கை மறு ஆய்வு செய்யக்கூடிய நிலை அப்போது உருவாகும். அத்துடன் உலகாய்தம் தோன்றி வளர்ந்த ஒரு சமூகப் பின்புலத்தைத் தெரிந்துகொள்ளக் கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

வேதங்களின் மேலாண்மையை, மேலுலகக் கோட்பாட்டை வன்மையாக மறுத்தவர்கள் பூதவாதிகளாக—உலகாயதர்களாக—சார்வாகர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். எனவே இதே கருத்துக்களை வலியுறுத்தும் 'தமிழ்' மரபாளர்களும் இத்தகைய பிரிவைச் சார்ந்தவர்கள் என்பது முடிவாகிறது.

ஆன்மா மறுப்பு

உயிர் அல்லது ஆன்மா அழிவற்றது என்பது உபநிடதங்களின் கோட்பாடாகும். பிரகதாரண்ய உபநிடதத்தில் இதைப் பற்றிய செய்தி விரிவாகப் பேசப்படுகிறது (3.4.1—5). தேவர்களின் தலைவனான இந்திரனும், அசுரர்களின் தலைவனான வீரோசனனும் பிரசாபதியிடம் ஆன்மா பற்றி வினவுகின்றனர்.

29. புறம். 182

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர்களின் ஆர்வத்தை அறியும் வகையில் பிரசாபதி 'சரீரமே ஆன்மா' என்கிறார். வீரோசனன் அத்துடன் நிறைவு பெற்றுவிடுகிறான். ஆனால் இந்திரனோ இவ்விடையில் நிறைவு பெறாமல் மேலும் மேலும் வினவுகின்றான், இறுதியில் பிரசாபதி,

> வண்டியில் கட்டிய குதிரையைப் போல் ஆன்மா உடலில் கட்டுப்பட்டு நிற்கிறது. காண்பது கண் அல்ல; கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது ஆன்மா. பேசுவது நாக்கல்ல; நாக்கைக் கருவியாகக் கொண்டு பேசுவது ஆன்மா. காதைக் கொண்டு இதைக் கேட்பேன் என்பது ஆன்மா. மனதும் ஆன்மா அல்ல; இதை எண்ணுவேன் என்று மனதைக் கொண்டு எண்ணுபவனும் மனத்தை அடக்குபவனும் ஆன்மா. மனத்தையே கண்ணாகக் கொண்டு வழிபாட்டில் (தியானம்) மூழ்கிப் பரமான்மாவைக் கண்டு களிப்புறுபவன் ஆன்மா. இவ்வாறு உடலினின்றும், பொறிகளினின்றும், உடலின் செயல்களினின்றும், மனத்தினின்றும் வேறான பொருளே ஆன்மா. அது தன்னில்தானே பெருங்களிப்பு அடையும். உடல்வேறு; அதுவேறு.[30]

என விளக்கினார்.

இவ்வாறு ஆன்மாவை உயர்திணை ஆண்பால் ஒருமையாகவும், உடலைவிட்டுப் புறம்பானதாகவும் உபநிடதம் குறிக்க பூதவாதியோ இதனை முற்றாக மறுக்கின்றான். மணிமேகலை இதனைத் தெளிவாகக் கூறும்.

> பூத வாதியைப் புகல்நீ என்ன
> தாதகிப் பூவும் கட்டியும் இட்டு
> மற்றங் கூட்ட மதுக்களி பிறந்தாங்கு
> உற்றிடு பூதத்து உணர்வு தோன்றிடும்
> அவ்வவ் வுணர்வு அவ்வப்பூதத் தழிவுகளின்
> வெவ்வேறு பிரியும் பறையோசை யிற்கெடும்
> உயிரோடும் காட்டிய உணர்வுடைப் பூதமும்
> உயிரில் லாத உணர்வில் பூதமும்
> அவ்வப் பூத வழியவை பிறக்கும்
> மெய்வகை யிது ீவ வேறுரை விகற்பமும்
> உண்மைப் பொருளும் உலகாயதன் உணர்வே [31]

இப்பகுதிக்கு நா. வானமாமலை தரும் விளக்கம் இங்கே குறிக்கத்தக்கது.

---

30. இலட்சுமணன், இந்தியத் தத்துவ ஞானம், ப. 46

31. மணி. 27 : 263—273

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பூதவாதி தன் கூற்றில் ஒவ்வொரு தத்துவமும் பதிலளிக்க வேண்டிய முக்கிய வினாக்களுக்கும் பதிலளிக்கிறான்.

1. பிரபஞ்ச தோற்றத்தின் அடிப்படை யாது?

2. உயிருக்கும் இயற்கைக்கும் எத்தகைய உறவு உள்ளது?

3. உயிராம் உணர்வு இப்பிரபஞ்சத்தை எவ்வாறு அறிகிறது?

பூதவாதியின் விடைகள்:

1. நீர், நிலம், ஒளி, தீ, விண் ஆகிய அய்ம்பூதங்களின் சேர்க்கையாலேயே பல்வேறு உயிரற்ற பொருள்களும் உயிருள்ளனவும் தோன்றுகின்றன. அய்ம்பூதங்கள் அழிவற்றவை. அய்ம்பூதக் கூட்டால் தோன்றும் உயிரும் உணர்வும் கூட்டு நீங்கினால் அய்ம்பூதங்களாகப் பிரிந்துவிடும்.

2. உணர்வு, பூதங்களின் கூட்டில் தோன்றுகிற ஒரு பண்பு, இப்பண்பு பெற்ற பூதம் உயிருள்ளவற்றைத் தோற்றுவிக்கும். இப்பண்புள்ள பூதம் அறிவுடையது. உலகை அறியும்.

3. உலகை அறியும் வாயில்கள் அய்ம்பொறிகளே. அவை வழியே அறியும் புலனறிவே அறிவின் அடிப்படை. அவ்வறிவு பெறும்முறை பிரத்தியட்சமாகும். அனுபவத்தோடு முரணுகிற அறிவு பிழைபட்டது.[32]

இங்கே காட்டப்பட்ட சான்று பூதவாதத்தை மறுத்தவர்களின் நூலினின்றும் எடுத்தது. இருப்பினும் முன்னர்க் காட்டிய ஆன்மா பற்றிய விளக்கத்தை மிகவும் நுட்பமாக மறுப்பது பூதவாதம் என்பதை உணர முடிகிறது.

காண்பதும், கேட்பதும், பேசுவதும் எல்லாமே ஆன்மா என்பதையும், உடல் வேறு, ஆன்மா வேறு என்பதையும் அறிவியல் அடிப்படையில் மறுத்து, உயிர் என்பது பூதங்களின் சேர்க்கையால் தோன்றும் ஒரு பண்பே என விளக்குவது பூதவாதம். அத்துடன் ஆன்மா நிலையற்றது என்பதையும், பூதங்களின் சிதைவோடு உயிரும் சிதைந்துவிடும் என்பதையும் பூதவாதி தெளிவுபடுத்துகின்றான்.

32. நா. வானமாமலை, தமிழரின் பண்பாடும் தத்துவமும், ப. 242.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடல் என்பது நீரின்றி அமையாது என்பதும் இவ்வுடல் நிலை பேற்றிற்கு அடிப்படையாய் இருப்பது உணர்வே என்பதும், குடபுலவியனாரின் பின்வரும் பாடல் வற்புறுத்தும்.

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே[33]

என்ற இப்பாடல் பூதவாதத்தின் விளக்கமாக அமைந்துள்ளது அறியத்தக்கது.

யாக்கையின் அமைப்பில் நீரின் பங்கு மிகுதியாகும். அறிவியல் காட்டும் இவ்வுண்மையை விளக்கும் இப்பாடல் ஆன்மா நிலை யானது என்ற கருத்தை மறுக்கும் வகையில் அமைந்துள்ளதும் கருதத்தக்கது. அசுரர்களின் உடலியல் கோட்பாடு (தேகவாதம்) இப்பாடலில் எதிரொளிக்கிறது.

அசுரர்களின் கோட்பாடா?

உலகாய்தம் பற்றி முழுமையான ஆய்வு நூலை எழுதியவர் தே. சட்டோபாத்தியாயா. அவர், தமது நூலில் 'உலகாய்தம்' அசுரர்களின் கோட்பாடே என்பதைப் பல்வேறு சான்றுகள் தந்து நிறுவியுள்ளார். அசுரர்கள் சிந்துவெளி நாகரிகத்திற்குரியவர்களாக அவரால் ஏற்றுக்கொள்ளப் பெற்றாலும் அசுரர்கள் யார் என்ற வினாவிற்கு அவர் விடை கூறாமல் செல்வது வியப்பாக உள்ளது.[34]

'உலகாய்தம்' அசுரர்களின் கோட்பாடு எனில், தமிழ் இலக்கியங்களில் அதனைத் 'தமிழ்' என்றே சுட்டக் காரணம் என்ன? சங்க இலக்கியங்களுள் 'உலகாய்தம்' எதிர்மறையாகவும் (பரபக்கம்) உடன்பாடாகவும் (சுபக்கமாகவும்) பேசப்படுவதால், அசுரர் கட்கும் தமிழர்கட்கும் ஏதேனும் தொடர்பு இருக்குமா? தொடர்பு இருப்பின் எப்படிப்பட்ட தொடர்பு? அசுரர்தான் தமிழரா? என்னும் வினாக்களுக்கு விடை காணல் இன்றியமையாத ஒன்றாகும்.

நான்கு வேதங்களிலும் சமற்கிருத மொழியிலும் பெரும் புலமை பெற்றவராகவும், சிறந்த மனித நலச் சிந்தனையாளருமாக விளங்கியவர் சுவாமி சிவானந்த சரசுவதி. கேரளத்தைத் தாயக

33. புறம். 18 : 18—23.

34. D. Chattopadhyaya, Lokayata, p. 42.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகக்கொண்ட இவர், வேதங்களில் வரும் அசுரர், தசுயுக்கள், இராக்கதர், அனாரியர் என்னும் சொற்கள் யாரை உணர்த்துகின்றன என்பது குறித்து அளித்துள்ள விளக்கமாவது:

> ஆரியர்கள் தங்கள் வேதத்தில் தமிழர்களுக்கு தசுயு தாசன், மிலேச்சன், அசுரன், சூத்திரன், அனாரியன் எனப் பற்பல இழிபெயர்கள் வழங்கியும் தங்களுக்கு பூதேவர், ஸ்வயம்பூவின் சந்ததிகள், யஜமானர், பண்டிதர், பிராமணர் முதலிய உயர் பெயர்கள் வழங்கியும் இருக்க, நம் முன்னோர்களின் மேன்மை வேத ஆராய்ச்சியினால் அறியப்படுவது எப்படியெனில் முற்கூறிய ஆரிய அனாரிய வகுப்பினரின் ஒழுக்கங்களைத் தெளிவாய் கூறியிருப்பதால் பிறர் நலத்திற்குப் பாதகமில்லாத பழக்கவழக்கங்களை உடையவர்கள் உயர்ந்தவர்கள் என்றும் இதற்கு எதிரிடையாய் இருப்பவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும் அறியலாம்.[35]

என்பதாகும். மேலும்,

> அறிஞர்கள் பிறருக்கும் தமக்கும் நன்மையான ஆசாரங்களை உடையவர்களை உத்தமர்களாகவும், எதிர்மறையானவர்களைக் கடையர்கள் என்றும் கொள்ளுவர். ஆகையால் வேதத்தில் தமிழர்களைப்பற்றி இழிவாய் என்ன கூறப்பட்டிருந்தபோதிலும் அவர்களின் பழக்கவழக்கங்களும் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சில......[36]

என்று எடுத்துக்காட்டுகள் தந்து செல்வார். அவையாவன:

> இந்திரனே பகைவர்களை அழிப்பதற்குரிய பலவகை உபாயங்களுடைய தேவரீர் (அசுவமேதம், கோமேதம், நரமேதம், பௌண்டரீகம், சௌத்ராமணி முதலிய) யாகங்களை வெறுக்கின்றவர்களும், தனவந்தர்களுமான தஸ்யுக்களை வச்சுராயுதத்தினால் கொன்றுவிடக் கடவீர்.
>
> அவர்கள் பொன்னாலும், நகைகளாலும் தங்களை அலங்கரித்துக்கொண்டு புவியிலே எங்கும் பரவியிருந்தார்கள். மிக்க வலியர்களான அவர்கள் இந்திரனை ஜயிக்க இயலவில்லை. அவன் அவர்களை சூரியோதயத்தோடு கலைத்தான்.[37]

---

35. சுவாமி சிவானந்த சரஸ்வதி, மத விசாரணை, ப. 2.
36. சுவாமி சிவானந்த சரஸ்வதி, மத விசாரணை, ப. 2-3
37. Rg. Veda, 1 : 33 : 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்கண்ட பாடல்களில் தசுயுக்களின் செல்வச் செழிப்பை உணர முடிகிறது. தசுயு, தாசர் என்னும் சொற்களுக்குரிய பொருள் களைப்பற்றி டி. டி. கோசாம்பி கூறியுள்ளது சிந்திக்கத்தகும்.

> ஆரியர்கள் வருமுன்பு சப்தசிந்துப் பிரதேசத்தில் (சிந்து, பஞ்சாப் மாகாணங்களில்) தாசர்களின் அரசு நிலவியது. இப்போது தாசன் என்ற சொல்லுக்கு அடிமை என்ற பொருள் ஏற்பட்டுள்ளது. ஆனால் வேதத்தில் தாஸ், தாச் என்ற இரண்டு வினைப் பகுதிகளையும் 'கொடுத்தல்' என்ற பொருளில் வழங்கியிருக்கிறார்கள்; அண்மையில் வெளிவந்த அகராதிகளிலும் இப்பொருளைத் தான் தந்திருக்கின்றார்கள். எனவே தாசன் என்ற சொல் லுக்கு முதலில் உண்டான பொருள் கொடைவள்ளல், உயர்குடித் தோன்றல் என்பதேயாகும்.[38]

தாசன் என்ற சொல்லுக்கு வள்ளல் என்ற பொருளாயின்,

> ஆரியன் என்ற சொல் 'ரு' என்ற வினைப் பகுதியி லிருந்து தோன்றி இருக்கிறது. வடமொழியில் வெவ்வேறு கணங்களில் வரும் 'ரு' என்ற தாதுவுக்குப் பெரும்பாலும் 'நடத்தல்' என்பதே பொருள். அதாவது ஆரியன் என்ற சொல்லுக்கு நாடோடி, ஊர் ஊராகத் திரிபவன் என்பது பொருள்.[39]

அசுரர்களைப் பற்றிய வருணனைகள் அவர்களை வேள்வி முதலிய வற்றை எதிர்த்தவர்களாகவே காட்டுகின்றன என்பது நோக்கத் தக்கதாகும்.

> இந்திரனே! தேவரீர் வஞ்சனையினாலே, வஞ்சகர் களாகிய தஸ்யுக்களை நடுங்கச் செய்யவேண்டும். அவர் கள் பலவகை உணவுப் பொருட்களைத் தங்கள் வாய்க் குள்ளாகவே இடுகின்றார்கள். (நெருப்பில் கொட்டி யாகஞ் செய்யாமல் தாங்களே உண்கிறார்கள்) மக்களைக் காப்பவரே! துன்பஞ் செய்கின்ற அத்தகையவர்களின் ஊர் களை அழித்துவிடக் கடவீர்! கொலைக்களத்தில் நேர்மை யாளர்கள் (ஆரியர்கள்) இருந்தால் அவர்களை இரட்சியும்.[40]

தசுயுக்கள் பல்வகை உணவுப் பொருட்களையும் தங்கள் வாய்க் குள்ளாகவே போட்டுக் கொள்கிறவர்கள் என்ற கூற்று,

---

38. தர்மானந்த கோசாம்பி, பகவான் புத்தர், ப. 7.
39. தர்மானந்த கோசாம்பி, பகவான் புத்தர். ப. 8.
40. Rg. Veda, 1 : 51 : 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. அசுரசர்கள் வேத வேள்வியை மறுத்தவர்கள்.

2. அவர்கள் வேள்வித் தீயில் அவிப்பலி இடாமல் உணவைத் தாமே உண்பவர். ஆகிய கருத்துக்களைச் சுட்டி நிற்கின்றது.

அசுரர்கள் வேத வேள்வியை மறுத்ததேன்? நிருக்தம் நைகம காண்டம் 32-வது பாடல் இதற்குரிய விடையைத் தருகின்றது.

> இந்திரனே! கீகடதேச (அனாரியதேச)த்தில் பசுமாடுகள், தேவரீர் (இந்திரனுக்காக) பொருட்டு பாலைத் தராமலும் எங்களுக்கு யாகஞ் செய்வதற்கு உதவாமலும் இருக்கின்றனவே. ஆகையால் அவைகளைக் கொள்ளையிட்டு எங்களுக்குத் தந்தருளும். அன்றியும் கீகடதேசத்தை அரசு புரியும் பரமகந்தனுடையவும் அவனுடைய பிள்ளை பேரன் முதலிய அவனைச் சார்ந்த எல்லோருடையவும் பொருள்களைக் கொள்ளையிட்டு எங்களைக் காப்பாற்றும்.[41]

என்பதாகும். அசுரவேந்தன் பரமகந்தன் என்பதும் அவன் ஆரியர்களின் வேள்விகளுக்குப் பசுவைத் தர மறுத்துள்ளான் என்பதும் இதிலிருந்து தெளிவாகின்றது.

சிந்துவெளி நாகரிகம் நகர நாகரிகமாக இருந்தாலும் அதற்குரிய மக்களின் இன்றியமையாத் தொழில் உழவுத் தொழிலே. உழவுத் தொழிலின் அடிப்படையிலேயே அம்மக்களின் வானவியல் அறிவும் வளர்ந்துள்ளதாக வால்டர் ஆர். ஃபேர்சர்விசு என்ற அமெரிக்க அறிஞர் குறித்துள்ளார்.

> அரப்பா நாகரிகத்திற்கு மக்களின் இன்றியமையாத் தொழில் உழவே. இதன் அடிப்படையிலேயே அவர்களின் அளத்தல், முகத்தல் முதலிய அளவை முறைகள் மிகத் துல்லியமாக அமைக்கப்பட்டிருந்தன...... அவர்கள் மாதங்களைக் கணக்கிட்ட முறை இன்றைய தமிழர்களின் திங்கள் முறையை ஒட்டியே. அதாவது அமாவாசையிலிருந்து தொடங்கியது. அவர்களின் ஆண்டுத் தொடக்கம்

---

41. சுவாமி சிவானந்த சரஸ்வதி, மத விசாரணை, ப. 4, (மேற்கோள்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> கார்த்திகைத் திங்களை (தமிழ் கார்த்திகை) அடிப்படையாகக்கொண்டே அமைந்தது.[42]

தமிழில் உள்ள கார்த்திகை என்னும் சொல்லின் வேர்ச் சொல்லான 'கார்', முகில், நீர், கார்ப்பருவம், கார்நெல், காரரிசி போன்ற பொருட்களை உணர்த்துகின்றது. அத்துடன் உழவுத் தொழிலைச் செய்தவர்களைக் 'கார்காத்தார்' என்று அழைக்கும் தமிழ் உலக வழக்கும் இங்கே ஒப்பு நோக்கத்தக்கது.

உழவுத் தொழிலை முதன்மையாகக் கொண்ட மக்கள் ஆநிரைகளைப் போற்றுவது தவிர்க்க இயலாத ஒன்று. வேத வேள்வியில் முதன்மையாகப் பலியிடப்பட்டவை ஆநிரைகளே. ஒரு வேள்வி செய்யும்போது எவ்வளவு ஆநிரைகள் கொல்லப்பட்டன என்பதைப் புத்த இலக்கியமாகிய 'கூடதந்த சூக்தம்' என்னும் நூல் குறித்துள்ளது.

> காணுமதம் என்ற ஊரை மகத மன்னனான பிம்பசாரன் கூடதந்தன் என்ற பிராமணனுக்கு மானியமாகக் கொடுத்திருந்தான். அந்த பிராமணன் பெரு வேள்விக்காக எழுநூறு எருதுகளும், எழுநூறு காளைக் கன்றுகளும், எழுநூறு பசுங்கன்றுகளும், எழுநூறு வெள்ளாடுகளும், எழுநூறு செம்மறிகளும் கொண்டு வந்திருந்தான்.[43]

இறுதியில் புத்தர் அவனுடன் வாதித்து அவற்றை எல்லாம் வேள்வித் தூண்களிலிருந்து விடுவித்தார். வேளாண்மைக்குப் பயன்படும் ஆயிரக்கணக்கான கால்நடைகள் வேள்வியின் பேரால்

---

42. In the case of Harappans, predominantly agricultural people, we are already aware of their possession of an efficient system of weights and measures...

    It is also worthy of note that according to the Calendar stics mentioned above, the Harappan counted the lunar month from New Moon to newmoon as do the Tamils, whereas in the basic lunar calendar of the Indo-Aryans the month started and ended with the fullmoon.

    ....Walter A. Fairservis : The Harappan Calendar, IATR, Vol. 1, pp. 2-26, 2-29, 2-30.

43. தர்மானந்த கோசாம்பி, பகவான் புத்தர் பக். 314—315.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழிக்கப்பட்டன. அது மட்டுமல்லாது வேள்விக்கான கால்நடைகள் அந்நாட்டுக் குடிமக்களிடமிருந்தே கவரப்பட்டன. இதனால் பருவத்தில் பயிரிடும் உழவர்கள் கால்நடைகளின்றி வறுமையில் உழன்றனர். எனவேதான் உழவர்கள் பசுக்களையும் மற்றும் வேளாண்மைக்குரிய கால்நடைகளையும் தம் செல்வமாகப் போற்றினர்; மதித்தனர். இந்நிலையில் வேள்வியின் பெயரால் அவை பறிக்கப்படுதலையோ, கொல்லப்படுதலையோ அம்மக்கள் விரும்பவில்லை. நிருக்தம் நைம காண்டத்தில் ஆரியர்கள் செய்யும் வேள்விக்கு அசுரவேந்தனாகிய பரமகந்தன் பசுக்களை வழங்க மறுத்ததன் காரணம் இதுவே எனலாம். வள்ளுவர்,

> அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத்து உண்ணாமை நன்று.[44]

என்று வேள்வியைக் கண்டிப்பதும் இதன் அடிப்படையிலே ஆகும்.

எனவே, அசுரர்கள் வேள்வியை மறுத்ததைப் போன்றே தமிழ் மரபும் வேள்வியை மறுத்தது. மேலுலகம் கருதி அறம் செய்வது அறத்தை விலைகூறல் போன்றது என்பதை வற்புறுத்துவது.[45]

திராவிடச் சிந்தனையின் நீருற்றிலிருந்து கிளைத்த சமணம், பௌத்தம், ஆசீவகம் முதலான சமயங்கள் எல்லாம் வேத நெறிகளையும், வேத வேள்விகளையும் கடுமையாகக் கண்டித்தன. அதன் காரணமாகவே—அதாவது அவை வேத வேள்விகளை எதிர்த்ததனாலேயே வைதிக நெறியைத் தமிழகத்தில் பரப்பிய ஞானசம்பந்தர்,

> வேட்டு வேள்வி செய்யும் பொருளைவிளி
> மூட்டுச் சிந்தை முரட்டமண் குண்டரை
> ஒட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே......
>
> வைதி கத்தின் வழியொழு காதவக்
> கைத வமுடைக் காரமண் தேரரை......
>
> மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
> பறித லைக்கையர் பாயுடுப் பார்களை......[46]

---

44. குறள். 259.
45. புறம். 169.
46. சம்மந்தர் தேவாரம், ஆலவாய்ப் பதிகம், 6 : 1—3, 2 : 1—2, 3 : 1—2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றெல்லாம் கண்டிக்கிறார். மேலே காட்டிய சான்றுகளினால் அசுரர்களைப் போன்றே திராவிடச் சிந்தனையின் கிளைகளான மேற்காட்டிய சமயங்களும் வேத வேள்வியைப் புறக்கணித்துள் ளமையை அறியலாம்.

பாத்தூண்

அடுத்து 'அசுரர்கள் உணவைத் தம் வாயிலேயே போட்டுக் கொள்வர்' என்ற கருத்தும் ஆய்விற்குரியதே.

'சார்வ்' என்ற சொல்லிற்கு உண்ணல், தின்னல், மெல்லுதல் என்பதே பொருளாகும். எனவே 'சார்வாகர்' எனில் உண்பவர்கள் என்று பொருளாகிறது. முன்னர்க் காட்டிய நிருக்தம் பாடல் அசுரர்கள் உணவுப் பொருட்களை அவியில் போடாமல் தங்கள் வாய்க்குள்ளாகவே போட்டுக் கொள்பவர்கள் என்று குறிப்பதும் சார்வாகர்களைக் குறிப்பதாகலாம்.

தொடக்க நிலையில் எல்லாச் சமுதாயங்களும் இனக்குழுக் களாக இருந்தே வளர்ச்சி பெற்றுள்ளன. அந்நிலையில் உழைப்பும் உரிமையும் அச்சமூகங்களின் பொதுச் சொத்துக்களாகவே இருந்துள் ளன. உற்பத்தி பொதுவாக இருந்ததால் உண்பதும் பொதுவாகவே இருந்திருக்கும்.

> இவ்விடத்தில், சமணம், பௌத்தம் ஆகியன வலி யுறுத்தும் பொதுமைக் கருத்துக்கள் குறித்து ஒன்று கூறுதல் இன்றியமையாதது. மனித சமுதாய வரலாற்றை உற்று நோக்கினால், வர்க்க சமுதாய வருகையுடனேயே பொது மைக் கருத்துக்களும் தோன்றியமை புலப்படும். புராதன பொதுஉடைமையில் பற்றாக்குறை இருந்தது; அறிவு வளர்ச்சி ஆரம்ப நிலையிலேயே இருந்தது; ஆனால் பகுத் துண்ணல் நடைமுறையில் இருந்தது. பொதுமையை விழைய வேண்டிய தேவை இருக்கவில்லை; அதுவே வாழ்க்கை முறையாய் இருந்தது. ஏற்றத்தாழ்வுகளும், ஒரு சீரற்ற வளர்ச்சியும், உடைமையில் ஒப்பிசைவின்மை யும் சமுதாய யதார்த்தமாக அமைந்துவிட்ட நிலை யிலேயே பொதுமை இலட்சியமாக மாறுகிறது.[47]

என்று விளக்கம் தருவார் க. கைலாசபதி. இதற்குச் சான்றுகளாகச் சங்க இலக்கியங்களிலும், திருக்குறளிலும் வரும் நிகழ்ச்சிகளையும்

47. க. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும், ப. 88.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்துக்களையும் எடுத்துக்காட்டிப் பகுத்துண்ணும் முறை ஒரு சமூகச் சித்தாந்தமாக விளங்கியதைக் காட்டுவார்.[48]

பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது.[49]

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.[50]

என்னும் குறள்களில் இடம் பெறும் 'பாத்தூண்' ஆய்வுக்குரியது.

'பாத்தூண்' என்பது வர்க்க சமுதாயத்தின் வருகைக்கு முன் தன்நிறைவுடைய புராதனப் பொதுஉடைமைக் குலங்களில் மக்கள் உணவு அனைத்தையும் பகுத்து உண்டு வாழ்ந்த ஒழுங்குமுறையின் நினைவு என்று கூறுவதில் தடையில்லை.[51]

எனவும் அவர் விளக்குகின்றார்.

பொருள் முதலியல் சிந்தனையின் ஒரு கூறாக அமைந்த 'தந்திர' (தாந்திரிகம்) வழிபாட்டாளர்களான வேட்டுவர்களும், மன்றங்களில் கூடி ஒருங்கு உண்ணுவர் எனச சிலப்பதிகாரமும் இப் பகுத்துண்ணும் முறை நடைமுறையில் இருந்ததைச் சுட்டும்.

எனவே 'உண்பவர்கள்' என அசுரர்கள் சுட்டப்படுவதையும், அவர்கள் வேத வேள்வியை மறுத்தவர்கள் எனக் கண்டிக்கப்படுவதையும் நோக்க, அவர்களின் வாழ்வில் தொன்மைப் பொது உடைமையும்—பொது உரிமையும் உள்ள ஒரு சமூக அமைப்பின் எச்சம் நிலவி வந்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

தலைவியோடு கூடித்துய்க்கும் இன்பம் தாமரைக் கண்ணான் உலகினும் இனியதாகக் குறிக்கும் வள்ளுவர்,

தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.[52]

எனப் பாத்துண்ணலோடு அரிவையின் முயக்கை உவமையாகச் சொல்வதை எளிதாகப் புறக்கணித்துவிட முடியாது.

---

48. க. கைலாசபதி, சமூகவியலும் இலக்கியமும், ப. 89.
49. குறள் 227.
50. குறள் 44.
51. க. கைலாசபதி, மு. கு. நூ., ப. 91.
52. குறள் 1107.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லறத்தானின் கடமையாக வள்ளுவர்,

தென்புலத்தார் தெய்வம் விருந்துஒக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை[53]

என்று உணவு படைத்தலையே சிறந்த அறமாக வற்புறுத்துவதையும் காணலாம்.

உலகாய்தச் சிந்தனைகளை—வாழ்க்கை முறைகளை வற்புறுத்தி அமைந்த ஆற்றுப்படை இலக்கியங்களுள் உணவளிப்போர் பெருமையையும் அவர்கள் வழங்கிய வகைவகையான உணவின் பெருமையையும் விளக்கும் பகுதிகளும் ஒப்புநோக்கத் தக்கவை.

தமிழ் இலக்கியங்களுள் வள்ளல்களின் சிறப்பியல்புகளை விளக்கும் இடங்களில் அவர்களை, 'இல்லோர் ஒக்கல் தலைவர்களாகப்' புனைவதும், வறிய புலவர்கள், பாணர்கள் ஆகியவர்களோடு அரசர்கள் உடனமர்ந்து உண்ணும் நிகழ்ச்சிகளைப் புகழ்ந்து பாடுவதும் குறிக்கத்தக்கன.

சோழன் கரிகாலன் பரிசிலர்க்கு நாளும் வழங்கிய புலால் உணவை உண்டு, அவர்களின் பற்கள் 'கொல்லை உழுத கொழுவினைப்போல முனை மழுங்கியது' என்று முடத்தாமக்கண்ணியார் குறிப்பார். கள்ளும், புலால் உணவும் நாளும் வழங்கப்பட்டன. இதனை,

மகிழ்ப்பதம் பன்னாட் கழிப்பி யொருநாள்
அவிழ்ப்பதங் கொள்கென் றிரப்ப முகிழ்த்தகை
முரவை போகிய முரியா வரிசி
விரலென நிமிர்ந்த நிரலமை புழுக்கல்
பரல்வறைக் கருனை காடியின் மிதப்ப
வயின்ற காலைப் பயின்றினி திருந்து
கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின் று மயங்கி[54]

எனப் பாடுவார்.

இவ்வாறு உண்ணலையும், உண்பித்தலையும் சிறப்பாகக் கருதும் மரபைத் தமிழ் இலக்கியங்கள் ஏற்றியும் போற்றியும் புகழ்கின்றன. அவ்வாறு வழங்கப்படும் உணவில் கள்ளும், புலவும் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன.

53. குறள் 43.
54. பொருநராற்றுப்படை, 111—118.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே வேதத்தில்—'அசுரர்கள்' தங்கள் வாய்க்குள்ளாகவே உணவுப் பொருட்களைப் போட்டுக் கொள்பவர்கள் என்பது சார்வாகர்களோடுள்ள அவர்களுக்கான தொடர்பைக் குறிக்கின்றது என்பது பொருந்தும். சமண அறிஞராகிய குணரத்னா,

> அவர்கள் (சார்வாகர்கள்—உலகாய்தர்கள்) எவ்வித மான சமயக் கோட்பாடுகளின் (தர்மத்தின்) மீதும் நம்பிக்கை அற்றவர்கள். காம இன்பத்தையே மேலான தாகக் கருதுபவர்கள். அவர்கள் சார்வாகர்கள் அல்லது உலகாய்தர்கள் எனப்படுவர். குடிப்பதும் உண்பதுவுமே அவர்களின் நோக்கம். அவர்களைச் சார்வாகர்கள் என்று சொல்வதற்கான காரணமே அவர்கள் பலவகையான உணவுப் பொருட்களையும் எவ்வித வேறுபாடும் கருதாது தம் வாய்க்குள் போட்டுக் கொள்வதுதான்.[55]

என்று கூறுவார். இப்பகுதியைத் தம் நூலில் மேற்கோளாகக் காட்டும் சட்டோபாத்தியாயா மேலும்,

> சிந்துவெளி நாகரிகத்தை உருவாக்கி அதனைச் செழு மைப்படுத்தியவர்களே இவ்வசுரர்கள்தான்[56]

என்றும் தெளிவுபடுத்துகின்றார்.

இவ்வாறு நாகரிகச் செழுமைக்குரியவர்களாக அசுரர்கள் பாராட்டப் பெற்றாலும் அவர்கள் ஆரியர்களோடு நடத்திய பல போர்களில் தோல்வியுற்றே வந்துள்ளனர். இருக்குவேதம்,

> இந்திரனே! அசுரர்கள் யாகஞ் செய்கின்றார்களில்லை. யாகஞ் செய்பவருடன் பகைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்கள் தேவரீரின் பிரதாபத்திற்குப் பயந்து முதுகு காட்டி ஓடுகிறார்கள். நல்ல குதிரைப் படையுடையவரே தேவரீர் தஸ்யுக்களை எங்குமில்லாமற் செய்துவிட்டீர்![57]

---

55. They are called the Carvakas, the Lokayatikas etc., to drink and to chew is their motto; they are called Carvakas because they chew (carv), that is eat without discrimination. They consider virtue and vice to be merely qualities attributed to the objects...
—D. Chattopadhyaya, Lokayata, p. 52.

56. Ibid, p. 58.

57. Rg. Veda, 1 : 33 : 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு அசுரர்கள் பெற்ற தோல்விக்கான காரணத்தை,

> அசுரர்கள் தங்கள் உடலிலேயே ஓமம் செய்பவர்கள், இதனால் தோல்வியையும் அடைந்தார்கள்[58]

என்று கௌசீதகீப் பிராமணம் குறிப்பிடும்.

வேதங்களைப் படிக்கும்போது அசுர ஆரியப்போர் நெடுங் காலம் தொடர்ந்து நடந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. இப்போரில் வெற்றி காணும் பல்வேறு சூழ்ச்சிகளையும் ஆரியர்கள் செய்துள்ளனர். அச்சூழ்ச்சியின் ஒரு பகுதியாக அசுரர்கட்கு மாயா மோகன் உலகாய்தக் கோட்பாட்டைக் கற்பித்தார் என்று விட்டுணு புராணம் குறித்துள்ளது.

> மாயாமோகன் உலகாய்தத் துறவிகள் (பாஷாண்டிகள்) வடிவில் பற்பல அசுரர்களை மோகிப்பித்து, சொற்ப காலத்துக்குள்ளே வைதிக மார்க்கத்தை விடச்செய்தான். அதனால் அவ்வசுரர் வேதத்தையும் தேவர்களையும் யாகாதி கருமங்களையும் பிராமணர்களையும் தூஷிக்கத் தலைப்பட்டார்கள். எப்படியெனில் இம்சை மகாபாவ மென்று சொல்லிய வேதமே மறுபடியும் இந்த இம்சை யைத் தரும சாதனமாகச் சொன்னது எள்ளளவும் யுக்திக்கு ஒத்ததன்று. அக்கினியிற் சொரிந்த அவிசுகள் எரிக்கப்பட்டுச் சாம்பலாய்ப் போனவை பயனைத் தரு மென்பது ஒன்றுமறியாதபயல் பேச்சைப் போன்றதாம்; அநேக யாகங்கள் செய்து இந்திரத்தத்துவம் அடைந்தவன் வன்னிக்கட்டை முதலான கட்டைகளைத் தின்னும்படி நேரிடுமானால் அக்கட்டைகளின் இலைகளைத் தின்னுகிற மிருகப் பிறப்பே இந்திர ஜனனத்திலும் விசேஷமன்றோ?
>
> யாகத்திற் கொல்லப்பட்ட பசுவுக்குச் சொர்க்கம் உண்டாகிறதானால் அந்த யஜமானன் (யாகம் செய்த வன்) தன் பிதாவையே யாகத்திற் கொல்லலாமன்றோ? சிரார்த்தத்தில் ஒருவன் புசிக்க, மற்றொருவனுக்குத் திருப்தி உண்டாகுமானால், வழிநடக்குங் கனபந்துகள் சோற்று மூட்டை சுமந்து வருத்தப்படாமல் இருக்கும்படி, ஜனங்களேன் மற்றொருவருக்கு அன்னமிடக் கூடாது?[59]

என்று மாயாமோகன் அசுரர்கட்கு அறிவுறுத்தினான். இதனால் அசுரர் எல்லோரும் நல்லொழுக்கத்தினின்றும் வழுவிவிட்டனர்.

---

58. சுவாமி சிவானந்த சரஸ்வதி, மதவிசாரணை ப. 31.

59. விஷ்ணுபுராணம், அத்தியாயம் 18. ப. 213—214

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நிலையில் தேவர்கள் அசுரர்களுடன் தொடுத்த போரில் அசுரர் எல்லோரும் மாண்டுவிட்டனர் என்றும் விட்டுணுபுராணம் குறிக்கும்.

அசுரர்கட்கு மாயாமோகன் கற்பித்ததாகக் கூறப்படுபவை அனைத்தும் உலகாய்தக் கருத்துக்களே ஆகும். பிரகற்பதியும் அசுரர்களை அழிப்பதற்காகவே உலகாய்த மெய்யியலைப் படைத்து அவர்கட்குக் கற்பித்தார்[60] என்ற கதையும் இதே நோக்கில் உருவானது என்பது தெளிவு.

இதனால் சார்வாகம்—உலகாய்தம் ஆகியவை அசுரர்கட்கு உரியவை என்பதே இக்கதைகள் உணர்த்தும் உண்மைகள் எனலாம்'

அசுரர்களின் நகரம்

இருக்குவேதம் ஆறாம் மண்டிலத்தில் உள்ள ஒரு சூக்தம் வருமாறு:

> அவன் (இந்திரன்) சயமானனுடைய புதல்வனான அப்யாவர்த்தனுக்கு உதவி செய்து வரசிகனுடைய வம்சத்தை அழித்தான். ஹரியூபீய் நகரத்திலே விருசீவானுடைய முன்னணிப்படையைக் கொன்றான். பின்படை பயத்தால் கலைந்தது.[61]

இதில் குறிப்பிடும் ஹரியூபீய் நகரமே, தற்போது புதைபொருளாய்வாளரால் அகழ்ந்தெடுக்கப்பட்ட 'ஆரப்பா' என்பர் ஆய்வாளர். சட்டோபாத்தியாயாவும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டு,

> எனவே 'அசுரர்' என்ற சொல் சிந்துவெளி நாகரிகத்தை உணர்த்தலாம்.

என்கிறார். அத்துடன் அமையாது அசுரர்கள் அசிரியாவிலிருந்து வந்தவர்கள் என்ற கருத்தையும் ஏற்கிறார்.[62]

அசுரர்கள் யார்?

உலகாய்தம் சார்ந்த சார்வாகர்களையும், உலகாய்தர்களையும் 'அசுரர்கள்' என்ற சொல் உணர்த்துவது மேலே காட்டப்

60. கலைக்களஞ்சியம், தொகுதி 2, தலைப்பு: உலோகாயுதம்.
61. Rg. Veda. 5 : 27 : 5.
62. D. Chattopadhyaya, Lokayata, p. 58.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டது. இதைப் போன்றே தமிழ் என்ற சொல்லும் சார்வாகரை-உலகாய்தரை உணர்த்தும் வகையில் தமிழ் இலக்கியங்களுள் பயிலப்பட்டு வந்ததும் நிறுவப்பட்டது. அப்படியானால் இருக்குவேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 'அசுரர்'—தமிழரா என்பது ஆராய்தற்கு உரியது.

இந்திரன் தலைமையில் ஆரியருக்கு ஏற்பட்ட வெற்றிக்கு ஒரு முடிவு ஏற்பட்டது. 'திராவிட'னான கண்ணன் (கரிய நிறம் உடையவன்—கிருட்டினன்) அவனை வெற்றி கொள்கிறான்.

> சப்த சிந்துப் பிரதேசத்தில் தன்னுடைய ஆதிக்கம் பூரணமாக நிலைத்த பின்பு, இந்திரன் மத்திய இந்தியாவின்மீது படை எடுத்ததில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆனால் அங்கே அவன் மிகப் பெரிய பகைவனை எதிர்க்க நேர்ந்தது. தேவகி மைந்தனான கண்ணன் வெறும் பசுக்களைக் காக்கும் அரசனாக இருந்தான். இந்திரனுடைய வேள்விப் பண்பாட்டையும் மேன்மையையும் ஏற்றுக் கொள்ள அவன் இசையவில்லை. ஆதலால் இந்திரன் அவனைத் தாக்கினான். கண்ணனிடம் குதிரைப்படை இல்லை; ஆயினும், அவன் போராடுவதற்கு வாய்ப்பான இடத்தைத் தேடிக் கொண்டதனால் இந்திரன் அவனை ஒன்றுமே செய்ய முடியவில்லை. பிருகஸ்பதியின் உதவியினால் இந்திரன் எப்படியோ தன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு பின்னடைந்தான்.[63]

என்று இந்திரனின் தோல்வியையும் கண்ணனின் வெற்றியையும் குறிப்பார் தர்மானந்த கோசாம்பி. அவரே,

> இந்திரனை வெற்றி கண்ட கண்ணனும், பாரதத்தில் வரும் கண்ணனும் ஒருவரல்ல என்பதும் இருவருக்கும் இடையே பல நூறு ஆண்டுகள் இடைவெளி உண்டு.[64]

என்று குறிப்பதும் நினையத்தகும்.

கிருட்டிணனை மாயோனாகவும், முல்லை நிலத்திற்குரியோனாகவும், திருமாலாகவும், கண்ணனாகவும் தமிழ் இலக்கியங்கள் போற்றும். அத்துடன் இந்திரனை வென்றவனாகிய கண்ணன் அவ்வெற்றியின் அடையாளமாக இந்திரனது ஆரத்தைக் கவர்ந்தான். அந்த ஆரம் நெடுங்காலம் பாண்டியர்களால் பேணப்பட்டு

63. தர்மானந்த கோசாம்பி, பகவான் புத்தர் ப. 17.
64. மே. நூ. ப. 18.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்தது. கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் சோழப் பேரரசனால் கவரப்பட்ட காலம் வரை அதனைப் பாண்டியர்கள் பெருமைக் குரிய ஒன்றாகப் பேணிக் காத்தனர். சிலப்பதிகாரமும்,

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தா னென்பரால்[65]

என்று பாடும்.

இத்துவராபதியிலிருந்தே அகத்தியர், கண்ணன் மரபிற்குரிய வேளிர்களை (அரசர்களும் குடிகளுமாக) தமிழகத்திற்கு அழைந்து வந்தார் என்பதை,

நீயே; வடபான் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்பு புனைந்தி யற்றிய சேணெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே!......[66]

எனப் புறநானூற்றில் கபிலர் குறித்துள்ளார். நச்சினார்க்கினியரும்,

துவராபதிப் போந்து நிலம் கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளிர் உள்ளிட்டாரையும், அருவாளரையும் கொண்டு போந்து, காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின் கண் ணிருந்து[67]

என்று இக்கருத்தை விளக்குவார். அகத்தியர் தென்னாடு வந்ததற் கான காரணம் எதுவாயினும், அவர் தென்னகம் வந்தது உறுதி யாகின்றது.

மொகஞ்சதாரோ, ஆரப்பா என்னும் சிந்துவெளி நாகரிகத்திற் குரிய நகரங்களைப் போன்றே, அவற்றின் சமகாலத்திற்குரிய பல் வேறு நகரங்களையும் புதைபொருள் ஆய்வாளர்கள் வெளிப்படுத்தி யுள்ளனர். அந்நகரங்கள் இயற்கையின் சீற்றத்தாலும் பகைவரின்

65. சிலப்பதிகாரம் 17 : உள்வரி பாடல் 1.
66. புறம். 201 : 8—12.
67. நச்சினார்க்கினியர்; தொல். பாயிரம் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாக்குதல்களாலும் அழிந்துபட்டுள்ளன. அவ்வாறு அழிவெய்திய நகரங்களுள் துவராபதியும், லோத்தல் என்ற துறைமுகமும் அடங்கும்.

ஆரியர்களின் தொடர்ந்த தாக்குதல்கள் ஒருபுறமும், இயற்கையின் சீற்றம் மறுபுறமுமாய்த் தம் இனத்தை அழித்துவரும் நிலையில் அதனை மீட்டு, உயிர்ப்பிக்க அகத்தியர் முயன்றிருக்கலாம். தம் முன்னோர்களின் பிறப்பிடமும் தாயகமுமாகிய தென்னகத்தை நோக்கி அரசர்களையும் மக்களையும் அழைத்து வந்திருக்கலாம். அகத்தியரின் இந்தச் செயலோடு, எகிப்திலிருந்து இசுரேலியர்களை அழைத்துச் சென்ற மோசசின் செயலை ஒப்பிட்டால் இத்தகைய நிகழ்ச்சிகள் வரலாற்றுப் புதுமை அன்று என்பதும் விளங்கும்.

மேலும் வேதங்களிலும், புராணங்களிலும் வரும் அகத்தியர் பிறப்பு—உருவம்—உயரம் பற்றிய குறிப்புகளும் அகத்தியர் ஆரியரல்லாதவர் என்பதை வற்புறுத்தும். அகத்தியர் கடுஞ்சினத்தராகவும் (இந்திரன் மகன் சயந்தனையும் அவன் காதலியையும் சபித்த நிகழ்ச்சி) காட்டப்பட்டுள்ளார்.

ஆனால் தமிழ் இலக்கியங்களோ அவரைத் தமிழ் மொழியின் பாதுகாவலராகவும், தமிழ் இலக்கணத்தைத் தோற்றுவித்தவராகவும், தமிழ் மருத்துவத்தின் முன்னோடியாகவும், நெஞ்சுருக்கும் இசை வல்லுநராகவும் போற்றிப் புகழ்கின்றன.

> தென்னவர்ப் பெயரிய துன்னருந்துப்பின்
> தொன்முது கடவுள்......[68]

என்று (மதுரைக் காஞ்சியும்) மாங்குடி மருதனாரும்,

> என்றுமுள தென்றமிழை இயம்பி
> இசைகொண்டான்[69]

என்று கம்பரும் அகத்தியரைப் புகழ்வர்.

இந்தியாவின் தொல்குடிகளாகவும், ஆரியர் வருகைக்கு முன்னரே இங்குச் சிறப்பான மொகஞ்சதாரோ, ஆரப்பா நாகரிகத்திற்கு உரியவர்களாகவும் இருந்தவர்கள் திராவிடர்களே என்பதை இந்தியவியல் ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர். உருசிய நாட்டவரும் இந்தியவியல் அறிஞருமாகிய அலெக்சாந்தர் கோந்த்ரதோவ்,

> மிகத் தொன்மையான நாகரிகம் படைத்த தமிழர்கள் இன்று 100 மில்லியன் மக்கள் பேசிவரும் திராவிட

---

68. ம. காஞ்சி 40—41.

69. கம்பராமாயணம், ஆரண்ய காண்டம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இந்தியாவின் மிகத் தொன்மையான இனத்தைச் சேர்ந்தவர்கள் திராவிடர்கள். இந்துக்களின் புனித நூலான ரிக்வேதத்தில் வரும் போர்க்குணம் படைத்த நாடோடிகளான ஆரிய இனங்கள் 'அதிசயங்களின் நாட்டுக்கு' வந்தேறு முன்னரே திராவிடர்கள் வாழ்ந்திருந்தனர்[70]

என்று விளக்குவார். மேலும் சிந்துவெளி எழுத்துக்கள் திராவிட மொழியை ஒத்திருந்தன என்பதையும், அத்தகைய ஒப்புமையைக் கண்டறிந்த விதம் பற்றியும் குறிப்பிடுவது எண்ணத்தக்கது.

> புராதன இந்திய மொழியை 'X' என்று குறித்தனர். ஆராய்ச்சிக்குழு அந்த 'X' மொழியின் இலக்கணக் குறியீடுகளை அறிவதற்கு முத்திரைகளிலும் அணிகளிலும் காணப்பட்ட சொற்களைப் பல புள்ளி விபரங்களாகப் பகுத்து ஆராய்ந்தது...... அடுத்து, குழுவினர் 'மொழி' அய், பிற மொழிகளோடு ஒப்பிட்டு நோக்கினர்......
>
> பின்னர் இந்தியாவின் மிகப் பழையதான நாகரிகத்தைத் தோற்றுவித்த மக்களது மொழிக்கு உரிமை கொண்டாடிய சமஸ்கிருதம், ஹிட்டைட், ஹரியன், ரபானுய் என்னும் மொழிகளும், வேறு பல மொழிகளும் ஒன்றன் பின் ஒன்றாக விலக்கப்பட்டன. திராவிட மொழிகளே எஞ்சி இருந்தவை. அவற்றின் அமைப்பு 'மொழிXக்கு' ஒத்திருந்தது. பல அறிஞர்கள் ஏற்கனவே தொல்லிந்திய நாகரிகம் திராவிட மொழி பேசும் மக்களால் உருவாக்கப்பட்டது என்று சொல்லி இருந்தனர். அக்கருத்துக்கு அரண் செய்யும் வகையில் ஆராய்ச்சிக் குழுவின் முடிவும் இருந்தது[71]

என்று நிறுவுவார். அவர் கருத்துப்படி சுமேரிய நாகரிகத்திற்கு அடித்தளம் அமைத்தவர்களும் திராவிடர்களே என்பதாகும். திராவிடர்களின் தாயகம் பற்றிய அய்யத்திற்கும் கோந்த்ரதோவ் தரும் விளக்கமாவது:

> திராவடர்களின் பூர்வீகம் சுமேரியா, ஏலம், ஈரான், காகஸஸ் இவற்றில் யாதாவது ஒன்றாக இருக்கலாம் என்று வல்லுநர் கூறுகின்றனர். இந்த உத்தேசங்களை

---

70. அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ், மாக்கடல் மர்மங்கள், பக். 45.

71. மே. நூ. பக். 47—48.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்றாக்கவும் முடியும். அஃதாவது மெசபடோமியா, ஈரான், காகஸஸ் மலைகள், மத்திய ஆசியப் பகுதிகள் என்னும் இந்த நிலங்களில் எல்லாம் ஒரு காலத்தில் திராவிட மொழிகள் பேசிய இனமக்கள் வாழ்ந்திருக்கலாம் என்பது. எனினும், திராவிடர்களின் தாயகம் இப்பெருநிலப் பரப்பா?

சோவியத் இந்திய இயலாளரான ஜி. ஜொகிராப் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாள மொழிகளை ஆராய்கையில் திராவிட மக்கள் வடக்கிலிருந்து தெற்காக அல்ல, தெற்கிலிருந்து வடக்காகப் பரவினார்கள் என்ற கருத்து மேலும் மேலும் வலுப்பெற்று வருகிறது என்று குறிப்பிடுகிறார்.

இந்தியத் துணைக்கண்டத்தின் தென்பகுதியிலுள்ள இந்துமாக் கடலில் தொல்திராவிடர்கள் தோன்றி வளர்ந்து அவர்கள் வடக்கு நோக்கி இந்தியா, மெசபடோமியா, ஏலம் வரை பரவி இருக்கலாம். நில நூலாரும் இந்துமாக் கடலில் மூழ்கிப்போன லெமூரியா அங்கிருந்தது என்று குறிப்பிடுவதும் நினைவு கொள்ளற்பாலது. திராவிடர்களின் தாயகம் இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தெற்கே இருந்தது. அது பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் கடலால் கொள்ளப் பட்டது என்று திராவிடர்களின் பழங்கதைகள் கூறுவதும் நோக்கற்பாலது[72]

என்று முடிக்கின்றார்.

இன்றைய இந்துமாக் கடலில் மூழ்கிப்போன நாடுகளாக 49 நாடுகளை, அடியார்க்கு நல்லார் குறிக்கின்றார்.[73] சிலப்பதிகாரம்,

வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதொறும் ஊழிதொறும் உலகம் காக்க
அடியில் தன்னளவு அரசர்க் குணர்த்தி
வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்றிசை ஆண்ட தென்னவன் வாழி[74]

72. அலெக்சாந்தர் கோந்த்ரதோவ், மாக்கடல் மர்மங்கள், ப. 69.
73. சிலம்பு. 11 அடியார்க்கு நல்லார் உரை (15—22)
74. சிலம்பு. 11 : 15—22.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று அலெக்சாந்தர் கோந்த்ரதோவின் கருத்தை அரண் செய்யும். இன்றைக்கு இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் இருக்கும் 'காந்தாரம்' தென்தமிழ் நாட்டில் இருந்து கடலில் மூழ்கிப்போன தமிழர்களின் நாடாகிய 'காந்தாரத்தின்' நினைவாக இருக்கலாம் என்பதை மணிமேகலையால் உணர முடிகிறது.

'நாவலந்தீவில் இருக்கும் பெருமைக்குரியதும் மிகுந்த பரப்பளவு உடையதுமாகிய நாடு காந்தாரம் ஆகும். அதன் அரசன் அத்திபதி. அத்திபதியின் மைத்துனனும் துறவியுமாகிய பிரமதருமன் அத்திபதியிடம் வந்து, இன்னும் ஏழு நாட்களில் மிகப் பெரிய பூகம்பம் ஒன்று ஏற்பட உள்ளது. எனவே நீயும் உன் நாட்டு மக்களும் இந்நாட்டை விட்டு வடக்கு நோக்கிச் செல்லுங்கள் என்று அறிவுறுத்தினான். அதன்படி அத்திபதியும் பெருஞ்சேனையுடனும், மக்கள் தொகுதியுடனும் வடக்கே அவந்தி நோக்கிப் புறப்பட்டான். பிரமதருமன் சொன்னதுபோல ஏழாம் நாளில் கடுமையானதோர் நிலநடுக்கம் தோன்றிக் காந்தாரம், 400 காவதப் பரப்பளவு உள்ள நாகநாடு முதலாகிய பல நாடுகளை அழித்துவிட்டது.' இதனை,

காந்தார மென்னுங் கழிபெரு நாட்டுப்
பூருவ தேயம் பொறைகெட வாழும்
அத்தி பதியெனும் அரசாள் வேந்தன்
மைத்துன னாகிய பிரம தருமன்
ஆங்கவன் தன்பால் அணைந்தறன் உரைப்போய்
தீங்கனி நாவல் ஓங்குமித் தீவிடை
இன்றேழ் நாளில் இருநில மாக்கள்
நின்று நடுக்கெய்த நீள்நில வேந்தே
பூமி நடுக்குறூஉம் போழ்தத்து இந்நகர்
நாக நன்னாட்டு நானூறு யோசனை
வியன்பா தலத்து வீழ்ந்து கேடெய்தும்
... ...
இடவய மென்னும் இப்பதி நீங்கி
வடவயின் அவந்தி மாநகர்ச் செல்வோன்[75]

என்று குறிக்கின்றார் சாத்தனார்.

எனவே தமிழர்களின் தாயகம் நாவலந்திவு என்பதும், இத்தீவு கடல்கோள், நிலநடுக்கம் முதலியவற்றால் அழிவெய்தியது என்பதும், இவ் அழிவில் எஞ்சிய மக்கள் வடக்கு நோக்கிச் சென்றனர் என்பதும் புலனாகின்றன.

---

75. மணி. 9 : 12—23.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கியங்கள் கூறும் இவ் இடப்பெயர்ச்சி (தமிழர்களின் வடதிசைப் பயணம்) அறிவியல் கண்டுபிடிப்புகளால் மெய்ப்பிக்கப் படுகிறது.

காந்தாரமும், நானூறுகாவத நாகநாடும் நிலநடுக்கத்தால் சிதைந்தது போன்றே கண்ணனின் துவரை நகரும் நிலநடுக்கத்தால் சிதைந்துள்ளது.

> இதனை மெய்ப்பித்தவர்கள் புதைபொருள் ஆய்வாளர் அல்லர்; டி. ரேக்ஸ் என்னும் அமெரிக்க ஆராய்ச்சியாளர் தலைமையில் இயங்கிய நீரியல்—புவியியல் வல்லுநர் குழுவே மெய்ப்பித்தது. மொகஞ்சதாரோவிற்குத் தெற்கே 140 கிலோமீட்டர் தொலைவு தூரத்தில் பூதாகாரமான நிலநடுக்கத்தின் மையம் காணப்படுகிறது. நிலநடுக்கமே சிந்துச் சமவெளியின் ஒரு பகுதி சுவடு தெரியாமல் மறையக் காரணம் என்று இக்குழு முடிவு செய்துள்ளது.[76]

என்று தம் நூலில் மேற்கோள் காட்டுவார் கோந்த்ரதோவ். கண்ணன் இறந்த ஏழாம் நாள் துவரை நகர் அழிந்தது என்ற மரபு வழிச் செய்தியை, இந்நில நடுக்கத்தோடும், மணிமேகலையில் அத்திபதி மன்னனுக்குரிய காந்தாரம்—நாகநாடு முதலியவற்றை அழித்த நிலநடுக்கத்தோடும் ஒப்பிட்டுப் பார்த்தால், அத்திபதி மன்னனின் வடதிசைப் பயணம்போல அகத்தியரின் தென்திசைப் பயணமும் அமைந்திருக்க வேண்டும் என்பது உறுதிப்படுகின்றது.

அகத்தியர் தமிழ் ஆய்ந்தவர். அகத்தியரோடு தமிழ் ஆய்ந்த வர்களுள் துவரைக்கோமானும் ஒருவன். துவரை என்னும் துவராபதியே கண்ணனின் தலைநகர். கண்ணன் ஆரியர் தலைவ னாகிய இந்திரனை வென்றான். அதன் அடையாளமாக இந்திரனின் ஆரத்தைக் கண்ணன் கவர்ந்தான். அவ்வாறு கவரப் பட்ட ஆரம் பாண்டியர்களிடம் இருந்தது. (கி. பி. 11 ஆம் நூற்றாண்டு வரை பாண்டியர்களால் பேணப்பட்டு வந்த இவ் இந்திரன் ஆரத்தையே முதலாம் இராசேந்திர சோழன் கவர முயன்றான்.) ஆரிய அசுரப் போராட்டத்தில் அசுரர்களுக்கு வெற்றி தேடிய கண்ணன் (திருமால்) தமிழர்கட்குரிய முல்லைநிலக் கடவுள். அசுரர்களுக்குரிய நகரமாகக் குறிக்கப்பெறும் ஆரப்பா நகரில் காணப்படும் (புதைபொருள் ஆய்வில் கிட்டிய) எழுத்து வடிவம் இன்றைய தமிழ்மொழியோடு மட்டுமே உறவு கொண்ட தாக உள்ளது. இதனை,

---

76. அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ், மாக்கடல் மர்மங்கள் பக், 99-100

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> ஆரப்பா மொழியில் சொற்கள் மற்றும் பதச்சேர்க்கைகள் பலவற்றின் அர்த்தத்தை, நமது சகாப்தத்தின் தொடக்கத்தைச் சேர்ந்த பண்டைத் தமிழ் நூல்களிலிருந்து கிட்டும் மொழியியல் ரீதியிலான சில விஷயங்களோடு ஒப்பிடுவதன் மூலம் தெளிவுபடுத்த முடியும். உதாரணமாக பண்டைய சிந்து மொழியில் 'சிவப்பு நட்சத்திரம்' என்று பொருள்படும் பதச்சேர்க்கையை, நமது சகாப்தத்தின் தொடக்கத்தைச் சேர்ந்த பண்டைத் தமிழ் நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள அதே அர்த்தபாவங்களோடு, செவ்வாய் கிரகத்தையும், அல்கோர் நட்சத்திரத்தையும் நட்சத்திரக் கூட்டங்களில் ஒன்றையும் குறிக்கப் பயன்படுத்த முடியும்.

என்று ஒய். கினோரோஜோவ், எம். அபெல்தில் ஆகிய உருசிய நாட்டு அறிஞர்கள் எழுதிய 'சிந்துவெளி நாகரிக ஆராய்ச்சியில் ஒரு புதிய கட்டம்[77]' எனும் கட்டுரை வற்புறுத்தும்.

எனவே அசுரர்கள், தொல்லிந்தியர்களாகிய தமிழர்களே என்பது தெளிவாகின்றது. ஆரியர்களால் தசுயுக்கள் என்றும், தாசர்கள் என்றும் அழைக்கப்பட்டவர்களும் இவர்களே. தமிழர்களின் கோட்பாடாக விளங்கும் உலகாய்தத்தை, அசுரர்களை அழிப்பதற்குப் பிருகற்பதி கற்பித்தார் எனக் கூறுவது இம்மெய்யியலுக்கு வேதவழிப்பட்ட தொடர்பை வற்புறுத்தப் புனையப்பட்டது ஆகும்.

தமிழும் தந்திரமும்

மந்திரம், எந்திரம், அய்ந்திரம் ஆகிய சொற்களைப் போன்றே, 'தந்திரம்' என்பதும் தமிழ்ச் சொல்லே ஆகும். தன் + திரம் = தந்திரம் (தன்றிரம்) என்றாகும். இதன் பொருள் தன் இயல்பு, தன் வலிமை, தன் திரட்சி என்பன. தன் என்ற சொல் முதல் நீண்டு 'தான்', 'யான்' என 'உடம்பு' என்ற பொருளில் வழங்கும்.

> வள்ளுவர் குறளுக்குப் பரிமேலழகர் உரைவரைகையில், தான் அல்லாத உடம்பை யான் என்றும், தன்னோடு இயைபு இல்லாத பொருளை எனது என்றும் கருதி அவற்றின்கண் பற்றுச் செய்தற்கு ஏதுவாகிய........[78]

77. சோவியத்நாடு ஏப். 1985 பக். 31
78. குறள் 346

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனப் பொருள் கூறுதல் மேற்கருத்தை அரண்செய்யும். எனவே 'தந்திரம்' என்பது உடலியல்—உடல் பற்றிய அறிவியல் என விரிந்து பொருள்தரும். வடமொழி மரபில் இதனைத் 'தந்திரா' என்றும் 'தாந்திரீகம்' என்றும் அழைப்பர்.

ஆன்மா, மேலுலகம் பற்றிய கருதுகோள்களை மறுத்து இம்மை வாழ்வை வற்புறுத்தியவர்கள், இம்மைப் பயனை நுகர்தற்குரிய கருவியாக மனித உடம்பைக் கருதினர். மனித உடம்பை மையமாகக் கொண்டு வளர்ந்த கோட்பாட்டைத் 'தேகவாதம்' என வழங்கினர். உலகாய்தத்துடன் சேர்த்தே எண்ணப்பட்ட தேகவாதம், அசுரர்களின் கோட்பாடாகவும் குறிக்கப்பட்டுள்ளது.

> தமிழில் உடலுக்கு 'மெய்' எனும் பெயர் உண்டு. இது மனங்கொளத்தக்கது. நிலம், நீர், நெருப்பு, காற்று எனும் பூதப்பொருட்களைப் போலவே உடலும் ஒரு மெய்யான பொருள் எனும் கோட்பாட்டினை வலியுறுத்தவே உடலுக்கு மெய் எனப் பெயரிட்டனர். வைதிக மதமும் ஆன்மீக வாதமும் புகுமுன்பு பழங்குடித் தமிழ் மக்களும் இயற்கை வாழ்வே வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்த காலத்தை இயற்கை நெறிக் காலமென்பர். தாந்திரிக தத்துவங்களும் கிரியைகளுமே இக்காலத்திய அறிவுப் பாதையாக விளங்கிற்று. தாந்திரிக இலக்கியங்களில் வைதீக மதச்சார்புக் கொள்கைகள் நுழையவும் அதனடியாகக் 'காயமே பொய்' எனும் குரல் எழவும் அதற்கு எதிரடியாக எழுந்த குரலே உடலுக்கு 'மெய்' எனப் பெயரிட்டது போலும்[79]

என்று தந்திரத்தைத் தமிழ் மரபுக்குரியதாகக் குறிப்பார் தி. கணேசர். தமிழ் மரபில் உண்மைப் பொருள், உறுதிப் பொருள் என்பனவற்றைக் குறிக்க 'மெய்ப்பொருள்' என்று வழங்கியதும் இங்கே மனங்கொளத்தக்கது.

> மேலும் தாந்திரிகவாதிகள் உயிர் என்பதைத் தனியொரு பொருளாகவோ உடம்பை வந்து அடையும் அல்லது உடம்பைவிட்டு நீங்கி இன்னொரு உடலை அடையும் தெய்வீக அம்சமாகவோ கருதவில்லை. உடலின் கூறுகள் தொழிற்பட மறுத்தவுடன் மனிதன் வாழ்க்கை முடிவடைகின்றது. 'உயிரும் உடலும் ஒன்றே. உடம்பில்லாமல்

---

79. தி. கணேசர், மானுடத் தத்துவமும் தாந்திரிகமும், பக்: 61—62.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> உயிரில்லை. இரண்டும் தனித்தனியாக இயங்க முடியாது. ஆகவே உடலைப் பேணுவதே உயிரைப் பேணுவதாகும்[80]

என்று கூறி, இதற்கு ஆதாரமாகத் திருமூலரின்,

> உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
> திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
> உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
> உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே![81]

என்ற பாடலையும் மேற்கோள் காட்டுவார்.

தேகவாதத்திற்கும் தந்திரத்திற்கும் உள்ள தொடர்பினை சட்டோபாத்தியாயா,

> பிரபஞ்சத்தின் ஒரு கூறாக அதாவது முழுமை பெற்ற பிரபஞ்சத்தின் நுணுகிய வடிவாக மனித உடல் அமைந்துள்ளது. எனவே தந்திரம் என்பது தேகவாதமே[82]

என்று விளக்குகின்றார்.

கடவுள் மறுப்பையும் வேத மறுப்பையும் கொண்ட தொன்மைக்காலப் பொருள் முதலியல் சிந்தனையான இத் தந்திரம், தொல்குடி மக்களின் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. மனித இனப் பெருக்கத்திற்குக் காரணமான ஆண்—பெண் சேர்க்கையைப் போன்றே இவ்வண்டத்தின் தோற்றத்திற்கும் ஏதேனும் காரணம் இருக்கவேண்டும் என நினைத்தனர். அதன் அடிப்படையில் ஆண்மை (புருடன்) பெண்மை (பிராகிருதி)யுடன் இணைவதால் அண்டம் தோற்றம் கொள்வதாகக் கருதினர். இவ்வாண்மையைச் சிவன் என்றும், பெண்மையைச் சத்தி என்றும் சொல்லும் மரபு பின்னாளில் உருவாயிற்று.

பிராகிருதி என்பது பொருளியல் குறியீடாக மட்டும் இல்லாது பெண்மைக் கோட்பாடாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியவளாகப் பெண் கருதப்பட்டாள்,

80. தி. கணேசர், மானுடத் தத்துவமும் தாந்திரிகமும், ப. 67.

81. மே. நூ., ப. 61.

82. D. Chattopadhyaya, Lokayata, p. 336.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காணப்பா பூசைசெய்யும் முறையைக் கேளாய்
கைம்முறையாய்ச் சுவடி வைத்துப் பூசை செய்வார்
பூணப்பா சிலபேர்தாம் தீபம வைத்துப்
புகழாகப் பூசைசெய்வார் பெண்ணை வைத்தும்[83]

என்ற சட்டைமுனி சித்தரின் பாடல், பெண் வழிபாட்டின் தன்மையை உணர்த்தும்,

> சத்தி வழிபாடே பிறவகைக் கடவுள் வழிபாடுகள் அனைத்தின் முன்னோடியாகும். பேய் வழிபாட்டிலிருந்து எழுந்த வளர்ச்சியின் விளைவே சத்தி வழிபாடு எனலாம். அஃது, அன்று விளங்கிய பேய் மகளிரோடும் உறவுடையது; பெண்ணுரிமைச் சமுதாயத்திற்குரியது. கொற்றவை வழிபாடும் சத்தி வழிபாட்டுடன் மயங்கி நிற்கின்றது; அல்லது கொற்றவை வழிபாடு சத்தி வழிபாட்டின் முன்னோடி நிலை எனலாம். சாங்கியக் கோட்பாடும்கூட அக்கொற்றவையின் ஆற்றல்களைப் பற்றிய கருத்துக்களை அடியொற்றி எழுந்த ஓர் இயற்கைக் கோட்பாடே[84]

என்று பெண் வழிபாடே கொற்றவை வழிபாடாக—சத்தி வழிபாடாக வளர்ந்தமையை விளக்குவார் குணா.

இந்தச் சத்தி வழிபாடு வலக்கை வழக்கென்றும் இடக்கை வழக்கென்றும் இரண்டு வகைப்படும். இடக்கை வழக்கே சிறப்புக்குரியதாகக் கருதப்பட்டது. அதுவே தந்திரக் கோட்பாடென ஏற்கப்பட்டது. அது மந்திரம், எந்திரம், தந்திரம் எனும் மூன்றைப் பற்றியும் விளக்கும்.

மந்திரம், மனத்தின் வலிமை, சொல்லின் ஆற்றல் இவற்றை உணர்த்தும்.

> நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப[85]

என்பார் தொல்காப்பியர்.

---

83. சித்தர் பாடல்கள், சட்டை முனி ஞானம், பாடல் 1.

84. குணா, தமிழர் மெய்யியல், பக். 59—60.

85. தொல். 1434.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எந்திரம் என்பது இயக்கத்தைக் குறிக்கும். எந்துதல், எத்துதல், எம்புதல், எழுதல் ஆகிய சொற்கள் உயர்தல், உயர்த்துதல், தூண்டுதல் ஆகிய பொருள்களில் வழங்கும்.

மனித உடலில் அமைந்துள்ள உள்ளார்ந்த ஆற்றல்களை மேல் நோக்கி இயக்கவும், அவ்வியக்கத்தை உணர்ந்து கொள்ளவும், அந்த ஆற்றல்களைக் கைக்கொள்ளவும் இந்த எந்திரங்கள் துணை புரிந்தன என நம்பப்பட்டது. அத்துடன் வளிநிலை (பிரணாயாமம்) என்னும் 'மூச்சுப் பயிற்சி' இத்தந்திரக் கோட்பாட்டில் முதன்மையான இடத்தைப் பெறும்.

பெண் வழிபாடு பொருள் முதலியலின் தொடக்கம் என்றால், மூச்சுப் பயிற்சி சாங்கிய யோகங்களின் அடிப்படை எனலாம். மூச்சுப் பயிற்சியின் மூலம் யோகநிலையைக் கைக்கொண்டவர்கள் பெண் இன்பம் துய்த்தாலும் யோகிகளாகவே மதிக்கப்பட்டனர்.

மனத்தகத்து அழுக்கறாத மவுன ஞானயோகிகள்
வனத்தகத்து இருக்கினும் மனத்தகத்து அழுக்கறார்
மனத்தகத்து அழுக்கறுத்த மவுனஞான யோகிகள்
முலைத்தடத்து இருக்கினும் பிறப்பறுத்து இருப்பரே[86]

என்பார் சிவவாக்கியார். இவ்வாறு உடம்பை அடிப்படையாகக் கொண்ட 'தந்திரம்' தமிழ் இலக்கியத்தில் தனித்த செல்வாக்கைப் பெற்று வளர்ந்துள்ளது. திருமூலரின் திருமந்திரம், சித்தர்களின் பாடல் தொகுதி ஆகியவற்றுள் தந்திரத்தின் பல்வேறு கூறுகளையும் விரிவாகக் காணலாம். தொல்காப்பியம், தொகை நூல்கள், சிலப்பதிகாரம் ஆகியவற்றுள் தந்திரத்தின் தொடக்கநிலைக் கூறுகளை—இனக்குழு மக்களின் பண்பாட்டுத் தொடர்பாக—வழிபாட்டு முறையாகக் காணலாம்.

இந்திய மெய்யியல் வரலாற்றில் தந்திரம் மிகவும் தொன்மையானது. இந்தியாவின் அனைத்து மதங்களாலும் தழுவப்பட்டுள்ள சிறப்பினைப் பெற்றது. தந்திரத்தில் பின்னாளில் அருவெறுக்கத்தக்க பழக்கங்கள், வழிபாட்டு முறைகள் ஆகியன நுழைந்தாலும் தமிழிலக்கியங்கள் அதன் தூய்மை கெடாமல் பாதுகாத்து வந்துள்ளன.

பெண் வழிச் சமூகத்தில் தோன்றிய இவ்வழிபாடு பெரும்பாலும் வேளாண்மையை ஒட்டி வளர்ந்ததாகச் சட்டோபாத்தியாயா கூறுவார்.

86. சித்தர் பாடல்கள், சிவவாக்கியார், அறிவுநிலை 182.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> தேவர்களும் தேவிகளும் மனித உருவில் மனித சிந்தனையால் படைக்கப்பட்டவர்களே. ஆண் பெண் பாலரின் தராதர உயர்வு தாழ்வுகள் மாறின. வேட்டை, ஆடுமாடு வளர்த்தல் ஆகிய தொழில்களை அடிப்படையாகக் கொண்ட சமுதாயங்களில் ஆண் தலைமை இருந்தது. இச்சமுதாயங்களில் மக்களால் வணங்கப்பட்ட தெய்வங்கள் ஆண்களாகவே இருந்தன. தொடக்க கால வேளாண்மைச் சமுதாயங்களில் பெண் தலைமை இருந்ததால் அச்சமுதாயங்களில் பெண் தெய்வங்களே ஏற்றம் பெற்றன.[87]

என்பது அவர் தரும் விளக்கம்.

ஆண் தெய்வ வழிபாடு வேட்டுவச் சமூகத்திற்கு உரியதென்ற சட்டோபாத்தியாயாவின் கூற்றுக்கு முரணான நிலை தமிழ்ச் சமூகத்தில் இருந்ததைத் தமிழ் இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன. சமூகத்தின் வேட்டுவ நிலையிலும் கொற்றவை வழிபாடாகிய பெண் தெய்வ வழிபாடு தொடர்ந்து வந்திருக்கின்றது.

வேட்டுவர்களின் தெய்வமாகிய கொற்றவை அரசுகள் தோற்றம் கொண்டபோது அரசர்க்குரிய வெற்றித் தெய்வமாகவும் வணங்கப்பட்டது.

> மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
> கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே[88]

என்று தொல்காப்பியம் கூறும்.

அகத்திணையுள் குறிஞ்சி, புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய செய்திகளை உள்ளடக்கியது. இத் திணைக்குரிய தெய்வம் சேயோனாகிய முருகன். ஆனால் புறத்திணையுள் கொற்றவை வழிபாடு வெட்சிக்குரியதாகச் சொல்லப்படுகிறது. வெட்சி, குறிஞ்சித் திணைக்குப் புறனாக உள்ள புறத்திணை ஆகும்.

குறிஞ்சி நிலமும், முருகனும் அகத்திணைக்குரிய முதன்மை இடத்தைப் பெறுவதற்கு முன்னர், அந்நிலத்திற்குரிய தெய்வமாகக் கொற்றவை வணங்கப்பட்டிருக்க வேண்டும். வேட்டையாடு தலைத் தொழிலாக உடைய அச்சமூகச் சூழல், அரசுகளின் தோற்றத்திற்குப் பின்னர் படையெடுப்பின் அடையாளமாக—ஆநிரை கவர்தலாக மாற்றம் கொள்கிறது.

---

87 நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும் மேற்கோள், பக். 127-128.

88. தொல். புறத்திணையியல் 62.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே ஆநிரைகளைக் கவரச் செல்லும் வீரர்கள் தமக்கு வெற்றி வேண்டிக் கொற்றவையை வணங்கிச் செல்வர். இங்கே கொற்றவை வணக்கம் வெட்சிக்குரியதாக—புறத்திணையுள் முதல் திணைக்குரியதாகக் குறிக்கப்பட்டுள்ள தன்மை தமிழர்களின் தாய்த் தெய்வ வழிபாட்டின் தொன்மையை உணர்த்தும். கொற்றவை வணக்கத்திற்குப் பின்னரே சேயோன், மாயோன், வேந்தன், வருணன் என்னும் நிலத் தெய்வங்கள் தோற்றம் கொள்கின்றன. இவ் வளர்ச்சிப் போக்கிற்கான காரணம் ஆராயத்தகும்.

> ஆண் பெண் உயர்வு தாழ்வுகளுக்குக் காரணம் பொருளாதார வாழ்க்கையின் வளர்ச்சியே. வேட்டைக்கு (ஈட்டியைப் பயன்படுத்துதல்) முற்கால சமுதாய நிலையில் தாயுரிமை இருந்தது. வேட்டை வளர்ச்சி பெற்றபோது ஆண்களுக்குச் சமூகத்தில் உயர்வு ஏற்பட்டது.[89]

என்பார் சட்டோபாத்தியாயா.

எனவே மனித நாகரிகத்தின் தொடக்கநிலையான வேட்டுவ நிலையில் சமூகத்தின் தலைமை பெண்ணிடம் இருந்தமையும், அதன் பின்னரே ஆணின் தலைமைக்கு மாற்றம் ஏற்பட்டமையும் புரிந்துகொள்ள முடிகிறது.

கொற்றவை வழிபாடு

சிலப்பதிகார வேட்டுவ வரியில் கொற்றவை வழிபாடு, பாலை நிலத்திற்குரிய வேடுவர்களின் வாழ்வியல் கோட்பாடாகச் சொல்லப்பட்டுள்ளது. அதன் விளக்கமும் விரிவும், பின்னாளில் வளர்ச்சி பெற்ற தந்திர வழிபாட்டின் அனைத்துக் கூறுகளையும் உள்ளடக்கியதாக உள்ளது. அதன் சுருக்கமாவது:

> அம்பையும் வில்லையும் ஏந்திய வலிய கைகளை உடைய மறவர்களின் குடியில் தோன்றியவள் சாலினி. இவள் தெய்வமேறி ஆடுபவள். ஆதலால் தேவராட்டி எனவும் மதிக்கப்பட்டாள்.
>
> இவள் ஒருநாள் வேட்டுவர்களின் (மறவர்களின்) மன்றத்தில் தெய்வமேறி ஆடுகின்றாள். அவ்வாட்டத்தில் மறவர்கள் தம் தொழிலை மறந்தனர்; மறத்தொழில் மறந்து அறத்தொழிலாளர் போல அடங்கினர். இந்நிலையில் 'கலையமர் செல்விக்குரிய கடன்களைச் செலுத்தாவிட்டால், நுமது வில்லிற்குரிய வெற்றியை

89. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும் மேற்கோள், ப. 126.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவள் தரமாட்டாள்; மறவர்களே நீங்கள் கள்ளுண்டு களிக்கும் வாழ்க்கையை விரும்புவீர்களானால் கொற்றவைக்கு வேண்டிய நேர்த்திக் கடனைச் செலுத்தக் கடவீர்' என்று கூறி அமர்கிறாள். உடனே வேடுவர் கூடி, சாலினியைக் கொற்றவைபோல ஒப்பனை செய்கின்றனர்.

பொன்னால் செய்ததும், பாம்பு வடிவம் கொண்டதுமாகிய நாணினால் அவள் கூந்தலைச் சடையாகப் பின்னினர். காட்டுப் பன்றியின் கொம்பினை இளைய நிலாவெனச் சூடினர். வலிமை மிக்க புலியைக் கொன்று எடுத்த புலிப்பல்லினால் ஆகிய தாலியைக் கழுத்தில் அணிவித்தனர். கோடுகளும் புள்ளிகளும் கலந்த மான் தோலினை ஆடையாக அணிவித்தனர். வயிரவில்லை வளைத்து அவள் கையில் கொடுத்து கொம்புகளுடைய மானின்மீது அவளை அமர்த்தினர்.

அவளுக்குரிய பலிப்பொருள்களாகிய மதனப்பாவை முதலியனவும், கிளி, காட்டுக்கோழி, மயில், கிழங்கு போன்றவற்றையும் படைத்தனர்.

மறக்குடிப் பெண்கள் எள்ளுருண்டை, ஊன்சோறு பூ, புகை கொண்டு அவளைச் சூழ்ந்து வந்தனர். இவ்வாறு அழைத்து வரப்பட்ட சாலினி கொற்றவைக்குரிய பலி பீடத்தைத் தொழுது, கலைப்பரியில் ஊர்ந்து வருபவளாகிய கொற்றவையை வணங்கி, அவளுக்குரிய போற்றிப் பாடல்களைப் பாடினாள்.

இந்நிலையில் கண்ணகி, கோவலன், கவுந்தி அடிகள் இந்த வழிபாட்டைக் காணுகின்றனர். சாலினி தெய்வமேறிக் கண்ணகியைப் பாராட்டுகின்றாள். இங்குக் கொற்றவைக்குரிய பெயர்களாக அமரி, குமரி, கௌரி, சூலி, நீலி என்பவை சுட்டப்படுகின்றன.

கொற்றவையின் தொழில்களும், தோற்றங்களும் (சிவனுக்குரிய தோற்றங்கள், தொழில்கள்) சொல்லப்படுகின்றன, கொற்றவையின் முன்றிலில் பல்வேறு மரங்கள் செறிந்துள்ளன. செறிந்த மரங்களின் பூக்கள் மன்றம் முழுதிலும் சொரிந்து கிடக்கின்றன. அங்குச் சென்றதும் சாலினியை முன்றிலில் அமர்த்தி அவளைப் புகழ்ந்து பாடிப் பல்வேறு சடங்குகளையும் செய்கின்றனர்.[90]

90. சிலப்பதிகாரம் வேட்டுவ வரி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்றவிப்
பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ!
பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த
விற்றொழில் வேடர் குலனே குலனும்

அய்யை திருவின் அணிகொண்டு நின்றவிப்
பையர வல்குல் தவமென்னை கொல்லோ
பையர வல்குல் பிறந்த குடிப்பிறந்த
எய்வில் எயினர் குலனே குலனும்

பாய்கலைப் பாவை அணிகொண்டு நின்றவிவ்
ஆய்தொடி நல்லாள் தவமென்னை கொல்லோ
ஆய்தொடி நல்லாள் பிறந்த குடிப்பிறந்த
வேய்வில் எயினர் குலனே குலனும்[91]

என்றெல்லாம் பாடுகின்றனர். இவ்வழிபாட்டில் கொற்றவை மும்மூர்த்திகளாலும் வணங்கப்படுபவளாகவும், மங்கை உருவில் மறைகள் ஏத்த நிற்பவளாகவும் புனையப்பட்டுள்ளாள். மறவர்குல ஆணும் பெண்ணும் கூடியுள்ளனர். சாலினி என்ற பெண்ணைக் கொற்றவையாக ஒப்பனை செய்துள்ளனர். பூவும் புகையும் விரையும் ஏந்திப் பெண்கள் வருகின்றனர்.

அய்யையாகிய (தலைவி) கொற்றவையின் அணிகளைக் கொண்டு நிற்பவள். இவள் பாம்பின் படம் போன்ற அல்குலை (பெண்குறி) உடையவள். இத்தகைய அல்குலை உடையாள் பிறந்த குடியே இந்த எயினர்கள் பிறந்ததும் ஆகும். இரண்டாவதாகக் காட்டப்பட்ட பாடலில், கொற்றவையின் பெயரோ செயலோ குறிக்கப்படவில்லை. மாறாக அவளது பெண்குறியை உணர்த்தும் ஆகுபெயரால் அவள் சுட்டப்படுகின்றாள். அத்துடன் அமையாது அத்தகைய அல்குலை உடையாளின் குடியே எயினர் பிறந்த குடியாகும் என்றும் அவள் பாராட்டப் பெறுகிறாள்.

மேற்கண்ட இப்பாடல் நிகழ்ச்சியோடு தந்திர வழிபாட்டின் நடைமுறையை விளக்கும் ஒரு நிகழ்ச்சியை ஒப்பிட்டால் சில உண்மைகள் விளங்கும்.

'பிளிட்ஸ்' (Blitz) பத்திரிகையின் செய்தியாளர் கொலாபவாலா என்பவர். இவர் எழுதிய 'தந்திரா' என்னும் நூலில் தாம் நேரில் கண்ட ஒரு தந்திர வழிபாட்டு நிகழ்ச்சியை விளக்கியுள்ளார். இதன் பெயர் 'யோனி பூசா' என்பதாகும்.

91. சிலப்பதிகாரம் வேட்டுவ வரி, பாடல்கள் 1, 2, 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பூசைக்கு விக்கிரகங்களோ, குறியீடுகளோ பயன்படுத்தப்படவில்லை. மெய்யான உயிருள்ள யோனியே வணங்கப்பட்டது. இதற்குரியவளான பதினாறு வயதுப் பெண் நிர்வாணமாக மேடையில் அமர்த்தப்பட்டாள். பலவித வாசனைத் திரவியங்கள் அவளுடலில் பூசப்பட்டன. ஆண் பக்தர்கள் அவளைச் சுற்றி இருந்தனர். நிர்வாணப் பெண்கள் பலர் பாதச் சலங்கைகள் ஒலிக்க ஆடினர். இவர்களின் குரு அப்பெண்ணின் நெற்றிக்குக் குங்குமத் திலகமிட்டு அதிலிருந்து யோனி வரைக்கும் குங்குமத்தால் நேர்கோடிட்டு, குண்டலினிசக்தி ஏறும் பாதையைக் காட்டினார். மந்திர உச்சாடனங்களுடன் பூசை நடாத்திய குரு மெதுவாக நிலத்தில் விழுந்து படுத்து யோனியைப் பயபக்தியுடன் முத்தமிட்டான். இதைத் தொடர்ந்து சகலரும் இன்பக் கேளிக்கைகளில் ஈடுபட்டனர். இவ்வாறு பலவகையான பூசைகளைத் தாந்திரிகவாதிகள் இன்றும் கையாளுகின்றனர்.[92]

இந் நிகழ்ச்சியை வேட்டுவ வரியில் குறிப்பாக உணர வைத்துள்ளார் இளங்கோ. பெண்களின் அல்குலைப் பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்களுள் வெளிப்படையாக உள்ளன. ஆயினும் ஒரு இனமரபு தோற்றம் கொள்வதற்கான பெருமைக்குரியதாக பெண்ணின் அல்குலைச் சொல்லும் மரபு இடம் பெறவில்லை. இங்கே இளங்கோ அடிகள் அவ்வாறு சாலினியின் அல்குலைப் புகழுவதற்குக் காரணம் இத் தந்திர வழிபாட்டின் மரபினைக் கருதியே எனலாம்.

தந்திரம் வேளாண்மைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றதாக மானிடவியல் அறிஞர்கள் குறிப்பர்.[93] ஆனால் தமிழ் இலக்கியங்களிலும், தொன்மைக் காலக் குகை ஓவியங்களிலும் கிடைக்கும் சான்றுகள் வேட்டைத் தொழிலை அடிப்படையாகக் கொண்டுள்ள ஒரு சமூக அமைப்பின் வழிபாட்டு முறையாக விளங்கியது என்பதை விளக்குகின்றன,

இருப்பினும் தந்திரத்தை வேளாண்மை வழிபாட்டுடன் இணைத்து வணங்கும் வழிபாட்டு மரபு இன்றும் தமிழக நாட்டுப் புறங்களில் தன் சுவடு மாறாவண்ணம் இடம் பெற்றுள்ளது. மக்கள் வாழ்வில் இடம் பெற்றுள்ள இவ் வேளாண்மை வழிபாடு இலக்கிய வடிவம் கொள்ளாமைக்கான காரணம் ஆராயத்தக்கது.

92. தி. கணேசர், மானுடத் தத்துவமும் தாந்திரிகமும் பக். 55—56.

93. குணா, தமிழர் மெய்யியல், ப. 60.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடக்க நிலையில் வேளாண்மையோடு தொடர்பு கொண்டிருந்த தந்திரம் பின்னாளில் அரசனது வெற்றிக்குரிய கொற்றவை வழிபாட்டோடு கலந்துவிட்டது. அரசனது வெற்றி தோல்விகள் மக்களின் வாழ்க்கை முறைகளை நேரிடையாகப் பாதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதாலும் வெற்றிக்குரிய தெய்வமாகக் கொற்றவை வணங்கப்பட்டதாலும் இவ்வழிபாடு புறத்திணைக் குரியதாக ஆக்கப்பட்டிருக்க வேண்டும். வேட்டுவ வரியின் இறுதியில் இளங்கோ அடிகள்,

> பொறையுயர் பொதியிற் பொருப்பன் பிறர்நாட்டுக்
> கட்சியுங் கரந்தையும் பாழ்பட
> வெட்சி சூடுக விறல்வெய் யோனே.[94]

என்று பாடுவதும் குறிக்கத்தக்கது.

லதாசாதனம்

தந்திர செயல்முறைகள் பெண் குறியினை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன. இதனை 'லதாசாதனம்' எனக் குறிப்பர். லதா என்பதற்குக் கொடி என்பது பொருளாகும். மண்ணின் வளத்தைப் பெருக்குவதற்காக நடந்த மாய வித்தைச் சடங்குகளாகப் பெரிதும் இவை அமைந்துள்ளன.

> பெண்ணின் குறியை பூமித் தாய்க்கு வெளிக்காட்டி, பூமியின் வளத்தைப் பெருக்குவதென்பது பழங்குடி மக்கள் மத்தியில் காணப்படுவதொன்று. இதன் நோக்கம் விளைச்சலைப் பெருக்குவதற்குப் பூமியைத் தூண்டுவதாகும்.[95]

நீர் நிலத்துடன் சேர்வதால் உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன. உணவுப் பொருள்களே உயிரும் உடம்பும் வளர்தற்குக் காரணம் ஆகின்றன. இதனை,

> நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
> உயிரும் உடம்பும் படைத்திசி னோரே[96]

என்று குடபுலவியனார் குறிப்பர். இங்கே பயன்படுத்தப்படும் 'புணரியோர்' என்ற சொல் ஆண் பெண் சேர்க்கையையும் குறிப்பது என்பதை நினைவிற்கொள்ளுதல் நலம்.

---

94. சிலப்பதிகாரம் வேட்டுவவரி.
95. தி. கணேசர், மானுடத் தத்துவமும் தாந்திரிகமும் ப. 03.
96. புறம். 18 : 23—24.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழிபாடு—கடவுள் நம்பிக்கை இவற்றின் தொடக்ககாலச் சின்னங்கள் அனைத்தும் வளத்தைக் குறிப்பனவாகவே அமைந்துள்ளன. கதிரவன்—மழை—நிலம் இவை ஆண்—விந்து—பெண் ஆகியனவற்றின் குறியீடுகளாகும். ஆடல் பாடல் போன்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் நிலத்தை வளப்படுத்தவும், அதன் வேட்கையைத் தணிவித்து மழையை வேண்டுதற்காகவுமே நடத்தப்பட்டுள்ளன. தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களும் அணியக்கூடிய தாலியின் அமைப்பும் அதன் நோக்கமும் மேலே கூறப்பட்டுள்ள வழிபாட்டின் குறியீடுகளாக அமைந்துள்ளமை ஆராயத்தக்கது.

இரட்டைத்தாலி



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிந்துவெளி முத்திரை



ஒற்றைத்தாலி



கொற்றவை

வெற்றிக்குரிய தெய்வமாகத் தொல்காப்பியரால் குறிக்கப் பட்ட கொற்றவையைச் சிலப்பதிகாரம் வேடுவர்களுக்குரியவளாகப் புனைகின்றது. இக்கொற்றவையைக் 'காடுகிழாள்' என்றும் 'சூலி, என்றும் இலக்கியங்கள் சுட்டும். சூலாயுதத்தைக் கையிலே ஏந்தியவள் என்ற பொருளைவிட, உயிர்கள் தோன்றுவதற்குக் காரணமாகிய 'சூலை' (கருவை)த் தாங்கியவள் என்று குறிப்பது பொருத்தமாகும். குறுந்தொகைப் பாடல் ஒன்று,

> விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
> கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்
> புள்ளும் ஓராம் விரிச்சியும் நில்லாம்[97]

என்று கொற்றவை வழிபாட்டைக் குறிக்கும்.

கருப்பம் தரிப்பவள், உலக அன்னை என்ற பொருளை உணர்த்தும் வகையில் பெரிய பருத்த வயிற்றினை உடைய பெண் தெய்வ உருவங்கள் பண்டைக்காலப் புதைபொருள் ஆய்வின்மூலம் கிடைத்

97. குறுந். 218.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துள்ளன. சிந்துவெளி நாகரிகத்திலும் பெண் தெய்வ உருவங்கள் பிறந்தமேனியாய்க் கிடைத்துள்ளன. மேலும் தலைகீழாகவும், கால்கள் அகன்றும் உள்ள ஒரு பெண்ணின் பிறப்பு உறுப்பிலிருந்து செடி ஒன்று வளர்ந்துள்ளதாக உள்ள ஒரு முத்திரை இக்கருத்தை அரண் செய்யும். (படம்: சிந்துவெளி முத்திரை, பக்கம்-91)

தமிழகத்தில் வழக்காற்றில் உள்ள பெண் தெய்வங்களைத் தாய் என்ற பொருளை உணர்த்தும் 'ஆய்' அல்லது 'ஆயி' என்ற சொற்களால் அழைப்பர். மாரியம்மன் என்ற பெண் தெய்வத்தை 'மாரியாயி' என்று அழைப்பதும் கொற்றவையை உயிர்களின் அன்னையாகக் கருதிய மரபின் தொடர்ச்சியாகும்.

இவ்வாறு வளப்பத்தை உணர்த்தும் சூலியைப் பின்னர் வேந்தர்களும் வீரர்களும் தம் வெற்றிக்குக் காரணமாகிய கொற்றவையாக (கொற்றம் என்பது அரசை உணர்த்தும். கொற்றவனே என அரசனை விளிப்பதும் வெற்றிக்குரியவன் என்ற பொருளிலே ஆகும்) வழிபடத் தொடங்கியபோது, அவள் தன் கையில் சூலம் என்னும் கருவியை ஏந்தியவளாக உருவகப்படுத்தி இருக்க வேண்டும். இந்த நிலையில்தான், அரசர்கள் போரைத் தொடங்கும் போது கொற்றவையை வணங்கியதாகத் தொல்காப்பியர் குறித்துள்ளார். ஆதலால்தான் புறத்திணையின் முதல் திணையாகிய வெட்சித்திணையில், கொற்றவை வணக்கத்தை,

> மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
> கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே

என முதற்கண் குறிப்பார் தொல்காப்பியர்.

வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்

தொல்காப்பியம் புறத்திணையில் அமைந்துள்ள,

> கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே[98]

என்ற நூற்பா அறிஞர்களிடையே பல்வேறு கருத்து மூரண்பாடுகளை உருவாக்கி உள்ளது.

கொடிநிலை கந்தழி வள்ளி என்று சொல்லப்பட்டதும் குற்றங்கள் நீங்கிய சிறப்பினை உடையனவும் முதலாவ

98. தொல். புறத்திணையியல் 85.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> தாக எண்ணப்பட்டனவுமாகிய இம்மூன்றும் கடவுள் வாழ்த்தோடு பொருந்தி வரும்.

என்பது இதன் வெளிப்படையான பொருளாகும்.

இவற்றுள் 'கொடிநிலை கந்தழி வள்ளி' என்ற குற்றமற்ற சிறப்புக்குரிய 'தலைமை சான்ற மூன்றும்' என்பதில்தான் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன.

கொடிநிலை கந்தழி வள்ளி என்பதற்கு அரி, அயன், அரன் ஆகிய மூவரது கொடியோடு வேந்தனின் கொடியை உவமித்தல் என்ற அய்யனாரிதனாரின் கருத்தின் அடிப்படையில் பொருள் விளக்கம் தருவார் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியரோ, கொடிநிலை என்பதைக் கீழ்த்திசைக் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலமாகிய ஞாயிறு என்றும், கந்தழி என்பது தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் என்றும், வள்ளி என்பது திங்கள் என்றும் பொருள் கண்டார்.[99]

மேற்காட்டிய விளக்கங்கள் அவரவர் காலத்தே செல்வாக்குப் பெற்றிருந்த கருத்துக்களின் அடிப்படையில் உருவானவை.

கொடிநிலை

கொற்றவையையும் அவளது அருளையும் புறத்திணையின் முதல் திணையில் முதல் இடத்தில் வைத்துப் போற்றும் தொல்காப்பியர், வஞ்சித்திணையுள்ளும் 'குன்றாச்சிறப்பின் கொற்றவள்ளை'[100] எனக் கொற்றவை வணக்கத்தைக் குன்றாச்சிறப்பிற் குரியதாகப் போற்றுவதும் கருதத்தக்கது. தொல்காப்பியர் காலத்தில் கொற்றவை வெற்றிக்குரியவளாகக் கருதப்பட்டதால் அவ் வணக்கத்தைக் 'குன்றாச் சிறப்பின்' எனப் போற்றுகிறார்.

'வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்' என்று கொடிநிலை, கந்தழி, வள்ளி இவற்றை அவர் குறிப்பதும், கொற்றவை வழிபாட்டின் பல்வேறு நிலைகளைக் குறிப்பதாகவே கொள்ள முடிகிறது.

சிலம்பில் (வேட்டுவ வரியில்) கொற்றவையின் கோலத்தில் இருந்த சாலினியின் குலம் பெருமைப்படுத்தப்படுகிறது, அவளது

---

99. தொல். புறத்திணையியல் நச். உரை.

100. தொல். புறத்திணையியல் 65 : 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அல்குல்' பெருமைக்குரியதாகப் பேசப்படுகிறது. அவளையே 'அல்குல்' என ஆகுபெயரால் போற்றி வணங்குகின்றனர். ஆதலால் கொற்றவையோடு தொடர்பு கொண்ட வடுநீங்கு சிறப்பின் முதலனவாகிய மூன்றனுள், சத்தி வழிபாட்டின் 'லதாசாதனமாக' அல்குல் அமையக் காணலாம். கொடிநிலை என்ற சொல்லின் மாற்று வடிவமே 'லதா சாதனமாகும்'. தமிழரின் வழிபாடாகிய இக் கொடிநிலையே வடமொழி மரபில் லதா சாதனமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

கந்தழி

கந்தம் என்பதற்குத் தூண் என்பது பொருள்.

> கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்
> பலிகண் மாறிய பாழ்படு பொதியில்[101]

எனப் புறநானூற்றுப் பாடலிலும் கந்தம் என்பது தூண் என்ற பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது என்பதும் அதனைக் கடவுளாக வணங்கினர் என்பதும் குறிக்கப்பட்டுள்ளது.

சிந்துவெளி மக்களை ஆரியர்கள் 'ஆண்குறி வழிபாட்டினர்' என்று இகழ்ந்துள்ளனர்.

> இந்திரனே! ஆண்குறியைத் தெய்வமாகக்கொண்ட இராட்சதர்கள் எங்களைத் துன்புறுத்தாமல் இருக்க வேண்டும். இறைவனே! எங்களை மனித சமூகத்திலிருந்து விலக்காமலிருக்க அருள்புரிய வேண்டும். ஆரியர்களின் பகைவர்களை பிரபுவாகிய இந்திரன் கொன்று விடுவார்[102]

என்ற இருக்குவேத நூற்பா அவ்வழிபாட்டுச் செய்தியைத் தெரிவிக்கும். ஆண்குறி வழிபாட்டினைச் சுவாமி சிவானந்த சரசுவதி சிவபெருமானுக்குரிய இலிங்க வழிபாடாகக் கருதுகின்றார். தொல் பழங்காலத்தில் உலகின் பல்வேறு இடங்களிலும் ஆண்குறி வழிபாடு செழித்திருந்திருக்கின்றது. கிறித்துவக் கோயில்களில் உயர்ந்து நிற்கும் கோபுரங்கள், அவற்றின் உள்வளைவுகள் (ஆர்ச்) அங்கு ஏற்றப்படும் மெழுகுவர்த்திகள் ஆகிய அனைத்தும் ஆண்குறி வழிபாட்டின் குறியீடுகள். சிலுவையும், சுவத்திகாவும்கூட ஆண் பெண் சேர்க்கையின் அடையாள வடிவங்களாகவே வணங்கப்பட்டன. பட்டாச்சார்யா,

---

101. புறம். 52 : 22—23.
102. சுவாமி சிவானந்த சரஸ்வதி, மத விசாரணை ப. 4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> ஆண்குறி வழிபாடு உலகந்தழுவிய ஒன்றாக இருந்தது. வாழ்வின் இயக்கத்திற்கு உந்துவிசையாக அமைந்தது இது. இதன் தொடக்கம் மிகவும் கரடுமுரடாக இருந்திருக்கலாம். ஆனால் இது உண்மையானது; நேர்மையானது. எந்தவிதமான ஆடம்பரமும் இதன் பெருமையைச் சிதைத்துவிடாது[103]

என்று இதன் தன்மைகளை விவரிப்பார். மேலும்,

> தொல்பழங்கால மனிதன் உயர்ந்து நிற்கும் தூண்களை, விட்டங்களை, திரண்டுள்ள பனைமரங்களை எல்லாம் ஆணின் பிறப்பு உறுப்பாக—இயங்கு சக்தியாகக் கண்டு வணங்கினான்[104]

என்ற பெர்ட்ரண்டு ரசல் கருத்தையும் மேற்கோள் காட்டுவார்.

'பனை' ஆண்குறியின் உருவகமாகவும், 'மீன்' பெண்மையின் உருவகமாகவும் கருதப்பட்டுள்ளன. பல்வேறு இனக்குழு மக்கள் தங்களின் அடையாளமாகக் குறியீடு செய்த 'பச்சைகுத்தும் மரபும்' பாலுறவின் குறியீடே ஆகும். இந்த அடிப்படையில் தமிழக வேந்தர்களான சேரர் பனம்பூ மாலையை அணிவதும், சேரர்களைக் குடியமர்த்தினவனாகக் கருதப்படும் பலராமன் (கண்ணனின் அண்ணன்) பனைக்கொடியைக் கொண்டவன் என்பதும், பாண்டியர்களுக்குரிய இலச்சினை மீன் என்பதும் அவர்களின் கடவுளாக மீனாட்சி விளங்கியதும் இங்கே எண்ணத்தக்கவை.

ஆதலால் கொடிநிலையை அடுத்துத் தொல்காப்பியர் குறிப்பிடும் கந்தழி தூண்—கம்பம் என்று வெளிப்படையான பொருளைத் தந்தாலும் அது ஆணின் பிறப்பு உறுப்பின் குறியீடே என்பது

103. ''Phallicism as a cult has been almost a universal one. This is natural. Life paid an awesome regard to the forces of life. The primitive may be crude; but it is also real, honest; so that no sophistry could disregard it.''

—B. Bhattacharya, Saivism and the phallic world, Vol. I, p. 12.

104, Primitive man saw in the pillar, the column, the stately palm tree, a fitting symbol for the male, the active force.

—B. Bhattacharya, Ibid, p. 12.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெளிவு. ஆந்திரப் பேரரசைத் தொடங்கி வைத்தவர்கள் சாதவாகன மரபைச் சார்ந்தோர்; இவர்கள் ஆண்குறி வழிபாட்டினர். இவர்கள் வணங்கிய இக்குறி ''இலிங்கோத்பவர்'' எனப்பட்டது. இவ் இலிங்கம் குடிமல்லம் என்ற ஊரில் ஆய்வாளர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வள்ளி

'வள்' என்பதன் அடியாகப் பிறப்பதே வளம். உலகம் செழிக்கவும் உயிர்கள் தோன்றி வளரவும் ஆண்பெண் சேர்க்கை இன்றியமையாததாகும். அண்டத்தையே ஆண்பெண் சேர்க்கையாகக் காணும் மனிதன், தன் இன வளர்ச்சிக்குக் காரணமாசிய இந்த இணைப்பை—பிறப்பின் தேவையைக் கண்டு வணங்கினான். அண்டங்களின் அடிப்படையில் வளர்ச்சிக்குக் காரணம் மழை என்றால், மனித இன வளர்ச்சியின் அடிப்படையில் இது விந்தாகும். எனவே,

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்[105]

என்ற நூற்பா கொற்றவை வழிபாட்டின் செயல்முறைகள் என்பது தெளிவு.

இத்தகைய வழிபாட்டினை முற்றும் துறந்த துறவிகளே முன்னின்று நடத்தினர். துறவிகள், 'முலைத்தடத்து இருப்பினும் மௌன ஞான யோகி'களாகச் சித்தர்களால் புகழப்பட்டனர்.

புரைதீர் காமம்

அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப[106]

என்ற தொல்காப்பிய நூற்பாவில் உள்ள புரைதீர் காமம் புல்லிய வகையினும் என்ற அடி, மேற்காட்டிய கொற்றவை வழிபாட்டின் இறுதிக் கட்டமாகிய புணர்ச்சி நிலையைச் சுட்டுகிறது எனலாம்.

இத்தகைய 'புரைதீர் காமம்' தூய்மை நிறைந்ததாக குறிக்கப்படுவதால் இதன் தனித்தன்மை விளங்கும். இதன் தொடர்ச்சியாக,

105. தொல். புறத்திணையியல், 85.

106. மே. நூ., 79.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்[107]

என்ற நூற்பா அமைந்துள்ளதும் ஒப்புநோக்கத்தக்கது.

வழிபாட்டின் தேவையும் முதன்மையும் கருதி மக்கள் ஒருங்கு கூடி இத்தகைய சடங்குகளைச் செய்வதும் உண்டு. சிலம்பின் வேட்டுவ வரி இச்சூழ்நிலையை நன்கு விளக்கும். இத்தகைய வழிபாட்டில் பாடலும் ஆடலும் தவிர்க்க முடியாதவை. வழிபாட்டிற்குரிய இளம்பெண்ணைக் கொற்றவையாகப் புனைந்து அக் கொற்றவையின் ஆற்றல்களைப் புகழ்ந்து துடிகளை முழக்கி வெறியாட்டயர்வர். கொற்றவையாக உருவகிக்கும் பெண் பருவம் அடையாதவளாகவும் அதாவது குழந்தைப் பருவத்தினளாகவும் இருக்கலாம் என்பதையே,

குழவி மருங்கினும் கிழவ தாகும்[108]

என்ற நூற்பா உணர்த்துகிறது. கொற்றவை வழிபாட்டில் ஏற்பட்ட வளர்ச்சிப் போக்கினை இந்நூற்பா உணர்த்துகின்றது எனலாம். மேலும்,

வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கினும்
முன்னோர் கூறிய குறிப்பினும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின் றாங்கே

ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்[109]

ஆகிய நூற்பாக்கள் தந்திர வழிபாட்டிற்குரிய கொற்றவை வணக்கத்தை தெளிவுபடுத்துகிறது.

அண்மையில் திண்டுக்கல்லுக்கு அருகில் உள்ள சிறுமலைக் குகையில் தொன்மைக்கால ஓவியம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவ் ஓவியத்தில் இடம் பெற்றுள்ளவை பின்வருமாறு:

தாய்த் தெய்வம்
மீன் முள்ளின் வடிவம் (?)

107. தொல். புறத்திணையியல், 81.
108. மே. நூ., 82.
109. மே. நூ., 80.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கையில் வெட்டரிவாளை ஏந்திய பூசாரி
அவன் முன்பு பலிக்காக காத்திருக்கும் விலங்கு
பூசாரிக்கு அருகே இளம் பூசாரி
பூசாரிகளின் தலைக்குமேல் ஆலவட்டங்கள்
இவற்றுடன் இன்னும் சில விலங்கினங்களும் ஓவியமாக வரையப்பட்டுள்ளன.[110]

இவ்வோவியத்தில் ஆய்வுக்குரிய பகுதி முதலில் குறிப்பிட்டுள்ள பகுதியாகும். தாய்த் தெய்வம், பூசாரி, அவனது மாணவன், பலிக்கான விலங்கு ஆகியவை கொற்றவை வழிபாட்டை அடிப்படையாகக் கொண்டவை. தாய்த் தெய்வத்திற்கும் பூசாரிக்கும் இடையில் வரையப்பட்டுள்ள மீன் முள்ளை ஒத்த வடிவம் அரசர்களின் மீன் இலச்சினையைச் சுட்டுவதாகலாம்.

மறக்குடி மக்கள் கொற்றவைக்குப் பலி கொடுப்பதன் மூலம் தங்களின் வளமான வாழ்வைப் பெறமுயன்றதை வேட்டுவ வரி விளக்குகிறது.

**கலையமர் செல்வி கடனுணின் அல்லது
சிலையமர் வென்றி கொடுப்போ ளல்லள்
மட்டுண் வாழ்க்கை வேண்டுதி ராயின்
கட்டுண் மாக்கள் கடந்தரும் எனவாங்கு**

என்று இவ்வழிபாட்டின் நோக்கத்தை விளக்குவார் இளங்கோவடிகள். எனவே காலத்தால் மிகவும் பழமை வாய்ந்ததாகக் கருதப்படும் இவ் ஓவியம் தொல்குடி மக்களின் பண்பாட்டை விளக்கும் கொற்றவை வழிபாடே என்பது உறுதி.

அரசர்களின் இக்கொற்றவை வழிபாடு, பிற்காலச் சோழர் காலத்திலும் பெருஞ் சிறப்புடன் திகழ்ந்துள்ளது. சோழப் பேரரசிற்குப் புத்துயிர் கொடுத்தவனும், பிற்காலச் சோழப் பேரரசை நிறுவினவனும், 96 விழுப்புண்களைத் தம் மார்பிலே ஏந்திய மாவீரனும் ஆகிய விசயாலயன், தன் வெற்றியின் அடையாளமாக எழுப்பிய கொற்றவைக்கான கோயில் 'நிதம்பசூதனி' என அழைக்கப்பட்டது. நிதம்பசூதனி என்றால் பெரிய பிறப்பு உறுப்பை உடையவள் என்பது பொருள்.

இலங்கைப் படைகள் தமிழகத்திற்குள் புகுந்துவிட்ட நிலையில், இரண்டாம் இராசாதித்தன் கொற்றவைக்கு 27 நாட்கள்

---

110. பேராசிரியர் விஜயவேணுகோபாலிடம் ஆய்வாளர் நேரில் கேட்டறிந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அகோர பூசை' என்னும் தந்திர வழிபாட்டை நடத்தினான். வழிபாடு முடிந்த பின்னரே படையெடுப்பைத் தொடங்கினான் எனக் கல்வெட்டு குறிக்கின்றது.

தொடக்க காலக் கொற்றவை வழிபாடு பிற்காலத் தந்திரத்தோடு இரண்டறக் கலந்துவிட்ட நிலையிலும் அது அரசர்களின் வெற்றியோடு தொடர்பு கொண்டதாகவே இருந்துள்ளது குறிக்கத்தக்கதாகும். பிற்காலச் சோழர் காலத்தில் இப்புதிய வழிபாடு மிகுந்த செல்வாக்கைப் பெற்றுள்ளது என்பதை அக்காலச் சோழர்களின் கல்வெட்டுக்களும் வணங்கிய கொற்றவைச் சிற்பங்களும் தெளிவுபடுத்துகின்றன.

வளமை வழிபாடு

கொற்றவை வழிபாடு அரசர்களின் வாழ்வோடு கலந்ததைப் போலவே அதன் வேறொரு கூறாகிய வேளாண்மை வழிபாடு மக்கள் வாழ்வோடு இணைந்தே வந்துள்ளது. கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற முத்திறக் கூறுகளை உள்ளடக்கிய வேளாண்மைத் தொடர்பான வழிபாடு இன்றளவும் உழவர் குடிமக்களால் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

> தர்மபுரி மாவட்டம் ஜருகு என்ற ஊருக்கு அருகில் செழிப்பு விழா நடைபெறுகிறது. களிமண்ணால் செய்யப்பட்ட ஆண் பெண் உருவங்கள் இரண்டும் தரையில் கிடத்தப்படும். விழா இறுதி நாளன்று இரவு முக்கியமான சடங்கு நடைபெறும். ஒரு கிராமத்தார் களிமண்ணால் ஆண்குறியைச் செய்து வருவர். மற்றொரு கிராமத்தார் பெண் குறியைச் செய்து வருவர். இறுதியாக நடைபெறும் சடங்கில் ஆண்குறியைப் பெண்குறியில் நட்டு வைப்பர். கிடத்தப்பட்டிருக்கும் ஆண்பெண் உருவங்களைப் புணரும்படிச் செய்வர். விழாவின் தொடக்க நாளன்று செய்யப்பட்ட இந்த ஆண் பெண் உருவங்கள்மீது தானியங்களைத் தூவி வைப்பர். களிமண்ணில் ஈரப்பசை இருப்பதால் இறுதி நாளன்று தானியங்கள் முளைவிட்டிருக்கும். களிமண்ணோடு ஒருபிடி பெயர்த்து எடுத்துக்கொண்டு போய்த் தங்கள் தங்கள் விளை நிலங்களில் தூவுவர். இது போன்ற சடங்கு திருச்சி மாவட்டத்தில் கருருக்கு அருகில் உள்ள வேலாயுதம்பாளையத்திலும் நடைபெறுகிறது. ஆண் பெண் பொம்மைப் புணர்ச்சியின்போது பெண் பொம்மை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யின் உறுப்பில் கஞ்சியை ஊற்றுகின்றனர். இக் கஞ்சியைச் 'சுக்கிலம்' என்கின்றனர்.[111]

இத்தகைய வழிபாட்டுமுறை தமிழக மக்களின் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து நிறைந்திருக்கிறது என்பதைப் பல்வேறு சிற்றூர்களிலும் மழைக்காக நடத்தப்படும் சடங்குகளில் இன்றும் காணலாம்.

தந்திரம் என்னும் இம்மெய்யியல் (தமிழர்கள்) திராவிடர்க் குரியது. பெண்வழி வந்த சமூக அமைப்பின் தாய்த் தெய்வ வழிபாடு. நிலத்தைப் பெண்ணாக—மனைவியாக உருவகிக்கும். இம் மரபினை வள்ளுவர்,

> செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
> இல்லாளின் ஊடி விடும்[112]

என்ற குறளில் விளக்குவார். திராவிடச் சிந்தனையின் வெளிப்பாடாகிய இதன் தாக்கம் இருக்குவேதத்திலும் ஊடுருவியுள்ளது.[113]

தந்திரம் தமிழ் இலக்கியத்துள் பெற்றுள்ள இடம் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தமிழ்ச் சமூக வரலாற்றின் பின்புலத்துடன் 'தந்திரம்' பற்றிய புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சிந்துவெளி நாகரிகத்தின் பல்வேறு புதிர்களை ஆய்வாளர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர். இன்னும் முற்றாக அவற்றை வெளிப்படுத்த வேண்டுமாயின் தந்திர இலக்கியங்களே துணையாகும் என்பார் அலெக்சாந்தர் கோந்தரதோவ்.

> தொல்லிந்திய ஓவிய எழுத்திலக்கியங்களைப் படித்துப் பகுத்தாய்வு செய்வதனால் மட்டுமே தொல்லிந்தியர் நாகரிகத்தைப்பற்றி அறிந்துகொள்ள முடியாது; சான்றாதாரமாகப் பயன்படும் தன்மை அவற்றுக்கில்லை.

111. தே. லூர்து, (ப. ஆ.), நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், ப. 191.

112. குறள். 1031.

113. சோதி என் தந்தை, என்னைப் பிறப்பித்தவன். புவியின் நாபி என் பந்துவாகிறது. பரந்த நிலம் என் தாய். உயர்த்தப்பட்ட இரு பாண்டங்களின் நடுவே மூலஸ்தானமான வானம் இருக்கிறது. வானிலே சோதி துகிதாவைக் கருப்படுத்தினான்.—இருக். 1 : 164 : 33.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> ஆனால் தொல்லிந்தியர் பற்றிய புதிர்களை வேறு பல இலக்கியங்களைக் குறிப்பாகத் தந்திர இலக்கியங்களைப் பயில்வதனால் விடுவிக்க முடியும். தந்திரங்களின் குறியீடு களும் சித்திரங்களும் பழங்கற்காலத்தைச் சார்ந்தவை. இவ்விலக்கியங்கள் தொல்லிந்தியக் குருமார்களால் வகைப் படுத்தப்பட்டு இருக்கலாம். தொல்லிந்தியர்கள் வழிபட்ட சிவனும் அவன் தேவியும் தந்திரகர்களின் தெய்வங்கள். தந்திர இலக்கியங்கள் வேதங்களை விடவும் தொன்மை யானவை[114]

என்று தந்திர இலக்கியங்களின் வரலாற்றுச் சிறப்பினை, வரலாற் றிற்கு இன்றியமையாப் பங்கினை விவரிப்பார்.

சீன வேதியியல் (இரசவாதம்) பற்றி நுணுக்கமாக ஆராய்ந்து பேருண்மைகளை வெளிப்படுத்திய பேராசிரியர் நீடாம், இந்திய வேதியியல் ஆராய்ச்சி பற்றிக் குறிப்பிடுகையில் 'இத்துறையில் தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்தால் பெரும் உண்மைகள் வெளிப் படும்'[115] என்று கூறியுள்ளதும் இதன் சிறப்பினை உணர்த்தும்.

அண்டவெளிக் கோட்பாடும் மனித உடலும்

உலகத்தை அய்ந்து பூதங்களின் சேர்க்கையாகச் சொல்லும் உலகாய்தச் சிந்தனை தந்திரத்தின் அடிப்படையில் உருவானது. அண்டங்களின் தோற்றத்திற்குப் பூதங்களே காரணம் என்பதை விளக்குவது பூதவாதமாகும். இதனைத் தந்திரம், 'புருடன்—பிரா கிருதி என்று ஆண் பெண் இணைப்பால் தோன்றியது' என்று கூறும். பிற்காலச் சாங்கியமும் இதனை அடியொற்றியே வளர் கின்றது. பண்டோபாத்தியாயா கூறும் கருத்து இதனை வலி யுறுத்தும்.

> மனித உடலில் உள்ள பொருட்கள் யாவும் பிரபஞ்சத் திலும் உள்ளன. தாந்திரிகத்தின்படி உடலும், பிரபஞ்ச மும் ஒரே தன்மையான பொருட்களைக் கொண்டு ஒரே தத்துவ அடிப்படையில் அமைக்கப்பெற்றதால், இந்த இரண்டு அடிப்படை மெய்மைகளிலும் ஒரே சக்தி ஒரே விதத்தில் தொழிற்பட வேண்டும். ஆகவே உடலிற் பொதிந்துள்ள சக்தியை முழுவதும் வெளிப்படுத்தி, மனித னது கட்டுப்பாட்டுக்குள் இயக்குவித்தால், இயற்கைச்

---

114. அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ், மாக்கடல் மர்மங்கள், ப. 107.
115. தி. கணேசர், மானுடத்துவமும் தாந்திரிகமும், ப. 75.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> சூழலின் சக்தியை விருத்தி செய்து, மனிதக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து மனிதனுக்கு வேண்டிய வகையில் தொழிற்படுத்த முடியும். மனித உடல் போன்ற மிக நுட்பமான பொறியினை ஒருவரும் உருவாக்கிவிட முடியாது. பிரபஞ்சமும் இது போன்ற நுட்பமானதொரு பொறியே. இவை இரண்டிலும் பொதிந்துள்ள சக்திகளுக்கு இடையேயுள்ள தொடர்பும் உறவும் பிரமிக்கத் தக்கவை. இந்த உறவினைப் புரிந்து அதன் அடிப்படையில் செயற்பட்டு அச்சக்திகளை மனித இனத்திற்கு அடிமையாக்குவதே தந்திர சாதனைகள் எனப்படும். இச் சாதனைகளுக்கான அடிப்படைத் தத்துவம் தேகவாதம் அல்லது உடலை வணங்குதல்[116]

மனித உடலிற்கும் பிரபஞ்சத்திற்கும் தொடர்பு உள்ளதாக இவர்கள் அறிந்த அறிவின் பயனே வானியல் ஆராய்ச்சியாக வளர்ந்தது. ஒவ்வொரு மனிதனின் செயல்களுக்கும் அவனோடு தொடர்புள்ள கோள்களின் இயக்கமே காரணம் என நம்பினர். சிந்துவெளியில் வானியலும் கணிதவியலும் உயர்ந்த நிலையில் இருந்தன என்பதை அறிஞர்கள் வெளிப்படுத்தினர். அத்துடன் அந்த வானியலும்—கணிதவியலும் திராவிடர்கட்கே உரியவை என்பதையும் நிலைநாட்டியுள்ளனர்.

தேகவாதம் என்னும் உடலைப்பற்றிய ஆய்வு, உடற்கூறியலாகவும் (Anatomy) உடலியங்கு இயலாகவும், (Physiology) மற்றும் வேதியியல் (Chemistry) மருந்தியல் (Pharmaceutical) ஆகிய அறிவியற் , கலைகள் தோன்றுதற்குக் காரணமாகவும் அமைந்துள்ளது.

தந்திரஇயல் வல்லாரின் மருத்துவப் புலமைபற்றி தி. கணேசர் குறிப்பதாவது:

> மூளையின் தொழிலை ஓரளவு தெளிவாக அறிய முனைந்தவர்கள் தாந்திரிகவாதிகளே. இந்திய மருத்துவக் கலையின் அடிப்படை நூல்களை ஆக்கிய சரகரும், சுசுருதரும் அறிவின் இருப்பிடம் உணர்வின்மூலம் இருதயமே என நம்பினர். கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டிலும் இவ்வாறே கருதினார். ஆனால் தாந்திரிக இலக்கியங்கள் உணர்வின் இருப்பிடம் மூளை என்கின்றன. அத்துடன்

116. தி. கணேசர், மானுடத்துவமும் தாந்திரிகமும், மேற்கோள், ப. 66.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> மூளை—முள்ளந்தண்டுத் தொகுதியின் முக்கியத்துவத்தையும் தாந்திரிகர் அறிந்திருந்தனர்[117]

என்பதாகும்.

பௌத்த தந்திர இலக்கிய ஆய்வாளரான ஆர்புர்பயேவ் எழுதிய பௌத்தப் பிரபஞ்ச வரலாறு என்ற கட்டுரையில்,

> பிரபஞ்சத்தைப் பற்றி மரபுவழிக் கொள்கை தவிர(மூன்று யானைகளின் மத்தகங்களின் மேல் பூமி உள்ளது என்ற மரபுவழிக் கொள்கை) பௌத்த தாந்திரீகக் கொள்கையான பூமி அச்சில் சுழல்கிறது என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது விஞ்ஞானச் சிறப்புடையது என்பதில் அய்யமில்லை[118]

என்று தந்திர அறிஞர்களின் அறிவியல் கோட்பாட்டினைச் சிறப்பிப்பார்.

தமிழ் மருத்துவ முறையினைச் சித்த மருத்துவம் என்று சுட்டுவதையும், சித்தர்கள் தந்திர மரபைப் பின்பற்றியவர்கள் என்பதையும் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.

தமிழ் மருத்துவ முறையில் நோய்க்கான காரணத்தின் அடிப்படைகளாக உணவும், உண்ணும் முறையும், வாதம், பித்தம், சிலேத்துமம் ஆகிய மூன்றன் தன்மைகளின் கூடுதல் குறைவுகளுமே என்று விளக்கப்பட்டுள்ளன. இதனைத் திருக்குறள்,

> மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
> வளி முதலா எண்ணிய மூன்று[119]

என்றும்,

> மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
> ஊறுபா டில்லை உயிர்க்கு[120]

என்றும் வற்புறுத்தும்.

உயிர் வேதியியல் முறையினை நன்கு அறிந்த இவ் அறிஞர்கள் வேதியியல் முறையிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்தனர். இதனை

---

117. தி. கணேசர், மானுடத்துவமும் தாந்திரிகமும், ப. 67.
118. அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ், மாக்கடல் மர்மங்கள், பக். 110-111.
119. குறள். 941.
120. குறள். 945,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவர்கள் மாறணம் (இரசவாதம்) என்று குறிப்பர். மூலிகைச் செடிகளின் தன்மைகளையும், பல்வேறு பறவை, விலங்குகளின் உடற் பகுதிகளையும்கூட இவர்கள் மருத்துவப்பயன் அடிப்படையில் நோய் நீக்கும் மருந்துகளாகக் கையாண்டுள்ளனர்.

> வைத்தியத்திற்கு உயிராயுள்ள 'முப்பு' என்பதைக் கண்டு பிடித்து அதன்துணை கொண்டு உலோகங்களையும், நஞ்சுகளையும் சுத்தப்படுத்தி, பசிக்கு உணவு போல, நோய்க்குரிய செந்தூரம், பற்பம், சுன்னம் முதலிய மருந்துகளைத் தயாரித்த தனிப்பெரு மாண்பு தமிழ்ச் சித்தருக்கே உரியது......

> உலோகங்களைச் சுத்தி செய்து அவற்றைப் பொன்னாக்கும் மருந்தினையும் தமிழர்கள் அறிந்து அம்மருந்தினால் உடம்பைச் சுத்தப்படுத்தி அதனை நெடுங்காலம் நிலை பெறச் செய்தனர். அம்மருந்து காயகற்பம் எனப்படும். இரச சுன்னத்தின் உதவி கொண்டு செம்பு முதலிய உலோகங்களைப் பொன்னாக்கினமையால் அம்முறை இரசவாதம் எனப்பட்டது.[121]

இரும்பைப் பொன்னாக்க முடியுமோ முடியாதோ ஆனால் அப்படிப் பட்ட ஒரு நம்பிக்கை தமிழகத்தில் நிலைத்துவிட்டது.

சித்த மருத்துவத்தில் 'போகர்' என்ற சித்தரின் பங்கை மிகுதியாகப் புகழும் மரபும் உண்டு. அவர் உருவாக்கியதாகக் கூறப்படும் பழனி முருகன் சிலை முற்றிலும் சித்த மருத்துவ முறையில் ஆனது என்பர். அதன் காரணமாகவே பலரும் அந்தச் சிலையினைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சுரண்டிப் பல்வேறு மருத்துவ முறைகளுக்கு அதனைப் பயன்படுத்தி வந்துள்ளனர். அச்சிலையின் மருத்துவப் பயன்பாட்டின் அருமையைக் கருதி அதனைக் கோவில் ஆட்சிக்குழு மிகவும் பாதுகாப்பாகக் கண்காணித்து வருகின்றது.

இந்திய மெய்யியலில் இத்தந்திரம் இடம்பெறாத பிரிவே இல்லை. உலகாய்தத்தின் அடிப்படையில் உருவான இத்தந்திரத்தை உலகாய்தத்தின் மிகக் கடுமையான எதிரிகளாகத் திகழ்ந்த பௌத்தம், சமணம், சைவம், வைணவம் முதலான எல்லாச் சமயத்தவரும் ஏற்றுக்கொண்டனர் என்பதே இதன் சிறப்பிற்குச் சான்றாகும்.

---

121. கா. சுப்பிரமணியப்பிள்ளை, தமிழர் சமயம், ப. 104

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பௌத்தத் தந்திரம் இந்தியாவிலிருந்து சீனாவிற்குச் சென்று அங்கே டாவோயிசமாக வளர்ந்து செழித்துள்ளது. தந்திர வழிபாட்டிற்குரிய கொற்றவை வழிபாடு சமணத்தில் இயக்கி வழிபாடாக உருமாறியுள்ளது. சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில் தொடங்கிய தந்திரம், ஆண்டாளின் திருப்பாவையில் நிறைவு பெற்றுத் திருமகள் வழிபாடாக வைணவத்தில் நிலை பெற்றுள்ளது.

உலகாய்தத்தின் அடிப்படைக் கூறுகளில் இணைந்தும் அதே நேரத்தில் சிவனைத் தலைவனாகவும் கொண்ட 'கபாலிகம்' வழியாகச் சைவத்திலும் தந்திரம் தன் செல்வாக்கை நிலைநாட்டியுள்ளது. சிவசத்தி வழிபாடாகவும், சத்தி வழிபாடாகவும், சத்தியின் பல்வேறு நிலைகளையும் சிவலிங்கமாகக் கருதும் வழிபாடாகவும் வளர்ச்சி பெற்ற இத்தந்திர வழிபாடே மாணிக்க வாசகரால் திருவெம்பாவையாகச் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளது.

வாயும் மனமும் கடந்த மனோன்மணி
பேயும் கணமும் பெரிதுடைப் பெண்பிள்ளை
ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத்
தாயும் மகளும்நல் தாரமும் ஆமே[122]

என்பது திருமூலரின், திருமந்திரம். சமணம், பௌத்தம், வைணவம் போன்ற பல மதங்களும் இக்கோட்பாட்டைத் தழுவிக்கொண்டன. ஆயினும் சைவம் போல் 'தந்திரத்தை' முழுதாகத் தன்வயப் படுத்திக்கொண்ட சமயம் வேறு இல்லை எனலாம். இதனை மேற் காட்டிய திருமந்திரப் பாடல் உணர்த்தும்.

தந்திர வழிபாடு பெண் தெய்வ வழிபாடாகத் தொடங்கிப் பின்னர் வெற்றிக்குரிய கொற்றவை வழிபாடாகச் செல்வாக்குப் பெற்றது. கொற்றவை வழிபாடு சத்தி வழிபாடாகவும் அழைக்கப் படும் 'இக்கால—எல்லையில்' சமூகத்தின் தலைமை பெண்ணிடமே இருந்தது என்பது முன்னரும் கூறப்பட்டுள்ளது. சமூகவியல் அறிஞரான மார்கனின் முடிவுகளைப் பற்றி எங்கல்சு,

> தாய் உரிமை அடிப்படையில் அமைக்கப்பட்டிருந்த கணங்களே (இனக் குழுக்கள்) ஆதிமூலவடிவம் என்றும் அதிலிருந்துதான் பின்னால் தந்தை உரிமையை அடிப்படை யாகக் கொண்ட கணங்கள் வளர்ந்தன என்றும் மார்கன் கண்டு பிடித்தார்[123]

என்று குறிப்பதும் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

---

122. திருமந்திரம்

123. பி. எங்கல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகிய வற்றின் தோற்றம், ப. 77

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்தச் சமூக வரலாற்றுப் பின்னணியில் பார்க்கும்போது கொற்றவை (சத்தி) வழிபாடு சிவசத்தி வழிபாடாக வளர்ச்சி பெற்றதன் காரணத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

அண்டத்தின் தாயாக, அனைத்து உயிர்களின் அன்னையாக, வெற்றிக்குரிய தெய்வமாகக் கொற்றவை அழைக்கப்பட்ட நிலை மாறி, சிவனே அண்டங்களின் நாயகன்; உலக உயிர்களின் தந்தை; படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களின் தலைவன்; வெற்றிக்குரிய படைக்கலனாகிய 'கணிச்சிக் கூர்ம்படை கடுந்திறல் ஒருவன்' என்றெல்லாம் போற்றப்படுகின்றான். இக்கால கட்டத்தில் கொற்றவை சிவனின் மனைவியாக்கப் படுகிறாள். கொற்றவை மகனாகக் கருதப்பட்ட முருகனுக்குச் சிவன் தந்தையாக்கப்படுகின்றான்.

வழிபாட்டில் கொற்றவைக்கிருந்த சிறப்புக்கள் சிவனுக்கும் உரியதாக்கப்படுகின்றன. சத்தி வழிபாடு சிவசத்தி வழிபாடாக மாறுகிறது, இதனை,

> உலகத்துக்கு மூலகாரணம் சிவசக்தி. சிவம் என்பது ஆண்; சக்தி என்பது பெண். இவ்வுண்மையைக் காட்டவே சிவலிங்கங்கள் தோன்றின. இலிங்கத்தின் அடிப்பாகம் வட்டமும் தட்டையுமானது. இது சக்தியைக் குறிப்பது; மேலேயுள்ள குழவி போன்ற பகுதி சிவத்தைக் குறிப்பது.[124]

என்று விளக்குவார் சாமி சிதம்பரனார்.

இவ்வாறு சிவசத்தி வழிபாட்டின் இணைப்பினை இலிங்க வழிபாடு உணர்த்தினாலும் சிவவழிபாடும் சத்தி வழிபாடும் தனித்தனிக் கிளைகளாகவும் அதே நேரத்தில் இணைகோடுகளைப் போல இணைந்தும் செல்கின்றன. அவ்விணை கோடுகளில் ஒன்றுதான் முற்காலக் கபாலிகம்.

கபாலிகம்

சைவத்தின் உட்பிரிவுகளாகிய பாசுபதம், மாவிரதம், பைரவம் என்பவற்றுள் கபாலிகமும் ஒன்று. இக்கபாலிகத்தைச் சைவ சமயத்தின் வைதீகப் பிரிவினர் ஏற்றுக்கொள்ளாததுடன் இழிவாகவும் மதித்தனர். சமூகத்தில் தீமை விளைவிப்பன என்றும் வெறுக்கத்தக்கன என்றும் கபாலிகம் உட்பட அனைத்துப் பிரிவு களும் கண்டிக்கப்பட்டன. இவை அனைத்தும் வாம மார்ககத்தைச்

---

124. தி. கணேசர், மானுடத்துவமும் தாந்திரிகமும், மேற்கோள், ப. 64

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சார்ந்தவை என்றும், வாமமார்க்கம் சூத்திரர்கட்கு உரியது என்றும் வரையறை செய்யப்பட்டது.[125]

> இப்பிரிவுகள் (கபாலிகம், பாசுபதம் பிற) ஆண்குறி வழிபாட்டையும் அதற்குரிய சடங்கு முறைகளையும் சைவத்தின் பேரால் பரப்பத் தொடங்கின. எனவேதான் இவற்றைப் பற்றிய கடுமையான எச்சரிக்கைகள் விடப் பட்டன[126]

என்று இதன் இழிவுக்குக் காரணம் சொல்வார் பட்டாச்சாரியா.

பௌத்தர்கள், கபாலிகரைச் சுடுகாட்டில் நோன்பு இயற்று பவர்கள்—சுடலை நோன்பிகள் என அழைத்ததை மணிமேகலை உணர்த்தும்.

> சுடலை நோன்பிகள் ஒடியா வுள்ளமொடு
> மடைதீ யுறுக்கும் வன்னி மன்றமும்
> விரத யாக்கைய ருடைதலை தொகுத்தாங்
> கிருந்தொடர்ப் படுக்கும் இரத்தி மன்றமும்

(6. 86—89) என்பது பாடல்.

சமணராகிய குணரத்தனா, கபாலிகர்களை உலகாய்தர்கள் என்றே குறிப்பார். உலகாய்தத்தின் இலக்கணம் பற்றி விளக்கும் குணரத்தனா, அதற்குரிய பல பெயர்களுள் ஒன்றாகக் கபாலிகத் தைக் குறிப்பார்.

---

125. The Saivic orthodox forms deal with the variations of this philosophy. The orthodox form of Saivism does not include the Pasupathas, Mahavratas, Kapalikas and Bhairavas, who are regarded by many as hateful and obonoxious. These are the Vamamargis—the followers of the contrary way.
—B. Bhattacharya, Saivism and the Phallic World, Vol. I, p. 560

126. Thus we have to recognise that a vast area of Phallicism with phallic rites and Phallic images was being covered under the umbrella of Saivism. This is the reason why we hear of drastic warnings against some of the Sisna (Phallus) Worshippers, Kapalikas, Pasupatas and Agoras.
—B. Bhattacharya, Op. cit., pp. 616—617

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> உலகாய்தக் கோட்பாட்டு அடிப்படையில் கடவுள் மறுப்பை (நாத்திகத்தை)க் கொண்டது. இவர்கள் கபாலிகர்கள் என்றும் அழைக்கப்படுவர். கபாலிகர்கள் தம் உடம்பு முழுவதும் சாம்பலைப் பூசிக்கொள்வார்கள். இவர்களுள் (உலகாய்தர்) வருண நெறியிலிருந்து வழுவிய பார்ப்பனர்களும் சிலர் இருப்பர். இவர்களுக்கென்று ஒழுக்க விதி எதுவும் இல்லை. பாவத்தைப் பற்றியோ புண்ணியத்தைப் பற்றியோ கவலைப்படாதவர்கள் இவர்கள். உலகம் நான்கு பூதங்களின் சேர்க்கை என்பர். இவர்களுள் ஒரு பிரிவினராகிய சார்வாகர்கள் உலகம் ஐந்து பூதங்களின் சேர்க்கை என்று விசும்பையும் சேர்த்துச் சொல்வார்கள்[127]

குணரத்னாவின் கூற்றுப்படி, உலகாய்தம், சார்வாகம், கபாலிகம் ஆகிய எல்லாம் ஒரு பொருள் குறித்த பல பெயர்களாகும்.

உலகாய்தத்திற்கும் கபாலிகத்திற்கும் இடையே உள்ள தொடர்பினைப் பிரகற்பதியின் இரண்டு நூற்பாக்களைக் காட்டி சாத்திரி என்பவர் பின்வருமாறு விளக்குகின்றார்.

> பிரகற்பதி சூத்திரம் உலகாய்தர்களுக்கும் கபாலிகர்களுக்கும் இடையேயுள்ள மிக நெருக்கமான ஒற்றுமைகளைக் குறிக்கின்றது. பிரகற்பதியின் கருத்துப்படி பொருளாதார உற்பத்திக்கு உலகாய்தமே அடிப்படை நூலாகும். (சாஸ்திரம்) ஆனால் காம இன்பத்திற்கு (பாலுறவு தொடர்பான செய்திகளுக்கு)க் கபாலிகமே அடிப்படை நூலாகும்......
>
> கபாலிகம் உலகாய்தத்தைப் போன்றே மிகவும் தொன்மையான ஒன்றாகும். உலகாய்தம், பொருள் முதல் கோட்பாடாகி, பொருளியல் வளர்ச்சிக்கான துறையாய் வளர்ந்துள்ளது. ஆனால் கபாலிகத்தின் நோக்கம் நமக்கு என்னவென்று தெரியவில்லை என்றாலும் அது பாலியல் பற்றிய அறிவியலாகலாம்[128]

குணரத்னா, சாத்திரி ஆகிய இருவரது கருத்துக்களையும் தொகுத்து ஆய்ந்த சட்டோபாத்தியாயா பின்வருமாறு விளக்குகின்றார்.

---

127. D. Chattopadhyaya, Lokayata, pp. 51—52
128. Ibid, p. 53

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> பிருகற்பதி உலகாய்தத்திற்கும் கபாலிகத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறுகின்றார். குணரத்தனா இன்னும் ஒருபடி மேலே சென்று இரண்டுமே ஒன்றுதான் என்கிறார். பிருகற்பதி, குணரத்தனா ஆகிய இருவரது கருத்துக்களையும் முழுமையாக ஏற்றுக்கொள்வார் எச். பி. சாத்திரி. இதன் அடிப்படையில் கபாலிகர்களின் பாலியல் கோட்பாடு பொருள்முதல் இயலைச் சார்ந்தது என்பதை ஏற்றுக்கொள்ள நமக்கும் எவ்விதத் தடையும் இல்லை......
>
> தந்திரத்தைப் போலவே கபாலிகமும் இவ்வுலகத்தின் வளர்ச்சி பற்றி—மனித இனத்தின் இனப்பெருக்கம் பற்றிய நம்பிக்கையை உடையது. எனவே உலகாய்தத்தின் பொருளியல் கோட்பாடும், கபாலிகத்தின் பாலியல் கோட்பாடும் வேறுவேறல்ல என்பதைப் புரிந்துகொள்ளலாம்.[129]

கபாலிகம், தந்திரத்தைப் போலவே பொருள்முதல் சிந்தனையின் பாற்பட்டது. உலகாய்தம்போல இதுவும் தனித்தன்மையோடு விளங்கியது. மிகவும் பழமையானது. அரசர்கள் கற்கும் கல்வித் துறைகளுள் உலகாய்தத்துடன் கபாலிகமும் குறிக்கப்பட்டுள்ளதே இதன் சிறப்பினை உணர்த்தும். இந்த அடிப்படையில்தான்,

> உலகாய்தக் கோட்பாடுகளை நாட்டின் செல்வ வளர்ச்சிக்காகவும், கபாலிகக் கோட்பாடுகளை இன்பியல் நுகர்ச்சிக்காகவும் நாடாளும் வேந்தன் கற்கவேண்டுவது அவசியம் என்பார் பிருகற்பதி[130]

கபாலிகத்தைச் சாத்திரியும், சட்டோபாத்தியாயாவும் அறிவியல் நோக்குடன் அணுகியுள்ளனர். ஆனால் குணரத்தனாவோ சமய அடிப்படையில் அணுகியுள்ளார். வைதிகச் சமயத்தார் கபாலிகத்தைச் சூத்திரர்கட்கு உரியதாகவும், சமூகத்தில் கேடு பயப்பதாகவும் கருதி அதனைக் கண்டிப்பர். அதுபோலவே குணரத்தனா

---

129. D. Chattopadhyaya, Lokayata, p. 54

130. The Brahaspatha Sutra *(11:5:6)* advises the king to follow the Laukayatika doctrines at the time of securing Artha *(wealth)* and the Kapalika Sastra in achieving his sexual and similar desires.

— P. V. Kane, History of Dharma Sastras, Vol. III, p. 48

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சார்ந்துள்ள சமணர்களும் கபாலிகக் கோட்பாட்டினைப் பின்பற்றியவர்களைக் காமுகர்களாகவும் குடிகாரர்களாகவும், சமூகக் கேடுகளைத் தோற்றுவிப்பவர்களாகவும் புனைவர். சமண சமயத்தைச் சார்ந்திருந்த பல்லவ மன்னன் மகேந்திரன் எழுதிய 'மத்தவிலாசப் பிரகசனம்' என்ற நாடகத்தில் வரும் செய்திகள் மேற்கண்ட கருத்தை விளக்கும். இந்நாடகத்தின் நடுநாயகமாக விளங்குபவன் ஒரு கபாலிகத் துறவியே. கபாலிக மதத்தைப் பின்பற்றும் இவன் ஒரு கபாலம் அல்லது மண்டையோட்டைப் பிச்சைக்கலமாக எடுத்துக்கொண்டு ஊர் சுற்றுகிறான்.

'பக்தர்கள் இடும் புலாலை இவன் உணவாகக் கொள்கிறான். பிறகு ஒரு சமயம் கள் குடிப்பதற்கு ஒரு மதுக்கடையை அடையும் இவன், மறதியால் தன் பிச்சைப் பாத்திரத்தை அங்கே வைத்து விட்டு அகல்கிறான். தன் மத வழக்கப்படி இவன் தன் மனைவியுடன் நன்றாகக் குடித்துவிட்டு காஞ்சிபுரத்தின் அங்காடி வீதிகளில் கொட்டமடிக்கின்றான். சிறிது நேரங் கழித்ததும் கபாலிகனுக்குத் தெளிவு பிறக்கின்றது. தன் மண்டையோடு காணாமற்போனதை அப்போதுதான் உணர்கிறான். மண்டையோடில்லாமல் கபாலிக விரதத்தை அவன் ஆற்றமுடியாது......

கபாலிகன் (புத்த துறவியுடனும், தன் மனைவியுடனும்) குடித்துவிட்டு ஆடும்போது தன் மதத்தைப் புகழ்வதன்மூலம் சைவ மதத்தின் சிறப்பை இகழ்கிறான். இறைச்சி, மது, மங்கை இம் மூன்றுந்தான் மனிதனைத் துறக்கத்திற்கு அழைத்துச் செல்லும் வழிகள். இறைச்சியை உண்ணுதலும், மதுவை அருந்துதலும், மங்கையைக் கூடுதலும் இவ்வுலகத்தைத் துறக்கமாக மாற்றுகின்றன......

இன்னோர் உலகத்தை நம்பி இந்த உலகத்தின் இன்பத்தைத் துறப்பவர்கள் மடையர்களாகத்தான் இருக்கவேண்டும் என்று கபாலிகன் கூவிக்கொண்டிருக்கும்போது, ஒரு பைத்தியக்காரன் மண்டையோட்டைக் கவ்விக் கொண்டுவரும் ஒரு நாயைத் துரத்திக் கொண்டு வருகின்றான். இதனால் மூவரும் விழித்துக் கொள்கின்றனர்!'[131]

இது சமணத்தின் உயர்வையும், பிற மதங்களின் இழிவையும் கூறுதற்காக எழுதப்பட்ட ஓர் அங்கத நாடகமாகும். சமணம்

131. அ. சக்கரவர்த்தி நயினார், திருக்குறள் வழங்கும் செய்தி, பக். 36—37.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெறுத்து ஒதுக்கிய மது, மங்கை, புலால் ஆகியவற்றைக் கபாலிகம் ஏற்றுக்கொண்டிருந்தது என்பதையும் இந்நாடகம் விளக்குகின்றது.

இந்நாடகத்தை எழுதிய மகேந்திரவர்மன் முதலில் சமணனாக இருந்து பின்னர்ச் சைவனாக மாறியவன். அவன் சமணத்தில் இருந்தபோது எழுதிய நாடகமே இது. சமயக் காழ்ப்பும், பகையும் உச்சத்தில் இருந்த காலம் அது. தன் மதத்தைத் தவிர்த்த பிற அனைத்தும் ஒழுக்கக் குறைவானவை, சமூகத்திற்குக் கேடானவை என்பதை ஒவ்வொரு மதத்தவரும் குறிக்கத் தவறாத காலம் அது. ஒவ்வொரு மதமும் பிற மதங்களை அழிப்பதன் மூலமே வளர முடியும் என்ற நம்பிக்கையில் பணியாற்றிய காலமும் அதுவே. நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியோர்கள் பாடல்களிலும் இத் தகைய புறச்சமயத் தாக்குதல்களை விரிவாகக் காணலாம். ஞான சம்பந்தனைப் 'பர சமயக் கோளரி' என்று புகழ்வதும் இதன் அடிப் படையிலாகும்.

எனவே இத்தகைய பின்புலத்திலிருந்து குணரத்னாவின் கூற்றுக் களைக் கவனித்தால், உலகாய்தர்களைப் பற்றியும், கபாலிகர் களைப் பற்றியும் அவர் கூறுவதன் காரணம் புரியும்.

கபாலிகத்திற்கும் உலகாய்தத்திற்கும் உண்மையிலேயே தொடர்புகள் ஏதேனும் இருக்குமா? இருந்தால் அத்தொடர்பு எத் தன்மையானது? பிரகற்பதி குறிப்பதைப்போல நாடாளும்வேந்தன் கற்கவேண்டிய கலைகளுள் உலகாய்தமும், கபாலிகமும் இடம் பெற்றனவா? கபாலிகத்தின் பெயர்க் காரணம் என்ன? இக்கேள்வி களுக்கெல்லாம் சங்க இலக்கியங்கள் விடை தருகின்றன.

கபாலிகம்—பெயர்க்காரணம்

கபாலம் என்பது சிவன் ஆடிய பலவகை ஆடல்களுள் ஒன்று. பிரமனது தலையினைக் கையிலேந்திக் கொற்றவை ஒருபால் நிற்க, திரிபுரம் எரித்த வெற்றியின் அடையாளமாக ஆடிய ஆட்டமே இது. இதனை,

> பார்வதி காளி வடிவில் மண்டையோடுகளை மாலையாக அணிந்து குருதி வேட்கையுடன் அருகில் நிற்க, சிவன் தன் கையில் கபாலம் ஏந்தி ஆடிய ஆட்டம்[132]

என்பார் கே. கே. பிள்ளை. கலித்தொகையும்,

132. K. K. Pillay, A Social History of the Tamils, p. 483

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொலையுழுவைத் தோலசைஇக் கொன்றைத்தார் சுவற்புரளத்
தலையங்கைக் கொண்டுநீ காபாலம் ஆடுங்கால்
முலையணிந்த முறுவலாள் முற்பாணி தருவாளோ[133]

என்று குறிப்பிடும். இதன் உரையில் நச்சினார்க்கினியர்,

கொடுகொட்டிக்குத் தாளம் முடியும் காலம் சிறப் புடைத்து எனவும், பாண்டரங்கத்திற்குத் தாளம் நிகழும் இடம் சிறப்புடைத்து எனவும், காபாலத்திற்குத் தாளம் தொடங்குங் காலம் சிறப்புடைத்து எனவும் கருதி உரை யாசிரியர் ஒரு தாளத்திற்குப் பாணி தூக்குச் சீரென்னும் அடைவு கூறினார்[134]

என்று விளக்குவார்.

சிவ வழிபாடு திராவிடர்கட்கு உரிய ஒன்று. சிந்துவெளி நாகரிகத்தில் சிவ வழிபாடு தனித்ததோர் இடத்தை வகித்துள்ளது. இந்நிலையில், உலக இன்பங்களை நுகர்தற்குரிய வாயில்களாக விளங்கும் இசை, நாட்டியம் ஆகிய இன்பியல் துறைகட்குத் தெய்வத்தன்மை ஏற்றப்பட்ட நாளில், நாட்டியக் கடவுளாகச் ஞுவன் உருவகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அந்த நிலையில் இசை, நாட்டியம் ஆகிய இன்பியற் கலைகளை வற்புறுத்திய கபாலிகர்கள் சிவனின் ஆடற்கோலத்தை—கொற்றவை அருகிருக்கச் சிவன் ஆடிய ஆடற்காட்சியை வணங்கினர் எனலாம். மிகத் தொன்மை வாய்ந்ததாகக் கருதப்படும் கூத்த நூல் ஆடற்கலையின் தலைவனாகச் சிவனைப் போற்றுகிறது.

ஒருதாள் ஊன்றி ஒருதாள் ஏற்றி
ஒருகை மறித்து மறுகை அமைத்து
இருகையில் ஆக்கமும் இறுதியும் ஏற்று
அருவுரு ஆக்கும் அம்மை கூத்துஆட்டப்
பெருவெளி நடிக்கும் பெருமான் அருளத்[135]

என்பது அந்நூலின் நூற்பா. கபாலம் ஆடும் சிவனுக்கு முலை யணிந்த முறுவலாள் முதற்பாணி தருவாள் என்ற கலித்தொகைப் பாடலடிகளை இங்கு ஒப்பு நோக்குதல் சிறப்புடைத்து. இதனால்

133. கலித்தொகை 1 : 12.

134. கலித்தொகை பாடல் நச். உரை.

135. கூத்த நூல் 3 : 1—5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆடற்கலையின் அடிப்படையிலேயே கபாலிகம் என்ற பெயர் தோன்றியது என்பது தெளிவாகின்றது. உலக இன்பங்கருதிச் சிவன் களியாட்டம் புரிகின்றான். அவனே இந்த அண்டங்களின்—அம்பூதங்களின் நாயகன். அவன் இந்தப் பேரண்டத்தைக் களனாகக் கொண்டு ஆடல் தொழிலைப் புரிகின்றான்.

ஆனந்தம் ஆடரங்கம் ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தம் ஆகி அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந் தானுக்கே[136]

என்பது திருமந்திரம். எனவே கபாலிகர்கள் வைதிகர்கள் சாடுவதைப்போலவோ, சமணர்கள் எள்ளுவதைப் போலவோ இழிந்த ஒழுக்க முடையவர்கள் அல்லர். அவர்கள் இன்பியல் கலையான ஆடற் கலையினைப் போற்றியவர்கள்—வளர்த்தவர்கள். அக்கலையின் தலைவனாகக் கருதிய சிவனை வணங்கியவர்கள் என்பது விளங்கும்.

உலகாய்தர்களைப் பற்றி விளக்கும் மாதவரின் கூற்று இங்கே நோக்கத்தக்கது.

> அக்னி கோத்ரங்களும் மூன்று வேதாத்தியயனமும், சந்நியாசமும், விபூதி காரணமும் ஆகிய இவை புத்தியும், புருஷத்தன்மையும் அற்றவர்கட்கு ஜீவனோபாயமாகும்.[137]

மாதவர் (வித்யாரண்ணியர்) சார்வாகம் அதாவது உலகாய்தத்தை விளக்குகையில் மேற்கண்டவாறு குறிப்பிடுகின்றார். கடவுள் மறுப்பை—ஆன்மா மறுப்பை அடிப்படையாகக்கொண்ட உலகாய்தத்தின் கிளையாக வந்த கபாலிகர்கள் சிவபெருமானைத் தலைவராகக் கொண்டமை ஆராய்தற்குரியது.

தமிழ் இலக்கியங்கள் சிவனை மதுரையில் இருந்து தமிழ் ஆய்ந்தவன் என்று குறிப்பிடுகின்றன.

கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெளிந்தாய்ந்த இப்பசுந் தமிழ்......[138]

என்பது திருவிளையாடற் புராணம்.

---

136. திருமந்திரம், பா. 2725

137. கோ. வடிவேலு செட்டியார், சர்வதர்சனசங்கிரகம், பக். 8—9.

138. திருவிளையாடற் புராணம், திருநாட்டுச் சிறப்பு, பா. 57.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரைக் காஞ்சி

மதுரைக் காஞ்சியில் சிவன் அய்ம்பூதங்களின் தலைவனாகக் குறிக்கப்பட்டுள்ளான். அவனைத் தலைவனாகக் கொண்ட துறவிகளுக்கென்று தனியே பள்ளிகள் இருந்தன. அப்பள்ளிகள் 'கடவுட் பள்ளி'களாகக் குறிக்கப்பட்டன. பெண்கள் தம் கணவருடனும் குழந்தைகளுடனும், பூவும் புகையும் ஏந்தியவராய் அப்பள்ளிகளுக்குச் சென்று அந்தி வழிபாடு இயற்றினர். அப்பொழுது தூரியங்கள் முழங்கின.

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவாள் நொடியோன் தலைவ னாக
மாசற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு
மாற்றரு மரபின் உயர்பலி கொடுமார்
அந்தி விழவின் தூரியங் கறங்கத்
திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை
ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
தாமும் அவரும் ஓராங்கு விளங்கக்
காமர் கவினிய பேரிளம் பெண்டிர்
பூவினர் புகையினர் தொழுவனர் பழிச்சிச்
சிறந்து புறங்காக்கும் கடவுட் பள்ளியும்[139]

என மதுரைக்காஞ்சி பாடும். மக்களின் செல்வாக்கிற்கும் போற்றுதலுக்கும் உரிய சமயப் பள்ளிகளாக மாங்குடி மருதனார் குறிப்பிடும் மூன்றனுள் முதலாவதாகச் சிறப்பிக்கப்படும் பகுதி இதுவாகும். இதற்குப் பிறகுதான் வைதிக நெறியையும் ஆசீவகத்தையும் குறிப்பார். இந்த வரிசை முறையே சிவக்கோட்பாட்டினரின் முதன்மையை உணர்த்தும்.

சங்க இலக்கியங்களுள் சிவனைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாக இல்லை. கிடைக்கும் குறிப்புகளுள் சிவனைப் பூதங்களின் தலைவனாகக் குறிப்பிடும் மிகவும் தொன்மையான பகுதி இதுதான். பிருகற்பதி நூற்பா குறிப்பிடுவதைப் போல கபாலிகம் மிகவும் தொன்மையானது என்பதை இப்பகுதி உணர்த்தும்.

---

139. மதுரைக் காஞ்சி, 453—467

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நீரும் நிலனும் தீயும் வளியும்' என்னும் இப்பாடல் அடியிலிருந்து 'அந்தி விழவின் தூரியம் கறங்க' என்னும் அடிவரையுள்ள பகுதியைத் தனி நிகழ்ச்சியாகவும்,

'திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை' என்ற அடியிலிருந்து 'சிறந்து புறங்காக்கும் கடவுட் பள்ளி' ஈறாக உடைய பகுதியைத் தனியாகவும் குறித்து, இது பௌத்தர் பள்ளியைக் குறிக்கும் என்பார் நச்சினார்க்கினியர். இப்பிரிவு பொருந்தாது. மேற்காட்டிய பாடலின் கருத்துக்களைப் பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. நிலம், நீர், தீ, வளி, விசும்பு என்ற அய்ந்து பூதங்களையும் ஒருங்குடன் இயற்றுபவன் சிவன்.

2. அவன் 'மழுவாள் நெடியோன்' என்று அழைக்கப் படுபவன்.

3. அவனைத் தலைவனாகக் கொண்டவர்கள் குற்றமற விளங்கிய யாக்கையர். துறவு நெறியை மேற்கொண்டவர்கள்.

4. அத்தகைய துறவோர், வாடாத பூக்களைச் சூடியவர்களும், நாற்ற உணவை விரும்புவோர்களும், அச்சமூட்டும் உருவத்தைக் கொண்டவர்களும் ஆகிய 'உருகெழு பெரியோர்க்கு' உயர்பலியைத் தருபவர்கள்.

5. பலிகொடுக்கும் நிகழ்ச்சி அந்திப்போதில் நடக்கும். அப்பொழுது இசைக்கருவிகள் முழங்கி ஆரவாரிக்கும்.

6. அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் செல்பவர்கள் அழகும், இளமையும், ஒளிவிடும் அணிகளையும் அணிந்த இளமையுடைய இல்லற மகளிர்.

7. இவர்கள் தாம் முயங்கிப்புணர்ந்து பாதுகாக்கும் தம் கணவர்களையும், தம் மக்களையும் தம்முடன் அழைத்துச் செல்கின்றனர்.

8. அவ்வாறு செல்லும்போது பூவினையும், புகையினையும் ஏந்திச் செல்வர். சென்றதும், அத்தூயோர்களை வணங்குவர்.

9. இத்தகைய சிறப்பிற்குரியது அக்கடவுளர் பள்ளி.

இந்த நிகழ்ச்சிகளால் அய்ம்பூதங்களையும் இயக்குபவன் சிவன் என்பதும், அவன் மழுவாள் நெடியோன் என்பதும், அத்தகைய சிவனைத் தலைவனாகக் கொண்ட அடியவர்களின் பள்ளியில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்கள் தம் கணவருடனும் குழந்தைகளுடனும் சென்று வழிபாடு இயற்றுவர் என்பதும் புலனாகின்றன.

இங்கே பெண்கள் தம் கணவருடனும், குழந்தைகளுடனும் செல்கின்ற காட்சியை,

> திண்கதிர் மதாணி ஒண்குறு மாக்களை
> ஓம்பினர்த் தழீஇத் தாம்புணர்ந்து முயங்கித்
> தாதணி தாமரைப் போதுபிடித் தாங்குத்
> தாமும் அவரும் ஓராங்கு விளங்க

என்று புனைவர். இது மக்களின் இன்ப வாழ்வின் உயர்வை உணர்த்தும் பகுதி என்பது தெளிவு. இன்பவாழ்வை—இவ்வுலக இன்பத்தை வற்புறுத்தும் உலகாய்த நெறியில் சிவ வணக்கம் இணைக்கப்பட்டதற்குத் தெளிவான விளக்கங்கள் கிடைக்க வில்லை. இருப்பினும், திராவிடக் கோட்பாட்டில் சிவனது பங்கை ஒப்பிட்டால் இதன் உண்மை ஓரளவு புலனாகலாம்.

இந்திய மெய்யியல் மரபில் வேத வைதிக மறுப்பையும், கடவுள் மறுப்பையும் கொண்ட உலகாய்தம், சமணம், பௌத்தம், ஆசீவகம், சாங்கியம் (நிரீச்சுர சாங்கியம்), யோகம் ஆகிய அனைத்தும் திராவிடச் சிந்தனையிலிருந்து கிளைத்தவை என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது. இதில் பௌத்தம் நீங்கலாக ஏனைய அனைத்தும் தங்களின் தத்துவத் தலைவனாக, 'ஆதிநாதனை', 'வினையின் நீங்கி விளங்கிய அறிவனை', ரிசபதேவர் என்றும், அருகன் என்றும் குறிக்கின்றன. தொல்காப்பியரும்,

> வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல்நூ லாகும்[140]

என்பார். இவ்வாறு, காலமாறுபாட்டால் கருத்துக்களை வளர்த்துக்கொண்டு தனித்தனிச் சமயங்களாகப் பின்னாளில் பலவாகப் பிரிந்தாலும், அவை ஒரு பொதுவான மூலத்திலிருந்தே கிளைத்திருக்கவேண்டும் என்பது மட்டும் புலனாகின்றது.

> வேதப்பாடல்களையும், கடவுள்களையும் உருவாக்கிய ஆரியர் இந்திய நாட்டுக்கு வருவதற்கு முன்னரே, தொல்லிந்தியர் வழிபாடு தெய்வங்கள் பலவற்றையும் சிவ வழிபாடு தன்னுள் அடக்கிக்கொண்டது என்று இந்தியவியலார் கருதுகின்றனர். அகழ்வாராய்ச்சிகளி

140. தொல். பொருள். மரபியல், 640

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விருந்து சிவன் போன்ற உருவ வழிபாடு இருந்து வந்தது என்று தெளிவாவதனால் வேதங்களையும் விடத் தொன்மையானவன் சிவன் என்று சைவர்கள் கொண்டாடும் உரிமை சரியே......

தொல்லிந்திய முத்திரைகளில் விலங்குகளால் சூழப் பெற்ற பன்முகக் கடவுள் உருவம் காணப்படுகிறது. கால்களை யோகநிலையில் பரப்பி அரியணையில் அவ் உருவம் அமைந்துள்ளது. இதிலிருந்தும் சிவ வழிபாட்டினர் யோகிகளின் தலைவன் யோகேஸ்வரன் என்னும் சிவன் என்று வழங்குவதனாலும் யோகதரிசனத்துக்குப் பிதாவென்று அழைக்கப்படும் பதஞ்சலிக்கும் முற்பட்டது, தொன்மையானது யோகம் என்பது தெளிவு......

புதைபொருள் ஆய்வுக்குழுத் தலைவரான ஜான் மார்ஷல் என்னும் பிரிட்டிஷ் புதைபொருள் ஆராய்ச்சியாளர், இவ்வுருவம் விலங்குக்கரசனான பசுபதியையே சுட்டுகிறது என்று துணிந்து கூறுகிறார். இந்தியாவின் மிகத் தொன்மையான சிவ வழிபாடு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பழக்கத்தில் இருந்து வந்துள்ளது என்ற கருத்து இதனால் வலுப்பெறுகிறது. தொல்லிந்தியர் இக்கடவுளைச் சிவன் என்றே அழைத்தனர் என்று கூறமுடியாது......[141]

என்று அந்த மூலத்தை—பல்வேறு கோட்பாடுகளின் பிறப்பிற்கான காரணத்தை விளக்குவார் அ. கோந்த்ரதோவ்.

சமய வரலாறுகளில் புதிய கிளைகள் தம் மூலத்தை மாற்றாமல் காலத்திற்கேற்றவாறு புதிய வடிவங்கள் கொள்கின்றன. இதனைச் சமண வரலாறும் பௌத்த வரலாறும் மெய்ப்பிக்கும். பார்சுவநாதரின் கோட்பாட்டிலிருந்து மகாவீரர் பிரிந்து செல்வதைப்போல, உலகாய்தரின் அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து சிவனைத் தலைவனாகக்கொண்ட புதிய கிளை உருவாகி இருக்க வேண்டும். அக்கிளை, உலகம் இன்புற்றிருப்பதற்காகவே களிக் கூத்து இயற்றுபவனாகச் சிவனைப் புனைந்திருக்க வேண்டும். சிவனை—மழுவாள் நெடியோனைத் தலைவனாகக் கொண்டிருந்தாலும் இவர்கள் உலகாய்தக் கோட்பாடுகளையே வற்புறுத்தியுள்ளனர் என்பதும் இங்கே உணரத்தக்கது.

141. அலெக்ஸாந்தர் கோந்த்ரதோவ், மாக்கடல் மர்மங்கள், பக். 104—105.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிருகற்பதி கூறியதுபோல் இன்பியல் கலைகளின் அறிவியலாக இப்பிரிவினர்—கபாலிகர் இருந்தனர் என்பதை மதுரைக்காஞ்சி மிகவும் தெளிவாகவே விளக்குகின்றது.

உலகநிலையாமையை வற்புறுத்தும் மதுரைக்காஞ்சி, மன்னனுக்கு உறுதிப்பொருளை வற்புறுத்தும் வகையில்,

பொற்புவிளங்கு புகழவை நிற்புகழ்ந் தேத்த
இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினி துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே[142]

என்று வாழ்த்தும். இது இன்பியல் துறையின் விளக்கமாக அமைந்திருப்பதுடன் அரசனை அத்தகு இன்பத்தைத் துய்த்து வாழ் என அறிவுறுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

அய்ம்பூதங்களின் தலைவனாகச் சிவனை வணங்கிய இக்கபாலிகப் பிரிவு மாணிக்கவாசகர் காலத்தில் முற்றாகச் சைவத்துடன் கலந்துவிடுகின்றது. சிவனை,

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்[143]

என்று மாணிக்கவாசகர் வாழ்த்துவார். மாணிக்கவாசகருக்குப் பின்னர் சைவம், மெய்ப்பொருள் அடிப்படையில் புதிய வடிவம் பெறுகின்ற போதும், அது உலகாய்தத்தை அடிப்படையாகக் கொண்டே தனது கோட்பாட்டை அமைத்துக் கொள்கிறது. அது மட்டுமின்றி, மதுரைக்காஞ்சியில் தொடங்கிய இன்பியல் கோட்பாடு மாணிக்கவாசகரின் திருக்கோவையாரில் நிறைவு பெறுகின்றது. சிவன் தமிழை—இவ்வுலக இன்பத்தை ஆராய்ந்தவன் என்பதை விளக்கும் மாணிக்கவாசகர்,

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தை யுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலின்
ஆய்ந்த ஒண்டீந் தமிழின்

142. மதுரைக் காஞ்சி, 778—782.

143. திருவாசகம், திருச்சதகம், பாடல் 15.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துறைவாய் நுழைந்தனையோ அன்றி
ஏழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்கென்கோ
லாம்புகுந் தெய்தியதே[144]

என்று பாடுவார்.

அகத்திணைக்குரிய இலக்கிய மரபுகள் முற்றாக மாறிவிட்ட நிலையில், அகத்திணை இலக்கியங்களின் இடத்தைப் பக்தி இலக்கியங்கள் கவர்ந்து கொண்ட சூழலில், மாணிக்கவாசகர் மீண்டும் அகத்திணை மரபை முழுதாகப் பின்பற்றி 'திருக்கோவையார்' பாடியது, உலகாய்தத்தின் பிரிவாக வந்த கபாலிகத்தின் தொடர்ச்சியின் விளைவாக வேண்டும் எனலாம்.

அதுமட்டுமல்லாமல், சைவம் ஞானசம்பந்தனால் வைதிக நெறியை நோக்கித் திருப்பிவிடப்பட்டது. அடியவர்கட்குள்ளேயே பார்ப்பனர்கட்கு உயர்வைத் தந்தார்; வேதத்தைச் சிறப்பித்தார் என்பதை,

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமணொடு தேரரை
வாதில் வென்ற ழிக்கத் திருவுள்ளமே[145]

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்[146]

ஆகிய அவரது பாடல்களால் அறியலாம்.

சூத்திரர்கள் பின்பற்றிய நெறி 'வாமசாரம்' என்றழைக்கப்பட்டது போல், வைதிகர்களால் பின்பற்றப்பட்ட நெறி 'தட்சிணாசாரின்' எனப்பட்டது. இது உயர்ந்ததாகவும், வேதத்தோடு தொடர்புடையதாகவும் மதிக்கப்பட்டது. வேதநெறியைத் தழைக்கச் செய்யவே ஞானசம்பந்தன் பிறந்ததாகப் போற்றுவார் சேக்கிழார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவ நெறிவிளங்க[147]

என்ற பெரியபுராண பாடல் அடி இதனை உணர்த்தும்.

144. திருக்கோவையார், பாடல் 20.

145. சம்பந்தர் தேவாரம், திருஆலவாய்ப் பதிகம்.

146. மே. நூ., பொது திருப்பதிகம், 1 : 1.

147. பெரியபுராணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு சைவத்தை வைதிக மரபுக்கு உட்பட்டதாக மாற்ற முனைந்த சூழ்நிலையிலும், மாணிக்கவாசகர் அதனை உலகாய்தச் சிந்தனைக்குட்பட்ட அதன் பழம்பெருமையை—அதன் இயல்பு மாறாமல்—இன்பியல் கோட்பாடாக—திருக்கோவையாராக—அகத்துறை இலக்கியமாக இயற்றியிருப்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும்.

மெய்கண்ட தேவரும் அவரது மாணாக்கர்களும் பின்பற்றிய சைவ சித்தாந்தம், தொடக்கநிலையில் உலகாய்தக் கோட்பாட்டை அடியொற்றியே அமைந்துள்ளது. கபாலிகம் உலகாய்தத்தின் இன்பியல் கோட்பாட்டைத் தழுவிக்கொண்டது என்றால், சைவ சித்தாந்தம் உலகாய்தத்தின் அறிவியல் மற்றும் மெய்யியல் கோட்பாட்டை உள்ளடக்கிக் கொண்டது எனலாம்.

சட்டோபாத்தியாயா கூறுவதுபோல 'உலகாய்தத்தின் பொருளியல் கோட்பாடும், கபாலிகத்தின் இன்பியல் கோட்பாடும் வேறு வேறல்ல' என்பதை இந்த வரலாற்றுப் பின்னணி உணர்த்துகிறது எனலாம்.

தந்திரக் கோட்பாட்டை அடியொற்றிப் பிறந்த கபாலிகம், வழிபாட்டு முறைகளிலும், சடங்கு முறைகளிலும் தந்திரத்திலிருந்து சற்று மாறுபட்ட வழியைக் கைக்கொண்டு வளர்ந்திருக்க வேண்டும். சிவன், கொற்றவையுடன் ஆடிய ஆடற்கோலமே இவர்களின் வழிபாட்டிற்குரிய நிலையாக இருந்திருக்கலாம். சிவன் கபாலத்தைக் கையில் கொண்டு ஆடியவன்—கபாலமூர்த்தி எனப்பட்டவன். எனவே அவனைப் பின்பற்றியவர்கள் கபாலிகர்கள் எனப்பட்டனர். இவர்களின் நோக்கம் இன்ப வாழ்வை—இம்மை இன்பத்தை வற்புறுத்துவதும், துறக்கம் என்பதை மறுப்பதும் ஆகும். எனவே துறக்க இன்பத்தை வற்புறுத்தியவர்களால் இது கண்டனத்திற்குள்ளாக்கப்பட்டதில் வியப்பேதும் இல்லை.

தந்திரம் தொடக்கநிலையில் பொருள்முதல் இயலாகத் தோன்றியது. பல்வேறு அறிவியல் வளர்ச்சியிலும், அது தன் பங்கைச் செலுத்தியுள்ளது. ஆனால் அதுவும் காலப்போக்கில் போலித்துறவிகளின் வரவால் சிறுமைக்கு உள்ளாக்கப்பட்டுப் பலரின் கண்டனத்திற்குள்ளானது. இருப்பினும் இதன் தனித்தன்மையை, மனிதகுல வரலாற்றில் தந்திரத்தின் பங்களிப்பை, மானிடவியலின் அடிப்படையில் மறுஆய்வு செய்தல் இன்றியமையாதது.

நீடாம் குறிப்பிட்டுள்ளதுபோல் தந்திர இலக்கியங்களின் தாக்கம் தமிழ் இலக்கியங்களுள் மிகுதியும் உண்டு. இதன் தனித்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன்மையைச் சித்தர் பாடல்கள் முழுதாகப் பெற்றுள்ளன. இவ்வளவு இலக்கியச் சான்றுகள் இருந்தாலும் தமிழ் மக்களின் வாழ்விலும் பண்பாட்டு வளர்ச்சியிலும் தொன்மைக்கால தந்திரத்தின் சுவடுகள் இன்னும் மாறாமல் புத்திளமையுடன் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது வியப்பிற்குரிய உண்மையாகும்.

தமிழர்கள் தங்கள் பெண் குழந்தைகள் பருவம் எய்தியதை—பூப்பு நீராட்டு விழாவாகக் கொண்டாடுவதும், அறுவடைத் திருநாளைப் பொங்கல் விழாவாகக் கொண்டாடுவதும், அப்பொங்கல் விழாவில் மூன்றாம் நாள் விழாவினைக் கன்னிப் பொங்கலாகப் பெண்கள் மட்டுமே கொண்டாடுவதும், மழை வேண்டி 'கோமாயம் கட்டி' அழும்போது பெண்கள் மட்டுமே கலந்து கொள்வதும் ஆகிய எல்லாம் தந்திரக் கோட்பாடுகள் இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பதன் அடையாளச் சின்னங்கள்.

> தந்திரத்தின் தோற்றம் வேதங்களுக்கும் முந்தியது: ஆரியர் வருகைக்கு முன்பே இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்ந்த தொல்குடி மக்களிடையே தோன்றி வளர்ந்த சிந்தனைப் போக்கினைக் கேவலம் ஒரு சில குழுக்களின் அருவெறுக்கத்தக்க இழிவான வெளிப்பாடு எனத் தள்ளிவிட முடியாது. தந்திரம் என்பதைத் தகாத பாலுணர்வின் வெளிப்பாடு என நாம் கருதினால், இந்திய மக்கள் யாவருமே தகாத பாலுணர்ச்சி கொண்டவர்களாகக் கருதப்படுவர்[148]

என்ற சட்டோபாத்தியாயா கூற்று இதன் சிறப்பினை உணர்த்தும்.

இத்தகைய தொன்மையான கோட்பாடு பல்லாயிரம் ஆண்டுகளாக எத்தனையோ நாகரிகங்களின் தாக்குதல்கள் தொடர்ந்த நிலையிலும் தமிழர்களின் வாழ்வில் மாற்றமின்றி ஊறிப்போய் இருக்கின்றது. உலகாய்தத்தோடு இது பெற்றுள்ள தொடர்புகளையும் மற்ற இந்திய மெய்யியல்களில் ஊடுருவி இருக்கும் இதன் செல்வாக்கையும் தனித்தும் வகுத்தும் ஆராய்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

148. தி, கணேசர், மானுடத்துவமும் தாந்திரிகமும், ப. 67.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல்—மூன்று

அய்ந்திரமும் அறிவியல் கோட்பாடுகளும்

'சாரிபுத்தன் தன் இளமைப் பருவத்தில்
தென்னாட்டில் அய்ந்திரத்தைக் கற்றான்'

—அவதான சாதகம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அய்ந்திரம்

''பல்புகழ் நிறுத்த படிமையோன்'' எனவும், ''மல்குநீர் வரைப்பின் அய்ந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' எனவும் பனம்பாரனார் தொல்காப்பியரைப் பாராட்டுகின்றார். இப் பாராட்டுரையில் இரண்டாவதாக உள்ள 'அய்ந்திரம் நிறைந்த' என்ற தொடர் கடந்த ஒரு நூற்றாண்டாகவே அறிஞர்கள் நடுவில் பெரும் புதிராய் விளங்கி வருகின்றது. தமிழ் இலக்கிய இலக்கண ஆய்வாளர்கள் மட்டுமின்றி வடமொழி இலக்கிய இலக்கண ஆய்வாளர்களும் இந்திய திராவிடவியல் பற்றிய மேலைநாட்டு வரலாற்றாசிரியர்களும் அய்ந்திரம்பற்றி விளக்க முற்பட்டுள்ளனர். இத்தகைய ஆய்வைத் தொடங்கி வைத்தவர் அய்ரோப்பியரான டாக்டர் பர்னல் ஆவார். அவரது நூல் 'சமற்கிருத இலக்கணமாகிய அய்ந்திரம்' (The Aindra School of Sanskrit Grammar) என்பதாகும். இந்நூல் வெளிவந்த ஆண்டு கி. பி. 1875.

'இந்திய மொழிகளுள் வழங்கிய எட்டுவகை இலக்கண மரபில் அய்ந்திரம் எனப்படும் இந்திரன் நூலும் ஒன்று' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டதே அந்நூலாகும். இக் கருத்துதான் பர்னலுக்குப் பின்னர் வந்த இந்திய இலக்கண வரலாற்றாசிரியர்களுக்கு முன்னோடியாக அமைந்துவிட்டது.

பர்னலுக்குப் பின்

பர்னலின் கருத்தை மறுஆய்வு செய்யவோ, மறுக்கவோ, அதன் வன்மை—மென்மைகளை ஆய்வு செய்யவோ முனையாது அவரது கருத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு வந்துள்ளனர் என்பது குறிக்கத்தக்கது,

வி. அய். சுப்பிரமணியம் 'அய்ந்திரம் பற்றிய குறிப்பு' என்ற தம் ஆங்கிலக் கட்டுரையில்,

> தொல்காப்பியம் ஓர் இலக்கண நூல். ஆதலால் அய்ந்திரமும் ஓர் இலக்கண நூலாகவே இருத்தல் வேண்டும்[1]

எனக் குறிப்பிட்டுப் பின்னர்,

> எனவே அய்ந்திரம் என்பது பாணினீயத்திற்கு மாறான ஓர் இலக்கண மரபை ஒட்டியதாகலாம். வரருசியாரால்

1. V. I. Subramaniam, A Note on Ainthiram (Essay), p. 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> எழுதப்பட்ட பிராகிருத இலக்கணம் கீழ்த்திசை நாடுகளில் செல்வாக்குப் பெற்றிருந்தாலும், இந்திரம் என்பதற்குக் கீழ்த்திசை என்று பொருள் உள்ளதாலும், தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பெறும் அய்ந்திரம் கீழ்த்திசைக்குரிய இலக்கண மரபாகலாம்[2]

என்றும் விளக்குகின்றார்.

க. த. திருநாவுக்கரசும், 'அய்ந்திரம் என்பது இலக்கண மரபு. தொல்காப்பியமும் அய்ந்திர இலக்கண மரபைத் தழுவியது'' என்று குறித்துள்ளார்,

சமற்கிருத மொழியில் அறிஞர் பேல் வால்கர், பர்னலின் கருத்தை அப்படியே ஏற்று அய்ந்திரத்தை இலக்கண நூல் என்றே நம்புகின்றார்.

> வடமொழி இலக்கண முறைகள் என்ற நூல் எழுதிய பேல் வால்கர் அய்ந்திர வியாகரணங்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது தொல்காப்பியப் பாயிரச் செய்தியை டாக்டர் பர்னல் என்பார் நூலிலிருந்து எடுத்துக் காட்டுகிறார். அதன்கண் தொல்காப்பியம் அய்ந்திர வியாகரண முறையை முழுதும் தன்னகத்தே கொண்டதாகக் கூறப்பட்டுள்ளது[4]

என்று அகத்தியலிங்கம் குறிப்பது மேற்கூறிய கருத்தை அரண் செய்யும்.

புதிய பார்வை; பழைய முடிவு

மேலே எடுத்துக்காட்டிய சிந்தனைப் போக்கிலிருந்து சற்று மாறுபட்ட நோக்கில் ஆராய முற்பட்டவர் வை. இரத்தின சபாபதி.

> ''சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
> வகைதெரிவான் கட்டே யுலகு'' என்ற திருக்குறளை

---

2. V. I. Subramaniam, A Note on Ainthiram (Essay), p. 2.
3. க. த. திருநாவுக்கரசு, ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம், இ. ப. த. ம., நான்காவது கருத்தரங்க மலர், ப. 430.
4. ச. அகத்தியலிங்கம், இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள், முன்னுரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னிறுத்திச் சிந்தித்தால் ஓர் உண்மை புலப்படும். சுவை முதலிய அய்ந்தன் வகைகளை நன்கு ஆராய்ந்து பிரித்தும் வகுத்தும் தொகுத்தும் உணரவல்லவனே உலகைப் பற்றிய உண்மையை உணர்ந்தவனாவான். அவனிடத்து உலகு தங்கும் என்பது குறட்கருத்து. இவ்வாறு பொருள் உலகத்தை அய்ந்தன் வகைப்பட ஆய்ந்து, பின் இவ்விரண்டன் இயல்பு களையும் அய்ந்தன் வகைப்பட இணைத்து ஆராய்ந்து பெற்ற அறிவால் நிறைந்தவனே சொல்லாலும் பொருளாலும் இணைந்த மொழி இலக்கணம் கூற வல்லவனாவான் என்ற கருத்தில் 'அய்ந்திறம் நிறைதல்' என்ற அடைமொழி தொல்காப்பியனுக்கு அமைக்கப்பெற்றிருத்தல் வேண்டும்...

பொருள் உலகத்துக்கு மூலமாகிய அய்ந்து மாத்திரை களை (சுவை, ஒளி முதலியன) உணர்தல்போல, சொல் உலகத்து மூலமாகிய குறில் நெடில் வன்மை மென்மை இடைமை என்னும் அய்வகைகளுக்கு மூலமாய் நின்ற ஒலிக்கூட்டம் அய்ந்தனை மரபுவழி உணர்ந்து பொருளுடன் இணைத்தல் வேண்டும். இவ்வாறு இருவகையாலும் 'அய்ந்திறம்' நிறைந்தவனே பொருளிலக்கணம் உள்ளிட்ட மொழி இலக்கணம் இயற்ற முடியும் என்ற குறிப்பை அடிப்படையாகக் கொண்டது 'அய்ந்திறம் நிறைந்த தொல்காப்பியன்' என்பது[5]

என்று முடிப்பார்.

விளக்கம் நீண்டது; 'அய்ந்திரம்' என்ற சொல்லில் உள்ள இடையின 'ரகரத்'திற்குப் பதிலாக வல்லின 'றகரத்'தைப் பயன் படுத்திப் பொருள் விளக்கம் தர முயல்கிறார். இருப்பினும் முடிவில், மொழி இலக்கணப் புலமைக்குரியது அய்ந்திரம் என்று முன்னர்க் காட்டிய ஆய்வாளர்களைப் போன்றே இவரும் கருதுகின்றார்.

இவ்வாறு இலக்கண மரபாகச் சில ஆய்வாளர்களாலும், இலக்கண நூலாகச் சில ஆய்வாளர்களாலும் குறிக்கப்பட்டுள்ள 'அய்ந்திரம்' எதை உணர்த்துகின்றது? இலக்கண மரபையா? அல்லது இலக்கண நூலையா? அல்லது வேறு ஏதேனும் புதிய பொருளை அப்பெயர் சுட்டுகின்றதா? போன்ற வினாக்களுக்கு விடை காணல் இன்றியமையாததாகும்.

---

5. ஆ. சிவலிங்கனார், தொல்காப்பியம்—சிறப்புப் பாயிரம், மேற்கோள், பக். 23—24.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பர்னல் காட்டும் சான்றுகள்

அய்ந்திரத்தை இந்திரனின் இலக்கண மரபாகக் கருதியவர் பர்னல். அவர் தமது கருத்துக்குச் சான்றுகளாகக் காட்டுவனவற்றுள் பெரும்பான்மை புத்த சமயத்தோடு தொடர்பு கொண்டவை. அவற்றுள் குறிக்கத்தக்கவை,

> வடநாட்டில் வழங்கும் பௌத்த அறநூல்களில் இந்திரனின் இலக்கணம் குறிக்கப்பட்டுள்ளது. அவதான சாதகத்தில் சாரிபுத்தன் தன் இளம் பருவத்தில் அய்ந்திரம் கற்றான் எனக் குறிக்கப்பட்டுள்ளது.[6]

...

> தாரநாதர் என்னும் பௌத்த வரலாற்று ஆசிரியர் 'இந்திர வியாகரணம் மிகவும் பழமையானது......தென்னகத்தில் வழங்கியது......கடவுள் உலகைச் சார்ந்தது. ஆரிய தேசத்தது அன்று என்பார்''[7]

ஆகியன.

அய்ந்திரம் என்றால் என்ன?

சாரிபுத்தன். புத்தரின் தலையாய மாணவர்களில் ஒருவன். பார்ப்பன இளைஞனான அவன் முதலில் வைதிகச் சமயத்தைப் பின்பற்றிப் பின்னர்ப் புத்தரால் ஈர்க்கப்பட்டவன். புத்த சங்கத்தில் இணைந்த பதினைந்தாவது நாளில் புத்தர் இவனது பேச்சாற்றல் கருதிச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பிற்கு இவனை நியமித்தார்.

இச் சாரிபுத்தன் கற்றது அய்ந்திரம் எனவரும் அவதான சாதகக் குறிப்பே, அய்ந்திரம் பற்றிய குறிப்புகளில் காலத்தால் மிகவும் முந்தியதாகும். இக்குறிப்பைத்தான் பர்னல் இந்திர வியாகரணம் என்னும் சமற்கிருத இலக்கணமாகக் கொள்கிறார்.

சாரிபுத்தன் அய்ந்திரம் கற்றவன். அய்ந்திரத்தைக் கற்பதற்காகவே அவனது முன்னோர்கள் தமிழகத்திற்கு வந்தனர். அப்படித் தமிழகத்தில் தங்கி இருந்தபோதுதான் சாரி என்ற பார்ப்பனிக்கு மகனாகப் பிறந்தான் சாரிபுத்தன். எனவே சாரிபுத்தனின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி கற்றது ஆகிய அனைத்தும் தமிழகத்திலேயே நடந்

---

6. Again the Buddhist canonical works of North mention the Indra Grammar, in the AVADHANA CATAKA it is stated that the Cariputra learned it as a boy.
   —Burnell, The Aindra school o! Sanskrit Grammar, p. 5.

7. Ibid, p. 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துள்ளன என்பதை அ. சக்கரவர்த்தி நயினார் விளக்குகின்றார். அது வருமாறு:

> ராஜகிருகத்தின் அருகில் நாளந்தா என்னும் நகரில் மாதவன் என்னும் ஒரு பிராமணன் வாழ்ந்து வந்தான். அவனுக்குக் கோஷ்டிலன் என்ற மகனும் சாரி என்ற மகளும் இருந்தனர். கோஷ்டிலன் பூதவாதக் கொள்கையைக் கற்றுக்கொள்வதற்காகத் தென்னாடு சென்றான். சாரி தென்னிந்திய பிராமணன் ஒருவனை மணந்து கொண்டாள். அவன் பெயர் திஷ்யன். அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு உபதிஷ்யன் என்று பெயரிட்டார்கள். அவர்களுடைய இளையமகனுக்குச் சாரிபுத்தன் என்பது பெயர். அவர்கள் வாழ்ந்த ஊருக்குப் பக்கத்து ஊரில் 'மொக்கலன்' என்னும் சிறுவன் இருந்தான். இருவரும் பல தத்துவங்களைக் கற்றார்கள். அவற்றுள் ஒன்று பூதவாதம். அவர்கள் இளைஞர்களான பின்னர் புத்தரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரை அடைந்து அவருடைய சங்கத்தில் சேர்ந்தார்கள்[8]

மேற்கண்ட இப்பகுதியின் ஆங்கில வடிவத்தில் சக்கரவர்த்தி நயினார் சாரிபுத்தன் கற்றது 'உலகாய்தம்' என்று குறிக்க, இதனைத் தமிழாக்கம் செய்த வானமாமலை 'பூதவாதம்' என்பார்.[9]

பர்னல், அய்ந்திரம் என்ற சொல்லைச் சமற்கிருத இலக்கண மரபாகக் குறிக்க, சக்கரவர்த்தி நயினாரும் வானமாமலையும் அச்சொல்லை உலகாய்தம்—பூதவாதம் என்ற மெய்யியலின் பெயராகக் காண்பது ஆய்விற்குரியதாகும்.

சக்கரவர்த்தி நயினாரின் கருத்தை மேற்கோள் காட்டிய வானமாமலை மேலும் கூறுவதாவது:

> சக்கரவர்த்தி நயினார் சமணர். இருந்தபோதிலும் அவர் கி. மு. ஆறாவது நூற்றாண்டிலேயே தென்னிந்தியாவில் பூதவாதம் பிராமணர்கள் கற்கத்தகுந்த மதிப்புடைய தத்துவமாக இருந்தது என்பதை மேற்குறித்த செய்தியில்

8. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப. 194.
9. மே. நூ., ப. 194.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> கூறுகிறார். அது மட்டுமல்லாமல் பூதவாதத்தைக் கற்பதற்காக வடஇந்தியாவிலிருந்து தத்துவத்தைப் பயிலுகின்ற அறிஞர்கள் வந்தார்கள் என்ற செய்தி தென்னிந்தியாவில் பூதவாதம் செல்வாக்குப் பெற்று இருந்தது என்பதை விளக்கும்[10]

என்று கூறி, சாரிபுத்தன் மட்டுமல்லாது வடநாட்டிலிருந்து தத்துவம் பற்றிப் பயில விரும்பும் பலரும் தென்னகத்திற்குப் பூதவாதம் கற்க வந்துள்ளனர் என்பதையும் விளக்குகின்றார். யாழ்ப்பிரமதத்தன் என்ற ஆரிய அரசன் தமிழ் கற்க வந்ததையும் அதன் அடையாளமாகக் கபிலர் அவனுக்குத் தமிழ் அறிவுறுத்தக் குறிஞ்சிப்பாட்டைப் பாடியதும் இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

ஆன்மாவை மறுக்கும் துறவிகளைப் பற்றிப் புத்தர் குறிப்பிட்டுள்ள செய்திகளை ஆராயும் சதீசு சந்திரா, 'புத்தரால் ஆன்மா மறுப்பாளர்களாகக் கருதப்படுபவர்கள் உலகாய்த மெய்யியலைச் சார்ந்தவர்களே என்று உறுதிப்படுத்துகின்றார்'.[11]

பாயிரம்

தொல்காப்பியர் தம் நூலை இயற்றுதற்கான காரணத்தை விளக்கும் பனம்பாரனார்,

> அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
> அதங்கோட் டாசாற்கு அரில்தபத் தெரிந்து
> மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
> மல்குநீர் வரைப்பின் அய்ந்திரம் நிறைந்த
> தொல்காப் பியன் ....[12]

என்று குறிப்பார். இவர் கருத்துப்படி,

'நான்கு வேதங்களைக் கற்றுத்தேர்ந்த அதங்கோட்டாசான் என்பாருக்கு அய்ந்திரம் நிறைந்த தொல்காப்பியர் மயக்கம் இல்லாத வகையில் அமைந்துள்ள தமிழ் எழுத்து முறையினை விளங்கக் காட்டினார்', என்றாகிறது. இப்பகுதியில் தமிழ் நாட்டில் மக்கள் வழக்கில் இருக்கும் 'வேதங்கள் நான்கு; பூதங்கள் அய்ந்து' என்ற கருத்து முறையே,

---

10. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும் ப. 195.
11. Sathish Chandra, The History of Indian Logic, p. 9.
12. தொல். பாயிரம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நான்மறை முற்றிய அதங்கோட் டாசான்'
'அய்ந்திரம் நிறைந்த தொல்காப் பியன்'

என்ற அடிகளில் முரண்தொடையாய் நிற்பதை உணர முடிகின்றது.

மேலும், பனம்பாரனார், 'மல்குநீர் வரைப்பின் அயந்திரம்' எனக் குறிப்பதும் ஆய்விற்குரியதாகும்.

தொல்காப்பியருக்கு 'அய்ந்திரம் நிறைந்த' என்ற தொடர் அடைமொழியாக வருவதில் எத்தகைய பொருட்சிறப்பு இருக்க முடியுமோ அத்தகைய சிறப்பு அய்ந்திரத்திற்கு அடையாக வரும் 'மல்குநீர் வரைப்பின்' என்ற தொடருக்கும் இருத்தல் வேண்டும்.

'மல்குநீர் வரைப்பின் அய்ந்திரம்' என்ற தொடருக்குப் பொருள் கூறும் இளம்பூரணர்,

> மிக்க நீரையுடைய கடலாகிய எல்லையையுடைய உலகின் கண்ணே இந்திரனாற் செய்யப்பட்ட அய்ந்திர வியா கரணத்தினை[13]

என்பார். நச்சினார்க்கினியரும்,

> கடல்சூழ்ந்த உலகின் கண்ணே அய்ந்திர வியாகரணத்தை......[14]

எனக்கூறி, இளம்பூரணரின் கருத்தை ஏற்று அய்ந்திரம் என்பது இந்திரனாற் செய்யப்பட்ட அய்ந்திர வியாகரணம் என்னும் நூல் என்று உரை கூறுவார்.

அய்ந்திர வியாகரணம் என்பதை நூலாகக் குறிக்கும் அவ்விருவரும் அதனை இலக்கணமாகச் சுட்டவில்லை. ஆனால் சேனாவரையர் மட்டும் தொல்காப்பியர் சொல்லதிகாரத்தின் வேற்றுமை இயலில் உள்ள ''அதனின் இயறல் அதற்றகு கிளவி'' என்ற நூற்பாவின் உரை மேற்கோளாக,

> ஏழியல் முறையது எதிர்முக வேற்றுமை
> வேறது விளம்பான் பெயரது விகாரம்என்று
> ஓதிய புலவனும் உளன்ஒரு வகையால்
> இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்

என்ற பாடலைக் காட்டுவார். இப்பாடலுடன்,

---

13. இளம்பூரணர், பாயிரம் உரை.
14. நச்சினார்க்கினியர் பாயிரம் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> அய்ந்திர நூலார் விளிவேற்றுமையை எட்டாம் வேற்றுமை யாக நேர்ந்தார் என்பது பெறப்படும்; ஆசிரியர் அவர் மதம் பற்றிக் கூறினாராகலின் அதனொடு மாறுகொள்ளா ரென்பது. இக்கருத்து விளக்கியவன்றே, பாயிரத்துள் அய்ந்திர நிறைந்த தொல்காப்பியன் எனக் கூறிற்றென்க[15]

என்று அய்ந்திரத்தை இலக்கண நூலாகக் காட்டுகின்றார்.

அய்ந்திரம் என்பது சேனாவரையரின் கூற்றுப்படி இந்திரன் செய்த இலக்கணமாயின் சமற்கிருதத்திற்குத் தொல்காப்பியர் காலத்தில் எழுத்து வடிவம் இருந்திருக்க வேண்டும்; இருந்திருந்தால் நான்கு வேதங்களைக் கற்றுத் தேர்ந்த அதங்கோட்டாசாற்கு அவரது அய்யமெல்லாம் நீங்குமாறு,

> செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
> முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
> புலந்தொகுத்த......[16]

தொல்காப்பியர் மயங்கா மரபின் எழுத்து முறையைக் காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது. மேலும்,

> சமற்கிருதத்திற்கு கி.மு. முதல் நூற்றாண்டுவரை எழுத்து வடிவம் இருந்ததற்கான தடையங்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. அதற்கான கல்வெட்டுச் சான்றுகளோ தொல்பொருள் சான்றுகளோ ஒன்றுகூட கிடைக்க வில்லை.[17]

எனவே, தொல்காப்பியர் அய்ந்திரம் என்பதாகிய சமற்கிருத நூலைக் கற்றார் என்பது 'மலடி பெற்ற மகன் வானத்திலேறி முயற் கொம்பைக் கொணர்ந்தான்' என்பதைப் போலாம்.

மேலும், சேனாவரையர் காட்டும் அந்த மேற்கோள் நூற்பா வின் நடையும் தமிழ் இலக்கண இலக்கியத்திற்குரிய செறிவான நடை நலத்தோடு ஒத்ததாக இல்லை என்பதும் உணரத்தக்கது. அத்துடன், அய்ந்திரம் என்பதைச் சமற்கிருத இலக்கண நூல் என்றே நம்பும் பர்னல் உள்ளிட்ட அறிஞர் பலரும் சமற்கிருதம், பாலி, பிராகிருதம் முதலான மொழிகளில் அய்ந்திரம் என்ற

---

15. சேனாவரையர், சொல்லதிகாரம் உரை.
16. தொல். பாயிரம்.
17. க. நெடுஞ்செழியன், மயங்கா மரபு, பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி ஆண்டு மலர், 1981, ப. 50.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெயரில் ஒரு நூல் இருந்ததாகவும் கூறவில்லை. இதனை வி. அய். சுப்பிரமணியம்,

> இந்திரன் ஓர் இலக்கண ஆசிரியன் என்பதற்கோ அன்றி அய்ந்திரம் ஓர் இலக்கண நூல் என்பதற்கோ சமற்கிருதம், பாலி, பிராகிருதம் ஆகிய எம்மொழிகளிலும் எவ்விதச் சான்றும் இல்லை[18]

என்று குறிப்பதால் அறியலாம்.

எனவே அய்ந்திரத்தை இலக்கண நூலாக, அதுவும் சமற்கிருத இலக்கண நூலாகக் கருதும் ஆய்வாளர்களால் அப்படி ஒரு நூல் இருந்தது என்று துணிய முடியவில்லை; துணியும் சேனாவரையர் காட்டும் மேற்கோள் பாடலும் பிற்கால நடையில் அமைந்த தமிழ்ச் செய்யுள் வடிவிலேயே உள்ளது. எனவே அய்ந்திரம் என்பது வடமொழியில் அமைந்த இலக்கணம் என்ற கூற்றிற்கு எவ்விதச் சான்றுகளும் காட்டப்படவில்லை என்பதால் அப்படி ஒரு நூல் இருந்திருக்க முடியாது என்பது பெறப்படுகிறது.

மல்குநீர் வரைப்பின் அய்ந்திரம்

இத்தொடருக்கு இளம்பூரணர் 'கடலாகிய எல்லையையுடைய உலகின்கண்ணே இந்திரனாற் செய்யப்பட்டது' என்று 'கண்' என்னும் ஏழாம் வேற்றுமை உருபைப் பயன்படுத்திப் பொருள் விளக்கம் தருவார்.

நூல்கள் அனைத்தும் உலகில் உள்ள மக்களுக்காக உலகில் உள்ளோரால் மட்டுமே இயற்றப்படுபவைதான். அப்படியாயின், 'உலகின்கண்ணே இந்திரனாற் செய்யப்பட்ட' என்ற இளம்பூரணரின் பொருள் விளக்கம் முரண்போலத் தோன்றுகின்றது. ஆனால் 'மல்குநீர் வரைப்பின் அய்ந்திரம்' என்ற தொடருக்கு 'கடலால் சூழப்பட்ட உலகினது அய்ந்து திரங்கள்' என்று 'அது'வெனும் ஆறன் உருபைப் பயன்படுத்தும்போது பொருள் சிறக்கின்றது. ஆறாம் வேற்றுமையை,

> ஆறா குவதே
> அதுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
> தன்னினும் பிறிதினும் இதனது இதுவெனும்
> அன்ன கிளவிக் கிழமைத் ததுவே[19]

என விளக்குவார் தொல்காப்பியர். சேனாவரையர்,

---

18. V. I. Subramaniam, A Note on Ainthiram (Essay), p. 2.
19. தொல். சொல், வேற்றுமை இயல், நூ., 80.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> எனவே, ஆறாவது கிழமைப் பொருட்டென்றும், அக்கிழமை தன்னான் வந்த தற்கிழமையும், பிறிதான் வந்த பிறிதின் கிழமையும் என இரண்டென்றும் கூறியவாராம்.
>
> தன்னென்றது தன்னோடொற்றுமையுடைய பொருளை, பிறிதென்றது தன்னின்வேறாகிய பொருளை[20]

என்று உரை விளக்கம் தருவார்.

இவ்வாறு 'மல்குநீர் வரைப்பினது அய்ந்திரம்' எனப் பொருள் காணின், 'கடலால் சூழப்பட்டது உலகம்; அவ்வுலகம் அய்ந்து கூறுகளால்—அதாவது அய்ந்தன் திரங்களால் அமைந்துள்ளது என்ற விளக்கம் கிடைக்கின்றது.

கலந்த மயக்கம்

உலகம் என்பது நிலம், நீர், தீ, வளி, விசும்பு ஆகிய அய்ந்து மூலங்களால் ஆனது என்பார் தொல்காப்பியர்.

> நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
> கலந்த மயக்க முலக மாதலின்[21]

என்பது நூற்பா.

இந்நூற்பாவிற்கு ஆறாம் வேற்றுமைக்குரிய தற்கிழமையாகப் பொருள் காணின்,

> நிலனும் தீயும் நீருங் காற்றும் ஆகாயமுமென்னும் ஐம்பெரும் பூதமுங் கலந்த கலவையல்லது உலகமென்பது பிறிதில்லாமையின்......'[2]

என்ற பொருளும், பிறிதின் கிழமையாகக் காணின்,

> நிலம்வலிது, தீவெய்து, நீர்தண்ணென்றது, வளியெறிந்தது, விசும்பு அகலியது[23]

என ஒவ்வொரு பூதத்தின் தனித்தனி இயல்புகளையும் நன்கு உணர்தல் என்ற பொருளும் கிடைக்கும்.

எனவே, மேற்காட்டிய இரண்டு வகையானும் இவ்வுலகின் இயல்பினை அறிந்தவர் தொல்காப்பியர் என்பதை,

---

20. சேனாவரையர், தொல், சொல். வேற்றுமைஇயல் உரை.
21. தொல். சொல் மரபியல், 91 : 1—2.
22. சேனாவரையர், மு. கு.,
23. புறம். 30.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மல்குநீர் வரைப்பின் அய்ந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்

என்ற அடிகளில் பனம்பாரனார் உணர்த்துகின்றார் என்பது தெளிவு.

அய்ந்திரம் நிறைதல்

உலகாய்த மெய்யியலைக் கண்டதும் கொண்டதும் தென்னகமே. இதன் நுட்பத்தை அறிய வேண்டிய பல்வேறு மெய்யியலைச் சார்ந்தோரும் தென்னகத்திற்கு வந்தனர் என்பது முன்னரும் விளக்கப்பட்டது.

புறநானூறு இரண்டாம் பாடலில் சேரமான் பெருஞ்சோற்றுதியனை முரஞ்சியூர் முடிநாகராயர் வாழ்த்தும் பாடலில்,

மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்
கைம்பெரும் பூதத் தியற்கை போல[24]

என்று பாராட்டுகின்றார். இப்பாடலில் அய்ம்பெரும் பூதங்களின் இயல்புகளும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

'அணுச் செறிந்தது நிலம்; அந்நிலத்தை ஏந்தியுள்ளது ஆகாயம்; அவ் ஆகாயத்தைத் தடவி வருவது காற்று; அக்காற்றின்கண் தலைப்பட்டது தீ; அத்தீயோடு மாறுபட்டது நீர்.' என வரும் பகுதிகள் ஒவ்வொரு பூதத்தின் இயல்பையும் நன்கு அறிந்திருந்த அறிவியலின் வெளிப்பாடு என்பது தெளிவு. இவ்வாறு பூதங்களின் இயல்புகளை ஆராயும் கோட்பாடே இயல்புக் கோட்பாடாகவும் சுட்டப்பட்டுள்ளது.

உலகின் தோற்றத்திற்குக் காரணமாகிய பூதங்களை அய்ம்பெரும் பூதங்கள் என்று அடைகொடுத்துச் சிறப்பிப்பதும் எண்ணத்தக்கது. இடைச்சங்கத்திற்குரிய நூல்களில் பூதபுராணமும் ஒன்று என்பதால், அந்நூல் இவ்வைம்பெரும் பூதங்களின் இயல்புகளை விளக்கியதாக இருக்கவேண்டும் என்பது தெளிவு.

---

24. புறம். 2 : 1—6.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கடலின் ஆழத்தையும், உலகினது பரப்பையும் காற்று வழங்கும் திசையையும் காற்றின்றி வெற்றிடமாக விரிந்து கிடக்கும் விசும்பினது பரப்பையும் அளந்தறிய இயலினும்' என்ற பொருளில் வரும்,

இருமுந்நீர்க் குட்டமும்
வியன்ஞாலத் தகலமும்
வளிவழங்கு திசையும்
வறிதுநிலைஇய காயமும் என்றாங்கு[25]

என்ற புறப்பாடல் அக்காலத்து அறிவியல் வளர்ச்சியைக் காட்டும் சான்று எனலாம். இத்தகைய அறிவியல் அறிஞர்கள்தாம் அய்ந்திரம் நிறைந்தவர்களாக மதிக்கப்பட்டனர் என்பது தெளிவு.

உலகாய்த (அய்ந்திர) மெய்யியலைக் கற்றறிந்த அறிஞர்கள் அக்காலத்தில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தனர் என்பதும் அச்செல்வாக்கின் காரணமாகவே இந்தியாவின் வடபகுதியிலிருந்து பலரும் இம் மெய்யியலைக் கற்கத் தென்னாடு வந்துள்ளனர் என்பதும் தெரிகிறது. இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் பாரதத்தில் ஒருநிகழ்ச்சி அமைந்துள்ளது.

சஞ்சயன் திருதராட்டிரனுக்குக் கூறும்போது,

> மகாராசரே! கற்றறிந்தவர்கள் உலகத்தில் உள்ள எல்லா வஸ்துக்களும் இந்த அய்ந்து மகா பூதங்கள் என்றும் சமமாயிருப்பவைகள் என்றும் சுருக்கமாகச் சொல்லுகிறார்கள். ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், பூமி இவையெல்லாம் மேண்மேல் ஒன்றுக்கொன்று ஒவ்வொரு குணத்தால் மேம்பட்டிருக்கின்றன. அவைகளுள் பூமியே தலைமை பெற்றுள்ளது.[26]

என்று உலகாய்தச் செய்திகளைக் கற்றறிந்தவர்களின் சொல்லாகக் குறிப்பிடுகின்றான்.

துறவிகளின் பெருமைகளை 'நீத்தார் பெருமை' யாகப் புகழ்ந்து உரைக்கும் வள்ளுவர்,

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு

என்பார். இக்குறளுக்குப் பழைய உரைகாரர் தரும் விளக்கம் ஆய்விற்குரியது.

25. புறம். 20 : 1—4.

26. மகாபாரதம், பீஷ்மபர்வம், ப. 19.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னுஞ் சத்த, பரிச, ரூப, ரச, கந்தம் ஆகிய பஞ்ச இந்திரிய வகைத் தோற்றமும் அதன் மூலப் பகுதியும் விகுதியும் அதன் விரிவாகிய தத்துவங்களும் ஆராய்ந்தறியின் அதுவே உலகமாதலால் அதனை ஆராய்ந்து அதன் வகை தெரிவான் கண்ணே உலகு[27]

இவ்விளக்கத்தின் மூல ஒலியாக இருப்பதே தொல்காப்பியரின்,

> வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி யவர்கட் டாக லான[28]

என்னும் நூற்பா. இந்நூற்பா உரையில்,

> வழக்கென்று சொல்லப்படுவது உயர்ந்தோர் வழங்கிய வழக்கே! என்னை? உலகத்து நிகழ்ச்சி எல்லாம் அவரையே நோக்கினமையின்[29]

என்று பேராசிரியர் குறிப்பிடுகின்றார். வள்ளுவரால் குறிச்சப் பெறும் 'வகைதெரிவானே', தொல்காப்பியர் சுட்டும் 'உயர்ந்தோர்' ஆக அக்காலச் சமூகத்தில் மதிக்கப்பட்டிருந்தனர் என்பது புலனாகிறது.

அசிதகேசகம்பாளன்

கடவுள், ஆன்மா, வீடு, நரகம், பாவம், புண்ணியம் ஆகிய வற்றை மறுப்பவர்களாக மட்டுமே உலகாய்தர்கள் இருக்கவில்லை. துறவறத்தில் சிறந்தோராகவும் எவ்விதச் சுரண்டலுக்கும் ஆட்படாதவண்ணம் மக்களை அறிவூட்டி நெறிப்படுத்தியவர்களாகவும் இவர்கள் திகழ்ந்தனர். இத்தகைய பெருமைக்குரியவர்கள் மாற்றாரும் மதிக்கும் வண்ணம் வாழ்ந்தனர். அவர்களுள் அசிதகேசகம்பாளன் என்பவர் ஒருவர். புத்தர், மகாவீரர், மற்கலிகோசாலர், பக்குடுக்கை நன்கணியார் ஆகியோரின் சமகாலத்தவர். வடஇந்திய மரபுக்குரிய உலகாய்தத்தைச் சார்ந்த இவர், பார்ப்பனர்களின் வேதங்களையும் வேள்விகளையும் கடுமையாகக் கண்டித்தவர். இவரது கோட்பாட்டைச் சிதைவுக் கோட்பாடு (Annihilation) என்பர்.

> தானத்திலும் வேள்வியிலும் ஓமத்திலும் ஒன்றும் இல்லை. நற்செயலுக்கும் தீச்செயலுக்கும் பயனோ பரிணாமமோ

---

27. திருக்குறள் 27 (பழைய உரை)
28. தொல். மரபியல், 92.
29. பேராசிரியர் தொல். மரபியல் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> இல்லை. இவ்வுலகம், மறுஉலகம், தாய் தந்தை அல்லது தேவர் நரகர் என்னும் உயிர்கள் இல்லை. இம்மையையும் மறுமையையும் கண்டு அறிந்து பிறருக்குச் சொல்லும் தத்துவ ஞானிகளும் நேர்வழியில் செல்லுகிறவர்களும் ஆன சிரமண அந்தணர்கள் இவ்வுலகில் இல்லை. மனிதன் நான்கு பூதங்களால் ஆனவன். அவன் சாகும்போது அவனிடமுள்ள மண் மண்ணோடும், நீர் நீரோடும், தீ தீயோடும், காற்று காற்றோடும் கலக்கின்றன. இந்திரியங்கள் வானத்தில் செல்கின்றன...... தானம் என்ற புரளியை அறிவிலிகள் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். ஆத்திகம் பேசுகிறவர்களின் பேச்சு வெறும் பொய். வீண் பிதற்றல். உடல் வீழ்ந்ததும் அறிவாளிகளும் அறிவிலிகளும் சிதைவடைந்து அழிகிறார்கள். செத்த பிறகு அவர்களுடைய மிச்சம் ஏதும் இருப்பதில்லை.[30]

என்பது அவரது கோட்பாட்டின் சுருக்கம். புத்தர் முதலானவர்களின் வரிசையில் இடம் பெற்றிருப்பதே அசிதகேசகம்பாளனின் புகழுக்கும் பெருமைக்கும் சான்றாகும். இந்தப் பின்புலத்தில், தொல்காப்பியரைப் பற்றிப் பனம்பாரனார், 'பல்புகழ் நிறுத்த படிமையோன்' என்று குறிப்பிடுவதைக் காணும்போது, அய்ந்திர மரபாளர்களுக்கு எத்தகைய சிறப்பு கிடைத்தது என்பதை அறிய முடிகின்றது.

பேச்சுக் கலையின் பிறப்பிடம்

உலகாய்தம் அய்ம்பூதங்களைப் பற்றிய அறிவியலாகவும், மெய்யியல்களுள் ஒன்றாகவும் மட்டும் இல்லாமல் அளவையியலுக்கும் அடித்தளமாக அமைந்திருந்தது. உலகாய்தர்கள் பேச்சாற்றல் மிக்கவர்கள். தமது பேச்சாற்றலின் (வாதத் திறமையின்) துணையால் மாற்றுக் கோட்பாட்டாளர்களை வென்று தம் கோட்பாட்டினை நிலைநாட்டியவர்கள். ஒற்றன் எனக் கருதிச் சிறை வைக்கப்பட்டிருந்த இளந்தத்தன் என்ற புலவரைச் சிறைமீட்கும் வகையில் கோவூர்கிழார் பாடிய புறப்பாடல் இத்தகையோரின் பேச்சாற்றலை விளக்கும். 'அரசர்கள் மாற்றாரை செருக்களத்தில் வென்று எவ்வாறு செம்மாந்து செல்வார்களோ அதைப் போன்றே மாற்றாரை வாதில் வென்று செம்மாந்து செல்லுதல் எம்மனோர் இயல்பு'[31] என்பது அப்பாடலின் கருத்து

---

30. தர்மானந்தகோசாம்பி, பகவான் புத்தர், ப. 248.

31. புறம். 47.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'இந்திய மெய்யியல் வரலாறு' என்ற நூலில் அதன் ஆசிரியர் தாசுகுப்தா சுக்கிரநீதியில் வரும் பகுதியினை மேற்கோள் காட்டி உலகாய்தர்களின் பேச்சாற்றலை விளக்குவார். அப்பகுதியாவது:

> சுக்கிரநீதி, அக்காலத்தில் பயிலப்பட்ட பல்வேறு அறிவியல் கலைசார்ந்த கல்வி முறைகளைப் பட்டியலிடுகின்றது. அவற்றுள் அளவை இயலை அடிப்படையாகக் கொண்டதும், வலிமை வாய்ந்த சொல்லாற்றலை விளக்குவதுமான நாத்திக சாத்திரமும் அடங்கும் அந்த நாத்திக சாத்திரம் பொருள்கள் அவற்றின் இயற்கையான இயல்புகளுடன் உள்ளன என்பதை வற்புறுத்துவதுடன் கடவுள் மறுப்பையும் வேத மறுப்பையும் வற்புறுத்துவதாகும்[32]

என்பதாகும்.

இங்குக் குறிப்பிடப்பெறும் 'நாத்திக சாத்திரம்' என்பது உலகாய்த சாத்திரமே ஆகும். அத்தகைய நூல்களுக்கு உரைகளும் இருந்தன என்று அறிஞர்கள் குறித்துள்ளனர்.

> ஆகவே, இதன்மூலம் உறுதிப்படுவது என்னவெனில் உலகாய்த சாத்திரம் என நூல் ஒன்று இருந்தது என்பதும், அதற்குக் குறைந்தது ஓர் உரையாவது இருந்திருக்க வேண்டும் என்பதும் அதுவும் கி. மு. 300-க்கு முன்னரே இருந்திருக்க வேண்டும் என்பதும் ஆகும்.[33]

உலகாய்த சாத்திரத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்ட உரை நூல்கள் இருந்ததாகவும் சிலர் குறிப்பர்.

உலகாய்த சாத்திரம், அளவை இயலின் நுட்பங்களை விளக்கிய அறிவியல் நூலாகவே மதிக்கப்பட்டது என்பதைப் புத்த சமய நூலாகிய 'திக்க நியாயம்' குறித்துள்ளது. அத்துடன், சொல்லாற்றல்மூலம் தம் கருத்துக்களை நிலைநாட்டும் சமயக்கணக்கர் இந்நூல்களை நன்கு கற்றனர்; குறிப்பாகப் பார்ப்பனர்கள் இச்சாத்

32. The Sukra-Niti gives along enumeration of the Science and Arts that were studied and in this it counts the Nastika-Sastra as that which is very strong in logical arguments and regards all things as proceeding out of their own nature and considers that there are no Vedas and no Gods.
—Das Gupta, History of Indian Philosophy, p. 515.

33. Ibid, p. 515.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரங்களில் தேர்ச்சி பெற்றிருந்தனர் என்பதையும் புத்த சமய நூல்கள் குறிப்பிடுகின்றன.

அங்குத்தாரா, திவ்விய வதனா போன்ற பௌத்த நூல்களில் உலகாய்த சாத்திரம் கல்வியுள் ஒரு பிரிவாகவே குறிக்கப்பட்டுள்ளது. அத்துடன் அதற்கு உரைகளும் விருத்திகளும் இருந்தன என்பதையும் அந்நூல்கள் குறித்துள்ளன.

சொல்லாற்றலை வளர்த்துக்கொள்ள விரும்பிய ஒவ்வொரு மெய்யியல் பிரிவினரும்—கல்வியாளர்களும் விரும்பியும், முயன்றும் கற்ற நூலாக மட்டுமன்றிச் சிறந்த கல்வித்துறையாகவும் உலகாய்த சாத்திரம் விளங்கியது என்பதை மேற்காட்டிய சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

வடநாட்டுப் பாணினியும் தமிழ்நாட்டுத் தருமியும்

அய்ந்திரத்தைச் சமற்கிருத இலக்கணமாகச் சொல்லிய பர்னல் தம் கூற்றுக்குச் சான்றாகப் பாணினி பற்றிய கதை ஒன்றையும் காட்டுகின்றார். வரருசி காத்தியாயனர் கூற்றாக வரும் அக்கதை வருமாறு:

> வருசாரியார் என் குரு. அவரிடமே நானும் பாணினியும் இலக்கணம் பயின்றோம். பாணினி அறிவிலி (சடபுத்தி) யாய் இருந்தான். ஆசிரியருக்கு வேண்டிய தொண்டுகளைக்கூட அவன் ஆற்றுவதில்லை. அதனால் வருசாரியாரின் மனைவியார் பாணினியைக் குருகுலத்தினின்றும் விலக்கிவிட்டார். அவனோ தான் ஒரு பெரும் புலவன் ஆதல் வேண்டும் என உறுதி கொண்டான். இமயமலையில் சிவபெருமானை நோக்கித் தவம் இருந்தான். நீண்ட பெருந்தவத்திற்குப் பிறகு சிவன் அவனுக்கு சமற்கிருத வியாகரணத்தை அருளினார். வரம் பெற்ற பாணினி என்னை வாதத்துக்கு அழைத்தான். எனக்கும் அவனுக்கும் ஏழு நாட்கள் வாதங்கள் நிகழ்ந்தன. வாதத்தில் நானே வென்றேன். தன் அருள்பெற்ற பாணினி தோற்றது கண்டு—தோற்கடிக்கப்பட்டது கண்டு என் மீது சிவபெருமானின் சீற்றம் பாய்ந்தது. உடனே எங்களுடைய அய்ந்திரம் அழிக்கப்பட்டது.[34]

34. Burnel, The Aindra School of Sanskrit Grammar, p.10

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பர்னல் காட்டும் இம்மேற்கோளில் வரும் அய்ந்திரம், இக்கதை அமைப்பின்படி சொல்லாற்றலுக்குரிய நூலாகத் தோன்றுகின்றதே யன்றி, இலக்கண நூலாகத் தோன்றவில்லை.

சாரிபுத்தன் தன் மாணவப் பருவத்தில் தென்னகத்தில் பயின்றதாகக் குறிப்பிடும் அய்ந்திரமும், காத்தியாயனரைச் சொல்லாடலில் வெற்றிகொள்ள முடியாத நிலையில் சிவனால் அழிக்கப்பட்டதாகச் சொல்லப்படும் அய்ந்திரமும் பேச்சுக் கலையோடு தொடர்பு கொண்டுள்ளன என்பது தெளிவு.

தோல்வியுற்ற பாணினிக்காகச் சிவன் அய்ந்திரத்தை அழித்தான் என்ற நிகழ்ச்சி, அய்ந்திர மரபை எதிர்த்தவர்கள் மேற்கொண்ட வன்முறையை எடுத்துக் காட்டும்.

பாணினி—காத்தியாயனர் மோதலைப் போன்றே தமிழ் இலக்கியத்திலும் தருமி—நக்கீரர் கதை அமைந்துள்ளது. இக்கதை சிவபெருமானின் 64 திருவிளையாடல்களுள் ஒன்றாகவும் புனையப் பட்டுள்ளது. தொகைநூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகையில், இறையனார் என்ற புலவர் பெயரில் அமைந்துள்ள ஒரு பாடலே இக்கதைக்கான கரு. இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையதென்பதைத் தலைவன் வண்டை வினாவுதல் வாயிலாகப் புலப்படுத்தி, நலம் பாராட்டிய வகையில் அமைந்தது அப்பாடல்.

'தலைவியின் நாணத்தைப் போக்கத் தலைவன் பொய் பாராட்டும் வண்ணம் வண்டைப் பார்த்து வினவிய கற்பனை வளம் சான்ற இப்பாடல்,[35] சிவபெருமான் தருமி என்ற பார்ப்பனனுக்காகப் பாடிக் கொடுத்ததாகத் திரிக்கப்பட்டுவிட்டது.

சிவன் எழுதிக்கொடுத்த இப்பாடலைத் தருமி, புலவர் நிறைந்த பாண்டியனின் அவையில் படிக்க, நக்கீரர் இதில் பொருள் குற்றம் இருப்பதாகக் கூறுகின்றார். நக்கீரரின் குற்றச்சாட்டிற்கு விடை கூற முடியாத தருமியைக் காப்பாற்றச் சிவபெருமானே அவையில் தோன்றித் தன் நெற்றிக் கண்ணைச் சிறிதே திறந்து காட்டுகின்றார்.

கற்றைவார் சடையான் நெற்றிக்
கணணினைச் சிறிதே காட்டப்
பற்றுவா னின்றும் அஞ்சான்
உம்பராற் பதிபோ லாகம்

35. குறுந், 2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முற்றுநீர் கண்ணா னாலும்
மொழிந்தநின் பாடல் குற்றங்
குற்றம் குற்றமே

என்றார் நக்கீரர். உடனே,

தேய்ந்த நாண்மதிக் கண்ணியா னுதல்விழிச் செந்தீப்
பாய்ந்த வெம்மையிற் பொறாது பொற்பங்கயத் தடத்துள்
ஆய்ந்த, நாவலன் போய்விழுந் தாழ்ந்தனன்[36]

என்று திருவிளையாடல் புராணம் புனையும்.

ஆய்ந்த நாவலனாகிய நக்கீரர், 'பாடலில் உள்ளது பொருட் குற்றமே' என்றார். பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் இருக்க முடியாது. அப்படி இருப்பதாகச் சிவபெருமான் நம்பி இருந் தால் அதனைப் பலரும் காணும் வகையில் மெய்ப்பித்திருக்க வேண் டும். அதனை விட்டுவிட்டுக் குற்றம் கண்ட நக்கீரரைத் தீப்பார்வை யால் பொசுக்குகின்றான் சிவன். வெம்மை தாங்க மாட்டாத நக்கீரர் குளத்தில் போய் விழுந்து ஆழ்ந்தனர் என்பதால் அவர் குளத்தில் மூழ்கடிக்கப்பட்டார் என்பது உய்த்துணரப்படுகிறது.

இக்கதையின் தொடர்ச்சியில் நக்கீரர் மீண்டும் அருள்பெறுவ தாகத் திருவிளையாடல் புராணம் தொடர்கிறது. ஆனால் தருமிக்குப் பொற்கிழி அளித்த படலத்தில் நக்கீரனுக்கு ஏற்பட்ட முடிவும், தில்லையில் நந்தனுக்கு ஏற்பட்ட முடிவும் ஒன்றுபோலுள் ளது குறிப்பிடத்தக்கது.

திருவிளையாடல் புராணம் சிவனின் பெருமையையும், பார்ப் பனர்களின் உயர்வையும் வற்புறுத்த அமைந்த நூல். இதில் நக்கீரர் பகுத்தறிவு சான்ற கேள்விகளைக் கேட்டார். அதனால் தீயின் வெம்மைக்கு ஆற்றாமல் குளத்தில் வீழ்ந்து ஆழ்ந்தார் என்பதில் வியப்பில்லை. இக்கதையுடன் காத்தியாயனரிடம் சொல்லாடலில் தோற்ற பாணினிக்காகச் சிவபெருமான் அய்ந்திர நூலையே அழித் தார் என்பதும் ஒப்பிடத்தக்க நிகழ்ச்சிகள். இவை ஆராய்ச்சிக் குரியனவும் ஆகும்.

பௌத்தரின் நாளந்தா பல்கலைக்கழகம் இரவோடு இரவாகத் தீ வைக்கப்பட்டு அழிக்கப்பட்டது. மதுரையில் சமணர்களின் நூல்கள் எல்லாம் அனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் அழிக்கப் பட்டன. இவற்றின் முன்னோடியாக உலகாய்த நூல்களுக்கும்

36. திருவிளையாடற்புராணம், தருமிக்குப் பொற்கிழி அளித்த படலம், பா. 28.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகாய்த அறிஞர்களுக்கும் ஏற்பட்ட நிலைமைகளையே பாணினி—தருமிகளின் கதைகள் நினைவூட்டுகின்றன எனலாம்.

சொல்லாடல் முறையினை விளக்கும் அளவையியல் நூலாக அய்ந்திரம் சுட்டப்படுவதால் அது அறிஞர்கள் காட்டும் உலகாய்த சாத்திரமாக இருத்தல் வேண்டும். அத்துடன் இக்கலையைக் கற்க வடநாட்டிலிருந்து தென்னகத்திற்கு வந்தனர் என்பதால் இக்கலையின் பிறப்பிடமும் செழிப்பிடமும் தமிழகமே என்பதும் தெளிவு.

இந்திரவியாகரணம்

உலகாய்த] சாத்திரத்திற்குக்] கி. மு. 400—300க்கு முன்னரேயே ஒன்றுக்கு மேற்பட்ட உரைகள் இருந்தன என்று அறிஞர்கள் குறிக்கின்றனர். எனவே இந்திரவியாகரணம் அக்கலையின் உரையாக இருக்கலாம்.

உரையாசிரியர்களின் உரைச் சிறப்பால் நூலுக்குரிய பெருமை உரைகளுக்கும் அமைவது இயல்பு. தொல்காப்பியத்திற்குச் சேனாவரையரால் எழுதப்பட்ட உரை 'சேனாவரையம்' என்று வழங்குவது ஒப்புநோக்கத்தக்கது. இளம்பூரணம், நச்சினார்க்கினியம், பேராசிரியம் என்பனவும் எண்ணுக. இதைப் போன்றே உலகாய்தக் கலைக்கு அதாவது அய்ந்திரக் கலைக்கு இந்திரன் என்பவரால் எழுதப்பட்ட உரை அதன் சிறப்பு காரணமாக 'இந்திர வியாகரணம்' என்றே அழைக்கப்பட்டிருக்க வேண்டும். சமண ஆசீவக பௌத்தக் கோட்பாடுகளில் இந்திரன் என்ற பெயர் பரக்க இடம் பெற்றுள்ளதும் சிந்திக்கத்தக்கது.

அய்ந்திரக்கடல்

அய்ந்திரத்தை நாத்திக சாத்திரம் என்றும், உலகாய்த சாத்திரம் என்றும் நூல்கள் குறித்துள்ளன. ஆனால் கம்பர் அய்ந்திரக் கலை என்றும், அய்ந்திரக் கடல் என்றும் இதனைப் போற்றுகின்றார்.

கம்பராமாயணத்துள் வரும் பாத்திரங்களுள் சொல்லாற்றலால் புகழப்படுபவன் அனுமன். அவனை அறிமுகப்படுத்தும் போதே கம்பர், அவனது சொல்லாற்றலை—மாற்றாரைக் கவரும் அவனது நாவன்மையை இராமனைக்கொண்டே வியக்கச் செய்கின்றார். சுக்கிரீவனுக்கு வாலியினால் ஏற்பட்ட இன்னல்களை அனுமன் இராமனிடம் எடுத்துக்கூறிய மாத்திரத்திலேயே, இராமன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லாத உலகத் தெங்கும்
இங்கிவன் கலைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக்
கடலுமே என்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே
யார்கொலிச் சொல்லின் செல்வன்
வில்லார்தோள் இளைய வீர
விரிஞ்சனோ விடைவல் லானோ[37]

என்று 'யார்கொலிச் சொல்லின் செல்வன்' என வியக்கின்றான்.

வேதக்கடலோடு இணையாகக் கூறப்படும் 'கல்லாத கலை' என்ற தொடருக்கு 'இநதிர வியாகரணம்' என்று பொருள் தருவார் கம்பராமாயணத்தின் பழைய உரைகாரர். வடமொழியில் 'சாத்திரம்' எனச் சுட்டப்படும் தமிழ் அய்ந்திரத்தையே கம்பர் 'கலை' என்று குறிப்பிடுகின்றார்.

தமிழ் அய்ந்திரம், வடமொழி வேதத்தோடு இணையாக வைத்து எண்ணப்பட்டது என்பதே அய்ந்திர மரபின் பெருமையை விளக்கும். வேதம் தானாகவே தோன்றியது என்பதும், பிரும்மா சிவன் ஆகியோரால் உருவாக்கப்பட்டது என்பதும் வைதிகர்கள் வேதத்திற்கு ஏற்றிய பெருமைகள். இவ்வாறு கடவுட்டன்மை வாய்நததாகக் கருதப்படும் வேதத்திற்கு ஈடாக வேறு எதுவுமே இல்லை என்ற கருத்தை மறுப்பது போலவும் கம்பர் அய்ந்திரத்தை வேதத்தோடு ஒப்பிடுகிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. மேலும் 'கல்லாத கலையாக' அய்ந்திரம் முதலிடத்தில் வைத்துக் கம்பரால் கூறப்படுவதால் அது வேதத்தைவிட உயர்ந்ததாக மதிக் கப்பட்டதும் புலனாகின்றது.

இராமாயண மூலத்தில், அனுமனது சொல்லாற்றலைப் பல பாடல்களில் வியக்கின்றார் வால்மீகியார். அங்கும் அனுமனது பேச்சாற்றல் இராமனாலேயே புகழப்பட்டுள்ளது.

இராமனையும் இலக்குவனையும் சந்திக்க அனுமன் பார்ப்பன இளைஞன் வடிவத்திலேயே சென்று தமக்கும், தமது தலைவ னாகிய சுக்கிரீவனுக்கும் ஏற்பட்ட நிலைமைகளைச் சொல்லி முடிக் கின்றான். இவனது பேச்சாற்றலைக் கண்ட இராமன்,

> இருக்குவேதத்தில் பயிற்சி இல்லாத ஒருவனுக்கு இப்படிப் பேசுவதற்கு முடியாது. யசுர் வேதத்தில் பயிற்சி இல்லாத ஒருவனுக்கு முடியாது.

37. கம்பராமாயணம், கிட்கிந்தை—அநுமப்படலம், 61.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> சாமவேதத்தில் பயிற்சி இல்லாத ஒருவனுக்கு முடியாது. வியாகரணம் எல்லாமும் இவரால் பலமுறை நிச்சயமாய் கற்றறியப்பட்டிருக்கிறது. பல சொல் கூறிய இவரால் ஒன்றும் பிழைபடச் சொல்லப்படவில்லை...... புகழ்ந்து கொண்டாடத்தக்கதும் மனதைத் கொள்ளை கொள்ளு கிறதுமான பேச்சே பேசுகின்றார்[38]

எனப் புகழ்வான்.

இப்பகுதியில் மூன்று வேதங்களைக் கற்றவர்களால் சிறப்பாகப் பேச முடியும் என்பதைக் கூறும் வால்மீகியார் 'வியாகரணங்கள் அனைத்தையும் பலமுறை படித்தவன் அனுமன்' என்பதையும் வற்புறுத்தியுள்ளார்.

வால்மீகி வேதங்களை முதன்மைப்படுத்த, கம்பரோ கலை யாகிய அய்ந்திரத்தை முதன்மைப்படுத்துகின்றார்.

அனுமன் பார்ப்பனப் பிரம்மசாரி வேடத்தில் சென்றதாக வால்மீகி குறித்துள்ளது கருதத்தக்கது. பார்ப்பனர்கள் பலர் வேதக் கல்வியோடு அய்ந்திரத்தையும் நன்கு கற்றனர். தாசுகுப்தா,

> மகாபாரதத்தில் வேதங்களையும் அவற்றை ஒத்த பழைய இலக்கியங்களையும் கற்றறிந்த அறிஞர்கள் குறிக்கப்பட் டுள்ளனர். அத்துடன் அந்த இலக்கிய அறிஞர்கள் கடவு ளையோ, ஆன்மா மற்றும் மறுபிறப்பையோ நம்பாத வர்கள். இவ்வாறு மறுபிறப்பு, ஆன்மா முதலிய கோட் பாடுகளை மறுக்கும் இப்பொருள்முதல் கோட்பாட்டாளர் களின் தாக்கம் மெல்ல மெல்ல வேத வைதிகர்களிடம் செல்வாக்குப் பெறத் தொடங்கிற்று[39]

என்று விளக்குவதும் ஒப்புநோக்கத்தக்கது.

---

38. வால்மீகி, கிட்கிந்தை, அநுமப்படலம்.
39. Maha Baratha certain people are referred to who were well read in the Vedas and other older literature and yet didnot believe in the other world and in the immortality of the soul. This shows that this hetrodox view (that there was no life after death) was gradually spreading among certain section of Vedic people.
 — Das Gupta, History of Indian Philosophy, p. 531.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவேதான் வால்மீகி பார்ப்பன இளைஞன் வடிவில் வந்த அனுமனை வேதங்களைக் கற்றவனாகவும் வியாகரணத்தைப் பல முறை தேர்ந்தவனாகவும் பாராட்டுகின்றார்.

வியாகரணம் என்னும் வடமொழிச் சொல்லுக்கு விளக்கம், பிரிவு, தனித்தன்மை, கூரறிவு, வெளிப்படுத்து, செப்பம் செய்யப் பட்டதும், துல்லியம் வாய்ந்ததுமான மொழிநடை ஆகிய பொருட் கள் சொல்லப்பட்டுள்ளன. முண்டோக்கிய உபநிடதத்திலும் அதற்குப் பின்னர் வந்த பதஞ்சலி நூலிலும்தான் இலக்கணம் என்ற பொருள் கூறப்பட்டுள்ளது என்று மானியர் வில்லியம்சு தொகுத் துரைப்பார்.[40]

எனவே, வால்மீகியாரால், 'சொல்லாற்றல் மிக்கவனான அனுமன் பலமுறை கற்றுத் தேர்ந்ததாகக் குறிக்கப்படும்' வியாகர ணம் என்பது செப்பம் செய்யப்பட்டதும் துல்லியமான மொழி நடைகளை விளக்குவதுமாகிய அய்ந்திரமாகவே இருக்கவேண்டும் என்பது தெளிவு.

வால்மீகியார் 'வியாகரணம்' என்று குறிப்பதைக் 'கலை' எனத் தமிழ்ப்படுத்தும் கம்பர், அனுமனின் பேச்சாற்றலை விளக் கும் பல இடங்களில் அய்ந்திரத்தோடே தொடர்புபடுத்துகின்றார். யுத்த காண்டம், வீடணன் அடைக்கலப்படலத்தில்,

இயைந்தன இயைந்தன இனைய கூறலும்
மயிந்தனும் துமிந்தனும் என்னும் மாண்பினார்
அயிந்திரம் நிறைந்தவன் ஆணை ஏவலால்
நயந்தெரி காவலர் இருவர் நண்ணினார்[41]

என்பார். இப்பாடலில் 'அயிந்திரம்' நிறைந்தவனாக அனுமன் புனையப்படுகிறான்.

யுத்தகாண்டம் பிரமாத்திரப் படலத்தில்,

போயினார் போய வாறும்
போயின தன்றிப் போரில்
ஆயினா ராய தொன்றும்
அறிந்திலன் அனைய யாரும்

40. Monior Williams Sanscrit Dictionary, p. 1035

41. கம்பராமாயணம், யுத்த காண்டம், வீடணன் அடைக் கலப்படலம், 42.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேயினார் மேய போதே
தெரியலாம் விளைந்த தென்றான்
தாயினான் வேலை யோடும்
அயிந்திரப் பரவை தன்னை[42]

எனப் பாடுவார்.

வீடணன் அடைக்கலப்படலத்தில் வால்மீகியார் அனுமனைச் 'சாத்திர சிகாமணியாக'ச் சொல்ல,[43] கம்பரோ அய்ந்திரம் நிறைந் தவனாகப் புனைகிறார். இரண்டாவது மேற்கோள் பாடலில் அய்ந்திரக் கடலைக் கடந்தவன் என்பது கம்பரின் கூற்றாக அமைந் துள்ளதாகும்.

'அயிந்திரம் நிறைந்தவன் ஆணை'

'அயிந்திரப் பரவை தன்னை'

ஆகிய அடிகள் அனுமனின் சிறப்பை விளக்குவனமட்டுமல்ல அய்ந் திரக் கலையின் பெருமைகளையும் விளக்குவன.

எனவே, அய்ந்திரம் பேச்சுக்கலை உள்ளிட்ட பல்வேறு அறி வியல் துறைகளின் விளக்கமாக—மெய்யியல் பள்ளியாக விளங்கி யது என்பதும், அது வேதங்களைவிட உயர்வாக மதிக்கப்பட்டது என்பதும் தெளிவாகும்.

ஆன்வீக்சீகி

கௌடில்யரின் பொருள் நூல் அளவைஇயலைப் பற்றி மிக விரிவாகவும் தெளிவாகவும் குறித்துள்ளது. 'ஆன்வீக்சிகி' என்றும் 'தருக்கவித்தியா' என்றும் சொல்லப்படும் இவ்வளவை இயலை, அரசர்கள் கற்கவேண்டிய இன்றியமையாத கலை என வற்புறுத்தும் கௌடில்யர், இப் பேச்சுக்கலையை அறிவியலாக வளர்த்தவை சாங்கியம், யோகம், உலகாய்தம் என்ற மூன்றுந்தான் என்பதையும் வரையறை செய்கின்றார். இம்மூன்றும் திராவிடச் சிந்தனைகளின் கிளைகள் என்பதும் ஒரே மூலத்தைக் கொண்டவை என்பதும் அறிஞர் முடிபு.

'ஆன்வீக்சிகி—தருக்கவித்தியா' பற்றி விளக்கும் ச. சந்திரா,

42. கம்பராமாயணம், யுத்த காண்டம், பிரமாத்திரப் படலம், 155.

43. வால்மீகி, யுத்த காண்டம், வீடணன் அடைக்கலப் படலம்' பா. 50.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> ஆன்வீக்சிகி பகுத்தறிவுக் கோட்பாடுகளை உள்ளடக்கிப் பின்னாளில் அளவைஇயலாக வளர்ச்சி பெற்றது...... தருக்க வித்தை...... இது பட்டிமன்றப் பேச்சுக்கலை அல்லது, வாதவித்தை—உரையாடல்கலை என்றும் அழைக்கப்படும். 'பரிசத்' எனப்படும் பேரறிஞர்கள் கூடும் அவையில் பேசவேண்டிய வரன்முறைகளை விளக்கும் சட்ட திட்டங்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது[44]

என்று விளக்குவார்.

அறிஞர்கள் கூடிக் கருத்துப் பரிமாற்றம் கண்ட அவையைத் தமிழ் இலக்கியங்கள் 'மன்றம்' என்றும், 'அறங்கூறவையம்' என்றும் குறித்துள்ளன. கோப்பெருஞ்சோழன் அறிஞர்களைக் கூட்டி அவர்தம் சொல்லாடலைக் கேட்கும் இயல்பினன். இதனைப் பொத்தியாரின் கையறுநிலைப் பாடல் உணர்த்துகின்றது. 'தான் பல ஆண்டுகளாக வளர்த்த பெரிய யானை இறந்துபட அது கட்டப்பட்ட தறியும் இடமும் வறிதாகக் கிடக்கக் கண்ட பாகன், புலம்புவதைப்போல,

> கலங்கினே னல்லனோ யானே பொலந்தார்த்
> தேர்வண் கிள்ளி போகிய
> பேரிசை மூதூர் மன்றங் கண்டே[45]

என்பது பாடல்.

இத்தகைய மன்றங்கள் சோழர்களது உறையூரிலும், பாண்டியரது மதுரையிலும் சிறந்த புகழுடன் விளங்கின.[46] தொல்காப்பியம் அரங்கேறிய நிலந்தரு திருவின் பாண்டியன் அவையும் இத்தகைய மன்றமாகலாம். மணிமேகலை காலத்தில் இத்தகைய மன்றங்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்று, 'பாங்கறிந்தேறிய பட்டி மண்டபங்களாக' விளங்கின.

---

44. Anvikshiki dealing with the theory of 'Reasons' developed into Logic...... It was also called Tarka-vidya, the art of debate, or Vada vidya, the art of discussion in as much as it dealt with rules for carrying on disputations in learned assemblies called Parisad.
—Sathish Chandra, The History of Indian Logic, p. 7.

45. புறம். 220 : 5—7.

46. நற். 189, புறம். 71.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆன்வீக்சிகி பற்றி விளக்கிய ச. சந்திரா, கௌடில்யர் குறித்துள்ள 32 தந்திர உத்திகளையும் பேச்சுக் கலைக்குரிய இலக்கண உத்திகள் என்றே குறித்துள்ளார்.[47]

பேச்சுக் கலைக்குரிய இலக்கணமாகக் கௌடில்யரால் குறிக்கப்பட்டுள்ள 32 தந்திர உத்திகளையும் தொல்காப்பியர் குறித்துள்ள 32 தந்திர உத்திகளோடும் ஒப்பிட்டு, ஒப்பாய்வு மேற்கொள்ளல் பல புதிர்களை விடுவிக்கத் துணை செய்வதாகும்.

தொல்காப்பியர் கூறும் பத்துக் குற்றங்களையும் வகைப்படுத்திக் காணும்போது அவை நூல் இயற்றுவோருக்கு மட்டுமன்றி, சொல்லாடல் வல்லாருக்குமுரிய மேடைப் பேச்சின் வரையறையாகவும், அளவைஇயலின் உறுப்புகளாகவும் அமைந்துள்ளன என்பது தெளிவு.

> சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
> கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
> குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
> பொருளில கூறல் மயங்கக் கூறல்
> கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
> பழித்த மொழியான் இழுக்கக் கூறல்
> தன்னான் ஒருபொருள் கருதிக் கூறல்
> என்ன வகையினும் மனங்கோள் இன்மை
> அன்ன பிறவும் அவற்றுவிரி யாகும்[48]

என்பது நூற்பா. இதில் வரும் 'கூறல்' என்னும் சொல்லும் 'கேட்போர்க்கு' என்னும் சொல்லும் மேற்கூறிய கருத்தை வலியுறுத்தும்.

தந்திர உத்தி

தந்திரம்+உத்தி=தந்திர உத்தியாகும். இரு சொற்களுமே தமிழ்ச் சொற்கள். 'உத்' என்னும் தமிழ் வேர்ச் சொல்லிற்கு மேடு, உயர்வு, தோன்றல், எல்லை ஆகிய பொருள்கள் உண்டு. இவ்வேர்ச் சொல்லின் அடியாகப் பிறந்தவையே உத்திரம் (விட்டம்), உதியன், உதித்தல், உத்தரவு ஆகிய சொற்கள். தமிழக மக்கள் வழக்கிலும் உத்தி என்ற சொல் சிறுவர்களின் விளையாட்டில் இணை—பிரிதல், எல்லை ஆகிய பொருட்களில் பயின்று வருதல் குறிக்கத்தக்கது. 'விடையிறுத்தல்—பதில்' ஆகிய பொருளில் 'உத்தாரம் கூறுதல்' என்ற சொல்லும் மக்கள் வழக்கில்

47. Sathish Chandra, The History of Indian Logic, p. 10.

48. தொல். மரபியல் 663.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளதும் இதன் தமிழ்த் தன்மையை விளக்கும் என்பார் பே. க. வேலாயுதம்.[49]

நன்னூலார் தந்திர உத்தியை,

நுற்பொருள் வழக்கொடு வாய்ப்பக் காட்டி
ஏற்புழி யறிந்திதற் கிவ்வகை யாமெனத்
தகும்வகை செலுத்துதல் தந்திர உத்தி[50]

என்று விளக்குவார். நூலுக்குப் பொருந்துவது தந்திரஉத்தி என்பார் ஆறுமுக நாவலர்.

தொல்காப்பியம் காட்டும் 32 தந்திர உத்திகள்

1. நுதலி அறிதல்
2. அதிகார முறைமை
3. தொகுத்துக் கூறல்
4. வகுத்து மெய்ந்நிறுத்தல்
5. முட்டின்றி முடித்தல்
6. வாராததனான் வந்தது முடித்தல்
7. வந்தது கொண்டு வாராதுணர்தல்
8. முந்து மொழிந்ததன் தலைதடுமாற்று
9. ஒப்பக்கூறல்
10. ஒருதலை மொழிதல்
11. தன்கோட் கூறல்
12. முறைபிறழாமை
13. பிறன் உடன்பட்டது தானுடன்படுதல்
14. இறந்தது காத்தல்
15. எதிரது போற்றல்
16. மொழிவாமென்றல்
17. கூறிற்றென்றல்
18. தான்குறியிடுதல்
19. ஒருதலையன்மை

49. பே. க. வேலாயுதம், நேரடி உரையாடல், 15-3-1985.
50. நன்னூல் சிறப்புப் பாயிரம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

20. முடிந்தது காட்டல்
21. ஆணை கூறல்
22. பல்பொருட்கேற்பின் நல்லது கோடல்
23. தொகுத்த மொழியான் வகுத்துக் கோடல்
24. மறுதலை சிதைத்துத் தன் துணிபுரைத்தல்
25. பிறன்கோட் கூறல்
26. அறியாதுடன்படல்
27. பொருளிடை இடுதல்
28. எதிர்பொருள் உணர்தல்
29. சொல்லின் எச்சம் சொல்லியாங்குணர்தல்
30. தந்துபுணர்ந்துரைத்தல்
31. ஞாபகங் கூறல்
32. உய்த்துக் கொண்டுணர்தல்

முதலியன.

சமற்கிருத அரசியல் நூலான அர்த்தசாத்திரத்தில் சொல்லப் படும் 32 உத்திகளில் 17 உத்திகள் தொல்காப்பியர் கூறும் உத்திக ளோடு தொடர்புள்ளனவாகச் சுப்பிரமணிய சாத்திரி குறிப்பிடு கிறார்.[51] ஆனால் சாரகசம்கிதையில் கூறப்படும் 34 உத்திகளுள் 23 உத்திகள் தொல்காப்பியத்தோடு பொருந்தி உள்ளன.

தொல்காப்பியம்—பொருள் நூல்
இரண்டிலும் உள்ள உத்திகளின் ஒற்றுமை

தொல்காப்பியம்	பொருள் நூல்
அதிகார முறைமை	அதிகர்ண ா
தொகுத்துக் கூறல்	உத்தேசா
வகுத்து மெய்ந்நிறுத்தல்	நிர்தேசா
மொழியாததனை முட்டின்றி முடித்தல்	ஏதுவர்த்தா
வாராததனான் வந்தது முடித்தல்	பிரதேசா
முந்துமொழிந்ததன் தலை தடுமாற்றே	விப்ராயயா
ஒப்பக்கூறல்	அதிர்ஸ்த்யா
ஒருதலை மொழிதல்	உபதேசா
பிறன் உடன்பட்டது தானுடம்படுதல்	அனுமதா

51. P.S. Subramaniya Sastri, Tholkappiyam. pp, 98-100.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழிவாமென்றல்	அனாகதாவேக்சனா
கூறிற்றென்றல்	அதிக்ராந்தவேக்சனா
தான்குறியிடுதல்	ஸ்வசமஜ்னா
ஒருதலையன்மை	ஏகாந்தா
ஆணைகூறல்	நியோகா
பிறன்கோட் கூறல்	பதேசா
உய்த்துக்கொண்டுணர்தல்	ஊகா

தொல்காப்பியம்—சாரகசம்கிதை இரண்டிலும் உள்ள ஒற்றுமை[52]

மொழிவாமென்றல் (பயன் நோக்கி முற்கூறுதும் என்றல்)	பிரயோஜனா (பயன்)
கூறிற்றென்றல்	நிர்ணயா
முடிந்தது காட்டல் (சொல்லுகின்ற பொருட்கு வேண்டுவனவெல்லாஞ் சொல்லாது தொல்லாசிரியர் கூறினார் என்று சொல்லுதல்)	அனேகாந்தா (உறுதியல்லாத நிலை)
பிறன்கோட் கூறல்	உத்தாரா
மறுதலை சிதைத்துத் தன் துணிபுரைதல்	சம்பவா (மெய்ப்பிக்கக்கூடிய)

தொல்காப்பியர் நூலின் குற்றங்களாகக் கூறும் 'கூறியது கூறல்' சாரகசம்கிதையில் 'பிரத்யுச்சாரா' என உத்தி வகையில் சொல்லப்பட்டுள்ளது.

ஆன்வீக்சீகி—தந்திர உத்தி

ஆன்வீக்சிகி பற்றி எந்த விளக்கத்தைக் கொடுத்தாரோ அதே விளக்கத்தையே தந்திர உத்திக்கும் தருவார் ச. சந்திரா.

> 'அறிவியல் பூர்வமான சொல்லாடல் முறை' எனப்படும் தந்திர உத்தி, கற்றறிந்தோரின் அவையாகிய பட்டிமன்றத்தின் நெறிமுறைகளை விளக்க அமைந்தது. இது கி. மு. ஆறாம் நூற்றாண்டுவாக்கில் தொகுக்கப்பட்டிருக்கலாம்.[53]
>
> 'சிசுருத சம்கிதை', 'தந்திர உத்தி' மூலமாக பட்டிமன்றத்தில் ஒரு வாதி, தன் எதிரிகளை மிக எளிதாக வீழ்த்தித்

52. R. S. Subramaniya Sastri, Tholkappiyam, pp. 98-100.
53. Sathish Chandra, The History of Indian Logic, p. 24.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன் பெருமைகளை நிலைநாட்ட முடியும் என்று தெளிவாக வரையறை செய்கின்றது.

> ஏது சாத்திரம் என்னும் அளவை இயல் துறையில், வாதத் தன்மைகளையும் பட்டிமன்ற நெறிமுறைகளையும் வகைப்படுத்தி அமைந்த நூல்களில் 'தந்திர உத்திக்கு' ஈடான பழமையான நூல் ஏதும் இல்லை[54]

என்று தந்திர உத்தியின் பழமையினை விளக்குகின்றார்.

கி. மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து வடமொழி இலக்கிய மரபில் மேடைப் பேச்சுக்குரிய—சொல்லாடல் வல்லார் பின்பற்றுதற்குரிய கையேடாகப் பயன்பட்ட இந்நூலை முதன் முதல் குறிப்பிடுவது சாரகசம்கிதைதான். இதனை அடுத்துச் சிசுருத சம்கிதையும் அதனை அடுத்த கௌடில்யரின் பொருள் நூலும் குறித்துள்ளன.

இந்நூல்களில் இடம் பெற்றுள்ள 'தந்திர உத்தி'யின் காலம் எது? யாரால் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை ஆராயும் ச. சந்திரா,

> அரசியல் நெறிகளைக் கூறும் பொருள் நூலின் இறுதி அத்தியாயத்தில் 32 வகையான கலைச் சொற்களைத் தந்திர உத்தி அல்லது அறிவியல் அடிப்படையிலான வாத முறைகளின் அமைப்பு எனக் குறித்துள்ளார். இதே பட்டியல் சாரகசம்கிதை, சுசுருகசம்கிதை என்ற இரண்டு மருத்துவ நூல்களிலும் காணப்படுகின்றது. இத் தந்திர உத்தி கௌடில்யராலோ அல்லது அவ்விரு சம்கிதைகளின் ஆசிரியர்களாலோ தொகுக்கப்பட்டிருக்க முடியாது என்பது உறுதி. மாறாக இவை பட்டிமன்றங்களில் தமது கருத்துக்களை அறிவின் அடிப்படையில் நிலைநாட்ட யார் விரும்பி இருப்பாரோ அவரால் அல்லது அவர்களால்தான் இது தொகுக்கப்பட்டிருக்க வேண்டும்[55]

என்று விளக்குகின்றார்.

---

54. Sathish Chandra, The History of Indian Logic pp. 24—25.
55. In the last chapter of the 'Artha Sastra' a work on polity, Kautilya gives list of thirty two Technical Terms called Tantra-Yukti or the forms of scientific Arguments. The list appears also in the Caraka Samhita and Susuruta-Samhita two authoritative works on medicine. It was evidantly prepared neither by Kautilya nor by the authors of the two Samhitas, but by a person or persons who wanted to establish debates on a scientific basis.
—Sathish Chandra, The History of Indian Logic p. 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யசுர்வேதத்தின் சாகைகளையும் அவற்றின் ஆசிரியர்களையும் அக்காலத்தில் 'சாரகா' எனக் குறித்துள்ளனர். யசுர்வேதமும் பிறவும் தொகுக்கப்பட்டது பற்றி நச்சினார்க்கினியர்,

> நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையின் நான்மறை என்றார். அவை தைத்திரியமும், பெளடிக மும், தலவகாரமும், சாமவேதமுமாம். இனி, இருக்கும் யசுவும் சாமமும், அதர்வணமும் என்பாரும் உளர், அது பொருந்தாது. இவர் இந்நூல் செய்த பின்னர் வேத வியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தார் ஆதலின்[56]

என்று, தொல்காப்பியத்திற்குப் பின்னர்தான் வேதங்கள் தொகுக் கப்பட்டதாகக் குறிப்பார்.

எனவே சாரக சம்கிதையில் 'தந்திர உத்தி' குறிக்கப்பட்டிருந் தாலும், தந்திர உத்தியைத் தொகுத்தவர் சாரகர் இல்லை என்ப தாலும், சாரக சம்கிதையின் மூலமாகிய யசுர்வேதத் தொகுப்பே தொல்காப்பியருக்குப் பிற்பட்டதாகலானும், அளவை இயலை அடிப்படையாகக்கொண்ட உலகாய்தம் தென்னகத்திற்கேயுரிய மெய்யியல் ஆகலானும், இதனைப் பயில வேண்டியே தென் னகத்தை நோக்கிப் பல மெய்யியலாரும் வந்துள்ளனர் என்பதாலும் தந்திரம், உத்தி ஆகிய இருசொற்களுமே தமிழ்ச் சொற்களாக, தமிழக நாட்டு வழக்கில் பேசப்படும் சொற்களாக உள்ளமை யாலும் 'தந்திர உத்தி' என்பது தமிழ் மரபுக்குரிய தமிழ் அறிஞர் களால் எழுதப்பட்ட தமிழ் நூலாகவே இருக்கவேண்டும்.

தமிழ் வழக்கே!

> தமிழ்கூறு நல்லுலகத்து
> வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
> எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
> செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
> முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
> புலந்தொகுத் தோனே[57]

---

56. தொல். பாயிரம், நச். உரை.

57. பனம்பாரனார், தொல். பாயிரம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று செந்தமிழ் நிலத்தோடு பொருந்தி வளர்ந்து நிறைந்த மொழி மரபின் அடிப்படையிலேயே தம் நூலை அமைத்துள்ளார் தொல் காப்பியர் என்பதை இப்பாயிரத்தால் தெளிவுபடுத்துகின்றார் பனம்பாரனார். இக்கருத்தை அரண் செய்யும் வகையில் அமைந் துள்ள பேராசிரியரின் உரை விளக்கமும் கருதத்தக்கது.

முதல்வழி யாயினும் யாப்பினுட் சிதையும்
வல்லோன் புணரா வாரம் போன்றே

என்ற நூற்பாவின் உரையில் பேராசிரியர்,

> தமிழ் நாட்டு வழக்கிற்கு முதன் நூலாகிய அகத்தியத்துண் மொழிபெயர்த்துச் செய்ய வேண்டும் பொருளில வாகலா னும், பிறபாடைக்கும் பொதுவாயின பொருளவாயின், அவையும் தமிழ் வழக்கு நோக்கியே அவர்க்கும் இலக் கணஞ் செய்யப்படும் ஆகலானும்[58]

எனத் தொல்காப்பியம் வேறு மொழிக்குத் தொடர்பான கருத்தைச் சொல்லும் போதும், தமிழ் வழக்குப் பற்றியே கூறும் என்பதை விளக்குவார்.

சமற்கிருதம், தமிழ் ஆகிய இரண்டு மரபுகட்கும் தொடர்பான செய்திகளைச் சொல்லும் ஒரு சில இடங்களிலும் தொல்காப்பியர் இரண்டு மரபுகளையும் சொல்லிப் பின்னர் தாம் விளக்குவது எம் மரபுக்குரியது என்பதையும் தெளிவுபடுத்தும் இயல்பினர். சான் றாகப் பொருளதிகாரம் களவியலில் வரும் நூற்பாவைக் காட் டலாம்.

தம்மால் சொல்லப் பெறும் களவு தமிழ் மரபுக்குரியது என் பதை விளக்கும் தொல்காப்பியர், வட மரபின் திருமண முறை களைக் கூறி அவற்றுள் இத்தமிழ்க் களவு எதனுடன் ஒக்கும் என்பதை வகைப்படுத்துவார்.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த அய்ந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே[59]

என்பது நூற்பா.

---

58. தொல். செய்யுளியல் 662 பேராசிரியர் உரை.

59. தொல். களவியல் 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதே போன்று இளவி ஆக்கத்தில் 'பார்ப்பாரது வேதத்தில் பொருள் தெரியாத காற்றிணைக் கூறுபாடு செய்து மாத்திரை கூட்டிக்கொள்ளும் வழக்கம் உள்ளது. ஆனால் யான் அவ்வாறு செய்யாது எழுத்துரப்பெற்ற பொருள் தெரியும் காற்றிற்கே அளவு கூறினேன்' என்பார்.

அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
அஃதிவண் நுவலாது எழுந்து புறந்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபு நுவன்றிசினே[60]

என்பது நூற்பா.

மேற்காட்டிய சான்றுகளினால் பேராசிரியர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளதைப்போல, பிற மொழிக்கும் பொதுவான மரபினைச் சொல்லும்போதுகூடத் தமிழ் மரபை ஒட்டியே விளக்கும் இயல்பினர் தொல்காப்பியர் என்பது தெளிவு. இந்தப் பின்னணியில், 'தந்திர உத்தி' வட மரபிலும் இருந்திருக்குமாயின், தொல்காப்பியர் அதனைக் குறிப்பிடாமல் இருந்திருக்கமாட்டார் என்பது உறுதி.

தொல்காப்பியரைப் போலவே வள்ளுவரும் 'அய்ந்திர மரபை'ச் சார்ந்தவர் என்பது தெளிவு. இதற்கான சான்றுகளைத் திருக்குறளில் இருந்தே காணலாம்.

அய்ந்திர மரபாகிய இவ்வுலகாய்தத்தின் அடிப்படையாக அமைந்த பேச்சுக் கலையை வள்ளுவர் பல்வேறு அதிகாரங்களுள் குறித்துள்ளார். 'சொல்வன்மை' என்ற அதிகாரத்தை அமைச்சியலின் ஒரு கூறாகவே கருதும் வள்ளுவரின் கருத்தும் இங்கே ஒப்பு நோக்கத்தக்கது.

விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்

நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று[61]

60. தொல். எழுத்து. 102 : 2—6.
61. குறள். 648, 641.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக்குறள்களில் பேச்சாற்றல் மிக்கவரின் பெருமையை விளக்கும் வள்ளுவர்,

> திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்
> பொருளும் அதனினூஉங்கு இல்[62]

என்ற குறளில் சொல்லும் முறையையும், சொல்லாட்சியைக் கையாளுந் திறனையும் வற்புறுத்துகின்றார். சொல்லைத் திறனறிந்து சொல்லும் முறையினை விளக்குவதே தந்திர உத்தி. தொல்காப்பியரின் 32 உத்திகளோடு திருக்குறளை ஒப்பிட்டுத் தனி ஆய்வு மேற்கொண்டால் பல உண்மைகள் வெளிப்பட வாய்ப்பாகும்.

இவ்வாறு அறிவியல் அடிப்படையிலான சொல்லாடற் கலையை, 'மாட்சியின் மாசற்றார்' ஆகிய அறிஞர் தம் அவையில் பேசும் முறையை வகைப்படுத்தி, அளவை இயலின் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தது தந்திர உத்தி. இவ்வுத்தி, வாத முறையின் மூலமாகவே தம் மெய்ப்பொருளை நிலைநாட்டி வந்த, உலகாய்தத்தின் ஒரு கூறாகவே அமைந்திருந்தது என்பது வெளிப்படை.

மேலும் தமிழகத்தின் கல்வி முறையில் அளவை இயலாகிய 'தருக்கவியல்' கட்டாயப் பாடமாக இருந்திருக்க வேண்டும் வள்ளுவரின் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகிய அதிகாரங்களின் வைப்புமுறையே அக்காலக் கல்வி முறைகளின் தன்மைகளைச்—சிறப்பை உணர்த்துவதாகும்.

தமிழகத்தில் சொல்லாற்றல் வல்லார் எந்த அளவிற்கு நிறைந்திருந்தனர் என்பதை மலைபடுகடாம் ஓர் உவமை வாயிலாக உணர்த்தும். தினைக்கதிர்கள் இரண்டிரண்டாய்ப் பிணைந்து கிடக்கும் காட்சியினைப் பேசுகின்றபோது 'வாதியின் கைவிரல்கள் இணைந்தும் பிணைந்தும் செல்வதை ஒக்கும்' என்பது அவ்வுவமை.[63]

இக்கலையைக் கற்ற இளம் மாணவர்கள் மக்கள் குழுமியுள்ள ஊர் மன்றங்களில் சிறப்பாகப் பேசுவர். அதனை ஆணும் பெண்ணுமாய்க் கூடி நின்று கேட்டுச் சுவைப்பர் என்பதை,

---

62. குறள். 644.

63. மலைபடுகடாம், 112.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்னாய் இவனோர் இளமா ணாக்கன்
தன்னூர் மன்றத்து என்னன் கொல்லோ
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே[64]

என்ற படுமரத்து மோசிகீரனாரின் பாடல் தெளிவுபடுத்தும்.

கடவுள் மறுப்பை அடிப்படையாகக் கொண்டது உலகாய்தம். உலகின் தோற்றத்திற்கு அய்ந்து பூதங்களே அடிப்படை என்பது இதன் கோட்பாடு. இக்கோட்பாட்டாளர்கள், நாவன்மையின் மூலமாக—அதாவது வாதத் திறமையின் மூலமாகவே தமது கோட்பாட்டை நிலைநாட்டியவர்கள். இவர்களின் வினாக்கள் மாற்றாரைக் குறிப்பாக வேத வைதிகர்களின் அடித்தளத்தையே தகர்த்தன. இதனால்தான் பின்னாளில் வால்மீகியார், மனுஉட்பட்ட வைதிகவாதிகள் உலகாய்தத்தை அதன் அளவை இயலைக் கற்கக் கூடாது எனத் தடை விதித்தனர்.

எனவே 'அய்ந்திரம்' நிறைந்த தொல்காப்பியன் எனப் பனம்பாரனார் சிறப்பிப்பது, அய்ந்து பூதங்களின் இயல்புகளை— அதாவது அய்ந்தன் திரங்களைப் பற்றிய அறிவியலாகிய உலகாய்தக் கோட்பாட்டை முற்றாக அறிந்தவர் என்ற அடிப்படையில்தான் என்பது தெளிவு.

திரம்

மேலும் அய்ந்திரம் என்ற சொல் அய்ந்து + திரம் எனப் பிரியும். திரம் என்ற சொல் சேர்க்கை, திரட்சி என்ற பொருள்களை உணர்த்துவது. தொல்காப்பியரும்,

சேர்வே திரட்சி[65]

என்பார். பெண் பருவமடையும் நிகழ்ச்சியை மக்கள் வழக்கில் முழுமை பெற்றாள் என்ற பொருளில் 'பெண் ஆளானாள்' என்று வழங்குவர். தமிழர் வாழ்வில்—அவர்தம் பண்பாட்டின் அடையாளமாக நிற்கும் விழாக்களில் பெண் 'ஆளான' அந்த விழா மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். அவ் விழாவினைத் 'திரட்டி சுற்றுதல்' எனவும், 'திரட்டி' எனவும் அழைப்பர். பெண் முழுமை அடைந்தாள், திரண்டாள் ஆகிய பொருட்களை இத் திரட்டி என்ற சொல் உணர்த்தும். இத் திரட்டி என்ற சொல் 'திரட்சி' என்பதன் பேச்சு வடிவம் ஆகும்.

64. குறுந். 33.
65. தொல். சொல். உரி., 363.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக, சொல்லமைப்பின் அடிப்படையில் காணும்போதும் அய்ந்திரம் என்பது அய்ந்து பூதங்களின் சேர்க்கை, அய்ந்தன் திரட்சி என வெளிப்படையாகப் பொருளை உணர்த்தக் காணலாம்.

இறையனார் களவியல், இடைச்சங்கத்திற்குரிய நூல்களாகப் பூதபுராணம், மாபுராணம், வியாழமாலை அகவல், இசை நுணுக்கம் போன்ற நூல்களைக் குறித்துள்ளது. பூதபுராணம் 'அய்ம்பெரும்பூதத்து இயற்கை'யை விளக்கும் அறிவியல் நூலாகலாம். புராணங்களைத் தொல்காப்பியர் தொன்மை என்று அழைப்பார். இப்புராணங்கள் இலக்கண வரையரைக்கு உட்பட்டு அமைந்தவை. உரைகள் எழுதப்பட்ட பான்மை கொண்டவை என்பதை,

''தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழைமை மேற்றே[66]

என்ற நூற்பாவால் விளங்க வைப்பார் தொல்காப்பியர்.

எனவே 'பூதபுராணம்' பூதங்களைப்பற்றிய தொன்மம்-அதாவது யிகத் தொன்மைக் காலமாக வழங்கி வந்த ஆய்வு நூல் என்பது தெளிவாகிறது. அதே போன்று வியாழமாலை அன்றைய 'வானியல்' பற்றிய அறிவியல் நூலாக இருந்திருக்க வேண்டும்.

வியாழன் எனப்படும் கோள் பூமியைவிடப் பலமடங்கு பெரியது. சூரியனைச் சுற்றிவர இதற்கு ஆகும் காலம் 11.86 ஆண்டுகளாகும். இதனைத் தோராயமாக 12 ஆண்டுகள் என்பர். வானவியலில் இதன் சுழற்சி சற்று சிக்கலானது. ஆனால் பாண்டியர்கள் தங்களின் ஆண்டுக் கணக்கையும், நாள் மற்றும் வானவியல் குறிப்புக்களையும் வியாழனை அடிப்படையாகக்கொண்டே குறித்துள்ளனர். பிற்காலச் சோழர்கள் சூரியனை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக் கணக்கைப் பின்பற்றியபோதும், பாண்டியர்களும் சேரர்களும் வியாழனை அடிப்படையாகக்கொண்ட ஆண்டுக் கணக்கையே பின்பற்றினர் என்பது வியப்பான ஒன்று. இதனை ஸ்வஸ்தி ஸ்ரீ,

இடபத்து வியாழன் நின்ற யாண்டு
மிரிச்சிக ஞாயிற்று[67]

என்றும்,

66. தொல். செய்யுளியல், 549.

67. திருவாங்கூர் ஆர்க்கியலாஜிக்கல் வெளியீடு. எண் 28 & 29.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துலாத்தில் வியாழன் நின்ற யாண்டு
ஆனீத்திங்கள்.........[68]

என்றும் வரும் கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன.

வியாழனை அடிப்படையாகக்கொண்ட இவ்வாண்டுக் கணக்குத் தமிழர்களிடம் எக்காலத்திலிருந்து வழக்கில் வந்தது? இறையனார் களவியல் வியாழமாலையை இடைச்சங்கத்திற்குரிய நூலாகக் குறிப்பதற்கான சான்று வேறேதேனும் இருக்குமா என்ற கேள்விகளுக்குரிய விடைகளை உருசிய அறிஞர்கள் சிந்துவெளி நாகரிகத்திலிருந்து அளித்துள்ளனர்.

> வரலாற்றுக் காலத்துக்கு முந்திய இந்தியாவில் விஞ்ஞானம் மிகவும் முன்னேறியே இருந்தது என்பது அனைவரும் அறிந்த விசயமே. கணிதம், வானியல், தத்துவம், மருத்துவம், தர்க்கவியல் ஆகியவற்றில் வரலாற்றுக் காலத்துக்கு முந்திய இந்தியர்களின் சாதனைகளைப் புலப்படுத்தும் சான்றுகள் ஏராளமாக உள்ளன.........
>
> கி. மு. 3000 ஆண்டுக் காலத்தில் மக்கள் அய்ந்து பெரும் கிரகங்களைப்பற்றி தெரிந்துகொண்டிருந்தனர் என்றும் வியாழன் கிரகம் சூரியனைச் சுற்றிவரும் காலத்தை அவர்களால் கணக்கிட முடிந்தது என்றும் எவரும் கருத முடியாது. பண்டைய சிந்துமொழி வாசகங்கள், பண்டைய இந்தியாவில் நடைமுறை வானியலிலும், புராணக் கதைகளிலும் பல முக்கிய பாத்திரத்தை வகித்த நட்சத்திரக் கூட்டங்களின் பெயர்களை நமக்குத் தெரிவிக்கின்றன. அவற்றில் மிருகசீரிடம், கார்த்திகை, சப்தரிசி மண்டலம் ஆகிய நட்சத்திர மண்டலங்களும், ரிசப ராசி, விருச்சிக ராசி போன்ற ராசி மண்டலங்களும் இடம் பெற்றுள்ளன.[69]

இவ் விளக்கம் தமிழர்களின் அறிவியல் மேன்மையை எடுத்துக் காட்டுவதுடன், இறையனார் களவியல் உரையை மெய்ப்பிக்கும் வகையிலும் அமைந்துள்ளது என்பது எண்ணத்தக்கது. அத்துடன் சிந்துவெளியில் தொடங்கிய இவ் அறிவியலின் வீச்சு பிற்காலப் பாண்டியர், சேரர் காலத்தும் திகழ்ந்திருந்தது என்பதும், சிந்து வெளி மக்களுக்கும் தமிழர்களுக்கும் இருந்த தொடர்பினை உறுதிப் படுத்தும் மிகச்சிறந்த சான்று என்பதும் தெளிவு.

---

68. திருவாங்கூர் ஆர்க்கிய லாஜிக்கல் வெளியீடு, எண் 28&29.

69. சோவியத்து நாடு, ஏப்ரல் 1985, ப. 32.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வியாழமாலை, பூதபுராணம், இசை நுணுக்கம் போன்ற பல்துறை அறிவியலின் வளர்ச்சிப் பண்ணையாக இருந்த தொல்காப்பியர் காலத்துத் தமிழகத்தில் பகுத்தறிவியலின் ஊற்றுக்கண்ணாக விளங்கும் உலகாய்தம்—அய்ந்திர மரபு செழித்திருந்ததில் வியப்பில்லை.

புத்தரின் மாணவனும், பேச்சாற்றல் நிறைந்தவனும், புத்தரால் அவரது சங்கத்தின் தலைவராக நியமிக்கப் பெற்றவனும் ஆகிய சாரிபுத்தன். தென்னகத்தில் கற்ற அய்ந்திரம்—உலகாய்தமே. இந்திரனால் செய்யப்பட்ட சமற்கிருத இலக்கணம் அன்று.

கம்பர் 'சொல்லின் செல்வன்' எனப் புகழும் அனுமன், 'அய்ந்திரக் கடல் கடந்தவன்.' இவ்வைந்திரமே 'சாத்திரம்' என்றும் 'வியாகரணம்' என்றும் வால்மீகியாரால் சொல்லப்பட்டுள்ளது.

முரஞ்சியூர் முடிநாகராயர், 'அய்ம்பெரும் பூதத்து இயற்கை போல' எனச் சொல்லும் இயல்புவாதம் இவ் அய்ந்திரத்தையே ஆகும். இதுவே உலகாய்தம் ஆகும்.

இம்மெய்யியல் தமிழகத்திற்கேயுரிய தனித்தன்மை வாய்ந்தது. தொல்காப்பியம், திருக்குறள், புறநானூறு முதலான நூல்களில் இடம்பெற்றுள்ள அய்ம்பூதக் கருத்துக்கள் இவ்வுலகாய்தத்தின் விளக்கமாகவே அமைந்துள்ளன. எனவே, 'அய்ந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்ற அடி தொல்காப்பியர் உலகாய்த மெய்யியலைச் சார்ந்தவர் என்பதையும், அம்மெய்யியல் நூல்களில் மிகுந்த தேர்ச்சிப் பெற்ற பேரறிஞர் என்பதையும் உணர்த்துகின்றது என்பது தெளிவு.

மேலும் தொல்காப்பியர் காலத்தில் வேத மொழியாகிய சமற்கிருதத்திற்கு எழுத்து வடிவம் இல்லை. அதற்கு எழுத்து வடிவம் அமைத்துக் கொடுக்கும் வகையில்தான், மயக்கம் தராத வண்ணம் அமைந்திருக்கும் தமிழ் எழுத்து முறையினைத் தொல்காப்பியர், அதங்கோட்டாசான் என்ற வேதப்புலமை உடையோருக்கு விளக்கினார்.[70]

எனவே எழுத்து வடிவமே பெற்றிராத ஒரு மொழியில் அமைந்த இலக்கணம் அய்ந்திரம் என்பதும், அதனைச் செய்வித்தவன் இந்திரன் என்பதும், அச் சமற்கிருத இலக்கணமாகிய அய்ந்திரத்தைத் தொல்காப்பியர் கற்றார் என்பதும், இல்லாத ஊருக்குப் போகாத வழியைக் காட்டும் செயலுக்கு ஒப்பானதே என்பதும் தெளிவு.

70. க. நெடுஞ்செழியன், மயங்கா மரபு, பெரியார் ஈ.வெ. ரா. கல்லூரி, ஆண்டு மலர், 1982, ப. 54.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உயிரியல் கோட்பாடு

உலகில் உயிரினங்களின் தோற்றம் எப்பொழுது நிகழ்ந்தது? நீரிலா? நிலத்திலா? இத்தகைய வினாக்களுக்கான விடைகளை மனிதன் அறியத் தொடங்கிய காலமே அறிவியலின் தொடக்கம் எனலாம். ஆனால் பைபிளின் பழைய ஏற்பாடு உலகில் உள்ள உயிரினங்கள் அனைத்தையும் பரமண்டலத்திலிருந்தபடியே தேவன் படைத்ததாகக் கூறும்.

> ஆதியில் கடவுள் வானத்தையும் பூமியையும் படைத்தார். பூமி உருவமற்று வெறுமையாய் இருந்தது. ஆழத்தின் மேல் இருள் இருந்தது. கடவுளின் ஆவி தண்ணீரின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தது. வெளிச்சம் உண்டாகுக என்று கடவுள் சொன்னார். வெளிச்சம் உண்டாயிற்று...... கடவுள் ஆகாயமண்டலத்தை உண்டாக்கினார். ஆகாய மண்டலத்தின் மேலுள்ள தண்ணீரையும் கீழுள்ள தண்ணீரையும் வெவ்வேறாகப் பிரித்தார்...... வெட்டாந் தரைக்குப் பூமி என்றும் தண்ணீர்த் திரளுக்குச் சமுத்திர மென்றும் கடவுள் பேரிட்டார்...... புல்லையும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டு களையும், தங்களில் தங்கள் விதைகளையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதிகளின்படியே தரும் மரங்களையும் பூமி தோன்றச் செய்தது. அது நல்லதென்று கடவுள் கண் டார்...... கடவுள் மனிதனைத் தமது சாயலாகப் படைத் தார். கடவுளின் சாயலாகவே அவனைப் படைத்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார்.[1]

இவ்வாறு இவ்வுலகையும் உலகின் உயிரினங்களையும் ஆறே நாளில் கடவுள் படைத்து முடித்ததாகப் பைபிள் குறிப்பிடும். இப் படைப்புக் கதையைப் போலவே இருக்குவேதத்திலும் மனுதருமத் திலும் இந்த உலகையும், உயிரினங்களையும் கடவுள் படைத்த தாகக் கூறும் கதைகள் இடம் பெற்றுள்ளன.

---

1. பைபிள், ஆதி ஆகமம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்தகையக் கதைகள் அந்தந்த இனங்களின் அறிவு வளர்ச்சி, சமூகப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றுவன. அத்துடன் கடவுளின் வல்லமையை, அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்ற நம்பிக்கையை வற்புறுத்தும் வகையிலும் அமைந்தவை.

ஆனால் உண்மையான அறிவு வளர்ச்சி இக்கொள்கைக்கு நேர் மாறான திசையிலேயே அதாவது உலகாய்தப் போக்கிலேயே வளர்ந்து வந்துள்ளது. உலகின் உருவாக்கம் பற்றிய ஆராய்ச்சி எவ்வாறு புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்ததோ அதைப் போன்றே உலகில் உயிரினங்களின் தோற்றம் குறித்த ஆராய்ச்சியும் புதிய கோட்பாடுகள் உருவாகக் காரணமாக அமைந்தது.

இத்தகைய அறிவியல் போக்குகள் மேலைநாடுகளில் கிரேக்கத்திலும், கீழைநாடுகளில் தமிழகத்திலும் வளர்ந்து செழித்துள்ளன. கிரேக்கத்திலும் கி. மு. 6-ஆம் நூற்றாண்டுவாக்கில், அந்நாட்டு மருத்துவர்களால் உருவாக்கப்பட்ட இக்கோட்பாடு தேல்சு, அனாக்கி மெனிசு, இராக்லிடசு போன்ற மெய்யியல் அறிஞர்களால் வளர்க்கப்பட்டது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த அளவில் இக் கோட்பாட்டின் தொடக்கம் பற்றிய செய்திகள் தெரியவில்லை என்றாலும், சாரிபுத்தன் வரலாற்றில்[2] கண்டதைப்போல கி. மு. 6-ஆம் நூற்றாண்டளவில் தமிழகம் இவ்வறிவியல் கலையின் பல்கலைக்கழகமாக விளங்கியது என்பது மட்டும் உண்மையாகும். கிரேக்க உலகாய்தமும் தமிழகத்திலிருந்தே சென்றிருக்க வேண்டும் என நம்புகிறார் குணா. இதனை,

> மேற்கு ஆசியா, எகிப்து வழியாகச் சென்ற பண்டைத் தமிழ்ச் சிந்தனையின் கூறுகளே பண்டைக் கிரேக்கச் சிந்தனையின் அடிப்படைத் தனிமங்களாயின என்று நாம் கூறுகையில், சிலர் அதிர்ச்சிக்குள்ளாகின்றனர். அவர்கள் சிறிது கண்ணைத் திறந்து பண்டைக் கிரேக்கப் பேரரசின் வரைபடத்தைப் பார்ப்பது நல்லது. கி. மு. ஆறாம் நூற்றாண்டுத்தொட்டு எழுந்த கிரேக்கக் குடியேற்றக் காலத்தைப்பற்றிச் சிறிது கற்பது பயன்தரும். கிருத்துவுக்கு முன்னர் ஏழாம் ஆறாம் நூற்றாண்டுகளில் எழுந்த கிரேக்க மெய்யியல், ஆசியப் பகுதியைச் சேர்ந்த சின்ன ஆசியக் கடற்கரைப் பட்டினங்களில்தான் அரும்பின என்னும் உண்மையை அவர்கள் பார்க்கத் தவறுகின்றனர்[3]

2. அவதான சாதகம்.
3. குணா, தமிழர் மெய்யியல் பக். 3—4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று விளக்குவார். சப்பானிய மொழியின் நெடுங்கணக்கு (Alphabets) தமிழை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப் பட்டது என்ற வரலாற்று உண்மையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது குணாவின் கருத்தைப் புறக்கணிக்க முடியாது. மேலும், அலெக்சாந்தர் கோந்தரதோவ்,

> உலகப் பண்டைய நாகரிகங்களில் குறைந்தது மூன்றில் இரண்டு திராவிட மொழிகளைப் பேசிய இனங்களோடு தொடர்புடையன என்பதை நோக்கும்பொழுது வியப்பு மேலிடுகிறது[4]

என்று கூறுகிறார். இங்குக் குறிப்பிடப்பெறும் 'திராவிட மொழிகள்' என்பவை தமிழும்—தமிழின் தொன்மை வடிவமும் ஆகும். இக்கருத்தை அரண் செய்யும் வகையில் காரல்மார்க்சு தம் ஆய்வேட்டில் குறித்துள்ள செய்தி ஒன்று உண்டு. கிரேக்கப் பொருள்முதலியல் அறிஞரான டெமாக்கிரட்டசு, இந்திய யோகி களிடம் அணுவியலைக் கற்றுச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்திய அணுவியலின் தந்தை எனப் போற்றப்படுபவர் பக்குடுக்கை நன்கணியார் எனும் சங்கத் தமிழ்ப்புலவர் ஆவார். எனவே டெமாக்கிரட்டசு பக்குடுக்கை நன்கணியாரிடமோ அல்லது அவரது மாணவர்களிடமோதான் அணுவியலைக் கற்றுச் சென் றிருக்க வேண்டும் என்பது உறுதியாகின்றது.[5]

உயிர்களின் தோற்றம்

அய்ந்து பூதங்களின் சேர்க்கையால் நிலவுலகம் எப்படித் தோன்றியதோ அதைப்போலவே நீரில் ஏற்பட்ட வேதியியல் மாற் றங்களால் முதன் முதலாக உயிர்கள் தோன்றின. வள்ளுவர்,

> நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
> வானின் றமையா தொழுக்கு

என விளக்குவார். நீரின் இச்சிறப்பினை இன்றைய அறிவியல்,

> இயற்கையில், தண்ணீரின் பங்கு மிகவும் ஒப்பற்றது. ஏனெனில் நீரில்லாமல் வாழ்வு சாத்தியமாகாது. பழங் காலத்தியக் கடல்களில் கரைந்திருந்த பொருள்களில் இருந்துதான் வாழ்க்கை தொடங்கியது. அன்றிலிருந்து

---

4. அலெக்சாந்தர் கோந்தர்தோவ், மாக்கடல் மர்மங்கள் ப. 46,

5. க. நெடுஞ்செழியன், இந்தியப் பண்பாட்டில் தமிழும் தமிழகமும், ப. 49.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> எல்லா விலங்குகள் மற்றும் தாவரங்களின் செல்களில் கரைந்துள்ள பொருட்களிடையே, இரசாயன பிரதிவினைகள் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன[6]

என இதனை விளக்குகின்றது. உலகின் உயிரினத் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்த நீர்தான் மனிதனது உடலில் 71 விழுக்காடு இடம் பெற்றுள்ளது. மீதமுள்ள 29 விழுக்காட்டில்தான் மற்ற வேதியியல் பொருள்கள் மனித உடலில் இடம் பெற்றுள்ளன. நீரினால் அமைந்த இந்த உடலின் தன்மையினைக் குடபுலவியனார்,

> நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
> உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே[7]

என்று குறிப்பிடுவார். மனித உடலில் மட்டும் இல்லாது இந்த உலகிலும் 2/3 பாகம் தண்ணீர்தான். அதுமட்டுமல்லாமல் தண்ணீரைப்போல மூன்று நிலைகளில்—திடமாக, திரவமாக, வாயுவாக—வேறு எந்தப் பொருளும் பூமியில் இல்லை. தண்ணீருக்குரிய இம்மூன்று இயல்புகளை உள்ளடக்கியதாக 'முந்நீர்' என்ற சொல் வழங்கியிருக்குமா என்பது ஆய்வுக்குரியது. இவ்வுலகு கடலால் சூழப்பட்டது என்ற பொருளில் வரும்,

> முந்நீ ருடுத்தவிவ் வியனுலகு[8]
>
> முந்நீர் மண்டிலம்[9]

எனும் கருத்துக்கள் இருந்த இடத்தில் இருந்தபடியே சொல்லப்பட்டவையாக இருக்க முடியாது. மாறாகப் பலகாலம் நடத்திய நெடிய கடற்பயணங்களின் விளைவால் தோன்றிய உண்மைகளாகும். சால்பு, இயல்பு, பண்பு என்பனவற்றை உணர்த்தும் 'நீர்மை' என்ற சொல்லிற்கும், தண்ணீரையும் நெடுங் கடலையும் உணர்த்தும் நீர், முந்நீர் என்னும் சொற்களுக்கும் உள்ள தொடர்பும் ஒப்பு நோக்கத்தக்கதாகும். வள்ளுவர்,

> நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி
> தான்நல்கா தாகி விடின்[10]

எனக் கடலின் இயல்பை 'நீர்மை' என்ற சொல்லால் குறிப்பார்.

---

6. ப. பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல், ப. 10.
7. புறம். 18 : 18—19.
8. புறம். 382 : 17.
9. அகம். 379 : 6.
10. குறள். 17.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு உலகைப் பாதுகாக்கும் நீர்தான்—மனித உடலின் அமைப்பில் 71 விழுக்காடாக இருக்கும் நீர்தான்—உயிரின வளர்ச்சி களின் தொட்டிலாக, 'ஒருசெல்' உயிரினத்தின் தோற்றுவாயாக அமைந்தது. இதனை,

> கருத்துக்கும் எட்டாத பலகோடி ஆண்டுகளுக்கு முன்னர் தரைதொட்டு நுரை கிளப்பி விளையாடும் திரைகடலின் மேற்பரப்பில் உதயனின் ஒளிப்பிழம்பு விளைவித்த மாற்றத்தால் இது போன்ற அங்கக வேதியங்கள் பல உண்டாகி இருக்க வேண்டும் என்பது திண்ணம்.[11]

என விளக்குவார் உயிரியல் அறிஞர் சதாசிவம்.

உயிரினங்களின் தோற்றம் கடலில் தொடங்கினாலும் அதன் அடுத்தடுத்த வளர்ச்சிநிலை நிலத்திலேயே நிகழ்ந்துள்ளது. உயிரினங்களுக்குத் தேவையான உயிர்வளி (ஆக்சிசன்) தங்குதடையின்றி கிடைத்ததிலிருந்து உயிரினங்களின் வாழ்வும் தொடங்கிற்று. நிலத்திற்குத் தேவையான உயிர்வளி எப்படி கிடைக்கின்றது? அதனை வழங்குவது எது? என்பதனை பின்வருமாறு விளக்குவார்.

> பசுமையான தாவரங்களுக்கு இது ஒரு எளிதான செயலாகும். நமக்குத் தெரிந்த அளவில் பூமியின் வளிமண்டலத்தை உருவாக்கியதே இந்த உயிர் ஜீவன்கள்தான். ஒவ்வொரு வருடமும், பூமியிலுள்ள தாவரங்கள் 650 ஆயிரம் மில்லியன் டன் கரியமிலவாயுவைக் கிரகித்து 350 ஆயிரம் மில்லியன் டன் ஆக்ஸிஜனை உற்பத்தி செய்கின்றன. ஒரு காலத்தில் பூமியின் வளிமண்டலத்தில் தற்போது இருப்பதைவிட ஆக்ஸிஜன் குறைவாகவும், கரியமிலவாயு அதிகமாகவும் இருந்தது. நாளடைவில் அது மாற்றம் அடைந்தது.[12]

உயிரியல் கோட்பாடு

'ஒரு செல்' உயிரினமாய்த் தோன்றிய உயிரினம் படிப்படியாகப் 'பலசெல்' உயிரினமாய்ப் படிமுறை வளர்ச்சி பெற்று வளர்ந்துள்ளதை இன்றைய அறிவியல் மெய்ப்பித்துவிட்டது. உயிர்களின் படிமுறை வளர்ச்சி பற்றிய டார்வினது கோட்பாடு மனித இன வரலாற்றில் சிறந்ததோர் இடத்தை வகிக்கின்றது. அத்துடன் உயிரினங்களின் தோற்றம் பற்றிய கடவுட் கோட்பாடுகள் அனைத்தும்

11. ச. சதாசிவம், உயிர் வேதிய மரபியல் ப. 2.
12. ப. பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல் ப. 103.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறிவியல் கண்டுபிடிப்புகளால் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுவிட்டன. டார்வினின் இக்கண்டுபிடிப்பைப்பற்றி எங்கல்சு,

> ....1859ஆம் ஆண்டில் டார்வின் மூலமாக வெற்றிகரமாக மேலே கொண்டு செல்லப்பட்டது. ஏறத்தாழ அதே காலத்தில், எல்லா உயிரினங்களின் இறுதியான உடலமைப்பியல் கூறுகளாக ஏற்கெனவே காட்டப்பட்ட புரோட்டபிளாசம் என்ற உயிர்த் தாதுவும், உயிரணுவும் சுயேச்சையாக உண்டாகின்றன என்பதும், உயிரினங்களின் கீழ்நிலை வடிவங்கள் அவை என்பதும் ஸ்தாபிக்கப்பட்டது. இது உயிர்ப்பற்ற இயற்கைக்கும் உயிர்ப்புள்ள இயற்கைக்கும் இடையே உள்ள அகழியைப் பெரிய அளவுக்குக் குறுக்கிவிட்டது மட்டுமல்ல; உயிரினங்களின் இனத் தோற்றத் தத்துவத்தின் பாதையிலே முன்பு நின்ற இடர்ப்பாடுகளில் மிக முக்கியமான ஒன்றை அப்புறப்படுத்தியது.........[13]

என்று விளக்குவார்.

உயிரினங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாகவும், அனைத்து உயிரினங்களின் அடிப்படை நிலையாகவும் கருதப்பட்ட இப் புரோட்டோபிளாசமும் அதன் அமைப்பும் உயிரினங்களுக்கிடையேயுள்ள தொடர்பிணையும் பிணைப்பினையும் கொண்டுள்ளன. இத்தொடர்புகளை இன்றைய உயிர்வேதிய மரபியல் (Biogenetics) மிகத் தெளிவாக விளக்குகின்றது. மனித இனம் ஆறறிவு பெற்று உயர்ந்த வாழ்வை வாழ்ந்தாலும் தாவரங்களும் விலங்குகளும் அவனது உறவினர்கள் என்பதை உயிர்வேதிய மரபியல் மெய்ப்பித்துவிட்டது. ச. சதாசிவம்,

> மனிதனது வாழ்க்கை முறை மாறுபட்டிருந்தாலும் விலங்குகளும், தாவரங்களும், நுண்ணுயிர்களும் அவனது சொந்தக்காரர்கள்தானே! உயிரினத்தை வேதியியல் மொழியில் விளக்குவதுதான் அதனை அறிந்துகொள்ளத் துடிக்கும் வழிமுறையில் சாலச் சிறந்ததாகும். அப்படி வேதியியல் கண்கொண்டு பார்க்கின்றபோது அத்தனை உயிரினங்களிலும் குறிப்பிட்ட சில வேதியங்களும், வேதிய மாற்றங்களும் ஒன்றாகவே இருப்பது புலனாகும்......... பட்டாணியிலும், பழத்தில் மொய்க்கும் ஈயிலும் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து பிறந்த விதிமுறைகள் மனித இனத்திற்கும் பொருந்தி வருவது ஒரு விந்தைதானே! மேலான உயிரினம், கீழான உயிரினம் என்ற வேற்றுமைகளை ஊடுரு

13. எங்கல்சு, இயற்கையின், இயக்க இயல் பக். 54—55.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> விப் பல விதிமுறைகள் உயிரினங்களில் ஒன்றாகவே திகழ்தல் கண்கூடு[14]

என்று இதனை விளக்குவார்.

உயிர்வேதிய மரபியலின் அடிப்படையில் உயிரினங்களுக் கிடையே அமைந்துள்ள ஒற்றுமைப் பண்புகளைத் தொல்காப்பியர் புலனறிவின் அடிப்படையில் அமைந்த ஒற்றுமையாக விளக்குகின் றார். தொடு உணர்வை மட்டுமே அறிவின் வாயிலாகக்கொண்ட உயிரினமே, உயிரின வளர்ச்சியின் அடிப்படை. அவற்றிலிருந்தே ஈரறிவு உயிர், மூவறிவு உயிர், நாலறிவு உயிர், அய்ந்தறிவு உயிர், ஆறறிவு உயிர் ஆகிய அனைத்தும் முகிழ்த்தன. இதனை,

> ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
> இரண்டறி வதுவே யதனொடு நாவே
> மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
> நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
> அய்ந்தறி வதுவே யவற்றொடு செவியே
> ஆறறி வதுவே அவற்றொடு மனனே
> நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே[15]

என விளக்குவார் தொல்காப்பியர். இந்த உண்மைகள் தம்மால் கூறப்படுபவை அல்ல என்றும் தம் முன்னோர்களால்—நுண்ணறிவு வாய்ந்த அறிஞர்களால் கூறப்பட்டவை என்றும் கூறுகிறார்.

ஓரறிவு உயிர்களைப்பற்றி விளக்கும்போது,

> புல்லும் மரனும் ஓரறி வினவே
> பிறவும உளவே அக்கிளைப் பிறப்பே[16]

என்பார். மரபியலில் கூறப்படும் கருத்துக்கள் அதுவும் புல்லைப் பற்றியும் மரத்தைப் பற்றியும் தொல்காப்பியரின் பாகுபாடு பற்றிய செய்திகள் அக்காலத் தமிழறிஞர்களின் ஆய்வுப் புலமையை முழுமையாக வெளிப்படுத்தவல்லன. தொல்காப்பியர் புறத்தே வலிமை கொண்டவற்றைப் புல் என்றும், அகத்தே வலிமை (வயிரம்) கொண்டவற்றை மரம் என்றும் பாகுபடுத்துவார். இதனை,

---

14. ச, சதாசிவம், உயிர் வேதிய மரபியல் பக். 75—76.
15. தொல். மரபியல், 582.
16. மே. நூ., 584.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புறக்கா ழனவே புல்லென மொழிப
அகக்கா ழனவே மரமென மொழிப[17]

என்ற நூற்பாவால் விளக்குவார். இந்நூற்பாவிற்குப் பேராசிரியர்,

'புறக்காழன' வெனவே, அல்வழி வெளிறென்ப தறியப் படும்; அவை பனையுந் தெங்குங் கமுகும் முதலாயின புல் லெனப்படும். இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரமெனப்படும்.........

''இரும்பனம் புல்லின் பசுந்தோட்டுக் குடம்பை'' எனவும்,

''யாஅங் கொன்ற மரஞ்சுட் டியவின்'', எனவும் வரும்.[18]

என்று உரை கூறிக் குறுந்தொகை அடிகளை அதற்கு மேற்கோள் காட்டுவார். பனைமரத்தைப் புல்லின் இனமாகக் கருதிய அறிவிய லின் வளர்ச்சியை மேற்காட்டிய சான்று உணர்த்துகின்றது.

ஓரறிவு உயிர்

தாவரங்களுக்கு உயிர் உண்டு என்பதும் அவை தம் உடம்பால் தமக்கு ஏற்படும் இன்பதுன்பங்களை உணரும் என்பதும் தொல்காப் பியரால் விளக்கப்படுகின்றது. தாவரங்கட்கு உயிர் உண்டு என்ற கருத்து இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் அறிவியல் ஆய்வின்மூலம் நிறுவப்பட்டது என்பதும் எண்ணத்தக்கது. 1924இல் வங்காளத்தைச் சேர்ந்த சகதீசு சந்திரபோசு, மின்சாரக் கருவிகள் மூலம் இதனை நிறுவினார். ஆனால் தமிழ்ச் சான்றோர் கள் தாவரங்களின் இத்தகைய இயல்புகளைத் தெளிவாக அறிந் திருந்தனர். இதற்கான சான்றுகளைச் செடி வகைகள் சிலவற்றிற்கு அமைந்துள்ள பெயர்களே உணர்த்துகின்றன.

மாழ்கி

மாழ்குதல் என்ற சொல்லிற்கு மயங்குதல், தளர்தல் ஆகிய பொருள்கள் உண்டு. தொடுவதால் தளர்ந்து மயங்கும் செடியை மாழ்கி என்றே அழைத்தனர். இம் மாழ்கியே இக்காலத்தில் தொட்டாற் சிணுங்கி' (சுருங்கி) என்ற செடியாகும். இச்செடியில் இரண்டு வகைகள் உண்டு. அவற்றுள் ஒன்றிற்கு மாழ்கி என்றும் மற்றதற்குச் சுண்டில் என்றும் பெயர்.

---

17. தொல். மரபியல், 586.

18. தொல். மரபியல், பேராசிரியர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாங்குசினை பொலிய வேறிப் புதல
பூங்கொடி யவரைப் பொய்யத ளன்ன
உள்ளில் வயிற்ற வெள்ளை வெண்மறி
மாழ்கி யன்ன தாழ்பெருஞ் செவிய[19]

இப்பாடல் குறித்து விளக்கம் தரும் பி. எல். சாமி,

> வெள்ளை வெண்மறியின் செவி, மாழ்கியின் இலை போலத் தாழ்ந்து மடிந்திருக்கும் என்று அகநானூற்றுப் பாடல் கூறுவதாகக் கொள்வது பொருத்தமும் சிறப்பும் ஆகும். தொட்டாற்சுருங்கிச் செடியைத் தொட்டவுடன் மேலே நோக்கியிருக்கும் வரிசையான இரு இலைகள் கீழே தாழ்வதைப் பார்த்திருக்கலாம். இரண்டு இலைகள் தாழ்ந்து மடங்கி இருப்பதையே ஆட்டு மறியின் மடங்கிய காதிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது.[20]

என்று குறிப்பார்.

இம் மாழ்கியையும் சுண்டிலையும் கையால் தீண்டினாலும், கல்லால் எறிந்தாலும் அவை உடனே சுருங்கிவிடும்.

'ஓரறிவு உயிர்' என்ற கருத்து செடிகள் உயிர் உள்ளவை என்ப தோடு உயிரினத்தின் எல்லா இயல்புகளையும் அதாவது உயிர் வாழ் தல், (உண்ணல், உயிர்த்தல்) இனப்பெருக்கம் செய்தல், இன்ப விழைச்சு ஆகிய அனைத்து இயல்புகளையும் கொண்டவை என் பதையும் அவற்றுள்ளும் தமக்கு ஏற்படும் உணர்வுகளைத் தொடு உணர்ச்சிமூலம் அறிந்துகொள்வன் என்பதையும் உணர்த்தக் காண லாம். இன்ப நாட்டத்தை மனித இனத்திற்கு மட்டுமன்றி உலக உயிரினத்திற்கே பொதுவான ஒன்றாகத் தொல்காப்பியர்,

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்[21]

என்ற நூற்பாவால் உணர்த்துவர். தாவரங்களில் பாசி முதற் கொண்டு அனைத்து வகைகளும் பாலுறவில் எவ்வாறு நாட்டம் கொண்டுள்ளன என்பதை இன்றைய அறிவியல் தெளிவாக விளக்கு கின்றது.

19. அகம். 104.
20. பி. எல். சாமி, இலக்கியத்தில் அறிவியல், ப. 45.
21. தொல். பொருளியல், 219.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புல்லும்—மரமும்

புல்லினத்திற்கும் மரத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை விளக்கும் திறம் வியக்கத்தக்க ஒன்றாகும். புல்லினத்தின் இலைகளையும் பிற உறுப்புக்களையும் வகைப்படுத்தும் தொல்காப்பியர்,

தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லொடு வருமெனச் சொல்லினர் புலவர்[22]

என்று விளக்குவார்.

இதைப் போன்றே மரத்தினத்தின் உறுப்புக்களை,

இலையே முறியே தளிரே தோடே
சினையே குழையே பூவே அரும்பே
நனையே உள்ளுறுத்து அனையவை எல்லாம்
மரனொடு வருஉங் கிளவி என்ப

என்றும் விளக்குவார். அத்துடன்,

காயே பழமே தோலே செதிளே
வீழோ டென்றாங் கவையும் அன்ன[23]

என்ற நூற்பாவில் கனி வகைகளையும் விழுது போன்றவற்றையும் புல்லினத்திற்கும், மரத்தின் இனத்திற்கும் பொதுவானவை என்றும் விளக்குவார்.

இத்தகைய பகுப்புமுறை நீண்டகால ஆய்வின் வெளிப்பாடாகத்தான் இருக்க முடியும். உலகாய்தத்தின் ஒரு கூறாக விளங்கியது தேகவாதம் என்பது முன்னர்க் கூறப்பட்டது. தேகவாதமே மருத்துவ வளர்ச்சிக்கான அடிப்படை.

மருந்துகளின் வகைகளை மூலிகைகளாகவும், பொடி (சூரணம்) யாகவும், இளகியங்க (லேகியங்க)ளாகவும், தாவரங்களிலிருந்தும், விலங்கு பறவை இனங்களிலிருந்தும் மற்றும் பொன், வெள்ளி முதலான உலோகங்களிலிருந்தும், முத்து, பவழம் முதலான மணி வகைகளிலிருந்தும் செய்தனர். இத்தகைய முயற்சியே அதாவது வேதியியல் பற்றிய ஆராய்ச்சியே தாவரங்களின் ஆராய்ச்சியாக வளர்ந்திருக்க வேண்டும்.

22. தொல். மரபியல், 88.

23, தொல். மரபியல், 89.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈரறிவு உயிர்

தொடு உணர்வின் அடிப்படையில் உருவான உடம்பின் அடுத்த கட்ட வளர்ச்சி உயிர்களுக்கு உண்ணப் பயன்படும் நாக்கு அல்லது அதுபோன்ற உறுப்பின் தோற்றமாகும். இது உயிரின வளர்ச்சியின் இரண்டாவது கட்டம்,

> உயிர்ப் பொருளின் துகள்கள் ஒன்றாக இணைந்து ஒரு சுயேச்சையான ஒரு செல் உயிரினமாக அமைந்ததும், பின்னர் ஓர் உறையால் சமுத்திரத்திலிருந்து அவை பிரிந்ததும் 'ஒரு செல்' உயிரினத்தில் போக்குவரத்தைப்பற்றி 'இயற்கை' சிந்தித்ததின் விளைவாகும்.........
>
> நுண்ணிய கடல் போன்ற அமைப்புக்கொண்ட 'செல்லை' இயற்கை உருவாக்கி அதில் அதன் நீரோட்டங்களையும் அமைத்தது ஆகவே இத்தகைய எளிய செல்லுள் போக்குவரத்து அமைப்பு, மனிதனிலும் பல செல் உயிரினங்களிலும் பேணப்பட்டது.[24]

ஒரு செல் உயிரினங்கள் பல செல் உயிரினங்களாக மாறியதன் சூழ்நிலையை மேற்காட்டிய பகுதி விளக்கும்.

இவ்வாறு பல செல் உயிரினங்களாக வளரத் தொடங்கிய போது, அறிவின் வாயிலாக உடம்பில் அடுத்துத் தோன்றிய உறுப்பு 'வாய்' ஆகும். அத்தகைய உயிரினங்களைத் தொல்காப்பியர்,

> நந்தும் முரளும் ஈரறி வினவே
> பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே[25]

என்பார். இந்நூற்பாவிற்குப் பேராசிரியர்,

> இரை சுவை கோடலும், பிறிதொன்று தாக்கிய வழி அறிதலும் உடைமையின் மெய்யுணர்வோடு நாவுணர்வும் உடையன என்றவாறு. இவற்றுக்குக் கிளை என்பன கிளிஞ்சலும் முற்றிலும் (மட்டிச் சுண்ணாம்பு) முதலாகிய கடல்வாழ் சாதியும் பிறவும் எனக் கொள்க[26]

என்று விளக்குவார். இதனால் நத்தை, கிளிஞ்சல் முதலானவை ஈரறிவு உயிரினங்களாகக் கருதப்பட்டன என்பது தெளிவு.

---

24. ப. பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல் ப. 149.
25. தொல். மரபியல், 584 (இளம்.)
26. தொல். மரபியல், 584, பேராசிரியர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்தகைய நத்தைகள், கிளிஞ்சல்கள் மற்றும் அவற்றின் இனத்தைச் சார்ந்த உயிரினங்களுக்கு உணவுக்குழாய், கல்லீரல், நெஞ்சாங்குலை, மூச்சுக் குழாய்கள் முதலான உறுப்புக்கள் உள்ளன.

> போர்வையற்ற மூச்சுக் குழலைக் கொண்ட (நாடுபிரான் கியேட்) கிளிஞ்சல்களின் கல்லீரலின் பாதுகாப்புப் பணிகளும் மிகவும் சிறப்பானவை. கல்லீரல் மிகப் பெரிய உறுப்பாகும். இதில் பல நுண் மடல்களும், இரைப்பைக்குள் திறக்கும்—ஒன்றோடு ஒன்று இணைந்த நாளங்களும் உள்ளன. கல்லீரலின் சுரப்பி நாளங்கள் கிளிஞ்சல்களின் உடல் முழுவதும் செல்கின்றன.[27]

உயிரின வளர்ச்சியில் 'வாய்' என்ற உறுப்பு உருவான பின்னர் தான் உயிரினங்களின் 'செரிமான' மண்டலம் உருவாயிற்று, நத்தை, கிளிஞ்சல் என்னும் உயிரினங்களுக்கு உள்ள 'வாயின்' அமைப்பு மற்றவற்றிற்குப்போல அமைந்த ஒன்று அல்ல என்றாலும் உணவை உட்கொள்ள அமைந்த உறுப்பே அவற்றிற்குரிய வாய் எனலாம். நத்தை உணவை உட்கொள்ளும் முறை வியப்பானதாகும்.

> ....பற்கள்தான் மிகச் சிறந்த ஆயுதங்கள் எனத் தெரிகிறது. ஆனால் இயற்கை இதனினும் சிறந்த சாதனங்களை அமைக்கத் தவறிவிடவில்லை. புரோசோப்ராங்கியேட் வகையைச் சார்ந்த நத்தைகள் பல மிகப் பெரிய கடினமான உறைகொண்ட மற்ற இன நத்தைகளை உண்கின்றன. கடின உறையில் ராடுலாவின் உதவியுடன் துளைபோட பல வாரங்களோ மாதங்களோ ஆகலாம். இதனால் ராடுலா, தேய்ந்துவிடும். ஆகவே இந்த நத்தைகள் ராடுலா போன்ற பற்களுக்குப் பதில் சிறப்புக் குணம் கொண்ட உமிழ்நீரை உபயோகிக்கின்றன. இந்த உமிழ்நீர் சல்ப்யூரிக் அமிலத்தின் 4% கரைசலாகும். இதில்.........
>
> நத்தைகளால் சுரக்கப்படும் அமிலம் மிகவும் சக்தி வாய்ந்தது. ஏனெனில் பளிங்குக் கல்மீது அதை ஊற்றினால் அது பொங்கி சீறி எழுகிறது. அது நத்தைச் சிப்பிகளை எளிதில் கரைக்கிறது. அது தனது இரையைத் தாக்கும்போது உமிழ்நீரை சிப்பியின்மீது படச் செய்தால், அது நெகிழ்வடைகிறது. உடனே ராடுலாவின் உதவியால் ஒரு துளை செய்து தும்பிக்கையை (உறிஞ்சுகுழலை) உட்

27, ப. பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல், ப. 78.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செலுத்தி, செயலற்றுக் கிடக்கும் இரையை சுவைத்து உண்ணமுடிகிறது.[28]

இப்பகுதி பேராசிரியர் கூறிய 'நத்தைகளின் இரை சுவைகோடலைத்' தெளிவுபடுத்துகிறது.

மேலும் அவை மெய்யுணர்வோடு நாவுணர்வும் பெற்றிருப்பதற்குக் காரணம் 'பிறிதொன்று தாக்கிய வழி அறிதலும் உடைமையின்' என்ற பேராசிரியரின் கூற்றுப்படி தன்னைக் காத்துக்கொள்ளவும், தன் இரையின் சுவையை அறியவும் ஆம்.

கிளிஞ்சல், நத்தை ஆகியவை தம் எதிரிகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்வது மட்டுமன்றி, அவற்றைத் திறலுடன் ஏமாற்றவும் கற்றுள்ளன.

> பல கிளிஞ்சல்கள் வெளியிடும் சுரப்பான் தண்ணீரில் ஒரு குமிழ் போலத் தோன்றி, சுரக்கும் கிளிஞ்சல்களின் உருவத்தைப் போலவே மிதந்து கொண்டிருக்கும். அப்போது தந்திரசாலியான கிளிஞ்சல் தன்னைத் தாக்க வரும் பகைக்குப் பெரிய குமிழைக் காட்டி ஏமாற்றிவிடும். எதிரிகள் குழம்பிக் கொண்டிருக்கும்போது இவை கடலின் ஆழத்திற்குச் சென்று மறைந்து விடுகின்றன.[29]

மூவறிவு உயிர்

உயிரின வளர்ச்சியின் அடுத்த கட்டம் உயிர்ப்பதற்கென்று தனியானதோர் உறுப்பு உருவான நிலையே ஆகும். மெய், வாய் இரண்டின் தோற்றத்தை அடுத்து மூக்கு உருவாயிற்று. உடலின் பல்வேறு பகுதிகளின் மூலமாக உயிர்த்த உயிரினங்கள் அதற்கென்று தனியான உறுப்பைப் பெற்ற உடன், அதற்கான உயிர்க்கும் வழிகள் (சுவாசப் பாதைகள்) உருவாயின. இதனைத் தொல்காப்பியர், 'மூவறி வுயிரே அவற்றொடு மூக்கே' என்பார். இவ் உறுப்பைப் பெற்ற உயிரினங்களை,

> சிதலும் எறும்பும் மூவறி வினவே
> பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே[30]

எனக் குறிப்பார். இதற்கு உரைகூறும் பேராசிரியர்,

---

28. ப, பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல் பக். 5 —58.
29. மே. நூ., ப. 79.
30. தொல், மரபியல், 585.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> இவை உற்றுணர்ந்து மீடலும், நாச்சுவை கோடலும் நெய்யுள் வழி மோந்தறிதலுமென மூன்றறிவினையுடைய வாறு கண்டு கொள்க. இவற்றுக்குக் கண்ணும் செவியும் இன்மை எற்றால் அறிதுமெனின்—ஒன்று தாக்கிய வழி யன்றி அறியாமையின் கண்ணிலவென்பதறிதும்; உரப்பிய வழி ஓடாமையிற் செவியில என்பதறிதும் இவற்றின் கிளை யென 'ஈயன், மூதாய்' போல்வன[31]

என்று விளங்க வைப்பார்.

முகர்தலுக்குக் காரணமாகிய மூக்கே உயிர்த்தலின் இன்றியமை யாத உறுப்பாகும். உயிரினங்களில் உயிர்ப்பதற்கான உறுப்பு உரு வான பிறகுதான் அது தொடர்பான பல்வேறு உறுப்புகளும் வளர்ச்சி அடையத் தொடங்கின.

> இயற்கைக்கு நுரையீரல்கள், செதில்கள் போன்ற எண் ணமே உடனடியாக உருவாகவில்லை. தொடக்ககாலப் பல செல் கொண்ட உயிரினங்களுக்கு மேற்கூறிய உறுப்புக் களே இல்லை. அவை தங்கள் உடலின் பரப்பு முழுவதா லும் சுவாசித்தன. மனிதன் உள்ளிட்ட மற்ற ஏனைய உயர்மட்ட விலங்குகள் சுவாசிப்பதற்கெனச் சிறப்பான உறுப்புக்களைப் பெற்றன[32]

என்பார் செர்கேயெவ். எறும்பு, கரையான் (சிதல்) ஆகிய உயி ரினங்களைப் பற்றிய உயிரியல் ஆய்வு இன்றும் தொடர்ந்த வண்ணம் உள்ளது. அரிய அறிவியல் கருவிகளின் துணையுடன் நடைபெறும் ஆய்வின் முடிவுகள் எவ்வகை அறிவியல் கருவிகளும் இல்லாத காலகட்டத்தில் கண்டுணர்ந்த முடிவுகளோடு ஒத்துக் காணப்படுவது விந்தையிலும் விந்தையாகும்.

நான்காவதறிவு

உயிர்ப்பதற்கான உறுப்புகளைத் தொடர்ந்து உருவானவை பார்வை மண்டிலமாகும்.

> உயிரின் பிறப்பில், ஒளி மிகப் பிரதான பங்கு வகித்துள்ளது என நம்பப் பல சான்றுகள் உள்ளன. எனினும் தொடக்க கால உயிரினங்கள் கொண்டிருந்த ஒளி உணர்வு, விரை

31. தொல். மரபியல் 585, பேராசிரியர் உரை.
32. ப. பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல் ப. 104.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விலேயே பார்வைக்கான ஒரு சிறப்பு உறுப்பாக மாறியது.[33]

இப்பார்வை உறுப்புகள் உருவாவதற்குக் கதிரவனின் ஒளிக்கதிர்களே காரணமாக அமைந்தன. ஒளிக்கற்றைகளின் விளைவால் பார்வைப் பகுப்பிகள் உருவாயின. கண்ணைப் போன்ற உறுப்பு இல்லாத 'புரோடோசே' போன்ற உயிரினம்கூட, இப்பார்வைப் பகுப்பிகளின் துணையால் இருளையும் ஒளியையும் வேறுபடுத்தி அறியவல்லனவாக உள்ளன. மண்புழுவிற்குக் கண் இல்லை என்றாலும் இப்பகுப்பிகளின் மூலம் ஒளியில் ஏற்படும் மிகக் குறைந்த மாற்றங்களைக்கூட அதனால் உணர முடிகிறது. ஆனாலும் அவற்றால் ஒளி எங்கிருந்து வருகின்றது என்பதை மட்டும் அறிய முடிவதில்லை.

ஒளி உணர்வின் வளர்ச்சி—பார்வைப் பகுப்பிகளின் வளர்ச்சியின் விளைவாகவே கண் தோன்றியது. கண்ணின் தோற்றம் பற்றி,

> ஒளிக்கூருணர்வு செல்கள் படிப்படியாக ஒளிபுகும் உணர்வையும் நிறமி செல்களின் திரையையும் பெற்றன. இவை எல்லா திசைகளிலிருந்தும் கண்ணுக்குள் வெளிச்சம் புகுதைத் தடை செய்தது. பிறகு ஒளிக்கூருணர்வு புள்ளிகள் குழிவுகளாகவோ பைகளாகவோ மாறின. இவைதான் முதன் முதலில் தோன்றியவைகளாகும். ஒரு குறிப்பிட்ட திசையிலிருந்து வரும் ஒளியைக் கண்கள் தெரிந்துகொண்டன. இதனால் ஒளிக்கதிர்கள் வரும் திசையையும் நிர்ணயித்தன. இந்த ஆதிகால 'கண்' சாதனத்திலிருந்து உயர்மட்ட விலங்குகளின் 'கண்கள்' தோன்ற ஒரே ஒரு படிதான் இருந்தது......... கடைசியாகப் பார்வை பற்றிய தகவல்களைப் பெற நடந்த ஆராய்ச்சிகள் 'ஆகுலோமோட்டார்' சாதனத்தால் சாத்தியமாயிற்று[34]

என்று விளக்குவார் செர்கேயெவ். தொல்காப்பியர் உயிரினங்களின் அறிவு வளர்ச்சியில் கண்ணின் பங்கு நான்காவது இடத்தை வகிப்பதாகக் குறிப்பார்,

> நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே[35]

என்பது நூற்பா. கண்ணைப் பெற்ற உயிரினங்களை,

---

33. ப. பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல் ப. 242.
34. மே. நூ., ப. 245.
35. தொல். மரபியல், 586.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நண்டுந் தும்பியும் நான்கறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே[36]

என்று வகைப்படுத்துவார்.

மெய்யுடைமையின் ஊற்றுணர்வும், இரைகோடலின் நாவுணர்வும், நாற்றங்கோடலின் மூக்குணர்வும், கண்ணுடைமையிற் கண்ணுணர்வும் உடையவாயின என விளக்கும் பேராசிரியர்,

> நண்டிற்கு மூக்குண்டோவெனின் அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றான். இவற்றுக்குக் கிளையென்பன வண்டுந் தேனீயுங் குழவியும் முதலாயின[37]

என்று கூறிச் செல்வார்.

நண்டிற்கு மூக்கு உண்டா என்பது பற்றிப் பேராசிரியருக்கும் அவர் காலத்தில் இருந்தவர்கட்கும் அய்யம் ஏற்பட்டிருந்தது என்பதை அவரது உரை உணர்த்தக் காணலாம். தமக்கு ஏற்பட்ட அய்யத்தை, 'ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றாம்' என்று ஆசிரியர் தொல்காப்பியர் கருத்தை அப்படியே ஏற்றுச் செல்கிறார்.

உயிரின வளர்ச்சியில் மூக்கை அடுத்தே கண் தோன்றியுள்ளதால், கண் பெற்றுள்ள நண்டிற்கு மூக்கு இருக்கவேண்டும் என்பது உயிரியல் உண்மையாகும். உயிரின வளர்ச்சியில் நண்டு முதுகெலும்புள்ள இனத்தை நெருங்கி வரும் ஓர் இனமாகும். கண்ணின் வளர்ச்சி நண்டு, தேனி, தும்பி ஆகிய இனங்களில் தோற்றம் கொண்டாலும் முதுகெலும்புள்ள உயிரினங்களில்தான் முழுமை பெற்றது.

> முதுகெலும்புப் பிராணிகளில் கண்களின் வளர்ச்சி ஒரே மாதிரியாக இருந்தது. அவை 'ஒளிவிலக்கல்' மற்றும் தசை அமைவு மண்டலங்கள், கண்ணை இயக்கும் தசைகள் ஆகியவற்றைப் பெற்றன. இந்த அமைப்பு மேலும் மேலும் துல்லியமடைந்து, தற்போதைய கண்களாக மாறியது.[38]

அய்ந்தாவது அறிவு

செவிப்புலன் உயிரினத்தின் அய்ந்தாவது கட்டம் ஆகும். கண்களின் வளர்ச்சிக்குப் பின்னர்த் தோன்றிய உறுப்பு காது.

---

36. தொல். மரபியல் 587.
37. மே. நூ., பேராசிரியர் உரை.
38. ப. பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல், ப. 247.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செவிப்பறைப் பகுப்பி அல்லது காது பரிணாம வளர்ச்சியில் சிறிது தாமதமாகவே தோன்றியது. கீழ்மட்ட முதுகெலும்பற்ற பிராணிகளில் அது காணப்படுவதில்லை. முதுகெலும்புப் பிராணிகளில் மீன்தான் முதன் முதலில் கேட்பதற்கான உறுப்பைப் பெற்றது. சமநிலை உறுப்பான லேபிரின்திலிருந்து பிரிந்த சிறிய பகுதியிலிருந்து அது உருவாயிற்று. உயர்மட்ட விலங்குகளில் கார்டியின் உறுப்பு எனப்படும் நன்கு வளர்ச்சி அடைந்த ஒரு உறுப்பாகவும் 'காக்ளியாகவும்' மாறியது. இவைதான் கேட்கும் சாதனத்தில் மிகவும் பிரதானமாகும்........

காதின் கூருணர்வு மிகவும் அற்புதமானது. 0.0001 மைக்ரோபார் அழுத்தத்தை உண்டாக்கும் ஒலியைக்கூட மனிதக்காது உணரமுடியும்.

மனிதனின் காது, விலங்கினங்களினதைவிடத் துல்லியத்தில் சற்றுக் குறைந்தே இருக்கிறது. முதலில் ஒலி அலைகளின் குறுகிய பரப்பையே மனிதக்காதால் உணர முடியும். ஒரு வினாடிக்கு 16—18 வட்டங்கள் ஒலி அதிர்வு ஏற்பட்டால் நம்மால் தொடர்ந்து ஒலியைக் கேட்க முடியாது........ ஒரு வினாடிக்கு 20,000 வட்டங்கள் ஒலி அதிர்வு ஏற்பட்டால், ஒலி அடியோடு மறைந்து விடுகிறது........

ஒரு வினாடிக்கு 20,000 வட்டங்கள் என்பது ஒரு பெரிய எண்ணிக்கையல்ல. நமது உண்மையான நண்பனான நாய் ஒரு வினாடிக்கு 38,000 வட்டங்கள் ஒலியை உணர முடியும். திமிங்கிலமும் டால்ஃபினும் 1 லட்சம் முதல் $1\frac{1}{2}$ லட்சம் வரையிலான அதிர்வு ஒலிகளை உணர முடியும். வௌவால் 3 லட்சம் வரை உணர முடியும். அல்ட்ரா ஒலியை உணரும் காதுகள் கொண்ட விலங்கினங்கள் அத்தகைய ஒலிகளை உருவாக்க(வும்) முடியும்.[39]

கேட்கும் தன்மையில் மனிதனைவிட மற்ற உயிரினங்கள் சிறந்து விளங்குகின்றன. அய்ந்தாவது அறிவைப்பற்றி விளக்கும் தொல்காப்பியர்,

அய்ந்தறி வதுவே யவற்றொடு செவியே[40]

என்பார். அடுத்துச் செவியைப் பெற்ற உயிரினங்களை வகைப் படுத்தும்போது,

39. ப. பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல், பக். 247—248.

40. தொல். மரபியல், 587.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> மாவும் மாக்களும் ஐயறி வினவே
> பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே[41]

என்பார். கேட்கும் தன்மையில் மனிதனைவிட விலங்கினங்கள் ஆற்றல் பெற்றவை என்பதை உணர்த்தும் வகையில் 'மாவை' முதற்கண் சொல்வது குறிப்பிடத்தக்கது. எவ்வளவுதான் துல்லிய மான ஒலிகளைக் கேட்கக்கூடிய ஆற்றல் பிற உயிரினங்களுக்கு இருந்தாலும், மனிதனின் காதுகளைப்போல் விரைவாக மாறிமாறி வரும் ஒலிகளைப் பகுத்துணரும் ஆற்றல் அவற்றின் காதுகளுக்கு இல்லை. ஒலியலைகளின் மாற்றங்களைப் பகுத்துணரும் ஆற்றலே மனிதனுக்குப் 'பேசும்' ஆற்றலை உருவாக்கியது என்பது குறிப் பிடத்தக்கது.

எனவே உயிரினப் படிமுறை வளர்ச்சியில் காதுகளின்—செவிப் புலன்களின் நுண்ணிய பாகுபாட்டோடு கூடிய வளர்ச்சியே மனித னைப் பேசும் விலங்காக உயர்த்தியது.

காது என்ற உறுப்பைப் பெற்ற உயிர்களை வகைப்படுத்தும் தொல்காப்பியர், 'மாவும் மாக்களும்' என்று குறிப்பது சிந்திக்கத் தக்கது. மனிதன் குரங்கிலிருந்து பிறந்தவன் என்ற முடிவு டார்வி னின் உயிரினப் படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டின் விளைவால் நிறுவப்பட்ட ஒன்றாகும். இவரது 'இன வகைகளின் தோற்றம்' என்ற நூல் கி. பி. 1859ஆம் ஆண்டின் இறுதியில் வெளியானது. இந்நூல் வெளிவந்த உடனே காரல் மார்க்சு எங்கல்சுக்கு எழுதிய கடிதத்தில்,

> நமது கருத்தோட்டத்திற்கு இயற்கை வரலாற்று ரீதியான அடிப்படையை அளிப்பது இந்த நூல்[42]

என்று குறிப்பிட்டு இந்நூலின் பெருமையை உணர்த்தினார். இந் நூலை அடியொற்றி மனித இன வரலாற்றை ஆராய்ந்த எங்கல்சு,

> மரமேறிகளான குரங்குகளின் கூட்டத்திலிருந்து மனித சமூகம் தோன்றுவதற்குள் லட்சக்கணக்கான ஆண்டுகள் ....கடந்து சென்றன. ஆனால் இறுதியில் அது தோன் றத்தான் செய்தது. குரங்குகளின் ஒரு கூட்டத்திற்கும் மனித சமூகத்திற்கும் இயல்பு ரீதியான வேறுபாடாகத் திரும்பவும் நாம் எதைக் காண்கிறோம்? உழைப்பு[43]

---

41. தொல். மரபியல 588.
42. எங்கல்சு, இயற்கையின் இயக்க இயல், ப. 12.
43. மே. நூ. ப. 286.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று விளக்குவார். அவர் கருத்து மனிதசமூக வரலாற்றை அடியொட்டியது. உழைப்பதற்குக் காரணமாகிய உறுப்புக்களின் அமைப்பே மனிதனைக் குரங்கிலிருந்து பிரித்துக் காட்டியதாக அவர் நம்புகின்றார். ஆனால் அறிவியல் வேறொரு முடிவினைத் தருகின்றது. அதாவது மனிதனது உடலமைப்பை ஒட்டி அவனுக்கும் விலங்கினங்கட்கும் இடையேயுள்ள வேற்றுமையை உருவாக்குவதில், 'காதுகளின் அமைப்பே' அடிப்படையாக இருந்தது என்பதே ஆகும். எனவே விலங்கிலிருந்து (குரங்கிலிருந்து) மனிதனது மூதாதை தோன்றினான் என்பதை உணர்த்தும் வகையிலேயே தொல்காப்பியர், 'மாவும் மாக்களும் அய்யறி வினவே' என்று கூறுகிறார் என்பது தெளிவு.

ஆறறிவுயிர்

'மாவும் மாக்களும் அய்யறி வினவே' என்பதில் 'மா' என்பது விலங்கினத்தையும் 'மாக்கள்' என்பது மனிதருள் பகுத்தறியும் பண்பு பெறாதோரையும் உணர்த்துகிறது. எண்ணும் ஆற்றலற்றவர்களை 'மாக்கள்' எனச் சுட்டுவது தமிழ் இலக்கண மரபு.

பகுத்தறியும் திறனும் அதனால் சிந்திக்கும் ஆற்றலும் மாந்த இனத்தின்மீது பற்றுதலும் உடையவர்களே மக்கள் ஆவர். எனவேதான் தொல்காப்பியர்,

> மக்கள் தாமே ஆறறி வுயிரே
> பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே[44]

என்பார். அக்கிளைப் பிறப்பு என்பதற்கு இளம்பூரணர், 'தேவர், இயக்கர், அசுரர்' என்று உரை கூறுவார்.[45] பேராசிரியர், "........ கிளை எனப்படுவார் தேவரும் தானவரும் முதலாயினார். பிறப்பு என்றதனால் குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன எனப்படும் மனஉணர்வுடையன உளவாயின் அவையும் ஈண்டு ஆறறிவுயிராய் அடங்கும் என்பது. தாமே எனப் பிரித்துக் கூறினமையான் நல்லறிவுடையார் என்பதற்குச் சிறந்தார் என்பதுங் கொள்க"[46] என்று விளக்கம் தருவார்.

உயிர்களின் வளர்ச்சியை இன்றைய அறிவியல் வளர்ச்சிக்குப் பொருந்தும் வண்ணம் உரைத்தவர் தொல்காப்பியர். இவர் மண்ணுலக மக்களைச் சுட்டாது தேவர், அசுரர், நரகர் என்போரை

44. தொல். மரபியல், 588.
45. தொல். மரபியல், இளம்பூரணர் உரை.
46. தொல். மரபியல் பேராசிரியர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேற்றுலக மாந்தர்களாகச் சுட்டியிருப்பார் என்பது பொருந்த வில்லை.

இந்த நூற்பாவிற்குப் பேராசிரியர் தரும் விளக்கத்தில் குறிக்கத் தக்க ஒரு செய்தி உண்டு. அதாவது 'குரங்கு முதலாகிய விலங்கி னுள் அறிவுடையன எனப்படும் மனஉணர்வு உடையன உளவாயின் அவை ஆறறிவுயிராய் அடங்கும்' என்பதால் அறிவு வளர்ச்சியின் அடிப்படையிலும் உடல் வளர்ச்சியின் அடிப்படையிலும் குரங்கிற் கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பை அவர்கள் அறிந்திருந்தனர் என்பது தெளிவாகிறது.

ஆறாவது அறிவை மனஉணர்வு என்பார் பேராசிரியர், தொல்காப்பியரும்,

ஆறறி வதுவே அவற்றொடு மனனே

என்பார். அறிவுக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பினை உணர்த்தும் இந்நூற்பாவின் பொருள் ஆராய்தற்குரியது.

மனம் என்றால் என்ன?

அறிவுத்துறை தோன்றிய நாள்தொட்டு 'மனம்' பற்றிய ஆய்வு நடந்தபடி உள்ளது. இவ்வாய்வில் கிடைத்த விடைகள் இரண்டு வகையில் அமைந்துள்ளன. ஒரு விடை 'மனம் என்பது தனியாக இல்லை. அது உடலைச் சார்ந்தே உள்ளது' என விளக்கியது. இவ்விடையைத் தந்தவர்கள் உலகாய்தர்கள்—நாத்திகர்கள்—சாங் கியர்கள் எனப்பட்டனர். மற்றொரு விடை, மனம் என்பதை மனித உடலுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகச் சுட்டும். இந்த விடை யைத் தந்தவர்கள் வேதாந்திகள்—நியாய வைசேடிகர்—மீமாம் சகர்—சைவர் முதலான பிரிவினர்.

> சார்வாகர் என்று கூறப்படும் நாஸ்திகர் மனமாவது உடலி னின்றும் வேறல்ல; உடலிலேயே ஏற்படும் உணர்ச்சி என் பர். ஆஸ்திக தர்சனங்களில் நையாயிகர், வைசேடிகர், மீமாம்சகர், சைவர் இவர்கள் கூறுவதாவது. மனம் என் பது ஒரு திரவியம். அதற்குச் சலனம் முதலிய செய்கை உண்டு. சுகதுக்காதி பிரத்தியட்சம் ஏற்படுவதே உடலி னின்றும் வேறாக மனம் இருப்பதற்குச் சான்று. அதாவது ஒவ்வொரு பிரத்தியட்சமும் ஒவ்வோர் இந்திரியத்தால் ஏற்படுகிறது. சுகாதி பிரத்தியட்சத்திற்குக் காரணமே மனந்தான். அதை உள் இந்திரிய மெனலாம்[47]

என்பது கலைக்களஞ்சியத்தில் சொல்லப்படும் விளக்கம்.

47. கலைக்களஞ்சியம், தொகுதி 8, ப. 187,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ் விளக்கத்தின் அடிப்படையில் மனம் என்பதை ஆத்திகர்கள் ஒரு திரவியமாக அதாவது ஒரு பொருளாகக் கண்டனர் என்பது தெளிவாகிறது. அத்துடன் மனம் என்ற பொருளுக்கு இன்ப துன்பங்கள் உண்டு என்பதும் அவர்களின் கருத்து.

அறிவும் மனமும்

தொல்காப்பியர் உயிர்களை அவற்றின் அறிதல் தன்மைக் கேற்ப வகைப்படுத்துகின்றார். அவ் அறிவின் தன்மைகள் உயிரினங்களின் உடலோடும் நரம்பு மண்டலத்தோடும் தொடர்பு கொண்டவை. அய்யறிவுயிர்களைப் போன்றே ஆறாவது அறிவும் அதனோடு தொடர்பு கொண்ட மனமும் உடலைச் சார்ந்ததாகவே இருக்கவேண்டும். தொல்காப்பியர்,

> மக்கள் தாமே ஆறறி வுயிரே

என்று விளக்குவது சிந்திக்கத்தக்கது. மேலும் அவர், ''ஆறறிவதுவே அவற்றொடு மனனே'' எனவும், ''மக்கள் தாமே ஆறறிவுயிரே'' எனவும் குறிப்பதன் மூலம் மனம் என்பது உடலைச் சார்ந்தது. அதுவும் மனித இனத்தைச் சார்ந்தது என்பதை உணர வைக்கின்றார்.

சாங்கியத்தில் மனம்

அறிவைப் பெறும் வாயில்கள் மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற அய்ந்துமாகும். இவற்றைப் பொறிகள் எனவும் வழங்குவர். வள்ளுவர் பொறி-வாயில் என்ற இரண்டு சொற்களையும் பயன்படுத்திப் 'பொறிவாயில் அய்ந்தவித்தான்' என்பார்.

இப்பொறிகளாகிய வாயில்களின் மூலமாகப் பெறப்படும் அறிவே புலன் ஆகும். புலன் என்ற சொல்லிற்கு அறிவு, இந்திரிய உணர்ச்சி ஆகிய பொருள்கள் உண்டு. வள்ளுவர்;

> கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள[48]

என்பார். இக்குறள் அய்ந்து பொறிகளாலும் பெறப்படும் அறிவை—அய்ம்புலனாகச் சுட்டுதல் நோக்கத்தக்கது. அய்ந்து பொறிகளும் அறிவைத் திரட்டும் வாயில்களாயினும் அவற்றை இயக்குவது—முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மூளையே ஆகும். மூளையின் செயல்திறன் குறையும்போது பொறிகளின்

48. குறள். 1101.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செயல்திறனும் பாதிக்கின்றது. பொறி, புலன், மூளை ஆகிய இவற்றை ஞானேந்திரியம், கன்மேந்திரியம், மனம் என வகைப் படுத்துகின்றது சாங்கியம். இம் மூன்றையும் பதினாறு தன்மாத் திரைகள் என்பர்.

> ....இந்த மனம் இருவிதமான இந்திரியங்களையும் அடக்கி ஆள்வதால் இதை ஞானேந்திரியமென்றும், கன்மேந்திரியமென்றும் சொல்லலாம். அதற்குச் சங்கற்பம் என்ற ஒரு வேலைதான் உண்டு........ இதுவும் சத்துவம், இராசதம், தாமசம் என்ற முக்குணங்களுடன் கூடியது. உடலுக்கு வெளியில் உள்ள தூண் முதலிய பொருள்களை அறிய வேண்டுமானால், முதலில் அந்தப் பொருளுக்கும் கண்ணுக்கும் சேர்க்கை. பிறகு மனம் கண் வழியாகக் கிளம்பித் தூண் முதலிய பொருள்களை அடைந்து அந்த உருவத்தை அடைகிறது. ஒரு குளத்தில் இருந்த நீர் வாய்க்கால் வழியாகச் சென்று வயலில் பாய்ந்து வயலின் உருவத்தை அடைவது இதற்கு உதாரணம். இந்தப் பரிணாமத்தை 'விருத்தி' என்று கூறுவர். இதுபோல் மற்ற இந்திரியங்கள் வழியாக மனம் வெளியே சென்று அந்தந்தப் பொருள் உருவமாகிறது........[49]

சாங்கியத்தின் இந்த விளக்கம் மூளையின் செயலை விளக்கும் வகையில் அமைந்திருப்பதை அறியலாம். பொறிகளின் வாயிலாக வரும் புலனுணர்வுகளை அவற்றிற்குரிய நரம்பு மண்டலங்களின் மூலம் அறிந்தும், அறிந்தவற்றிற்கேற்ப எதிர்வினை புரிந்தும் கட்டளை இடுவது மூளையின் பணியாகும்.

மனிதனது சிந்தனையாற்றலை வளர்க்கவும், அவனை அறி வார்ந்த மனிதனாக உயர்த்தவும் மூளையே பெரிதும் காரணமா கிறது. மனித மூளைக்கு ஈடாக ஒரு கணினி (கம்ப்யூட்டர்)யைச் செய்ய இன்றைய அறிவியல் வளர்ச்சியாலும் இயலாது. மூளையில் பாதிப்பு ஏற்படின் மனித வாழ்வே பாதிப்புக்குள்ளாகிறது.

மனிதனை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்தியதில் செவி முதன்மை இடம் வகிக்கின்றது. செவிப்புலனின் ஆற்றலே மனித னைப் பேசும் ஆற்றல் உள்ளவனாக ஆக்கியது. இப் பேச்சாற்றல் மூளையின் கட்டுப்பாட்டில் இருப்பது.

> மனிதன் மற்றும் விலங்கினங்களின் மூளையின் நடவடிக்கை களுக்கு இடையேயான அடிப்படை வேறுபாடு பேச்சைப்

49. கலைக்களஞ்சியம், தொகுதி 8, ப. 197.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> பயன்படுத்துவதில்தான் இருக்கிறது. இதையே இவான் பாவ்லோவ் இரண்டாவது சமிக்ஞை மண்டலம் எனக் கூறுகிறார். பேச்சு என்பது ஒரு முழுமையான மனித நிகழ்வு ஆகும். இன வேறுபாடுகள் ஏதாவது இருப்பின் அது பேச்சுக்கான மூளை செயல்முறையில் (கிரியையில்) வெளிப்பாடடையும்[50]

என விளக்குவார் செர்கேயெவ்.

தொல்காப்பியர் ஆறாவது அறிவை மனத்தோடு தொடர்பு படுத்துவதன்மூலம், மனத்தை உடலோடு தொடர்புடையதாகக் காணுகின்றார் என்பது தெளிவு. ஆத்திகர்கள் கூறுவதைப்போல மனம் என்பது உடலுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்பதற்கும், மனத்திற்கு இன்ப துன்பங்கள் உண்டு என்பதற்கும் அறிவியல் அடிப்படை ஏதும் இல்லை.

மனத்தின் செயல்கள்

சாங்கியர்களின் கொள்கைப்படி மனம் என்பது மூளையின் செயற்பாடே. வள்ளுவரும் மனத்தை அறிவோடு தொடர்புபடுத்தியே காண்கின்றார். அவ் அறிவும் புறநிலைத் தாக்கத்தால்—சூழ்நிலையின் தாக்கத்தால் உருவாவதாகவும் அவர் விளக்குகின்றார்.

மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னா னெனப்படுஞ் சொல்

மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு

மனந் தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூ ய்மை தூவா வரும்

மனந்தூயார்க் கெச்சநன் றாகுமினந்தூ யார்க்
கில்லைநன் றாகா வினை

மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து

50. ப. பி. செர்கேயெவ், அனைவருக்குமான உடல் இயங்கு இயல், ப. 333.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து[51]

மேற்கண்ட ஏழு குறட்பாக்களும் 'சிற்றினஞ் சேராமை' என்ற அதிகாரத்திற்குரியவை.

அரசன் எப்படி ஒழுகக்கூடாது என்பதையும் யாருடன் சேரக் கூடாது என்பதையும் விளக்கும் அதிகாரமே சிற்றினம் சேராமை ஆகும். வள்ளுவர் அறிவை இருநிலைகளில் காணுகின்றார். ஒன்று தனி மனிதன் தன் முயற்சியினால் பெறும் அறிவு. இதனைக் கல்வி கேள்விகளினால் பெறமுடியும். மற்றது சூழ்நிலைகளிலிருந்து பெறும் அறிவு. இது அரசனின் ஒழுகலாற்றை நிலைப்படுத்தும் ஆற்றல் சான்றது. தான் பழகும் நண்பர்களின் மூலமாகப் பெறும் பட்டறிவும் தனி மனிதன்பால் ஆளுமை செலுத்தவல்லது. எனவே தான், மன நலனையும் இன நலனையும் வற்புறுத்தும் வள்ளுவர்,

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்

என்று அவ்வதிகாரத்தின் இறுதிக் குறளில் தெளிவுபடுத்துகின்றார்.

மனமும் மார்க்சியமும்

மனிதனது சிந்திக்கும் தன்மை அவனது வாழ்நிலைக்கேற்பவே அமையமுடியும். பேரண்டத்தையும் பொருளையும் படைத்தது கடவுள் அன்று; மனம் அன்று. அதற்கு மாறாக அண்டமும், பொருளும் இயற்கையும்தான் மனத்தைப் படைத்தன. 'மனம் என்பது பொருளின் அதியுன்னதமான ஒரு படைப்பே' என விளக்கு வார் எங்கல்சு. அதாவது ஆத்திகர்கள் கூறுவதுபோல மனம் பொருளைப் படைக்கிறது என்பதற்கு மாறாகப் பொருளே அறிவு தோன்றுவதற்குக் காரணம் என்ற பொருளில், பொருளின் படைப் பாக மனத்தைக் காணுகின்றார் எங்கல்சு. மேலும்,

> நமது உணர்வும் சிந்தனையும் புலனியக்கத்துக்கு அப்பாற் பட்டதாக எவ்வளவுதான் தோன்றினாலும் அவை எல் லாம் மூளை என்கிற பொருளாலான உடல் உறுப்பின் விளை பொருளேயாகும்[52]

என்கிறார்.

---

51. குறள். சிற்றினஞ்சேராமை—அதிகாரம்.
52. சார்ஜ் பொலிட்சர், மார்க்ஸீய மெய்ஞ்ஞானம், ப. 42.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எங்கல்சின் இந்த விளக்கத்தோடு சாங்கியத்தின் 'உடலுக்கு வெளியில் உள்ள தூண் முதலிய பொருள்களை அறிய வேண்டு மானால் முதலில் அந்தப் பொருளுக்கும் கண்ணுக்கும் சேர்க்கை. பின்பு மனம் கண் வழியாகக் கிளம்பித் தூண் முதலிய பொருள் களை அடைந்து அந்த உருவத்தை அடைகிறது' என்ற விளக்கத் தையும் ஒப்பிட்டால் சாங்கியத்தின் அறிவார்ந்த தன்மைகளை விளங்கிக்கொள்ள முடியும்.

சாங்கியம் திராவிட மெய்யியலின் ஒரு கிளை. அய்ந்திர மரபைச் சார்ந்தது. தொல்காப்பியமும் அய்ந்திர மரபைப் பின்பற் றியது. எனவே மனம் பற்றிய சாங்கியத்தின் கோட்பாடே தொல் காப்பியத்திற்கும் பொருந்தும். அத்துடன் மனம்—சிந்தனை— அறிவு பற்றிய உலகாய்தத்தின் மரபு வழிப்பட்ட பதிலையும் தொகுத்துரைப்பது இங்குப் பொருந்தும்.

1, பொருள்தான் சிந்தனையைச் சிருஷ்டிக்கிறது; விஞ்ஞான பூர்வமாகப் பார்க்கும்போது பொருளின்றித் தனியே மனம் இருந்து வந்ததை எப்போதும் கண்டதில்லை.

2. மனதுக்கு வெளியேதான் பொருள் இருக்கிறது: அதற்கு என்று ஒரு அலாதியான தனி வாழ்வு இருக்கிறது. ஆகை யால் அதற்கு மனம் என்று ஒன்று இருக்கத் தேவையே கிடையாது. ஆகவே ஆன்மீகவாதிகள் சொல்வதற்கு நேர் மாறாக பொருட்கள்தான் எண்ணங்களை உண்டாக்கித் தருகின்றனவேயொழிய எண்ணங்கள் பொருட்களைச் சிருஷ்டிப்பதில்லை.

3. உலகத்தை, பிரபஞ்சத்தை, நம்மால் அறிந்துகொள்ள முடியும்: பொருளைப் பற்றியும், பிரபஞ்சத்தைப் பற்றி யும் நாம் உருவாக்கிக்கொள்ளும் எண்ணங்கள் மேலும் மேலும் சரியாகிக்கொண்டு வருகின்றன. ஏனெனில் விஞ்ஞானத்தின் உதவியைக் கொண்டு நாம் ஏற்கனவே அறிந்து வைத்துள்ளதை இன்னும் கணக்காக வரை யறுத்து நிர்ணயிக்க முடிகிறதோடுகூட, நமக்கு இதுவரை தெரியாமல் இருந்து வருவதையும் கண்டுபிடிக்க முடியும்,"[53]

தொல்காப்பியம் மற்றும் சங்க இலக்கியங்களில் விளக்கப்பட் டுள்ள அறிவியல் உண்மைகள் இன்றைய அறிவியல் உண்மை களோடு பெரிதும் ஒத்துள்ளன. தமிழ் மரபாளர்கள் முழுமையான

53. சார்ஜ் பொலிட்சர், மார்க்ஸீய மெய்ஞ்ஞானம், ப. 44.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறிவியல் பார்வையைக் கொண்டிருந்ததே இவ்வொப்புமைக்கான காரணம் எனலாம்.

சமண சமயக் கோட்பாட்டில் சொல்லப்பட்டுள்ள 'உயிர்களின் படிமுறை வளர்ச்சி'—தொல்காப்பியம் காட்டும் உயிர்களின் படிமுறை வளர்ச்சி ஆகிய இரண்டும் பெரிதும் ஒத்துள்ளன, இதனால் தொல்காப்பியரைச் சமண சமயத்தவராகக் கருதும் ஒரு நிலையும் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

சமண சமயக் கோட்பாட்டில், உயிர் பற்றிய இச்செய்திகள் முதன் முதல் எந்தக் காலத்தில் இடம் பெற்றன என்பதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. சமணமும் சாங்கியத்தைப்போல திராவிடச் சிந்தனையின் தொடர்ச்சியில் கிளைத்தது என்றாலும் மகாவீரரைத் தலைவராகக்கொண்ட சமணம் கி. மு. 3 ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் தமிழகத்திற்குள் பரவத் தொடங்குகின்றது.[54]

எனவே, கி. மு. ஆறாம் நூற்றாண்டிற்குரியவரான தொல்காப்பியர் சமணர்களைப் பார்த்து இவ்வுண்மைகளைச் சொன்னார் என்பது ஏற்க முடியாத ஒன்றாகும். மாறாக தொன்மை வாய்ந்ததும், திராவிடர்க்கே உரியதுமான அய்ந்திர மரபைப் பின்பற்றியே உயிர்களின் படிமுறை வளர்ச்சி பற்றிய அறிவியல் உண்மைகள் சமண சமயத்தில் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதே உண்மையாகும்.

கிரேக்கத்தில் கி. மு. ஆறாம் நூற்றாண்டளவில் 'பொருள் முதலியல் கோட்பாடு' தோற்றம் கொண்டாலும், தமிழ் இலக்கியங்களில் சொல்லப்படும் அளவிற்குத் தெளிவோ விளக்கமோ வளர்ச்சியோ அடையவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது முழுமையான அறிவியல் அடிப்படையில் உருவான இக்கோட்பாடுகள் பின்னாளில் கருத்து முதலியலைத் தழுவத் தொடங்கின என்பது ஒரு துன்பியல் போக்காகும்.

54. P. B. Desai, Jainism in South India, p. 27.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அய்ந்திரமரபும் அறிவியல் கோட்பாடும்

மெய்யியலும் அறிவியலும் பூவிரட்டைக் காம்பிரட்டைப் போல ஒன்றோடு ஒன்று இணைந்தும் பிணைந்தும் வந்துள்ளன. மெய்யியல் கோட்பாடு அறிவியல் கண்டுபிடிப்புகளுக்குத் தூண்டு தல்களாக அமைய, கண்டுபிடிப்புகளோ மெய்யியல்களை—அவற்றின் கோட்பாடுகளை மெய்ப்பித்து நடைமுறைக்கு உகந்ததாகவும், புரிந்துகொண்டு பின்பற்றக்கூடிய வாழ்க்கை நெறியாகவும் உருவாக்கித் தருகின்றன. அறிவியலின் இந்தத் தன்மையினை லெனின்,

> இயற்கை விஞ்ஞானம் எவ்வளவு வேகமாய் முன்னேறிச் செல்கிறது; எல்லாத் துறைகளிலும் எவ்வளவு ஆழ்ந்த கொந்தளிப்புக்கு உள்ளாகி வருகிறது; அப்படிப்பட்ட விஞ்ஞானம் தத்துவவியல் (Philosophy) அனுமானங்களின்றி இருக்கலாமென நினைக்க முடியவே முடியாது[1]

என வரையறை செய்வார்.

இத்தகைய மெய்யியலைத்தான் உலகாய்தர்கள் விளக்கினர். பிரபஞ்சத்தைப்பற்றித் தம்மால் முடிந்த அளவு அவர்கள் ஆராய முயன்றனர். அவ்வாராய்ச்சியின் விளைவாக இவ்வுலகம் பஞ்ச பூதங்களின் சேர்க்கையின் விளைவே என்ற முடிவுக்கு வந்தனர். அவர்களின் இந்த முடிவு இன்றைய அறிவியல் உண்மைகளோடு மாறுபடலாம். ஆனாலும் அவர்களின் அறிவியல் பூர்வமான அணுகுமுறையே இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கெல்லாம் அடிப்படை என்பது நினைவிற்கொள்ள வேண்டிய ஒன்று.

மார்க்சீய மெய்யியலை ஆராயும் அறிஞர்கள் அதனை உலகாய்தத்தோடு ஒப்பிட்டு, உலகாய்தமே மார்க்சீயத்தின் அடிப்படை என நிறுவுகின்றனர். இரண்டிற்கும் உள்ள தொடர்பினை சார்சு பொலிட்சர் பின்வருமாறு வகைப்படுத்துவார்.

---

1. வி. ஐ. லெனின், இயக்கவியல் பொருள்முதல் வாதம், ப. 46.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. உலகாயத மெய்ஞ்ஞானமே மார்க்சியத்தின் அடிப்படை.

2. பிரபஞ்சத்தின் பிரச்சினைகளுக்கு உலகாயதவாதம் விஞ்ஞான ரீதியான விளக்கம் தர விரும்புகிறது. ஆகவே சரித்திர காலப் போக்கிலே விஞ்ஞானம் வளரவளர அத்துடன் கூடவே உலகாயதவாதமும் வளர்ந்து முன்னேறுகிறது. ஆகவே மார்க்சியம் பல விஞ்ஞானங்களிலிருந்து பிறந்தது; அவற்றை அடிப்படையாகக் கொண்டது; அவ் விஞ்ஞானங்கள் வளரவளர அவற்றோடு கூடவே மார்க்சீயமும் வளருகிறது.

3. ....மார்க்சுக்கும் எங்கல்சுக்கும் முன்பே உலகாயதவாத மெய்ஞ்ஞானங்கள் பல இருந்து வந்துள்ளது. ......19வது நூற்றாண்டில் விஞ்ஞானங்கள் வெகுதூரம் முன்னேறியதையொட்டி மார்க்சும் எங்கல்சும் உலகாயத வாதத்தைப் புதிதாக உருவாக்கினர். அவர்கள் அதற்கு விஞ்ஞானங்களையே அஸ்திவாரமாகக் கொண்டனர்.[2]

இத்தகைய அறிவியல் நோக்குடைய உலகாய்தர்கள், தாம் விளக்க முனையும் அனைத்துச் செய்திகளையும் அறிவியல் அடிப்படையிலேயே அணுகியுள்ளனர். விளக்கும் செய்திகள் அகத்திணைக்கோ அல்லது புறத்திணைக்கோ உரியவையாக இருந்தாலும் மற்றும் மொழிக்குரிய இலக்கணப் பகுதியாக இருந்தாலும், அறிவியல் நோக்கே அடித்தளமாக இருந்தது.

பொருள்

ஆன்மீகர்கள் இவ்வுலக வாழ்வைவிட ஆண்டவன் வாழ்வதாக நம்பிய அருள் உலகையே வியந்து போற்றுவர். தாம் வணங்கும் கடவுளிடம் பொன்னையும் பொருளையும் போகத்தையும்விட அவனது அருளையும் அறனையும் அன்பையும் விரும்பி வேண்டுவர்.[3] ஆனால் உலகாய்தர்களோ இவ்வுலகையே பொருள் உலகமாகக் கருதுவர்.

> மயிலைச் சித்திரித்தாரையும், குயிலைக் கூவுவித்தாரையும்
> காணாமையால் கடவுள் உண்டென்பதும் பொய்[4]

என்று, கடவுள் என்ற கருதுகோளையே மறுப்பவர்கள். உலகத்தின் உருவாக்கத்தையே மூலப்பொருட்களின் சேர்க்கை என வகுத்த இக்கோட்பாடு 'பொருள்' பற்றிய இவர்களின் கருத்தை

2. சார்ஜ் பொலிட்சர், மார்க்ஸீய மெய்ஞ்ஞானம், ப. 15.
3. பரிபாடல், 5 : 80—81,
4. மணி. 27, பூதவாதி உரை மேற்கோள், ப. 661.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளக்கும். அறிவுக்கும் புலன்களுக்கும் எட்டக்கூடிய ஒன்றே 'பொருள்' எனக் கொண்டனர். 'பொருள்' என்ற சொல்லும் 'விளக்கம்' என்ற பொருளை உணர்த்துவதும் இங்கே எண்ணத் தக்கது.

சொற்களின் தன்மை பற்றி விளக்கும் தொல்காப்பியரும்,

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே[5]

என்பார். மனித வாழ்வோடு பிணைக்கப்பட்டுள்ள அகத்திணை, புறத்திணைகளைப் பொருளதிகாரத்துள் அடக்கி விளக்குவதும், இவர்கள் பொருள்முதலாளர்கள் என்பதன் அடையாளமாகும். இன்றைய அறிவியல், 'பொருள்' பற்றித் தரும் விளக்கமாவது:

> பொருள் என்பது என்ன?......... பொருள் என்பது புறநிலையில் உள்ள ஒரு யதார்த்தம்; அது மனதைச் சார்ந்திராமல் சுதந்திரமாக இருப்பது; மனதில்லாமலே அது இருக்க முடியும். அது இருப்பதற்கு மனம் அவசியமே இல்லை......... இதைப்பற்றிச் சொல்லும்போது, ''பொருளைப்பற்றிய கருத்தோட்டம் குறிக்கிறதெல்லாம் நம் புலன் உணர்ச்சிகள் மூலமாக நாம் அறியும் புறநிலை யதார்த்தத்தை (உண்மையை)த் தானேயொழிய வேறெதையுமில்லை'' என்று லெனின் கூறினார்.[6]

இவ்வாறு அறிவிற்கும் புலன்களுக்கும் எட்டக்கூடியதும், சமூகத்தின் புறநிலை உண்மையாக இருப்பதும் ஆகிய பொருளின் தன்மைகள் என்ன? அதற்கு இயக்கம் உண்டா? என்னும் வினாக்களுக்கு இன்றைய அறிவியல் என்ன விடை தருகிறது என்பதை அறிந்து கொள்வது அய்ந்திர மரபின்—உலகாய்தத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றிய தமிழ் மரபாளர்களின் சிந்தனை வளர்ச்சியை அறிந்து கொள்ளத் துணையாகும்.

'பொருள் என்ற கருத்தோட்டத்தைப்பற்றி உலகாய்தர்கள் அளிக்கும் வரையறுப்புகள்' என்ற தலைப்பில் சார்சு பொலிட்சர் தரும் விளக்கமாவது:

> நமக்கு வெளியே, நமது மனதுக்கு வெளியே பொருள் இருக்கிறது என்று பார்க்கிறோம். ஆகவே அப்படிக் கூறவும் செய்கிறோம். அதேபொழுதில் (1) பொருள்

5. தொல். சொல். பெயரியல் 1.
6. சார்ஜ் பொலிட்சர், மார்க்ஸீய மெய்ஞ்ஞானம், ப. 70.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பது இன்னின்ன காலத்தில், இன்னின்ன இடத்தில் இருக்கிற தன்மை பெற்றது என்று காலத்தையும் களத்தையும் குறித்து வரையறுக்கிறோம்.

2. பொருள் இயங்கிக்கொண்டே இருக்கும் தன்மை பெற்றது என்று இயக்கத்தையும் குறித்து வரையறுக்கிறோம். இந்த இரண்டு அம்சங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது காலம், களம் என்பவை நமது மனத்தில் உதித்த எண்ணங்களே என்று ஆன்மீகவாதிகள் நினைக்கிறார்கள்.........

அப்படி அல்ல; களம் நம் மனத்தில் இல்லை; நாம் தான் களத்தில் இருக்கிறோம்; என்று லோகாயதவாதிகள் சாதிக்கிறார்கள். நமது வாழ்வு விரிந்து மலர்வதற்குக் காலம் என்பது அத்தியாவசியமான நிபந்தனையாகும்; ஆகவே நமது மனத்துக்கு வெளியே காலத்திலும் களத்திலும் நிலை கொண்டிருப்பதே பொருள் என்று லோகாயதவாதிகள் அறுதியிட்டுக் கூறுகிறார்கள்.

இதற்குச் சான்றாக,

காலம் களம் என்பவை எல்லா வாழ்நிலைக்கும் ஆதார வடிவங்கள் ஆகும். களத்துக்கு அப்பாற்பட்டு எதுவும் இருக்கமுடியும் என்று சொல்வது எவ்வளவு முட்டாள்தனமோ அதேபோல் காலத்துக்கு அப்பாற்பட்டு எதுவும் இருக்கமுடியும் என்று சொல்வதும் முட்டாள்தனமாகும் என்ற எங்கல்சின் கருத்தை மேற்கோளாகக் காட்டுவார்.[7]

மேல்காட்டிய இப்பின்னணியில் தொல்காப்பியர் தரும் விளக்கத்தை ஒப்பாய்வு செய்தல் பயனுடையதாகும்.

தொல்காப்பியர் பொருளை மூன்று வகையாகப் பிரிப்பார். அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன.

முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுள பயின்றவை நாடுங் காலை[8]

என்பது நூற்பா.

தமிழ் மரபில் அகத்திணை, புறத்திணை பற்றிய செய்திகளைப் 'பொருள்' எனச் சுட்டுவது முன்னர்க் கூறப்பட்டது. இங்கே அத்தகைய பொருள்களைக் கருப்பொருள், உரிப்பொருள்களில் அடக்

7. சார்ஜ் பொலிட்சர், மார்க்ஸீய மெய்ஞ்ஞானம், ப. 71.
8. தொல். அகத்திணை இயல், 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும் தொல்காப்பியர், இவ்விரண்டு பொருள்களும் நிகழ்தற்குரிய நிலம், பொழுது (களம், காலம்) இரண்டனையும் முதற்பொருள் எனச் சுட்டிச் செல்கின்றார்.

முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே[9]

என்பது நூற்பா. பொருள் நிகழ்ச்சியைக் காலத்தோடும் களத்தோடும் தொடர்புபடுத்திக் கூறுவது இன்றைய அறிவியல். தொல்காப்பியரோ திணையொழுக்கமாகிய 'பொருள்' நிகழ்ச்சிக்குத் துணையாகவும் அடிப்படையாகவும் இருப்பவை நிலமும் காலமும் எனச் சுட்டுவதோடு அவற்றை முதற்பொருள் எனவும் வகைப்படுத்துவார். அவ்வாறு அவற்றை முதற்பொருளாகச் சொல்லும் மரபு கூட அவர்தம் முன்னோரின் கூற்றாக 'நிலம், பொழுது இரண்டின் இயல்பு'களை உணர்ந்தவர்களின் கூற்றாகக் குறிப்பிட்டு அதனைத் தாம் வழிமொழியும் பாங்கில் குறித்துள்ளதும் சிந்திக்கத் தக்கதாகும்.

தொல்காப்பியம் குறிப்பிடும் இந்நிலம், பொழுது இரண்டையும் விசும்பு (Space) காலம் (Time) என்று குறிப்பிட்டுப் பொருள் காண்பார் குணா.[10]

இன்றைய சார்பியல் கொள்கை விசும்பையும் சார்பானதே என்று நிறுவிவிட்டது.

காலம்

அகப்பொருள் துறைகள் நிகழ்தற்குரிய இடமாக முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை எனக் களம் அமைத்துக் கொடுக்கும் தொல்காப்பியர் ஒவ்வொரு திணைக்கும் பொழுதைச் சார்த்தி வரையறை செய்வார்.

காரும் மாலையும் முல்லை; குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்

வைகுறு விடியல் மருதம்; ஏற்பாடு
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்

நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலோடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே[11]

என்ற நூற்பாக்கள் திணைகளுக்குரிய காலத்தை விளக்குகின்றன.

9. தொல். அகத்திணை இயல், 4.
10. குணா, தமிழர் மெய்யியல், ப. 29.
11. தொல். அகத்திணை இயல், 7—9.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகத்திணைப் பாடல்களில் திணைகளுக்குரிய உரிப்பொருள்களை விளங்கிக்கொள்ளப் 'பொழுது' பெரிதும் துணைபுரியும்.

ஆண்டின் ஒரு கூறாகிய கார்காலத்தைப் பெரும்பொழுதாகவும் நாளின் ஒரு கூறாகிய மாலைப் பொழுதைச் சிறுபொழுதாகவும் வரையறை செய்து அவற்றை முல்லைத் திணைக்குரியவையாகச் சார்புபடுத்திக் கூறும் மரபு எதன் அடிப்படையில் உருவாயிற்று?

'பொருள் நிகழ்ச்சி களத்திலும் காலத்திலும் நிலை கொண்டிருக்கிறது' என்ற அறிவியல் சிந்தனை தொல்காப்பியர் காலத்திலேயே உருவாகி இருக்குமா? இதைத்தான் மேற்கண்ட கருத்துக்கள் விளக்குகின்றனவா? என்பதெல்லாம் ஆராய்ச்சிக்குரிய பகுதிகளாகும்.

இயக்கம்

பொருள் நிகழ்ச்சி களத்தோடும் காலத்தோடும் தொடர்பு கொண்டது. அதே நேரத்தில் அது இயக்க விதிக்கு உட்பட்டு இயங்கிக்கொண்டே இருப்பது என்பது இன்றைய அறிவியல் முடிவு ஆகும். எங்கல்சு,

> இயக்கம் (Motion) என்பது பொருளின் வாழும் தன்மையாகும்; வாழ்க்கை முறையுமாகும். இயக்கமற்ற பொருளைப்பற்றி எப்படிச் சிந்தித்துப் பார்க்கவும் முடியாதோ அதேபோல் பொருள் அற்ற இயக்கத்தைப் பற்றியும் சிந்தித்துப் பார்க்கவே முடியாது[12]

எனப் பொருளின் இயக்கத் தன்மையை வரையறுப்பார்.

தமிழில் வழங்கும் இயற்கை, இயல்பு ஆகிய சொற்கள் பொருள்களின் இயக்கத்தையும், இயக்கமே பொருள்களின் பண்பு என்பதையும் உணர்த்துவன. இதனை,

> இயற்கை என்னும் சொல்லை, 'இயல் கை' என்று பிரிப்பர். இயங்கிக்கொண்டே இருப்பது என்பது அதன் பொருள். புற உலகு இயங்கிக் கொண்டும் மாறிக் கொண்டும் இருப்பது என்னும் துளிர்நிலை இயங்கியல் பார்வை பண்டைத் தமிழர்களிடம் இயற்கையாக விளங்கியதை அது தெளிவுற உணர்த்துகின்றது.........

12. சார்ஜ் பொலிட்சர், மார்க்ஸீய மெய்ஞ்ஞானம், ப. 73.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> இயல்பு என்பதற்கு இயன்று கொண்டிருக்கின்ற அல்லது 'இயங்கிக் கொண்டிருக்கின்ற பண்பு' என்றே பொருள். பொருள்கள் இருக்கின்ற வகை 'இயக்கமே' என்னும் இயங்கியல் கருத்தே அச்சொல்லிலும் விளங்குகின்றது[13]

என்று விளக்குவார் குணா.

பொருள்களின் இவ்வியக்கம் பற்றிய தெளிவே தமிழர் மெய்யியலில் நிலையாமைக் கோட்பாடாக வளர்ச்சி பெறுகிறது—காஞ்சித்திணையாக வகுக்கப்படுகிறது. நிலையாமைக் கருத்தின் வளர்ச்சி ஊழ்வினையை வற்புறுத்தும் முறைமை (நியதி)க் கோட்பாடாக—ஆசீவகச் சமயமாக உருவாகின்றது. (இக்கருத்துத் தனி இயலில் விளக்கப்படும்)

தொல்காப்பியர்,

> **பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றானும்**
> **நில்லா உலகம் புல்லிய நெறித்தே[14]**

என்று குறிப்பார். இளம்பூரணர்,

> பாங்கருமையாவது, ஒருவற்கு ஒரு துணையாகாமை. நிலையாமை மூவகைப்படும். இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, யாக்கை நிலையாமை என. இவற்றுள் இளமை நிலையாமையாவது,
>
> **பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்**
> **கனிஉதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிதும்**
> **வேற்கண்ணள் என்றிவளை வெஃகல்மின்; மற்றிவளும்**
> **கோற்கண்ணள் ஆகும் குனிந்து[15]**

என உரை கூறி நாலடியார்ப் பாடலையும் மேற்கோளாகக் காட்டுவார். 'இத்தகைய நிலையாமைக் கருத்து திராவிடர்களுக்கே உரியது, மிகவும் தொன்மை சான்றது.'[16]

இயக்கவியலை அடிப்படையாகக் கொண்ட இந்நிலையாமைக் கோட்பாட்டைத் தமிழ் இலக்கியங்கள் பரக்கப் பேசுகின்றன. குறுந்தொகை, நிலையாமையாகிய இவ்வியக்கமே உலகின் நிலை பெற்ற ஒன்று என்று வற்புறுத்தும்.

---

13. குணா, தமிழர் மெய்யியல், ப. 22.
14. தொல். புறத்திணை இயல் 76.
15. தொல். புறத்திணை இயல், இளம்பூரணர் உரை.
16. குணா, மு. கு. நூ., ப. 24.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழியல் ஆயிழை அழிபுபெரி துடையன்
பழியு மஞ்சும் பயமலை நாடன்
நில்லா மையே நிலையிற் றாகலின்[17]

என்பது அப்பாடற் பகுதியாகும்.

நிலையாமையாகிய இவ்வியக்கத்தின் தன்மைகளை,

> இயங்கிக் கொண்டேயிருக்கும் பொருளைத் தவிர உலகில் வேறொன்றும் இல்லை; அந்த இயங்கும் பொருள் காலத்திலும், களத்திலும்தான் இருந்து இயங்க முடியுமேயல்லாமல் வேறெந்த ரீதியிலும் இயங்க முடியாது[18]

என லெனின் விளக்குவார்.

எனவே பொருள், அதன் நிலைக்களனாகிய களம், காலம், அதன் இயல்பாகிய இயக்கம் ஆகிய எல்லாமும் உலகாய்தச் சிந்தனையின் அடிப்படையில் எழுந்த அறிவியல் வளர்ச்சியே எனலாம். இவ்வுலகின் தோற்றத்திற்குக் கடவுள் காரணம் இல்லை; கடவுள் என்பதே பொய் என்று வற்புறுத்திய உலகாய்தர்கள் எந்தக் கருத்தையும் ஆழ்ந்த ஆய்விற்கு உரியதாக ஆக்கினர். இதனால்தான் இந்த மரபிலே வந்தவரும் அய்ந்திரம் நிறைந்தவருமாகிய தொல்காப்பியரால் இத்தகைய அறிவியல் கருத்துக்களைச் சொல்ல முடிந்தது. அத்துடன், உலகாய்தச் சிந்தனைக்கு மாறான கருத்துமுதலாளர்களால் இத்தகைய அறிவியல் கருத்துக்களை அறிவியல் அடிப்படையில் விளக்க முடியாது என்பதும் வரலாறு காட்டும் உண்மையாகும். இதனை,

> விஞ்ஞான முடிவுகளின் பலத்தைத் துணையாகக்கொண்டு பொருட்கள் களத்திலும் காலத்திலும் இருந்து இயங்குகின்றன என்று லோகாயதவாதிகள் அறைந்து கூறுகின்றனர். ஆகவே இந்தப் பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்டிருக்க முடியாது. ஏனெனில் இந்தப் பிரபஞ்சத்தைக் கடவுள் சிருஷ்டித்து முடித்திருக்க வேண்டுமென்றால் இந்தப் பிரபஞ்சத்தை ஏதோ ஒரு குறிப்பிட்ட க்ஷணத்தில் சிருஷ்டிக்க வேண்டும். ஏதோ ஒரு காலப் பிரமாணம் கடவுளுக்கு வேண்டியிருக்கும். ஆனால் கடவுளுக்குக் காலம் என்று ஒன்றுங் கிடையாதே! மேலும் இந்தப் பிரபஞ்சத்தைக் கடவுள் சிருஷ்டித்திருக்க முடிந்திருக்க வேண்டுமென்றால் இந்தப் பிரபஞ்சத்தை ஏதோ ஒரு களத்தில் கடவுள் சிருஷ்

17. குறுந். 142 : 1—3.

18. சார்ஜ் பொலிட்சர், மார்க்ஸிய மெய்ஞ்ஞானம், ப. 73

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டித்திருக்க வேண்டும். ஆனால் கடவுளுக்குத்தான் களம் கிடையாதே!.........

.........பிரபஞ்சத்தை யாரோ சிருஷ்டித்தார்கள் என்று ஒப்புக்கொள்ள வேண்டுமானால் முதலில் ஏதோ ஒரு குறிப்பிட்ட க்ஷணத்தில் பிரபஞ்சம் இருக்கவில்லை என்றும், அடுத்தபடியாக வெறும் சூன்யத்திலிருந்து 'ஏதோ ஒன்று' வெளிவந்தது என்றும் ஒப்புக்கொண்டாக வேண்டும். இதை விஞ்ஞானத்தால் ஒப்புக்கொள்ள முடியாது. ஆகவே விஞ்ஞானத்திற்கு எதிரே ஆன்மிக வாதங்கள் நிற்க முடியாது[19]

என்ற இந்த விளக்கம் தெளிவாக்கும். ஆதலால் இயக்கவியலின் அடிப்படையில் உலகாய்தர்கள் கடவுள் கோட்பாட்டை மறுத்துள்ளனர் என்பது வெளிப்படை.

ஆகாயம் பூதமா?

கடவுள் மறுப்பு, பேரண்டத் தோற்றம், சமூக வாழ்க்கை, அளவைஇயல் ஆகிய அனைத்திலும் ஒரே அடிப்படையைக் கொண்டுள்ள உலகாய்தரும் பூதவியலாரும் வேறுபடும் இடம் 'ஆகாயம்' பற்றிய ஒன்றில்தான். பூதவியலார் ஆகாயத்தைப் பஞ்சபூதங்களுள் ஒன்றாகச் சேர்க்க, உலகாய்தர்கள் ஆகாயத்தைக் காணமுடியாதாகையால் அதனை ஒரு பூதமாக ஏற்பதில்லை.

தமிழ் மொழியில் உள்ள மெய்யியல் நூல்களில் (மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார்) உலகாய்தம் பற்றி வரும் இடங்களில் பூதங்கள் நான்கு என்றே சுட்டப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் இலக்கியங்கள் பூதங்கள் அய்ந்து என்று ஆகாயத்தை உள்ளடக்கியே குறிக்கின்றன.

பொருள் நிகழ்ச்சிக்குக் காரணமானதும் (காலத்தோடு இணைந்து வருவதுமாகிய களமே 'விசும்பு' என்பதாக முன்னர்க் குறிக்கப்பட்டது. விசும்பினைப் புறநானூறு 'அகல் இரு விசும்பு' என்று அதன் வளர்ச்சி நிலையை வினைத்தொகையாகக் குறிக்கும்.

அகன்றதும் விரிந்ததுமாகிய 'மாகவிசும்பில்தான் நாள்மீன்களும் கோள்மீன்களும் இயங்குகின்றன. அத்தகைய விசும்பில் இயங்கும் இளங்கதிர் ஞாயிற்றைச் சுற்றிக் கோள்கள் திரிகின்றன. இந்தக் காட்சி நல்லியக்கோடன் பாணர்களுக்குப் பொற்கலத்தில்

19. சார்ஜ் பொலிட்சர், மார்க்ஸிய மெய்ஞ்ஞானம், ப. 74.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படைத்த உணவையும் மற்றும் உணவுப் பொருள்களையும் ஒத்துள்ளது' என்பார் நல்லூர் நத்தத்தனார்.

வாள்நிற விசும்பிற் கோள்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளுந் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி[20]

என்பது அப்பாடல் பகுதி. விசும்பில் இயங்கும் பல்வேறு கோள்களைப் போலவே உயிர்களின் வளர்ச்சிக்குக் காரணமாகிய இப்பூவுலகும் விசும்பில் இயக்கம் கொண்டுள்ளது. அவ்வியக்கமும் காற்று ஊடு போகாத வானத்தில் நிகழ்வது என்பார் வெள்ளைக்குடி நாகனார்; இதனை,

வளியிடை வழங்கா வானஞ் சூடிய
மண்டிணி கிடக்கை.........[21]

என்ற அடிகள் உணர்த்தும்,

வானியல் பற்றிய மிகத் தெளிவான சிந்தனை சங்க காலத் தமிழகத்தில் இருந்தது என்பதை மெய்ப்பிக்கும் பல சான்றுகள் உள்ளன.

செஞ்ஞாயிற்றினது வீதியும், அஞ்ஞாயிற்றினது இயக்கமும், அவ்வியக்கத்தாற் சூழப்படும் பார்வட்டமும், காற்று இயங்கும் திசையும், காற்று வெளியின்றி வறிதாய் நிலைபெற்றுள்ள ஆகாயமும் ஆகிய இவைகளைப்பற்றி அவ்விடங்களுக்கே சென்று அளந்து அறிந்து, இது சென்ற காலத்தில் இவ்வாறு இருந்தது; இப்போது இந்நிலையில் உள்ளது; இனி வருங்காலத்தில் இன்னவாறு இருக்கும் என்றெல்லாம் வரையறை செய்து சொல்லக்கூடிய ஆற்றல் மிக்க கல்வி அறிவாளர்கள் இருந்தனர்.

செஞ்ஞா யிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தார் போல வென்றும்
இனைத்தென் போரு முளரே யனைத்தும்......[22]

20. சிறுபாணாற்றுப்படை, 242—244.

21. புறம். 35 : 2—3.

22. புறம். 30 : 1—6.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று பாடுவார் உறையூர் முதுகண்ணன் சாத்தனார். 'பரிப்பு என்ற சொல்லிற்கு இத்துணை நாழிகைக்கு இத்துணை யோசனை செல்லும் என்னும் இயக்கத்தை' என்று பழைய உரையாசிரியர் குறிப்பர். [23]ஞாயிறு இயங்குகின்றதா? இயங்கினால் அதன் வேகம் பற்றி இன்றைய அறிவியல் என்ன கூறுகிறது?

> அண்டத்தின் சுழற்சியைப்பற்றி அதிகத் தகவல்கள் தெரிய வேண்டுமென்றால் இன்னொரு தரவு வேண்டும். உதாரணமாக ஞாயிற்றினுடைய உண்மை வேகம்; இதை அளப்பதற்கு ஒரு குறித்த அளவுமுறை வேண்டும். உதாரணமாக, உருண்டைக் கொத்துகளில் மிகவும் அதிக தூரத்தில் இருப்பதனால் ஞாயிறு அவ்வளவு வேகத்தில் சுழல முடியாது. ஞாயிறு இந்தக் கொத்துக்களை நோக்கியோ, அல்லது இந்தக் கொத்துக்களை விட்டு அகன்றோ என்ன வேகத்தில் செல்லுகின்றது என்பதை நிறமாலைச் சோதனையினால் கண்டுபிடித்தால், இதிலிருந்து ஞாயிற்றின் அண்மையிலுள்ள விண்மீன் கூட்டங்கள் ஒரு நொடிக்கு 270 கி. மீ. வீதம் அண்டத்தின் மையத்தைச் சுற்றி வருகின்றன என்று தெரியும்.........
>
> ஸ்ட்ரோம்பர்க் என்பவர், ஞாயிற்றின் வேகத்தைத் தனிச் சிறப்பு அண்ட நெபுலாக்களில் மிக அருகில் உள்ளவைகளை எடுத்துக்கொண்டு, இதிலிருந்து ஞாயிற்றின் வேகத்தை கணக்கிட்டதில் இஃது ஒரு நொடிக்கு 360-லிருந்து 500 கி. மீ. வரம்பில் இருந்தது என்று கண்டறிந்தார்.[24]

சூரியனின் வேகம் விநாடிக்கு 360-லிருந்து 500 கி.மீ. வேகம் என்ற கருத்தில் அண்மையில் ஒரு சிறிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது சூரியனின் வேகம் விநாடிக்கு 296 கி. மீ. என்பதே அம் முடிவாகும். இதனைக் கண்டறிந்தவர் எல். குமாசன் என்ற அறிவியலறிஞர் ஆவார்.[25]

சூரியனின் இவ்வியக்கத்தையே உறையூர் முதுகண்ணன் சாத்தனார் 'பரிப்பு' என்ற சொல்லால் உணர்த்துகின்றார்.

---

23. புறம். பழைய உரை.
24. ஜீன்ஸ் & ஜேம்ஸ், நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம், பக். 71-72
25. Baker and Fredrick., Astronomy, p. 33

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அத்துடன் சூரியனின் இவ்வியக்கம் அண்டவெளியில் ஒரு மண்டலத்தோடு (கூட்டத் தொகுதியோடு) தொடர்பு கொண்டது என்பதையும் 'பரிப்பு சூழ் மண்டலம்' என்ற தொடர் உணர்த்துகின்றது எனலாம். அண்டத்தின் மையத்திற்கும், சூரியனுக்கும் இடைப்பட்ட தொலைவு 36,000 ஒளியாண்டுகள் என்றும், அண்டவெளியின் நீர்க்கரேகையில் 45 டிகிரி கோணத்தில் சூரியனின் இயக்கம் நடைபெறுவதாகவும் இன்றைய அறிவியல் கூறுகின்றது.[26]

வளிதிரி தருதிசை

பூமியைச் சுற்றியுள்ள வளி மண்டிலம் ஓசோன் என்பதாகும். இதுவே விண்வெளியிலிருந்து வரும் புற ஊதாக்கதிர்களின் பாதிப்பிலிருந்து இப்பூமியைப் பாதுகாப்பதாகும். அத்துடன் விண்வெளியிலிருந்து நழுவி விழும் எரிகற்களின் தாக்குதல்களிலிருந்தும் இவ்வுலகைக் காப்பாற்றுவதும் இவ்வளிமண்டிலமே ஆகும்.

இக்காற்று மண்டிலம் அடிவளி மண்டிலம் (Troposphere) என்றும் மேல்வளி மண்டிலம் (Stratosphere) என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அடிவளி மண்டிலம் பூமி மட்டத்திலிருந்து அதாவது நிலநடுக்கோட்டிலிருந்து 16 கி. மீ. யிலும், துருவ மட்டத்திலிருந்து 8 கி.மீ. தொலைவிலும் பரவியுள்ளது. இதில் நைட்ரசன், ஆக்சிசன் ஆகியவை 4:1 என்ற அளவில் உள்ளன. அத்துடன் கரியமில வாயுவும், நீராவியும் ஓரளவு கலந்துள்ளன. இவ்விரண்டுமே பூமியின் வெப்பத்தைச் சமப்படுத்தும் பணியைச் செய்வன. இவ் அடிவளி மண்டிலத்தின் (காற்றின்) இயக்கம் எழுந்தும், விழுந்தும், சுழன்றும் இருக்கும். இவ்வளி மண்டிலத்தின் இத்தகைய இயக்கமே விண்மீன்களைக் கண் சிமிட்டச் செய்வது. மேக மண்டலத்தைப் பல்வேறு எழிற்கோலம் கொள்ளச் செய்வதும் இவ்வியக்கமே.[27]

மேல்வளி மண்டிலம்

அடிவளி மண்டிலத்திலிருந்து 72 கி. மீ. உயரத்தில் இயங்குவது மேல்வளி மண்டிலம். இதன் ஓட்டம் கிடை நிலையில் (Horizontal) நிகழ்வது; மிகக்குறைந்த அளவே நீராவி இடம் பெற்றுள்ளது. உலகைக் காக்கும் ஓசோன் என்னும் வளிமண்டிலத்தைத் தன்னுள் கொண்டதும் இம் மேல்வளி மண்டிலமே

---

26. Baker and Fredrick, Astronomy, p. 33,

27. Ibid., p. 33

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகும்.[28] இந்த அறிவியல் உண்மைகளின் பின்னணியில் பின்வரும் குறள் அமைந்திருக்கிறது.

அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி[29]

'அருளுடையார்க்கு இம்மையிலும் ஒரு துன்பம் உண்டாகாது; அதற்குக் காற்று இயங்குகின்ற வளப்பத்தை உடைய பெரிய ஞாலத்து வாழ்வார் சான்று' என்று சமய அடிப்படையில் பரிமேலழகர் இக்குறளுக்குப் பொருள் கூறுவார். இவ்வுலகைப் புற ஊதாக் கதிர் போன்ற கதிரியக்கங்களின் தாக்குதல்களிலிருந்து எவ்வாறு வளிமண்டிலம் காப்பாற்றுகின்றதோ அதைப்போல அருள் ஆள்வாரின்அருட்பண்புகள் அவர்களுக்குப் பாதுகாப்பாக அமைகின்றன என்ற கருத்து பொருத்தமாக அமைகிறது. பூமிப் பரப்பிற்கு மேலும், வானமண்டிலத்திற்குக் கீழும் உள்ள இடைப் பகுதியே 'வளிதிரி தருதிசை'யாக விளங்குவதை 'அறிவியலும் மெய்ப்பிக்கின்றது. ஓசோன்காற்று மண்டிலத்தின் இயக்கம் கிடைநிலையாக உள்ளது என்ற அறிவியல் கூற்றை விளக்கும் வகையில் மாங்குடி மருதனார்,

வலமாதிரத்தான் வளிகொட்ப[30]

என்று குறிப்பார். 'காற்று மண்டிலம் பூமியை வலமாகச் சுற்றி வருகிறது' என்பது இதன் பொருள்.

பூமிப்பரப்பிற்கு மேல்தான் வளிமண்டிலம் இயங்கி வருகின்றது என்பதனை,

விசும்பு தைவரு வளியும்[31]

என்ற புறப்பாடலும் அறிவுறுத்தும்.

காற்று மண்டிலம் பற்றியும் அதன் இயக்கம் பற்றியும் வான மண்டிலத்தில் அதன் வரம்பு (எல்லை) பற்றியும் மிகத் தெளிவான செய்திகள் சொல்லப்பட்டுள்ளன.

மயங்கிருங் கருவிய விசும்பு முகனாக
இயங்கிய இருசுடர் கண்ணெனப் பெயரிய
வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்[32]

என்று புறப்பாடல் இதனைத் தெளிவாக்கும்.

28. Baker and Fredrick, Astronomy, pp. 33-34
29. குறள். 245
30. ம. காஞ்சி 5
31. புறம் 2:3
32. புறம். 325:1-3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருள்களின் இயக்கத்திற்குக் களமும் காலமும் அடிப்படை என்ற இயங்கியல் கோட்பாடு இப்பாடலில் முழுமைபெற்று விளங்கக் காணலாம்.

> இருசுடர்கள் (கதிர், நிலவு) கண்களைப்போல் விளங்க, முகம்போல அமைந்த விசும்பானது, காற்றின் இயக்கம் அற்றதும், கடத்தற்கு அரியதுமாகிய ஒரு பெரு வழியாகும்.[33]

என்பது இப்பாடல் கருத்தாகும். எனவே, விசும்பு பொருட்களின் இயக்கத்திற்குக் களனாக அமைவது மட்டுமல்லாமல் இப்பேரண்டத்தின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றுக்கும் காரணமாக அமைவது என்பதும் புலனாகிறது.

ஆகாயம் என்பது பொருட்கள் யாவற்றையும் ஏந்தி நிற்கும் பரப்பு என்பதை மணிமேகலை,

> ஆக்கும் ஆகாயம் எல்லாப் பொருட்கும்
> பூக்கும் இடம் கொடுக்கும் புரிவிற்று ஆகும்[34]

என உரைக்கும். 'உளவென்ற பொருட்கெல்லாம் இடம் கொடுத்து உடன்தளர்வின்றி நிற்பது ஆகாயம்' என மேருமந்திர புராணமும் குறிப்பிடும்.

இந்த அடிப்படையில்தான்—அதாவது பொருட்களின் தோற்ற வளர்ச்சிக்கு நிலைக்களனாக விசும்பு அமைந்திருப்பதாக அறிந்ததால்தான், பூதவியலார் ஆகாயத்தையும் ஒரு பூதமாகக் கொண்டனர். தொல்காப்பியரும்,

> நிலம்தீ நீர்வளி விசும்பொ டைந்தும்
> கலந்த மயக்கம் உலகம் ஆதலின்[35]

என விளக்குகின்றார். நிலம் நீருள் அடங்கும்; நீர் தீயுள் அடங்கும்; தீ காற்றுள் அடங்கும்; காற்று விசும்பில் அடங்கும். எனவே நிலம். நீர், தீ, வளி என்ற நான்கும் ஆகாயத்துள் அடங்குவதாயிற்று.

மேலே எடுத்துக்காட்டிய அறிவியல் உண்மைகளை—இன்றைய வளர்ச்சி பெற்ற வானியல் அறிவை அப்படியே அக்காலத்தவர்

---

33. புறம். உரை
34. மணி. 27:193-194
35. தொல். மரபியல் 644:1-2

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறிந்திருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுவதும் புகழ்ந்துரைப் பதும் இவ்வாராய்ச்சியின் நோக்கமன்று. மாறாக, மனித அறிவு எல்லையற்ற இப்பேரண்டத்தை அறிய முயன்ற அடையாளங்களே அவை என்பதையும், அந்த முயற்சியின் வெளிப்பாடு எந்த அளவில் இன்றைய அறிவியலோடு இணைந்து வருகிறது என்பதையும் ஒப்பிட்டுக் காட்டுவதே இவ்வாராய்ச்சியின் நோக்கமாகும்.

வானியல் பற்றிய சிந்தனை வளர்ச்சி பெற்றதே திராவிடர் களிடமிருந்துதான் என்பதை ஆய்வாளர்கள் நிறுவியுள்ளனர்.

> வானியல், நாள்மீன், கோள்மீன் பற்றிய ஆய்வு அனைத்துமே சிந்துவெளி நாகரிகத்திற்கும் அதன் கிளையான சுமேரிய நாகரிகத்திற்கும் உரியது என்பது மிகத் தெளிவான ஒன்று. கி. மு. 3000 வாக்கில் சுமேரியாவிலிருந்து கிரேக்கத்திற்கு இச்சிந்தனை பரவியது. கி.மு. 1000த்தில் கிரேக்கம் இதனை மேலும் செழுமைப்படுத்தியது.
>
> இதற்கிடையில் நிலையான வாழ்க்கைமுறையை அறியாத ஆரியர்கள் பின்பற்றியதாகச் சொல்லப்படும் வானவியல் முற்றிலும் வேறானது. சிந்துவெளி மக்களின் உழவியல் நாகரிகத்தோடு தொடர்புடையதும் நடைமுறைக்குரியதுமாகிய இவ்வானவியலை ஆரியர்கள் அறிந்திருக்கவில்லை என்பதுடன் வேதங்களிலும், தொடக்க கால இந்துசமயத்திலும் வானவியல் பற்றிய எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.........
>
> கி. பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டுகளில்தான் இந்துமதம் கிரேக்கத்திலிருந்து புத்தம் புதிதாய் வானவியலைக் கற்றுக் கொள்ளத் தொடங்கியது.[36]

---

36. It is clear that the origin of astronomy and the constellations and astrisms lie in Indus-valley and its sister civilization of Sumeria of the third Millennium B. C. from where it is spread to Greece in the first Millennium B. C. Greece developed it further. Meanwhile to India the wandering Indo-Aryans astronomy had not the same practical purpose which it surved to the great urban agricultural civilization of Indus-valley. Consequently, not only did astronomy make no progress in Vedism and early Hinduism, but even what knowledge had been taken from the Indus Valley had

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக்கூற்று வானியில் பற்றிய கோட்பாடு திராவிடர்சட்கே உரியது என்பதையும் இங்கிருந்தே கிரேக்கம் முதலான நாடுகளுக்கு இக் கோட்பாடு பரவிற்று என்பதையும் அறிவிக்கிறது. உண்மை இவ்வா றிருக்க, கிரேக்கச் சொல்லான 'ஓரா' என்பது வடமொழிக்கு வந்து, அங்கிருந்து தொல்காப்பியர் கடன் பெற்றதே 'ஓரை' என்ற சொல்லாகும் என்ற கருத்தெல்லாம் நடுநிலைமையோடு கூடிய ஆராய்ச்சி அன்று என்பதும் வெளிப்படையாகும்.

நாள்மீன், கோள்மீன்

தமிழ் நாட்டின் ஆண்டுக் கணக்கு திங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தாலும், வியாழனை மையமாகக் கொண்ட ஆண்டுக் கணக்கும், சூரியனை மையமாகக்கொண்ட ஆண்டுக் கணக்கும் நடைமுறையில் இருந்துள்ளன. பாண்டியர் களும், சேரர்களும் வியாழனை அடிப்படையாகக்கொண்ட ஆண்டுக் கணக்கைப் பின்பற்றினர் என்பது முன்னர் எடுத்துக்காட் டப்பட்டது. ஆனால் சோழமன்னர்கள் சூரியனை மையமாகக் கொண்ட ஆண்டுக் கணக்கையே பின்பற்றி வந்தனர். இந்த ஆண்டுக் கணக்கில் திங்களின் இயக்கமும் இணைக்கப்பட்டுள்ளது.

சூரியன் இயக்கம் ஆண்டின் 12 மாதங்களுக்கும், 12 இல்லங் (ராசி)களாகப் பிரிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் இல்லத்திலும் இருப்ப தாகவும், அவ்வியக்கத்தின் தொடக்கம் ஆட்டில் (மேழத்தில்) தொடங்குவதாகவும் வகுத்தனர். சூரியன் இருக்கும் இல்லமும், திங்கள் சார்ந்திருந்த மீனும் (27 மீன்களுள் ஒன்றில்) துல்லியமாகக் கணக்கிடப்பட்டு வந்துள்ளது. இதனை நெடுநல்வாடை,

திண்ணிலை மருப்பின் ஆடுதலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலல் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி... ... ...[37]

---

lost its meaning by the early century of the Christian era. About the 4th and 5th Century A. D. Hinduism had to learn astronomy a fresh from the Greeks and the Romans.

—Sundar Raj, Bulletin of the Institute of Traditional Cultures, Madras-72.
Non Aryan Elements in Rg. Veda, p. 142.

37. நெடுநல்வாடை, 160—163.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என விளக்கும். வேளாண்மை அடிப்படையில் உருவாகிய வானவியல், திராவிடர்களின் கடல் வாணிப வளர்ச்சியில் முற்றாக முழுமை பெற்றது. ஆண்டுக்கணக்கில் செய்த கடற் பயணம் தடங்கலற்ற வானத்தில் இயங்கும் மீன்களின்—கோள்களின் இயக்கத்தை அறியப் பயன்பட்டது.

கிழமைகட்குத் தமிழர்கள் அமைத்த ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, காரி (சனி) என்ற பெயர்கள் அக்கோள்களின் இயல்புகளை—பண்புகளை அறிந்திருந்த அறிவியலின் அடையாளமே எனலாம்.

சிவந்த நிறம் பற்றிச் செவ்வாய் என்றும், சூரியனுக்கு மிக அருகில் அமைந்திருப்பதாலும், எளிதில் கண்ணுக்குப் புலப்படாமையாலும் மறைந்திருப்பது என்ற பொருளில் புதன் (புதன்—புதர்—புதன்) என்றும் பெயர்கள் இட்டுள்ளனர்.

அதேபோல் சூரியக் குடும்பத்தில் சூரியனுக்கு அடுத்து மிகப் பெரியதாகவும், விரிந்தும் இருப்பது வியாழன் ஆகும். எனவே அதன் அகற்சியும் பரப்பும் கருதி அதற்கு வியாழன் (வியல்—அகலம்) என்ற பெயரையும், வெள்ளி போல ஒளிர்தலின் வெள்ளி என்ற பெயரையும் அமைத்துள்ளனர்.

சனியைப் பற்றித் தமிழ் இலக்கியங்கள் குறித்துள்ள செய்திகள் மிகவும் ஆழ்ந்த ஆராய்ச்சிக்குரியவையாகும். இதன் வண்ணம் பற்றி இதனை 'மைம்மீன்' என்றும், 'கரியவன்' என்றும் குறிக்கின்றன. சனி மீனைச் சுற்றியுள்ள வளையங்கள் அதன் இயக்கத்தின் காரணமாக விரிவடைந்து, வியாழனின் எல்லைவரை நீள்வதும் உண்டு. இதனை 'மைம்மீன் புகையினும்'' எனப் புறநானூறு குறிக்கும். இத்தகைய நுட்பத்தை இவர்கள் வெறும் கண்ணாலே கண்டு உணர்ந்தார்களா அன்றி கருவிகள்மூலம் கண்டு அறிந்தார்களா என்பது பெரும் புதிராக உள்ளது.

நாள்

காலை, பகல், இரவு இவற்றைக்கொண்ட ஒருநாள் என்பது பூமி தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொள்ள ஆகும் நேரம் என்பதாகக் கருதப்படுகின்றது. ஆனால் ஒருநாள் என்பது,

> ஒரு நட்சத்திரத்திற்கு எதிரே பூமி, தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொள்ள ஆகும் நேரம் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஆகவே இதற்கு 'நட்சத்திர நாள்' என்று பெயர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> ஆகவே ஒரு நட்சத்திர நாள் என்பது சராசரியாக ஒரு சூரிய நாளைவிட 3 நிமிடம் 56 விநாடி (சுமார் 4 நிமிடம்) குறைந்தது[38]

என விளக்குவார் பெரெல்மான் என்ற உருசிய நாட்டு வானியலார்.

தமிழ் மக்கள் பின்பற்றி வந்த நாள் 'நட்சத்திர நாளே' யாகும். அதனால்தான் மீன்களைக் குறிக்கும் 'நாள்மீன்' என்ற வழக்கும் ஏற்பட்டது.

அரசர்கள் பிறந்த நாள்களை அந்தந்த நாள்மீன்களோடு சார்த்திக் குறிப்பிடும் மரபு வானியலின் அடிப்படையில் உருவானதே. மாங்குடி மருதனார், பாண்டியன் நெடுஞ்செழியனை,

> நின்று நிலைஇயர்நின் நாள்மீன் நில்லாது
> படாஅச் செலீயர்நின் பகைவர் மீனே[39]

என வாழ்த்துவதும் குறிக்கத்தக்கது.

பிற்காலச் சோழர்கள் நாளைக் குறிக்கும்போதெல்லாம், அந் நாளுக்குரிய நாள்மீனோடே குறித்துள்ளனர்.

> இவ்வாட்டை சிம்மஞாயிற்று அபர
> பக்கத்து அட்டமியும் வியாழக்கிழமையும்
> பெற்ற ரோகிணிநாள்[40]

என்ற கல்வெட்டு இதனை உணர்த்தும்.

ஞாயிறு சிம்மராசியில் இருக்கும் மாதம் ஆவணி. எனவே ஆவணி மாதம் தேய்பிறை எட்டாவது நாள் நிலவு உரோகிணி யோடு கூடிய வியாழக்கிழமை என்பது கல்வெட்டின் பொருள்.

கிழமைப் பெயர்கள்

வாரத்திற்கு ஏழு நாட்களை அமைத்து வழங்குவது உலகம் தழுவிய ஒன்றாக உள்ளது. நாட்களின் பெயர்களும் வரிசை முறைகளும்கூட ஏறக்குறைய ஒத்துள்ளன.

இந்தியாவில் ஞாயிறு, திங்கள் ஆகிய இரண்டு கிழமைகள் நீங்கலாக உள்ள செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி முதலானவற்றின் பெயர்கள் சூரியக் குடும்பத்தைச் சார்ந்த அய்ந்து

---

38. யா. பெரெல்மான், பொழுதுபோக்கு பௌதீகம், ப. 23.
39. புறம். 24 : 24—25.
40. வ. தங்கையா நாடார், தென்னிந்திய தமிழ்ச் சாசனங்கள், ப. 148.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோள்களின் பெயர்களாக உள்ளன. இவற்றிற்கான காரணமும் ஆராயத்தக்கது.

திராவிட இனத்தவராகிய சிந்துவெளி மக்கள் வியாழனை அடிப்படையாகக்கொண்ட ஆண்டுக் கணக்கையும், நிலவை அடிப் படையாகக்கொண்ட மாதக் கணக்கையும் பின்பற்றியவர்கள். இம்மரபு பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழர் வாழ்வில் இணைந்தும் கலந்தும் வருகின்றது. எனவே கிழமைகளுக்குப் பெய ரிட்ட மரபும் சிந்துவெளி திராவிட மக்கள் காலத்திற்கு முன்ன ரேயே—அத் திராவிட மக்கள் தெற்கே தமிழரோடு ஒன்றி வாழ்ந்திருந்த காலத்திலேயே உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

உருசிய நாட்டு அறிஞர்கள்,

> கி. மு. 3000 ஆண்டுக் காலத்தில் மக்கள் ஐந்து பெரும் கிரகங்களைப்பற்றித் தெரிந்துகொண்டிருந்தனர் என்றும், வியாழன் கிரகம் சூரியனைச் சுற்றி வரும் காலத்தை அவர் களால் கணக்கிட முடிந்தது என்றும் எவரும் கருத முடியாது[41]

என்றும் விளக்குவர். எனவே சிந்துவெளி மக்களாகிய திராவிடர் கள் அறிந்திருந்த 'அய்ந்து பெரும் கிரகங்களின்' பெயர்களே ஞாயிறு, திங்கள் நீங்கலான மற்ற அய்ந்து கிழமைகளின் பெயர்கள் என்பது தெளிவு.

41. சோவியத்நாடு, ஏப்ரல், 1985, ப. 32.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல் -நான்கு

ஆசீவகம்

பக்குடுக்கை நன்கணியார்

பக்குடுக்கை கணியனார் (ஒப்பு-பூங்குன்றனார்)

பக்குடுக்க கணியனார் (உலக வழக்கு)

பக்குடுக்க அக்ஷயனார் (கண் = அக்ஷம், கணியன் = அக்ஷயன்) வடமொழி மாற்றம்.

பக்குடுக்க + அக்ஷயனார் = பக்குடுக்காக்ஷ யனார் (தீர்க்க சந்தி)

பக்குடுக்காச்சயனார் (க்ஷ = ச்ச)

பக்குடுக்காச்சாயனார் (மரூஉ.)

—பேராசிரியர், பே. க. வேலாயுதம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and
with the Compliments of the
Dept: of Education Govt of India
New Delhi;

ஆசீவகம்

அறிவியல் அடிப்படையிலும் அணுக்கோட்பாட்டு அடிப்படையிலும் உலகாய்தத்தை ஏற்றுக்கொண்டும், பிறவிகளுக்குக் காரணம் ஊழ்வினையே என வற்புறுத்துவதில் கருத்துமுதலியலைத் தழுவியும் அமைந்த ஒரு மெய்யியலே ஆசீவகம். இதன் தோற்றம் வட இந்தியாவிற்கு உரியதாகச் சொல்லப்பட்டாலும் 'சமண பௌத்த சமயங்களைப் போலவே ஆசீவகமும் ஆரியர் வருகைக்கு முற்பட்ட திராவிடச் சிந்தனையின் அடித்தளத்தைக் கொண்டதே' என்பார் என்றிச்சிம்மர்.[1]

ஆசீவகச் சமயத்தில் கருத்துமுதலியலின் தாக்கம் மிகுந்துள்ளது என்றாலும் வேத வேள்விகளை மறுப்பதிலும் கடவுட் கோட்பாட்டை எதிர்ப்பதிலும் இது உலகாய்தத்தோடு தொடர்புள்ள பொருள்முதல் மெய்யியலாகவே கொள்ளப்படுகிறது.[2] எனவே, இச் சமயத்தின் தோற்றம், வளர்ச்சி, தமிழ் இலக்கியத்துள் பெற்றுள்ள இடம் ஆகியவற்றைப் பற்றி ஆராய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

பெயர்

'ஆசீவகம்' என்ற இச்சமயத்தின் பெயரே அதன் எதிரிகளால் வழங்கப்பட்டது என்பார் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்.[3] ஆனால், என்றிச்சிம்மர், ஆசீவகம் என்ற சொல்லை ஆ+சீவ எனப் பிரித்து, சீவனுக்கு (உயிருக்கு) அதன் வினைப்பயன் எவ்வளவு பிறப்புக்கள் என்று வரையறை செய்துள்ளதோ அவ்வளவு பிறப்புக்களை எடுத்த பின்னரே உயிர் விடுதலை பெறும்[4] என்பதாகப் பொருள் கூறுவார்.

---

1. Zimmer, Philosophies of India, p. 263.
2. D. Chattopadhyaya, Lokayata, p. 519.
3. தெ. பொ. மீனாட்சிசுந்தரம், கழக 1008-வது வெளியீட்டு விழா மலர், ப. 75.
4. Zimmer, Philosophies of India, p. 263.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசீவகம்—ஆசீவகர் என்ற சொற்கள் தமக்கென்று ஒரு வாழ்க்கை நெறியை—மரபு வழியினின்று மாறி அமைத்துக் கொண்ட புதிய வாழ்க்கை முறையினை ஏற்றுக்கொண்ட துறவி களைக் குறித்த சொற்கள் எனவும், இச்சொற்கள் பார்ப்பனர் அல்லாத துறவிகளை உணர்த்திய பொதுவான சொற்கள் எனவும், இச்சொற்களின் வழக்காறு மற்கலிகோசாலரால் ஆசீவகச் சமயம் உருவாக்கப்படுவதற்கு முன்னரே நடைமுறையில் இருந்தது எனவும் அறிஞர் குறிப்பர்.[5]

அறிஞர்கள், ஆசீவகம்—ஆசீவகர் என்ற சொற்களுக்குப் பலவாறு விளக்கங்கள் அளித்தாலும், அச்சொற்கள் தனித்தன்மை வாய்ந்த துறவறத்தை—துறவிகளை உணர்த்துகின்றன என்பதைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

எனவே, 'ஆசீவகர்கள்' என்ற பெயர் அக்கோட்பாட்டின் எதிரிகளால் சூட்டப்பட்டிருந்தாலும் அவர்கள் புதியதொரு துறவு நெறியைப் பின்பற்றியவர்கள் என்பது தெளிவு.

ஆசீவகர்களும்—கணியரும்

'ஆசீவகர்கள் காலத்தைக் கணித்துக் கூறுவதில் வல்லவர்கள். அரசர்களது அவைக்களங்களில் நிமித்தங்களை—வானியல்—கோளியல் தன்மைகளை அறிந்து உரைப்பவர்களாக இருந்தவர் களும் இவர்களே ஆவர்'.[6] மற்கலிகோசாலரும் அவரது தோழர் களும் கூடி உருவாக்கிய 'மகாநிமித்தம்' என்ற நூல் எட்டு அங்கங் களைக் கொண்டிருந்தது. சந்திரகுப்த மௌரியன் காலத்தில் தென்னாடு வந்த சமணத் துறவியாகிய பத்திரபாகு என்ற முனிவர் ஆசீவகர்களின் இம் 'மகாநிமித்தம்' என்ற நூலில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர் என்பதும், இத்தேர்ச்சியினாலேயே உச்சயினியின் பேரழிவை இவரால் முன்கூட்டியே சொல்ல முடிந்தது என்பதும் சிரவணபெலகோலாவில் உள்ள கல்வெட்டால் அறியப்படும் செய்தி களாகும்.[7] ஆசீவகர்களின் வானநூற் புலமையையும் வருவதுரைக் கும் திறமையையும் அறிந்தே அசோகன் இச்சமயத்தாருக்குப் பல்வேறு சிறப்புக்களைச் செய்துள்ளான்.[8]

5. A. L. Basham, History and Doctrines of Ajivikas, p. 298.
6. Ibid., p. 214.
7. Ibid., p. 214.
8. நிகாம், அசோக சாசனங்கள், ப. 79.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருவது உரைக்கும் ஆற்றலும் காலத்தைக் கணித்துக் கூறும் புலமையும் வானியல் ஆய்வும் கொண்டவர்களைத் தமிழ் இலக்கியங்கள் 'கணியர்' என்று குறித்துள்ளன. இவர்கள் அரசியல் சுற்றத்துள் வைத்து மதிக்கப்பட்டனர். இதனைச் சிலம்பு,

முறைமுதற் கட்டில் இறைமகன் ஏற
ஆசான் பெருங்கணி அருந்திறல் அமைச்சர்
தானைத் தலைவர் தம்மொடு குழீஇ[9]

என்று குறிக்கும். மேலும் இவர்களுக்கென்று பூம்புகார் நகரில் தனித் தெருக்களே இருந்தன என்பதும் சிலம்பின்,

வீழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும் காலக் கணிதரும்
பால்வகை தெரிந்த பன்முறை யிருக்கையும்[10]

என்ற பகுதியால் அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் உழவர் பெருமக்களோடும் ஆயுள்வேதரோடும் கணியர்கள் அடுத்தடுத்து வாழ்ந்தனர் எனச் சொல்லப்பட்டாலும், சிலம்பிற்குக் காலத்தால் முற்பட்ட மதுரைக்காஞ்சி இவர்களின் புகழை மிகுதியாகச் சிறப்பிக்கின்றது.

ஆன்றவிந்து அடங்கிய சான்றோர்களாகவும் தூய ஒழுக்க நெறியினராகவும் நோன்பு போற்றும் சாவக நோன்பிகளால் வணங்கப்பெற்ற பெரும்புகழ் உடையோராகவும், வானியல் தன்மைகளையும் நிலவியல் கூறுகளையும் அறிந்துணரும் ஆற்றல் வாய்ந்தவர்களாகவும் இருந்தனர் எனப் பலவாறு இவர்களைப் பாராட்டுகின்றது மதுரைக் காஞ்சி. அத்துடன் அவர்கள் தங்குதற்கென்று அமைத்த கோயிலின் சிறப்பையும் வியந்து புகழ்ந்துரைக்கும். அப்பகுதியாவது,

வண்டுபடப் பழுநிய தேனார் தோற்றத்துப்
பூவும் புகையுஞ் சாவகர் பழிச்சச்
சென்ற காலமும் வருஉம் அமயமும்
இன்றிவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்குணர்ந்து
வானமும் நிலனுந் தாமுழு துணருஞ்
சான்ற கொள்கைச் சாயா யாக்கை
ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்

9. சிலம்பு, 26 : 3.

10, சிலம்பு, 5 : 43—45.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்பொளிந் தன்ன விட்டுவாய்க் கரண்டை
பல்புரிச் சிமிலி நாற்றி நல்குவரக்
கயங்கண் டன்ன வயங்குடை நகரத்துச்
செம்பியன் றன்ன செஞ்சுவர் புனைந்து
நோக்குவிசை தவிர்ப்ப மேக்குயர்ந் தோங்கி
யிறும்பூது சான்ற நறும்பூஞ் சேக்கையும்[11]

என்பதாகும். இப்பாடற் பகுதியில் கணியர்களைப் பற்றிய கருத்துக்களைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

1. பூக்களையும் புகையினையும் ஏந்தி நோன்பு கொண்டோர் இவர்களை வழிபட்டனர்.

2. சென்ற காலத்தையும், எதிர்காலத்தையும் அன்றைய நடைமுறைகளை வைத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றிருந்தனர்.

3. வானியல் தன்மைகளையும், நிலத்தியல் தன்மைகளையும் தம் அறிவால் துல்லியமாக அறிந்துரைப்பதில் வல்லவர்கள்.

4. தமக்கு அமைந்த நோன்புகளைப் பேணியவர்கள். நோன்புகளினால் உடலுக்கும் உயிருக்கும் கேடுவராமல பாதுகாத்தவர்கள். அதாவது 'உற்றநோய் நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையும்' ஆகிய தவத்தை உடையவர்கள்.

5. கல்வி கேள்விகளால் செறிந்த புலமை மிக்கவர்களும் தன்னடக்கம் மிக்கவர்களுமான சான்றோர்கள்.

6. இத்தகைய சான்றோர்கள் உலக நன்மை கருதி நோன்பிருக்க அமைந்த பகுதிகள் அழகிய வேலைப்பாடு நிரம்பியவை. குன்றுகளை அடுக்கி வைத்தாற்போன்ற அமைப்பினை உடையவை. மணம் மிக்க மலர்கள் சூழ அமைந்தவை.

மாங்குடி மருதனாரின் கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் பாண்டியன் நெடுஞ்செழியன் ஆசீவகத் துறவிகளுக்குக் குன்றுகளைக் குடைந்து கற்படுக்கைகளை அமைத்துள்ளான் என்பதை மதுரைக்கு அருகே உள்ள மீனாட்சிபுரக் கல்வெட்டால் அறியலாம். அக்கல்வெட்டாவது:

1. கணிய் நந்தஅ ஸிரிய் இகுவ்அன்கே
தம்மம் இத்தஅ நெடுஞ்சழியன் பணஅன்
கடல்அன் வழுத்திய் கொட்டுப்பித்தஅ பளிஇய்

11. மதுரைக் காஞ்சி, 475—487.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. கணிய் நந்த ஸிரிய்குஅன் தமம்
இத நெடுஞ்சழியன்
ஸலகன் இளஞ்சடிகன் தந்தைய்
சடிகன் செஇய பளிய்

3. கணிஇ நத ஸிரிய் குவ......
வெள்அறைய் நிகமது காவிதிஇய்
கழிதிக அந்தைஅ ஸுதன்
பிணஊ கொடுபிதோண்

4. சந்தரிதன் கொடுபிதோண்

5. வெள்அறை நிகமதோர் கொடிஓர்......[12]

என்பதாகும்.

கணியர்களை 'ஆசான் பெருங்கணி' என்றும் 'அண்ணலம் பெருந்தவத்து ஆசீவகர்' என்றும் இளங்கோவடிகள் பாராட்டு வார். மேற்காட்டிய கல்வெட்டிலும் கணிநந்த(ன்) ஆசிரியன் இயக்கன் என்பவர் குறிக்கப்பட்டுள்ளார்.

இக் கணிநந்த(ன்) ஆசிரியனுக்குக் கற்படுக்கை அமைத்துத் தந்தவர்கள்: பாண்டியன் நெடுஞ்செழியன்; அவன் சகலனின் தந்தை சடிகன்; காவிதி கழிதிக ஆந்தை என்பவன் மகன் பிணவு.

அரசன், அரசனது உறவினர், அமைச்சரின் மகன் ஆகியோர் போற்றும் அளவிற்குப் பெருவாழ்வு வாழ்ந்தவர் ஆசிரியன் கணி நந்தன் இயக்குவன். இக் கல்வெட்டின் காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு என்பார் அய்ராவதம் மகாதேவன்.[13] இக்கல்வெட்டைப் பிராகிருத மொழியின் அடிப்படையில் அய்ராவத மகாதேவன் படித்துள்ளார். வடபுல ஆசீவகர்கட்கு உரிய மொழியாக 'அர்த்தமாகதி' விளங்கியதால் இக்கல்வெட்டை அம்மொழியின் அடிப்படையில் படித்தால் இன்னும் பல உண்மைகள் வெளிப்படலாம் என இவ் ஆய்வாளர் கருதுகிறார்.

ஆசீவகத் துறவிகளுக்கு மலைப்பகுதிகளில் கற்படுக்கைகள் அமைக்கும் மரபு இந்தியா முழுமையிலும் இடம் பெற்றிருந்தது. அசோகனால் பௌத்த சமயம் பெருஞ் செல்வாக்குப் பெற்ற பின்னரும் ஆசீவகர்களுக்குரிய பெருமை தொடர்ந்து வந்தது. பார்பரா

12. நால்வர், கல்வெட்டியல், VII, ப. 30.
13. நால்வர், கல்வெட்டியல், VII ப. 30.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னும் இடத்தில் அமைந்த ஏழு குகைகளில் அய்ந்தை ஆசீவகர் கட்காக அசோகன் ஒதுக்கியுள்ளான்.[14]

அசோகன் கல்வெட்டில் 'ஆசீவகர்கள்' எனக் குறிக்கப்பட்டுள்ள இவர்களே, பாண்டியன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் கல்வெட்டில் 'கணி' என்று குறிக்கப்பட்டுள்ளனர். மேலும் கணியர்களை 'ஆசான்' எனக் குறித்துள்ள இலக்கிய மரபையும் இக்கல்வெட்டு பின்பற்றியுள்ளது. எனவே வடமரபில் 'ஆசீவகர்' என அழைக்கப்பட்டவர்களே தமிழ் மரபில் 'கணியர்' என வழங்கப்பட்டனர் என்பது தெளிவு.

ஆசீவகர் என்ற பெயர் மாற்றாரால் இடப்பட்டதாக ஆய்வாளர்கள் கருதுவதாலும் தமிழ்மரபில் கணியர் என்ற பெயர் அவர்களைச் சுட்டுவதாலும் இக் கணியர் என்ற பெயரே அவர்களின் உண்மைப் பெயராக இருக்கவேண்டும்.

ஆசீவகக் கோட்பாடு

கடும் நோன்புகளோடும் ஆடை அணியாமலும் வாழ்ந்த இச்சமயத்தவர்கள் 'நியதிக் கொள்கையாளர்' என அழைக்கப்படுகின்றனர். இவர்களின் கோட்பாடு வருமாறு:

> நிலம், நீர், தீ, காற்று, உயிர் என்ற அய்ந்துவகை அணுக்களும் (மூர்த்த திரவியங்கள்) வடிவுடை அடிப்படைப் பொருள்கள்; இவற்றின் கூட்டமே உலகம்; உள்ளது போகாது; இல்லது வாராது. தோற்றம் என்பது உள்ஆழ்ந்தது மேல்வந்து மிதப்பதாம். அழிவது என்பது மேல்மிதந்தது புலப்படாது கீழ் ஆழ்ந்து போவதாம். பொருள்கள் எல்லாம் மாறாத நிலைபேறுடையவை; காலத்தைப்பற்றிப் பேசினாலும் காலம் என்பது ஒரு தத்துவம் அன்று; வெறும் வழக்கே ஆம்; மேலே கூறிய அய்ந்து பொருள்களும் தத்தமக்கு ஏற்ற இயல்புடைய வேனும் குணம் என ஒன்றோ, காரணம் என ஒன்றோ உள்ளவை அல்ல; இவையே உள்ள பொருள்கள்; காலம், குணம், காரணம் என்பவை வெறும் சொல்லே[15]

என்று விளக்குவார் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்.

---

14. நிகாம், அசோக சாசனங்கள், ப. 77.
15. தெ. பொ. மீனாட்சிசுந்தரம், கழக 1008 வது வெளியீட்டு விழா மலர், ப. 77,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணுக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாலும் ஆசீவகத்தின் உயிர்நாடியாக அமைந்தது விதி பற்றிய அதன் நம்பிக்கையேயாகும். இதனை ஏ. எல். பாசம்,

> ஆசீவகத்தின் அடிப்படைக் கொள்கை வினை (ஊழ்). இது 'நியதி' என்றும் அழைக்கப்படும். புத்த, சமண இலக்கியங்கள் மற்கலிகோசாலரை, தீவிரமான வினைக் கோட்பாட்டாளர் என்றும் இவ்வினை அல்லது நியதியே இப்பிரபஞ்சத்தின் இயக்கத்திற்கும் மாற்றத்திற்கும் காரணம் என்றும் வற்புறுத்தும் அளவிற்கு நியதிக் கோட்பாட்டில் தீவிரம் காட்டியவர் என்பதையும் அவ்விலக்கியங்கள் ஒத்துக்கொண்டுள்ளன[16]

என்று விளக்குகின்றார்.

இவ்விதிக் கொள்கையைக் கருத்துமுதலியல் சார்ந்த வைதிக சமயத்திலோ பௌத்த சமண சமயங்களிலோ காணமுடியவில்லை என்பதும் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

ஆசீவகத்தின் தோற்றம்

ஆசீவகத்தைத் தோற்றுவித்த மற்கலிகோசாலர் தம்மை 24-வது தீர்த்தங்கரராகக் குறிப்பிட்டுக் கொள்கின்றார். மகாவீரரின் நெருங்கிய நண்பராக இருந்த இவர் அவருடன் மாறுபாடு கொண்டு பிரிந்த பின்னரே இப்புதிய சமயத்தை உருவாக்கினார்.

மகாவீரருக்கும் மற்கலிகோசாலருக்கும் உள்ள தொடர்பையும் நட்பையும் காணும்போது தொடக்கத்தில் இவரும் சமணசமயத்தின் 23-வது தீர்த்தங்கரரும் மகாவீரருக்கு முற்பட்டவருமாகிய பார்சுவநாதரின் வழியைப் பின்பற்றியவராக இருந்திருக்க வேண்டும். பார்சுவநாதரின் நால்வகைக் கோட்பாடுகளான கொல்லாமை, கள்ளாமை, பொய்யாமை, பிறன்மனை நயவாமை ஆகியவற்றை ஆசீவகமும் வற்புறுத்துவது இக்கருத்தை அரண்செய்யும்.[17]

மற்கலிகோசாலரும்—திசையாசிரியர்களும்

கோசாலர் தமது மாணவியும், மட்பாண்டத் தொழிலாளியுமான ஆலகாலா என்ற பெண்ணின் வீட்டிலிருக்கும்போதுதான் ஆசீவகக் கோட்பாட்டை வரையறை செய்ததாகச் சமண நூலாகிய 'பகவதி சூத்திரம்' குறிக்கும். ஆசீவகக் கோட்பாட்டை

16. A. L. Basham, History and Doctrines of Ajivikas, pp. 224—225.
17. M. U. K. Jain, Jain Sects and Schools. p. 10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உருவாக்குவதில் பங்கு கொண்ட துறவிகள்—பேரறிஞர்கள் ஆறு பேராவர். இவ்வறுவரும் இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் சென்றவர்கள் என்பதைத் திசையாசிரியர்கள் என்ற சொல்லே உணர்த்தும். அத்துறவிகளுடன் கூடித் தொகுக்கப்பட்டதே மற்கலி கோசாலரின் எண்வகைக் கோட்பாடுகளை உணர்த்தும் 'மகா நிமித்தம்' என்ற நூல் தொகுதியாகும். இந்நூலுள் கோசாலர் மனித இனத்தின் பண்புகளை—ஏற்படும் நுகர்வுகளை ஊதியம்—இழப்பு, இன்பம்—துன்பம், பிறப்பு—இறப்பு ஆகிய ஆறு கூறுகளுள் அடக்கி விளக்குவார்.

இவ்வாறு உலகின் எப்பகுதியில் வாழும் மக்களாக இருப்பினும், ஊதியம்—இழப்பு, இன்பம்—துன்பம், பிறப்பு—இறப்பு ஆகிய இயற்கைப் பண்புகளைத் துறந்தோ மீறியோ வாழமுடியாது என்பதை விளக்கி, இப்பண்புகளே உலகின் தவிர்க்கமுடியா உண்மைகள் என்பதைக் கோசாலரும் மற்றத் துறவிகளும் வரையறை செய்தனர்.[18]

இவ்வாறு ஆசீவகத்தின் அடிப்படைக் கோட்பாட்டை வரையறை செய்த பணியில் பங்குகொண்ட துறவிகள் சாணா, கலந்தாரா, கணியாரா, அச்சிதா, அக்கிவேசாயனா, அச்சுனா ஆகியோராவர்.

கணியாரா யார்?

இவ்வறுவருள் கணியாரா என்பவரைப் பற்றிய ஆய்வு இவ்இயலுக்கு இன்றியமையாத ஒன்றாகும். இதனால் கணியாரா என்பவரின் பங்கில் இந்திய மெய்யியல் வரலாற்றில் தமிழகத்தின் கொடை எந்த அளவில் இருந்தது என்பதை உணர்ந்துகொள்ள முடியும்.

பாலி மொழி இலக்கியங்களுள் புத்தரின் சமகாலத் துறவிகளாகவும், பல்வேறு மெய்யியல் பிரிவுகளின் தலைவர்களாகவும் குறிக்கப்பட்டுள்ளவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் பூரண காசிபன், மற்கலி கோசாலர், அசிதகேச கம்பாளர், பக்குட காச்சாயனர், சஞ்சய பேலட்ட புத்தன், நிகண்டநாத புத்தன் (மகாவீரர்) ஆகியோராவர்.

---

18. After briefly considering this eightfold Mahanimitta, Gosla, declared this six inevitable factors in the life of everybeing gain and loss, joy and sorrow, life and Death.

—A. L. Basham, History and Doctrines of Ajivikas, p. 56.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவர்களுள் மற்கலி கோசாலரும், பூரணரும் தமிழ் இலக்கியத்தி 'கபில—பரணர்' குறிக்கப்படுவதைப்போல இரட்டையர்களாகவே குறிக்கப்பட்டுள்ளனர். நிகண்டநாத புத்தன் என்பவர் சமண சமயத்தின் 24-வது தீர்த்தங்கரரான மகாவீரர் ஆவார்.

ஆசீவக மதத்தில் பூரணரின் பங்கைத் தமிழ் இலக்கியங்களான மணிமேகலை, நீலகேசி, சிவஞான சித்தியார் ஆகியவற்றின் சான்றுகளைக்கொண்டே விளக்கிச் செல்கின்றார் ஏ. எல். பாசம்.

மேலே காட்டிய மெய்யியல் துறைத் தலைவர்களுள் ஒருவராகக் குறிக்கப்பெறும் பக்குட காச்சாயனரின் கோட்பாடு 'அந்நியோந்நிய வாதம்' எனப்படும். பௌத்த இலக்கியமான 'சாமண்ண பாலசூக்தம்' இவரது கோட்பாடு பற்றிக் குறிப்பிடுவதாவது:

> ஏழு பொருள்கள் யாரும் செய்தவை அல்ல; படைக்கப்பட்டவை அல்ல, படைக்கும்படி செய்விக்கப்பட்டவை அல்ல, அவைகட்குப் பாடாக (வந்த்யமாக), நிர்விகாரமாக (கூடஸ்தமாக) நகர வாசலின் கதவில் உள்ள கணைய மரத்தைப்போல அசைவற்றனவாக இருக்கின்றன. அவை நகருவதில்லை; மாறுவதில்லை; தமக்குள் ஒன்றையொன்று தடைப்படுத்துவதில்லை. தமக்குள் இன்பமோ துன்பமோ உண்டாக்கவல்லமை அற்றவை. அவை யாவை? மண், நீர், தீ, காற்று, இன்பம், துன்பம், உயிர் ஆகியவையே அவை. இவற்றைக் கொல்பவனோ, கொல்விப்பவனோ, கேட்பவனோ, கேட்கும்படி சொல்பவனோ, அறிபவனோ அல்லது வருணிப்பவனோ எவனும் இல்லை. ஒருவன் கூரிய படைக்கலத்தினால் இன்னொருவனுடைய தலையை வெட்டினால் அவன் மற்றவனுடைய உயிரை வாங்குவதில்லை. இந்த ஏழு பொருள்களுக்கு இடையிலுள்ள வெளியில் படைக்கலம் நுழைந்துவிட்டது என்று மட்டுமே அதனால் அறிய வேண்டும்.[19]

சாமண்ண பாலசூக்தம் பௌத்த சமயத்திற்குரியது. பௌத்தர்கள் தமக்கு மாறுபட்ட சமயத்தவர்களைக் குறிக்கும் பகுதிகளுள் எந்த அளவிற்கு நடுநிலையான செய்திகள் இருக்கும் என்பது ஆய்விற்குரியதே. இருப்பினும் பக்குட காச்சாயனரின் கோட்பாட்டை மகாவீரரது சமணக் கோட்பாட்டோடு சமமாக வைத்துக் கூறுவதே இவரின் செல்வாக்கை உணர்த்தும் எனலாம். தர்மானந்த

19. தர்மானந்த கோசாம்பி, பகவான் புத்தர். பக். 249—250.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கோசாம்பி, பக்குட காச்சாயனரின் 'சிரமண சங்கம்' மிகப் பெரியதாக இருந்து பின்னாளில் நிலைக்காது போய்விட்டது என்பார். இவரின் 'அந்நியோந்நிய வாதமே' பிற்காலத்தில் சிறப்பியலாக (வைசேடியமாக) உருவாயிற்று.[20]

சீனமரபு

'மச்சிம நிகாயம்', பக்குடரின் மெய்யியல் மற்கலிகோசாலரின் நியதிக் கோட்பாட்டைத் தழுவியது எனக் கூறுகின்றது. சாமண்ண பாலசூக்தத்தின் சீனப் பதிப்பு, பக்குடரை நியதிவாதி என்றே குறிக்கும். அவரது கொள்கைகள் அணுக்கோட்பாட்டிற்குரியவை; இவ்வணுக்கோட்பாடு இந்திய அணுக்கோட்பாடுகளில் மிகவும் தொன்மை வாய்ந்தது என்பது சீனமரபிலிருந்து கிடைக்கும் செய்திகளாகும்.

பக்குடரைப் பற்றி விரிவான ஆய்வு செய்த பாசம், அவர் கோட்பாடு அணுக்கோட்பாடே என்பதை மணிமேகலை, சிவஞான சித்தியார் ஆகியவற்றுள் வரும் ஆசீவகம் பற்றிய செய்திகளைக் கொண்டே நிறுவுகின்றார். தமிழ் இலக்கியங்களுள் சொல்லப்படும் ஆசீவகத்தைத் தென்னகத்திற்குரிய ஆசீவகமாக—திராவிட ஆசீவகமாக பாசம் குறிப்பதும் நோக்கத்தக்கதாகும்.[21] பாசம் எடுத்துக்காட்டும் சிவஞான சித்தியார் பாடல்,

புண்ணிய பாவம் என்னும் இரண்டணுப் பொருந்த வைத்தே
எண்ணிய இவற்றி னோடும் ஏழென எங்க ளோடு
நண்ணிய ஒருவன் கூறும் ஞானமிவ் வாற தென்று
கண்ணிய கருத்தி னோர்கள் கதியினைக் காண்பார் என்றான்

என்பதாகும். இப்பாடலில் வரும் புண்ணியம், பாவம் என்ற சொற்கள் இன்பம்—துன்பம் இவற்றைக் குறிப்பனவாகும்.

அணுக்கோட்பாட்டை ஏற்றுக்கொண்டவர்கள் நிலம், நீர், தீ, காற்று இவற்றின் அணு இயல்புகளை நன்கு அறிந்தவர்கள். இத்தகையோர் மனித வாழ்வில் ஏற்படும் நுகர்ச்சிகளான இன்பம்—துன்பம் இரண்டையும் அணுக்கள் எனக் கருதி இருப்பார்களா என்பது அய்யத்திற்குரியது. என்றாலும் பக்குடரைப் பற்றிய செய்திகளுள் இன்றியமையாதவை அவர் அணுக்கோட்பாட்டாளர் என்பதும் மனித வாழ்வில் ஏற்படும் இன்பதுன்பங்களுக்கு முதலிடம் கொடுத்தவர் என்பதும் ஆகும்.

20. தர்மானந்த கோசாம்பி, பகவான் புத்தர், ப. 254.
21. A. L. Basham, History and Doctrines of Ajlvikas, p. 91.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பக்குடரும் கணியாராவும்

மற்கலிகோசாலருடன் ஆசீவகக் கோட்பாட்டை உருவாக்குவதில் பங்குகொண்ட துறவிகள் அறுவருள் 'கணியாரா' என்பவரும் ஒருவர் என்பது முன்னர்க் கூறப்பட்டுள்ளது. இக்கணியாரா என்பவரைப் பற்றிய செய்திகள் அர்த்தமாகதி, பாலி, பிராகிருதம், சமற்கிருதம் ஆகிய எந்த மொழிகளிலும் காணப்படவில்லை என்று பாசம் குறிக்கிறார்.[22] பக்குட காச்சாயனாரை அறியத் தமிழ் இலக்கியங்களின் சான்றுகள் ஏ. எல். பாசத்திற்குத் துணைபுரிந்தது போல், கணியாராவைப்பற்றி அறியவும் தமிழ் இலக்கியங்கள் துணைபுரிதல் குறித்து ஆராயலாம்.

இன்பம்—துன்பம்

ஆசீவகத்தின் ஆறு அடிப்படைக் கோட்பாடுகளில் இன்பம்—துன்பமாகிய இரண்டும் அடங்கும். மணிமேகலையும்;

> இன்பமும் துன்பமும் இவையும் அணுவெனத்தகும்
> முன்னுள ஊழே பின்னும் உருவிப்பது
> மற்கலி நூலின் வகையிது வென்ன[23]

என்று குறிக்கும்.

சாமண்ண பாலசூக்தம், மணிமேகலை, நீலகேசி, சிவஞான சித்தியார் ஆகிய அனைத்தும் ஆசீவகத்தைப் பரபக்கமாகவே (மாற்றார் கூற்றாகவே) குறிப்பிடுகின்றன. இருப்பினும் அவைகள் இன்பம்—துன்பம் பற்றி மாறுபாடின்றி ஆசீவகக் கோட்பாடாகவே குறிக்கின்றன.

மனிதனின் வாழ்க்கை நெறிகளுள் ஊதியம்—இழப்பு, இன்பம்—துன்பம், பிறப்பு—இறப்பு ஆகிய நிகழ்ச்சிகள் அல்லது பட்டறிவுகள் தவிர்க்க இயலாதவை. இதனை ஆசீவகக் கோட்பாடாக வகுத்தவர்களுள் ஒருவர் கணியாரா. ஆசீவக மதத்தோடு தொடர்புடையதாகிய பக்குட காச்சாயனரின் 'அந்நியோந்நிய வாதம்' இன்ப துன்பங்களை அணுக்கள் என்றே வகைப்படுத்துகின்றது. தமிழ் இலக்கியங்களான மணிமேகலையும் சித்தியாரும் அந்நியோந்நிய வாதத்தை ஆசீவகமாகவே கொள்கின்றன. எனவே திசையாசிரியர்களுள் ஒருவரான கணியாரா என்பவரும் பெரிய சங்கத்தைத் தோற்றுவித்து அந்நியோந்நிய வாதத்தை உருவாக்கிப் பரப்பியவராகிய பக்குட காச்சாயனர் என்பவரும் ஒருவராக இருக்கவேண்டும்.

---

22. A. L. Basham, History and Doctrines of Ajivikas, p. 57.

23. மணி, 27 : 163—165.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பக்குடுக்கை நன்கணியார்

புறநானூற்றில் வரும் புலவர் பக்குடுக்கை நன்கணியாரைப் பற்றிய குறிப்பு வருமாறு:

> நன்கணியாரென்பது இவரது இயற்பெயர். கணி—சோதிடம் வல்லவன்; உலகத்தை வெறுத்த ஞானியாதலால், இவர் பையையே உடையாகக் கொண்டிருந்தாரென்றும் அதுபற்றியே 'பக்குடுக்கை' என்னும் அடை இவர் பெயருக்கு முன் கொடுக்கப்பட்டதென்றும் தெரிகின்றன; பக்கு—பை (ஐய்ங்குறு—271) இவர் ஞானியென்பது இவரது செய்யுளால் அறியலாகும்.[24]

ஆசீவகர்கள் மற்றும் சமணருள் ஒரு பிரிவினர் ஆடைகளைத் துறந்து நிருவாணத்தை ஏற்றுக்கொண்டபோது இவர் மேலாடை அணிந்த துறவியாக இருந்ததால் பக்குடுக்கை நன்கணியார் என்று காரணப் பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம். கம்பளி உடை அணிந்து வாழ்ந்த காரணத்தால், கடவுள் மறுப்பாளரான அசித கேசகம்பாளர், காரணப் பெயரால் வழங்கப்பட்டது ஒப்புநோக்கத் தக்கதாகும். பக்குடுக்கை நன்கணியாரின் பாடல் வருமாறு:

> ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
> ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
> புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
> பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
> படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
> இன்னா தம்ம இவ்வுலகம்
> இனிய காண்கித னியல்புணர்ந் தோரே.[25]

பொதுவியல் துறையில் பெருங்காஞ்சித் திணையில் அமைந்த இப் பாடலின் பொருள்,

> ஒரு வீட்டில் சாவுப்பறை முழங்குகின்றது. ஒரு வீட்டில் மண நிகழ்ச்சிக்காக இசைக்கப்படும் தண்ணிய முழவின் இனிய இசை தவழ்ந்து வருகின்றது. மணம்புரிந்தோர் தம் காதலருடன் கூடி மலர்களைச் சூடி மகிழ்ந்திருக்கவும் தம் துணையை இழந்த மகளிர் துன்பம் காரணமாகத் தம் கண்களில் கண்ணீர் மல்கவும் ஆகிய இரண்டு வேறுபட்ட நிலையில் உலகை ஒருவன் படைத்திருப்பானேயானால்

---

24. உ. வே. சாமிநாதய்யர், புறம், முன்னுரை, ப. 47.
25. புறம். 194.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> அவனைப் போன்ற பண்பிலாளன் வேறு யாரும் இருக்க முடியாது.
>
> இவ்வுலகம் துன்பம் நிறைந்தது; நிலையில்லாதது; இத்தகைய இயல்பை உணர்ந்தவர்களே! இவற்றிடையே இன்பத்தைக் காண முயலுங்கள்.

என்பதாகும்.

இப் பாடல்வழி பக்குடுக்கை நன்கணியார் கடவுள் மறுப்பாளராகவும், இவ்வுலக இன்பத்தை வற்புறுத்தும் பொருள்முதலியலாளராகவும் இருந்தார் என்பதை அறிய முடிகின்றது.

சாமண்ண பாலசூக்தத்தில் பக்குட காச்சாயனரைப் பற்றி வரும் செய்தி மேற்கண்ட பக்குடுக்கை நன்கணியாரின் பாடலோடு பொருந்தி இருக்கக் காணலாம்.

> இவர் (பக்குடர்) கடவுளைப் பற்றியோ உயிர் (ஆன்மா) அல்லது வீடுபேற்றைப் பற்றியோ பேசவில்லை. உண்மையில் இவரது கோட்பாட்டில் ஆன்மீகக் கருத்தை உணர்த்த எவ்வித சான்றுகளும் இல்லை. இவரது எழுவகை அணுக்களைப் பற்றிய செய்திகள் அனைத்தும் உறுதியான பொருள்முதல் வாதத்தை—உலகியல் கோட்பாட்டையே வற்புறுத்துவன.[26]

எனவரும் இக்கருத்தைத் தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா, அசித கேசகம்பாளருக்கு உரியதாகச் சொல்வார். ஆனால் பக்குடுக்கை நன்கணியாரின் பாடல் சாமண்ண பாலசூக்தத்தில் வரும் பக்குட காச்சாயனரின் கருத்தோடு முற்றாகப் பொருந்துவதை அறிய முடிகின்றது.

போரும் வறுமையும் நிறைந்த ஒரு சமூகத்தில் துன்பம் நிலவுவது இயற்கை. சங்ககாலத் தமிழ்ச் சமூகமும் இதற்கு விதிவிலக்கன்று. போரில், தம்மை வளர்த்த தலைவன் தமக்காகச் சிந்தும் கண்ணீருக்காக மரணத்தை 'இரந்தும் கொள்ளலாம்' என்று போர் வீரனின் மாட்சியை உணர்த்தும் வள்ளுவரே உலகின் பெருமையாக,

> நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
> பெருமை உடைத்திவ் வுலகு[27]

என்று உயிரின் நிலையாமையை வியந்துரைக்கின்றார்.

---

26. D. Chattopadhyaya, Lokayata, pp. 509—510.
27. குறள், 336.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மரணம் மனத் துன்பத்திற்குக் காரணம் என்றால் பசி, உடல் துன்பத்திற்குக் காரணமாகும். பசி, தீயைப் போலச் சுட்டெரிக்க வல்லது; நோயைப் போலத் துன்புறுத்தவல்லது. 'இன்மையின் இன்மையே இன்னாதது' என்று வறுமைக் கொடுமையைப் படம் பிடிப்பார் வள்ளுவர். எனவேதான் வறுமைத் துன்பத்தைப் போக்கவேண்டியது சமுதாயக் கடனாக, செல்வத்துப் பயனாக வற்புறுத்தப்பட்டது. ஒப்புரவு புகழ்ந்துரைக்கப்பட்டது.

வறுமையினால் மக்கள் இரந்து வாழும் கொடுமையைக் கண்டு கொதிக்கும் வள்ளுவர்,

> இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகியற்றி யான்[28]

எனச் சாடுவதும் நோக்கத்தக்கது.

பக்குடுக்கை நன்கணியார் ''படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்'' என்பதும், வள்ளுவர் ''பரந்து கெடுக உலகியற்றி யான்'' என்பதும் சமூகக் கொடுமையைக் கண்டு கொதித்தெழுந்த குரல்களாகவே ஒலிக்கின்றன.

உலகில் துன்பங்களும் துயரங்களும் மிகுந்திருந்தாலும் உயிரின் இயற்கை இன்பநாட்டமே. இதனைத் தொல்காப்பியர்,

> எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தானமர்ந்து வருஉம் மேவற் றாகும்[29]

என்பார். இவ்வாறு உலகின் இயல்பையும் உயிர்களின் இயல்பை யும் நன்குணர்ந்த காரணத்தால்தான் பக்குடுக்கை நன்கணியார்,

> இன்னா தம்ம இவ்வுலகம்
> இனிய காண்கஇதன் இயல்புணர்ந் தோரே

என வற்புறுத்துகின்றார்.

கடவுள் மறுப்பை ஏற்று, துன்பமே உலகின் இயற்கை என்பதை எடுத்துக்காட்டுகளுடன் காட்டி, இவற்றிடையேயுள்ள இன்பத் தைக் காண்பதே வாழ்வின் நோக்கமாக இருக்கவேண்டும் என்ற இப்பாடல், பக்குடுக்கை நன்கணியாரின் வாழ்க்கை நெறியை— மெய்யியல் கோட்பாட்டை அறிந்துகொள்ளப் பெருந்துணை புரிகின்றது.

---

28. குறள். 1062.
29. தொல். கற்பியல், 176.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பௌத்த இலக்கியங்களிலும் அவற்றுக்கான சீன, திபெத்திய உரைகளிலும் மற்கலிகோசாலர், பூரணர், பக்குடர் ஆகியோரைப் பற்றி வரும் செய்திகளைப் பட்டியலிட்டுக் காட்டும் பாசம்,

> பிற்காலத்து ஆசீவகம் பெரிதும் மற்கலியின் வினைக் கோட்பாட்டையும், பக்குடரின் மாறாத் தன்மையுடைய அணுக்கோட்பாட்டையும் கொண்டுள்ளது தெளிவு[30]

என்று எடுத்துக் காட்டுவார்.

இதனால் பக்குடர், தொடக்கத்தில் அணுக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டு தமது சங்கத்தை நிறுவி அதனை நடத்தி வந்திருக்க வேண்டும். அச்சங்கம் இந்தியா முழுமையிலும் பரவி மக்கள் நடுவே செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்திருக்க வேண்டும். அதன் பின்னர் அவர், தம்மைப் போன்ற செல்வாக்குப் பெற்ற மற்கலிகோசாலருடன் இணைந்திருக்க வேண்டும். இதனால் இவரது அணுக்கோட்பாடும் மற்கலியின் வினைக்கோட்பாடும் இரண்டறக் கலந்திருக்க வேண்டும். மேலும், தமிழ் மரபிற்குரிய ஆசீவகத்தைப்பற்றி விளக்கமாகப் பேசும் மணிமேகலை, நீலகேசி, சிவஞான சித்தியார் ஆகிய நூல்களும் அணுக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்டே ஆசீவகத்தை விளக்குதல் கருதத் தக்கது.

பக்குடுக்கை நன்கணியார்—பக்குட காச்சாயனர்

வேற்றுமொழிச் சொற்கள் தமிழுக்கு வரும்போது தற்பவமாகவும், தற்சமமாகவும் வடிவங் கொள்ளுதலைப் போன்றே, தமிழ்ச் சொற்கள் பிற மொழிக்குப் போகும்போதும் பொருள் அடிப்படையிலோ, அன்றி மக்கள் வழக்கின் அடிப்படையிலோ உருமாறுதல் இயற்கை. சான்றாக, தமிழிழ் 'கயற்கண்ணி' என்ற பெயர் மீன் அக்ஷி மீனாக்ஷி—மீனாட்சி என மாறுவதைக் காட்டலாம் இது போன்றே பக்குடுக்கை நன்கணியார் பெயரும் வடபுலமொழிகளில் பக்குட காச்சாயனர் என்றும் பக்குடக்க காத்யாய்னா என்றும் மாறியுள்ளது.

நன்கணியார் என்பதன் சிறப்புக் குறித்த 'நன்' என்ற அடை கெட்டு, 'கண்' அடியாகப் பிறந்த கணியார், அக்ஷனார் என்றாகி

---

30. Of the doctrines here considered those most characteristic of the later Ajivikas are Makkhali's determinism and Pakudha's theory of Unchanging elemental substances.
—A. L. Basham, History and Doctrines of Ajivikas, p. 23.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(கண்ணினை உடையவர்) பக்குட காச்சாயனர் எனத் திரிந்திருக்கின்றது. எனவே தமிழ்ப் பேரறிவர்ளராகிய பக்குடுக்கை நன்கணியாரே பக்குட காச்சாயனர் எனக் குறிக்கப்பட்டார் என்பது தெளிவு.

வடபுலத்திலிருந்து வந்து தமிழ் கற்ற ஆரிய அரசன் பிரகத்தன் போல, தென்னகத்தின் பூதவாதத்தைக் கற்று, புத்தரின் சங்கத்தில் பொறுப்புவாய்ந்த பதவி வகித்த சாரிபுத்தன் போல, தென்னகத்தில் புகழ்வாய்ந்த அமைப்பை நிறுவி அதன் தலைவராகவும் விளங்கிய பக்குடுக்கை நன்கணியார் மற்கலிகோசாலருடன் இணைந்து புதிய கோட்பாட்டை உருவாக்கியதில் வியப்பில்லை.

வரலாற்று முற்காட்டுகள் மட்டுமல்லாது ஆசீவகத்தில் இடம் பெற்றுள்ள கடவுள் மறுப்பு, அணுக்கோட்பாடு ஆகியவற்றுடனும், ஆறு அடிப்படை உண்மைகளில் இன்ப—துன்பங்கள் பற்றிய விரிவான கருத்து ஒற்றுமை ஆகியவற்றோடும் பக்குடுக்கை நன்கணியாரது பாடலைப் பொருத்திக் காணும்போது கணியாரா என்றும் பக்குட காச்சாயனர் என்றும் இரு பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளவர் பக்குடுக்கை நன்கணியாரே என்பது முடிந்த முடிபாகின்றது.

மற்கலிகோசாலர் மறைந்த ஆண்டு கி. மு. 500. எனவே, தமிழ் அறிஞராகிய பக்குடுக்கை நன்கணியாரின் காலமும் அதுவே என்பது துணிபு.

நந்தவச்சா

பூரணர், பக்குடுக்கை நன்கணியார் போன்றே மற்கலிகோசாலருடன் ஒருங்கு வைத்து எண்ணப்படும் மற்ற இருவருள் 'நந்தவச்சா' என்பவர் ஒருவர். மற்றவர் கிசசாங்கிசா என்பவர்.

நந்தவச்சா, கிசசாங்கிசா, மற்கலிகோசாலர் ஆகிய மூவரையும் 'வெள்ளை வண்ணத்திற்குரியவர்களாக' ஆசீவக மரபு போற்றும். இக் கூற்றைப் பௌத்த இலக்கியங்களும் ஒப்பியுள்ளன. சாமண்ண பாலசூக்தம், 'மிகமிகத் தூய்மையானவர்கள்' என்று இவர்களைப் பாராட்டும். பௌத்த உரையாசிரியராகிய புத்தகோசரும் 'இம் மூவரும் (நந்தவச்சா, கிசசாங்கிசா, மற்கலி கோசாலர்) கடும் தவத்தின்மூலம் தலைமைப் பதவியைப் பெற்றவர்கள்' என்று குறிப்பார்.[31]

31. Supremely white (Parama sukla). According to the texts this class contains three names only. Those of Nanda Vaccs, Kissa Sankicca and Makkali Gosla.
—A. L. Basham, History and Doctr ines of Ajivikas, p. 244.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசீவகத்தில் தலைமைப் பதவியைப் பெற்றவர்களாகவும், கடுந்தவம் புரிந்தவர்களாகவும் குறிக்கப்படும் மூவருள் நந்தவச்சா பற்றி அறியப் பல அறிஞர்கள் முயன்றுள்ளனர்.

கோர்ன்லே, நந்தவச்சாவை மற்கலிகோசாலரின் சமகாலத்தவராகக் குறிப்பார். சாக்கோபி, மற்கலிகோசாலருக்குக் காலத்தால் முற்பட்டவராகக் குறிப்பார். ஆனால் ஏ. எல். பாசம், இக்கருத்துக்களை நிலைநாட்டப் போதுமான சான்றுகள் கிடைக்கவில்லை என்பார். எனினும் ஆசிவகச் சமயத்தில் நந்தவச்சாவிற்குரிய இடத்தினை, பாசம் புறக்கணிக்கவில்லை.[32]

கணிநந்தாசிரியன் இயக்கன்

முன்னர் எடுத்துக்காட்டிய பாண்டியன் நெடுஞ்செழியனின் கல்வெட்டில் சுட்டப்படும் 'கணிநந்தாசிரியன் இயக்கன்' என்பவரும், பௌத்த இலக்கியங்களில் சுட்டப்படும் ஆசீவகத் தலைவரான 'நந்தவச்சா' என்பவரும் ஒருவர்தாமா? என்பது ஆய்விற்குரியது.

கணிநந்தாசிரியன் இயக்கன் என்பது கல்வெட்டில் காணப்படும் பெயர். இக் கணிநந்தாசிரியருக்குப் பாண்டிய வேந்தனும் அவனது நெருங்கிய உறவினனும், ஆந்தைமகன் பிணவு என்பானும் கற்படுக்கை அமைத்துள்ளனர்.

கற்படுக்கை அமைத்த ஒவ்வொருவரும் கணிநந்தாசிரியரின் பெயரைக் குறித்து, அவர் பொருட்டே அனைத்துப் படுக்கைகளையும் அமைத்துள்ளனர். கணிநந்தாசிரியன் இயக்கனுக்கு மட்டுமே என்றால் அத்துணை அளவுப் படுக்கைகள் அமைக்கத் தேவையில்லை. எனவே, கணிநந்தாசிரியன் இயக்கனுக்கும் மற்றும் அவர் தலைமையில் இருந்த பிற கணியர்களுக்கும் கற்படுக்கைகளை அமைத்துக் கொடுத்தனர் என்பது தெளிவு.

வெஞ்சின இயக்கன்

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் என்ற பாண்டிய வேந்தன் இளமையிலேயே இறந்துபட்டவன். அதனைப் பொறாத அவனது மனைவியாகிய பெருங்கோப்பெண்டும்,

> சிறுநனி தமிய ளாயினும்
> இன்னுயிர் நடுங்குந்தன் இளமைப்புறங் கொடுத்தே[33]

32. A.L. Basham, History and Doctrines of Ajivikas, p. 28.
33. புறம். 247 : 9—10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திப்பாய்ந்தனள். அப் பூதப்பாண்டியன் போர்க்கோலம் பூண்டு வஞ்சினம் உரைத்த புறப்பாடலில் 'தன் கண்போல் நண்பின'ராக,

மாவனு மன்னெயி லாந்தையு முரைசால்
அந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு(ம்)[34]

என அய்வரைச் சுட்டியுள்ளான்.

பூதப்பாண்டியன் குறித்துள்ள நண்பர்களின் பெயர்களுள் 'ஆந்தை', 'இயக்கன்' என்னும் இரு பெயர்களும் பாண்டியன் நெடுஞ்செழியன் அமைத்த கல்வெட்டிலும் இடம் பெறுகின்றன.

பாண்டியன் நெடுஞ்செழியனும் பூதப் பாண்டியனைப் போன்றே வஞ்சினம் கூறியுள்ளான். அப்பாடலில் 'தன்னை இளையன் என்று கருதிவரும் பகைவரை அழிப்பேன்' என்பதாகவும் சூளுரைக்கின்றான். இடைக்குன்றூர் கிழார் பாடிய புறப்பாடலில் இம்மன்னனை,

தாலி களைந்தன்று மிலனே பால்விட்
டயினியு மின்றயின் றனனே......[35]

என்று அவனது 'பிள்ளைக் கோலத்தை' வியக்கின்றார்.

போர்க்கோலம் பூண்டு வஞ்சினம் உரைத்த பூதப்பாண்டியன் அப் போர்க் களத்திலேயே களப்பலியானான். அவன் மனைவியும் இளமையிலேயே இறந்துபட்டனள். தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனும் பிள்ளைமைப் பருவம் மாறுவதற்குள் ளாகவே அரசு கட்டிலில் ஏறியவன். அப்பருவத்திலேயே எதிரி களைக் களத்திலே புறங்காட்டி ஓடச் செய்தவன். இக்காரணங் களைத் தொகுத்தாய்ந்த பே. க. வேலாயுதம் 'தலையாலங்கானத் துச் செருவென்ற நெடுஞ்செழியன், பூதப்பாண்டியன்—பெருங் கோப்பெண்டு ஆகியோரின் மகனே' என்று உறுதிப்படுத்து கின்றார்.[36]

இயக்கன்—கணிநந்தாசிரியன் இயக்கன்

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்—பெருங்கோப்பெண்டு ஆகியோரின் திடீர் மறைவிற்குப் பின்னர், அவர்களின் கெழுதகை நண்பர்களுள் ஒருவனாக விளங்கிய 'வெஞ்சின வியக்கன்' துறவு

34. புறம். 71 : 12—14.
35. புறம். 77 : 7—8.
36. பே. க. வேலாயுதம், வேல் அட்டவணை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பூண்டு ஆசீவகச் சமயத்தைச் சார்ந்திருக்க வேண்டும். கோவலன்—கண்ணகி மறைவால் அதிர்ச்சியுற்ற 'கண்ணகி தாதை கடவுளர் கோலத்து, அண்ணலம் பெருந்தவத்து ஆசீவகர் முன்' துறவு மேற்கொண்டதைப் போன்றே, பூதப்பாண்டியனின் கண்போல் நண்பனாக விளங்கிய 'வெஞ்சின வியக்கன்' ஆகிய அவரும் 'தன் கண் போல் நண்பின்' மன்னன் மறைவால் ஆசீவக நெறியில் தம்மை இணைத்துக் கொண்டார் எனலாம்.

ஆசீவகச் சமயத்தைத் தழுவி, அச்சமயத்தில் கடும் விரதமும் ஆழ்ந்த புலமையும் கைவரப் பெற்று, இவற்றின் காரணமாக அச்சமயத்தின் தலைமைப் பதவியையும் அவர் பெற்றிருக்க வேண்டும். எனவேதான், அவர் கணிநந்தாசிரியன் என்ற சிறப்புப் பெற்றுக் கணிநந்தாசிரியன் இயக்கன் என்று குறிக்கப்படுகின்றார் என்பது தெளிவு. பூங்குன்றனார், கணியன் பூங்குன்றனார் என்று அழைக்கப்படுவதும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

ஆந்தை

பூதப்பாண்டியன் நண்பர்களில் 'ஆந்தை' என்பவரும் ஒருவர். கணிநந்தாசிரியன் இயக்கனுக்குக் கற்படுக்கை அமைத்தவர்களுள் 'ஆந்தை மகன் பிணவு' என்பானும் ஒருவன். இதனால், பாண்டியன் நெடுஞ்செழியனைப் போன்றே 'பிணவு'வும் ஆசீவகச் சமயத்தின் தலைவராக விளங்கும் கணிநந்தாசிரியன் இயக்கனுக்குத் தன் தந்தையின் நண்பர் என்ற உரிமையின் அடிப்படையில் கற்படுக்கையை அமைத்துள்ளான் எனலாம்.

நந்தவாசான்—நந்தவச்சா

ஆசிரியன் என்ற தமிழ்ச்சொல் ஆசான் எனவும் வழங்கும். மதுரை வேளாசான், முக்கல் ஆசான் நல்வெள்ளையார் முதலிய புலவர்களின் பெயர்களும் ஒப்புநோக்கத்தக்கவை. நந்த ஆசான் நந்தவாசான் என ஆகி, அர்த்தமாகதி, பாலி, பிராகிருதம் ஆகிய வடக்கு மொழிகளில் நந்தவச்சா என மருவி வழங்கியுள்ளது என்பது தெளிவு.

ஆசீவகச் சமயத்துள் மற்கலிகோசாலருக்கு இணையான பெருமையைப் பெற்ற நந்தவச்சா என்பவரும், கணிநந்தாசிரியன் இயக்கன் என்பவரும் ஒருவரே என்பது இவற்றால் உறுதி பெறுகின்றது. நெடுஞ்செழியனின் கல்வெட்டு கி. மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு உரியதாதலால் நந்தாசிரியன் இயக்கனின்—நந்தவச்சாவின் காலமும் அதுவே. ஆதலால் கணிநந்தாசிரியன் இயக்கன் மற்கலிகோசாலருக்குப் பிற்பட்டவர் என்பதும் அவர் தமிழ்நாட்டவர் என்பதும் தெளிவு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வண்ணங்களும் மனிதப்பாகுபாடும்

மனிதர்களை அவர்களின் பண்பு—தொழில் இவற்றிற்கேற்ப ஆறு வகைகளில் வகைப்படுத்துவர் ஆசீவகர். ஒவ்வொரு வகைக்கும் ஒவ்வொரு வண்ணத்தை உரியதாக்குவர். இப்பாகுபாட்டைப் பௌத்த இலக்கியங்கள் பின்வருமாறு விளக்குகின்றன:

1. கருப்பு (கணக): கொலை மற்றும் கொடிய குற்றங்களைச் செய்வோர் இவ்வகையினர்.

2. நீலம் (நீல): படிற்றொழுக்கம் கொண்ட துறவிகள்.

3. சிவப்பு (உலோகித): நிக்கந்தர்கள், ஓராடையை உடுத்துவோர் சமண சமயத்தவரையும் உள்ளடக்கும். (நிக்கந்தர்—பார்சுவரைப் பின்பற்றியோர். சமணர்—மகாவீரரைப் பின்பற்றியோர்),

4. பச்சை (கலித்த): ஆசீவகச் சமயத்தைப் பின்பற்றியோர்.

5. வெள்ளை (சுக்க): ஆசீவகச் சமயத்தைச் சார்ந்த இருபால் துறவிகள்.

6. மிக உயர்ந்த வெள்ளை (பரமசுக்க): கடுந்தவம் இயற்றித் தூய நெறியால் உன்னத நிலையினை எய்திய உயர்ந்தோர். இச் சிறப்பிற்குரியவர்களாகச் சொல்லப்படுவோர் நந்தவச்சா, கிசசாங்கிசா, மற்கலிகோசாலர் ஆகியோரே.[37]

இத்தகைய பாகுபாட்டை மணிமேகலையும்,

கரும்ம் பிறப்புங் கருநீலப் பிறப்பும்
பசும்ம் பிறப்புஞ் செம்ம் பிறப்பும்
பொன்ன் பிறப்பும் வெண்ண் பிறப்பும்
என்றிவ் வாறு பிறப்பினு மேவிப்
பண்புறு வரிசையிற் பாற்பட்டுப் பிறந்தோர்
கழிவெண பிறப்பிற் கலந்துவீ டணைகுவர்[38]

எனக் குறிக்கும்.

மனிதர்களின் இவ்வளர்ச்சிப் போக்கினை மணிமேகலை 'செம்போக்கு' எனக் குறிக்கும். கழிவெண்பிறப்பிற்குரியவர்கள் மனிதப் பிறப்பினில் மெய்யுணர்வினை எய்திய சான்றோராவர்.

37. A. L. Basham, History and Doctrines of Ajivikas, pp. 243—244.

38. மணி. 27 : 150—155.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கழிவெண்பிறப்பு

ஆசீவகத்தில் இத்தகைய பெருமைக்குரியவர்களாகச் சுட்டப்படும் மூவருள் நந்தவச்சா என்பவர் தமிழகத்தைச் சார்ந்த கணிநந்தாசிரியன் இயக்கன் என்பது விளக்கப்பட்டது. இவர் ஆசீவக மரபுப்படி கழிவெண்பிறப்புக்குரியவராக மதிக்கப்பட்டவர்.

முக்கல் ஆசான் நல்வெள்ளையார்

நற்றிணையில் நெய்தல் திணைக்குரிய 272ஆம் பாடலைப் பாடியவர் முக்கல் ஆசான் நல்வெள்ளையார் என்பவர். இவர் பெயரில் உள்ள 'முக்கல்' என்பது ஊர்ப் பெயராகவும், 'ஆசான்' என்பது கணிநந்தவாசான் என்பதைப் போலத் தலைமைப் பண்பையும், 'நல்வெள்ளையார்' என்பது கழிவெண்பிறப்பை உணர்த்தும் அடையாகவும் கொள்ள இடந்தரும் வண்ணம் அமைந்துள்ளது ஆராயத்தக்கது.

பரமசுக்க, நல்வெள்ளையார்

வெள்ளை நிறத்தை உணர்த்தும் 'சுக்க' என்ற பாலி மொழிச் சொல்லிற்குப் 'பரம' என்ற சொல் முன்னடையாக இருப்பதைப் போன்றே வெள்ளையார் என்ற தமிழ்ப் பெயருக்கு 'நல்' என்பது முன்னடையாக உள்ளது. தமிழில் உள்ள 'நல்' என்னும் சொல் உயர்வையும் சிறப்பையும் உணர்த்தும் சிறப்புச் சொல்லாகும். கணியார் நன்கணியார் என்றும், வெள்ளியார் நல்வெள்ளியார் என்றும் வழங்குவது ஒப்புநோக்கத்தக்கது.

முக்கல் ஆசான் நல்வெள்ளையார் பாடிய பாடல்கள் வேறு எந்த நூலிலும் இடம் பெறவில்லை என்றாலும் 'ஆசான் நல்வெள்ளையார்' என்ற அடைகளின் சிறப்பினைப் புறக்கணிக்க முடியவில்லை.

இவர் பாடலில் பெண் துறவிகளின் பழக்கவழக்கங்கள்,

> படிவ மகளிர் கொடிகொய்து அழித்த
> பொம்மல் அடும்பின் வெண்மணல்......[39]

என்னும் அடிகளில் சுட்டப்படுகின்றன.

ஆசீவகச் சமயத்தில் பெண்களும் துறவிகளாக இருந்தனர். நல்வெள்ளையாருடைய இப்பாடலில் பெண் துறவிகளுடைய பழக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன. எனவே நல்வெள்ளையார் ஒரு துறவியாக இருக்கவேண்டும் என்பதும், ஆசீவக மரபின் தூய

39. நற். 272 : 2—3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெள்ளை நிறத்திற்குரியவரான நந்தவாசான் இவராகவே இருக்க வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

கணியர்

கணியர் என்ற சொல்லிற்குக் கணிப்பவர்—காலத்தைப் பல்வேறு கூறுகளாகப் பகுத்து அறிபவர் என்பது பொருளாகும். நாள்—கோள் இவற்றின் இயக்கத்தோடு மனித வாழ்வின் நிகழ்ச்சி களை ஒப்பிட்டுச் சொல்லும் மரபு காரணமாக (சோதிடம் கூறல்) இவர்களைக் கணியர் என்றும் வழங்கினர். 'கண்' பார்வை மூலமே காலத்தை அளந்து கூறியதாலும் இவர்கள் கணியர் என்று அழைக்கப்பட்டிருக்கலாம்.

ஆசீவகர் அரண்மனைக் கணியராக—நிமித்தம் கூறும் ஆற்றல் மிக்கவர்களாக விளங்கியதால் அவர்களைச் 'க்ஷணிக நோன்பினர்' என்று அழைக்கும் மரபும் உருவாயிற்று. ஞானசம்பந்தர் இவர் களைக் 'கணிகை நோன்பினர்' என்று குறிப்பார். இதற்குப் பொருள் கூறும் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்,

> துறவியானாலும் பிரமசரியம் காவாது பெண்ணோடு சேர்ந்தொழுகல் ஓர் அறம் எனக் கொள்வர் என ஆசீவக ரைப் பிறர் கூறுவது உண்மையானால், கணிகையாரோடு சேர்வதனையே நோன்பாகக்கொண்ட ஆசீவகர்கள் எனப் பொருள் கூறலும் ஆம்[40]

என்பார். இக்கூற்று ஆசீவகரின் பெருமைக்கு உகந்ததாகாது என்பது வெளிப்படை.

சென்ற காலத்தையும், வருங்காலத்தையும் அன்றைய நடப் போடு பொருத்தி உரைக்கவல்ல சான்றோர்களான இவர்களைப் பரத்தமையே தொழிலாகக் கொண்டவர்கள் என்று சொல்வது ஏற்புடைமையாகாது.

பக்குடுக்கை நன்கணியார் ஆசீவக சமயத்துடன் தமது சங்கத்தை இணைத்த பின்னர் தமிழகத்தில் ஆசீவகத்தின் செல் வாக்குப் பேரளவில் பரவியது. தமிழகத்தில் நிலவிய உலகாய்த பூதவியலின் அணுக்கோட்பாட்டைத் தழுவியும், சமூகச் சிக்கலில் தவித்த மக்களுக்கு ஊழ்வினையைக் காரணம் காட்டியும் அவர் களை அமைதியுறச் செய்த முயற்சியில் ஆசீவகம் வெற்றி பெற் றிருக்கின்றது.

40. தெ. பொ. மீனாட்சிசுந்தரம், கழக 1008 வது வெளி யிட்டு விழா மலர், ப. 77,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமண பௌத்த சமயங்களைவிட, மக்களின் பேராதரவை இச்சமயம் பெற்றுவிட்டதே இதன் எதிர்ப்பிற்கும் காரணமாகி விட்டது. உருசிய நாட்டு இந்தியவியல் ஆராய்ச்சியாளர்கள் இதனை,

> தொடக்ககாலப் பகுதியில் பௌத்தர்களின் முக்கிய போட்டியாளர்களாக இருந்தவர்கள் ஆசீவகர்கள். கி. மு. 5 ஆம் நூற்றாண்டு முதல் கி. மு. 3 ஆம் நூற்றாண்டுவரை ஆசீவக மதம் பரவலான செல்வாக்கைப் பெற்றிருந்தது. இப்பரவலுக்கான காரணம் கோசாலர் பார்ப்பனச் சமயத்தைத் திட்டமிட்ட வகையில் தீவிரமாகத் தாக்கி வந்ததே ஆகும். பார்ப்பனச் சமயம் மிகுந்த பாதுகாப்புடன் காத்து வைத்திருந்த சமூக அமைப்பின்மீது (வருணப் பாகுபாட்டின்மீது) மக்கள் கொண்டிருந்த வெறுப்பு இத்தகைய சீர்திருத்த இயக்கங்களின் நல்லுரைகளுக்கு மிகுந்த அளவில் செல்வாக்கு ஏற்படக் காரணமாயிற்று.

> ....கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் ஆசீவக மதம் பௌத்த சமயத்தைக் காட்டிலும் மிகுதியான மக்களால் பின்பற்றப் பட்டது. ஆசீவகம் சமுதாயச் சீர்திருத்தப் போக்கை வெளிப்படையாகக் காட்டியதே இதன் காரணமாக இருக்கலாம்[41]

என்று விளக்குவார்கள்.

ஆசீவகத்தின் ஊழ்வினைக் கோட்பாட்டின்படி உயிர்கள் தம் வினைக்கேற்ப அடுத்தடுத்துப் பிறவிகள் எடுக்கின்றன என்ற கருத்தானது பிறவியின் காரணமாகவே தம்மைப் 'பூசுரர்கள்' என்றும், வருணநெறியில் உயர்ந்தவர்கள் என்றும், பிரும்மாவின் முகத்தில் பிறந்தவர்கள் என்றும் கருதி வந்த பார்ப்பனர்களின் சமயக்கோட்பாட்டை முற்றாக எதிர்த்ததில் வியப்பில்லை.

நியதியும்—ஊழும்

தென்னக—சிறப்பாகத் தமிழக ஆசீவகம், மற்கலியின் கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாது தனக்கேயுரிய வகையில் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

மற்கலி உணர்த்தும் 'நியதி', தமிழ் இலக்கியங்களுள் வினை, ஊழ், முறை, பால் என்ற சொற்களால் குறிக்கப்பட்டுள்ளது.

---

41. K. Antonova & Others, A History of India (Book I) p. 113.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மற்கலியின் நியதிக் கோட்பாட்டின் ஒவ்வொரு நிலையையும் உணர்த்தும் வகையில் மிகுந்த பொருட்செறிவுடன் அமைந்துள்ளவை இத்தமிழ்ச் சொற்கள்.

வினை

வினை என்ற சொல்லிற்குச் செயல் என்பது பொருள். மனிதனின் ஒவ்வொரு பயனுக்கும் அவனது செயலே காரணம் என்பதை உணர்த்தும்வண்ணம் இச்சொல் கையாளப்பட்டுள்ளது. வினையினால் விளையும் தாக்கங்களைக் கடந்தவர்களை,

> வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன்.........[42]

என்று தொல்காப்பியம் உணர்த்தும். ஆசீவகச் சமயத் தலைவனை,

> புரையா வறிவிற் புகழ்பூ ரணனே[43]

எனக் குற்றமற்ற அறிவினை உடைய பூரணனாக நீலகேசி குறிப்பதும் அவ்வினையின் நீங்கி விளங்கிய அறிவன் என்ற பொருளிலேயாம்.

ஊழ்

நிறைதல், முற்றுதல், விரிதல் ஆகிய பொருள்களில் 'ஊழ்' என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. வினைக்கோட்பாட்டின்படி அதன் முதிர்ச்சி நிலையை அல்லது பயன்நிலையை 'ஊழ்' என்ற சொல் உணர்த்தும்.

> ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினும் தான்முந் துறும்[44]

என்று அதன் பயன்நிலையினை வள்ளுவர் குறிப்பார்.

சிலப்பதிகாரத்தில் வரும் 'வினைவிளை காலம்' உணர்த்தும் நிலையே ஊழின் நிலை எனலாம்.

முறை

நியதியின் காரணமாக உயிர்கள் எடுக்கும் பிறவிகளின் நிரலை இச்சொல் உணர்த்துகின்றது. உயிர் 'முறைவழிப்படூஉதலை'க் கணியன் பூங்குன்றனாரின் பாடல் குறிக்கின்றது.

---

42. தொல். மரபியல் 649.
43. நீலகேசி, 15.
44. குறள், 380.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பால்

பகுப்பு என்ற பொருளை உணர்த்துகின்ற சொல் பால். வள்ளுவர் இதனை 'வகுத்தான் வகுத்த வகை' எனக் குறிப்பார். ஒரு பொருளை ஒருவன் துய்ப்பதற்குக் காரணமாக இருக்கும் வினைப்பயனைப் 'பால்' என்ற சொல் புலப்படுத்துகின்றது. சோழன் நலங்கிள்ளியின் புறநானூற்றுப் பாடலும்,

> மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தெனப்
> பால்தர வந்த பழவிறல் தாயம்[45]

என்று இதனைச் சுட்டும்.

மலர்களின் பல்வேறு தன்மைகளைச் சுட்ட அரும்பு, போது, அலர், மலர், வீ ஆகிய பல சொற்கள் தமிழில் வழங்குவதைப் போல 'நியதி' என்ற மெய்யியலின் தன்மைகளைக் குறிக்க வினை, ஊழ், முறை, பால் ஆகிய சொற்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு மொழியில் ஒரு பொருளின் பல்வேறு நிலைகளை உணர்த்தப் பல சொற்கள் இருக்குமானால் அப்பொருள் அம்மண்ணுக்கே உரியதாக இருக்கவேண்டும். இந்த அடிப்படையில் காணுகின்றபோது ஆசீவகத்தின் வேர் தென்னகத்திற்கே உரியது என்பது தெளிவாகின்றது.

ஆசீவகத்தின் கோட்பாடுகளாக இன்று தொகுக்கப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் சமண பௌத்த இலக்கியங்களிலிருந்தும் அவற்றின் உரையாசிரியர்கள் காட்டும் மேற்கோள்களிலிருந்துமே எடுக்கப்பட்டவையாக உள்ளன. ஆனால் தமிழ் இலக்கியங்களில் குறிப்பாகப் புறநானூற்றில் அமைந்துள்ள சில பாடல்கள் ஆசீவகத்தின் மூல வடிவங்களாகவே இருப்பதை அறியமுடிகின்றது.

ஆசீவகக் கோட்பாடும் கணியன் பூங்குன்றனாரும்

ஆசீவகக் கோட்பாட்டிற்குரியனவாக சீலங்கா, ஞானவிமலா, அப்பையதேவா என்னும் உரையாசிரியர்கள் தரும் மேற்கோள்ளாவன:

> மனிதர்களால் துய்க்கப்படும் நல்வாய்ப்புக்களோ அன்றித் தீய வாய்ப்புக்களோ அவர்களின் முயற்சியினால் வருவதில்லை.
>
> மாறாக ஊழ்வினையின் காரணமாகவே அவை அவர்களை வந்து சேர்கின்றன.

45. புறம். 15.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனித முயற்சி எவ்வளவுதான் வலிமையுடையதாக இருப்பினும் ஊழ்வினையின் துணையின்றி முயற்சி கைகூடாது. கைகூடினாலும் பயன்தராது. அல்லது முயற்சியே சிதைந்துவிடும்.[46]

பிரசன்ன வியாகர்ண சூத்திரத்தில் ஞானவிமலா,

என்ன காரணத்தால் மனிதன் ஒரு பொருளைத் துய்க்கின்றான்? எதனால் துய்க்க முடிகின்றது? தவிர்க்க முடியா ஊழ்வலிதான் அதன் காரணம். ஆதலால் (ஒன்று கிடைக்கவில்லையே என்பதற்காக) நான் துன்பப்படவோ சலிப்படையவோ மாட்டேன்.

அது (ஊழ்) நமக்குரியதே அன்றிப் பிறருக்குரியது அல்ல. (இன்ப துன்பம் பிறரால் வருவதல்ல என்பது இதன் கருத்து)

ஊழ்! மனிதனால் விரும்பப்படும் பொருள்கள் எங்கிருந்தாலும், எந்தக் கண்டத்திலிருந்தாலும், கடலின் ஆழத்தில் இருந்தாலும், ஏன் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் ஒருவன் கண்முன்னே கொண்டுவந்து சேர்த்து விடும்!

ஊழ்வலிதான் ஒரு மனிதனது அறிவைத் துலங்கச் செய்வதும், அவன் அறிவை மயங்கச் செய்வதும், நல்ல நண்பர்களைப் பெறச் செய்வதும்கூட அதுதான்.[47]

அப்பைய தேவகாட்டும் மேற்கோளாவது:

உலகப் பொருட்கள் அனைத்தும் அவ்வவற்றின் இயல்புகளுக்கு ஏற்ப ஊழினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

ஒரு பொருளின் நிலைபேறு, தோற்றம், வாழும் கால எல்லை ஆகிய அனைத்தையும் உறுதி செய்வது அதற்குரிய ஊழே!

ஊழின் வலிமை அப்படி இருக்கும்போது அதனை யாரால் தடுத்து நிறுத்திவிட முடியும்?[48]

---

46. A. L. Basham, History and Doctrines of Ajivikas, p. 221.
47. Ibid , p. 221.
48. Ibid., p. 22 2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு ஊழைப்பற்றி உரையாசிரியர்கள் தரும் செய்திகளோடு கணியன் பூங்குன்றனாரின் பாடலை ஒப்பிட்டுக் காணலாம்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானம் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே[49]

இப்பாடலில் வரும் முதலடியாகிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது ஒரு கருதுகோளாகும். எல்லா ஊரும் என்னுடைய ஊர்; எல்லாரும் எனது சுற்றத்தார்; இது எப்படி முடியும்? உயிர் ஒவ்வொரு பிறவியிலும் ஒவ்வொரு ஊரிலே பிறக்கும். ஆதலால் எல்லா ஊரும் எனது ஊரே! அப்படிப் பிறக்கும்போது அது யார் வீட்டிலும் பிறக்கலாம். எனவே எல்லோரும் உறவினரே!

மற்கலிகோசாலர் உயிர்கள் 84,00,000 முறை பிறப்பு எடுப்பதாகக் கூறுவார். உதயகுமாரன் கொல்லப்பட்ட துன்பத்தில் உழன்று கொண்டிருந்த இராசமாதேவியை ஆற்றுவித்த மணிமேகலை,

யாங்கிருந் தழுதனை இளங்கோன் தனக்குப்
பூங்கொடி நல்லாய்ப் பொருந்தாது செய்தனை
உடற்கழு தனையோ உயிர்க்கழு தனையோ
உடற்கழு தனையேல் உன்மகன் தன்னை
எடுத்துப் புறங்காட் டிட்டனர் யாரே
உயிர்க்கழு தனையேல் உயிர்புகும் புக்கில்
செயப்பாட்டு வினையால் தெரிந்துணர் வரியது
அவ்வுயிர்க்கு அன்பினை யாயின் ஆய்தொடி
எவ்வுயிர்க் காயினும் இரங்கல் வேண்டும்[50]

49. புறம். 192.

50. மணி. 23 : 71—79.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று தேற்றுவாள். தேற்றி, உயிர் அதன் வினைக்கேற்ப எங்குச் சென்றது என்று அறிய முடியாது; உன் மகன்மீது உனக்கு அன்பிருக்குமாயின் அனைத்து உயிர்கள் மாட்டும் அன்பு செலுத்து என அறிவுறுத்துவாள்.

இப்பகுதி ஊழ்வினைக் கோட்பாட்டைக் கடுமையாக எதிர்த்து வந்த பௌத்தம் காலப் போக்கில் அதனைத் தன்வயப்படுத்திக் கொண்டதை உணர்த்தும். ஆசீவகத்தின் தாக்கம் அனைத்துச் சமயத்திலும் ஊடுருவிவிட்டது என்பதற்கும் இதனைச் சான்றாகக் கொள்ளலாம்.

எனவே 'யாதும் ஊரே யாவரும் உறவினர்களே' என்பது பிறவி தோறும் உயிர் கொள்ளும் வடிவையும் இடத்தையும் உணர்த்தும் உறவால் விளைந்த கருத்து என்பது வெளிப்படை.

ஆசீவகச் சமயத்தின் அறுவகைக் கோட்பாடுகளான ஊதியம்—இழப்பு, இன்பம்—துன்பம், பிறப்பு—இறப்பு இவற்றைக் கணியன் பூங்குன்றனார் விளக்கும் பகுதி இலக்கிய நயம் சார்ந்து விளங்குகின்றது.

'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்பதற்கு உரையாசிரியர்—'கேடும் ஆக்கமும்' தாமே வரினல்லது பிறர்தர வாரா என உரை கூறுவார். கேடு இழப்பையும், ஆக்கம் ஊதியத்தையும் உணர்த்துவன. இதே பொருளில் வள்ளுவர்,

> அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
> கேடும் நினைக்கப் படும்[51]

என்று விளக்குவார். எனவே பூங்குன்றனாரின் பாடலில் உள்ள 'தீது' இழப்பையும், 'நன்று' ஊதியத்தையும் குறிக்கும்.

'நோதலும் தணிதலும்' என்பதில் துன்ப—இன்பங்களையும், 'சாதலும் புதுவதன்றே' என்பதில் இறப்பையும் விளக்கி அதற்குக் காரணமாகிய பிறப்பை உய்த்துணர வைக்கின்றார்.

ஆசீவகத்தின் அடிப்படைக் கூறுகளை—வாழ்க்கை நெறிகளாகத் தொகுத்த அறுவகை இயல்புகளை விளக்கிய பூங்குன்றனார், 'அனைத்தும் ஊழ்வினையின் காரணத்தால் நிகழ்வதால் யாம் இன்பம் கண்டு மகிழவோ துன்பங் கண்டு கலங்கவோ இல்லை' எனத் தமது வாழ்க்கை நோக்கத்தை—ஊழ்வினையின் மீதுள்ள தமது நம்பிக்கையை விளக்குகின்றார்.

51. குறள். 169.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊழ் மிகுந்த வல்லமை உடையது. மற்கலிகோசாலர் கூற்றுப்படி 'மலையுச்சியிலிருந்து நூல்கண்டை உருட்டிவிட்டால் நூல் முழுவதும் பிரியும் வரைக்கும் உருள்வதைப்போல, உயிர்கள் அனைத்தும் ஊழிற்குக் கட்டுப்பட்டே நடக்கும்.' இக்கருத்தினை உவமை நயத்துடன் பூங்குன்றனார் புனைகின்றார்.

> இடியும் மின்னலும் கூடிய பெருமழை; மலைக் கற்களில் மோதிச் செல்லும் பெருவெள்ளம்—பெருக்கெடுத்து ஓடும் ஆற்றின் வேகம் எப்படி இருக்கும்! அப்படிப்பட்ட ஆற்றில் தெப்பம் எவ்வாறெல்லாம் அடித்துச் செல்லப் படும். அதுபோல் முறையாகிய ஊழின்வழி இந்த உயிர் அடித்துச் செல்லப்படுகிறது என்பதைத் 'திறவோர் காட்சியில் தெளிந்தனம்' ஆதலால் இவர் உயர்ந்தவர் என மதிக்கவும், இன்னார் தாழ்ந்தவர் என இகழவும் இல்லை.

'திறவோர் காட்சியில் தெளிந்தனம்' என்ற தொடருக்கு உரையாசிரியர், 'அரிய உயிர் ஊழின்வழியே படும் என்பது நன்மைக் கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்தேமாகலான்' என்று விளக்கம் தருவார். இக்கூற்றின்படி, கோசாலரின் 'மகாநிமித்தம்' அல்லது தமிழ் மரபுக்குரிய 'நவகதிர்' சங்க காலத் தமிழகத்தில் எத்தகைய செல்வாக்கினைப் பெற்றிருந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. 'திறவோர்' எனப் பன்மையில் கூறுவதால், தமிழ்நாட்டில் ஆசீவகச் சான்றோர் பலர் என்பதும் அவர்களால் இயற்றப்பட்ட நூல்களும் பல என்பதும் தெளிவு.

மேலே காட்டிய கணியன் பூங்குன்றனாரின் பாடலில் வற்புறுத் தப்பெறும் ஊதியம், இழப்பு, இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு ஆகிய இந்த ஆறு உண்மைகளும் ஆசீவகச் சமயத்தில் கோசாலரின் மகாநிமித்தமாகிய எட்டுவகைக் கூறுகளுக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணப்படும் சிறப்பினைப் பெற்றவை.

> இந்த ஆறு உண்மைகளும் உலகில் தோன்றும் அனைத்து உயிரினங்களுக்கும் பொதுவானவை. இவை மற்கலியும் மற்றும் ஆறு திசையாசிரியர்களும் கூடி ஆசீவகக் கோட் பாட்டை உருவாக்கிய பின்னர் வெளிப்படுத்திய வாழ்வியல் உண்மைகள்[52]

---

52. A. L. Basham, History and Doctrines of Ajivikas, p. 56.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று பாசம் விளக்குவார். அத்துடன் இத்தகைய ஆறு உண்மைகளை வற்புறுத்தும் எத்தகைய சான்றுகளும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

இந்திய மெய்யியலில் ஒருகாலத்து மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்த இவ் ஆசீவகத்தை 'அழிந்து போன இந்தியச் சமயம்' என்று குறிப்பிட்டுத் தம் ஆற்றாமையைப் புலப்படுத்துவார் பாசம். ஆனால் இந்தியாவில் தோன்றிய பொருள்முதலியல் சிந்தனைகளை—அவற்றின் உள்ளார்ந்த இயல்புகளை—உள்ளது உள்ளவாறே அறியத் துணைபுரியும் சான்றுகளாகத் தமிழ் இலக்கியங்கள் அமைந்துள்ளன. இந்த உண்மைகளைத் தக்க ஆய்வுகளின் மூலமாக நிலைநாட்ட முடியும் என்பதற்குரிய பல்வேறு சான்றுகளில் கணியன் பூங்குன்றனார் பாடலும் இன்றியமையா ஒன்றாகும்.

ஆசீவகச் சமயத்தின் உருவாக்கத்தில் பக்குடுக்கை நன்கணியாரின் பங்கு பேரளவில் இருந்தது என்பதும் அவரால் உருவாக்கப்பட்டிருந்த சங்கம் ஆசீவகத்தோடு இணைக்கப்பட்டுவிட்டாலும் அது தமிழக மரபுக்கு ஏற்ற வகையிலேயே தமிழகத்தில் செயல்பட்டு வந்தது என்பதும் வெளிப்படை.

இணைப்பா—கூட்டு முயற்சியா?

நியதிக் கோட்பாட்டிற்கு அமைப்பு அடிப்படையான வடிவத்தைக் கோசாலர் உருவாக்கினாலும், அக்கோட்பாடு தொன்று தொட்டே நிலவி வந்த திராவிடர்க்குரிய கோட்பாடாகும். இந்நிலையில் பூரணகாசிபரின் 'மாறுதல் இல்லாக் கோட்பாடும்', கோசாலரின் 'நியதிக் கோட்பாடும்', பக்குடுக்கை நன்கணியாரின் 'அணுவியற் கோட்பாடும்' ஆகிய மூன்றின் கூட்டமைப்பாகவே ஆசீவகம் வடிவம் கொண்டுள்ளது. பூரணகாசிபர், கோசாலர் ஆகியோரைப் போன்றே பக்குடுக்கை நன்கணியாரும் (பக்குடகாச்சாயனார்) ஆசீவகத்தின் நிறுவனத் தலைவர்களில் ஒருவராக இருக்கவேண்டும் என்று பாசம் கூறுவதும்[53] நோக்கத்தக்கது.

எனவே கணியன் பூங்குன்றனார், பக்குடுக்கை நன்கணியாரின் மாணவராகவோ அன்றி அவரது மறைவிற்குப் பின்னர் தமிழகத்தில் ஆசீவகச் சமயத்தைப் புரந்தவர்களுள் ஒருவராகவோ இருக்க வேண்டும்.

---

53. A. L. Basham, History and Doctrines of Ajivikas, p. 91.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறையூர்

நீலகேசியில் ஆசீவகத் தலைவர் பூரணர் தங்கியிருந்த இடமாகக் 'குக்குட மாநகர்' குறிக்கப்பட்டுள்ளது. இந்நகரைச் சக்கரவர்த்தி நயினார் தமிழகத்தின் 'உறையூராக'க் குறிப்பார். இக்கருத்தைப் பாசம் ஏற்றுக்கொள்ளவில்லை. என்றாலும் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட கோப்பெருஞ் சோழன் மற்றும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடல்களால் உறையூர் ஆசீவகச் சமயத்தின் சிறப்பிற்குரிய இடமாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. குக்குடம் என்ற சொல்லிற்குக் கோழி என்பது பொருளாகும். உறையூரைக் கோழியூர் என்று குறிக்கும் மரபு இருந்தது என்பதைப் பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடலும்[54] உணர்த்துகின்றது. ஆதலால் சக்கரவர்த்தி நயினாரின் கருத்து தமிழ் மரபிற்கு ஒட்டியதாக உள்ளது.

சிலப்பதிகாரத்தில் 'நாடுகாண் காதையில்' காவிரியின் வடகரையில் அதாவது உறையூருக்கு எதிர்க்கரையில் அமைந்த ஒரு சோலையில் கவுந்தியடிகள் சாரணர் என்னும் துறவிகளைச் சந்திக்கின்றார். இச்சாரணர்கள் ஆசீவகத் துறவிகள் என்பதும் அவர்கள் முக்காலமும் உணர்ந்த அறவோர்கள் என்பதும் அவர்கள் கூறும் செய்திகளால் அறிய முடிகின்றது. இதனை,

> கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணாய்
> ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை
> இட்ட வித்தின் எதிர்வந் தெய்தி
> ஒட்டுங் காலை ஒழிக்கவும் ஒண்ணா
> கடுங்கால் நெடுவளி இடுஞ்சுட ரென்ன
> ஒருங்குடன் நில்லா உடம்பிடை உயிர்கள்.[55]

என்ற பகுதியால் அறியலாம்.

உறையூர் சோழநாட்டின் புகழ் மிக்க தலைநகரம். காவிரியின் தென்கரையில் அமைந்த இந்நகரம், 'ஊர் எனப்படுவது உறையூரே' என்ற சிறப்பினைப் பெற்றது. பல்வேறு மெய்யியல் பிரிவைச் சார்ந்த அறிஞர்களும் தங்கள் கருத்துக்களைத் தம்மை ஒத்த அறிஞர்களிடையே எடுத்து வைத்து நிலைநாட்டக் காரணமாக இருந்த 'அறங் கூறவையம்' உறையூரில் சிறப்புற்றுத் திகழ்ந்தது. இந்நிலையில் உறையூருக்கு அருகிலும் காவிரிக்கு வடகரை

---

54. புறம். 67.

55. அ. சிலம்பு. 10 ; 170—175.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யிலும் அமைந்த சோலையில் துறவிகள் தங்கி இருந்து தமது தவ ஒழுக்கத்தை இயற்றி வந்துள்ளனர். எனவே உறையூர் ஆசீவகத்தின் தலைமையிடமாகத் திகழ்ந்தது என்பது வெளிப்படை.

கோப்பெருஞ்சோழன்

இவன் புலவர்களால் பாராட்டப்பெற்ற சிறப்பினை உடையவன். தானே பெரும் புலவனாகவும் விளங்கியவன். இவன் தன் மைந்தர்களோடு மாறுபாடு கொண்டு வடக்கிருந்து உயிர் துறந்தான். இவ்வாறு வடக்கிருந்து உயிர் துறத்தல் ஆசிவகர்களுக்கே உரிய ஒன்று. ஆசீவகத்தின் நிறுவனத் தலைவர்களாக விளங்கிய கோசாலரும், பூரணர் என்ற பூரண காசிபரும் இவ்வாறே பட்டினி கிடந்து உயிர் துறந்தவர்கள். பட்டினி நோன்பால் உயிர் துறக்கும் இச்சமயத்தவரின் பழக்கத்தை ஏ. எல். பாசம், தமிழ் இலக்கியச் சான்றுகள் கொண்டே நிறுவுவது இங்கே குறிக்கத்தக்கது. அவர் கூறுவதாவது:

> கடைசியில் வரும் (பட்டினி கிடந்து உயிர் துறக்கும் பழக்கம்) செய்தியை நாம் தமிழ் இலக்கியங்களிலிருந்தே உறுதிப்படுத்தலாம். தொல்காப்பியம் என்ற பழந்தமிழ் இலக்கண நூலுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் தம் உரையில் 'சில துறவிகள்' தம் இறுதி நாட்களில் தாழிகளில் இருந்து உயிர் துறந்ததாக ஒரு மேற்கோளைத் தருவார். டாக்டர் கே. ஆர். சீனிவாசன் இவர்களை ஆசீவகர்கள் என்றும் இவ்வாசீவகர்கள் சமண சமயத்தின் ஒரு பிரிவினர் என்றும் நம்புவார். நமக்கும் அத்தகைய துறவிகள் யாரென உறுதிப்படுத்த முடியவில்லை என்றாலும் நாம் ஆசிவகர்களைப் பற்றி அறிந்திருப்பதாலும் ஆசீவகர்கள் தமிழகத்திலும் பரவி வாழ்ந்தார்கள் என்பதாலும் .... மேற்கண்ட தமிழ் இலக்கியத்தில்வரும் குறிப்பு ஆசீவகர்களையே குறிக்கின்றது எனலாம்.[56]

என்பதாகும். ஆதலால் பட்டினி நோன்பிருந்து உயிர் துறந்த கோப்பெருஞ்சோழனும் அவனுக்காக அதேபோல் பட்டினி நோன்பிருந்து உயிர்துறந்தவர்களான பிசிராந்தையார், பொத்தியார் ஆகிய சான்றோர்களும்கூட ஆசீவகத்தைச் சார்ந்தவர்கள் எனலாம்.

கோப்பெருஞ்சோழனின் பாடல்

நல்வினைகளைச் செய்வதன் இன்றியமையாமையை வற்புறுத்துவதுடன், ஊழின் இயல்புகளையும் விளக்கி, ஊழின் காரண

56. A. L. Basham, History and Doctrines of Ajivikas. pp. 111—112.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாகவே ஒருவன் மறுமை உலகின் பயனைத் துய்க்க முடியும் என விளக்கும் கோப்பெருஞ்சோழனின் பாடல் வருமாறு:

செய்குவம் கொல்லோ நல்வினை யெனவே
ஐய்ய மறாஅர் கசடீண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவில் லோரே
யானை வேட்டுவன் யானையும் பெறுமே
குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே
அதனால் உயர்ந்த வேட்டத் துயர்ந்திசி னோர்க்குச்
செய்வினை மருங்கி னெய்த லுண்டெனின்
தொய்யா உலகத்து நுகர்ச்சியுங் கூடும்
தொய்யா உலகத்து நுகர்ச்சி யில்லெனின்
மாறிப் பிறப்பி னின்மையுங் கூடும்
மாறிப் பிறவா ராயினு மிமயத்துக்
கோடுயர்ந் தன்ன தம்மிசை நட்டுத்
தீதில் யாக்கையொடு மாய்தல்தவத் தலையே[57]

என்பதாகும்.

ஆசீவகத்தின் மெய்யியல், அளவைஇயல் இவற்றின் அடிப்படையில் அமைந்தது இப்பாடல். நிர்வாண நிலையை அடையத் தக்க துறவுநெறியை மேற்கொண்டவராக இருந்தாலும், வினைப் பயன் இருந்தால் மட்டுமே தொய்யா உலகத்து நுகர்ச்சி கிட்டும். வினைப்பயன் முற்றுப்பெறாதவழி அவ்வுலகத்து நுகர்ச்சி கிட்டாது. எனவே அடுத்த பிறவி எடுக்க நேரிடும். அத்தகைய பிறவிகளில் வினைப்பயன் முதிர்ச்சியினால் பிறவாத்தன்மை ஏற்படும்.

பிறவாத்தன்மை பெறக்கூடிய அளவிற்கு வினைப்பயன் முதிர்ச்சி பெற்ற சான்றோராயினும், இமயத்தின் கொடுமுடி களைப் போன்ற தம் உயரிய புகழை நிலைநாட்டி, குற்றமற்ற உடலோடு மாய்தல் மிகவும் சிறந்தது என்பது இப்பாடலின் கருத் தாகும்.

'தீதில் யாக்கையொடு மாய்தல்' ஆசீவகத்தில் வற்புறுத்தப் படும் இறுதி உண்ணா நோன்பு என்பதைக் குறிக்கும். கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்து உயிர் துறந்தவன் என்பதும், அவ்வாறு வடக் கிருந்த பொழுது பாடிய பாடல் இது என்பதும் நோக்க, கோப் பெருஞ்சோழன் ஆசீவகத்தைச் சார்ந்தவன் என்பது உறுதிப்படு கிறது.

---

57. புறம். 214.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

கோப்பெருஞ்சோழனைப் போன்றே இவரும் மறுமைப் பயன் துய்க்க ஊழ்வினையே காரணம் என்பதை வற்புறுத்தியவர். அவரின் பாடல் பகுதியாவது:

... ...
புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வான வூர்தி
எய்துப வென்பதஞ் செய்வினை முடித்தெனக்
கேட்ப லெந்தை சேட்சென்னி நலங்கிள்ளி
தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிரிதரு முலகத்து
... ...[58]

என்பதாகும்.

'புலவர் பாடும் புகழுடையோராக இருப்பினும், அவர்கள் தம் செய்வினைப்பயனை முடித்த பின்னரே புத்தேள் உலகில் புகமுடியும் என்பதை அறிவுடையோர் சொல்லக் கேட்பேன்' என்று புலவர் குறிப்பது சிந்திக்கத்தக்கதாகும். மேலும், ஆசீவகத்தின் ஆறு உண்மைகளுள் செல்வத்தின் தேய்வும் பெருக்கமும், உயிர்களின் இறப்பும் பிறப்பும் இங்கே நிலவின் தன்மைகளில் ஏற்றித் தற்குறிப் பேற்ற அணியாகச் சொல்லப்பட்டுள்ளது.

இதே புலவர் மற்றொரு பாடலில் தம் காலத்திலிருந்த சமய எதிர்ப்பையும் உணர்த்துகின்றார். நல்வினையின் காரணமாக நன்மை ஏற்படும். தீவினையின் காரணமாகத் தீமை ஏற்படும். இவற்றை மறுப்பவர்களை உன் பக்கத்தில் சேர்த்துக்கொள்ளாதே என்று அறிவுறுத்தும்.

நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை என்போர்க்கு இனனா கிலியர்[59]

என்பது அப்பாடலாகும். இங்கே நல்லதன் நலனும், தீயதன் தீமையும் இல்லை என மறுப்பவர்களாகச் சுட்டப்படுபவர் உலகாய்தர் ஆவர்.

---

58. புறம். 27 : 7—14.

59. புறம். 29 : 11—12.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊழும்—அறக்கோட்பாடும்

ஆசீவகத்தின் நியதிக் கோட்பாட்டில் அறச்செயல்களுக்கே இடமில்லை என்று சாமண்ண பாலசூக்தம் குறிப்பிடும். சாமண்ண பாலசூக்தம், ஆசீவகத்தின் மிகக் கடுமையான எதிரியாக விளங்கிய பௌத்த சமய நூல். ஆனால், கோப்பெருஞ்சோழன், உறையூர் முதுகண்ணன் சாத்தனார் ஆகியோர் பாடல்களில் ஊழ்வினை வற்புறுத்தப்படும் அளவிற்கு அறமும் வற்புறுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

சாதி அமைப்புகளை எதிர்த்தும், பார்ப்பனிய மேலாண்மையை மறுத்தும் மக்கள் நடுவே சமத்துவத்தை உருவாக்கிய இச்சமயத்தவர்கள் நடைமுறை வாழ்வில் அறத்தின் பங்கினை நன்கு உணர்ந்தவர்களாகவும், அதனை வற்புறுத்துவதுடன் தாமும் அப்படி வாழ்ந்து காட்டியவர்களாகவும் விளங்கினர் என்பது வெளிப்படை.

உறையூர் முதுகண்ணன் சாத்தனார் ஊழ்வினையை வற்புறுத்தும் அதே பாடலில்,

... ...விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்துக் கூடிய
நகைப்புற னாகநின் சுற்றம்
இசைப்புற னாகநின் ஓம்பிய பொருளே[60]

எனக் கொடைச் சிறப்பின் மேன்மையை—ஈதலே இசைபட வாழ்தற்கான அடிப்படை என்பதை விளக்கிச் சமூக ஒப்புரவை வற்புறுத்துவார்.

இதே புலவர் மற்றொரு பாடலில்,

அதனால் அறனும் பொருளு மின்பமு மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றா மைநிற் போற்றா மையே[61]

என்று அறனை வலியுறுத்துவார்.

தமிழகத்து ஆசீவகம் ஊழ்வினையை முற்றாக ஏற்றுக்கொண்டது. என்றாலும் அன்றாட நடைமுறை வாழ்வில் உலகாய்தத்தின் வாழ்க்கை நெறிகளைத் தழுவியதுடன் அதனை வற்புறுத்தியும் வந்துள்ளது.

---

60. புறம். 29 : 22—26.

61. புறம். 28 : 15—17.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊழ், மனித வாழ்வின் நுகர்ச்சிகளுக்கு அடிப்படை என்றாலும், வாழும் மனிதன் கவலையின்றி வாழவும், ஒரு சமூகம் அல்லது நாடு பாதுகாப்புடன் திகழவும் அறத்தின் அடிப்படையில் அமைந்த அரசியல் தேவைப்பட்டது. எனவேதான்,

நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
அறநெறி முதற்றே யரசின் கொற்றம்[62]

எனப் புலவர்கள் வற்புறுத்துகின்றனர்.

ஊழ்வினையின் காரணமாக ஒருவனுக்கு நாடாளும் வாய்ப்புக் கிட்டினாலும் ஆண்மையுள்ளவனாகவும் அறநெறியின் மீது நம்பிக்கை கொண்டு ஆட்சி புரிபவனாகவும் உள்ள மன்னவனே போற்றுதலுக்கு உரியவனாவான் என்று சோழன் நலங்கிள்ளி பாடுவான்.

ஊழ்வினையைப் பற்றிய கொள்கைகளை வகுத்தவர்களான மற்கலிகோசாலர் மற்றும் ஆறு திசையாசிரியர்கள் கூடித் தொகுத்த நூல்கள் நமக்குக் கிடைக்கவில்லை. கிடைப்பனவெல்லாம் அக்கோட்பாட்டிற்கு மாறான கருத்துடைய ஆசிரியர்களாலும், சமயத்தவர்களாலும் எழுதப்பட்ட சான்றுகளாகவே உள்ளன. இந்நிலையில் ஆசீவகம் பற்றிக் கிடைக்கும் தமிழ் இலக்கியச் சான்றுகளையே அடிப்படையாகக் கொண்டு ஊழ்வினைக் கோட்பாட்டைத் தொகுத்தளிக்க வேண்டிய கடப்பாடு ஆய்வாளர்களுக்கு உரியதாகும்.

ஆசீவகத்தைச் சார்ந்த தமிழ்ப் புலவர்கள் தென்னகத்திற்கே உரிய வகையில் அதனை முன்னெடுத்துச் சென்றனர் என்பது முன்னர் விளக்கப்பட்டுள்ளது. இத்தென்னகக் கூறுகளின் தனித்தன்மை அதன் உலகாய்தக் கோட்பாட்டினாலும் தந்திரக் கோட்பாட்டினாலும் செழுமைப்படுத்தப்பட்டுள்ளது.

ஊழ்வினையை வற்புறுத்திய கணியன் பூங்குன்றனார், இல்வாழ்வின் சிறப்பை விளக்கும் வகையில் பாடிய பாடல் மேற்கூறிய கருத்தை வற்புறுத்தும்.

மரஞ்சா மருந்தும் கொள்ளார் மாந்தர்
உரஞ்சாச் செய்யார் உயர்தவம்; வளங்கெடப்
பொன்னும் கொள்ளார் மன்னர்; நன்னுதல்
நாந்தம் உண்மையின் உளமே; அதனால்
தாஞ்செய் பொருளளவு அறியார் தாங்கசிந்து

62. புறம். 55 : 9—10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றூழ் நிறுப்ப நீளிடை ஒழியச்
சென்றோர் மன்றநங் காதலர் என்றும்
இன்ன நிலைமைத் தென்ப
என்னோரும் அறியஇவ் வுலகத் தானே[63]

என்பது அப்பாடல்.

'உலகமாந்தர் மருந்துமரம் பட்டுப்போகும்படி அதன் பாலுள்ள மருந்தைக் கொள்ளமாட்டார். தவம் செய்வோரும் தம் உயிருக்கு ஊறு விளைவிக்கும் வகையில் தவமும் செய்யார். வேந்தரும் தம் குடிமக்களின் வளமெல்லாம் கெட்டழியுமாறு வரிகளை விதியார். இவற்றை அறிந்திருந்தும், நெடியவும் கொடியவுமான காட்டு வழியினைக் கடந்து நம்மைப் பிரிந்து சென்றார் நம் காதலர். அவர் நம்மைப் பிரியாதிருந்ததால்தான் நாம் உயிரோடு இருந்தோம், இதனை அறியாது பொருள் காரணமாக நம்மை விட்டுப் பிரிந்து சென்றார் எனின் அப்பிரிவினால் நாம் இறந்துபடுவது திண்ணம் என்பதை அவர் அறிந்தவரல்லர். எக்காலத்தும் ஆடவர் தம் இயல்பு இப்படிப்பட்டதே எனச் சான்றோரும் கூறுவர்' என்பது இப்பாடல் விளக்கும் கருத்து.

தமிழகத்தில் மெய்யியல் வேறுபாடு எவ்வளவு இருந்திருந்தாலும், மக்களின் வாழ்வியலைப் பற்றிய அடிப்படையில் அவர்கள் ஒருமித்த கருத்துடையவர்களாக இருந்தனர் என்பதை அறிய முடிகின்றது.

இக் கருத்தொருமைக்கான காரணம் உலகாய்தத்தின் செல்வாக்கே எனவும் கூறலாம். சமூக வாழ்க்கையை அகம், புறம் என இரு கூறாகப் பிரித்து ஒழுக்க நெறிகளை வகைப்படுத்தி வரையறை செய்தது தமிழ் இலக்கண மரபு. இம்மரபு உலக வழக்காகவும், செய்யுள் வழக்காகவும் மனித வாழ்வைக் கட்டுடன் பாதுகாத்தது. இவ்வாறு அமைந்த அகத்திணை—புறத்திணை மரபுகளில் அகத்திணை மரபுக்குரிய பாடல்கள்—அதாவது மனித வாழ்வில் இன்பியல் கூறுகளை வற்புறுத்தும் பாடல்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளதும் எண்ணத்தகும்.

அகத்திணைப் பாடல்கள் வெறும் பாலியற் கல்வியாக அமைந்திருக்கவில்லை. மாறாக மனித மனங்களைச் செப்பனிட்டுத் தூய்மையாக்கும் அன்பியல் ஊற்றாகவும் அமைந்தவை அவை. அதனால்தான் மனித நலங்கருதித் துறவுநெறி மேற்கொண்டு அறிவு நிலையில் பல மாறுபாடான கோட்பாடுகளைப் பின்பற்றி

63. நற். 226.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னாலும் முக்கல் ஆசான் நல்வெள்ளையார் (நந்தவாசான்), கணியன் பூங்குன்றனார் முதலான சான்றோர்கள் இன்பியல் கருத்தை வற்புறுத்தும் அகத்திணைப் பாடல்களையும் பாடியுள்ளனர்.

ஆதலால் தென்னக மரபிற்குரிய ஆசீவகமாயினும், நன்கணியாரின் அணுவியற் கோட்பாடாயினும், உலகாய்தர்களின் இன்பியல் கோட்பாடாயினும், தமிழகத்தில் தோன்றிக் கிளைத்த எத்தகைய மெய்யியல் மரபாயினும் அவற்றிற்கெல்லாம் உயிரோட்டமாக இருப்பது தமிழகத்தின் அய்ந்திர மரபே என்பது தெளிவு.

தொல்காப்பியத்தில் வினைக்கோட்பாடு

வாகைத்திணையை விளக்கும் தொல்காப்பியர், 'அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்' என்ற நூற்பாவில்,

> **மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
> **நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்**
> **நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்[64]**

என்று அறிவரையும் துறவியரையும் குறிப்பார். இந் நூற்பாவிற்கு இளம்பூரணர் தரும் உரை வருமாறு:

> குற்றமற்ற செயலை உடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறுத்த **அறிவன் பக்கம்**.
>
> இறந்தகாலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியினால் தோற்றிய அறிவன் பக்கம் என்றாலோ எனின் அது முழுதுணர்ந்தோர்க்கல்லது புலப்படாமையின் அது பொருளன்றென்க. பன்னிருபடலத்துள், 'பனியும் வெயிலும் கூதிரும் யாவும், துணியில் கொள்கையொடு நோன்மை எய்திய தணிவுற்று அறிந்த கணிவன் முல்லை' எனவும் ஓதுதலின் மேலதே பொருளாகக் கொள்க.
>
> அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளுந் தூமமும் மீன்வீழ்வும் கோள் நிலையும் மழை நிலையும் பிறவும் பார்த்துப் பயன்கூறல்.

64. தொல். புறத்திணை. 74 ; 4—6.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> ஆதலால் மூவகைக் காலமும் 'நெறியின் ஆற்றிய அறிவன், என்றார்.[65]

இவ் விளக்கம் கணியர்களுக்கு இளம்பூரணர் காலத்தில் ஏற்பட்டிருந்த சமூகநிலையை உணர்த்தும். மதுரைக்காஞ்சியில்,

> வானமு நிலனுந் தாமுழு துணருஞ்
> சான்ற கொள்கைச் சாயா யாக்கை
> ஆன்றடங் கறிஞர் செறிந்தனர் நோன்மார்[66]

எனப் போற்றப்படும் சிறப்பினைப் பெற்றவர்கள் இக்கணியர்கள். தவமேன்மையாலும் ஆன்றவிந்தடங்கிய கொள்கையாலும், சான்றோர்களாய் மதிக்கத்தக்க சமூகத் தலைமை அவர்களுக்குரியது. இத்தகைய பெருமை மிக்க வகையில்தான் தொல்காப்பியர்,

> மறுவில் செய்தி மூவகைக் காலமும்
> நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்

எனச் சுட்டுகின்றார். இவ்வடிகளை அடுத்துவரும்,

> நாலிரு வழக்கில் தாபதப் பக்கமும்

என்ற அடியும், துறவு பூண்டு கடுந்தவம் புரிந்த துறவோர்களையே உணர்த்துகின்றது. இளம்பூரணர்,

> எட்டு வகைப்பட்ட வழக்கினை உடைய தாபதர் பக்கமும். அவையாவன: நீராடல், நிலத்திடைக் கிடத்தல், தோலுடுத்தல், சடைபுனைதல், எரியோம்பல், ஊரடையாமை, காட்டிலுள்ள உணவு கோடல், தெய்வ பூசையும் அதிதி பூசையும் செய்தல்[67]

என உரை கூறுவார்.

எனவே தாபதர் என்போரும் கடும் நோன்பினை மேற்கொண்ட தவ ஒழுக்கம் உடையோர் என்பது தெளிவு.

ஆசீவகர்கள், காலத்தை நன்குணரும் ஆற்றல் வாய்ந்தவர்கள், அவர்கள் கடும் தவத்தை உடைய துறவு நெறியைப் பின்பற்றியவர்கள் ஆகிய செய்திகளுடன் தொல்காப்பிய நூற்பாவை ஒப்பிட்

---

65. தொல். புறத்திணை. இளம்பூரணர் உரை.
66. மதுரைக் காஞ்சி, 479—481,
67, தொல். புறத்திணை. இளம்பூரணர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டால் மேற்காட்டிய பகுதி ஆசீவகர்களை—தென்னகத்திற்கேயுரிய ஆசீவகர்களை உணர்த்தக் காணலாம்.

தொல்காப்பியரின் காலம் கி. மு. ஆறாம் நூற்றாண்டிற்குரிய சாரகசம்கிதைக்கு முற்பட்டது என அய்ந்திரம் பற்றிய இயலில் விளக்கப்பட்டது. மேலும் மற்கலிகோசாலர் ஆசீவகத்தை வகைப் படுத்தித் தொகுப்பதற்கு முன்னரும் அக்கோட்பாட்டின் கூறுபாடு கள் நடைமுறையில் இருந்தன என்பதாலும் தொல்காப்பியர் குறிப் பிடும் 'அறிவர்', 'தாபதர்' என்போர் அணுவியல் கோட்பாட் டாளராகிய 'கணியர்களே' என்பது தெளிவு.

தொல்காப்பியத்துள் ஊழ்

முதல்நூல் பற்றியும் அதன் ஆசிரியராவார் இயல்பு பற்றியும் விளக்கும் தொல்காப்பியர்,

> வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல்நூ லாகும்[68]

எனச் சிறப்பிப்பார். இந்நூற்பாவிற்குப் பேராசிரியர் தரும் விளக்கமாவது:

> வினை என்பன இருவினை. 'இன்' நீக்கத்துக்கண் வந்தது. 'விளங்கிய அறிவு என்பது' முழுதும் உணரும் உணர்ச்சி. அறிவின் என நின்ற 'இன்' சாரியை. இன்ன அறிவி னொடு கூடிய முனைவன் அறிவின் முனைவன் எனப் படும்[69]

என்பதாகும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரிருந்தே வினைக் கோட்பாடு தமிழகத்தில் நிலைபெற்றிருக்க வேண்டும் என்பதனை இந்நூற்பா உணர்த்தும்.

வினைச்சொல்—வினை—விளக்கம்

ஊழ்வினை முக்காலத்திற்கும் உரியது. இது இடம், பொருள், காலம் பார்க்காது செய்தவனைத் தழுவ வல்லது. இக்கருத்தினைத் தொல்காப்பியர் வினைஇயலில்,

> வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
> நினையுங் காலைக் காலமொடு தோன்றும்[70]

---

68. தொல். மரபியல். 574.
69. மே. நூற்பா, பேராசிரியர் உரை.
70. தொல். வினையியல் 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என விளக்குவார். வினைச்சொல்லின் இலக்கணத்தை வினைஇயல் (ஊழியல்) கோட்பாட்டோடு இணைத்துக் குறிப்பிடும் நயம் உணரத்தக்கது.

அய்ந்திர மரபு பூதவியலுச்குரியது. இப் பூதவியலின் அணுவியல் கோட்பாடு, வானநூற்புலமை, உயிரியலின் வளர்ச்சி ஆகிய மூன்றும் இணைந்து தமிழகத்தின் வினையியல் கோட்பாடாக உருவாகி இருக்கவேண்டும். இன்றைய உயிர்வேதியியல், தாவரங்களுக்கும்—விலங்குகட்கும்—மனிதர்களுக்கும் இடையே அமைந்துள்ள உயிரியல் தொடர்புகளைத் தெளிவாக விளக்குகின்றது. தொல்காப்பியரின் 'அறிவு' பற்றிய விளக்கமும் இன்றைய உயிர் வேதியியல் முடிவுகளும் பேரளவில் இணைந்து வருவன. எனவே இத்தகைய தொடர்புகளை உணர்ந்த அறவோர் உயிர்களைப் பற்றித் தொகுத்த செய்திகள்—உயிரினங்களுக்கு இடையேயுள்ள தொடர்புகள் ஆகிய அனைத்தும் ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்கத் துணைபுரிந்துள்ளன.

எழுத்துக்கள்

இத்தகைய பின்புலத்திலிருந்து 'தமிழ் நெடுங்கணக்கின்' அமைப்பு முறையினைக் காணும்போது உயிர் பற்றிய கோட்பாட்டின் பழமையைப் புரிந்துகொள்ள முடிகின்றது. உலகாய்தம்—பூதவியல், 'உயிர் என்பது அய்ம்பூதங்களின் சேர்க்கையால் தோன்றும் ஒரு வேதியியல் மாற்றமே ஒழிய வேறில்லை' என வற்புறுத்தும். உலகாய்தத்திலிருந்து கிளைத்த புதிய கோட்பாடு, 'உயிர் உடலைச் சார்ந்து இயங்கவல்லது; என்றாலும் அதற்கென்று தனித்த இயல்புகளும் உண்டு என்று விளக்கும் வகையில் அமைந்துள்ளது.' வள்ளுவரும், உடம்பைப் பறவையின் முட்டைக்கும், உயிரை அம் முட்டையிலிருந்து வெளிவரும் குஞ்சுக்கும் உவமையாக்கியுள்ளதும் எண்ணத்தகும்.

குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு[71]

என்பது அக்குறள்.

தொல்காப்பியரும் தமிழ் எழுத்துக்களின் அளபு பற்றி கூறும்போது,

மெய்யோ டியையினும் உயிரியல் திரியா[72]

என்பார். இந்நூற்பாவுடன்,

71. குறள். 338.

72. தொல். எழுத்து. நூற்பா 10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெய்யின் வழியது உயிர்தோன்றும் நிலையே[73]

என்ற நூற்பாவையும் ஒப்பிட்டுக் காணும்போது இவ்விரு நூற்பாக்களும் வெறும் எழுத்துக்களின் இலக்கணத்தை மட்டுமே கூறுவதாகக் கருதமுடியவில்லை. மாறாக, உயிர் பற்றிய கோட்பாட்டின் விளக்கமாகவும் அமைந்திருப்பதை உணர முடிகின்றது.

'உயிர் தனித்தியங்க வல்லது' என்ற நம்பிக்கை முழுமையான பொருள்முதல் சிந்தனையிலிருந்து கருத்துமுதல் சிந்தனைப் போக்கைத் தழுவிவிட்டது என்பதன் அடையாளமே. இவ்விருமைக் கருத்து உலகாய்தம் நீங்கிய பிற இந்திய பொருள்முதல் சிந்தனைகள் அனைத்திலும் இடம் பெற்றுவிட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

உயிர் தனித்தியங்கவல்லது என்பதும், உயிர் தம் வினைக்கேற்பப் பிறவி எடுக்கின்றது என்பதும் 'கொள்கை' வடிவம் பெற்ற பின்னர், மனித வாழ்வின் நிலையாமை பற்றிய சிந்தனையும் தனிக் கோட்பாடாக உருவாயிற்று.

நிலையாமை

நிலையாமைக் கோட்பாடு செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கை நிலையாமை என்று வாழ்வின் பல்வேறு கூறுகளுடன் இணைக்கப்பட்ட பட்டறிவுக் கோட்பாடாகவும் மாறி விட்டது. இந்நிலையாமையைத் தொல்காப்பியர் காஞ்சித்திணையுள் விளக்குவார்.

காஞ்சி தானே பெருந்திணைப் புறனே

பாங்கருஞ் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே[74]

என்பன தொல்காப்பிய நூற்பாக்கள்.

வெற்றிக்குரிய வாகைத்திணையை அடுத்து நிலையாமைக்குரிய காஞ்சித்திணையை வகுத்திருப்பது ஆழ்ந்த சிந்தனைக்குரியது. போர் மறவர்கள் தங்களின் இன்னுயிரைத் துச்சமென மதித்து உயிர் இழப்பையும் பொருட்படுத்தாது, தம் நாட்டிற்கும் வேந்தனுக்கும் வெற்றியைத் தேடித்தரும் அப்போர்க்களக் காட்சியே நிலையாமைக்குரிய களனாகத் தொல்காப்பியர் கூறியுள்ளது இக் கோட்பாட்டின் சமூகப் பின்புலத்தை அரியத் துணைபுரிகின்றது.

---

73. தொல். எழுத்து. நூன்மரபு 10.

74. தொல். புறத்திணை 77 & 78.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> இத்திணை (காஞ்சி)யினைக் கூற்றுவன் பெருமையில் தொடங்கி, காடு வாழ்த்தோடு முடிப்பதிலிருந்தே முற்றாக நிலையாமையினை உணர்த்துவதே தொல்காப்பியரின் கருத்து என்பது தெளிவாக விளங்கும். இத்திணைகளின் துறைகளிற் பல வாகைத்திணைகளின் துறைகள் போலல்லாமல் போர்க்களத்தையே எதிரொலிக்கின்றன. ஆயின் அத்துறைகள் நிலையாமை உணர்வோடு வெளிப்படுகின்றன[75]

என்று விளக்குவார் ப. அண்ணாமலை.

உயிர் கூற்றுவனால் கொள்ளப்படுவது என்பதும் அக்கூற்றுவன் தென்திசைக் கடவுளாகக் கருதப்பட்டதும் தமிழ் இலக்கிய மரபு உணர்த்தும் செய்திகள்.

நிலையாமையும் அறநெறியும்

நிலையாமை பற்றிய எண்ணங்கள் மக்கள் வாழ்வில் பல்வேறு அறங்களை வற்புறுத்த நிலைக்களன்களாக அமைந்தன. இளமை நிலையாமை காதல் வாழ்விற்கும், யாக்கை நிலையாமை துறவு வாழ்விற்கும், செல்வ நிலையாமை சமூக ஒப்புரவிற்கும் துணையாயின. அதிலும் குறிப்பாக யாக்கை நிலையாமையே அறத்தின் அடிப்படையாகக் கருதப்பட்டமை தமிழ் மரபின் பெருமைக்குரிய ஒன்றாகவும் அமைந்துள்ளது.

நரிவெரூஉத் தலையார்

காஞ்சித்திணையைக் கூற்றுவன் பெருமையில் தொடங்கும் தொல்காப்பியத்தை அடியொற்றி அமைந்ததுபோல் விளங்கும் நரிவெரூஉத் தலையாரின் புறப்பாடல், நிலையாமை எவ்வாறு அறநெறிக் கோட்பாட்டின் அடிப்படை என்பதை விளக்கும். சமூக நெறிமுறைகளுக்கு மதிப்பளிக்காது, வாழ்ந்து முதுமை அடைந்தவர்களின் மூப்புகூட எள்ளற்குரியதாகி விடுகிறது என்பதை வற்புறுத்தும் அப்பாடலாவது:

> பல்சான் றீரே பல்சான் றீரே
> கயன்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுட்
> பயனின் மூப்பிற் பல்சான் றீரே
> கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்

---

75. ப. அண்ணாமலை, தொல்காப்பியர், பக். 112—113.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிணிக்குங் காலை இரங்குவிர் மாதோ!
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியுமா ரதுவே[76]

என்பதாகும்.

மனிதர்கள் செய்யும் அறமிலாச் செயல்கள் சமூகத் தீமைகளுக்குக் காரணங்களாகி விடுவன. எனவேதான் மனித சமூகத்திற்கு ஒழுக்கமும் கட்டுப்பாடும் மிகுதியும் வற்புறுத்தப்பட்டுள்ளன. தனி மனித ஒழுக்கம் பேணப்பட்டால்தான் சமூக ஒழுக்கம் நிலை பெறும். மனிதன் செய்யும் ஒழுக்கக்கேடுகளுக்கு (பாவங்களுக்கு)க் கழுவாய் செய்துவிட்டால்—அதாவது அவனது தீமைகளை மந்திரங்களின் மூலம் போக்கிவிட்டால் அவன் தூயவனாகிப் பொன்னுலகம் போவான் என்ற வைதிக மரபிற்கு மாறாக, உங்களால் நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீமையாவது செய்யாமல் இருங்கள். அப்படி இருப்பதுதான் மற்றவர்களால் விரும்பப்படுவது என்பதுடன் உங்களை நல்ல நெறிப்படுத்தவும் வல்லது என்பதை விளக்கும் இப்பாடல் நிலையாமைக்குரிய பொருண்மொழிக் காஞ்சித் துறையில் அமைந்துள்ளது. மேலும் இதில் எதிரொலிக்கும் வைதிக மறுப்பையும் புரிந்துகொள்ளத் துணைபுரிகின்றது.

நல்லாற்றுப்படுத்தும் நெறி என்பதற்கு உரையாசிரியர்கள் 'வீடுபேறு' என்று பொருள் கூறினாலும், சமூக வாழ்வின் அமைதியே நல்லாற்றுப்படுத்தும் நெறியாக இப்புலவரால் வற்புறுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை. சங்க இலக்கியங்களுள் அமைந்த காஞ்சித்திணைப் பாடல்கள் அனைத்தும் யாக்கை நிலையாமையை வற்புறுத்தும் பாங்கில் அமைந்து, சமூக ஒப்புரவை—சமூக அமைதியை வலியுறுத்துகின்றன.

இளமை நிலையாமை

உலகம் இயக்கத்திற்குட்பட்டது. எனவே உலகப் பொருள்கள் அனைத்தும் நொடிக்கு நொடி மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உட்படுகின்றன. இத்தகு இயக்க விதிக்கு உட்பட்ட மனித வாழ்வும் பல்வேறு பருவங்களுக்கு உட்பட்டு மாற்றமும் வளர்ச்சியும் தேய்வும் பெற்று முடிவில் மரணத்தில் ஒன்றிவிடுகின்றது. ஆகவே வாழ்வில் நுகர்ச்சிகளைத் துய்ப்பதற்குரிய பருவமாக 'இளமை' மதிக்கப்படுவதுடன் இளமையில் துய்க்க வேண்டிய இன்பங்களையும் அறிஞர்கள் வற்புறுத்துகின்றனர். இதனைத் தொல்காப்பியர் அகத்திணை மரபில்,

---

76. புறம். 195.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாளது சின்மையும் இளமைய தருமையும்
தாளான் பக்கமும் தகுதிய தமைதியும்
இன்மைய திளிவும் உடைமைய துயர்ச்சியும்
அன்பின தகலமும் அகற்சிய தருமையும்
ஒன்றாப் பொருள்வயின் ஊக்கிய பாலினு ம்[77]

என்று விளக்குவார்.

தொல்காப்பியம் அய்ந்திர மரபை ஒட்டி அமைந்த நூல் என்பது முன்னர் விளக்கப்பட்டது. இதில் காணப்படும் மெய்யியல் கோட்பாடுகளைத் தொகுத்துக் காணும்போது, அவற்றுள் இந்திய மெய்யியல் மரபில் கடவுள் மறுப்பாகவும் வேத மறுப்பாகவும் தோன்றிய பொருளியல் கோட்பாடுகளான தந்திரம், சாங்கியம், யோகம், உலகாய்தம் (பூதவியல்), சமணம், ஆசீவகம், பௌத்தம் ஆகிய பிரிவுகளின் மூலக் கூறுகள் பொதிந்து கிடப்பதை அறிய முடிகின்றது.

உயிர் பற்றியும், உலகின் தோற்றம் பற்றியும் உலக உயிர்களின் வளர்ச்சி பற்றியும் வரும் தொல்காப்பியச் சிந்தனைகளும் மேற்காட்டிய சாங்கியம் முதலான மெய்யியல் கோட்பாடுகளும் அடிப்படையில் எவ்வித மாற்றமும் இல்லாமல் ஒப்புமை உடையனவாக உள்ளன. இவ்வாறு அடிப்படையில் ஒப்புமை உடையனவாக விளங்கினாலும், காலப் போக்கில் அவை தமக்கெனத் தனி இயல்புகளைப் பெற்றுத் தனித்தனி மெய்யியல்களாகக் கிளைத்தன. 24 தீர்த்தங்கரர்களைக் கொண்டுள்ள சமணம், 23வது தீர்த்தங்கரராகிய பார்சுவநாதருக்குப் பின்னர் வந்த மகாவீரரால் புதிய சமணமாக உருவாகின்றது. பார்சுவரைப் பின்பற்றியவர்கள் நிக்கந்தப் பிரிவினராக அழைக்கப்பட்டனர். மகாவீரருடன் தொடக்க நிலையில் நண்பராக விளங்கிய மற்கலிகோசாலர் பின்னர் தமிழகப் பக்குடுக்கை நன்கணியார் முதலான திசையாசிரியர் துணையால் புதிதாக ஆசீவகச் சமயத்தை உருவாக்குகின்றார். பக்குடுக்கை நன்கணியாரின் அணுவியற் கோட்பாடே பிற்காலத்தில் இந்திய அறுவகைத் தரிசனங்களில் ஒன்றான சிறப்பியல்பாக (வைசேடியம்) உருமாறுகிறது. வரலாற்றில் ஏற்பட்டுள்ள இவ்வகையான மாற்றங்கள் காலத்தின் வளர்ச்சிக்கேற்ப நடந்து வந்துள்ளன. இந்தப் படிநிலை வரலாற்றுத் தன்மைகளைக் கொண்டு தொல்காப்பியத்தை நோக்கும்போது தமிழகச் சிந்தனை மரபு அதாவது திராவிடச் சிந்தனை மரபு பல்வேறு கிளைகளாகக் கிளைத்துப் பிளவுபடாத ஒரு காலகட்டத்தில், பல கிளைகளுக்கும் மூலமான

77. தொல். அகத்திணை இயல் 44 : 7—11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெய்யியல் செழித்து நின்ற சமூகச் சூழலில்தான் தொல்காப்பியம் தோன்றியிருக்க வேண்டும் என்பது தெளிவு.

தொல்காப்பியரின் மெய்யியல் பற்றி விளக்கும் குணா,

> தொல்காப்பியத்திலும் இயங்கியல் கூறுகள் உண்டு. 'நோயும் இன்பமும் உறுப்பும் உணர்வும் போன்றவை இருவகை எதிர்நிலைகள். அவ்வாறே அறிவும் புலனும்கூட இருவேறு நிலைகள்' என்னும் பொருளில் அமைகின்ற,
>
> நோயும் இன்பமும் இருவகை நிலையில்
> ... ...
> உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்
> ... ...
> அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
>
> என்னும் தொல்காப்பிய அடிகள் முரண்பாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்ற இயங்கியல் சிறப்புடையவை'[78]

என்று குறிப்பார். இங்குக் குறிக்கப்பட்டுள்ள இயங்கியல் என்பது பொருள்முதல் சிந்தனை என்ற பொருளை உணர்த்தும்.

78. குணா, தமிழர் மெய்யியல், ப, 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்குறள

காலவரையறை செய்வதிலும் கருத்து வரையறை செய்வதிலும் ஆய்வாளர்களுக்குத் திருக்குறள் ஒரு பெரும் புதிராகவே உள்ளது. திருக்குறளை ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயக் கோட்பாடுகளோடு அணுகியுள்ள காரணத்தாலும், திருக்குறளின் சமூகப் பின்புலம் பற்றியோ அதன் மெய்யியல் பின்புலம் பற்றியோ கவலைப்படாத நிலையில் அதுபற்றிய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்துள்ளதாலுமே திருக்குறளை முற்றாக அறியவும், அதன் கோட்பாடுகளை வகைப்படுத்தவும் முடியாத ஒருநிலை ஏற்பட்டுள்ளது.

தொல்காப்பியத்தில் காணப்படும் மெய்யியல் கூறுகள் யாவும் திருக்குறளிலும் அப்படியே அமைந்துள்ளன. தொல்காப்பியம் இலக்கண நூலாதலால், அதில் செய்திகள் சுருக்கமாகச் சொல்லப் பட்டுள்ளன. ஆனால் திருக்குறளோ செய்திகளை விளக்கமாகவும் செறிவாகவும் தொகுத்தும் வகுத்தும் விளக்கியுள்ளது. மேலும் திருக்குறள் வழங்கும் செய்திகள் அனைத்தும் பொருள்முதல் கோட்பாடுகளுக்கு உரியனவாகவே உள்ளன.

கண்ணோட்டம்

மனிதநலக் கோட்பாட்டின்பாற்பட்ட இக்கண்ணோட்டம், தோற்றத்திலேயே கடவுள் மறுப்பையும் வேத மறுப்பையும் அடிப் படையாகக் கொண்டுள்ளது என்பது தமிழ்—சொல்லும் பொருளும் என்ற பகுதியிலும் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் கிரேக்க நாட்டுப் பொருள்முதலாளர்களான அனாக்சி மிண்டார், தேல்சு, டெமாக்கரிட்டசு என்னும் அறிஞர்களும் 'கண்ணோட்டம்' பற்றிய கோட்பாட்டைக் கடவுள் கோட்பாட்டிற்கு எதிரான ஒன்றாகவே வளர்த்துள்ளனர்.[79] வள்ளுவரும் கண்ணோட்டம் பற்றிய கருத்துக்களை முப்பாலிலும் விரவி அமைத்து இதன் பரந்துபட்ட சிறப்புக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

---

79. Encyclopaedia Britanica on Humanism, Vol. V., p. 199.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்ணோட்டம் பற்றிய பல்வேறு கூறுகளையும் இல்லற வியலில் ஈகை, ஒப்புரவு என்னும் அதிகாரங்களிலும், துறவற வியலில் இன்னாசெய்யாமை, அருளுடைமை என்னும் அதிகாரங் களிலும் விளக்கும் வள்ளுவர், வாய்மை என்ற அதிகாரம் முழுமை யும் கண்ணோட்டத்தின் செயல் விளக்கமாகவே அமைத்துள்ளார். மனிதன் அறிவு பெற்றவனாகத் திகழ்வது பிறர் துன்பம் பொறாது அதனைப் போக்குவதற்காகத்தான் என்பதனை,

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை[80]

என்று விளக்குவார் வள்ளுவர்.

வள்ளுவரின் 'வாய்மை' வைதிக மரபான 'சத்தியமே வெல் லும்' என்பதற்கு மறுப்பாக அமைந்துள்ளது என்பதுடன், பொய்ம்மையும் மனிதநலங் கருதிச் சொல்லப்படுமாயின் அதுவும் வாய்மையின் பாற்பட்டதே என வற்புறுத்தும் வகையில் அமைந் துள்ளது.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்[81]

என்பது குறள்.

'இந்தியச் சிந்தனையில் கண்ணோட்டம்' என்பதுபற்றி ஆராய்ந்த சக்கரவர்த்தி நயினார், விசுவாமித்திர முனிவரைச் சிறந்த மனிதநலக் கோட்பாட்டாளராக விளக்குவார். ஆனால் வைதிக மரபுக் கதைகள் விசுவாமித்திரர் அரிச்சந்திரனைப் பொய் யனாக்கிவிடப் பெரிதும் முயன்றவராகவும் 'சத்தியத்தை'க் காப் பாற்ற முனைந்த அரிச்சந்திரனுக்குப் பலவித இடுக்கண்களையும் கொடுத்தவராகவும் புனைந்துள்ளமை கருதத்தகும். அரிச்சந்திரன் கதையே ஓர் எதிர்மறையான வாழ்க்கை விளக்கம்.

எனவே 'சத்தியமே வெல்லும்' என்னும் வைதிக மரபைவிட, பொய்ம்மையும் வாய்மையிடத்த என்ற தமிழ் மரபில் பொதிந் துள்ள மக்கள் நலம் கருதத்தக்கது. திருக்குறளில் இத்தகைய பெருமையினை,

திருவள்ளுவரின் குறள் இந்திய இலக்கியங்களில் மட்டு மன்றி உலக இலக்கியங்களிலேயும் சிறந்தது எனக் கருதப்

80. குறள். 315.
81. குறள். 291.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> படுகிறது. இந்தக் கருத்து முற்றிலும் பொருத்தமானதே ஆகும். ஏனெனில் குறளின் கலையழகு ஈடிணையற்றது! அதைவிட முக்கியமானது அந்நூலில் ஒளிரும் சிறப்புமிகு மனித இனத்தின் நலத்தை நாடும் கருத்துகளாகும். அவை எல்லா நாட்டுக்கும் எல்லா மக்களுக்கும் பயன்படத் தக்க விலைமதிப்பிடற்கரிய கருவூலமாக உள்ளன[82]

என்ற அலெக்சாண்டர் பியாதி கோசுகியின் கருத்தை மேற்கோள் காட்டுவார் திருநாவுக்கரசு.

ஈகை, ஒப்புரவு

மனிதநலக் கோட்பாட்டாளர்கள் எந்நாட்டவராக, எம் மொழியினராக இருந்தாலும் மக்கள் சமூகத்தில் வறுமை கூடாது என்பதே அவர்களின் அடிப்படை நோக்கம் ஆகும். வறுமை என்பது மாந்தர் இனமெனும் செழும்பயிரை அரித்துவிடும் தொத்து நோய் ஆகும். அதன் கொடுமையை விளக்கும் வள்ளுவர்,

> இன்மையி னின்னாத தியாதெனி னின் மையி
> னின்மையே யின்னா தது[83]

என்பார்.

இத்தகைய கொடிய துன்பத்திலிருந்து மனித இனத்தைக் காப் பாற்றும் கருவிகளாகவே ஈகை, ஒப்புரவறிதல் என்னும் அதிகாரங் களை வள்ளுவர் அமைக்கின்றார். செல்வர்களிடம் இருக்க வேண்டிய தலைமைப் பண்பாக ஈகையையே வற்புறுத்துவார். இன்பங்களுள் இன்பமாக வள்ளுவரால் சிறப்பிக்கப்படுவது 'ஈத்துவக்கும் இன்பமே' ஆகும். அந்த ஈகையும் வறுமைத் துன்பத் துள் வாழும் ஏழை எளிய மக்களுக்காகச் செய்யவேண்டிய ஒன்று. செல்வம் இருப்பதன் காரணமாகவே பொருள் வழங்கப் படுமாயின் அது வேறு ஏதோ ஒன்றைக் கைம்மாறாகக் கருதி வழங் கப்பட்டதாகத்தான் இருக்க முடியும். இதனை,

> வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
> குறியெதிர்ப்பை நீர துடைத்து[84]

---

82. க. த. திருநாவுக்கரசு, சான்றோர் கண்ட திருக்குறள், மேற்கோள், ப. 230.
83. குறள். 1041.
84. குறள். 221.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என வற்புறுத்துவார். இங்கே குறி எதிர்ப்பு என்ற சொல், உணர்த்தும் பொருள் வீடு கருதி வழங்கப்படும் தானமே தவிர, கைம்மாற்றாக அதாவது திரும்பப் பெறும் நோக்கத்தோடு கொடுக்கப்பட்டது என்பது அன்று. ஏனெனில் கைம்மாற்று, கடனாகுமே அன்றி ஈகையாகாது.

வீட்டுலகம் கருதி வழங்கப்படுவது வைதிக மரபுப்படி தானமாகும். இவ்வாறு பயன்கருதி வழங்கும் பொருளை—தானத்தைப் பெறுவதும் தீதாகும். ஏனெனில் அது தன்னலத்தை வளர்ப்பது. எனவே மேலுலகம் இல்லையென்றாலும் வறுமையைப் போக்க முனையும் முனைப்பில் வழங்கப்படும் ஈகையே உயர்ந்தது; சிறந்தது என்பதனை,

> நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
> இல்எனினும் ஈதலே நன்று[85]

என்ற குறளில் விளக்குவார். இக்குறளில் உள்ள சமூகப் புரட்சி நோக்கத்தக்கது. தமிழ் மரபான ஈகைக்கும் வைதிக மரபான தானத்திற்கும் இடையே உள்ள முரண்பாடுகளை மேற்காட்டிய குறள்கள் விளக்குகின்றன.

பெருஞ்சித்திரனார்

பெருஞ்சித்திரனார் தம் குடும்பத்தின் வறுமையை—வயதான தாய் வீட்டை விட்டு வெளியே வரமுடியாத முதுமை நிலையில் பசியால் வாடி மெலியவும், மனைவியோ பாலின்றி அழும் குழந்தையின் கவனத்தைத் திருப்பும் முயற்சியில் ஈடுபடவும், குப்பையில் முளைத்த வேளைக்கீரையை உப்பில்லாமல் சமைத்து உண்ணவுமான—வறுமை நிலையை எல்லாம் குமணன்பால் எடுத்துக் கூறிப் பெரும்பொருள் பெற்று வருகின்றார். வந்தவர் தம் துணைவியைப் பார்த்து 'இப்பெரும் பொருளைக் கொண்டு நெடுங்காலம் வாழலாம் எனக் கருதிவிடாது எல்லோருக்கும் கொடுப்பாயாக' என்று வற்புறுத்துகின்றார்.[86]

ஈகையும்—தானமும்

சமூக ஒப்புரவின் அடிப்படையில் வற்புறுத்தப்படும் 'ஈகை' வைதிக மரபில் தன் பரந்துபட்ட பொருளை இழந்து 'தானம்' என்றாகிறது. அத் தானமும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே கொடுக்கப்

85. குறள் 222.

86. புறம். 163.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படவேண்டும். அப்பொழுதுதான் அது தர்மமாகிறது. 'தான தருமம்' என்ற சொற்றொடரின் கருத்தும் அதுவே. வடமொழி தருமசாத்திரங்கள் அனைத்தும் இதனையே வற்புறுத்துகின்றன. மனுவும் யக்ஞவல்கியாரும் ''கற்ற பார்ப்பனர்கள் அரசனுக்குக் கருவூலம் போன்றவர்கள்'' என்பர்.[87]

'அரசர்கள்தாம் மக்களின் காவலர்கள். இருந்தாலும் அரசனுடைய நலம் யாவும் பார்ப்பனர்களால் பாதுகாக்கப்பட்டன. ஆன்மீக பலம்தான் அரசர்களின் தற்காலிக பலத்திற்கு மூலநாடி. எனவே, பார்ப்பனர்கள் கோபத்திற்கு உள்ளாவது அழிவை வலியத் தேடுவதைப்போல ஆகும்.'[88] ஆதலால் ஆன்மீக வலிமை வாய்ந்தவர்கள் எனச் சாற்றிக்கொண்ட வேதம் கற்ற பார்ப்பனர்களைப் பாதுகாப்பதும் அவர்கள் மகிழுமாறு பசு, பொன் முதலான தானங்களை வழங்க வேண்டியதும் தவிர்க்கக்கூடாத அரச கடமையாயிற்று. இக்காலகட்டத்தில் தோன்றிய அய்ங்குறுநூறும் 'பார்ப்பார் ஓதுக' என வற்புறுத்தும். அரசர்களின் ஆட்சியில் பார்ப்பனர்கள் எவ்வாறு பாதுகாக்கப்பட்டனர் என்பதைச் சீவரமங்கலச் செப்பேடு தெளிவாகக் காட்டுகிறது.

> பிராமணர்களுக்குத் தானஞ் செய்ததைக் காப்பதைக் காட்டிலும் புண்ணியத்திற்குக் காரணமானது வேறெதுவும் இப்பூமியில் இல்லை. அதை அபகரிப்பதைக் காட்டிலும் பாவத்திற்குக் காரணமானது வேறெதுவும் இப்பூவுலகில் இல்லை.
>
> விஷமென்று சொல்லப்படுவது விஷமல்ல; பிராமணன் சொத்துதான் விஷம். விஷம் ஒருவனை மட்டும் கொல்லும். பிராமணன் சொத்து அபகரிப்பவன் புத்திர பௌத்திரர்களை அழிக்கும்.
>
> பிராமணன் சொத்தைக் காப்பதைக் காட்டிலும் புண்ணியத்திற்குக் காரணம் வேறு இல்லை. அதை அபகரிப்பதைக் காட்டிலும் பாவத்திற்குக் காரணம் வேறு இல்லை.[89]

சிலப்பதிகாரத்தில் பராசரன் என்ற பார்ப்பனன் தான் சேர நாட்டில் பெற்ற தானத்தை, பாண்டிய நாட்டில் உள்ள திருத்தங்

87. சுவாமி சிவானந்த சரசுவதி, மத விசாரணை, ப. 55.
88. Charles Drekonier, Kingship in Early India, p. 231.
89. பாண்டியர் செப்பேடுகள் பத்து, சீவரமங்கலச் செப்பேடு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலில் நன்கு வேதம் ஓதிய ஒரு சிறுவனுக்கு அளித்ததும், பாண்டிய நாட்டுக் காவலர்கள் செல்வத்தின் வரவுக்கான காரணம் அறியாமல் பார்ப்பனச் சிறுவனின் தந்தையைச் சிறைபிடித்ததும் அதன் காரணமாக மதுரையில் கொற்றவை கோயிலின் கதவுகள் மூடிக் கொண்டதாகப் புனையப்படும் நிகழ்ச்சிகளையும் இந்தப் பின்புலத்தில்தான் காணவேண்டும்.[90] அவ்வாறு கண்டால்தான் வள்ளுவர் வறியார்க்கு ஈவதை மட்டுமே ஈகை என்று விளக்குவதன் காரணமும் 'குறி எதிர்ப்பை நீரதுடைத்து' என்பதன் பொருள் விளக்கமும் தெளிவு பெறும்.

எனவே ஈகையும், ஒப்புரவறிதலும் மனிதநலக் கோட்பாட்டின் பாற்பட்ட அறம் என்பது தெளிவாகின்றது.

ஒழுக்கமுடைமை

மனிதநலக் கோட்பாடு மட்டுமே ஒரு சமூகத்தின் அமைதிக்கும் கட்டுக்கோப்பிற்கும் காரணமாகிவிடாது. சமூகக் கட்டுக்கோப்பு—திட்டமிட்ட வரையறைகளால்—சட்ட திட்டங்களால் பேணிக்காக்கப்பட வேண்டியதாகும். அச்சட்டதிட்டங்களை வகுப்பதும், செயல்படுத்துவதும் காலத்திற்குக் காலம் மாறுபடலாம். ஆனால் அரசின் சட்டதிட்டங்களை ஏற்றுச் செயல்படக்கூடிய ஒரு சமூக அமைப்பு உருவாக்கப்படவில்லை என்றால் சட்டதிட்டங்களால் பயனில்லை. எனவேதான் சமூக அமைப்பையே 'தனிமனித ஒழுக்கம்' என்னும் அடிப்படையில் வற்புறுத்துவர் அறவோர். ஒரு நாட்டின் சிறப்பை அதன் வளத்தாலோ அல்லது வேறு சிறப்புகளாலோ விளக்காமல்,

> **எவ்வழி நல்லவர் ஆடவர்**
> **அவ்வழி நல்லை வாழிய நிலனே[91]**

என்று ஆடவரிடன் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு விளக்குவார் அவ்வையார்.

வள்ளுவரும் 'ஒழுக்கமுடைமை' என்ற அதிகாரத்தில் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் போற்றி வற்புறுத்துவார். ஒழுக்கத்தின் உயர்வை உடன்பாடாகவும், ஒழுக்கமின்மையின் இழிவை எதிர்மறையாகவும் விளக்கிச் செல்வார். கடவுள் மறுப்பாளராக—உயரிய மனிதநலக் கோட்பாட்டாளராக விளங்கிய பெரியார் ஈ. வெ. ரா.வும் 'பக்தியைத் தனிச் சொத்தாகவும், ஒழுக்கத்தைப் பொதுச் சொத்தாகவும் உருவகித்து, பக்தி போனால் நட்ட

90. சிலம்பு. கட்டுரைக்காதை, 85—125.

91. புறம். 187 : 2—4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மில்லை; ஆனால் ஒழுக்கமில்லை என்றால் எல்லாமே பாழ்' என விளக்குவார்.[92]

இத் தனிமனித ஒழுக்கமும்கூட கடவுட் கோட்பாட்டிற்குப் புறம்பான ஒன்றாகும். எவ்வளவு ஒழுக்கக்கேடனாயினும் கடவுளின் அருள்பெற்றுவிட்டால் மேலுலகம் கிட்டும் என்பதே கடவுள் நம்பிக்கையின் அடிப்படை. தந்தையைக் கொன்று தாயையும் உடன்பிறந்தாளையும் பெண்டாடியதுடன் பஞ்சமா பாதகங் களைச் செய்த ஒருவனுக்குச் சிவன் 'அருள்பாலித்ததை'த் திருவிளையாடற்புராணத்தில் காணலாம்.[93] எவ்வளவு கொடுமை கள் (பாவங்கள்) செய்தாலும் இந்திரனை நினைக்க எல்லாம் மறைந்துவிடும் என்பதை வற்புறுத்தி திவோதாசனின் மகன் பிரதர்த்தனன் என்பானுக்கு இந்திரன் கூறியதாவது:

> என்னை நீ அறிந்துகொள். என்னை ஒருவன் அறிந்தால் அதனால் அவனுக்கு நன்மை உண்டாகும். துவஷ்டாவின் மகனை—திரிசிர்ஷனை நான் கொன்றேன். அருர்மகர் என்ற துறவிகளை நான் நாய்களைக் கொண்டு தின்ன வைத்தேன். பல உடன்பாடுகளை மீறி, நான் தெய்வ உலகில் பிரகலாதனைப் பின்பற்றியவர்களையும், அந்த ரிட்சத்தில் பௌலோமர்களையும், மண்ணுலகில் காலகாசி களையும் கொன்றேன். அப்பொழுது என் உடலில் ஓர் உரோமங்கூட அசையவில்லை. இத்தகைய என்னை ஒருவன் அறிந்துகொண்டால் அவன் தாயைக் கொல்வது, தந்தையைக் கொல்வது, திருடுவது, கருவைச் சிதைப்பது முதலிய பல பாவங்களைச் செய்திருந்தாலும் சரி, செய்து கொண்டிருந்தாலும் சரி சிறிதும் தயக்கம் கொள்ளமாட் டான். அவன் முகத்தின் ஒளியும் மாறாது.[94]

இவ்வாறு தாயைக் கொல்வது, தந்தையைக் கொல்வது போன்ற கொடிய செயல்களைவிடக் கொடுமையான செயல்களைச் செய்யு மாறு தூண்டிய பல பாடல்கள் 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவ நெறிவளர' வந்த திருஞானசம்பந்தன் பாடிய தேவாரத் திலும் இடம் பெற்றுள்ளன.[95]

---

92. பெரியார் பொன்மொழிகள், ப. 15.
93. திருவிளையாடற்புராணம், மாபாதகந் தீர்த்த படலம்.
94. தர்மானந்த கோசாம்பி, பகவான் புத்தர், பக். 12—13.
95. சம்பந்தர் தேவாரம், ஆலவாய்ப் பதிகம், பா. 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் வள்ளுவர் பார்ப்பனர்களை முன்னிலைப்படுத்தியே, 'பார்ப்பனர்களே வேதத்தை நீங்கள் மறந்தாலும் மீண்டும் அதனை நினைவுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் உங்களை மேல்வருணத்தராகக் கருதிக்கொள்கின்றீர்களே அந்த மேல்வருணப் பிறப்பின் பெருமை உங்களின் ஒழுக்கம் குன்றக் கெட்டுவிடும்' என்றே எச்சரிக்கின்றார். அக்குறள்,

மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்[96]

என்பதாகும். 'ஒழுக்கமுடைமை' என்ற அதிகாரத்தில் இக்குறள் இடம் பெற்றுள்ளது கவனிக்கத்தக்கது. இக்குறளுக்கு எடுத்துக்காட்டாக மணிமேகலையில் ஆபுத்திரன் தன்னை இகழ்ந்த நான்மறையாளர்களை நோக்கிக் கூறியதைக் காட்டலாம்.

மனித வாழ்வில் உயிரினும் மேலானதாகக் கருதப்பட்ட ஒழுக்கத்தை வற்புறுத்திய சான்றோர் அனைவரும் பார்ப்பனர்களையும், அவர்களின் வாழ்க்கை நெறியாக விளங்கும் வேதங்களையும் மிகவும் கடுமையாகக் கண்டித்துள்ளனர். தருமகீர்த்தி என்ற பௌத்த அறிஞர்,

> (1) வேதங்களை பிரமாணங்களாக (அத்தாட்சிகளாக) ஒப்புக்கொள்ளுதல், (2) ஒருவரை (கடவுளை)ச் சர்வ வல்லமையுள்ளவரென்று கூறுதல், (3) கங்கை போன்ற நதிகளில் மூழ்கி தர்மத்தை எதிர்பார்த்தல், (4) உயர்ந்த—தாழ்ந்த ஜாதிகளென்று சொல்லுதல், (5) செய்த பாவத்தைக் கழுவ உண்ணாவிரதம் போன்றவை செய்தல்—இவ்வைந்தும் முட்டாள்களின் அறிவீனத்தின் சின்னங்களாகும்[97]

என்று கூறுவதும் ஒப்புநோக்கத்தக்கது. இது போன்ற பல பகுதிகள் முன்னும் காட்டப்பட்டுள்ளன. எனவே திருக்குறளில் வற்புறுத்தப்படும் தனிமனித ஒழுக்கம் வைதிக நெறிக்கு மாறானது என்பது தெளிவாகிறது.

---

96. குறள். 134.

97. ராகுல சாங்கிருத்தியாயன், விஞ்ஞான லோகாயத வாதம், மேற்கொள். ப. 35.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துறவு—விரதமும் ஞானமும்

இந்திய மெய்யியல் பிரிவுகள் அனைத்தும் துறவை வற்புறுத்துகின்றன. அதிலும் திராவிடச் சிந்தனையில் கிளைத்த அனைத்துப் பிரிவுகளும் துறவையும்—தவத்தையும் மிகுதியாக வற்புறுத்துகின்றன. வரலாற்றுக் காலத்திற்குரிய பார்சுவநாதர், மகாவீரர், மற்கலிகோசாலர், புத்தர், நன்கணியார் ஆகிய அனைவரும் கடுந்தவங்கள் இயற்றியவர்கள் என்பதை அவர்களைப் பற்றிய செய்திகள் உணர்த்துகின்றன.

தொல்காப்பியரும் தவ ஒழுக்கத்தால் பெருமை பெற்றவர் என்பதைப் 'பல்புகழ் நிறுத்த படிமையோனே' என்ற பனம்பாரனரின் கூற்று மெய்ப்பிக்கும். தொல்காப்பியத்துள்ளும் 'அறவோர்', 'தாபதர்' ஆகியோர் கடுந்தவங்களை மேற்கொண்டவர்களாகப் புனையப்பட்டுள்ளனர். இத்துறவிகள் 'கடவுள்கள்' என்று அழைக்கப்பட்டவர் என்பதும் அவர்கள் தங்கியிருந்த இடங்கள் 'கடவுட் பள்ளி'களாக வணங்கப்பட்டன என்பதும் மதுரைக்காஞ்சியில் வரும் செய்திகளாகும்.

தவமும் துறவும் 'கொல்லாமை' அறத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன என்பதே அவற்றின் சிறப்பியல்பாகும். மொகஞ்சதாரோ, ஆரப்பா புதைபொருள் ஆய்வில் கண்டெடுக்கப்பட்ட ஒரு யோகியின் முத்திரை இத்தகைய துறவோரின்—தவ யோகியின் சிற்பமே என்பர். இக் கொல்லாமை நெறி வைதிக வேள்விகளுக்கு எதிரானது என்பதும் குறிக்கத்தகும். இக் கொல்லாமையைச் சமண சமயத்தினர் 'அகிம்சை' என்று அழைப்பர். இவ் அகிம்சையின் நோக்கம்பற்றி விளக்கும் சக்கரவர்த்தி நயினார்,

> வேத நூல்களின் பல்வேறு வளர்ச்சி நிலைகளை நடுவு நிலைமையோடு ஆராய்ந்தால் இரு இணைத் தொலைவான கருத்து வளர்ச்சிகள் ஒன்றோடு ஒன்று முரணி அமைவதைக் காணலாம். ஒரு கருத்து வளர்ச்சி, அகிம்சைக் கொள்கையின் தத்துவங்களை வலியுறுத்துகிறது. மற்றொன்று வேள்விக் கடன்களை வலியுறுத்துகிறது. அகிம்சைக் கொள்கை அடுத்தடுத்து சத்திரியர்களால் அல்லது மன்னர்களால் சிறப்பாக எடுத்துப் பேசப் பெறுவதும், வேள்வி உள்ளிட்ட வேதச் சடங்குகள், பிராமணப் புரோகிதர்களால் ஆதரிக்கப் பெறுவதும் வியப்பூட்டுவனவாகும். புராணக் கதையில் காணப்பெறும் விஸ்வாமித்திர—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> வசிஷ்டர் போராட்டம் மன்னர்கட்கும் புரோகிதர்கட்கும் இடையே அமைந்த போராட்டத்தைக் குறிப்பதாகும்.[98]

என்று விளக்குவார்.

சிந்துவெளி நாகரிகம் அழிவெய்தி ஆரியர்களின் செல்வாக்கு வேகமாகப் பரவத் தொடங்கிய நிலையில் உயிர்க் கொலையை அடிப்படையாகக் கொண்ட வேத வேள்விகள் செல்வாக்குப் பெறத் தொடங்கிவிட்டன. ''ஆரியர்களுக்கும் தாசர்களுக்கும் நிகழ்ந்த போராட்டத்திலிருந்து பிறந்ததாகிய பலி கொடுக்கும் வேள்விப் பண்பாடு மட்டும் உறுதி பெற்று ஓங்கி வந்தது. புத்தருடைய காலத்துக்கு முன்பு இந்த ஹிம்சை மயமான வேள்விப் பண்பாடே பாரத நாட்டில் நிலவி இருந்தது''.[99]

இச்சூழ்நிலையில் உயிர்க் கொலையையும் அதற்குக் காரணமான வேத வேள்வியையும் வெளிப்படையாகக் கண்டித்த வள்ளுவர், 'கொல்லாமை'யின் அடிப்படையாக இருப்பதும், உயிர்களுக்குத் தீங்கு செய்யா நல்லியல்புகளை வற்புறுத்துவதும் ஆன 'இன்னா செய்யாமை' என்ற அதிகாரத்துடன் துறவறவியலைத் தொடங்குகின்றார். 'அந்தணர்' என்ற சொல்லின் முழுப் பொருளையும்,

> அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
> செந்தண்மை பூண்டொழுக லான்[100]

என்ற குறளில் விளக்கும் வள்ளுவர், மாசற்ற துறவிகளின் கொள்கையாக—அவர்கள் பின்பற்ற வேண்டிய வாழ்க்கை நெறியாக,

> சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
> செய்யாமை மாசற்றார் கோள்[101]

என்று எடுத்தோதுகின்றார்.

துறவறவியலைப் பரிமேலழகர் 'விரதம்' என்றும் 'ஞானம்' என்றும் பிரித்துள்ளார். இப்பிரிவு திருவள்ளுவரால் செய்யப்பட்டதா இல்லை பிற்காலத்தில் பிரிக்கப்பட்டதா என்பது ஆய்விற்குரியது. இருப்பினும் 'விரதம்' என்ற பிரிவில் துறவிகள் மேற்

---

98. சக்கரவர்த்தி நயினார், கீழைமேலை நாடுகளின் மெய்ப் பொருள் வரலாறு, ப. 219.
99. தர்மானந்த கோசாம்பி, பகவான் புத்தர், ப. 24.
100. குறள். 30.
101. குறள். 311.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்ளவேண்டிய நெறிமுறைகள் விரித்துச் சொல்லப்படுகின்றன. 'ஞானம்' என்ற பிரிவில் பெறவேண்டிய 'மெய்யறிவின்' தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன.

துறவறம் மக்கள் அனைவராலும் மதிக்கப்பட்ட காரணத்தாலும், சமயப் பிரிவுகள் அனைத்தும் துறவை வற்புறுத்திய காரணத்தாலும் போலித் துறவும் ஏற்பட்டுவிட்டது. இப்போலித் துறவிகளை அனைத்துச் சமயத்தவரும் கண்டிப்பதைப் போன்றே வள்ளுவரும் 'கூடா ஒழுக்கம்' என்ற அதிகாரத்தில் கண்டிப்பார்.

பார்சுவநாதரும் வள்ளுவரும்

பார்சுவநாதர் காலத்திலிருந்துதான் சமண சமயத்தின் வரலாற்றை முறையாகத் தொகுக்க முடிந்தது. பார்சுவநாதர் சமண சமயத்தின் அடிப்படைகளாக,

கொல்லாமை (அகிம்சை)
வாய்மை (சத்தியம்)
கள்ளாமை (ஆஷ்தேயம்)
அவாமறுத்தல் (அபரிகிரகம்)

ஆகிய நான்கையும் வற்புறுத்துவார். இந்த நான்கையும் 'சதுர்யாம தர்மா' என்பர்.[102] இந்த நான்கோடு 'பிரமச்சரியம்' என்பதையும் சேர்த்து 'பஞ்சவர்த்தரம்' என்ற அய்ம்பெரும் கோட்பாடுகளாக்கியவர் மகாவீரராவார்.

மகாவீரர் காட்டும் பிரமச்சரியம் அல்லது புலனடக்கம் என்பது, தவம் செய்வாரின் அடிப்படை இலக்கணமாகும். வள்ளுவர்,

அடல்வேண்டும் அய்ந்தன் புலத்தை; விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு[103]

என்பார்.

துறவறவியலை அருள் உடைமையில் தொடங்கி, புலால் மறுத்தல், தவம், கூடாஒழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னாசெய்யாமை, கொல்லாமை என்று விளக்கி வருகின்றார் வள்ளுவர். மேற்கண்ட பகுதிகள் அனைத்தும் துறவிகள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க முறைகளாக வலியுறுத்தப் பட்டுள்ளன.

102. க. த. திருநாவுக்கரசு, சான்றோர் கண்ட திருக்குறள், ப. 15.
103. குறள். 343.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவற்றுள் பார்சுவநாதரின் நான்கு தருமங்களுள் அவாமறுத்தல் தவிர்த்த மூன்றும் அடங்கியுள்ளன. அவாமறுத்தல் துறவிகள் பெறவேண்டிய 'ஞானங்களுள்' ஒன்றாக வள்ளுவரால் விளக்கப்பட்டுள்ளது.

வள்ளுவர் பார்சுவநாதரையோ அன்றி மகாவீரரையோ பின்பற்றியவராக இருந்திருந்தால் அவர்கள் கூறிய வழிகளுள் அதாவது சதுர்யாமதர்மாவைப் பின்பற்றியோ அல்லது பஞ்சவர்த்தரத்தைப் பின்பற்றியோ துறவறவியலை அமைத்திருக்க வேண்டும். மாறாக, எல்லா உயிர்க்கும் அன்பு காட்டுதற்குக் காரணமான 'அருளுடைமை' என்னும் உயரிய பண்பின் அடித்தளத்தில் தொடங்கி, அதன் மணிமுடியாகக் 'கொல்லாமையை' அமைக்கின்றார்.

ஞானம் என்னும் பகுதியுள் நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவா அறுத்தல் என்பனவற்றை வரிசைப்பட அமைக்கின்றார். வாழ்க்கை நிலையற்றது என்ற உண்மையை உணர்ந்தால் பற்றுகள் நீங்கித் துறவின்மேல் உள்ளம் பற்றுதல் கொள்ளும். அப்பற்று மெய்யுணர வாய்ப்பளிக்கும். மெய்ப்பொருளை உணர்ந்தோர், 'இன்பம் இடையறாது பெறவேண்டி அவா என்னும் துன்பத்தை விட்டொழிப்பர்' எனும் இக்கருத்துக்களையும் வள்ளுவர் படிநிலை வளர்ச்சி முறையாகக் காட்டியுள்ளார்.

இதனால் வள்ளுவர் காட்டும் 'துறவறவியல்' பார்சுவநாதரையோ மகாவீரரையோ பின்பற்றி அமைக்கப்படவில்லை என்பது தெளிவு.

சாங்கியம்—யோகம்

இந்தியச் சிந்தனையுள் மிகவும் தொன்மை வாய்ந்தனவாகக் கருதப்படுபவை சாங்கியம், யோகம் என்ற இரண்டுமாம். ஆரியர் வருகைக்கு முன்னர் இருந்தே இவை மிகுந்த செல்வாக்குடன் விளங்கி வந்துள்ளன. சமணமும் ஆசீவகமும்கூட சாங்கியத்தை அடியொற்றியவை என்பார் சிம்மர்.[104]

நீத்தார் பெருமை என்ற அதிகாரத்துள் வரும்,

> சுவைஒளி ஊறோசை நாற்றம்என் றைந்தின்
> வகைதெரிவான் கட்டே யுலகு[105]

---

104. Zimmer, Philosophies of India, p. 264.
105. குறள். 27.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற குறளுக்குப் பரிமேலழகர் சாங்கியத்தை அடியொற்றியே உரை கூறுகின்றார். அதுபோலவே 'மெய்யுணர்தல்' என்ற அதிகாரத்தில்,

> சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
> சார்தரா சார்தரும் நோய்[106]

என்ற குறளுக்கு 'யோக' நூலின் அடிப்படையில் உரை காணுகின்றார்.

> ஆகுபெயரால் சாரும் இடத்தையும் சார்வனவற்றையும் 'சார்பு' என்றார். ஈண்டு ஒழுக்கம் என்பது யோக நெறி ஒழுகுதலை. அஃது இமயம், நியமம், இருப்பு, உயிர் நிலை, மனஒழுக்கம், தாரணை, தியானம், சமாதி என எண்வகைப்படும். அவற்றின் பரப்பெல்லாம் ஈண்டு உரைப்பின் பெருகும்; யோக நூல்களுள் காண்க......

எனக் கூறும் பரிமேலழகர், தொடர்ந்து,

> ....சாரக் கடவனவாய் நின்ற துன்பங்களாவன: பிறப்பு அநாதியாய் வருதலின் உயிரான் அளவின்று ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த உடம்புகளான் அனுபவித்தனவும் பிறந்த உடம்பான் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தன. அவை விளக்கின் முன் இருள்போல் ஞானயோகங்களின் முன்னர்க் கெடுதலான் 'அழித்துச் சார்தரா' என்றார். இதனை ஆருகதர் 'உவர்ப்பு' என்ப பிறப்பிற்குக் காரணம் ஆகலான் நல்வினையும் 'நோய்' எனப்பட்டது[107]

எனக் கூறிச் செல்கின்றார்.

இப்பகுதியில் ஆருகதர் (சமணர்) கூற்றாகிய 'உவர்ப்பை'யும், ஆசீவகர்களின் வினைக் கோட்பாட்டையும் பரிமேலழகர் குறிப்பிடுவது நோக்கத்தகும். சாங்கியமும், யோகமும் சமண சமயத்திலும் ஆசீவகச் சமயத்திலும் பேரளவில் செல்வாக்குப் பெற்றுள்ளன என்று சிம்மர் குறிப்பிட்டுள்ளதை அரண் செய்யக்கூடிய வகையில் பரிமேலழகரின் உரை அமைந்திருக்கக் காணலாம்.

மேலும் இதில் கவனிக்க வேண்டிய ஒரு குறிப்பும் உள்ளது. அதாவது, ஆசீவகம் நல்வினைகள் எவ்வளவு செய்தாலும் ஊழ் வினை முடிந்தாலல்லது பிறப்பினை அறுக்க முடியாது என வற்

106. குறள். 359.

107. மே. குறள்., பரிமேலழகர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புறுத்தும். ஆனால் இக்குறளின் உரையில் பரிமேலழகர், 'அவை (வினைப்பயன்) விளக்கின் முன் இருள்போல் ஞான யோகங்களின் முன்னர்க் கெடுதலான்' என ஊழ்வினையின் ஆற்றல் ஞானயோகங்களால் அழிந்துபடும் என்கிறார்.

சாங்கியம் யோகம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இவை சிந்துவெளி நாகரிகத்திலேயே செல்வாக்குடன் விளங்கின எனக் குறித்துள்ளனர். கே. எம். பணிக்கர்,

> உடலின் நோன்பு ஒழுக்கங்களைப் பற்றிய யோகமுறை, ஆரியருக்கு முந்தியதோர் ஆன்மீகப் பயிற்சி, மொகஞ்ச தாரோவில் கிடைக்கப்பெற்ற மிகப் பெரும் கண்டுபிடிப்புகளில் ஒன்றாகிய யோகநிலையில் தவம் கிடப்பது போன்ற துறவிகளின் கற்படிமங்களும், அத்தகைய யோகக் கோட்பாடுகள் சிந்துவெளி நாகரிகத்திலேயே அரும்பியவை என்பதற்கான தெளிவான சான்றுகள்[108]

என்பார். இத்தகைய யோகிகளைத்தான் தன் நாய்களை விட்டு இந்திரன் கொல்லச் செய்துள்ளான்.

சாங்கியம், யோகம் இவை இரண்டும் பொருள்முதலியல் பிரிவைச் சார்ந்தவை. கடவுள், வேதமறுப்புகளை அடிப்படையாகக் கொண்டவை. அதிலும் குறிப்பாகச் சாங்கியம் கடவுள் மறுப்புச் சாங்கியம் (நிரீச்சுர சாங்கியம்) என்றே அழைக்கப்பட்டது. வேத வல்லுநரும் அத்வைத சித்தாந்தத்தின் தோற்றுநரும் ஆகிய ஆதிசங்கராச்சாரி தமது பிரம்மசூத்திர உரையில் மிகுதியும் கண்டிப்பது இச்சாங்கியத்தையே ஆகும்.

இவ்வாறு சாங்கியம் கடவுள் மறுப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் இதில் உள்ள இருமைக் கோட்பாட்டைப் புறக்கணித்துவிட முடியவில்லை.

> சாங்கிய மெய்யியல், இயற்கை (மூலப்பகுதி) உள்ளுயிர் (புருடன்) என்னும் இரு எதிர்மறைக் கூறுகளை அடியொற்றியது. அவற்றை வெவ்வேறு தனித்தனிக் கூறுகளாகக் கருதுவதால் அஃது இருமை இயலே ஆகும்[109]

என்பார் குணா.

---

108. குணா, தமிழர் மெய்யியல், மேற்கோள், ப. 110.

109. மே. நூ., ப. 101.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொல்காப்பியத்துள் உள்ள இருமைக் கூறுகள் முன்னர்க் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய இருமைப் பண்புகளே திருக்குறளிலும் அமைந்திருக்கின்றன.

மேலும் சாங்கியம், யோகம் இரண்டிலும் 'தந்திர'த்தின் தாக்கம் மிகுதியாக உள்ளது. சாங்கியத்தைத் தோற்றுவித்தவராகக் கருதப்படுபவர் கபிலர் என்பவராவார். சாங்கியத்தைக் குறிப்பிடும்போது கபிலரின் தந்திரம் என்றே குறித்துள்ளதும் தந்திரத்திற்கும் சாங்கியத்திற்கும் உள்ள தொடர்பினை வலியுறுத்தும்.

சாங்கியம், உலகாய்த மெய்யியலோடு கொண்டுள்ள தொடர்பினை, சீலங்கா, ஆதிசங்கராச்சாரி முதலானவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். சட்டோபாத்தியாயா,

> ....உலகாய்தம் என்ற சொல் அதன் நம்பிக்கையிலும் நடைமுறையிலும் பேரளவில் தந்திரத்தையே குறித்து நின்றது. அதைப் போலவே தொடக்கத்தில் சாங்கியமும் இந்தியச் சிந்தனையில் உலகாய்த மரபின் வளர்ச்சியாகவே அமைந்திருந்தது. சமணசமய உரையாசிரியராகிய சீலங்காவும் சாங்கியத்திற்கும் உலகாய்தத்திற்கும் அடிப்படையில் முரண்பாடுகள் இருப்பதாகக் கூறும் கருத்துக்களை ஒப்பவில்லை. சங்கரரும் சாங்கியர்கள் தங்களின் ஆதாரத்திற்கு உலகாய்தர்களின் கருத்துக்களையே அடிப்படையாகக் கொண்டனர் என்று கூறுகின்றார்.
>
> எனவே சாங்கியத்தின் தொடக்கம் மறுதலிக்க முடியாத நாத்திகத்தையும் பொருள்முதல் வாதத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது பெறப்படுகின்றது[110]

என விளக்குவார்.

பரிமேலழகர், சுவை ஒளி ஊறோசை என்ற குறளுக்குச் சாங்கியத்தின் அடிப்படையில் பொருள் கூறினாலும், குறளின் மற்றப் பகுதிகளில் சாங்கியத்தின் கூறுகளைப் பற்றி எங்கும் குறிக்கவில்லை.

வள்ளுவரின் அளவையியல்

துறவறவியலின் மணிமுடியாக விளங்கும் அதிகாரம் 'மெய்யுணர்தல்' ஆகும். துறவறத்தின்—தவ ஒழுக்கத்தின் நோக்கமே

110. D. Chattopadhyaya, Lokayata, pp. 362—363.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெய்ப்பொருளைக் காண்பதுதான். இம் மெய்ப்பொருளை அறிய இந்தியச் சிந்தனையாளர்கள் கையாண்ட வழிமுறைகள் பல. இதனைத் தமிழில் அளவைகள் (தருக்கமுறை) என்றும், வடமொழியில் நியாயம் என்றும் அழைப்பர். தமிழின் அளவையியல் சிறப்புகள் அய்ந்திரம் பற்றிய இயலிலும் விளக்கப்பட்டுள்ளன.

இவ் அளவை இயலை—அறிதலுக்குக் காரணமாகிய வழிகளை ஆறாகக் குறிப்பார் மீமாம்சையின் ஆசிரியராகிய சைமினி. எட்டாகக் குறிப்பர் போதாயானர். பத்தாகக் குறிப்பார் வேத வியாசர். இதனை மணிமேகலை,

> வேத வியாதனும் கிருத கோடியும்
> ஏதமில் சைமினீ எனுமிவ் வாசிரியர்
> பத்தும் எட்டும் ஆறும் பண்புறத்
> தத்தம் வகையால் தாமபகர்ந் திட்டனர்[111]

எனக் குறிக்கும்.

இப்பத்தில் குறிக்கத்தக்கவை,

காட்சி
அனுமானம்
உவமை
ஆகமம்
அவாய்நிலை (அருத்தாபத்தி)
இயல்பு (சுபாவம்)

ஆகிய ஆறு ஆகும். இவற்றுள் உலகாய்தர் காட்சி அளவையை முதன்மையாகவும் பகுத்தறிவுக்கு முரணற்ற உய்த்துணர்வைத் தேவைக்கேற்பவும் தங்களின் அளவைகளாகக் கொண்டனர். உலகாய்தத்தை மறுத்த சமணர்களும் பௌத்தர்களும் உய்த்துணர்வைத் தங்கள் அளவையாகக் கொண்டதுடன் உலகாய்தர்களுக்குக் காட்சி அளவை ஒன்றையே குறிப்பர். இது உண்மைக்கு மாறான ஒன்றாகும்.

'பண்டை உலகாய்தர்கள் காட்சிப் பிரமாணம் ஒன்றைத்தான் அறிவு பெறும் வழி என்று கருதினார்களா? அனுமானத்தை அறவே ஒதுக்கிவிட்டார்களா? ....பூதவாதிகளின் தத்துவத்தில் முடிவுகளுக்கு வர அவர்கள் காட்சி, அனுமானம் என்ற இரண்டு அறிதல்

111. மணி. 27: 5—8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முறைகளையும் பயன்படுத்தினார்கள் என்று தெளிவாகத் தெரிகிறது' என்று விளக்குவார் வானமாமலை. மேலும்,

> உலகாயதர்கள் அனுமானத்தை இருவகையாகப் பிரிக்கிறார்கள். ஒன்று வருங்காலத்தைக் குறித்த அனுமானம். மற்றொன்று இறந்தகாலத்தைக் குறித்த அனுமானம். வருங்காலம் குறித்த அனுமானம் தவறானது. அனுமானம் என்ற அறிதல் முறையின் எல்லைக்கு அப்பாற்பட்டது. இறந்தகாலம் குறித்த அனுமானம் அறிதல் எல்லைக்குட்பட்டது. எனவே முதலாவது முறை தவறானது. இரண்டாவது முறை சரியானது[112]

என்ற தட்சிண் நாராயண் சாத்திரியின் கருத்தை மேற்கோளாகவும் காட்டி உலகாய்தர்களின் அறிதல் முறையில் அதாவது அளவையியலில் உய்த்துணர்வின் பங்கினை விளக்குவார்.

மெய்யுணர்தல்

காட்சியில் ஏற்படும் அய்யத்தை நீக்கித் தெளிவடைதலே காட்சி அளவையின் அடிப்படை ஆகும். ஒரு பொருளைத் தொலைவிலிருந்து பார்க்கும்போது அது வேறொன்றாகத் தோன்றுவதும் இயற்கை. காணப்படுவது குற்றியோ மகனோ என்ற வழி குற்றியல்ல மகனே எனத் தெளிவதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

மெய்ப்பொருளைத் தேடும்போதும் பலவகையான அய்யங்கள்—தடுமாற்றங்கள் தோன்ற வாய்ப்புண்டு. எனவே தோன்றுகின்ற அய்யங்களிலிருந்து விடுபட்டு மெய்யான உண்மைப் பொருளைக் காண்பதே வள்ளுவரால் 'மெய்யுணர்தல்' என அழைக்கப்படுகின்றது.

> இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
> மாசறு காட்சி யவர்க்கு
>
> ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
> வான நணிய துடைத்து
>
> எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு
>
> கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
> மற்றீண்டு வாரா நெறி

112. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், மேற்கோள், ப. 226.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு[113]

என்னும் குறள்களில் காட்சி அளவால் பெறப்படும் அறிவை—மெய்ப்பொருளை வள்ளுவர் விளக்கக் காணலாம்.

காமத்துப்பால்

காட்சி, அய்யம், தெளிதல் என்ற அறிதலின் படிமுறை வளர்ச்சியைக் காமத்துப்பாலின் தொடக்கமாக,

அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு

என்ற குறள் வழி விளக்குகின்றார். இன்ப நுகர்ச்சியை வற்புறுத்தியவர்கள் உலகாய்தர்கள் என்பதும், அவர்களின் அளவை முறை காட்சி, அய்யம், தெளிதல் என்பது நோக்க, இக்குறளின் அமைப்பு முறையின் சிறப்பை உணர முடிகின்றது.

அகத்திணையில் தோன்றும் அய்யத்தை நீக்கித் தெளிவுபடுத்தும் கருவிகளாகத் தொல்காப்பியர்,

வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்
றன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையுங் கருவி யென்ப[114]

என்று வகைப்படுத்துவதும் அளவை இயல்பற்றி அறிந்துகொள்ளத் தக்க சான்றாகும்.

திருக்குறளில் உலகாய்தத்தின் பகுத்தறிவுக் கோட்பாடு முழுமையான அளவில் இடம் பெறவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. இருப்பினும் சாங்கியம், ஆசீவகம் என்னும் இருமைக் கோட்பாடுகளின் மூலக்கூறுகள் தொல்காப்பியத்தைப் போலவே திருக்குறளில் இடம் பெற்றுள்ள நிலையிலும், அதில் உலகாய்தத்தின் தாக்கம் நிறைந்துள்ள தன்மையினை மேற்காட்டிய குறள்கள் மெய்ப்பிக்கின்றன. திருக்குறள் வற்புறுத்தும் 'இறைமாட்சி', 'செங்கோன்மை' என்னும் அதிகாரங்கள் முற்றிலும் உலகாய்தத்தின் பாற்பட்டவை. திருக்குறளில் பொதிந்துள்ள உலகாய்தக் கோட்பாடுகள் பற்றிய செய்திகளைத் தொகுத்தளிக்கும் வகையில் தனி ஆய்வு மேற்கொள்ளல் இன்றியமையாத ஒன்றாகும்.

---

113. குறள். மெய்யுணர்தல்.

114. தொல். களவியல் 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருக்குறளும் ஊழியலும்

திருக்குறள் ஆய்வில் விடுவிக்க வேண்டிய பல புதிர்களுள் ஊழியலும் அடங்கும். அறத்துப்பாலை இல்லறவியல், துறவற வியல் எனப் பகுத்த வள்ளுவர் அதன் மூன்றாவது கூறாக 'ஊழியல்' என ஒன்றையும் அமைத்துள்ளார். இவ்வாறு அமைக் கப்பட்டுள்ள இவ்வியலில் ஓர் அதிகாரம் மட்டுமே இடம் பெற்றுள் ளது. இவ்வியலின் அமைப்பைக் குறித்துப் பரிமேலகழர், ''இவ்வாற் றான் இம்மை மறுமை வீடு என்னும் மூன்றனையும் பயத்தற் சிறப் புடைத்தாய அறம் கூறினார்; இனிப் பொருளும் இன்பமும் கூறு வார் அவற்றின் முதற் காரணமாகிய ஊழின்வலி கூறுகின்றார்''[115] என்பார். பரிமேலழகர் கருத்துப்படி ஊழியல் பொருட்பாலுக்கும், காமத்துப்பாலுக்கும் முன்னுரையாக வைக்கப்பட்டது என்பதா கிறது. அப்படியாயின் இல்லறத்தானுக்கும், துறவிக்கும் ஊழ் தேவையில்லையோ என்ற அய்யம் தோன்றுகிறது.

ஆனால் வள்ளுவர் இவ்வியலை மூன்று பால்களுக்கும் பொருந் தும் வண்ணம் 'மத்திம தீபமாக' வைத்துள்ளாரா? அல்லது தன் கோட்பாட்டை நிலைநாட்டப் பிறர்மதம் கூறலாக அமைத்துள் ளாரா? என்பது ஆய்விற்கு உரியது.

ஊழியல் அதிகாரத்தில் சொல்லப்படும் செய்திகளைப் பின் வருமாறு வகைப்படுத்தலாம்.

ஆகூழ்: செல்வப் பெருக்கிற்கும் ஆக்கத்திற்கும் காரணமாவது, அறிவு வளர்ச்சிக்கும இது அடிப்படை.

போகூழ்: இழவூழ் என்றும் குறிக்கப்படும். சோம்பலுக்கும் பொருள் இழப்பிற்கும் காரணமாவது. அறிவையும் பேதமைப்படுத்தும். (குறள் 1—2)

அறிவு மிகுதிக்கு ஊழே காரணம். (3)

செல்வம் உடையராய் இருத்தல்—அறிவுடையோராய் இருத்தல் ஆகிய இருவேறு நிலைமைகட்கும் ஊழே அடிப்படை. (4)

நல்லனவெல்லாம் தீயனவாக யாறுவதற்கும், தீயன வெல்லாம் நல்லனவாக மாறுவதற்கும்—மாற்றுவதற் கும் உள்ள ஆற்றல் ஊழிற்கு உண்டு. (5)

---

115. குறள். ஊழ் அதிகாரம், பரிமேலழகர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> பொருள் ஒருவரிடம் நிலைத்துத் தங்குவதற்குக் காரணம் ஊழே. தமக்குரிய ஊழ் அல்லாதபோது பொருள்களை எவ்வளவுதான் போற்றிப் பாதுகாக்க முற்பட்டாலும் அது தங்காது. (6)

> கோடி கோடியாகப் பொருளைத் திரட்டினாலும் தங்களுக்கென்று ஊழ் வகுத்துள்ளது எதுவோ அதைத் தவிர வேறு எதையும் துய்த்துவிட முடியாது. (7)

எட்டாவது குறள் சற்றுச் சிக்கலானது. உரையாசிரியர்களான பரிமேலழகர், பரிப்பெருமாள் ஆகியோரின் உரையும் பொருள் விளக்கத்தோடு புரிந்துகொள்ளுமாறு அமையவில்லை.

> **துறப்பார்மன் துப்புரவு இல்லார்; உறற்பால**
> **ஊட்டா கழியும் எனின்**

ஊழினால் வரும் இன்பங்கள் தமக்குக் கிட்டாதபோது துய்ப்பதற்கு ஏதுமற்ற வறியவர்களும் துறவை மேற்கொள்வார்கள் என்பது குறளின் பொருள்.

மெய்ப்பொருளை நாடும் பேரறிவாளர்களின் துறவு சமூகப் பயன் கருதியது. உலக நோக்கம் கொண்டது. வரன்முறைகளும், தூய ஒழுக்கங்களும் நிறைந்தது. ஆனால் வறுமையாளர்களின் துறவு வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள உதவுவது. வயிற்றுப் பசியை அடிப்படையாகக் கொண்டது. எனவே மேற்காட்டிய குறள் சமூகச் சிக்கலை ஒட்டி அமைந்துள்ளது என்பது புலனாகிறது. ஆனால் பரிமேலழகர்,

> ஊழ்வினைகள் துன்பங்களைச் சேர்க்காமல் நீக்கினால் வறுமையால் அனுபவிக்கப்படும் பொருள் இல்லாதவர் துறவு கொள்வர்[116]

என உரை கூறுகின்றார்.

வறுமையால் வரும் துன்பம் கொடியது எனில் ஊழ்வினையினால் வரும் துன்பமும் கூட கொடியதாகத்தான் இருக்கமுடியும். ஊழ்வினையின் துன்பத்தைத் தாங்கிக்கொள்ள ஒருவனால் முடியுமாயின் வறுமையினால் வரும் துன்பத்தையும் அவனால் தாங்கிக் கொள்ள முடியும். எனவே, உறற்பால ஊட்டா கழியும்' என்பதற்கு ஆகூழால் தோன்றும் செல்வ நுகர்ச்சி இல்லாதபோது எனப் பொருள் கொள்வது குறளை அறியத் துணைபுரிகின்றது. 'துறவும்

116. குறள். ஊழ் 8, பரிமேலழகர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூட ஊழின் பயனே' எனக் கூறும் காலிங்கரின் கருத்து பொருத்த மாக உள்ளது. (8)

> நல்வினை இன்பங்களைக் கொடுக்கும்போது மகிழ்ச்சி யுடன் நுகர்பவர், தீவினை துன்பந் தரும்போது அதை எதிர்கொள்ளாமல் கலங்குவது ஏன்? (9) ஊழ் மிகுந்த வலிமையுடையது; அதை விலக்க நினைத்தாலும் முந்திக் கொண்டு வந்து நிற்கும். (10)

இப்பத்துக் குறள்களிலும் அமைந்த கருத்தைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

1. ஊழ் இரண்டு வகைப்படும். ஒன்று நன்மைக்குக் காரண மாவது; மற்றொன்று தீமைக்குக் காரணமாவது.
2. செல்வத்தின் செழிப்பிற்கு ஆகூழும் செல்வத்தின் தேய் விற்குப் போகூழும் காரணங்களாகின்றன.
3. கற்ற கல்வியும் ஒருவனுக்குத் தன் ஊழின் காரணமாகவே பயன் தரும்.
4. ஊழினால் வரும் நுகர்ச்சி இல்லையெனில் வறுமையால் மனிதர்கள் துறவை நாடலாம். (பஞ்சத்திற்கு ஆண்டி என்ற மக்கள் வழக்கும் ஒப்புநோக்கத்தக்கது)
5. ஊழ் மிகுந்த வலிமையுடையது.

மேற்காட்டிய வகையில் ஊழின் இயல்புகளைச் சொல்லிச் செல் கின்றார் வள்ளுவர்.

வள்ளுவரும்—கோசாலரும்

வள்ளுவரின் ஊழ் பற்றிய கருத்து, மற்கலிகோசாலர் ஊழ் (நியதி) பற்றிச் சொல்லும் கருத்திலிருந்து முற்றாக மாறுபட்டு நிற்பதை இரண்டையும் ஒப்பிட்டுக் காணும்போது உணர முடிகின்றது.

கோசாலரின் கருத்துப்படி ஊழ் அனைத்து ஆற்றலும் கொண் டது. பிறவிக்குக் காரணமாக இருப்பது. பிறவிகள் தோறும் எவ்வளவுதான் நன்மைகள் செய்தாலும் ஊழ்வினையின் துணை இல்லாதுபோனால் பிறவித்தளையை அறுக்க முடியாது. சுருங்கக் கூறினால், கணியன் பூங்குன்றனார் கூறுவதுபோல, உயிர் ஊழின் இயக்கத்திற்கு ஏற்பவே இயங்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்[117]

என்ற குறளிலும் கூட தீயவன் வளத்தோடு வாழ்வதும், நல்லவன் வறுமையோடு உழல்வதும் நினைக்கப்படும் என்றே சொல்லுகின்றார். இக்குறளில் ஊழ்வினையின் தாக்கம் இருப்பதைப் பரிமேலழகர்,

இம்மை செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்து

என்ற சிலப்பதிகார அடிகளை மேற்கோளாகக் காட்டி உணர வைக்கின்றார்.

வள்ளுவர் ஊழ்வினையைப் பற்றித் தனி ஓர் இயல் அமைத்துப் பத்துக் குறட்பாக்களாகத் தொகுத்துக் கூறினாலும் கூட மற்கலி கோசாலர் வரையறுத்த ஊழ்வினை பற்றிய கோட்பாட்டைப் பின்பற்றவில்லை என்பது தெளிவு.

வள்ளுவர் கோசாலருக்குப் பிற்பட்ட காலத்தவராக இருந்திருப்பின், ஊழியலுள் வரும் கருத்துக்கள் ஆசீவகத்தின் தாக்கத்தோடு அமைந்திருப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. கோப்பெருஞ்சோழன், கணியன் பூங்குன்றனார் இருவரும் கோசாலரின் நியதிக் கோட்பாட்டைப் பின்பற்றியதைப்போல வள்ளுவரும் பின்பற்றி இருக்கலாம். ஆனால் ஊழின் முழுவல்லமையை—அதாவது இன்ப—துன்பம், ஆக்கம்—இழப்பு, பிறப்பு—இறப்பு ஆகிய அனைத்திற்கும் காரணமாக அமைநத ஊழின் தலைமையை வள்ளுவர் குறிக்காததுடன் ஊழ்வினையின் ஆற்றலை மறுக்கும் கருத்துக்களையும் பல அதிகாரங்களுள் கூறியுள்ளார்.

கோசாலர் ஊழின் ஆற்றலை மக்கள் நடுவே பரப்பத் தொடங்கிப் பேரளவில் வெற்றியும கண்டவர். இந்நிலையில் மகாவீரரும், புத்தரும் 'இக்கோட்பாடு செல்வாக்குப் பெறுமானால் மனித வாழ்வில் முயற்சிக்கே இடமில்லாது போய்விடும்' என்று பெரிதும் கவலைப்பட்டனர்.[118]

வள்ளுவர் முயற்சி பற்றிக் கூறும் கருத்துக்களைத் தொகுக்கும் போது, அவர் வாழ்வின் வெற்றிக்குக் காரணமாக அமைவது மனித முயற்சிதான் என்ற கோட்பாட்டின்மீது கொண்டுள்ள நம்பிக்கையைப் புரிந்துகொள்ளலாம். 'ஊக்கமுடைமை' அதிகாரத்துள்,

117. குறள். 169.
118. Das Gupta, A History of Indian Philosophy, Vol. II.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை[119]

என்று அசைவிலா ஊக்கத்தை வலியுறுத்துவார். 'ஆள்வினை உடைமை' அதிகாரத்திலோ,

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்[120]

என்று இடைவிடா முயற்சியின் ஆற்றலை எடுத்துக் காட்டுவார்.

ஊக்கமுடைமை, ஆள்வினை உடைமை என்ற இரண்டு அதிகாரங்களிலும் முயற்சியின் வெற்றியை உடன்பாடாகச் சொல்லுவார். 'மடியின்மை', 'இடுக்கண் அழியாமை' என்ற அதிகாரங்களுள் எதிர்மறையாக மனித முயற்சியைப் போற்றுகின்றார். குடியியலிலும் 'குடிசெயல்வகை' என்ற அதிகாரத்துள்,

ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்
நீள்வினையால் நீளுங் குடி[121]

என்று முயற்சியையும் அதற்குத் துணையாகிய ஆன்ற அறிவையும் எடுத்துக் காட்டுவார். வள்ளுவரின் கருத்தில் 'முயற்சியின் இடத்தைக்' காணும்போது பொருட்பால் முழுமையுமே மனித முயற்சியின் அடித்தளத்தில்தான் கட்டப்பட்டுள்ளது என்பதை அறியலாம்.

இவ்வாறு பொருட்பால் முழுமையிலும் முயற்சியின் ஆற்றலை —அது நல்கும் பயனை விளக்குவதால், ஊழின் ஆற்றலைக் கோசாலரைப்போல வள்ளுவர் பெரிதாகக் கருதவில்லை என்பது தெளிவு.

துறவறவியலிலும் பல குறள்கள் ஊழ்வினைக்கு மாறாக அதாவது நியதிக் கோட்பாட்டிற்கு உடன்பாடில்லாத வகையில் அமைந்துள்ளன. 'அவா அறுத்தல்' என்ற அதிகாரத்துள்,

அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து[122]

என்ற குறள் பிறப்பிற்குக் காரணம் 'அவாவே' என வற்புறுத்துகின்றது. துறவு என்ற அதிகாரத்துள்ளும்,

119. குறள். 594.
120. குறள். 620.
121. குறள். 1022.
122. குறள். 361.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும்; மற்று
நிலையாமை காணப் படும்[123]

என்ற குறள்வழி பிறப்பினை அறுப்பது பற்றற்ற நிலைதான் என்பதை வற்புறுத்துவார்.

இவ்வாறு அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் பல அதிகாரங்களுள் ஊழின் ஆற்றலை வள்ளுவர் மறுப்பதுடன் ஊழ்வினையின் இலக்கணமாகச் சொல்லப்படும் அனைத்துக் கருத்துக்களுக்கும் எதிர்மறையான கருத்துக்களையே விளக்கிச் செல்கின்றார்.

எனவே ஊழ் பற்றிய கருத்துக்கள் திருக்குறளில் இடம் பெற்றிருந்தாலும் அவை நியதிக் கோட்பாட்டை ஒட்டி அமையவில்லை. ஆதலால் வள்ளுவர் காலத்தில் தமிழகத்தில் நிலவிய ஊழ் பற்றிய சிந்தனையின் வளர்ச்சியே 'ஆசீவகமாக' உருப்பெற்றிருக்க வேண்டும் என்பது தெளிவு.

சங்கம் மருவிய காலத்தில் ஆசீவகம்

பக்குடுக்கை நன்கணியார் காலத்திற்குப் பின்னர் ஆசீவகத்தின் நியதிக் கோட்பாடு தமிழகத்தில் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்தது. அனைத்திந்தியாவிலும் ஆசீவகத்தின் செல்வாக்கைப் பரப்புவதில் தமிழகம் முன்னணியில் இருந்தது என்பதைக் கணிநந்தவாசான்—நல்வெள்ளையார் பற்றிய செய்திகளும் உணர்த்துகின்றன.

கோவலன்—கண்ணகி மறைவிற்குப் பின்னர் மாதவி பௌத்த சமயத்திலும் கோவலன் தந்தை சமண சமயத்திலும் சேர, கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கன் ஆசீவகச் சமயத்தில் சேர்ந்து துறவு பூண்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணலம் பெருந்தவத்து ஆசீ வகர்முன்
புண்ணிய தானம் புரிந்துஅறங் கொள்ளவும்[124]

எனவரும் அடிகள் இதனை உணர்த்தும். மேற்கூறிய மூன்று சமயங்களுமே பார்ப்பன—வைதிக எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டவை என்பதும் குறிக்கத்தக்கது.

---

123. குறள். 521.

124. சிலம்பு. 27 : 98—99.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறந்த தவ ஒழுக்கம் வாய்ந்தவர்களாக, 'அண்ணலம் பெருந் தவத்து ஆசீவகர்கள்' எனக் குறிப்பிட்டுள்ளமை இவர்களது பெருமையையும், இம்மதத்தினது செல்வாக்கினையும் அறியத் துணைபுரிகின்றது.

ஆசீவகர்களின் கோட்பாட்டினை மிக விரிவாகச் சொல்வது மணிமேகலை ஆகும். 'சமயக் கணக்கர் தம்திறம் கேட்ட காதை' யில் ஆசீவகம் பற்றி 57 அடிகளில் விளக்குவார் சாத்தனார், அக் காதையுள் ஆசீவகம் பற்றியே மிகுதியான அடிகளில் கூறியுள்ளார்.

ஆசீவகத்தின் அணுக்கோட்பாட்டைக் கூறிப் பின்னர் ஊழ் வினைக் கோட்பாட்டை இறுதியாக விளக்குகின்றார்.

உயிர்கள் கரும்பிறப்பு, கருநீலப் பிறப்பு, பசும் பிறப்பு, செம்பிறப்பு, பொன் பிறப்பு என்று வரிசையாகப் பிறந்து முடிவில் வெண்பிறப்பில் வந்து நிறைவுபெறும் இயல்பின. வெண்பிறப் புள்ளும் 'கழிவெண் பிறப்பு' எய்திய பின்னரே வீடுபேறு நிகழும். இதனை,

கழிவெண் பிறப்பில் கலந்து வீடணைகுவர்[125]

என்பார். இவ்வாறு பிறப்புக்களைக் கூறியபின் ஆசிவகத்தின் அடிப்படைக் கோட்பாடாகிய ஊதியம்—இழப்பு, இன்பம்—துன்பம், பிறப்பு—இறப்பு ஆகிய ஆறு இயல்புகளையும் பின் வருமாறு விளக்குகின்றார்.

பெறுதலும் இழத்தலும் இடையூ றுறுதலும்
உறுமிடத்து எய்தலும் துக்கசுக முறுதலும்
பெரிதவை நீங்கலும் பிறத்தலுஞ் சாதலும்
கருவிற் பட்ட பொழுதே கலக்கும்
இன்பமும் துன்பமும் இவையும்அணு வெனத்தகும்
முன்னுள ஊழே பின்னும் உறுவிப்பது
மற்கலி நூலின் வகையிது வென்ன[126]

இப்பகுதி கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடலின் கருத்து விளக்கமாக அமைந்துள்ளது. அத்துடன் பக்குடுக்கை நன்கணியாரின் 'இன்ப—துன்ப' க் கோட்பாடு இரண்டு அணுக்களாகச் சேர்க்கப்பட்டுள்ளதையும் தெளிவாக உணர்த்துகின்றது.

---

125. மணி. 27 : 155.

126. மணி. 27 : 159—165.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மணிமேகலை காட்டும் ஆசீவகம்தான் பேரளவில் நீலகேசியிலும், சிவஞான சித்தியாரிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாலடியாரில் உள்ள ஊழியல் திருக்குறளின் விளக்கமாக அமைந்துள்ளது. மேற்காட்டிய நூல்கள் குறித்துள்ள ஆசீவகம் தமிழகத்தில் அது பெற்ற வளர்ச்சியையும் மாற்றத்தையும் காட்டுகின்றது எனலாம்.

ஆக ஊழின் முழுவல்லமை ஆசீவகத்தில் வற்புறுத்தப்பட்டுள்ளதைப்போலத் திருக்குறளில் வற்புறுத்தப்படவில்லை. அத்துடன் மற்கலிகோசாலரின் நியதிக் கோட்பாடு, கணியன் பூங்குன்றனார் காலத்திலிருந்து சிலப்பு, மணிமேகலை காலம் வரை (நீலகேசி, சித்தியார் காலம் வரையிலும்கூட) தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தும், திருக்குறளில் அதன் தாக்கம் இடம் பெறவில்லை என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

மேலும் ஊழ்வினை பற்றிய நம்பிக்கை பார்சுவநாதரைப் பின் பற்றிய நிக்கந்தர்களிடமும் இருந்துள்ளது என்பதை மணிமேகலை,

> நல்வினை யுந்தீ விலனயுமவ் வினையாற்
> செய்வுறு பந்தமும் வீடுமித் திறத்த[127]

என்று குறிக்கும். இதன்மூலம் ஊழ்வினையின் தொன்மையை உணர்ந்துகொள்ள முடிகிறது.

எனவே திருக்குறளில் பேசப்படும் ஊழியல் பற்றிய செய்திகள், தமிழகத்தில் தொன்றுதொட்டு நிலவி வந்த ஒரு கருத்தே என்பது புலனாகின்றது. கருத்தளவில் நின்ற இக்கோட்பாட்டைத்தான் மற்கலிகோசாலரும் ஆறு திசையாசிரியர்களும் கூடி ஒரு மெய்யியலாக உருவாக்கி உள்ளனர். ஆதலால், ஊழ் சமய வடிவம் கொள்வதற்கு முன்னர் உள்ள காலகட்டத்தைச் சார்ந்தவராகத் திருவள்ளுவர் வாழ்ந்திருக்க வேண்டும்.

திருக்குறளும்—பூதவியலும்

கூடா ஒழுக்கம் என்ற அதிகாரத்தில் துறவிகள் விலக்க வேண்டிய தீய செயல்களை விளக்கும் வள்ளுவர்,

> வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
> ளைந்து மகத்தே நகும்[128]

---

127. மணி. 27 : 175—176.

128. குறள். 271.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பார். பூதங்கள் அய்ந்து என்பது பூதவியலாளர் கோட்பாடு என்பதும், இக்கோட்பாடு அய்ந்திர மரபைச் சார்ந்தது என்பதும் வெளிப்படை. எனவே திருவள்ளுவர் தொல்காப்பியரைப் போல அய்ந்திர மரபைச் சார்ந்தவர் என்பது பெறப்படுகின்றது. சாங்கியம், யோகம், சமணம், ஆசீவகம் ஆகிய அனைத்தும் திராவிடச் சிந்தனையின் கிளைகள் என்று அறிஞர்கள் ஒப்புக் கொண்டுள்ளதாலும், திருக்குறளிலும் பிளவுபடாத அவற்றின் கூறுகள் மிகுந்துள்ளதாலும் தொன்றுதொட்டு வந்த திராவிடச் சிந்தனையின் முழுமை பெற்ற வடிவமாக விளங்குவது திருக்குறள் என்பதும் அத்தகைய சிந்தனையின் மூல ஊற்றாக விளங்கியது அற்றைத் தமிழகம் என்பதும் தெளிவு.

திருக்குறளில் அமைந்துள்ள வைதிக மரபிற்கு மாறான கருத்துக் களைக் கண்டு வியக்கும் ஆல்பெர்ட் சுவைட்சரின் கருத்தும் இங்கே கருதத்தக்கது.

> இவ்வுலக வாழ்வையும்—இம்மை வாழ்வையும் உடன்பட்டு வற்புறுத்தி பேசும் சான்றோர் பண்டை இந்தியாவில் வாழ்ந்திருந்தனர். அவர்கள் இந்தியப் பழங்குடிக்குரியராய் இன்று தாழ்ந்த இனத்தவராய் வாழ்கின்றனர். வள்ளுவர் அவர்கள் இனத்தில் தோன்றிய அந்தகைய சான்றோர் ஆகலாம்.[129]

இதனால் வள்ளுவர் வைதிக மரபிற்கு மாறானவர் என்பதும் இந்த மண்ணுக்கே உரிய சிந்தனையின் வெளிப்பாடே அவரது திருக்குறள் என்பதும் முடிவாகின்றது.

வள்ளுவரும்—கணியரும்

தமிழில் ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்களும், பல பொருளை உணர்த்த ஒரு சொல்லும் நிறைய வழக்கில் உள்ளன. அகராதிகளும், நிகண்டுகளும் இந்த அடிப்படையில்தான் தொகுக் கப்பட்டுள்ளன. இப் பின்னணியில் வள்ளுவர், கணியர் ஆகிய இரு சொற்கள் உணர்த்தும் பொருளை—தொழிலை விளக்குவது இன்றி யமையாததாகும்.

கணியர்கள் பெரும் துறவிகளாகவும், அரசவையின் உள்படு கருமத்துள் பொறுப்பு வகிப்போராகவும் விளங்கியவர்கள். அத் துடன் வானியல், அறிவியல் துறைபோகி, காலத்தைக் கணிப்பவர்

---

129. தி. முருகரத்தனம், இந்திய காமநூல்களிடையே திருக் குறள் (கட்டுரை). ப. 12.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களாகவும், நாளும் கோளும் அறிந்து நிமித்தம் கூறுவதில் வல்லவர்களாகவும் விளங்கியவர்கள் என்பது இவ்வியலின் தொடக்கத்துள் விளக்கப்பட்டுள்ளது.

கணியர்களைப் போன்றே வள்ளுவர் என்போரும் அத்தகைய தொழிலைச் செய்பவர்களாகவே வாழ்ந்து வந்தனர். சீவக சிந்தாமணி 'தப்பாமல் நிமித்தம் கூறுதலில் வல்லவர்கள் இவ்வள்ளுவர்கள்' என்பதை,

வாய்த்த வங்கிரை வள்ளுவன் சொனான்[130]

என்று குறிக்கும்.

புள்வாய்ப்புச் சொன்ன கணிமுன்றில் நிறைந்தன[131]

எனச் சிலப்பதிகாரம் நிமித்தம் சொல்வானைக் கணி என்ற பெயரில் சுட்டும்.

பெருங்கதை, வள்ளுவனை அரசியல் செய்திகளைப் பறை அறைந்து அறிவிப்போனாகச் சுட்ட, பிங்கல நிகண்டு, 'உள்படு கருமத் தலைவன்' என்று விளக்கம் தரும்.

அரசர்கள் படைகொண்டு செல்லும்போது கணியர்கள் உடன் செல்வர் என்பதும், காலத்தை அறிந்து கூறுவர் என்பதும் பின்வரும் சிலப்பதிகார அடிகளால் அறியலாம்.

அந்திச் செக்கர் வெண்பிறை தோன்றப்
பிறையேர் வண்ணம் பெருந்தகை நோக்க
இறையோன் செவ்வியிற் கணியெழுந் துரைப்போன்
எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது
மண்ணாள் வேந்தே வாழ்கென் றேத்த[132]

மேற்காட்டிய சான்றுகள் கணியருக்கும் வள்ளுவருக்கும் இடையேயுள்ள ஒற்றுமையினை உணர்த்தும். இன்றளவும் வள்ளுவர் என்போர் கல்வி புகட்டும் ஆசிரியராகவும், நாள்கோள் பார்க்கும் சோதிடராகவும், பஞ்சாங்கம் பார்க்கும் காலக் கணிதராகவுமே தொழில் செய்து வருகின்றனர். ஆல்பர்ட் சுவைட்சர் குறித்ததைப்

---

130. தேவநேயப் பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, முன்னுரை, ப. ரு.

131. தேவநேயப் பாவாணர், திருக்குறள் தமிழ் மரபுரை, முன்னுரை, ப. ரு.

132. சிலம்பு. 27 : 146—150.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்று அவர்கள் இன்றைய சமூக அமைப்பில் அதாவது இந்துமதத்தில் தாழ்த்தப்பட்டோராகவே வாழ்கின்றனர். இத் தொழிலைச் செய்பவர்களைக் கணியுரைப்போர் என்று அழைக்கும் மரபு மக்கள் நடுவே இன்றும் நிலவுகின்றது. இக் கணியுரைப்போரும் தாழ்த்தப்பட்டவர்களே.

மேலும் சங்க காலத்தில் 'நாஞ்சில் வள்ளுவன்' என்ற வள்ளல் புலவர்களால் மதிக்கப்பெற்ற பெருவாழ்வு வாழ்ந்திருக்கின்றான். அவ்வையார் அவனைப் பாடியுள்ளதாலும், அவ்வையாரால் பாடப்பட்ட அதியமான், அசோகன் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளதாலும் நாஞ்சில் வள்ளுவனின் காலமும் அசோகனுக்கு உரிய கி. மு. 3ஆம் நூற்றாண்டு ஆதல் வேண்டும். எனவே தமிழகத்தில் வள்ளுவன் என்ற பெயர் கி. மு. மூன்றாம் நூற்றாண்டளவிலும் வழக்கில் இருந்தமை தெளிவு.

கணியர்—வள்ளுவர் என்ற இரு பெயர்களும் ஒரே தொழிலைச் செய்து வந்தவர்களைக் குறிக்கின்றன. மேலும் நன்கணியார் இந்தியச் சிந்தனையில் அணுவியற் கோட்பாட்டிற்குரியவராக மதிக்கப்படுபவர். திருக்குறளும் அவ்வையாரால்,

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்[133]

என்ற பாராட்டைப் பெற்றுள்ளது.

பழந்தமிழகத்தில் அணுபற்றிய கோட்பாடு மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்த ஒன்று. பொருட்கள் அணுக்களின் திரட்சியே என்பதைத் தெளிவாகவே உணர்ந்திருந்தனர். அத்துடன் மிகவும் நுண்ணியதான அணு கண்ணுக்குப் புலப்படாத ஒன்று என்பதையும், ஆனால் அணுக்களின் திரட்சியாகிய பொருட்களை (பூதங்களை)க் கண்ணால் காணமுடியும் என்பதையும் அறிந்திருந்தனர். இதனை மணிமேகலை அழகிய உவமை ஒன்றால் விளக்கும். 'மாலை இருளில் தனி மயிரைக் காணமுடியாதவர்கள் மயிர்க் கற்றையைக் காண முடிவதைப்போல, அணுவைக் காண இயலாதவர்கள் அணுக்களின் திரட்சியாகிய பொருட்களைக் காண்பர்' என்பதனை,

---

133. திருவள்ளுவமாலை, அவ்வையார் பாடல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓரணுத் தெய்வக் கண்ணோர் உணர்குவர்
தேரார் பூதத் திரட்சியுள் ஏனோர்
மாலைப் போதில் ஒருமயிர் அறியார்
சாலத் திரள்மயிர் தோற்றுதல் சாலும்[134]

என்ற அடிகளால் அறியலாம்.

அணுவைத் தெய்வக் கண்ணோர் உணர்வர் என்பதால் அன்றைய அறிவு வளர்ச்சிக்கேற்ப அணுவைப் பற்றிய ஆய்வு நடந்திருக்க வேண்டும் என்பதும், அத்தகைய ஆய்வை மேற்கொண்டிருந்த ஆன்றோர்களே 'தெய்வக் கண்ணரா'கப் போற்றப்பட்டிருக்க வேண்டும் என்பதும் தெளிவு. எனவே திருக்குறள் அணுவைப் போன்ற நுட்பம் கொண்டது எனும் கூற்றில் உண்மை உள்ளது என்பதை அறிய முடிகின்றது.

அவ்வையாரைப் போன்றே வள்ளுவமாலையில் வரும் புலவர்கள் அல்லது அவர்களின் பெயரில் உள்ள பாடல்கள் ஆகியவற்றுள் அடங்கியுள்ள வரலாற்று உண்மைகள் ஆய்விற்குரியன. இருப்பினும் பக்குடுக்கை நன்கணியாரின் அணுக்கோட்பாட்டை எதிரொலிக்கும் வகையில் அமைந்துள்ள அவ்வையாரின் பாராட்டுரையைப் புறக்கணித்துவிட முடியவில்லை.

மேலும் கணியர்—வள்ளுவர் ஆகிய இரண்டு பெயர்களுக்கும், அப்பெயர்கள் உணர்த்தும் தொழில்களுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையைப் போலவே, நன்கணியார்—திருவள்ளுவர் இருவரின் பாடல் கருத்துக்களும் மிக ஒப்புமையுடன் அமைந்துள்ளன.

பக்குடுக்கை நன்கணியாரின் கோட்பாடு தனிமனித வாழ்விலிருந்து சமூக வாழ்வைக் காண்கிறது. வள்ளுவம் தனிமனித வாழ்வின் வறுமைக்கு அதன் சமூகப் பின்புலத்தைக் காரணமாகக் காட்டுகின்றது. இருவரது சிந்தனையும் இயல்பான நிலையில் இயல்பான உண்மைகளுடன் அமைந்தவை. அத்துடன் கடவுட் கோட்பாட்டை மறுப்பதிலும் இவ்விருவருக்குமிடையே எவ்வித மாறுபாட்டையும் காணமுடியவில்லை.

அணுக்கோட்பாட்டாளராகவும் கடவுள் மறுப்பாளராகவும் விளங்கிய பக்குடுக்கை நன்கணியார் என்ன காரணத்தால் விதிக் கோட்பாட்டை உருவாக்குவதில் தன் பங்களிப்பைச் செலுத்தினார் என்பதை அறிய எவ்விதத் தடயங்களும் கிடைக்கவில்லை. சமூக வாழ்வில் போரினால் ஏற்பட்ட தாக்கங்களும் அதன் விளைவால் ஏற்பட்ட அவலங்களும் இத்தகைய பின்புலத்தை உருவாக்கியிருக்

134. மணி. 27 : 146—149.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலாம். எனினும் திராவிடச் சிந்தனையை இந்தியா முழுமைக்கும் கொண்டு சென்றவர் என்பதில் அவரது பங்களிப்பு தலையாய தாகும்.

புத்தரின் சமகாலத்தவர் பக்குடுக்கை நன்கணியார். புத்தரின் சீடர்களான சாரிபுத்தன், மொக்கலன் ஆகிய இருவரும் பூதவிய லைத் தென்னாட்டில் கற்றவர்கள். பூதவியலாகிய அய்ந்திரம் தொல்காப்பியத்தைப் போன்றே திருக்குறளிலும் முழுமை பெற் றுள்ளது. எனவே அய்ந்திர மரபு செழித்து நின்ற காலத்தில்—அதாவது அம்மரபு பல கூறுகளாகக் கிளைக்காத ஒரு காலகட்டத் தில் வள்ளுவர் வாழ்ந்திருக்கவேண்டும். அக்காலம் தொல்காப்பியர், பக்குடுக்கை நன்கணியார் ஆகியோரின் காலமாகிய கி. மு. 6ஆம் நூற்றாண்டாகவும் இருக்கவேண்டும்.

தமிழ் மரபிற்குரிய முப்பால் உண்மைகள்

சமூகக் கட்டுக்கோப்பிற்குத் தனிமனித ஒழுக்கம் மிகவும் இன்றி யமையாத ஒன்று. இத்தகைய தனிமனித ஒழுக்கத்தை வற்புறுத் தும் வகையில்தான் திருவள்ளுவர் உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர்கள் அனைவரும் தங்கள் கருத்துக்களை அமைத்துள்ளனர். இதன் உயர்வை அகத்துறை இலக்கியமாகிய குறிஞ்சிப் பாட்டில்,

முத்தினு மணியினும் பொன்னினு மத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடிற் புணரும்
சால்பும் வியப்பு மியல்புங் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி யையர்க்கு மந்நிலை
எளிய வென்னார் தொல்மருங் கறிஞர்[135]

என்று கபிலர் பாராட்டுவார்.

இத்தகைய ஒழுக்கமும் அதனைப் பேணும் நெறிகளும் தனி மனித வாழ்விலும், சமூக வாழ்விலும் அறநெறிக் கோட்பாடுகளாக மலர்ச்சி பெற்றன. தமிழ் மரபு இதனை அறம் பொருள் இன்பம் என முத்திறக் கோட்பாடுகளாக வரையறை செய்துள்ளது.

இன்பம் தனிமனித வாழ்வை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவுவது. பொருள் தனிமனித வாழ்வு, சமூக வாழ்வு, அரச வாழ்வு ஆகிய அனைத்தையும் செழுமையுடன் காப்பாற்றவல்லது. அறம் தனிமனிதன், சமூகம், நாடு என்ற அனைத்தையும் தழுவிய கட்டுக்கோப்புடன் காத்து நிற்பது. முத்திறக் கூறுகளின் இந்தப் படிமுறை வளர்ச்சியைத் தொல்காப்பியர்,

---

135. குறிஞ்சிப் பாட்டு 13—18.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த அய்ந்திணை மருங்கின்[136]

என்று வரிசைப்படுத்துவார்.

இந்த அமைப்பு முறையின் நுட்பத்தினை இளம்பூரணர்,

அறனும் பொருளும் இன்பமும் என்னாது இன்பமும் பொருளும் அறனும் என்றது என்னையெனின் பலவகை உயிர்கட்கும் வரும் இன்பம் இருவகைப்படும். அவை யாவன, போகம் நுகர்தலும் வீடு பெறுதலும் என. அவற்றுள் வீடுபேறு துறவறத்தில் நின்றார்க்கல்லது எய்தல் அரிதாயிற்று. போக நுகர்தல் மனையறத்தார்க்கு எய்துவது. அவரெய்தும் இன்பமும் அவ்வின்பத்திற்குக் காரணமாகிய பொருளும் அப்பொருட்குக் காரணமாகிய அறனும் எனக் காரிய காரணம் நோக்கி வைத்தார் என்க[137]

என்று விளக்குவார்.

சமூகத்தின் வளர்ச்சிக்கேற்ப இக்கோட்பாடுகளும் வளர்ச்சி பெற்றன. மனிதன் பெறவேண்டிய உறுதிப் பொருள்களாக வற்புறுத்தப்பெறும் அளவிற்கு இவை மனித வாழ்வில் தலைமை பெற்றன.

கல்வி மனித சமூகத்தின் அடிப்படைத் தேவையாக உணரப் பட்ட பின்னர், நூல்களின் பண்பும் பயனுமாக வற்புறுத்தப் பெற்றவை இவ் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பொருட்களே. இதனால்தான் தொல்காப்பியர் செய்யுளியலில் இவற்றை மும் முதற்பொருட்களாக விளக்குவார்.

அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப[138]

என்பது நூற்பா.

அந்நிலை மருங்கின் எனவே, அவை மும்முதற் பொருட்கு உரியவாங்கால் செய்யுளிடத்தன்றித் தாமாக உரிமை பூணா என்பது. வீடென்பது செய்யுளுள் வாராதோ

136. தொல். களவியல் 1.
137. மே. நூற்பா, இளம்பூரணர் உரை.
138. தொல். செய்யுள். 141.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனின் அறமுதல் என்பது புறப்பாட்டெல்லையாகக்
கூறினான் என்பார் நான்கு பொருளும் தழீஇ உரைப்ப[139]

இவ்வாறு தொல்காப்பியரால் குறிக்கப்பெறும் முதற்பொருட்களான அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றும் அரசுகள் தோற்றம் கொண்டபோது அரசியலின் அடித்தளங்களாக அமைந்தன.

சோழன் நலங்கிள்ளியை வாழ்த்தும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார்,

அதனால் அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்றா மைநிற் போற்றா மையே[140]

என்று பாராட்டுவார். அதே மன்னனைக் கோவூர்கிழார் பாராட்டும் பாடலில்,

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்துவழிப் படூஉந் தோற்றம் போல[141]

என்று அறத்தின் பெருமையை வற்புறுத்துகிறார்.

இவ்வாறு வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றின் மேன்மையையும் உணர்த்தும் இவ்வுறுதிப் பொருட்கள் மூன்றனையும் அடிப்படையாகக் கொண்டு அமைந்ததே திருக்குறள். திருக்குறளை முப்பால் என்பதும், அதன் மூன்று பால்களாகிய அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகியவற்றின் அமைப்பு முறையினாலேயே ஆகும்.

வள்ளுவர் இவ்வாறு தெளிவாக மூன்று பால்களாகத் தம் நூலை வகுத்தளித்திருந்த போதிலும், இதில் கூறப்படாத ஒன்றாகிய வீடுபேறு பற்றியும் வள்ளுவர் கூறியதாகக் கருதும் மரபு ஒன்றும், காலப்போக்கில் உருவாகியுள்ளது.

திருவள்ளுவமாலையுள் நரிவெரூஉத் தலையார் பெயரில் அமைந்த பாடல்,

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்[142]

என்று வீட்டையும் சேர்த்தே குறிக்கும்.

139. தொல். செய்யுள். 141, பேராசிரியர் உரை.
140. புறம். 28.
141. புறம். 31 : 1—2.
142. திருவள்ளுவமாலை, நரிவெரூஉத் தலையார் பாடல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அறம் பொருள் இன்பம் ஆகியவற்றுடன் 'வீட்டை' யும் சேர்த்து உறுதிப் பொருள்கள் நான்கு என்று கருதும் மரபு வடமொழி மரபாகிய புருஷார்த்தங்கள் நான்கு என்னும் 'சதுர்வர்க்க' மரபைச் சார்ந்த ஒன்றாகும். இவ் வடமொழி மரபை அடியொற்றியே பரிமேலழகர் திருக்குறள் உரைப் பாயிரத்துள்,

> இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும், நெறியறிந்து எய்துதற்கு உரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன. அவற்றுள், வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து ஆகலின் துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப் படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமே ஆம்[143]

என்று விளக்குகின்றார்.

வடமொழி தருமசாத்திரங்களில் வீடுபேறு அல்லது மோட்சம் என்பது 'பரமபுருடார்த்தம்' என்று அழைக்கப்படும்.

திரிவர்க்கமும்—சதுர்வர்க்கமும்

சதுர்வர்க்கமாகச் சொல்லப்படும் புருடார்த்தங்கள் நான்கும் திரிவர்க்கமாகச் சொல்லப்பட்ட 'தர்மார்த்த காமம்' என்ற மூன்றின் வளர்ச்சி நிலையில் தோன்றியவை ஆகும்.

பிரமதேவரால் உருவாக்கப்பட்ட நூலாகக் கருதப்படும் திரிவர்க்கம் பற்றி மு. இராகவய்யங்கார் கூறுவதாவது:

> ....பிரமதேவர், திரிவர்க்கம் என்ற மகா சாஸ்திரத்துக்கு ஆசிரியர் என்ற செய்தியேயாம். மகாபாரதம் சாந்திபர்வம் 58ஆம் அத்தியாயத்தில் உலகம் ஒரு காலத்தே தர்மங் குன்றி அதர்மத்தால் தலைதடுமாறி நின்றபோது தேவர்கள் பிரமதேவரிடம் சென்று முறையிட, பகவான் அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, லக்ஷம் அத்தியாயம் உள்ள பெருநூல் ஒன்றைத் தம் புத்தியால் இயற்றினார் என்றும் அதனில் அறம் பொருள் இன்பங்களான திரிவர்க்கங்கள் அவரால் விரிவாக உரைக்கப்பட்டன என்றும்........... விரிவாகக் கூறப்பட்டுள்ளன[144]

---

143. பரிமேலழகர், குறள், உரைப் பாயிரம்.

144. மு. இராகவய்யங்கார், தொல்காப்பிய ஆராய்ச்சி, பக். 205—206.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதாம். இத் திரிவர்க்கத்தைப் பின்பற்றியே திருக்குறள் அமைந்தது எனப் பரிமேலழகரும், 'இவர் பொருட் பாகுபாட்டினை அறம் பொருள் இன்பம் என வடநூல் வழக்குப் பற்றி ஓதுதலான்' என்பார்.

இராகவய்யங்கார் போன்றோர் திருக்குறள் வடமொழி மரபாகிய திரிவர்க்கத்தைச் சார்ந்ததுதான் என்று நம்புவதற்கு வள்ளுவமாலையின் சில பாடல்களும், பரிமேலழகரின் கருத்துமே காரணங்களாக அமைந்துள்ளன.

திரிவர்க்க மரபின் காலம்

வடமொழியில் அமைந்துள்ள வேதங்களும் உபநிடதங்களும் தருமத்தைப் பற்றிப் பேசுகின்றன. ஆனால் 'தருமம்' என்ற சொல் தமிழில் வழங்கும் 'அறம்' என்ற சொல்லின் பொருளை முழுமையாக உளளடக்கிய சொல் அன்று. தருமம் பற்றி உபநிடதங்களில் மிகவும் தொன்மைவாய்ந்ததாகக் கருதப்படும் 'சாந்தோக்கிய உபநிடதம்' (கி. மு. 700) கூறுவதாவது;

> சாந்தோக்கிய உபநிடதத்தில் தர்மம் மூன்று கிளைகளை உடையது என்று கூறப்பட்டுள்ளது. முதலாவதில், யக்ஞம் (வேள்வி), அத்யயனம் (ஓதல்), தானம் (கொடை) ஆகியவை அடங்கும். இவை இல்லறத்தார்க்கு உரியவை. இரண்டாவது தவம். இது வனப்பிரஸ்தருக்கு உரியது, மூன்றாவது குருகுல வாசத்திலே இருந்து வேதம் பயிலுதல். இது பிரமசாரிக்கு உரியது. இவர்கள் எல்லாம் புண்யலோகத்தை அடைவார்கள். நான்காவது நிலையில் உள்ள சன்யாசி ஒருவனே 'முத்திக்கு' உரியவன் என்பது இவ்வுபநிடதக் கருத்து. அவனை 'பிரம்மசம்ஸ்தன்' (பிரம்மத்தோடு ஒன்றி இருப்பவன்) என்று கூறுகிறது.........[145]

இவ்வுபநிடதக் கருத்து வற்புறுத்தும் 'தர்மம்' வருணாநெறி என்பதும் அதுவும் வைதிகர்களுக்கே உரியது என்பதும் தர்மம் பற்றிய இவ் விளக்கத்தினால் அறியலாம்.

ஆனால் திரிவர்க்கம் பற்றிய செய்தி மகாபாரதத்திலும், சாணக்கியரின் அர்த்தசாத்திரத்திலும்தான் முதன் முதலாகக் குறிக்கப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் பீமன், தருமனிடம்

145. பெ. திருஞானசம்பந்தன், இந்திய வீடுபேற்று நூல்களிடையே திருக்குறள், ப. 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தருமம், அர்த்தம், காமம் ஆகிய மூன்றையும் ஒருவன் காலமறிந்து பாகுபாடு செய்து கடைப்பிடிக்க வேண்டும்' என்பான்.[146]

திரிவர்க்கம் பற்றி மகாபாரதம் சாந்தி பருவத்தில் சொல்லப் பட்டிருந்தாலும், ஆதிபர்வத்தில்,

> இந்நூல் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கு பொருள்களைப் பற்றியும் கூறுகிறது

என்று சதுர்வர்க்கமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதுபற்றி விளக்கும் பெ. திருஞானசம்பந்தம்,

> இதற்கு முந்தைய சுலோகத்தில் முன்னரே குறிப்பிட்டுள்ளபடி தர்மம், அர்த்தம், மோட்சம் என்ற மூன்றுமே வியாசரால் இயற்றப்பட்ட மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது என்று காணப்படுவதால் இச்சுலோகம் பாரதம் விரிவாக்கப்பட்ட பின்னர் புருஷார்த்தங்கள் நான்கு என்ற முறை வேரூன்றிய காலத்தில் சேர்க்கப்பட்டிருக்கலாம் என்று கருத இடம் இருக்கின்றது[147]

என்பார்.

அர்த்தசாத்திரத்துள் திரிவர்க்கம் பற்றிய குறிப்பு இருந்தாலும், அதில் சொல்லப்பட்டுள்ள செய்திகளுள் முதலிடத்தை வகிப்பது அர்த்தமாகிய பொருள்தான்.

வடமொழி மரபில் திரிவர்க்கம் பற்றிய குறிப்புக்கள் பரவலாக இடம் பெற்றிருப்பினும் அவற்றின் தொகுதியாக, அதாவது திருக்குறள் போல் ஒரே நூலில் சொல்லப்பட்டுள்ளனவா எனின் இல்லை என்ற பதிலே கிடைக்கின்றது.

> ஒவ்வொரு புருஷார்த்தத்தைப் பற்றியும் தனித்தனியே நூல்கள் எழுந்துள்ளன. மநுதர்மம் முதலியன தருமத்திற்கும் கவுடலீயம் முதலியன அர்த்தத்திற்கும், காம சூத்திரம் முதலியன காமத்திற்கும், பிரம்மசூத்திரம் மோட்சத்திற்கும் எழுந்தன. ஆனால் நாற்பாலாய் அமைந்த புருஷார்த்தம் பற்றி இந்திய மொழிகளின் நீண்ட வரலாற்றில் ஒரு நூலும் எழவில்லை. நான்கு புருஷார்த்

146. பெ. திருஞானசம்பந்தன், இந்திய வீடுபேற்று நூல்களிடையே திருக்குறள், ப. 5.

147. மே. கட்டுரை, ப. 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> தங்கள் பற்றியும் (சதுர்வர்க்கம் பற்றி) ஓராசிரியர் ஒரு காலத்தில் ஒரு நூலாய்ச் செய்த ஒன்று தானும் எழ வில்லை. இது வியப்பிற்குரியது. முப்பால் பற்றி—திரிவர்க்கம் பற்றி—இந்தியா முழுவதிலும் ஒருவரால் இயற்றப் பட்ட ஒரே நூல்தான் உண்டு. அதுவே முப்பால் என்னும் திருக்குறள். இரு புருஷார்த்தங்கள் பற்றிக்கூட நூலே இல்லை. புருஷார்த்தங்கள் நான்கையும் பற்றி ஏன் ஒருவர் ஒரு நூல் எழுதவில்லை என்ற வினா வியப்புக்குரியது மட்டுமல்ல; நம் சிந்தனைக்கும் உரியது[148]

என்ற முருகரத்தனத்தின் கருத்து இங்கே ஒப்புநோக்கத்தக்கது.

தருமம் பற்றியும், பொருள் பற்றியும், இன்பம் பற்றியும் ஆன சிந்தனைப் போக்கு ரிக்வேதத்திலேயே காணப்படுவதாகக் கூறினாலும், வேதங்களை அடியொற்றிப் பிற்காலத்தில் தோன்றிய எந்த ஒரு தருமசாத்திரத்திலும், மும்முதற் பொருள்களைப் பற்றிய சிந்தனை முழுவடிவம் கொள்ளவில்லை. திரிவர்க்கம் மற்றும் சதுர்வர்க்கச் சிந்தனையின் மூலம் வேதங்களிலோ, உபநிடதங்களிலோ அமைந்திருந்தால் புருடார்த்தங்களை முழுமையாக வெளிப்படுத்தும் நூல்கள் அம்மொழியில் தோன்றியிருக்க வேண்டும். ஆனால் உண்மைநிலை அதற்கு மாறாக உள்ளது.

சமண—பௌத்தங்களில்
மும்முதற்பொருள்

பிற்காலத்தவரும் சமண சமயத்தைச் சேர்ந்தவருமாகிய நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் நூலின் பயனாகச் சொல்லும்போது, 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே'[149] என்பார். ஆனால் சமண சமயத்திலோ அன்றிப் பௌத்த சமயத்திலோ திரிவர்க்கம் பற்றிய எத்தச் சுவடும் காணப்படவில்லை. இதற்கான காரணத்தைப் பின்வருமாறு விளக்குவார் முருகரத்தனம்:

> தருமத்தைக் கருவியாகக் கொண்டு மோட்சத்தை அடைய வற்புறுத்தும் சிந்தனை அர்த்த காமங்களை ஆதரிக்குமோ என்பது எண்ணத்தக்கது. துறவினையும், நிர்வாணம் அடைதலையுமே பெரிதும் வற்புறுத்திப் பேசும் சமண பௌத்த சமயங்களில் இத் திரிவர்க்க சதுர்வர்க்கங்கள்

148. தி. முருகரத்தனம், இந்தியக் காமநூல்களிடையே திருக்குறள், ப. 2.

149. நன்னூல். 10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பற்றிய கருத்துக்களே இல்லை. அச்சமயங்கள் இப் புருஷார்த்தங்களையோ அவ்வாறு வகுத்தலையோ ஒப்ப வில்லை எனக் கருதலாம்........... காமமும் பொருளும் கடியத்தக்கன எனச் சமய விதிகள் இடும் முழக்கம் திரிவர்க்க சதுர்வர்க்க அமைப்புக்கு வைக்கும் வெடி யல்லவா?[150]

திரிவர்க்கத் தோற்றுவாயின் காலம்

திரிவர்க்கம் பற்றிய செய்தி முதன்முதலாக மகாபாரதத்தில் தான் காணக்கிடைக்கிறது. மகாபாரதத்தின் ஆசிரியர் வேத வியாசர் தொல்காப்பியர் காலத்திற்கு மிகவும் பிற்பட்டவர்.[151]

தொல்காப்பியர் அறம் பொருள் இன்பத்தை மும்முதற் பொருள் எனச் சுட்டுவது மட்டுமல்லாது, தமது காலத்திற்கு முன்னர் இருந்தே அதாவது தமது முன்னோர்களாலேயே சொல லப்பட்டும் பின்பற்றப்பட்டும் வந்த ஒரு கோட்பாடே என்பதை பின்வரும் நூற்பாவால் விளக்குவார்.

அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப

தொல்காப்பியத்துள் பயின்றுவரும் 'என்ப', 'என்மனார்' என்ற சொற்கள் தொல்காப்பியர் தமக்கு முற்பட்ட காலத்தவர் களின் கருத்தை அடியொற்றியவர் என்பதற்கான சான்றுகளாகும்,

எனவே தமிழகத்தில் நெடுங்காலமாகப் பேணப்பட்டு வந்த மரபே, தொல்காப்பியரால் சொல்லப்பட்டுள்ளது என்பதும், அத் தகைய மரபின் முழு வளர்ச்சியே திருவள்ளுவரால் 'முப்பாலாக' வகுக்கப்பட்டுள்ளது என்பதும், இவ் அமைப்பு முறை மகாபாரதம், அர்த்தசாத்திரம் ஆகியவற்றிற்கெல்லாம் காலத்தால் மிகவும் முற்பட்ட ஒன்று என்பதும் தெளிவு.

தமிழ் மரபே

அகத்திணை பற்றிய பாகுபாடு தமிழ் இலக்கணத்திற்கே உரிய ஒன்று. இவ்வகத்திணை களவு—கற்பென இரு பிரிவுகளைக் கொண்டதாய் அன்பின் அடிப்படையில் அமைவது. ஆதலால் இது 'அன்பின் அய்ந்திணை' என்றும் சிறப்பிக்கப்படும்.

150. தி. முருகரத்தனம், இந்தியக் காமநூல்களிடையே திருக்குறள், ப. 5.

151. தொல். பாயிரம், நச். உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொல்காப்பியர் 'களவியல்' முதல் நூற்பாவில் களவைப் பற்றி விளக்கும்போது,

> இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
> அன்பொடு புணர்ந்த அய்ந்திணை மருங்கின்
> காமக் கூட்டம் காணுங் காலை
> மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்
> துறையமை நல்யாழ் துணைமையோர் இயல்பே[152]

எனக் குறிப்பார்.

காமக் கூட்டமாகிய அன்பொடு பொருந்திய அய்ந்திணை— இன்பமும் பொருளும் அறனும் என்ற மூன்றாகவும் சொல்லப் படுவது. இக்கூட்டம் மறையோராகிய பார்ப்பாரது நூல்களுள் சொல்லப்படும் எட்டுவகை மணத்துள் 'துறையமை நல்யாழ் துணைமையோராகிய கந்தருவ மணத்தை ஒத்தது' என்பார்,

இந்நூற்பாவினால் ஆசிரியர் தொல்காப்பியர் உணர்த்தும் ஒரு நுட்பமான வேறுபாடும் ஆராயத்தக்கது. 'காமக் கூட்டமாகிய அய்ந்திணை, அன்பின் அடிப்படையில் எழுவது. இது இன்பம், பொருள், அறம் என்றும் சொல்லப்படுவது' என்பதால் மறையோர் நூல்களுள் சொல்லப்படும் எட்டுவகை மணங்களும் அன்பின் அய்ந்திணை என்று வழங்கப்படாதவை என்பதுடன், இன்பம், பொருள், அறம் என்ற மூன்றையும் சாராதவை என்பதும் தெளிவா கிறது.

எட்டுவகை மணங்களின் அமைப்பை ஆராய்ந்தால் மேற்கூறிய கருத்து வலிமை பெறக் காணலாம்.

> ....மணம் எட்டாவன: பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்திருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. பிரமமாவது கன்னியை அணிகலன் அணிந்து பிரமசாரியா யிருப்பானொருவனுக்குத் தான மாகக் கொடுப்பது. பிரசாபத்தியமாவது மகட்கோடற் குரிய கோத்திரத்தார் மகள் வேண்டிய வழி இருமுது குரவரும் இயைந்து கொடுப்பது. ஆரிடமாவது ஒன்றானும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக் கொடுப்பது. தெய்வமாவது வேள்விக்கு ஆசிரியராய் நின்றார் பலருள் ளும் ஒருவர்க்கு வேள்வித் தீ முன்னர் கொடுப்பது. காந்திருவமாவது ஒத்த இருவர் தாமே கூடுங்கூட்டம். அசுரமாவது வில்லேற்றினானாதல் திரிபன்றி யெய்தா

152. தொல். களவியல் 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> னாதல் கோடற்குரியனெனக் கூறிய வழி அது செய்தார்க்குக் கொடுத்தல். இராக்கதமாவது தலைமகள் தன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது. பைசாசமாவது களித்தார் மாட்டும் துயின்றார் மாட்டும் கூடுதல்,[153]

மேற்காட்டிய எட்டனுள் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கும் பூணூல் அணியும் உரிமை பெற்றவர்களும் இருபிறப்பாளர்கள் என்று கருதப்பட்டவர்களும் ஆகியவர்கட்கு உரியவை. எஞ்சிய நான்கும், நூல்களானும் (சாத்திரங்கள்) சமூகத்தானும் மதிக்கப்பெறாதவை மட்டுமின்றி சூத்திரர்கட்கு மட்டுமே உரியவை.

ஆக மறையோர் நூலுள் சொல்லப்படும் எட்டுவகை மணங்களின் அமைப்பில், அன்பின் அடித்தளமோ அகத்திணையின் சுவடுகளோ இன்பம், பொருள், அறங்களின் கூறுகளோ இடம் பெறவில்லை என்பது புலனாகின்றது.

இதனால் வாழ்வியலின் தேவையென அறிஞர்களால் வற்புறுத்தப்பெற்றுள்ள உறுதிப் பொருள்களாகிய இம் 'மும்முதற் பொருள்களும்' தமிழ்இனம் பேணிக் காத்துவந்த ஒரு வாழ்க்கை நெறி என்பது புலனாகும். இவ்வாழ்க்கை நெறியே வள்ளுவமாக—முப்பாலாக முழுமை பெற்றுள்ளது.

மேலும் திருக்குறளின் காமத்துப்பாலும் தொல்காப்பியம் குறித்துள்ள அன்பின் அய்ந்திணையை அடியொற்றியே அமைக்கப் பட்டுள்ளது. வள்ளுவரின் காமத்துப்பால், வாத்சாயனரின் காம சாத்திரத்தைவிட, மனித உணர்வினை மதித்துப் போற்றும் வண்ணம் அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தருமசாத்திரங்களில் வற்புறுத்தப்பட்டுள்ள தருமம் பற்றிய கோட்பாடுகளுக்கும், கௌடில்யரின் அர்த்தசாத்திரம் முதலான பொருள்நூல்களின் கோட்பாடுகளுக்கும், வாத்சாயனரின் காம சாத்திரம் முதலானஇன்ப நூல்களின் நோக்கிற்கும் முற்றிலும் மாறான ஒரு புதிய நோக்கில் வள்ளுவர் அறம் பொருள் இன்பம் இம்மூன்றையும் அணுகியுள்ளார்.

> அவர் (திருவள்ளுவர்) கண்ட அறம் வருண தருமமாகவோ ஆசிரம தருமமாகவோ ஒரு குலத்துக்கொரு நீதி சொல்லும் குல தருமமாகவோ அமையவில்லை. இந்த வகையில் அவர் வடமொழியில் தோன்றிய பல தர்மசாஸ்திரங்களி

---

153. தொல். களவியல் 1, இளம்பூரணர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னின்று வேறுபடுகிறார். அவர் சொல்லும் அறம் விரிந்து பரந்து மன்பதைப் பொதுமை வாய்ந்ததாக உள்ளது. அவர் கூறும் பொருட்பாலும் பேரரசனுக்கு எம்முறையும் எவ்வழியும் ஏற்றன என்ற கோட்பாடு உடையதல்ல........ அவர் அரசர்க்குரிய கல்வி, அரசியல், நட்பு முதலான வற்றை மிகமிகப் பொதுமைப்படுத்தி அனைவருக்கும் உரியவாக்கிச் செல்கிறார். இவ்வகையில் எல்லாம் திருவள்ளுவர், அர்த்தசாஸ்திரம் முதலிய நூல்களினின்றும் வேறுபடுகிறார். இவ்வாறே காமசாஸ்திர மரபினையும் மாற்றுகிறார். வரன்முறையற்ற களியாட்டமாக அல்லாது அன்பின் அய்ந்திணை ஒழுகலாறாக அவர் காமத்துப் பாலைக் காண்கிறார். இது குறிப்பிடத்தக்க மாற்றமே.[154]

இக்கருத்துத் திருக்குறளின் அமைப்பையும் நோக்கையும் தெளிவு படுத்தக் காணலாம்.

தமிழ்ச் சான்றோர்கள் மக்கள் நலங்கருதி உருவாக்கிய முத்திறக் கோட்பாடுகளுக்கும் முழுமையான இலக்கிய வடிவம் கொடுத்ததன் மூலம், வள்ளுவர் தமிழ் மரபின் தொடர்ச்சி விட்டுப் போகாமல் காப்பாற்றியுள்ளார்.

தென்னகத்தில் நிலவிய அய்ந்திர மரபாகிய பூநவியல் எப்படி வடபுலத்து அறிஞர்களாலும் விரும்பிக் கற்கப்பட்டதோ அதே போன்று மனித வாழ்வின் உறுதிப் பொருட்களென வகுத்தமைத்த அறம் பொருள் இன்பம் என்ற கோட்பாடுகளும், பல்வேறு சமயச் சான்றோர்களாலும் விரும்பிக் கற்கப்பட்டு, அவரவர் மொழி இலக்கியங்களில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

இந்திய மொழிகளின் நெடிய வரலாற்றில் தமிழ் நீங்கலான வேறு எம்மொழியிலும் இம்முத்திறக் கோட்பாட்டின் முழுமையான வடிவம் கொண்ட இலக்கியங்கள் கிடைக்கப்பெறவில்லை. சமண பௌத்த அறநூல்களிலும் இம்மூன்று உறுதிப் பொருட்களும் இடம் பெறவில்லை.[155]

மாறாக, இம்மூன்றும் முழுமுதற் பொருட்களாகத் தொல்காப்பியத்தில் 'முன்னோர் மொழி பொருளாக'ப் பேசப்பட்டுள்ளன. இம்மூன்றையும் வற்புறுத்தும் வகையில், திருக்குறள் அமைக்கப்பட்டுள்ளது. எனவே இம்மரபு தமிழுக்கேயுரிய தனித்தன்மை வாய்ந்தது என்பதும், இந்தியச் சிந்தனை வளர்ச்சியில் தமிழ்மரபு

154. தி. முருகரத்தனம், இந்தியக் காமநூல்களிடையே திருக்குறள், ப. 10.

155. மே. க., ப. 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழங்கிய மாபெரும் கொடையே இம்மரபு என்பதும் தெளிவு. இதனை வற்புறுத்தும் வகையில்,

> இவை யாவற்றையும் ஒருங்கு இணைத்து நோக்குகின்ற பொழுது, தமிழ்வழி மலர்ந்த இந்திய மரபு ஒன்று கிறித்தவ ஊழிக்கு முன்பே இந்தியா முழுவதிலும் மூல ஊற்றாக வழங்கி வந்திருக்க வேண்டும் என்பதும், அவ் வூற்றின்வழி 'மும்முதற்கொள்கை' வடமொழியிலும் தமிழ்மொழியிலும் பாய்ந்தோடி இருக்கலாம் என்பதும் புலனாகின்றன.[156]

என்று க. த. திருநாவுக்கரசு கூறியுள்ளதும் எண்ணத்தகும். மேலும்,

> சமயக் கணக்கர் மதிவழி கூறாது
> உலகியல் கூறிப் பொருள்இது என்ற
> வள்ளுவன் ....[157]

என்னும் கல்லாடரின் கூற்றைத் தமிழ் மரபின் பின்புலத்தில் நோக்கு கின்ற போதும், திருக்குறளின் தனித்தன்மையை உணர்ந்துகொள்ள முடிகிறது.

திருக்குறளுக்குப் பிற்பட்ட தமிழகம்

இவ்வாறு தனக்கென்று தனித்ததும், மாந்த இனத்தின் மேன் மையை அடிப்படையாகக் கொண்டதுமான சிந்தனை மரபைப் பேணிக்காத்த தமிழ்நாடு பின்னர்ச் சமயங்களின் போராட்டக் களமாக மாறிவிட்டது.

நன்கணியாரின் கூட்டு முயற்சியால் உருவாக்கப்பட்ட ஆசீவகம், தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றது. அதற்கும் முன்னரே வைதிகநெறியின் வேள்விப் பண்பாடு கொஞ்சம் கொஞ்ச மாகத் தமிழகத்து மூவேந்தர்களிடத்தே மதிப்புப் பெறத் தொடங்கி விட்டது. இவற்றை அடுத்துச் சமண பௌத்த சமயங்களும் கருத் துப் பரப்பும் பணியை முடுக்கிவிட்டன.

அரசவைகளும், ஊர்ப் பொதுமன்றங்களும் அறிஞர்களின் பேச்சு மேடையாயிற்று. விழாக் காலங்களில் சமய அறிஞர்கள் தங்கள் தங்கள் சமயத்தின் கோட்பாடுகளைப் பட்டிமன்றங்களில் விளக்கத் தொடங்கினர். இதனை மணிமேகலை,

---

156. க. த. திருநாவுக்கரசு, சான்றோர் கண்ட திருக்குறள், ப. 11.

157. கல்லாடம், 13 : 20—22.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தண்மணற் பந்தருந் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந் தேறுமின்
பற்றா மாக்கள் தம்முட னாயினும்
செற்றமும் கலாமும் செய்யா தகலுமின்[158]

என்று விளக்கும்.

ஆக, வள்ளுவர் காலம் மெய்யியல் காலமாகத் (Age of Philosophy) திகழ, அவருக்குப் பிற்பட்ட காலமோ, மெய்யியல் களின் போராட்டக் காலமா (Age of Conflict)கத் திகழ்ந்திருக் கின்றது. இச்சூழலில்தான் மணிமேகலை, நீலகேசி போன்ற நூல்கள் தோற்றம் கொண்டுள்ளன.

கடுமையான மெய்யியல் மோதல்களுக்கு இடையிலேயும் பல்வேறு மெய்யியல்களை—சமயங்களைச் சார்ந்த புலவர்களும் தமிழ் மரபிற்கேயுரிய 'அன்பின் அய்ந்திணை'யைப் பின்பற்றிப் பாடியுள்ளது பெரும் வியப்பிற்குரியதாகவும் புதிராகவும் உள்ளதை இங்குச் சுட்டாமல் இருக்க முடியவில்லை.

158. மணி. 1 : 58—63.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல் - அய்ந்து

உலகாய்தத்தின் வாழ்க்கை நெறி

உழவு, பசுக்காவல், வாணிகம், செங்கோன் முறைமை முதலியனவாக ஆன்றோர் காட்டிய நெறியினின்றும் இம்மையின்பங்களை நுகர்ந்து வாழ்தல் உறுதிப் பயன் என்பதாம்.

—மாதவச் சிவஞான யோகியார்,
மணிமேகலை—27 மேற்கோள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கியங்களில் உலகாய்தத்தின் வாழ்க்கை நெறி

உலகாய்தக் கோட்பாடு கடவுள், மறுமை, வீடு பற்றிய மறுப்பாக மட்டும் இல்லாமல் ஒரு வாழ்க்கை நெறியாகவும், அறநெறியை அடிப்படையாகக் கொண்ட அரசியல் நெறியாகவும் விளங்கியது. இந்தியச் சிந்தனைகளில் மிகவும் தொன்மைவாய்ந்த ஒன்றாகவும், பல பிரிவுகளும் தோன்றுவதற்குக் காரணமாகவும் இந்த மெய்யியல் இருந்துள்ளது. இதன் பல்வேறு கூறுகளைப் பற்றிய செய்திகளையும் சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வது இவ்வியலின் நோக்கமாகும்.

சங்க இலக்கிய அமைப்பு முறையையும், அதன் பாடற்பொருளையும் ஆராயும் நா. வானமாமலை,

> புறம் பாடிய புலவர்கள் (1) இம்மை வாழ்க்கை அல்லது இவ்வுலக வாழ்க்கையில்தான் ஆர்வம் கொண்டிருந்தார்கள்; (2) இவ்வுலக வாழ்க்கையை உண்மையென்று கருதினார்கள்; (3) இன்பத்தை இவ்வுலக வாழ்க்கையிலிருந்தே பெறலாம்; (4) ஒரு குறிப்பிட்ட காலத்தின் சமூக நீதிக்கு உட்பட்டு இவ்வுலகிலேயே இன்பத்தைத் தேடிப் பெறலாம் என்ற கருத்துக்களை ஆற்றுப்படைப் பாடல்களில் காணலாம்; (5) இனக்குழு உலகக் கண்ணோட்டத்தின் எச்சமாக முன்னிலை உலகாயதக் கருத்துக்களைப் புறப் பாடல்களில் காணலாம்.[1]

என்று வகைப்படுத்துவதன் மூலம் சங்க இலக்கியங்களில் அமைந்துள்ள உலகாய்தக் கருத்துக்களை வெளிப்படுத்துவார். தமது கருத்திற்கு ஆதாரமாக அவர் மேற்கோள் காட்டும் புறநானூற்றுப் பாடல், நம்பி நெடுஞ்செழியனைப் பற்றிக் கையறுநிலைப் பாடலாகப் பேரெயில் முறுவலார் பாடிய பாடலாகும்.

---

1. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப. 207.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடியுடைய தோள்மணந்தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
தண்கமழுஞ் சாந்துநீவினன்
செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை உயர்புகூறினன்
வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
பிறரைத்தான் இரப்பறியலன்
இரந்தோர்க்கு மறுப்பறியலன்
வேந்துடை யவையத் தோங்குபுகழ் தோற்றினன்
வருபடை எதிர்தாங்கினன்
பெயர்படை புறங்கண்டனன்
கடும்பரிய மாக்கடலினன்
நெடுந்தெருவிற் றேர்வழங்கினன்
ஓங்கியல களிறூர்ந்தனன்
தீஞ்செறி தசும்புதொலைச்சினன்
பாணுவப்பப் பசிதீர்த்தனன்
மயக்குடைய மொழிவிடுத்தனன், ஆங்குச்
செய்ப வெல்லாஞ் செய்தனன் ஆகலின்
இடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகஇப் புகழ்வெய்யோன் தலையே[2]

இப்பாடல் ஒரு மன்னவனின் கடந்தகால வாழ்க்கை அனுபவங்களைத் தொகுத்து உரைப்பது. இறந்துபோன மன்னவனைப் புதைப்பதா, எரிப்பதா என்ற சிக்கல் தோன்றியபோது அச்சிக்கலைத் தீர்ப்பதுபோல அமைந்த இப்பாடலின் அமைப்பு மிகுந்த ஆய்விற்குரிய ஒன்றாகும்.

உலகாய்தத்தின் பிழிவாக அமைந்துள்ள இப்பாடலின்,

இடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகஇப் புகழ்வெய்யோன் தலையே

என்ற இறுதி அடிகள் மிகுந்த சிந்தனைக்குரியவை.

எந்த ஒரு மனிதன் இறந்தாலும் அவன் வாழ்ந்த சமூகத்தின் அல்லது அம்மனிதன் பின்பற்றிய சமயத்தின் பழக்கவழக்கங்களுக்கு ஏற்பவே அவனுக்கு இறுதிச் சடங்குகள் நடத்தப்படும். இம்மரபு உலகந்தழுவிய ஒன்று. இவ்விறுதிச் சடங்கின் சிறப்பை அடிப்படை

2. புறம். 229.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாகக் கொண்டே கிரேக்க நாடக ஆசிரியரான சோஃபாக்கிளீசு 'ஆண்டிகனான்' என்ற துன்பியல் நாடகத்தை அமைத்துள்ளார்.[3]

அக்கால மரபினை, 'போரில் விழுப்புண்படாமல், நோயினால் இறந்துபட்ட பெருமையில்லா அரசர்களின் உடம்பைத் தருப்பைப் புல்லில் கிடத்தி, நான்கு மறைகளைக் கற்ற வேதியர்கள் அவர் களின் உடலை வாளால் கிறி இறுதிச் சடங்கு நிகழ்த்துவார்'[4] என்று அவ்வையார் விளக்குகின்றார்.

விழுப்புண் படாமல் இறந்தவர்களுக்கு மட்டுமன்றி விழுப்புண் பட்டு இறந்துபோன வீரர்கட்கும்கூட இறுதிச் சடங்குகள் நடந்தன என்பதும், அப்படி இறுதிச் சடங்குகள் செய்வதற்காவே ஆண்மக் களைப் பெறுவது வற்புறுத்தப்பட்டது என்பதும் தமிழ் இனத்தில் நடைமுறையிலிருந்தன.

புதல்வர் என்ற சொல்லிற்குத் தம் பெற்றோர்களைப் 'புத்' என்ற நகரத்தில் விழாமல் காப்பாற்றுபவர்[5] எனப் பொருள் கூறினர். புறநானூறும்,

> தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
> பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்[6]

எனக் குறிக்கும். இவ்வாறு வற்புறுத்தப்பட்டுள்ள இத்தகைய சடங்குகள் எதைப் பற்றியும் கவலைப்படாது 'இடுக ஒன்றோ சுடுக ஒன்றோ' என்று கூறியுள்ளது அவ்விறுதிச் சடங்கை முற்றாக மறுத்த மறுப்பின் வெளிப்பாடாகும்.

மேலுலகம், தென்புலம், தென்புலத்தார்க்கு அருங்கடன் களைச் செய்யும் பார்ப்பனர் பற்றிய உலகாய்தர்களின் கருத்துக் களை இப்பாடல் கருத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

> சுவர்க்கமில்லை; மோட்சமில்லை; பரலோகத்தை அடை யக்கூடிய ஆத்மா இல்லை; வர்ணாசிரம வாதிகளின் கர்மங்கள் பலத்தைக் கொடுக்கமாட்டா.
>
> அக்னிகோத்திரம், மூன்றுவேதம், சன்னியாசம், பஸ்மதார ணம் என்னும் புத்தி, புருஷத் தன்மையற்றவர்கட்கு ஜீவனோபாயமாய்ப் பிரம்மாவினாற் சிருஷ்டிக்கப்பட்டன.

---

3. சோஃபாக்கிளீசு, கிரேக்க துன்பியல் நாடகத்தின் தந்தை, (கி. மு. 5).
4. புறம். 99.
5. மே. நூற்பா, உ. வே. ச. உரை.
6. புறம். 9 : 3—4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஜோதிட்டோம யாகத்திற் கொல்லப்பட்ட பசு சுவர்க்கத்தை அடையுமேயாயின் யாகம் செய்கிறவன் தன்னுடைய பிதாவை அதில் ஏன் கொல்லாதிருக்கிறான்.

இறந்தவனை உத்தேசித்துச் செய்கின்ற சிரார்த்தம்அவனுக்குத் திருப்தியை உண்டு பண்ணுமாயின் இவ்வுலகத்திலேயும் பிரயாணிகட்குப் பிரயாண சமயத்திற் கட்டுச்சோறு கொடுப்பது வியர்த்தம். (இறந்தவனை எண்ணி அவனது மக்கள் படைக்கும் உணவு, அவனைச் சென்றடையுமாயின், பிரயாணம் செய்கின்றவனை எண்ணி அவன் பொருட்டு வீட்டிலிருந்தே உணவை உண்டால் பிரயாணம் செய்பவனுக்கு அவ்வுணவு எப்படிப் பயன்படாமல் போகும்? எனவே, பயணம் செய்பவன் வழியில் சாப்பிட எடுத்துச் செல்லும் கட்டுச்சோறு பயனற்றதாம்.)

பூலோகத்திற் கொடுக்கும் பிண்டத்தினால் சுவர்க்கத்திலிருப்பவர் திருப்தி அடைவார்களேயாயின் மாளிகையின் மீதிருக்கின்றவனை உத்தேசித்துக் கீழ் வீட்டில் இருப்பவன் ஏன் அன்னம் கொடுப்பதில்லை?[7]

மேலே காட்டப்பட்டுள்ள கேள்விகள் உலகாய்தர்களின் கூற்றாகச் சொல்லப்பட்ட நூற்பாக்களின் கருத்துக்களாகும்.

உலகாய்தர்கள் மறுமைக்குப் பின் ஓர் உலகம் உண்டு என்பதை மறுப்பவர்கள். 'உடல் சாம்பலாகிப் போன பின்னர் அது எங்ஙனம் திரும்பி வருதல் கூடும்' என்று நடைமுறை உண்மையின் மூலம் மக்களைச் சிந்திக்க வைத்தவர்கள். சர்வதர்சன சங்கிரகம்,

நாஸ்திக சிரோன்மணியான சார்வாகனால் ஈசுவரன் உண்டென்று அங்கீகரிக்கப்படவில்லை; அந்தச் சார்வாகனின் சேட்டையைப் பரிகரித்தல் முடியாது; அனேகமாக எல்லாப் பிராணிகளும் 'உயிர் உள்ள பரியந்தம் சுகமாக ஜீவித்தல் வேண்டும்; மிருத்துவிற்கு (யமன்) வசமாகாமல் ஒருவரும் இருக்கப் போகின்றதில்லை. சரீரம் சாம்பராய்ப் போன பின்னர் அஃது எங்ஙனம் திரும்பி வருதல் கூடும்? என்னும் இவ்வுலக வாழ்க்கை மேற்கொண்டிருத்தலின்[8]

என்று விளக்கும்.

---

7. கோ, வடிவேலுச் செட்டியார், சர்வதர்சன சங்கிரகம், ப. 9.

8. மே. நூ.. ப. 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே, நம்பி நெடுஞ்செழியனின் வாழ்க்கை அனுபவமாகப் பேரெயில் முறுவலார் கூறும் செய்திகள் அவன் உலகாய்தக் கோட்பாட்டைப் பின்பற்றியவன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

இம்மை வாழ்வை வற்புறுத்தியும், கடவுள் மறுப்பை அடிப்படையாகக் கொண்டதுமாகிய மெய்யியலே உலகாய்தம். இதைப் போல பிற மெய்யியல்களும் கடவுள் மறுப்பை ஏற்றிருந்தனவா என்பது சங்க இலக்கியங்கள் மற்றும் திருக்குறள் ஆகிய நூல்களில் வரும் 'கடவுள்' என்னும் சொல்லாட்சியை ஆராய்ந்தால் புலனாகும்.

கடவுள்

'தமிழனுக்குக் கடவுள் உண்டா?' என்ற கேள்வியைத் தொடுத்து அதற்கான விளக்கதத்தையும் தருவார் பெரியார் ஈ. வெ.ரா.

> நாம் ஒரு தமிழர் என்கின்ற முறையில் கடவுள் என்பதைப் பற்றி ஆராய்ச்சி செய்வோமானால் 'கடவுள்' என்கின்ற பதமே கட+உள் (கடவுள்) என்பதான இரண்டு சொற்கள் சேர்ந்த பகுபதமாக இருக்கின்றதே தவிர, வடமொழியிலும் ஆங்கில மொழியிலும் இருப்பது போன்று பகவான், காட் (God), அல்லா என்பது போன்ற ஒரு தனி வார்த்தையோ அல்லது அந்த விதங்களான அர்த்தத்தைக் கற்பிக்கக்கூடியதான வாக்கியமோ தமிழில் இல்லை என்பதை உணரவேண்டும். தமிழர்களுக்குப் 'பாஷை' தோன்றிய காலத்தில் 'கடவுள்' உணர்ச்சி இருந்திருக்குமானால் அதற்கு ஒரு தனி வார்த்தை இருந்திருக்கும்.
>
> அது மாத்திரமல்லாமல், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் 'கடவுள் இல்லை' என்று சொல்லப்படுவதை உணர்த்துவதற்கு எப்படி எத்திசம், எத்திஸ்ட், நாஸ்திகம், நாஸ்திகன் என்கின்ற வார்த்தைகள் இருக்கின்றனவோ அவைபோலவே தமிழிலும் 'கடவுள் இல்லை' என்று சொல்லுவதை உணர்த்துவதற்கும், 'கடவுள் இல்லை என்று சொல்லுபவனை'க் குறிப்பிடுவதற்கும் அப்பொருள்கள் கொண்ட ஏதாவது ஒரு வார்த்தை இருந்திருக்கும். ஆகவே அவைகளிலிருந்தே தமிழர்களுக்கும் (அதாவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் நாட்டாருக்கும்) கடவுளுக்கும் ஆதியில் எவ்வித சம்பந்தமும் இருந்ததில்லை என்பது ஒருவாறு புலப்படும்[9]

மேற்காட்டிய இவ் விளக்கத்தை மெய்ப்பிக்கும் வகையில் 'கடவுள்' என்ற சொல் தமிழ் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளது.

'கடவுள்'—சொல்லும் பொருளும்

சங்க இலக்கியங்களில் பல்வேறு பொருட்களில் 'கடவுள்' என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. இருப்பினும், எந்த இடத்திலும் கடவுள் என்ற சொல்லை கடவுளின் முழு வல்லமையையோ, எங்கும் உள்ள தன்மையையோ, எல்லாக் காலத்திற்கும் உரிய இயல்பையோ குறிக்கும் வகையில் பயன்படுத்தவில்லை. மாறாக, துறவிகள், மரம், மலர், தூண், நடுகல்லான மறவர்கள், கொற்றவை, முருகன் போன்ற பொருட்களில்தான் 'கடவுள்' என்ற சொல் பரவலாகப் பயின்று வருகிறது.

துறவிகள்

பற்றுகளைக் கடந்தவர்கள், உள்ளொளி பெற்றவர்கள், எல்லா உயிர்கள்மாட்டும் அன்பு காட்டும் செந்தண்மை கொண்ட அந்தணர்கள் என்னும் பொருட்களில்தான் முனிவர்களைக் குறித்துக் 'கடவுள்' என்ற சொல் வழங்கி வந்துள்ளது.

இம் முனிவர்களாகிய கடவுளர்கள் போர்க்காலத்தில் மன்னர் கட்கு உறுதுணையாக விளங்கி, அமைதிக் காலத்தில் தவம் செய்ய வேண்டிக் காடுகளை நோக்கிச் சென்றனர். இதனைப் பதிற்றுப் பத்து,

> காடே கடவுள் மேன[10]

எனக் குறிக்கும்.

இத்தகைய கடவுளர்களின் தூய ஒழுக்கத்தையும் அதனால், அவர்கள்பால் ஏற்பட்ட பெருமதிப்பையும்,

> சொற்பெயர் நாட்டங் கேள்வி நெஞ்சமென்
> றைந்துடன் போற்றி யவைதுணை யாக

---

9. பெரியார் களஞ்சியம்—கடவுள் (மு. தொ.), பக். 63—64.
10. பதிற்றுப் பத்து, 13 : 20.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எவ்வஞ் சூழாது விளங்கிய கொள்கைக்
காலை யன்ன சீர்சால் வாய்மொழி
உருகெழு மரபிற் கடவுட் பேணியர்[11]

எனவரும் பகுதியால் அறியலாம்.

> எவ்வம் சூழாக் கொள்கையும், காலையன்ன வாய்மையும் உடையராதலின், ஏனையோருள்ளத்தே அவரைக் கண்ட வழி உட்குத் தோன்றுதலால் முனிவரை "உருகெழு மரபின் கடவுள்" என்றார். பொறி புலன்களின் செயலெல்லையைக் கடந்தமை பற்றி மக்கட் பிறப்பினராகிய முனிவர் கடவுளெனப்பட்டனர் என்றுமாம். "முத்தேர் முறுவலாய் நாமணம் புக்கக்கால், இப்போழ்து போழ்தென்றது வாய்ப்பக்கூறிய அக்கடவுள் மற்றக் கடவுள்" (கலி. 93) என முனிவர் கடவுளாகக் கூறப்படுமாறு காண்க[12]

என்ற விளக்கமும் கருதத்தகும்.

இத்தகைய பெருமதிப்பு வாய்ந்த கடவுளர்களை இல்லறத்தார் தம் வாழ்க்கைக்கு வழிகாட்டிகளாகக் கொண்டிருந்தனர் என்பதையும், அத்தகைய வழிகாட்டிகளைக் காணும்போதும், அவர்களோடு நெருங்கிப் பழகும்போதும் இல்லறத்தார் சில ஒழுகக வரம்புகளைக் கொண்டிருந்தனர் என்பதும், குறுந்தொகை, மதுரைக்காஞ்சி, கலித்தொகை ஆகிய நூல்களால் அறிய முடிகின்றது.

தன் கணவன், தான் பார்க்கக்கூடிய இடத்திலே இருந்தும் கூடத் தன்னோடு உறவு கொள்ளாதிருக்கின்றானே எனப் புலம்பும் தலைவியின் கூற்றாக வரும் குறுந்தொகைப் பாடல் வருமாறு:

மலையிடை யிட்ட நாட்டரு மல்லர்
மரந்தலை தோன்றா வூரரு மல்லர்
கணணிற் காண நண்ணுவழி யிருந்தும்
கடவு ணண்ணிய பாலோர் போல
ஓரீஇ யொழுகு மென்னைக்குப்
பரியலென் மன்யான் பண்டொரு காலே[13]

துறவிகள், முனிவர்கள் இவர்களின் ஒழுககமும, விரதமும், தமக்கென வாழாத பணபும மககளபால் பெருமதிபபினை உருவாக

11. பதிற்றுப் பத்து, 21 : 1—5.
12. பதிற்றுப் பத்து, உரை.
13. குறுந். 203.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிற்று. அதன் அடிப்படையில் ஏற்பட்ட அச்ச உணர்வே இக்குறுந் தொகைப் பாடலில் வெளிப்படுகிறது எனலாம்.

தமிழ் முனிவராகிய அகத்தியர்,

தென்னவர் பெயரிய துன்னருந் துப்பின்
தொன்முது கடவுள் பின்னர் மேய[14]

எனத் தொன்முது கடவுளாகக் குறிக்கப்பட்டுள்ளார். அகநானூறு அருந்ததியைக் கடவுள் கற்பினளாகச் சுட்டும். அருந்ததியின் கற்பு மற்றவர் கண்டு வணங்கக் கூடியதும், மற்றவர்கள் நெஞ்சில் அச்சம் தரக்கூடிய அளவிற்குத் தூய்மையானதும் ஆகும் என்பது புராணங்களின் கருத்து. இந்த அடிப்படையில்தான், பெண்களுக்குக் கற்பை வற்புறுத்த அருந்ததியை மேற்கோளாகக் காட்டிச் சொல்லும் மரபு வைதிக இலக்கியங்களிலும், அவற்றைத் தழுவிய தமிழ் இலக்கியங்களிலும் தோன்றியது. கண்ணகியை அருந்ததி யோடு ஒப்பிட்டுச் சொல்வதும் இதன் அடிப்படையில்தான்.

போற்றுதலுக்குரிய ஒழுக்கங்களையும், தூய வாழ்க்கை நெறி களையும் பின்பற்றி ஒழுகிய துறவிகள், அவர்கள் வாழ்ந்த காலத்தில் 'கடவுளாக' மதிக்கப்பட்டதைப் போலவே அவர்கள் மறைவிற்குப் பின்னரும் கடவுளாக மதிக்கப்பட்டனர். அகத்தியனாரைத் 'தொன்முது கடவுள்' என்பதும், அருந்ததியை 'வானத்து அணங் கருங் கடவுள்' என்பதும், கண்ணகியைக் 'கடவுட் பத்தினி' என்பதும் இம்மரபின் வெளிப்பாடாகும். இதனை வள்ளுவரும்,

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்[15]

என விளக்குவார்.

மேற்காட்டியவற்றிலிருந்து 'கடவுள்' என்ற சொல்லாட்சி இன்றைய பொருளில் வழங்காமல் வணங்கத்தக்க சான்றோரையும், போற்றத்தக்க பெண்டிரையும் சுட்டியுள்ளமை புலனாகின்றது.

நடுகற்கள்

ஒரு நாட்டின் பாதுகாப்பு அந்நாட்டை ஆளும் அரசனைச் சார்ந்துள்ள அளவிற்கு அவன் படைவீரர்களையும் சார்ந்துள்ளது என்பதே உண்மை. வீரர்களின் ஆற்றலும், அவ்வாற்றலை நன்கு பயன்படுத்திக்கொள்ளும் அரசனின் திறனும் ஒருங்கிணையும்போது

14. மதுரைக் காஞ்சி, 40—41.
15. குறள். 50.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் அந்நாடு எதிரிகளாலும் வீழ்த்தமுடியாச் சிறப்பினைப் பெறும். அதியமானின் வீரத்தையும் அவனது வீரமறவர்களின் ஆற்றலையும் விளக்கும் அவ்வையார்,

எறிகோ லஞ்சா வரவி னன்ன
சிறுவன் மள்ளரும் உளரே அதாஅன்று
பொதுவிற் றூங்கும் விசியுறு தண்ணுமை
வளிபொரு தெண்கண் கேட்பின்
அதுபோ ரென்னு மென்னையு முளனே[16]

என்பார்.

போரை நம்பியுள்ள ஒரு சமூக அமைப்பில் போருக்குரிய வீரர்களைப் பாராட்டுவதும், பலர் அறிய அவர்களின் வீரத்தைப் புகழ்ந்து, அவரவர் ஆற்றலுக்கு ஏற்பப் பரிசுகளை நல்குவதும் தமிழகத்தில் மட்டுமன்றி, கிரேக்கம் முதலான நாடுகளிலும் நடைமுறையில் இருந்த ஒன்றாகும். பெரிக்கிளீசு, தன்னோடு போரில் ஈடுபட்டு மறைந்த வீரர்களின் ஆற்றலைப் போற்றி ஆற்றிய சொற்பொழிவுகள் ஈராயிரத்து அய்ந்நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் சிறந்த சொற்பொழிவாக மதிக்கப்பட்டு வருகின்றது.[17]

போரில் பங்குகொள்ளும் வீரர்களுக்கு அரசன் பெருஞ்சோறு வழங்கலும், கள் வழங்கிச் சிறப்புச் செய்தலும் புறத்திணை இலக்கணமாகும்.

இவ்வாறு புண்படு குருதியில் பொலிந்த மானமறவர்கள் போர்க்களத்தில் மறைந்துபட்டால் அவர்தம் வீரத்தைப் பாராட்டி அவர்கட்கு நடுகல் எடுத்தல் மரபு. இம்மரபு இன்றளவும் தமிழர் வாழ்வில் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. இறந்தவர்களின் இறுதிச்சடங்கில் 'கல் எடுத்தல்' என்று இதனைச் சுட்டுவர்.

இவ்வாறு இறந்துபோன வீரர்கட்குக் கல் எடுத்தல் பற்றி ஆறு நிலைகளில் தொல்காப்பியர் விளக்குகின்றார். அவை, காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்து என்பன வாகும்.[18]

இவ்வாறு எடுக்கப்பட்ட நடுகற்கள் வணங்கத்தக்க பெருமதிப்பைப் பெற்றன. போருக்குச் செல்லும் வீரர்கள் தமக்கு வெற்றி

16. புறம். 89.
17. வெ. சாமிநாத சர்மா, ராசதந்திர யுத்தகள பிரசங்கங்கள், பெரிக்கிளிசு சொற்பொழிவு, ப. 130.
18. தொல். புறத்திணை இயல், 63.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டும் பொருட்டு நடுகற்களுக்குப் பீலிசூட்டி, ஆடுகள் வெட்டி, கள்ளை வைத்துப் படையலிடுவர். இதனை அம்மூவனார்,

வில்லேர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்
வல்லான் பதுக்கைக் கடவுட் பேண்மார்
நடுகற் பீலி சூட்டித் துடிப்படுத்துத்
தோப்பிக் கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்
போக்கருங் கவலைய........[19]

என்பார். இதைப் போன்றே மலைபடு கடாமும்,

ஒன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை எண்ணுமிகப் பலவே[20]

என்றும்,

செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவு ளோங்கிய காடேசு கவலை[21]

என்றும் வரும் பகுதிகள் நடுகல்லாகி நின்ற வீரர்களைக் கடவுளாக வணங்கிய நிலையினை உணர்த்தும்.

இவ்வாறு நடுகல்லாகி நின்ற வீரர்களை அவர்களின் வழித் தோன்றல்களோ, தலைவனாயின் அவனைப் பின்பற்றியவர்களோ வணங்கிப் பலியூட்டி விழாவெடுத்து மகிழ்ந்தனர். இதன்மூலம் மறைந்துபோன வீரர்களைப்போலத் தாமும் வெற்றி வீரர்களாக—அருஞ்சமம் சிதையத்தாக்கும் ஆற்றல் மறவர்களாகப் போற்றப்பட வேண்டும் என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டனர்.

நடுகற்களுக்குரிய வீரர்கள் பெரும்பாலும் கரந்தைத் திணைக் குரியவர்களாக—ஆநிரைகளை மீட்கும் போரில் தமது அணிக்கு வெற்றியைத் தந்து மாய்ந்த வீரர்களாக உள்ளனர். ஆநிரைகளைக் கவர்வதும் மீட்பதும் ஆகிய போர்முறை இனக்குழுக்களாக இருந்த சமூக அமைப்பிற்குரியது. நாகரிக வளர்ச்சி எவ்வளவு மாற்றங் களை உருவாக்கிய போதும் எதிரிகள் கவர்ந்து சென்ற ஆநிரை களை மீட்பது இன்றைய நிலையிலும் புகழுக்குரிய ஒன்றாகவே

19. அகம். 35.
20. மலைபடுகடாம், 386—389.
21. மலைபடுகடாம், 394—396.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருதப்படுகின்றது. எனவே ஆநிரைகளை மீட்பதற்காகவோ, அன்றித் தம் நாட்டைப் பாதுகாப்பதற்காகவோ நடந்த போரில் உயிர்துறந்து நடுகல்லாகி நிற்கும் வீரர்களைத் தவிர, தாம் வணங்கும் கடவுள் வேறொன்று இல்லை என்று சூளுரைக்கும்படி புறநானூற்றுப் பாடல் ஒன்று அமைந்துள்ளது.

ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளும் இலவே[22]

நடுகல் வணக்கம் கடவுள் வழிபாடாக உயர்ந்த நிலையினை இப் பாடல் சுட்டுகிறது. இந்த வளர்ச்சிக்கான காரணத்தைப் பின்வரு மாறு விளக்குவார் நா. வானமாமலை.

> இது போன்றதோர் வணக்கம் (நடுகல் வணக்கம்) உலகம் முழுதும் உள்ள இனக்குழு மக்களிடையே உள்ளது. தமிழகத்தில் நடுகல் வணக்கம் பண்டை வரலாற்றுக் காலத்தில் இருந்தது. 'நடுகல் வீரர்களின் ஆன்மாக்களுக்கு ஊரையும் மந்தையையும், ஊர் மக்களையும் பாதுகாக்கக் கூடிய ஆற்றல் உண்டென்ற நம்பிக்கையில்தான் அவர்க ளுடைய நடுகற்களுக்குப் 'பெரும்படை' செய்து, உணவும் கள்ளும் படைத்தும், ஆடிப்பாடி வாழ்த்தி மகிழ்விக்க முயன்றதும் ஆகிய செயல்களை ஊராரும், உறவினரும் செய்தார்கள். இறந்தவனது ஆன்மாவைக் கல்லில் நிலை யாக இருக்கச் செய்வதற்காகத்தான், பொருத்தமான கல்லை வெட்டிக்கொண்டு வந்து நீராட்டி, ஸ்தாபித்து, உணவும் கள்ளும் கொடுத்துப் பாராட்டினார்கள். வீரன் ஆன்மாவை 'இல்கொண்டு' சேர்த்தது, தங்களோடு இருந்து தங்களுக்குப் பசு, எருமை, ஆட்டு மந்தைகளைப் பாதுகாக்க ஆற்றலளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ... ...[23]

தமிழகச் சிற்றூர்களின் எல்லைப்புறங்களில் இன்றும் காவல் தெய்வங்களாக விளங்கும் 'அய்யனார்' கோவில்கள் அனைத்தும் முற்கால நடுகற்களின் எச்சங்களே. 'அய்யன்' என்ற சொல் 'ஆர்' விகுதி பெற்று 'அய்யனார்' என வழங்குகின்றது. 'அய்' என்ற அடிச் சொல்லிற்கு, தலைவன், படையை முன்னின்று நடத் தியவன், தந்தை, தாய் என்பவை பொருள்கள். வள்ளுவர்,

---

22. புறம். 335.
23. இரா. நாகசாமி (ப.ஆ.), நடுகற்கள், நா. வானமாமலை, ப. 52.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலர்என்னை
முன்னின்று கல்நின் றவர்[24]

எனச் சுட்டுவார். இதனை ஒப்பவே அய்யனாரைப் போன்றே 'வீரனார்' என்ற தெய்வமும் நாட்டுப்புற மக்களிடையே வழிபடப் பட்டு வருகின்றது.

இல்லுறை தெய்வம்

வீரனுக்கு நடுகல் எடுக்கப்பட்ட நிலையில் அவன் நினைவாகக் கள், புலவு ஆகியவற்றைப் படைப்பதும், அந் நடுகல்லிற்கு மயில் தோகைகளைச் சூட்டிப் புனைவதும் மரபாகும். அதியமான் இறந்த பின்னர் அவனுடைய நடுகல்லிற்குக் கள்ளை வைத்துப் படைத்ததை அவ்வையார்,

நடுகற் பீலி சூட்டி நாரரி
சிறுகலத் துகுப்பவுங் கொள்வன் கொல்லோ[25]

எனப் பாடுவார். நடுகல்லிற்குக் கள்ளுடன் உயிர்ப்பலி கொடுப்பதைத் தொல்காப்பியர் 'பெரும்படை' என்பார்.

தொல்காப்பியரைப் போலவே புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியரும் நடுகல்லின் அறுவகை நிலைகளையும் விளக்குகின்றார். கற்காண்டல், கற்கோள்நிலை, கல்நீர்ப்படுத்தல், கல்நடுதல், கல்முறை பழிச்சல், இற்கொண்டு புகுதல் என்பன புறப்பொருள் வெண்பாமாலையில் வரும் துறைகள்.[26]

இற்கொண்டு புகுதல்

மேலே காட்டிய அறுவகை நிலைகளில் 'இற்கொண்டு புகுதல்' என்பதற்கு, வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லிற்குக் கோயில் எடுத்தல் என விளக்கம் தருகின்றார் அய்யனாரிதனார்.

வேத்தமருள் விளிந்தோன் கல்லென
ஏத்தினர் துவன்றி இற்கொண்டு புகுதல்[27]

என்பது கொளு. இற்கொண்டு புகுதலைத் தொல்காப்பியர் கூறும் 'பெரும்படை' என்பார் இளம்பூரணர். 'அஃதாவது,

---

24. குறள். 771.
25. புறம். 232.
26. புறப்பொருள் வெண்பாமாலை, நூற்பா 13.
27. மே. நூ., நூற்பா, 14.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாட்டிய கல்லிற்குக் கோட்டஞ்செய்தல். அஃது இற்கொண்டு புகுதலென உரைத்த துறை'. (கோட்டம்—கோயில், படை—படைத்தல்) என்பது அவர் தரும் விளக்கம்.

கடவுளாக வழிபட்ட நடுகற்களுக்குத் தனியே 'இல்லங்கள்' கட்டப்பட்டன என்பதை மேற்கூறிய பகுதிகள் விளக்குகின்றன. இக்கோயில் கட்டும் மரபு மக்கள் வழக்கில் ஏற்பட்ட புதிய மரபாக இருக்கவேண்டும். தொடக்க நிலையில் அமைந்த நடுகற்கள் பெரும் பாலும் முல்லை நிலங்களுக்குரிய காட்டு வழிகளில் எடுக்கப்பட்டுள் ளன. 'உமணர் உப்பேற்றிச் செல்லும் வண்டிகளின் அச்சு உராய்ந்த தாலும், வேடுவர்கள் தம் அம்புகளைத் தீட்டியதாலும், நடுகற் களில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் படிப்போருக்கு மயக்கம் தந்தன'[28] என்ற குறிப்பு இதனை உணர்த்தும்.

எனவே வீரர்களை மதித்துப் போற்றிய மரபு அவர்கட்கு நடுகல் எடுத்துச் சிறப்பித்த நிலையிலிருந்து கோயில் கட்டி விழா வெடுக்கும் நிலைமைக்கு உயர்ந்துள்ளது என்பதைத் தொல்காப்பி யத்திலிருந்து அறிய முடிகிறது. பிற்காலப் பல்லவர், சோழர், பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்டுள்ள 'பள்ளிப் படைகள்' அனைத்தும் இற்கொண்டு புகுதலின் வளர்ச்சியாகும்.

இற்கொண்டு புகுதலும் இல்லுறை தெய்வமும்

தான் விரும்பிய தலைவனைத் தன் பெற்றோரும் விரும்பி மணவினைக்கு ஏற்பாடு செய்தனர். இது கண்ட தலைவி பெரிதும் மகிழ்ந்து, தன் காதலின் வெற்றிக்குக் காரணமாகிய இல்லுறை தெய்வத்திற்குப் பலிப்பொருளைச் செலுத்துவோம் எனத் தோழியை அழைப்பதாகத் தொல்கபிலர் என்னும் புலவர்,

> வல்லே வருக வரைந்த நாளென
> நல்லிறை மெல்விரல் கூப்பி
> இல்லுறை கடவுட்கு ஓக்குதும் பலியே[29]

எனப் பாடியுள்ளார்.

இல்லுறை கடவுளாகக் குறிக்கப்படும் 'கடவுள்' வீரவழி பாட்டின் அடையாளமாகிய நடுகல் வழிபாடே எனலாம். இன் றைய நிலையிலும் தமிழகச் சிற்றூர் மக்களிடையே நிலவிவரும் பழக்கம் குறிக்கத்தக்கது.

---

28. அகம். 277.
29. அகம். 282 : 15—18.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இளமையிலோ அல்லது எதிர்பாராத நிலையிலோ இறந்து போனவர்களின் ஆவி எங்குள்ளது என்று அறிய உடுக்கை (துடி) அடித்துக் கேட்பார்கள். உடுக்கை அடிப்பவன்மீது இறந்து போனவனின் ஆவி குடிபுகுந்து தான் இன்ன இடத்தில் அலைந்து கொண்டிருப்பதாகக் கூறும். உடனே இறந்துபோனவன் குடும்பத்தைச் சார்ந்த (பங்காளி) ஒருவனுக்கு மருள் வர, உடுக்கை அடிப்பவனும் மருள் வந்தவனும் மற்றவர்களுமாக இறந்துபோனவன் உயிர்விட்ட இடத்திற்குச் செல்வர். அங்கிருந்து ஒருபிடி மண்ணைக் கொண்டு வருவர். அம் மண் 'பிடிமண்' எனப்படும். அப் பிடிமண்ணை இறந்துபோனவனின் குடும்பத்திற்குரிய வயலிலோ, தோட்டத்திலோ கொண்டு வந்து மருள் கொண்டவன் வைப்பான். அவ்விடத்தில் சிறு மாடம் அல்லது அவரவரின் தகுதிக்கேற்பக் கட்டடம் எழுப்பி, இரும்பினால் செய்த வேல் ஒன்றை நடுவர். அவ்வேலையும், அக் கட்டடத்தையும் இறந்துபோனவனின் ஆவி நிலைபெற்றுள்ள இடங்களாகக் கருதி அவற்றுக்கான பலிகளைச் செய்து வணங்கி வருவர். இவ் வணக்கத்தைப் 'பட்டவன் கும்பிடுதல்' என்று அழைப்பர். இப்பட்டவனுக்குப் புத்தாடை, புலால் உணவு மற்றும் கள் ஆகியவற்றைப் படைப்பர். 'பட்டவன்' என்ற சொல் ஆநிரைகளை மீட்கும் பணியில் உயிர் துறந்த வீரனைக் குறிப்பதாகும். அவ்வாறு உயிர் துறந்த வீரர்களுக்கும் நடுகல் எடுத்துப் போற்றல் மரபு.

> கோவிசைய மயீந்திரபருமற்கு
> பதின் எட்டாவது
> மீவேணாட்டு ஆந்தைபாடி ஈசை
> பெரும்பாண் அரைசரு மருமக்கள்
> பொற்சேந்தியாரு சேவகரு
> தொறுக்கொண்ட ஞான்று
> மீட்டு பட்டான் (வே)ணாட்டு
> நந்தியார் கல்........[30]

என்பது கல்வெட்டு.

இனக்குழு மக்களிடையே நிலவிய இப்பழக்கம் இன்றும்கூடத் தன் சுவடு மாறாத வகையில் பின்பற்றப்பட்டு வருகிறது. இத்தகைய கடவுளர்களே இல்லுறை தெய்வங்களாகப் போற்றப்பட்டனர் எனலாம். தொல்காப்பியர் குறிப்பிடும் 'வழிபடு தெய்வம்' இவ் இல்லுறை தெய்வமாகவே இருக்கவேண்டும்.

---

30. நடன. காசிநாதன், (ப.ஆ.), கல்வெட்டு, ப. 41.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே[31]

என்பது நூற்பா. இத்தகைய பழக்கங்களுக்கான காரணத்தை,

> இவ் வினாக்களுக்கு விடையளிக்க, நாம் பண்பாட்டு மானிடவியல் ஆராய்ச்சி முடிவுகளுக்கும், நாட்டுப் பண்பாட்டு நம்பிக்கைகளுக்கும் நமது கவனத்தைத் திருப்ப வேண்டும். முதலில் இறந்துபோனவர்களின் ஆன்மா, அதனுடைய சத்தி பற்றி இனக்குழு மக்களுக்கும் பண்டைய நாகரிக நிலையிலிருந்த மக்களுக்கும் உலக முழுதும் சில நம்பிக்கைகள் இருந்தன. இறந்து போனவர்களுடைய ஆன்மாவிற்கு ஆற்றல் அதிகம். அது ஆக்கச் சத்தியாகவும். அழிவுச் சத்தியாகவும் வெளிப்படலாம். அவ் ஆன்மா அவர்களின் சந்ததியாரோடு தொடர்பு கொள்ளும். அவற்றைச் சடங்குகள், வழிபாடுகள், சாந்திகள் மூலம் சந்ததியார் மகிழ்வித்தால், அவர்களுக்கு அவர்களின் முன்னோர்களுடைய ஆவி ஆற்றலளிக்கும்; போரில் உதவும்; ஆடு மாடுகளைப் பாதுகாக்கும்; வயல்களில் விளைச்சலை அதிகப்படுத்த உதவும். இதற்காகத் தமது முன்னோர்களின் ஆவிகளுக்குச் சடங்குகள் நடத்தி ஊட்டுக் கொடுக்க வேண்டும்; படையல் போடவேண்டும். இதற்கு ஆன்றோர் வணக்கம் என்று பெயர்.[32]

என்று விளக்குவார் நா. வானமாமலை.

இவ்வான்றோர் வணக்கத்தை வள்ளுவர் தென்புலத்தார் வணக்கமாகக் குறிப்பதும் சிந்திக்கத்தக்கது.[33] எனவே இல்லுறை தெய்வம் என்பது பட்டவன் வழிபாடாக—ஆன்றோர் வணக்கமாக வந்த ஒரு மரபின் தொடர்ச்சி என்பது தெளிவு.

நடுகல்—இல்லுறைக் கடவுள்—முருக வணக்கம்

நடுகல்லிற்குக் கள்ளையும், புலவையும் படைத்து வணங்குவதுடன் அதனை மயிற்பீலியாலும் அழகுபடுத்தியுள்ளனர். புது வருவாயின் செழிப்பை விளக்கும் அடையாளமாக நெற்குவியல்களுக்கும், வீரத்தின் அடையாளமாக போருக்குச் செல்லும் வீரர்களுக்கும், வீர முரசுகளுக்கும் மயிற்பீலியைச் சூட்டியுள்ளனர். இதனை,

---

31. தொல். செய். 415 : 1—3.
32. இரா. நாகசாமி (ப.ஆ,), நடுகற்கள், நா. வானமாமலை, பக். 52—53.
33. குறள். 53.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பழன மஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் சூட்டொடு தொகுக்கும்[34]

நீலக் கச்சைப் பூவா ராடை
பீலிக் கண்ணிப் பெருந்தகை மறவன்
மேல்வருங் களிற்றொடு வேறூரந் தினியே
தன்னுந் துரக்குவன் போலும்[35]

ஒலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார்
பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக்
குருதி வேட்கை யுருகெழு முரசம்.........[36]

ஆகிய பகுதிகளால் அறியலாம். மேற்காட்டிய பகுதிகளிலிருந்து ஒரு சமூக அமைப்பு முழுமையிலும்—அதன் பண்பாட்டுத் தொடர்பான பழக்கவழக்கங்களில் மயிற்பீலி இடம் பெற்றிருப்பதைக் காண முடிகின்றது.

மயில்

மயில் குறிஞ்சி நிலத்திற்குரிய பறவை. குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருள்களில் ஒன்றாகிய மயில் அந் நிலத்திற்குரிய தெய்வமாகிய முருகனது ஊர்தி.

மணிமயி லுயரிய மாறா வென்றிப்
பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென[37]

என்று புறநானூறு இதனைக் குறிக்கும்.

முருகனுக்குரிய அடையாளப் பறவையாகிய மயிலின் பீலி மக்கள் பண்பாட்டு வாழ்வில் இடம் பெற்றுள்ளதா அன்றி, ஒரு மக்கட் சமூகத்தின் பண்பாட்டுச் சின்னங்கள் அச்சமூகத்தின் கடவுள் நம்பிக்கையோடு இடம் பெற்றுள்ளனவா என்பதும் ஆய்வுக்குரிய செய்திகளாகும்.

இனக்குழுக்களும் அடையாளங்களும்

தொல்பழங்காலத்தில் மனித சமூகம் இனக் குழுக்களாக வாழ்ந்த நிலையில், ஒவ்வோர் இனக்குழுவும் ஒரு மரம், செடி, கொடி அல்லது விலங்கு, பறவைகள் ஆகியவற்றோடு தொடர்பு

34. புறம். 13 : 10—11.
35. புறம். 274 : 1—4.
36. புறம். 50 ; 2—4.
37. புறம். 56 : 7—8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுத்திக் கொண்டன; அத்தொடர்பை வெளிப்படுத்த அவை தேர்ந்தெடுத்துக்கொண்ட மரத்தையோ அன்றி செடி கொடி பறவை விலங்கு ஆகியவற்றையோ தம் அடையாளச் சின்னமாகக் கொண்டன. இந்த நிலைமை இனமரபுச் சின்ன முறை அல்லது குலமரபுச் சின்ன முறை என மானிடவியலாளர்களால் சுட்டப்படு கின்றது. தொல்காப்பியர் நிலங்களுக்குரிய கருப்பொருளை உணர்த்தும்போது,

> தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
> செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
> அவ்வகை பிறவும் கருவென மொழிப[38]

என்று வரையறை செய்வது குலமரபுச் சின்ன முறைகளின் வளர்ச்சி நிலையே எனலாம். இக்கருத்து ஆராய்தற்குரியது.

குலமரபுச் சின்ன முறை

குலமரபுச் சின்ன முறையின் தொடக்கமே, சமூகத்தின் வரையறையை, அதன் வாழ்க்கை நெறியை விளக்கும் வகையில் அமைந்துள்ளது. இனக்குழு வாழ்வில் தனியுரிமை தோன்றாத நிலையில் தவழ்ந்த பொதுஉடைமையே அக்காலகட்டத்தின் வாழ்க்கை முறையாகும். ஆத்திரேலியப் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையினை ஆராய்ந்த தாம்சன் என்பார் தரும் விளக்கம் தமிழகத் தொல்குடி மக்களின் வாழ்க்கை முறையினை அப்படியே ஒத்துள்ளது.

> குலமரபுச் சின்ன முறையும் அதன் பழக்கங்களும் பக்குவப்பட்ட மதநெறி முறைகளினின்றும் மாறுபட்டவை. கடவுள் வழிபாட்டிற்கு மாறாகக் 'கட்டளையே' அங்கு இடம் பெற்றது. மந்திரசத்திக்கு ஆட்பட்ட நிலையில் தங்களின் குலமரபுச் சின்னத்தின்மீது தங்களுக்குள்ள உறுதியை வெளிப்படுத்துவர். கூட்டு முயற்சியாலும் உழைப்பாலும் அமைந்துள்ள சமூக அமைப்பு, தனிப்பட்ட உறுப்பினர்களைவிட உயர்வாக மதிக்கப்பட்டது. இவ்வாறு சமூகத்தின் வாழ்க்கையே கூட்டு முயற்சியின் அடிப்படையில் இயங்கி வந்தபோது அச்சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வோ, சமூக ஏற்றத்தாழ்வோ தோன்றவில்லை...... மதநெறிமுறைகளுக்கேற்ப வழிபாட்டில் மெருகு ஏற்பட்டதெல்லாம், மிகுதியான உற்பத்தி ஏற்பட்டுப் பலரின் உழைப்பில் சிலர் வாழக்கூடிய நிலை உருவான பின்னர்தான். இனக்குழுவிற்குத் தலைவனைத்

38. தொல். அகத்திணையியல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேர்ந்தெடுக்கும் மக்களாட்சி முறைக்கு முடிவு ஏற்பட்டுப் பரம்பரையாக வரக்கூடிய நிலைமை தோன்றிவிட்டது. இனக்குழுவின் அடையாளச் சின்னங்களுக்கும் வழிபாடுகளும் பலிகளும் நடத்தப்பட்டன. அந்த இனக்குழுவின் தலைவனே கடவுளுக்கு நிகராக மதிக்கப்பட்டான். பல்வேறு இனக்குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் வெற்றி பெற்ற இனக்குழு மற்றக் குழுக்கள்மீது தனது மேலாண்மையைச் செலுத்தியது. பிற குழுக்களின் சின்னங்கள், வெற்றி பெற்ற குழுக்களின் சின்னங்களாக ஏற்கப்பட்டன. ஆளும் இனத்தின் சின்னங்கள் அக்குழுவின் வணங்கத்தக்க கடவுள் நிலைக்கு உயர்த்தப்பட்டன.[39]

இந்தச் செய்திகளை முருக வழிபாட்டோடு ஒப்பிட்டால் முருக வணக்கம் இனக்குழு வாழ்விலிருந்து தோன்றியது என்பதும், முருகனுக்குரிய மயில், அவன் தலைமை ஏற்றிருந்த இனக்குழுவின் அடையாளம் என்பதும், முருகனின் கொடியில் உள்ள சேவலும், அவனது ஊர்தியாகிய மயில் மிதித்துக் கொண்டிருக்கும் பாம்பும் மற்ற இனக்குழுக்களின் அடையாளம் என்பதும் தெளிவாகும். இத்தகைய அடையாளத்தைத் தேர்ந்தெடுக்கும் மரபு வேட்டுவ நிலையில் உருவாகிறது என்பது குறிக்கத்தக்கது. தமிழ் அகத்திணை மரபு குறிஞ்சித்திணையிலிருந்து தொடங்குவதும், குறிஞ்சி நில மக்களின் தொழில் வேட்டையாடுதல் என்பதும் ஆய்விற்குரிய செய்திகளாகும்.

எனவே சங்க இலக்கியங்களில் நெற்குவியல்களிலும், வீரனது ஒப்பணையிலும், நடுகற்களிலும், முரசுகளிலும் இடம்பெற்ற மயிற் பீலி தொல்பழங்காலத்தில் பிற குழுக்களை அடக்கி ஆண்ட ஒரு குழுவின் அடையாளக் குறியீடு என்பதும், அவ்வினத்தின் தலைவனே 'சேயோனாகவும்', 'மடங்கா மயிலூர்தி மைந்தனாகவும்' குறிக்கப்படும் முருகன் என்பது தெளிவு.

இனக்குழுவின் தலைவன்—உரிமையும் கடமையும்

பரம்பரையாக வரும் இனக்குழுவின் தலைவன் அவ்வினத்தைக் காப்பாற்றும் வல்லமை பெற்றவனாக விளங்க வேண்டும். அத்தகைய ஆற்றல் பெற்ற அத்தலைவன் தனது குழுவில் உள்ள எந்தப் பெண்ணையும் கூடுதற்குரிய உரிமையைப் பெற்றவனாவான்.[40]

---

39. D. Chattopadhyaya, Lokayata Ref., pp. 140—141.
40. Annemarie—D—waal Male fijt, The Images of man, p. 295.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கியத்துள் முருகன் செவ்வேளாகவும், திருமணக் கடவுளாகவும் போற்றப்படுதலும், முல்லை நிலத்திற்குரிய மாயோன், ஆயர்பாடியில் உள்ள பெண்களின் காதல் தலைவனாகக் கொண்டாடப்படுவதும் இங்கே ஒப்புநோக்கத்தக்கன. உறவுப் பொருளில் வழங்கும் கணவன் என்ற சொல் இனக்குழு—கூட்டம் (குழு) ஆகிய பொருள்களை உணர்த்தும் 'கணம்' என்ற தமிழ்ச்சொல்லின் அடியாகப் பிறந்ததாகும். எனவே கணவன் என்ற சொல் கூடுதற்கான உரிமையைப் பெற்றவன் என்ற அடிப் படையில் வழங்கக் காணலாம். கூட்டம் கொண்ட சேவல் எனும் பொருளில் வரும் ''கணங்கொள் சேவல்'' என்ற குறுந்தொகை (107)ப் பாடலடியும் இதனை வலியுறுத்துகிறது.

மேலும், முருகனின் வழிபாட்டு நிகழ்ச்சியும் கூட நடுகல் வழி பாட்டின் தொடர்ச்சியே அது என்பதை உணர்த்தும்.

முருக வழிபாடு

நடுகல்லிற்குக் கள்ளையும் செம்மறியாட்டுப் பலியையும் படைப்பது போன்றே முருகனுக்கும் கள்ளையும் பலியையும் படைத்துக் குன்றக் குறவர்கள் வழிபட்டனர்.

'கோடைகாலத்தில் கனிந்ததும், தேனை ஒத்த சுவையினை உடையதுமாகிய மாம்பழச் சாற்றில், பலாவினது ஒத்தாற்போன்ற சுளைகளைக் கலந்து, அடையினின்று பிழிந்த தேனோடு சேர்த்து' அவற்றைக் கணு நீக்கப்பட்ட மூங்கிற் குழாயில் அடைத்து, பாம்பின் நஞ்சைப்போல வெறிகொள்ளுமாறு செய்த மதுவினை, உயர்ந்த மலையுச்சியில் வாழும் முருகனுக்குப் படைத்தார்கள்.'[41]

இப்படையலைச் செய்த குன்றக் குறவர்களுக்கு இளம் பெண்கள் அம்மதுவை ஊற்றிக் கொடுக்க, அவர்கள் இனிது மாந்தினர். அதனால் தமது திணைப்புனத்தில் யானை நுழைந்துவிட்டதைக் கூட அறியமுடியாதபடி மயங்கினர். புனத்தில் புகுந்த யானையை விரட்ட,

> இளையரும் முதியருங் கிளையுடன் குழீஇச்
> சிலையாய்ந்து திரிதரும்.........[42]

காட்சி குறவர்களின் இனக்குழு வாழ்வைச் சுட்டும்.

காதல் நோயால் வருந்திய தலைவியின் உடல் மெலிவிற்கான உண்மைக் காரணத்தை அறியமுடியாத தாய், வேலனை அழைத்து

41. அகம். 348.

42. மே. நூற்பா.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெறியாட்டு நடத்துகின்றாள். அவ்வேலன் வேண்ட வந்த முருக னாலும் தனது நோய்க்கான காரணத்தை அறியமுடியவில்லை என்கிறாள் தலைவி. 'முருகனே நீ கடவுளானாலும் ஆகட்டும் ஆனால் நீயோர் மடையன்'[43] என்னும் அவள் கூற்றில் முருகனை மிக எளிதாக மதித்த தன்மை தெளிவாகின்றது.

இவ்வாறு முருகன் கையில் வேலிருத்தல், அவனுக்குக் கள்ளைப் படைத்தல், ஆடுகளைப் பலிகொடுத்தல் மற்றும் திருமணக் கடவு ளாக மதித்தல் ஆகிய தன்மைகள் இனக்குழு நிலையில் தோன்றி வீர வழிபாட்டோடு கலந்து, குலமரபு அடையாளத்தோடு கூடிய வழிபாட்டின் வளர்ச்சியை உணர்த்துகின்றன என்பது தெளிவு. தொல்காப்பியர் முருகனைக் குறிஞ்சி நிலத்திற்குரியவனாகக் குறிப் பதும், நிலத்திற்குரிய உரிப்பொருட்கள் பலவற்றுள் ஒன்றுதான் தெய்வம் என்பதும் முழுமுதற் கடவுள் பற்றிய சிந்தனை தமிழர் களுக்கு இல்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன.

மரங்களும் கடவுள்களே

முனிவர்கள், வீரர்கள், முருகன், பத்தினிப் பெண்டிர் ஆகியோர் கடவுளராக மதிக்கப்பட்டதைப் போன்றே சில மரங் களும் கடவுளாக மதிக்கப்பட்டுள்ளன. இனக்குழு வாழ்க்கை நிலையில் குலக்குறிச் சின்னங்களில் மரங்கள் தலைமை இடத்தை வகித்தன. அத்தகைய அடையாள மரங்கள் கடவுளாக—கடவுள் உறையும் இடங்களாக வணங்கப்பட்டன.

அகநானூற்றின் 270ஆம் பாடல், கடவுள் மரத்தில் கூடுகட்டி யுள்ள பறவைகள்கூட அச்சஉணர்வின் காரணமாகப் புணர்தலைத் தவிர்த்தன என்று குறிக்கின்றது.

கடவுள் தன்மை வாய்ந்தவையாகக் கள்ளி, ஆல், கடம்பு, வேங்கை, பனை ஆகிய மரங்களும், காந்தள், தாமரை ஆகிய மலர் களும் குறிக்கப்பட்டுள்ளன. இதனைப் பின்வரும் எடுத்துக்காட்டு களால் அறியலாம்.

கள்ளி நீழல் கடவுள் வாழ்த்தி[44]

கடவுள் ஆலத்து தடவுச்சினை பல்பழம்[45]

---

43. நற். 34.

44. புறம். 260.

45. புறம். 199.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து[46]

எரிமருள் வேங்கைக் கடவுள் காக்கும்
குருகார் கழனியின் இதணத்து ஆங்கண்[47]

தொன்றுறை கடவுள் சேர்ந்த பராரை
மன்றப் பெண்ணை.........[48]

சோலை அடுக்கத்துச் சுரும்புண விரிந்த
கடவுள் காந்த ளுள்ளும்[49]

கடவுள் தாமரை[50]

இனக்குழு மக்கள் தங்கள் அடையாளச் சின்னங்களாகிய விலங்கு, பறவை ஆகியவற்றிற்குக் கொடுத்த முதன்மையை மரங் களுக்கும் கொடுத்துள்ளனர்.

மரவழிபாடு என்பது தொல்குடி மக்களின் வாழ்வோடு கலந் ததும் உலகந் தழுவிய தொன்மைக்கால வழிபாட்டு முறைகள் அனைத்திற்கும் முந்தியதும் ஆகும். வேளாண்மையை ஒட்டி எழுந்த தந்திர வழிபாட்டோடும் இதற்கு நெருங்கிய தொடர்பு உண்டு.

மனித இனம் நாகரிக முதிர்ச்சி பெற்ற காலத்திலும் மர வழிபாட்டின் சிறப்பு சற்றும் குறையவில்லை. மாறாகப் புதிய சமயக் கோட்பாடுகளின் வளர்ச்சியில் மரவழிபாடும் இணைந்து புதிய பொலிவினைப் பெற்றது. கிரேக்கர்களின் வரலாற்றில் சிறப் பிடம் பெற்றுள்ள ஒலிம்பிக் விளையாட்டு 'ஒலிவ மரத்தை' அடிப் படையாகக் கொண்டு வளர்ந்ததாகும். பரிசு பெறும் வீரர்களுக்கு ஒலிவ இலைகளால் அமைந்த மாலையை அணிவித்துச் சிறப்பு செய்தனர். அம் மாலை மதிப்பிற்குரியதாக—பெருமைக்குரியதாக மதிக்கப்பட்டது. பௌத்த சமயத்தில் அரசமரமும் (போதிமரம்), சமண சமயத்தில் அசோக மரமும், சைவ வைணவங்களில் ஆலமர மும் இனக்குழுவின் அடையாளச் சின்னங்கள் என்ற அடிப்படை யிலேயே இடம் பெற்றன. ஆலமரத்தில் இடி விழாது என்பதும்

46. நற். 313.
47. நற். 216.
48. நற். 303.
49. அகம். 152.
50. மதுரைக் காஞ்சி, 710.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எவ்வளவு மழை பெய்தாலும் அம்மரம் பாதுகாப்பைத் தரும் என்பதும் இந்திய மக்களிடையே உள்ள நம்பிக்கையாகும்.[51]

முருகனைக் கடம்ப மலர்களால் வழிபட்டதும், அவனுக்குக் 'கடம்பன்' என்ற பெயர் வழங்கியதும் ஒப்புநோக்கத்தக்கன. இன்றும் தமிழ் மக்களின் பெயர்களில் கடம்பன், வேம்பன், வேப்படியான், பனையடியான் என்னும் பெயர்கள் இடம் பெற்று வருவதைக் காணலாம்.

ஒவ்வொரு இனக்குழுவும் தனக்கென ஓர் அடையாள மரத்தைப் பெற்றிருந்தது. இதனைக் 'குலமரம்' என்றே குறித்துள்ளனர். அடையாள விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் வழங்கப்பட்ட உயர்வு குலமரங்களுக்கும் வழங்கப்பட்டது. அரசுகள் தோற்றம் பெற்று வளர்ச்சியடையும்போது காவல் மரங்களாகவும், கோவில்கள் சமூகத்தலைமை ஏற்றபோது அவை கோவில் மரங்களாகவும் (தலவிருட்சம்) வணங்கப்பட்டன. சில கோவில்கள் மர வழிபாட்டை ஒட்டியே வளர்ச்சி பெற்றுள்ளன. சிவனுக்குரிய பெயர்களாக வழங்கப்பட்டுள்ளவற்றில் சில மரங்களை அடிப்படையாகக் கொண்டவை.

குலக்குறி வழிபாடும் தந்திர வழிபாடும்

இந்தியச் சிந்தனையில் வேளாண்மையை ஒட்டி எழுந்த மந்திரச் சடங்குகள் தந்திரத்தின் அடிப்படையில் உருவானவை. மழைக்கும் மண்ணுக்கும் உள்ள தொடர்பும், மலர்களுக்கும் கனிகளுக்கும் உள்ள தொடர்பும், பெண்ணுக்கும் தாய்மைக்கும் உள்ள தொடர்பும் வளத்தின்—இனப்பெருக்கத்தின் அடிப்படையில் உருவகிக்கப்பட்டன. தொல்குடி மக்களின் சமயத் தலைமை பெண்களிடம் இருந்ததும், அவர்களே முதன் முதலாக விதை விதைக்கும் பொறுப்பேற்றதும் இனப்பெருக்கம் வளப்பெருக்கத்திற்கு ஆக்கந்தரும் என்பதால் ஆகும்.

> பாவேரியன் மற்றும் ஆத்தீரியப் பழங்குடியினரில் வேளாண்மைச் சடங்குகளைச் சூலுற்ற மகளிரே செய்தனர். தங்கள் தோட்டங்களில் பழுக்கும் முதற்கனியை, குழந்தையுள்ள தாய் உண்ணுவதன் மூலம் அந்த மரங்கள் நிறைய கனிகளைக் கொடுக்கும் என்று அம்மக்கள் நம்பினர், அத்துடன் குழந்தைப்பேறு இல்லாத பெண்கள் இத்தகைய சடங்குகளைச் செய்வதின்றும் தடுக்கப்பட்டனர். குழந்தைகளை உடைய பெண் மரங்களிலும்

51. சேன்பியர், இந்தியக் குடிசை, ப. 33.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிறையக் கனிகள் உருவாகச் செய்வாள். மலடி மரங்களையும் மலடாக்கி விடுவாள்.[52]

மொகஞ்சதாரோ, ஆரப்பாவில் கிடைத்த முத்திரைகளில், ஒரு பெண் தலைகீழாகத் தன் இருகால்களையும் அகட்டிய நிலையில் அவளின் பிறப்பு உறுப்பிலிருந்து ஒரு செடி வளர்ந்துள்ளது போனற முத்திரை ஒன்று கிடைத்துள்ளது (பார்க்க: சிந்துவெளி முத்திரை—பக்கம்—91) என்பது முன்னரும் குறிக்கப்பட்டுள்ளது. இம் முத்திரை பெண்ணே அனைத்திற்கும் தாயாக உள்ள நிலையினை உணர்த்துகின்றது. சட்டோபாத்தியாயா,

> மரஞ் செடி கொடிகளும் பழங்களும் பெண்ணின் பிறப்பு உறுப்போடு தொடர்பு கொண்டவை. தந்திரத்தில் பயன்படும் பூரணகும்பம் இதன் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. கும்பமாகப் பயன்படும் குடம் பெண்ணின் கருப்பையாகும்.[53]

என விளக்கி, இதுவே காளிபூசை (துர்காபூசை)யின் அடிப்படை என்பார்.

குலக்குறி அடையாளச் சின்னங்கள், இனக்குழு மக்களின் பாலுறவின் வெளிப்பாடு என்பார் சிக்மெண்ட் ஃபிராய்டு. மர வழிபாடு தந்திரத்தோடு தொடர்புடையது என்பதும், அத்தந்திரம் பாலுறவின் அடிப்படையில் உருவானது என்பதும் கருத, சிக்மெண்ட் ஃபிராய்டின் கருத்து வலுப்பெறுவதை அறியலாம்.

அரசுகளின் காவல்மரங்கள் வணங்கத்தக்க சிறப்பினைப் பெற்ற நிலை மரவழிபாட்டின் தொடர்ச்சியே ஆகும். அரசர்கள் தாம் படைகொண்டு சென்ற நாட்டை அழிப்பதும், அந்நாட்டிற்குரிய காவல் மரங்களை வெட்டி, அவற்றில் வீரமுரசு செய்வதும், அம்முரசுகள் வைக்கப்பெறும் கட்டில் கூட யாரும் தீண்டத்தகாத சிறப்பினைப் பெற்றதும் மரவழிபாட்டின் உயர்வினைப் புலப்படுத்தும். இத்தகைய காவல் மரங்கள் அந்த நாட்டு அரசனின் குல மரங்களாகும். பாண்டியர்கள் வேப்பம்பூவையும், சோழர்கள் ஆத்திப்பூவையும், சேரர்கள் பனம்பூவையும் சூடிக்கொண்டமை குலமர வழிபாட்டின் வெளிப்பாடாகும்.

தந்திரத்தின் ஒரு கூறாக விளங்கிய இக்குல மர வழிபாட்டினை,

> சத்தி வழிபாட்டின் மற்றொரு கூறு குலமர வழிபாடாகும். ஒரு சத்தி வழிபாட்டாளனின் முதற்கடமை காலையில் படுக்கையை விட்டு எழுந்ததும் தன் குலமரத்

52. D. Chattopadhyaya, Lokayata, Ref.. p. 287.

53. D. Chattopadhyaya, Lokayata, p. 295.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> திற்கு வணக்கம் செலுத்த வேண்டும்......குல மரத்திற்கு அடியில் (யாரேனும்) உறங்குவதோ அன்றி அதற்கு ஊறு விளைவிப்பதோ கடுமையான செயலாகக் கருதப்பட்டது[54]

என்று விளக்குவார் சட்டோபாத்தியாயா.

குலமரத்தின் அடியில் உறங்குதல் கூடாது, அதற்கு ஊறு செய்தல் கூடாது, அதன் முதற்கனியைச் சூலுற்ற மகளிரே உண்ண வேண்டும் எனல் ஆகிய நிகழ்ச்சிகளோடு நன்னன் சேய் நன்னனின் செயலை ஒப்பிட்டால் ஒரு புதிருக்கான விடையை அறிந்து கொள்ளலாம்.

> இளம் பெண் ஒருத்தி ஆற்றில் குளிக்கச் சென்றாள். அப்போது நீரில் மாங்கனி ஒன்று மிதந்து வர அதனை எடுத்து அப்பெண் தின்று விடுகிறாள். அதனால் அரசனின் காவலர்கள் அப்பெண்ணை அரசனிடத்து இட்டுச் சென்றனர். மாங்கனியைத் தின்ற குற்றத்திலிருந்து தன் பெண்ணை மீட்க, அவள் தந்தை அப்பெண்ணின் நிறைக்கேற்ப பொன்னுடன் எண்பத்தொரு யானைகளைக் கொடுப்பதாகக் கூறியும் அரசனாகிய நன்னன் ஒப்பாது அப்பெண்ணைக் கொலை செய்யும்படி ஆணையிட்டான். இப்பெண் கொலையால் நன்னனைப் புலவர்கள் பாடாது தவிர்த்தனர்.[55]

மாமரம் நன்னனது குலமரமாகக் கருதப்பட்டிருக்க வேண்டும். கடம்ப மரத்திற்குரியவனாகிய முருகன், அவனது எதிரியாகிய சூரபதுமனைக் கொன்றதை 'மாமுதல் தடிந்த' நிகழ்ச்சியாக இளங்கோ பாடுவார். சூரபதுமனின் குலக்குறி அடையாளமாகச் சேவல் இருந்ததைப் போன்றே குல மரமாக மாமரம் வணங்கப்பட்டது தெளிவு.

இத்தகைய வரலாற்றுப் பின்னணியில் சங்க இலக்கியங்களில் வரும் 'கடவுள் மரங்களை'க் கண்டால், அவை இனக்குழுக்களின் வாழ்வியலோடு தோற்றம் கொண்டு வளர்ந்த குலமர வழிபாட்டின் வெளிப்பாடு என்பதை அறியலாம். வேங்கை மரம் பூக்கும் காலத்தைப் பெண்களின் திருமணத்திற்குரிய பருவமாகத் தமிழர்கள் கருதி வந்ததும் இங்கு எண்ணத்தகும்.[56]

---

54. D. Chattopadhyaya, Lokayata, p. 294.
55. குறு. 292. } உரை
    புறம். 151. }
56. "பூத்த வேங்கை வியன்சினை ஏறி
    மயிலினம் அகவும் நாடன்
    நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே,"
    —யாப்பு மேற்கோள்—செந்தொடை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கந்து

தூண், கட்டுத்தறி என்னும் பொருள்களில் வழங்கும் கந்து அல்லது கந்தம் பற்றி முன்னர் விளக்கப்பட்டுள்ளது. கல்லிலோ அல்லது மரத்திலோ தூண்களைச் செய்து அவற்றை ஊர்ப் பொதுவில் நாட்டி, பலி முதலியவற்றால் வழிபாடு செய்து வந்துள்ளனர். மாற்றார் படையெடுப்பால் மக்கள் வெளியேறிய நிலையில் தூண்களும் கடவுள் தன்மையை இழக்கப் பொதுமன்றங்கள் பாழாயின என்பதை மருதனிள நாகனார்,

> கலிகெழு கடவுள் கந்தங் கைவிடப்
> பலிகண் மாறிய பாழ்படு பொதியில்[57]

என்று குறிக்கின்றார்.

இத்தகைய தூண்கள் ஆண்குறி வழிபாட்டின் எச்சங்களாகத் தொல்குடி மக்களால் வணங்கப்பட்டன. இந்தியாவில் குறிப்பாகத் தென்னகத்தில் ஆண்குறி வழிபாடு செல்வாக்குப் பெற்று விளங்கியது.

> ஆண்குறி வழிபாடு மத்திய கிழக்கு ஆசிய நாடுகளில் விரிவாகவும் ஆரவாரமாகவும் சடங்குகளோடு நடந்தேறியது. இந்தியத் துணைக்கண்டத்தில் குறிப்பாகத் தென்னகத்தில் திராவிட நாகரிகம் செழித்திருந்த காலகட்டத்தில் அதாவது இரானிய எகிப்திய குடியேற்றங்களுக்கு மத்திய காலகட்டத்தில் ஆண்குறி வணக்கம் நடைமுறையில் இருந்தது[58]

என விளக்குவார் பட்டாச்சார்யா.

இத்தகைய தூண்கள் பருத்த அடியினை உடையனவாக ஊர்ப் பொதுவில் உள்ள ஆலின் அடியில் எழுப்பப்பட்டிருந்தன. அழகிய

---

57. புறம். 52.
58. It is no wonder that the Indian sub-continent specially the southern peninsular regions, where the Dravidian culture predominated before the period of the great Iranian and Egyptian migrations, similar phallic trends prevailed.
    —Bhattacharya, Saivism and the Phallic World, Vol. I, pp. 58—59.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிற்றூர்களில் மழை இன்மையால் இத்தகைய கந்துக்களுக்குச் செய்யப்படும் நாட்பலிகள் நடைபெறவில்லை. இதனால், அக் கற்றூண்களில் 'மரை' என்னும் ஆண் மான்கள் தினவு தீர்க்கும் பொருட்டுத் தம் முதுகைச் சொறிந்து கொள்கின்றன.[59]

இக்குறிப்பால் கந்துகளுக்குச் செங்கற்களால் கட்டடம் எழுப் பியதும், நாள்தோறும் பூசை முதலியன நடந்ததும் புலனாகின்றன.

'மழை இன்மையால் அக்கந்துகளுக்கு வழிபாடுகள் நடக்க வில்லை' என்ற குறிப்பால் மழைக்கும் இக் 'கந்து' வழிபாட்டிற்கும் உள்ள தொடர்பினை மழை வளத்தின் அடிப்படையாகவும், அது வேளாண்மைச் சடங்கு அல்லது மாயை இயலோடு தொடர்பு கொண்டதாகவும் உள்ளதை ஒப்பிட்டு நோக்கக் கந்து வழிபாடு ஆண்குறி வழிபாட்டின் குறியீடே என்பது உறுதியாகிறது.

இத்தகைய கந்துடை மன்றங்களில் கொண்டி மகளிர் அந்திப் போதில் நந்தா விளக்குகள் ஏற்றி வழிபட்டனர். அத்தகைய மன்றங்கள் திருமாவளவனின் படையெடுப்பால் தம் பொலிவிழந்து, ஆண் யானைகளும் பெண் யானைகளும் உறையும் இடமாக மாறி விட்டன என்று பட்டினப்பாலை விளக்குகின்றது.[60]

பிற நாட்டை வெற்றி கொண்ட நிலையில் கவர்ந்து வரப்பட்ட பெண்கள் கொண்டி மகளிர் என அழைக்கப்பட்டனர். காலப் போக்கில் இப்பெண்கள் பரத்தமையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனை,

> ''வண்டிற் றுறக்கும் கொண்டி மகளிர்''[61]

என மணிமேகலை விளக்கும்.

திருமணக் கடவுளாகிய முருகனைக் 'கந்தன்' என்ற பெயரால் சுட்டுவதை நோக்க, முருக வழிபாடும் 'கந்த' வழிபாடும் ஆண் மேலாண்மைச் சமூகத்தில் தோற்றம் கொண்டு வளர்ந்தன என்பது தெளிவு.

வளத்தின் அடையாளமாகத் தோன்றிய பெண் தெய்வ வழி பாட்டின் வளர்ச்சியில் பெண்ணின் பிறப்புறுப்பு, கருப்பை, மார்பகம் ஆகியவை கடவுள் தன்மை பெற்றன. அதைப்போல ஆண் மேலாண்மைச் சமூகத்தில், இனப்பெருக்கத்தின் அடையாள மாகிய ஆண்குறி வழிபாடு அரசுகளின் தோற்றத்தில் வெற்றிக்குரிய

59. அகம். 288.

60. ப. பாலை. 246—251.

61. மணி. 18 : 109.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முருக வழிபாட்டோடு இரண்டறக் கலந்த நிலையில் முருகன் 'கந்தனாக'ச் சுட்டப்பட்டிருக்க வேண்டும்.

முருகன், சிவனின் மகனாகக் கருதப்பட்டபோது கந்தம் சிவ வழிபாட்டோடு—இலிங்க வழிபாட்டோடு இணைந்துவிட்டது. மேலும், சிவ வழிபாட்டோடு தொடர்பு கொண்ட காளை, பாம்பு ஆகியனவும் தொடக்க நிலையில் பாலுறவின் குறியீடாகத் திகழ்ந்து, காலப்போக்கில் சிவனோடு தொடர்புடையனவாயின.[62] இலிங்க வழிபாடு கந்து வழிபாட்டோடு கொண்ட தொடர்பினை,

> தமிழர்கள் வாழ்ந்த தீபகற்ப இந்தியாவில் உலகின் மற்ற இடங்களில் செழித்திருந்ததைப் போன்றே ஆண்குறி வழிபாடு செழித்திருந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் ஆண்குறி வழிபாட்டோடு தொடர்பு கொண்டதாக மேலைநாட்டு ஆய்வாளர்களால் நம்பப் படும் இலிங்க வழிபாடு கி. பி. முதல் நூற்றாண்டிற்கு முன்னர் இருந்ததன் தடயங்களைக் காணமுடியவில்லை என்றாலும் சிவ வழிபாட்டின் செழுமையில் இனக்குழுக் களின் ஆண்குறி வழிபாடு கலந்து ஒரு இணக்க நிலையினை அடைந்திருக்க வேண்டும் என்பதைப் புறக்கணிக்க முடிய வில்லை[63]

என்று விளக்குவார் பட்டாச்சார்யா. இக்கருத்தை அரண் செய்வதைப்போல அப்பர் நடுதறியினைச் (கந்து) சிவ வழிபாடாகவே உருவகிக்கின்றார்.

> கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே[64]

என்பது அப்பர் தேவாரம்.

சிவன்

தமிழ் இலக்கியங்களுள் மதுரைக் காஞ்சியில், அய்ம்பூதங்களின் தலைவனாகப் புனையப்படும் 'மழுவாள் நெடியோன்' சிவனே என்று உரையாசிரியர்கள் குறிக்கின்றனர். 'ஆலமர் கடவுளாக'வும் 'காரியுண்டிக் கடவுளாக'வும், 'நீலமணிமிடற்று ஒருவனாக'வும் சுட்டப்படும் சிவன், சிலப்பதிகாரத்தில்தான் முழுமுதற்கடவுளாக—பிறவா யாக்கைப் பெரியோனாக மாறுகின்றான்.

---

62. Bhattacharya, Saivism and the Phallic World, Vol. I, p. 59.

63. Ibid., p. 60.

64. அப்பர் தேவாரம், திருக்கன்றாப்பூர் பதிகம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரைக்காஞ்சியில் சுட்டப்படும் 'மழுவாள் நெடியோன்' கபாலிகத்திற்குரியவன் என்பது முன்னர் விளக்கப்பட்டுள்ளது. கபாலிகம் இன்ப வாழ்வை அடிப்படையாகக் கொண்டது. அப்படியாயின் சிவன் இன்ப வாழ்வின் நாட்டத்தை உணர்த்தக்கூடிய வகையில் உருவகிக்கப்பட்டவனாக இருத்தல் வேண்டும்.

> சிவ வழிபாடு இன்பவெறியுடன் இணைந்தது. இந்தியர்களின் கற்பனைப்படி சிவன் சுடுகாட்டில் ஆடுகிறான். சுடலைச் சாம்பலை மேனியில் பூசிக்கொள்கிறான். மண்டைகளால் ஆன மாலையைக் கழுத்தில் அணிகிறான். அவன் வறிய துறவி வடிவில் அய்யம் புகும்போது அவனது பிச்சைக்கலனாக உதவுவது மனிதனின் மண்டை ஓடு. அவனுடைய பிற பண்புகளும் அவனது வலிமையையும் பெருவிறலையும் புலப்படுத்துகின்றன[65]

என்ற கருத்து, சிவன் இன்ப வாழ்வோடு தொடர்புகொண்ட இனக்குழு மக்களுக்குரியவனாக விளங்கியவன் என்பதைப் புலப்படுத்தும். தமிழ் மரபில் ஆடற் கடவுளாகச் சிவன் புனையப்படுவதும் ஒப்புநோக்கத்தக்கது.

ஆரியரல்லாத இனக்குழுவுக்குரிய கடவுளாக விளங்கிய சிவன் வேதங்களில் சொல்லப்பட்டுள்ள உருத்திரனோடு தொடர்புகொண்டவனாக—அதாவது உருத்திரனே சிவன் என வேத வழி வந்த இலக்கியங்களில் புனையப்பட்டுள்ளான். இவ் இணைப்பு மிகவும் பிற்காலத்திற்குரியதாக இருக்கவேண்டும். ஏனெனில் வேதங்களில் சொல்லப்படும் உருத்திரன் பிற்கால உருத்திரனிலிருந்து முற்றிலும் மாறுபட்டவன்.

> மூன்று நான்கு பதிகங்களிலேயே பாடப்படுகிறான். வில்லையும் அம்புகளையும் கையில் வைத்திருப்பதாகப் பாடப்படுகிறான். மின்னல் அம்பும் இடியும் மிக அரிதாகச் சொல்லப்படுகின்றது. காட்டு விலங்குபோல் அஞ்சத்தக்கவனாகவும் அழிக்கின்றவனாகவும் வருணிக்கப்படுகிறான். 'சுவர்க்கத்தின் சிவந்த காட்டுப்பன்றி' என அழைக்கப்படுகிறான். இவன் கணைகளின் கொடுமை பெரிதாகப் பேசப்படுகின்றது.[66]

என்று உருத்திரனைப் பற்றிய செய்திகளைத் தொகுத்தளிப்பார் பே. க. வேலாயுதம்.

---

65. அன்தோனவா, மற்றும் பிறர், இந்திய வரலாறு, (த. ஆ.) பூ. சோமசுந்தரம், தொ. 1., ப. 214.
66. பே. க. வேலாயுதம், புராணம்: பொருளும் விளக்கமும் (கட்டுரை).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சுவர்க்கத்தின் சிவந்த காட்டுப் பன்றியாக' உருவகிக்கப்பட்ட உருத்திரனும், சிவனும் ஒன்றாக்கப்பட்டது—இணைக்கப்பட்டது, வட்டாரக் கடவுளை பார்ப்பனீய சமயத்திற்குள் ஈர்த்துவிட்ட தன்மையைச் சுட்டும் என்பார் வானமாமலை.[67]

எனவே இனக்குழுக்களுக்குரிய இன்பியல் கடவுளாக வணங்கப் பட்ட சிவன், பண்பாட்டுக் கலப்பால் வடமொழி மரபில் உருத்திர னாக உருவாக்கப்பட்டுள்ளான் என்பது தெளிவாகும்.

மண்டையோட்டினை மாலையாக அணிந்த சிவன், உருத்திர னானதும் செந்நிற மேனியனாகவும், மறைகளைக் கற்றுணர்ந்த அறிஞனாகவும், வேத விதிப்படி நடக்கும் வேள்வி முதல்வனாகவும் ஆரியமயமாக்கப்படுகின்றான்.

மாதிரம் அழலவெய் தமரர் வேள்விப்
பாக முண்ட பைங்கட் பார்ப்பான்[68]

என்னும் பரிபாடலில் சிவன் 'பார்ப்பான்' என்றே சுட்டப்படு கின்றான்.

மண்டையோட்டை மாலையாக அணிந்தவனின் மார்பில் பூணூல் போடப்பட்டுவிட்டது. இனக்குழுக்களின் காதற்கடவு ளாக இருந்தவன் 'வேத முதல்வனாக' மாறி முழுமுதற் கடவுள் என்ற நிலையினை எய்திவிட்டான்.

திருமால்

முல்லைநில இனக்குழு மக்களின் வழிபாட்டிற்குரியவனாக இருந்த மாயோனும், வேத வழிப்பட்ட கடவுளாக உருமாற்றம் கொண்டதும் ஏறத்தாழ இக்காலகட்டத்தில்தான் எனலாம்.

தொல்குடி மக்களின் இன்ப வாழ்விற்குரியனவாக வணங்கப் பட்ட வேலன், கடம்பன், முருகன், கந்து, மாயோன் ஆகிய அனைத்து வழிபாடுகளும் வேதத்தோடு தொடர்பு கொண்ட பின் னரே முழுமுதற் கடவுள் என்ற நிலையினை எய்தின. இதனைப் பரிபாடல் மிகவும் தெளிவாக விளக்குகின்றது.

மாயோனாகிய திருமால், வேதங்களில் தலைமைப் புரோகித னாகப் போற்றப்படும் பிரமனின் தந்தையானான்.

67. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப. 157.

68. பரிபாடல், 5 : 26—27.

Forwarded free of cost and with the Compliments of the Dept: of Education. Govt: of India. New Delhi.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

.... மலர்ந்த
தாமரைப் பூவினுட் பிறந்தோனுந் தாதையும்
நீயென மொழியுமால் அந்தணர் அருமறை[69]

நாவல் அந்தணர் அருமறைப் பொருளே[70]

வேதத்து மறைநீ[71]

ஆகிய தொடர்கள் திருமால் வைதிக மரபுக்குரியவனாக ஆக்கப்பட்ட செய்திகளைத் தெளிவுபடுத்துவன.

நற்றிணையில் கடவுள் வாழ்த்து திருமாலை வேதமுதல்வனாகக் காட்டுகின்றது. அத்துடன் அதர்வண வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடவுள் வணக்கப் பகுதி முழுமையாகத் திருமாலுக்கு ஏற்றப்பட்டுள்ளது. அப்பகுதி வருமாறு :

> எவனொருவனுக்கு கால் பூமியும் ஆகாயம் வயிறும் தலை நட்சத்திர லோகமுமாக இருக்கின்றதோ அத்தகைய பெருமை பொருந்திய பிரமத்திற்கு நமஸ்காரம்.
>
> எவனொருவனுக்கு சூரிய சந்திரர்கள் கண்களாகவும் அக்கினி வாயாகவும் இருக்கின்றதோ பெருமை பொருந்திய அந்தப் பிரமத்திற்கு நமஸ்காரம்.
>
> அண்டத்திலும் பிண்டத்திலும் இருக்கின்ற வாயுவானது எவனுடைய மூச்சுக்காற்றாய் இருக்கின்றதோ ஒளிகள் யாவும் எவனுடைய கண்ணொளியோ எல்லாச் செயல்களும் எவன் செயலோ அத்தகைய பெரிய பிரமத்திற்கு நமஸ்காரம்[72]

என்பதாகும். இப்பகுதியைப் பாரதம் பாடிய பெருந்தேவனார்,

மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற எல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே

---

69. பரிபாடல், 3 : 13—14.
70. மே. நூ., 2 : 57.
71. மே. நூ., 3 : 66.
72. அதர்வணவேதம், சம்கி. 10 : 23 : 4 : 32—34.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று தமிழ்ப்படுத்துவார். அதர்வண வேதத்தில் பெரிய பிரமமாக வணங்கப்பட்டது தமிழில் வேதமுதல்வனாக மாற்றப்பட்டுள்ளது உணரத்தக்கது.

இதன் தொடர்ச்சியாகத்தான் பக்தி இலக்கியங்களாக உரு வெடுத்த திவ்விய பிரபந்தம் மற்றும் தேவாரம், திருவாசகம் ஆகியவை திருமாலையும் சிவனையும் வேத வழிவந்த கடவுள்களா கவே காட்டின. சான்றாக,

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி யமனொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே[73]

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத் தும்மே[74]

என வேதவேள்வியைக் காப்பாற்றவும், அதற்கு மாறான கொள்கை யாளர்களை அழித்து விடவும் சிவனை வேண்டும் ஞானசம்பந்தன் பாடல்கள் அமைந்திருக்கக் காணலாம்.

பெண் மேலாண்மைச் சமூகமாகவும், இனக்குழு நிலையிலும் வாழ்ந்த தமிழர்களின் நம்பிக்கைகளில் உருவான குலக்குறி அடை யாளங்கள் மற்றும் கொற்றவை, முருகனாகிய சேயோன், மாயோன், ஆண்குறி வழிபாட்டின் உருவகமாகிய இலிங்கம் ஆகிய அனைத்தும் வைதிக நெறி தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற மிகப் பிற்காலத்திலேயே கடவுள் தன்மையைப் பெற்றன.

பெண்வழிச் சமூகம் ஆண்வழிச் சமூகமாக மாறுவது சமூக வளர்ச்சியின் ஒரு தவிர்க்க முடியாத கட்டம். இருப்பினும் வேத வழிப்பட்ட ஆரியர்கள் ஆண்வழிச் சமூகத்தைச் சார்ந்தவர்களாக இருந்ததால், அவர்களின் கடவுள்களும் அச்சமூகத்தின் வெளிப் பாடாக அமைந்தன.

> வேதத்தில் ஆணாதிக்கக் கருத்து வன்மையாகக் காணப்படு கிறது. பிரபஞ்ச முழுவதும் முதல் ஆணினின்றும் தோன்

73. சம்பந்தர் தேவாரம், திருஆலவாய்ப் பதிகம், 1 : 1—4
74. மே. நூ. பஞ்சாக்கரத் திருப்பதிகம், 2 : 1—4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> றியதாக இந்நூல் கூறுகிறது. இது ஏன்? அவர்களுடைய பொருளாதார அமைப்பை மீறி அவர்களுடைய கற்பனை செல்ல முடியாது. புருஷ சூக்தத்தில் சூட்சும சிந்தனை சிறிதளவு உள்ளது. ஆயினும் அச்சிந்தனை மாடு மேய்ப்பவர்களின் சமூகத்தில் வாழ்பவர்களது சிந்தனையாகவே உள்ளது. அவர்கள் ஆண்களின் உயர்வில் நம்பிக்கை உடையவர்கள்[75]

என்று வானமாமலை தரும் விளக்கம் ஒப்புநோக்கத்தக்கது.

தமிழ் இலக்கண இலக்கியங்களுள் நிலங்களுக்குரிய உரிப் பொருள்களுள் ஒன்றாகச் சொல்லப்பட்ட முருகன் முதலாய தெய் வங்கள் படிப்படியாக வளர்ந்து, வேத வழிப்பட்ட தெய்வங்களாக மாறியதும், வேதங்களோடு தொடர்புடையவர்களாகவும் வேத வேள்விகளை ஏற்றுப் பாதுகாப்பவர்களாகவும் கருதப்படுவதும் ஆகிய வரலாற்றுச் செய்திகள் பெரியார் ஈ. வெ. ரா. கூறிய 'மொழி உணர்வு தோன்றிய நிலையில் தமிழர்க்குக் கடவுள் உணர்ச்சி இருக்கவில்லை' என்பதை வற்புறுத்தும் வகையில் அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

தமிழர்கட்குக் கடவுள் உணர்ச்சி—அதாவது எல்லாவற்றையும் காக்கவல்ல கடவுள் மீதுள்ள நம்பிக்கை உணர்ச்சி இல்லாது போன தற்குக் காரணம் எதுவாக இருக்கவேண்டும்? அவர்கள் கொண் டிருந்த கோட்பாடு காரணமாகுமா? அப்படியாயின், இந்தியச் சிந்தனை மரபில் கடவுளுக்கு என்ன இடம் ஒதுக்கப்பட்டிருந்தது என்னும் வினாக்களுக்கு விடை கண்டாக வேண்டும்.

இந்திய மெய்யியல்களில் கடவுளின் இடம்

இனக்குழுக்களின் படிநிலைப் போராட்டமும் அதன் விளை வாக ஏற்பட்ட அரசுகளின் தோற்றமும் கால்கொண்ட நிலையில் தான் முழுமுதற்கடவுள் பற்றிய சிந்தனையும் இடம் பெற்றது.

காக்கும் தொழிலை அடிப்படையாகக்கொண்ட அரசர்கள், திருமாலின் பிறப்பாகக் கருதும் நிலையும் அக்காலகட்டத்திற்கு உரியதாகும். வேதங்களின் தொடக்கக்காலத்தில் இந்திரனுக்கு இருந்த செல்வாக்கு படிப்படியாகத் திருமாலுக்கு மாற்றம் பெற்ற தும் குறிக்கத்தக்கவை. கடவுள் தோற்றத்திற்கான காரணத்தை வானமாமலை பின்வருமாறு விளக்குவார்.

> வேதச் சிந்தனைகள் வளர்ச்சி பெற்று 'ஒரு கடவுள்' கொள்கை தோன்றியது. இதற்குக் காரணம் இனக்குழு

75. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப. 124.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> அமைப்புகள் அழிந்தும், அழிக்கப்பட்டும் அரசுகள் தோன்றியதே. அரசு மக்களை ஒரு வர்க்கத்திற்கு வன்முறையால் பணிய வைக்கும் கருவி. அது, மக்கள் மனத்தைப் பணிய வைக்கச் சமயங்களைத் துணையாக நாடிற்று. மனத்தில் 'பல கடவுளர்' பகுதி இருந்ததை ஒரே கடவுளாக மாற்ற அது தத்துவத்துறையில் முயற்சி செய்தது. இது ஒன்றே தான் ஒருகடவுள் வணக்கம் தோன்றக் காரணம் என நான் சொல்லவில்லை. ஆனால் அரசுகள் தோன்றிய பகுதிகளில் ஒரே கடவுள் வணக்கமும் தோன்றியது.[76]

எனவே, வேதச் சிந்தனையின் வளர்ச்சியில் மக்களை அடிமைப் படுத்தும் கருவியாக முழுமுதற்கடவுள் தோற்றம் கொள்கிறது என்பது தெளிவு. ஆனால் அடக்குமுறையின் கருவியான கடவுளையும், அதை வற்புறுத்திய வேதங்களையும் எதிர்த்தும் மறுத்தும் வந்த கோட்பாடுகளே சாமானிய மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தன.

கடவுள் மறுப்பாளர்கள்

நாத்திகர்கள் என்றும், விதண்டாவாதிகள் என்றும், பாசாண்டிகள் என்றும் கடவுள் மறுப்பாளர்களை வைதிகர்கள் தூற்றினாலும், நாத்திகர்களின் அளவியல் முறைகளுக்கு முன்னர் வைதிகர்கள் நிலைகுலைந்து போனதே வரலாற்று உண்மையாகும்.

> நாத்திகத்தை ஒப்புக்கொள்கிற தத்துவவாதிகளின் நோக்கங்கள் வெவ்வேறாயிருக்கலாம். ஆனால் 'கடவுள் இல்லை' என்பதற்கு அவர்கள் காட்டும் தருக்க வாதங்களில் ஒற்றுமை இருந்தது. பல கோணங்களில் தத்துவச் சிந்தனையில் வேற்றுமை வெளிப்பட்ட போதிலும் நாத்திகம் மிகவும் திருப்தி அளிக்கும் கருத்தாக இந்தியத் தத்துவ வாதிகளுக்குத் தெரிந்திருக்கிறது. மூன்று கேள்விகளுக்கு நாத்திகமே சரியான விளக்கம் தருவதாக இந்தியத் தத்துவவாதிகள் கருதினர்.
>
> 1. ஒப்புக்கொள்ளப்பட்ட தருக்க முறைகள் பெற்றாலாவது கடவுள் உண்டு என்று நிருபிக்க முடியுமா?
>
> 2. புற உலகின் தோற்றத்தை விளக்கக் கடவுள் உண்டு என்ற கொள்கை அவசியந்தானா?

---

76. நா. வானமாமலை, இந்திய நாத்திகமும் மார்க்சீய தத்துவமும், ப. 20.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> 3. மனித சுதியை விளக்கவும், மனிதச் செயல்களை அறியவும், உலகை நெறிப்படுத்தவும் ஓர் சக்தியை அவதானிப்பது அவசியமா?[77]

இம் மூன்று கேள்விகளுக்கும் விடைகாண முயன்ற மெய்யியல் அறிஞர்கள் கடவுள் என்னும் கருத்தை முற்றாக ஒதுக்கிவிட்டனர். அனைத்தாற்றலும், பேரறிவும் உடையவர்; நீக்கமற நிறைந்தவர் என்றும் கூறப்படும் கடவுட் பண்புகளை, குணரத்னா கடுமையாகச் சாடுகின்றார்.

> இக் குணங்களை எல்லாம் இல்லாத ஒன்றிற்குப் படைப்பது வீணானது. ஓர் அழகிய இளம்பெண்ணை, வீரியமற்றவனுக்கு அளிப்பது போன்றது இது. பாலுணர்ச்சி இல்லாதவனுக்கு, அழகிய இளம்பெண் எப்படிப் பயனற்றவளோ அதுபோலவே இல்லாத கடவுளுக்கு இந்த இயல்புகளும் பயன்படாது[78]

என்பது அவரது விளக்கம்.

இந்திய நாத்திகத்திற்குப் புது வடிவம் கொடுத்த பெரியார் ஈ. வெ. ரா.வும்,

> அது (கடவுள்) எப்படிப்பட்ட மனத்திற்கும் எட்டாதது, எப்படிப்பட்ட அறிவுக்கும் அறியக்கூடாதது. ஆதலால் உனக்குப் புரியவும் புரியாது; உன் மனதிற்கு எட்டவும் எட்டாது; நீ அதனை அறியவும் முடியாது. அதனால் தான் கடவுள் உருவமற்றவர், குணமற்றவர், யார் மனதுக்கும் புரியாதவர், எப்படிப்பட்ட அறிவாளியின் அறிவுக்கும் எட்டாதவர் என்று சொல்லப்படுகிறது என்றால் இது கட்டுப்பாடான அயோக்கியத்தனம் அல்லவா?[79]

என்று வினவுவார்.

கடவுளை வீரியமற்றவராகக் குறிப்பிடும் குணரத்னா சமண சமயத்தைச் சார்ந்தவர். சமண சமயம் மட்டுமல்லாது பௌத்தம், ஆசீவகம், சாங்கியம், உலகாய்தம் ஆகிய அனைத்தும் கடவுளை முற்றாக ஒதுக்கிவிட்டவை. வேதத்தை அடிப்படையாகக் கொண்

---

77. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப. 167.

78. நா. வானமாமலை, இந்திய நாத்திகமும் மார்க்சீய தத்துவமும், ப. 14.

79. கி. வீரமணி (ப. ஆ.), பெரியார் களஞ்சியம், தொ. 1, ப. 16.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டதும், கடவுள் நம்பிக்கையை வற்புறுத்துவதும் ஆகிய வேதாந் தம்கூட அதன் தொடக்க நிலையில் கடவுள் மறுப்புக்குரியதாகவே அதாவது முழுமுதற் கடவுள் பற்றிய கவலை கொள்ளாததாகவே விளங்கி வந்துள்ளதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். 'இந்திய நாத்திகம்' என்ற நூலில் சட்டோபாத்தியாயா,

> நமது நாட்டில் விளங்கும் பெரும் தத்துவப் பிரிவுகளில் வேதாந்தமும் (அதுவும் சில விதிமுறைகளுக்குட்பட்டு) பிற்கால மாறுதல்களோடு உருவாக்கப்பட்ட நியாய வைசேடியங்களும் மட்டுமே கடவுள் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டவை. இதற்கு மாறாக, புத்தம், சமணம், பூர்வமீமாம்சம், சாங்கியம், உலகாய்தம் மற்றும் தொடக்க கால நியாய வைசேடிகம் ஆகிய அனைத்து மெய்யியல்களும் கடவுள் மறுப்பையே அடிப்படையாகக் கொண்டவை. இவ்வாறு இந்திய அறிவுத்துறையில் மிகச் சிறந்த பங்கினை வகிக்கும் நாத்திகத்தைப் புறக்கணிக்க வேண்டுமானால் முதலில் இதனைச் சார்ந்திருந்த இந்திய மெய்யறிவாளர்களில் பெரும்பான்மையோரைப் புறக் கணித்தாக வேண்டும்.[80]

என்று தெளிவுபடுத்துவார். சட்டோபாத்தியாயா எடுத்துக்காட் டிய கடவுள் மறுப்புக் கோட்பாடுகளுள் 'ஆசீவகம்' குறிக்கப்பட வில்லை என்றாலும், அதுவும் கடவுள் மறுப்பை, வேத வேள்வி களின் புறக்கணிப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது என்பது தெளிவு.

அத்துடன் சாங்கியம், சமணம், ஆசீவகம், பௌத்தம் ஆகிய மெய்யியல்களின் மூலக்கூறு ஆரியர் வருகைக்கு முற்பட்டது; வேதங் களைச் சாராதது; அதாவது திராவிடர்களுக்கு உரியது என்ற சிம்மரின் கருத்தை அடியொற்றிக் காணும்போது இக்கடவுள் மறுப்புக் கோட்பாடுகள் அனைத்தும் திராவிடர்களுக்கே உரியவை என்பதும், அத்திராவிட நீரோட்டத்திற்குரிய தமிழ் இலக்கியங் களின் ஊற்றுக்கண்ணாக அவை விளங்குகின்றன என்பதும் தெளிவு.

---

80. Of all our major philosophies, only the Vedanta (with some reservation) and specifically the later version of the Nyaya Vaisesika were theistic. By contrast, Buddhism, Jainism, Purvamimamsa, sankhya, Lokayata and Nyaya Vaisesika in its original form were philosophies of committed atheism.
—D. Chattopadhyaya, Indian Atheism, p. 29.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சாங்கியத்தின் கடவுள் மறுப்பும்—திருக்குறளும்

இந்திய மெய்யியல்களில் மிகவும் தொன்மைவாய்ந்ததாகக் கருதப்படுவது சாங்கியம். திருக்குறளில் சாங்கியத்தின் கூறுகள் இருப்பது முன்னர்க் கூறப்பட்டுள்ளது. சாங்கியத்தின் கடவுள் மறுப்பை மாதவர், வாசற்பதி மிசுரா ஆகியோரின் உரைகளைக் கொண்டு விளக்குவார் சட்டோபாத்தியாயா.

சாங்கிய நாத்திகத்தின் இன்றியமையா இரு கூறுகளை விளக்கும் வாசற்பதி மிசுராவுடன் மாதவரும் உடன்படுகின்றார். அவ்விரண்டாவன:

1. மெய்ப்பொருள் ஆய்வின்படி கடவுள் என்ற கருத்தே பொருத்தமற்றது.

2. அளவை இயல் முடிவின்படியும் கடவுள் பற்றிய நம்பிக்கை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

.........மூலப்பிரகிருதி அதன் இயல்புப்படி அல்லது அதன் இயற்கை விதியின்படி இயங்கும் இயக்கமே இந்த உலகின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் காரணம். அதனால் கடவுள் பற்றிய சிந்தனை தேவையற்றதாகி விடுகிறது......... புல்லும், தண்ணீரும் பசுவால் செறிக்கப்பட்டபின், அதன் கன்றுக்குரிய பாலாக உருவாவதுபோல், பொருள்களின் இயல்புகளாலும் அவற்றின் கூர்தலற முறையினாலும் இந்த உலகமானது மூலப்பொருள்களினால் (மூலப்பிரகிருதி) உருவானது. எனவே இவ் வளர்ச்சிக்கு, இயற்கையை மீறிய ஆற்றல் இருப்பதாக நம்புவது தேவையற்றது. அத்துடன் இந்த உலகைப் படைக்கக் காரணமாகக் கடவுள் ஒருவர் இருந்தார் என்ற எண்ணத்திற்கே இடமில்லாது போய்விட்டது[81] என்று விளக்குவார்.

திருக்குறள், திராவிடச் சிந்தனையின்—அதாவது அய்ந்திர மரபின் வெளிப்பாடு. ஆதலால், அய்ந்திர மரபிற்குரிய கடவுள் மறுப்புக் கோட்பாடே திருக்குறளின் கோட்பாடாக விளங்க வேண்டும் என்பது ஒருதலை. திருக்குறளில் கடவுள் பற்றிய கூறுகளைக் காண்போர் அனைவரும், அதன் முதல் அதிகாரமாகிய 'கடவுள் வாழ்த்தை'யே சான்றாகக் கொள்கின்றனர். அம்முறை பொருத்தமற்றது என்பதை மூன்று அடிப்படைகளில் நிறுவலாம்.

1. தமிழ் இலக்கியங்களுள் பயிலும் கடவுள் என்ற சொல் எந்த இடத்திலும் கடவுளின் முழுமுதல் தன்மையைச் சுட்ட

81. D. Chattopadhyaya, Indian Atheism, p. 81.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வில்லை. மாறாகத் துறவிகள், கற்புடை மகளிர், நடுகல்லான வீரர்கள், முருகன் ஆகியோரையே குறித்துள்ளது. அத்துடன் கந்து, குலக்குறி மரங்கள் ஆகியனவும் கடவுள்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

2. திருக்குறளில் செல்வாக்குப் பெற்றுள்ள கருத்துக்களான சாங்கியம், யோகம், ஆசீவகம், பூதவாதம் ஆகியவை நாத்திகத்தை அதாவது கடவுள் மறுப்பை வரைந்து கொண்டவை.

3. பிற்காலத் தமிழ் இலக்கியங்கள் சிவனை வேத வழிப்பட்டவனாக, 'பைங்கட் பார்ப்பானாக' வேள்விகளை ஏற்றுக்கொள்பவனாகப் புனைகின்றன. திருமாலும் வேதங்களுக்குரிய முடி பொருளாகவே சுட்டப்படுகின்றான். சுருங்கக்கூறின் சிவன், திருமால் இருவரும் வேத வேள்விக்குட்பட்டவர்களாகப் புனையப்பட்டுள்ளனர். ஆனால் திருக்குறள் வேதவேள்விகளை மறுப்பது. தாமரைக் கண்ணன் வாழும் உலகைவிட, காதலியோடு வாழ்வதை மேலானதாக வற்புறுத்துவது. மேலும், சிவனைப் பற்றிய எவ்விதக் குறிப்பும் திருக்குறளில் இல்லை என்பதும் கருதத்தக்கது.

இக்காரணங்களை அடிப்படையாகக் கொண்டு திருக்குறளின் கடவுள் வாழ்த்தை மறுஆய்வு செய்தல் இன்றியமையாதது.

கடவுள் வாழ்த்தில் 'ஆதிபகவனாக', 'வாலறிவனாக', 'பொறிவாயில் அய்ந்தவித்தானாக'ப் பேசப்படும் அனைவரும் மானிடராக வாழ்ந்து, உயர்வு எய்தியோராவர். இவர்களைத் தொல்காப்பியர் காட்டும்,

> வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன்[82]

> வழக்கெனப் படுவ உயர்ந்தோர் மேற்றே
> நிகழ்ச்சி அவர்கட் டாக லான[83]

எனவரும், 'முனைவர்', 'உயர்ந்தோர்' எனலாம்.

அத்துடன் 'கடவுள் வாழ்த்து', 'நீத்தார் பெருமை' ஆகிய இரண்டு அதிகாரங்களையும் ஒப்பிட்டுக் காணும்போது அவை இரண்டிற்கும் இடையேயுள்ள தொடர்பினையும் புரிந்துகொள்ளலாம். சான்றாக,

---

82. தொல். பொருள். மரபியல், 640.

83. தொல். பொருள். மரபியல், 678.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொறிவாயில் அய்ந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்[84]

என்ற குறள்,

உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து[85]

என்ற குறளைத் தழுவியுள்ளது.

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு[86]

என்ற குறள்,

இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு[87]

என்ற குறளின் சாயலோடு திகழ்கிறது.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது[88]

என்ற குறளில் வரும் 'தனக்குவமை இல்லாதான்',

செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்[89]

என்ற குறளில் வரும் 'செயற்கரிய செய்யும் பெரியோர்' என்பது தெளிவு.

மேற்கூறிய இரண்டு அதிகாரங்களையும் ஒப்பிட்டுக் காணும் போது, இரண்டிற்குமுள்ள தொடர்பு விளங்குகின்றது.

ஆதலால் 'கடவுள் வாழ்த்தில்' சொல்லப்பட்டுள்ள 'ஆதி பகவன்' வள்ளுவர் சார்ந்திருந்த மெய்யியலின் நிறுவனர் என்பதும், நீத்தார் பெருமையில் சொல்லப்படும் 'நீத்தார்', 'துறந்தார்' என் பவர்கள் உடன்காலத்தில் வாழ்ந்த ஆன்றவிந்தடங்கிய சான்றோர்

84. குறள். 6.
85. குறள். 34.
86. குறள். 8.
87. குறள். 33.
88. குறள். 7.
89. குறள். 36.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களாய், மக்கள் இனத்தின் வழிகாட்டிகளாய் விளங்கியவர்கள் என்பதும் கொள்ளத்தக்கன.

> திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பகுதியில் இருக்கும் பாடல்கள் மேலே கூறிய அருக பரமனையும், சித்த பரமனையும் நோக்கிப் பாடிய பாடல்களேயாகும். எனவே அப்பகுதி அருக, சித்த வணக்கப்பகுதி என்று உரைக்கத்தக்கது என்பதில் தவறில்லை. அருகனை வணங்குதல் அவன் உலகத்துக்கு வழங்கும் கருணையின் பொருட்டாகும். சித்தனை வணங்குதல் அவன் நிலையே வாழ்க்கையின் இறுதியாகிய முடிந்தநிலை என்பதன் பொருட்டாகும். இந்த உண்மைகள் அடங்கியதே திருக்குறளின் கடவுள் வாழ்த்து[90]

எனக் 'கடவுள் வாழ்த்து' அதிகாரம் பற்றிச் சக்கரவர்த்தி நயினார் தரும் விளக்கமும் ஒப்புநோக்கத்தக்கது.

திருக்குறளின் செய்திகளைச் சக்கரவர்த்தி நயினார் சமணசமயத்தின் அடிப்படையில் ஆராய்ந்தவர். சமண சமயத்தின் தொடக்கம் திராவிடச் சிந்தனைக்கு உரியது என்பதால் திருக்குறளுக்கும் சமணசமயத்திற்கும் இடையேயுள்ள பொதுமை இயல்புகளைப் புறக்கணித்துவிட முடியாது. இப்பொதுமைப் பண்பு திருக்குறளின் வைதிக மறுப்பில் பொதிந்துள்ளது.

> திருக்குறளைப் பற்றி மேற்கொண்டு ஆராய்வதற்கு முன் திருக்குறளில் சொல்லப்படும் அறம், வேதநெறியினர் உரைத்த வருணாசிரம தருமத்திற்கு மாறுபட்டது என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும்[91]

என்னும் சக்கரவர்த்தி நயினாரின் கருத்து ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

மேற்காட்டிய பின்னணியில் ஆராய்ந்தால், திருக்குறளின் 'கடவுள் வாழ்த்து' உலகை நெறிப்படுத்தும் பொருட்டுத் துறவு பூண்டு வாழ்ந்து மறைந்த மாமனிதர் ஒருவர் பற்றிய வாழ்த்துரை என்ற உண்மை தெளிவாகும்.

---

90. அ. சக்கரவர்த்தி நயினார், திருக்குறள் வழங்கும் செய்தி, ப. 79.

91. மே. நூ., ப. 84.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகாய்தக் கோட்பாட்டில் அரசன்

தம் கோட்பாடுகளில் கடவுளை முற்றாகப் புறக்கணித்துவிட்ட உலகாய்தர்கள் நாட்டின் நலத்திற்கும், வளத்திற்கும் அரசனே அடிப்படையானவன் என்பதை வற்புறுத்தினர். மாதவர், சர்வ தர்சன சங்கிரகத்தில்,

லோகப் பிரசித்தனான ராஜா பரமேஸ்வரன்[92]

என்று உலகாய்தரின் கோட்பாட்டில் அரசனின் இடத்தை வகுப்பார்.

சிவஞான சுவாமிகள் உலகாய்தரின் அறமாக,

> ....இவ்வுண்மை உணராத மடவோர் மறுமை உண்டெனக் கொண்டு, தவங்கள், பட்டினி முதலியவற்றான் வருந்துவர். கற்பு முதலிய சங்கேத நூல்கள் மதுகை இன்றி மதியுடையோராற் செய்யப்பட்டன. பொன், நிலம், உணவு முதலிய தானங்களை உயர்த்திக் கூறும் நூல்கள், பசியால் வருந்தி நல்கூர்ந்தோராற் செய்யப்பட்டன. தேவகுலம், தண்ணீர்ப்பந்தர், கூவல், பொய்கை, சோலை முதலியன செய்தலை உயர்த்திக் கூறும் நூல்கள் வழிச்செல்வோராற் கூறப்பட்டன. ஆதலான் இவற்றைக் கைவிட்டு, உழவு, பசுக்காவல், வாணிகம், செங்கோன் முறைமை முதலியனவாக ஆன்றோர் காட்டிய நெறியினின்றும் இம்மை இன்பங்களை நுகர்ந்து வாழ்தல் உறுதிப் பயன் என்பதாம்[93]

என்று விளக்குவார்.

ஒரு நாட்டை ஆளும் வேந்தனே பரமேசுவரன்; அவனது கடமைகள் உழவு, பசுக்காவல், வாணிகம், செங்கோன்மை முதலிய இன்றியமையாச் செயல்களே. இந்த அடிப்படையில்தான் அரசனை உலகாய்தர்கள் கண்டார்கள். இந்த நோக்கில் அரசர்களின் கடமைகளை வற்புறுத்தியும், அவனது புகழுக்குரிய செயல்களாக வகுத்தும் தொகுத்தும் கூறும் புறநானூற்றுப் பாடல்களையும், பத்துப்பாட்டில் முருகாற்றுப்படை நீங்கலான பிற பாடல்களையும், திருக்குறளின் பொருளதிகாரத்தையும் ஆராய்தல் வேண்டும்.

---

92. கோ. வடிவேலுச் செட்டியார், சர்வதர்சன சங்கிரகம், ப. 9.
93. மணி. 27, பூதவாதி—உரை மேற்கோள், ப. 661.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மோசிகீரனார்

மன்னனை உயிராகக் கருதிப் போற்றிய இவரது பாடல், உலகாய்தக் கோட்பாட்டைப் பின்பற்றியதாக உள்ளது.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால் யானுயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே[94]

என்ற பாட்டும், பாட்டிற்கான,

> மன்னனுயிர்த்தென்ற கருத்து; உயிரையாக்கும் நெல்லும் நீரும் உளவாவது மன்னன் முறை செய்து காப்பின் என்றதாம்

என்ற உரை விளக்கமும் சிந்திக்கத்தக்கவை.

மோசிகீரனார், முரசு கட்டிலில் அறியாது உறங்கியபோது சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை விசிறி கொண்டு வீசிய அருள் மிகுந்த செயலை வியந்து பாராட்டியவர். 'தமிழ்' என்ற சொல்லைக் 'கண்ணோட்டம்' என்ற பொருளில் வழங்கியவர். அத்தகு புலவர் பாடிய இப்பாடல் முற்றிலும் உலகாய்தச் சிந்தனையின் வெளிப்பாடாக உள்ளது.

தொண்டைமான் இளந்திரையன்

பொதுவியல் திணையில், பொருண்மொழிக்காஞ்சித் துறையில் அமைந்துள்ள தொண்டைமான் இளந்திரையனின் பாடல், அரசன் பணியாற்ற வேண்டிய முறையை விளக்குகின்றது.

> அரசன் மாட்சிமைப்பட்டவனாக இருந்தால், அவனால் செலுத்தப்படும் ஆட்சிச் சக்கரமும் இனிதாகவும், பெருமைக்குரியதாகவும் இயங்கும். ஆனால் அதற்கு மாறாக, சக்கரத்தைச் செலுத்தும் வகையறியானாய் இருப்பின், நாளும் பகையாகிய சேற்றில் அழுந்திப் பலவாகிய துன்பத்தில் உழல்வான்[95]

என்று வலியுறுத்துகின்றது.

அரசன் 'பரமேசுவரனாக'க் கருதப்பட்ட தன்மையானது அரசனுக்குக் கடவுள் தன்மைகளைக் கற்பிக்கும் நோக்கத்தில் அன்று. காக்கும் தொழிலை மேற்கொண்ட அரசனைத் தவிர, அரசனுக்கு மேற்பட்ட கடவுள் என்பது ஒன்று இல்லை என்பதை வற்புறுத்தவே ஆகும்.

94. புறம். 186.
95. புறம். 185.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைதிக மரபில் அரசன்

அரசனைத் தவிர வேறு கடவுள் என்பது ஒன்று இல்லை என்ற உலகாய்தச் சிந்தனைக்கு மாறாக, 'கடவுளின் ஆற்றலைக் கொண்டவன் அரசன்' என்ற எண்ணம் இந்தியச் சிந்தனையில் மெல்ல மெல்ல அரும்பிப் பின்னர் கடவுளின் மானிட வடிவமே அரசன் என்ற உருவகம் நிலைபெறத் தொடங்கிவிட்டது. இக்கால எல்லையில் அரசனுக்கு இறைமைத் தன்மையை ஏற்றியும், அதற்குரிய பண்புகளை உடையவனே அரசன் என்றும் இந்திய இலக்கியங்கள் குறிப்பாக, வடமொழி அறநூல்களும் (தரும சாத்திரங்கள்) பிற்காலத் தமிழ் இலக்கியங்களும் வற்புறுத்தத் தொடங்கின.

அறநூல்களும் இறைமாட்சியும்

அரசனைக் கடவுள்களின் பல்வேறு ஆற்றல்களைக் கொண்டவனாக மனுதருமம் புனைகின்றது.

> இந்திரன், காற்றுக்கடவுள், யமன், தீ, கதிரவன், நிலவு, செல்வக் கடவுளாகிய குபேரன் ஆகிய தெய்வங்களின் தன்மைகளைக் கொண்டு பிரமன் அரசனைப் படைத்தான்

என்று தொடங்கி,

> சிறு குழந்தையாக இருந்தாலும் அரசன் அரசனே. அவன் மற்றவர்களைப் போன்றே சாதாரண மனிதன் அல்லன். மாறாக மக்கள் முன் தோன்றிய ஒரு பெரிய தெய்வத்தின் மானிட வடிவமாவான்[96]

என்று மானிட வடிவம் பெற்ற கடவுளாகவே காட்டுகின்றது.

நாரதமிருதி, அரசனை இந்திரனின் வடிவமாகச் சொல்லும். அரசன் எவ்வளவு குறைபாடுகளை உடையவனாக இருப்பினும் அவன் மக்களால் போற்றத்தக்கவன். அவன் தீ, இந்திரன், சோமன், யமன், குபேரன் ஆகிய அய்ந்து தெய்வங்களின் பண்புகளைப் பெற்றவன் என்றெல்லாம் அந்நூலில் அரசன் புனையப்படுகின்றான்.

அரசனை இந்திரனோடும், யமனோடும் ஒப்பிட்டு அர்த்தசாத்திரம் விளக்கியுள்ளது.

அரசர் கண்கூடாக அளியும் தெறலும் உடையோர் ஆதலின், 'இந்திரனையும் மறலியையும் ஒப்பாவர்.' அவ்வரசரை அவமதிப்

96. மனுதர்மம், 7 : 37—38,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போரைத் தெய்வமும் ஒறுப்பதாகும். எனவே அரசர் அவமதிக்கத் தக்கவரல்லர்[97] என்பது நூற்பாவின் கருத்து.

இவ்வாறு அரசனைத் தெய்வங்களின் பண்புகளைக் கொண்டவனாக, குறிப்பாக இந்திரன், யமன் ஆகியோரின் பண்புகளைக் கொண்டவனாகப் புனையும் இயல்பு படிப்படியாக மாறி, 'அரசன் திருமாலின் வடிவம்' எனச் சொல்லும் புதிய மரபு உருவாகின்றது. மகாபாரதம் வன பர்வத்தில் சொல்லப்படும் ஒரு நிகழ்ச்சி வருமாறு:

> அத்திரி, வைஸ்யராசனிடம் பணம் பெற்று அவனைப் புகழ்ந்தார். கௌதமரிஷி இந்திரன் யாவருக்கும் அரசனாக இருப்பதால் அவனை மட்டும் புகழலாம். நீர் செய்தது தவறு என்று மறுத்தார். ஆனால் சனத்குமாரர் எல்லா அரசர்களிடத்தும் மகாவிஷ்ணு அமிசம் இருப்பதால் அவர்களைப் புகழ்ந்து கூறலாம் என்று நியாயத்தை எடுத்துரைத்தார்.[98]

இந்திரனின் சிறப்புக்கள் படிப்படியாக விட்டுணு ஆகிய திருமாலுக்குரியனவாகச் சொல்லப்பெற்ற போக்கினை இந்நிகழ்ச்சி உறுதிப்படுத்துகின்றது.

அரசர்கள் திருமாலாக உருவகிக்கப்பட்டதால், திருமாலின் மனைவியராகிய நிலமகளும், திருமகளும் கூட அரசர்களின் மனைவியராக்கப்பட்டனர். பல்லவர் காலத்துக் கொற்றங்குடிச் செப்பேட்டின் வடமொழி நூற்பா,

> திருமகளும், புவிமகளும் இந்த வமிசத்தில் பிறந்த அரசர்களுடைய மனைவிகளாக ஆனபடியால் எதிரி அரசர்களின் கூட்டங்களுக்குப் பொதுமகள் அல்லாத நிலையை அவர்கள் அடைந்தனர்[99]

என அமைந்துள்ளது.

தமிழ் இலக்கியங்களுள் முத்தொள்ளாயிரம், சேர சோழ பாண்டியர் மூவரையும் திருமாலின் பிறப்புகளாகப் புகழ்ந்துள்ளது. அத்துடன் திருமால் நப்பின்னையின் கணவனாகவும் குறிக்கப்பட்டுள்ளான்.

---

97. கௌடலீயம் 1 : 13, பக். 75—76
98. கே. எஸ். இராமசாமி சாஸ்திரி, மகரிஷிகளின் வரலாறு, ப. 35.
99. பல்லவர் செப்பேடுகள் பத்து, கொ. செ., 4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிற்காலச் சோழ பாண்டியர்களின் மெய்க்கீர்த்திகளும் அவர்களைத் திருமாலாகவும், அவர் தம் மனைவியரை நிலமகளாகவும் திருமகளாகவுமே உருவகித்துள்ளன. மெய்க்கீர்த்திகளுக்கெல்லாம் பிற்பட்ட காலத்தவரான பரிமேலழகர் திருக்குறள் உரையில்,

> உலகபாலர் உருவாய் நின்று உலகங்காத்தலின்
> இறை என்றார்

என்று குறிப்பிட்டுள்ளார். திருமங்கை ஆழ்வார்,

> திருவுடை மன்னரைக் காணின்
> திருமாலைக் கண்டேனே[100]

என்று கூறியுள்ளதைத் தம் உரைக்குச் சான்றாகக் காட்டுவார் பரிமேலழகர்.

அரசர்களைத் திருமாலாகக் காணும் மரபு இந்தியச் சிந்தனையில் மிகவும் பழமையானது. அதோடு ஆய்வாளர்களின் சிந்தனைக்குரியதாகவும் இருந்து வருவது.

அரசனைத் திருமாலாகக் காண்பவர்கள் அவனது ஆணைச் சக்கரத்தைத் திருமாலின் சக்கரப் படையோடு தொடர்புபடுத்துவர். திருமாலின் சக்கரத்தை ஞாயிறு வழிபாட்டின் உருவகமாகவும், வேளாண்மை மாயை இயலோடு தொடர்பு கொண்டதாகவும் ஆய்வாளர் குறித்துள்ளனர்.[101]

நிலத்தில் அனைத்து வளங்களுக்கும் காரணமாக நிற்பது கதிரவனின் ஒளியே ஆகும். நிலத்தைக் கதிரவனின் மனைவியாகக் கற்பிப்பதும் இதன் அடையாளமே. திருமாலோடு தொடர்பு கொண்டுள்ள நிலமகள் இதன் வளர்ச்சியே ஆகும். நிலத்தில் தோன்றும் வளங்களின் உருவகமாகவே 'தாமரை' விளங்குகின்றது. திருமாலே நீர்க் கடவுள் என்ற நாராயணனாகவும் புனையப்பட்டுள்ளான். இந்நிலையில் கடலின் வளங்களைக் குறிக்கும் குறியீடே 'சங்கு' ஆகும். மனித வாழ்வின் செழுமையை, செல்வப் பெருக்கை உருவகிக்கும் 'சங்கநிதி', 'பதுமநிதி' இரண்டும் ஞாயிறு, திருமால் வழிபாட்டின் வளர்ச்சிக் கட்டங்களில் உருவகிக்கப்பட்ட உருவகங்களே.

அரசன் திருமாலின் வடிவமாக உருவகிக்கப்பட்டபோது, அவன் ஆளும் நிலமும், அவன் வளங்களும் கூட அவனது மனைவிய

---

100. பரிமேலழகர்—குறள். 102, உரை மேற்கோள்.
101. Sri Vatsa, Sun Worship in Early India, p. 96.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ராகச் சொல்லப்படும் நிலை ஏற்பட்டது. 'திருவீழ் மார்பின் தென்னவர் கோவே'[102] என்பதால் இது உறுதிப்படுகிறது.

அரசனது ஆணையைச் சக்கரத்தோடு உருவகிக்கும் மரபு தமிழ் இலக்கியங்களில் செல்வாக்குப் பெற்றுள்ளதை அறிய முடிகின்றது.

> ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
> காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
> மேரு வலந்திரித லான்[103]

என்பார் இளங்கோவடிகள்.

அரசர்கட்கு இறைமைத் தன்மையைச் சார்த்திக் கூறும் மரபு உருப் பெறாத காலகட்டத்திலேயே கதிரவனை அரச முறைகளோடும், அவனது ஆட்சியின் தன்மைகளோடும் சார்த்திக் கூறும் மரபு உருவாகிவிட்டது. இதனைச் சமண, பௌத்த இலக்கியங்கள் விளக்கியுள்ளன.

சமண சமயத்தில் இறைமாட்சி

சமண தீர்த்தங்கரருள் முதலாமவராகக் கருதப்படும் இடப தேவர் சமயத் தலைவராக மட்டுமல்லாது பேரரசராகவும் திகழ்ந்தவர். இவரைப்பற்றி மகாபுராணத்துள் சொல்லப்பட்டுள்ள செய்தி குறிக்கத்தக்கதாகும்.

> இடபதேவர் மூன்று நிலைகளில் வணங்கப்பட்டார். முதல்நிலை மந்திரங்களில் பெற்ற ஆற்றல். கதிரவன், நிலவு, உருத்திரன் மற்றும் சிறு தெய்வங்களின் மீது இவர் செலுத்திய ஆதிக்கத்தின் காரணமாக இவர் மதிக்கப்பட்டார். இரண்டாவது ஒரு தந்தையின் நிலையாகும். குடிமக்களின் இன்பத்தில் இவர் கண்ட மகிழ்ச்சி, ஒரு குழந்தையின் மகிழ்வில் பங்கு பெறும் தந்தை பெறும் மகிழ்ச்சியைப் போன்று விளங்கியது. மூன்றாவது, குடிமக்களின் நலனில் இவர் கொண்டிருந்த அக்கறை இவரை ஒரு மன்னனாக உயத்தியது.[104]

இடபதேவர் அருகராகவும், ஆதிநாதராகவும் வணங்கப்படுபவர். இவரின் அளப்பரிய ஆற்றலுக்காகவும், இவரது அறவுரை

102. சிலம்பு—வழக்குரை காதை, 23.
103. சிலம்பு. மங்கல வாழ்த்துப் பாடல்.
104. அ. சக்கரவர்த்தி நயினார், திருக்குறள் வழங்கும் செய்தி, பக். 81—82.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள் நாடெங்கும் பரவ வேண்டும் என்பதற்காகவும் தேவர்கோனா கிய இந்திரன் இவருக்காக ஒரு மாளிகை சமைத்தான். 'இந்த மாளிகை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அசைந்து செல் லும் தன்மையது. இதற்குச் 'சம்வ சரணம்' என்பது பெயர். இம் மாளிகை இரண்டு காரியங்களுக்குப் பயன்படும். ஒன்று அருக பரமனை அவர் போகிற இடத்துக்குச் சுமந்து செல்லும். இரண்டா வது, அருகபரமன் அறவுரை செய்யும் இடத்தில் மக்கள் திரள்வதற் கான மண்டபமாகவும் பயன்படும். மேலும், தேவர்கோன் முனைவ ருக்காக இரண்டு துணைக்கலங்களை அளிக்கின்றான். ஒன்று தெய்வத் தாமரை; மற்றொன்று தருமச் சக்கரம். முனைவர் மண்டபத்தில் இருக்கும்போதும், அறவுரை பகரும்போதும் தாமரை அவர்தம் பாதங்களைத் தாங்கி நிற்கும்; தருமச் சக்கரம் திருமாளிகையின் முன்பு சுழன்று கொண்டிருக்கும்.[105]

இங்கே குறிக்கப்பெறும் தருமச் சக்கரம் கதிரவனின் உருவகம் ஆகும். நல்லாட்சி புரியும் மன்னவன் மாளிகையில் இத்தருமச் சக்கரம் ஒளி காட்டும் என்பதைச் சமணப் புலவராகிய திருத்தக்க தேவர்,

> உறங்கு மாயினும் மன்னவன் தண்ணொளி
> கறங்கு தெண்டிரை வையகம்காக்குமால்[106]

எனக் குறிப்பார்.

சுவத்திகா

சமண சமயத்தில் மங்கலச் சின்னமாகக் கருதப்படும் சுவத்திகா, மேலே காட்டிய தருமச் சக்கரத்தின் குறியீடே ஆகும். கதிரவனின் இயங்குநிலை அல்லது சுழற்சி நிலையைக் குறிக்கும் அடையாளமே சுவத்திகா. மொகஞ்சதாரோ, ஆரப்பா புதை பொருள் ஆய்வில், இத்தகைய வடிவம் கொண்ட முத்திரைகள் நிறையக் கிடைத்துள்ளன. சுவத்திகா பற்றி ஆராயும் சுவெல் முதலான அறிஞர்கள் இதற்கு வைதிக வடிவம் கொடுக்க முற்பட் டுள்ளனர்.

> இச்சொல் (சுவஸ்திகா) 'சு', 'அஸ்தி' என்ற இரு சமற் கிருதச் சொற்களின் கூட்டாகும். 'சு' என்பதற்கு நல்லது என்றும் 'அஸ்தி' என்பதற்கு 'இருப்பது' என்றும் பொருள்

105. அ. சக்கரவர்த்தி நயினார், திருக்குறள் வழங்கும் செய்தி, ப. 83.

106. சீவகசிந்தாமணி, 248 : 1—2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> எனவே சுவஸ்திகா என்ற சொல்லிற்கு, 'நன்றாக இருக்கிறது' என்பது பொருள்[107]

என்பது சுவெல் தரும் விளக்கம்.

புதைபொருள் ஆய்வுகளோடும், மானிடவியல் ஆய்வுகளோடும் 'சுவத்திகா'வை ஒப்பிடும்போது கிடைக்கின்ற செய்தி வேறொன்றாக உள்ளது. 'இந்தியாவில் ஞாயிறு வழிபாடு' பற்றி ஆராயும் சிரீவத்சா குறிப்பிடுவதாவது:

> தொடக்கத்தில் சுவத்திகா ஞாயிற்றின் இயக்கத்தைக் குறிக்கும் அடையாளமாகத் திகழ்ந்து பின்னர் வானியல் இயக்கத்தின் குறியீடாக மாறியது. பின்னர் இயங்கும் பொருள் அனைத்தையும் குறிக்கும் பரந்துபட்ட தன்மையைச் சுட்டி நின்றது.[108]

மொகஞ்சதாரோ, ஆரப்பாவில் சுவத்திகாவின் முத்திரைகள் காளைகளின் முத்திரைகளோடு இணைந்தும் காணப்படுகின்றன. சமணர்களின் ஆதிநாதர் இடபதேவர் என்பதும், அவருக்கு அடையாள விலங்கு எருது என்பதும் சமணர் வரலாறாகும்.

தொல்லியல் ஆய்வுகள் 'காளை'ச் சின்னங்களை ஞாயிறு வழிபாட்டோடு தொடர்பு கொண்டவையாகக் குறிக்கின்றன. வலிமைக்கும் வளத்திற்கும் அடையாளமாகிய காளை, சில இடங்களில் ஞாயிற்றின் குறியீடாகவும் பொறிக்கப்பட்டுள்ளது.

பாகவத புராணம், நீர்க் கடவுளாகிய நாராயணன் அருளால், நாபி, மருதேவி என்னும் அரசனுக்கும் அரசிக்கும் இடபதேவர் மகனாகப் பிறந்ததாகக் குறிக்கும் செய்தியும் இங்கு எண்ணத்தகும்.

மேற்காட்டிய செய்திகளை ஆராய்ந்தபின் கிடைக்கும் முடிவுகளாவன:

1. இடபதேவர் சமணர்களின் ஆதிநாதர்.
2. இவர் குடிகளின் நன்மையைக் கருதியவர். குழந்தைகளுக்குத் தந்தையைப்போல மக்களுக்கு நன்மை செய்தவர்.
3. இவருக்கு இயங்கும் மாளிகை ஒன்றை தேவர்கோன் சமைத்தான்.
4. அத்துடன், தாமரை மலரும் தருமச் சக்கரமும் அவனால் அளிக்கப்பட்டன.

---

107. Swell, 'Notes on Swestika', Indian Antiquity, Vol.X.
108. Sri Vatsa, Sun Worship in Early India, pp. 31—32.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. தருமச் சக்கரம், அருகதேவராகிய இடபரின் மாளிகையின் முன் சுழன்று கொண்டிருக்கும்.

6. திருத்தக்கதேவர் இதனை மன்னவனின் தண்ணொளி யாகக் குறிப்பர்.

7. இத்தருமச் சக்கரம் சுவத்திகாவாக உருவகிக்கப்பட்டுள்ளது.

8. மொகஞ்சதாரோ, ஆரப்பா நகர நாகரிகத்தில் சுவத்திகா வும், காளையும் முத்திரைகளில் இடம் பெற்றுள்ளன.

முத்திரை

அரசர்கள் செய்திகளை வெளியிடும் போதும், வெளிநாட்டு—உள்நாட்டு வாணிகத்தின்போதும் வணிகப் பண்டங்களிலும் தமது முத்திரைகளைப் பதிக்கச் செய்வர். பூம்புகார்த் துறைமுகத்தில் வந்திறங்கிய அளந்தறியாப் பல பண்டங்களில்,

> வலியுடை வல்லணங்கினோன்
> புலிபொறித்துப்.........[109]

புறம்போக்கிய செய்தி இதனை வலியுறுத்தும். எனவே மொகஞ்சதாரோ, ஆரப்பாவில் கிடைத்துள்ள மேற்காட்டிய முத்திரைகள் இடபதேவரின் அரசாட்சிக்கு உரியனவாகவோ, அன்றி அவரது பரம்பரையினரின் முத்திரைகளாகவோ இருத்தல் வேண்டும். சமண சமய மரபின்படி அரசன் நல்லாட்சி புரிவானா யின் அவனது அரண்மனை முன்னர் ஓர் ஒளிவட்டம் இயங்கும் என்ற நம்பிக்கை இருந்தது தெளிவு. 'சுவத்திகா' அத்தகைய நல்லாட்சியின் அடையாளமாகத் திகழ்ந்ததால்தான், இந்திய அரசர்களில் பெரும்பாலோர் வெளியிட்டுள்ள கல்வெட்டுக்களின் தொடக்கத்தில் இடம் பெறும் மங்கலச் சொல்லாக இச்சொல் இடம் பெற்றுள்ளது.

வேளாண்மையை அடியொட்டிய வளம், வலிமை இவற்றின் அடையாளமாகிய ஞாயிறு வணக்கம், அரசுகள் தோற்றம் கொண்டபோது நல்லாட்சியின் அடையாளமாகக் குறிக்கப்பட்டுள் ளது. இப் படிநிலை வளர்ச்சிதான் சமண சமய இலக்கியங்களில் அரச சின்னமாகக் காணப்படுகிறது. இத் தருமச் சக்கரம் பற்றிய கதை சற்று மாறுபட்ட வடிவத்தில் பௌத்த இலக்கியங்களிலும் இடம் பெற்றுள்ளது.

---

109. பட்டினப்பாலை, 134.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பௌத்தத்தில் இறைமாட்சியின் தோற்றமும் வளர்ச்சியும்

சமண சமயத் தலைவரான ஆதிநாதருக்கு மிகவும் காலத்தால் பிற்பட்டவரான புத்தர், பேரரசனின் இலக்கணம் பற்றிக் கூறிய தாகச் சொல்லப்படும் கதை ஒன்று சாதகக் கதைகளில் இடம் பெற் றுள்ளது. 'சக்கவத்தி சூக்தம்' எனப்படும் இக்கதை நல்லாட்சி புரிந்த ஒரு மன்னவனின் வாழ்வில் நடந்ததாகக் குறிக்கப்பட் டுள்ளது.

பேரரசனும் சக்கவத்தி சீகநாத சூக்தமும்

'திருடநேமி' என்ற அரசன் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தான். முதுமையில் அவன் தன் மகனுக்குப் பட்டம் கட்டிவிட்டு, யோகம் பயில விழைந்து உவவனத்தில் சென்று தங்கினான். ஏழாவது நாள், அரண்மனைக்கு எதிரே சுடர் வீசிக் கொண்டிருந்த சக்கரம் மறைந்தது. திருடநேமியின் புதல்வன் இதனால் மிகவும் பயந்து, ராஜரிஷியான தன் தந்தையிடம் சென்று, நிகழ்ந்த செய்தியைத் தெரிவித்தான். அப்பொழுது ராஜரிஷி, ''மகனே அஞ்சாதே. இந்தச் சக்கரம் உன் நல்வினையால் தோன்றியது அன்று. சக்கரவர்த்தியான அரசனுக்குரிய விரதங்களை நீ காத்தாயானால், அது மீண்டும் தன் இடத்தில் வந்து நிலைக்கும். நீ மக்களை நீதியுட னும், நடுவுநிலையுடனும் காப்பாயாக. உன் ஆட்சியில் அநியாயச் செலவிற்கு இடம் கொடாதே. வறுமையுற்றவர்களுக்கு (வேலை கொடுத்து)ப் பணம் கிடைக்கச் செய். உன் நாட்டில் நல்லோராக விளங்கும் சிரமண அந்தணர்களிடம் அவ்வப்போது செய்யத் தக்கவை இன்னவை, செய்யத்தகாதவை இன்னவை என்பதை அறிந்து கொள். அவர்களின் உபதேசத்தைக் கேட்டு, செய்யத் தகாதவற்றை விலக்கிக் கடமைகளை நிறைவேற்றுவதில் கண்ணுங் கருத்துமாக இரு'' என்றான்.

இளைஞனாகிய அரசன் தந்தையின் அறிவுரைப்படி அரசாளத் தொடங்கினான். மறைந்துபோன ஒளி வீசும் சக்கரம் மீண்டும் அதன் இடத்திற்கு வந்தது. அரசன் தன் இடக்கையில் தண்ணீர்ச் சாடியை வைத்துக்கொண்டு வலக்கையால் அந்தச் சக்கரத்தைச் சுற்றினான். அது அவனுடைய பேரரசு முழுதும் சுற்றியது. அரச னும் அதன் பின்னாலேயே சென்று, ''உயிர்க்கொலை செய்யாதீர் கள், திருடாதீர்கள், பிறன்மனை விழையாதீர்கள், பொய் சொல் லாதீர்கள், உண்மையோடு நடந்து கொள்ளுங்கள்'' என்று மக்க ளுக்கு உபதேசித்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன் பிறகு அந்தச் சக்கர ரத்தினம், சக்கரவர்த்தியான அரச னுடைய அரண்மனைக்கு எதிரில் மீண்டும் நின்றது. அரண் மனைக்கு அது எழிலூட்டியது.[110]

புத்தரால் கூறப்பட்டதாக வரும் இக்கதையின் அடிப்படையில் ஆந்திராவில் சக்கையாபேட்டை என்ற இடத்தில் ஒரு சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இதன் காலம் அசோகனின் காலமாகும். அதில் இடம் பெற்றுள்ளவை வருமாறு:

1. தருமச் சக்கரம்
2. வெள்ளை யானை
3. பால்நிறக் குதிரை
4. சிந்தாமணி
5. பட்டத்தரசி
6. நல்லமைச்சன்
7. படைத்தலைவன்

இந்த ஏழு உறுப்புகளைப் பெற்றவனே மாண்புடை மன்னன் என் பது இச் சிற்பத்தின் உட்கிடக்கையாகும்.

தருமச் சக்கரத்தை இயக்கிய காரணத்தால்தான் அரசன் சக்கரவர்த்தி எனப்பட்டான். சக்கரத்தைச் சூடியவன் என்பது இதற்குப் பொருள். சக்கரவர்த்தி என்ற சொல் பேரரசன் என்ற பொருளில் வழங்கியது மிகவும் பிற்கால வழக்காகும்.

பௌத்த சமய மரபுப்படி, புத்தர் தருமச் சக்கரத்தை உருட் டியவராக—அதாவது 'அறவாழி பயந்தோராக' வணங்கப்படு கிறார். புத்தர் அறநெறிகளைப் பரப்பியவர் என்றால் மேலே காட்டிய ஏழு உறுப்புகளைக்கொண்ட அரசன் புத்தரின் கோட் பாடுகளுக்குச் செயல் வடிவம் கொடுத்தவனாவான். இக்கோட் பாட்டினை சிம்மர் பின்வருமாறு விளக்குவார்.

> சக்கரவர்த்தி, 'சக்கரத்தை உருட்டும் மாமனிதன்' என்ற கோட்பாடு தொடக்ககால வேதங்களுக்குமட்டும் முந்தியது அல்ல; அது இன்னும் பழமையானது. அதாவது வேதங் களுக்கும், ஆரியர் வருகைக்கும் முந்திய இந்தியச் சிந்தனை மரபைச் சார்ந்த ஒன்றாகவும், சமண பௌத்த இலக்கியங் களில் மட்டுமன்றி இந்துப் புராணங்களிலும் எதிரொலித் தும் நிற்கின்றது.

110. தர்மானந்தா கோசாம்பி, பகவான் புத்தர், பக். 321-322

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பௌத்த மரபுப்படி, உலகப் பேரரசனாகிய இச் சக்கரவர்த்தி, 'அறவாழி பயந்தோனாகிய' புத்தரின் சமயச் சார்பற்ற சார்பாளன் ஆவான். சக்கரவர்த்தி ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ, நாட்டிற்கோ தலைவன் என்றால், புத்தர் இந்த உலகிற்கே ஆசிரியராவார். புத்தரின் தருமச் சக்கரம் பார்ப்பனர்களின் அறத்தைப் போல 'உயர்ந்தவர்கட்கு' மட்டுமே உரியதன்று; மாறாக எவ்வித வேறுபாடும் இன்றி உலகம் முழுமைக்கும் அமைதியையும் நல்லுறவையும் வளர்ப்பதாகும்.[111]

சக்கையாபேட்டைச் சிற்பத்தின் பிழிவை அதாவது நல்லாட்சி புரியும் அரசனது பெருமையை விளக்கும் வகையில் புறநானூற்றின் பாடல் ஒன்று அமைந்துள்ளது. ஆதனுங்கன் என்னும் அரசனது இறைமாட்சியைக் கள்ளில் ஆத்திரையனார் பாராட்டிய அப்பாடலாவது:

எந்தை வாழி ஆத னுங்கவென்
நெஞ்சந் திறப்போர் நிற்காண் குவரே
நின்னியான் மறப்பின் மறக்குங் காலை
என்னுயிர் யாக்கையிற் பிரியும் பொழுதும்
என்னியான் மறப்பின் மறக்குவென் வென்வேல்
விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
உலக இடைகழி அறைவாய் நிலைஇய
மலர்வாய் மண்டிலத் தன்ன நாளும்
பலர்புர வெதிர்ந்த அறத்துறை நின்னே[112]

புத்தரின் அறவுரைகளுக்குச் செயல் வடிவம் கொடுத்த அசோகனது தருமச் சக்கரம் இப்பாடலில் 'மலர்வாய் மண்டிலமாக' உருவகிக்கப் பட்டுள்ளது. அத்துடன் அம்மலர்வாய் மண்டிலத்தைப் போலப் பலரும் போற்றிப் புகழும் அறத்துறை நின்னது என்றும் பாராட்டப் பெற்றுள்ளது.

பொய்கூறல் கூடாது, திருடுதல் கூடாது, பிறன்மனை நயத்தல் கூடாது, பிற உயிர்களைக் கொல்லுதல் கூடாது என்ற அறங்கள் சாதி, இனம், மொழி ஆகிய தடைகளைக் கடந்து மனித இனத்தை வளர்க்கும் உயிரூற்றுக்களாகும். எனவேதான் நாட்டை ஆளும் அரசன், வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவனாக, அறநெறியில் நம்பிக்கை கொண்டவனாக இருத்தல் வேண்டும் என வற்புறுத்

111. Zimmer, Philosophies of India, pp. 129—130.

112. புறம். 175.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தப்பட்டான். பௌத்த நெறியைப் பின்பற்றி, அதைத் தன் வாழ்க்கை நெறியாகக் கொண்டவன் அசோகன். 'எல்லா மக்களும் என் குழந்தைகள். இவ்வுலகிலும் மறுமையிலும் என் சொந்தக் குழந்தைகளின் நன்மையையும் சுகத்தையும் தேடுவது போலவே நான் எல்லா மக்களுக்கும் அவற்றைத் தேடுகின்றேன்' என்று அறத் தின் மீதுள்ள பிடிப்பை வெளிப்படுத்தியவன். அசோகனின் பாறைச் சாசனங்களில் நிலவும் இத்தகைய அறப்பொதுமையை வியந்து பாராட்டும் நிக்காம்,

> ....வகுப்பு எல்லைகளைக் கடந்த பரந்த தன்மை இவற்றில் காணப்படுகின்றது. இவை மானிட வர்க்கத் தையே ஒரு குடும்பமாகவும், அதில் பணம் படைத்தோருக் கும், ஏழைகளுக்கும், அதிகாரம் படைத்தோருக்கும், தாழ்ந்தோருக்கும் ஏற்பட்ட கடமைகளும் உரிமைகளும் ஒன்றே என்றும் பாவிக்கின்றன. சட்டத்திற்கும் ஒழுக்க முறைகளுக்கும் அப்பாற்பட்ட ஒரு பரந்த தன்மை இவற் றில் காணக் கிடக்கின்றன. இவை அதிகாரத்தின் செயல் திறனைக் கல்வியின் திறனோடும் சிந்தனையின் திறனோ டும் இணைத்துச் சட்டத்தையே அன்பாலும், நியாய உணர்ச்சியாலும், சகிப்புத் தன்மையாலும் பண்படுத்து கின்றன[113]

என்று விளக்குவார்.

இத்தகைய மனிதப் பண்புகளை உருவாக்கும் வகையில்தான் அரசர்கள் எதிர்பார்க்கப்பட்டனர். அரசர்கள் 'காவலர்கள்' என அழைக்கப்பட்டதும் அவர்களின் கடமையினால் அன்று. அவர்களின் சார்பற்ற தன்மையினால்தான். எனவே சமண, பௌத்த இலக்கி யங்களில் புனையப்படும் மன்னவனோடு, 'ஒளி வட்டம்' என்ற இயற்கை கடந்த ஒரு கற்பனைச் சக்கரம் சார்த்தப்பட்டாலும் கிரேக்க இதிகாசங்களில் வரும் 'டெமாக்ள்சு கத்தியை'ப் போன்ற ஒரு கற்பனையே என்றாலும், அதில் மன்னவனின் அறநெறி பிற ழாத செங்கோன்மை வற்புறுத்தப்பட்டுள்ளது என்பதே உண்மை யாகும்.

சக்கையாபேட்டைச் சிற்பமாயினும் கள்ளில் ஆத்திரையனார் பாடலில் வரும் 'மலர்வாய் மண்டிலத்தன்ன அறத்துறை' யாயி னும், அவற்றின் நோக்கம் மானிட இனத்தின் நல்வாழ்வே.

---

113. நிக்காம், அசோகனின் சாசனங்கள், முன்னுரை, பக். 5—6.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைதிக மரபில் அரசனும் கடமைகளும்

அரசனை இந்திரனாகக் காணும் மரபு இருக்கு வேதத்திலேயே இடம் பெற்றுவிட்டது. உயிர்ப் பலிகளின் அடிப்படையில் உருவான வேள்விப் பண்பாடு ஆரியர்களுக்குரியதாகையால், அரசனாகத் திகழ்பவன் வேள்வி செய்ய வேண்டியதும், வேள்விகளைச் செய்யுமாறு ஊக்கப்படுத்துவதும் தவிர்க்க முடியாத கடமைகளாயின. அத்தகைய வேள்விகளுள் அசுவமேதம், இராசசூயம் ஆகியவை மிகவும் குறிப்பிடத்தக்கவை.

அசுவமேதம்

அரசன் தான் செய்த பாவங்களிலிருந்து விடுபட, குறிப்பாகப் பார்ப்பனரைக் கொன்ற குற்றங்களிலிருந்து விடுதலை பெறச் செய்யப்பட்ட வேள்வி அசுவமேதம் ஆகும்.[114]

அசுவமேத வேள்வி முடிந்த பின்னர்க் கடலிலோ அல்லது ஆறுகளிலோ தூய நீராடி வருவர். இத்தகைய வேள்விகளை முடிமன்னர்களோ அன்றி இளவரசர்களோதான் செய்ய முடியும். வேள்வி முடிந்த பின்னர்ப் பார்ப்பனர்கட்குப் பொன்னும், பொருளும், பசுவும் தானமாகக் கொடுப்பர். தலைமைப் புரோகிதனாக இருந்து வேள்வியை இயற்றுபவனுக்கு ஓர் இலட்சம் பசுக்களைத் தானமாகத் தருதல் வேண்டும்.[115]

அசுவமேத வேள்வியில் இன்றியமையாப் பங்கை வகிப்பது குதிரையாகும். எதிரி நாட்டின்மீது முதன் முதலாக நுழைந்து வந்த குதிரையைக் கொன்று அதன் புலவை உண்பர்.

> அந்தக் குதிரையைக் கொல்வதற்கு முன்னால் கண உறுப்பினர்கள் வாடிக்கையான இறைச்சியையும், மதுவையும் உண்டு களிக்கின்றனர். அதைத் தொடர்ந்து ஆண்களும், பெண்களும் ஒரு புணர்ச்சி நடனத்தில் ஈடுபடுகின்றனர், அதில் தலைமை தாங்கும்படி தலைவர் (அரசர்) கேட்டுக் கொள்ளப்படுகிறார். அந்தக்கால வழக்கப்படி இந்தக் 'கோஷ்டிப் புணர்ச்சி விருந்தை' அனுபவிக்கிறார்கள்[116]

என்று அசுவமேத வேள்வியின் தோற்றத்தினை டாங்கே விளக்குகின்றார்.

---

114. P. V. Kane, History of Dharma Sastras, Vol. I, p. 962.
115. Ibid, Vol. IV, p. 131.
116. எஸ். ஏ. டாங்கே, (த. ஆ.) எஸ். இராமகிருஷ்ணன், பண்டைக்கால இந்தியா, பக். 143—144.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராசசூயம்

வருணப் பாகுபாடும், அரசுகளின் அமைப்பும் வலிமை பெற்று விட்ட காலகட்டத்தில் சத்திரியர்களாகிய அரசர்கள் மட்டுமே செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட வேள்வியின் பெயர் இராசசூயம் என்பதாகும்.

இது மிகவும் சிக்கல் வாய்ந்த ஒன்று. இதனைச் செய்து முடிக்க ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகும். இந்த வேள்வியில் குறிப் பிடத்தக்க ஒன்று 'அபிடேகக் குளியல்' ஆகும். பதினேழு ஆறு களிலிருந்து 'உடும்பரா' மரத்தினால் செய்யப்பட்ட பதினேழு குடங்களில் கொண்டுவந்த நீரினால் அரசனைக் குளிப்பாட்டுவர். தலைமைப் புரோகிதரும், அவருக்குத் துணையாகப் பணிபுரியும் மற்றப் புரோகிதர்களும் அரசனை நீராட்டிய பின்னர், அவ்வரச னின் சத்திரியத் தோழர்கள் (ஏனைய அரசர்கள்), அரசனின் உடன்பிறந்தோர் மற்றும் வைசியத் தோழர்கள் முறையே அரசனை நீராட்டுவர். இதன்மூலம் இராசசூயம் செய்யும் அரசனின் தலைமையை மற்ற மன்னர்கள் ஏற்றுக்கொண்டனர் என்பதை உணர்த்துவர்.

வேள்வி புரியும் அரசனை இருக்கையில் அமர்த்தி, பார்ப் பனர்கள் மந்திரங்களை ஓதுவர். அந்த மந்திரமாவது:

> ''ஓ இந்திரனே! எனக்குச் சத்திரியனுக்குரிய வலிமையைத் தா[117]

என்பதாகும். இது அதர்வண வேதத்திற்குரியது.

இந்த வேள்வியைச் செய்யத் துணைபுரிந்த தலைமைப் புரோகி தனுக்கு நன்கு விளையும் வளமிக்க ஊரை முற்றூட்டாக அளிப்பான் அரசன். அத்துடன் தலைமைப் புரோகிதனின் துணையாளர்க ளாகிய பிற புரோகிதர்களுக்கு ஆயிரக்கணக்கில் பசுக்களைத் தான மாக அளிப்பான். இந்த வேள்வியின் மூலமும், தானத்தின் பய னாகவும் அரசன் தன் பகைவர்களை வீழ்த்துவான், பெருமை களைச் சேர்ப்பான். புகழுடன் வாழ்வான் என்பது அய்தீகம்.[118]

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்னும் சோழன் இத் தகைய வேள்வியைச் செய்தபோது, சேர பாண்டியர்கள் உடன் இருந்ததை அவ்வையாரின் புறநானூற்றுப் பாடல் உணர்த்து கின்றது.[119]

---

117. P. V. Kane, History of Dharma Sastras, Vol. II, pp. 1214—1215.
118. Ibid, Vol. III., pp. 74—75.
119. புறம். 367.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாசபேயம்

சத்திரியர்களாகிய அரசர்கள் மட்டுமே செய்யும் வேள்வி களைப் போன்றே பார்ப்பனர்கள் மட்டுமே செய்யும் வேள்விகளும் உண்டு. அத்தகையதொரு வேள்வியே 'வாசபேயம்' என்பதாகும். பதிற்றுப்பத்தில் பாலைக்கவுதமனார் செய்ததும், புறநானூற்றில் பார்ப்பான் கவுணியன் விண்ணந்தாயன் செய்த வேள்வியும் இத் தகையன எனலாம். பதிற்றுப்பத்தில் பாலைக்கவுதமனாரின் வேண்டுகோளை ஏற்றுப் பல்யானைச் செல்கெழு குட்டுவன், பல வேள்விகளைச் செய்தான். இதனை,

> பாடிப் பெற்ற பரிசில், நீர் வேண்டியது கொண்மின் என,
> யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும் என,
> பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு ஒன்பது பெருவேள்வி
> வேட்பிக்க, பத்தாம் பெருவேள்வியிற் பார்ப்பானையும்,
> பார்ப்பனியையும் காணாராயினர்[120]

என மூன்றாம் பத்தின் பதிக உரையால் அறியலாம்.

தமிழக வேந்தருள் சிலர் இவ் வேள்விகளைச் செய்து, செய்வித் ததன்மூலம் வருணப் பாகுபாட்டில் தம்மைச் சத்திரியர் என ஒப்புக் கொண்டனர். ஒப்புக்கொள்ளவே பார்ப்பனர்கள் முதல் வருணத் திற்குரிய அனைத்துப் பெருமைகளையும் தமதாக்கிக் கொண்டு விட்டனர். அரசனின் கடமை மக்கள்பால் சமத்துவத்தைப் பேண வேண்டும் என்பது மாறி, பார்ப்பனர்களைப் பாதுகாப்பது என் பதே முதற்கடமை ஆயிற்று. அரசனும் பார்ப்பனர்களின் அருளைப் பெற வேண்டியவனாகிவிட்டான்.

> இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
> நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே[121]

எனப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்கு அறிவுரை கூறு வார் காரிகிழார். வேள்விகளைச் செய்த பார்ப்பனர்களுக்கு, அரிய பொன்னை நீராட்டிக் கொடுப்பது மரபாயிற்று.[122] பார்ப் பனர்கட்கு ஊறு செய்யக்கூடாது என்பது அரசர்கள் பின்பற்ற வேண்டிய கடமையாயிற்று.

---

120. பதிற்றுப்பத்து, 3, பதிகம்.
121. புறம். 6 : 20—21.
122. புறம். 361.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆர்புனை தெரியல் நின்முன் னோரெல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர்[123]

என்று தாமப்பல் கண்ணனார் இதனைத் தெளிவுபடுத்துகின்றார்.

அரசர்கள் வேள்வி இயற்றும்போது அவர்கள் இந்திரனாகக் கருதப்பட்டாலும், அவர்கள்பால் விட்டுணுவின் இயல்புகள் சார்த்தி உரைக்கப்பட்டாலும், அரசர்களை இயக்குவித்தவர்கள் பார்ப்பனர்கள் எனலாம். விட்டுணுவே பார்ப்பனர்களைத்தான் கடவுளாக எண்ணி வழிபட்டு வந்தார் என்பதை,

'பிராமணோமம தேவதா'

என்ற வடமொழி நூற்பா விளக்கும்.

சமண, பௌத்த அறநூல்களில், மானிட நெறியைப் பின்பற்றிச் சமத்துவத்தைப் பேணிய அரச கடமை, காலப்போக்கில் வருணப் பாகுபாட்டைத் தழுவி வருண நெறியைப் பாதுகாப்பதே தனது நீதியாக மாற்றிக்கொண்டது.

சாணக்கியரின் அர்த்தசாத்திரம் எவ்வளவு தான் அரசியல் கோட்பாடுகளை விளக்கினாலும் அது தண்டம் பற்றியே மிகுதியும் வற்புறுத்துகின்றது. அதனாலேயே அது 'தண்டநீதி' என்றும் வழங்கப்படுகிறது.

ஆபத்தம்ப தரும சாத்திரம், 'அரசன் தன் அவைக்களத்தில் வேதங்களில் தேர்ச்சி பெற்ற ஒரு பார்ப்பனனைப் புரோகிதனாக அமர்த்திக் கொள்ளவேண்டும்' என வற்புறுத்தும்.

பாரதத்தில் உள்ள சாந்தி பருவத்தில்[124] தண்டநீதி வருண நெறியைக் காப்பாற்றவல்லது என்றும், ஒவ்வொரு வருணமும் விதிக்கப்பட்ட ஒழுக்கங்களில் வழுவாமல் நடந்துகொள்ளுமாறு பார்த்துக் கொள்வது என்றும் வருணிக்கப்பட்டுள்ளது.

வருணநெறி வற்புறுத்தப்பட்டதாலும், அதுவே அரச நீதியாக மாறியதாலும், கடைசிப் படியில் இருந்த சூத்திரர்கள் கூலி பெறாது மேல் வருணத்தாருக்கு உழைப்பவர் ஆயினர். அவர்கட்குக் கல்வி மறுக்கப்பட்டது. அவர்களில் யாரேனும் கல்வி கற்றால் அவர்கட்குக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது இராமாயணத்தில் 'சம்புகவதை' இதையே உணர்த்துகிறது.

---

123. புறம். 43 : 13—14.

124. P. V. Kane, History of Dharma Sastras, Vol. III, p. 5o

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேற்காட்டிய இச்சூழ்நிலைகள் உருவானபோது உலகாய்தர்கள் அரசனின் இலக்கணம் சமூக ஒப்புரவைக் காப்பதே என விளக்கத் தொடங்கினர்.

.........ஆதலான் இவற்றைக் கைவிட்டு, உழவு, பசுக் காவல், வாணிகம், செங்கோன் முறைமை முதலியனவாக ஆன்றோர் காட்டிய நெறியினின்றும் இம்மை இன்பங்களை நுகர்ந்து வாழ்தல் உறுதிப்பயன் என்பதாம்[125]

என்னும் இதுவே அரசியலில் உறுதிப்பயனாக உலகாய்தர்களால் வற்புறுத்தப்பட்டுள்ளது.

உலகாய்த மெய்யியலில் விளக்கப்பட்ட உழவு, பசுக்காவல் ஆகிய இரு தொழில்களும் வருண நெறி அடிப்படையில் சூத்திரர்கட்கு உரியவை. வாணிபம், வைசியர்க்கு உரியது என்றாலும், சுரண்டலற்ற ஒரு வாணிப முறையை உலகாய்தர் வற்புறுத்தினர் எனலாம்.

உலகாய்தர்களின் அரசியல் கோட்பாட்டில் 'செங்கோன்மை' மிக உயர்ந்த இடத்தை வகிப்பது ஆகும். கோல்கோடாமை, அதாவது செங்கோல் வளையாமையே அரசியல் அறத்தின் இலக்கணமாக வற்புறுத்தப்பட்டுள்ளது. இதனை,

வேந்து மேம்பட்ட பூந்தார் மாற
கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும் நெஞ்சுடைய
புகன்மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால்
நமரெனக் கோல்கோடாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற்றன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையை ஆகி இல்லோர் கையற
நீநீடு வாழிய நெடுந்தகை.........[126]

என இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனுக்கு மதுரை மருதனிள நாகனார் அறிவுறுத்துவார்.

125. மணி. 27 பூதவாதி—உரை மேற்கோள், ப. 662.

126. புறம். 55.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பாடல் செங்கோன்மை திரியாத ஒரு மன்னவன் புகழை மட்டுமல்லாது வறியவர்களின் துன்பத்தைப் போக்கி, வறுமை யாளர்களே இல்லாத ஒரு நாட்டை உருவாக்க வேண்டிய தேவை யையும் உணர்த்தி நிற்கின்றது.

தமிழ் இலக்கியங்கள் வள்ளல்களைப் 'பசிப்பிணி மருத்துவர்' களாகவும், 'இல்லோர் ஒக்கல் தலைவர்'களாகவும் போற்றுவது முழுமையான உலகாய்தச் சிந்தனையின் வெளிப்பாடு. பார்ப்பனர் களின் வேள்விப் பண்பாடு தமிழகத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கிய பின்னரும், தமிழ் இலக்கியத்தில் உலகாய்தச் சிந் தனையின் வீச்சு மறையாமல் இருந்தது என்பதை திருக்குறளின் பொருட்பாலில் அறியலாம்.

திருக்குறளும் இறைமாட்சியும்

திருக்குறள் பொருட்பாலின் முதல் அதிகாரமான 'இறை மாட்சி' என்ற தலைப்பை, அரசனுக்குத் தெய்வத்தன்மை உண்டு என்ற நம்பிக்கையின் அடிப்படையில் வள்ளுவர் பயன்படுத்தி இருப் பாரா? அன்றிச் சமண, பௌத்த இலக்கியங்களில் அறத்தின் மேன் மையை மக்களுக்குப் புரிய வைத்து, நிலைப்படுத்த முயன்ற 'அரசர் பற்றிய கோட்பாட்டின்' அடிப்படையில் 'அரசனை'ப் படைத்திருப்பாரா? என்பது ஆழ்ந்து காணற்கு உரியது.

வள்ளுவரின் இறைமாட்சி பற்றி ஆராயும் முருகரத்தனம்,

> 'இறை' என்னும் சொல்லுக்கு முதலில் அரசு அல்லது அரசன் என்னும் பொருள்தான் உண்டு என்பதற்கு வலிவு செய்வதாகக் கீழ்கண்ட தொகைச் சொற்கள் விளங்கு கின்றன.
>
> இறைகூடி—அரசாண்டு (ப. பா. 2. 79)
> இறை கிழவோய்—அரசனாதல் தன்மை யுடையவனே
> இறைபுரிந்து—அரசனாயிருந்து (குறள். 541, பரிப்பெரு மாள் உரை)
>
> சங்க காலத்தில் தெய்வத்தைக் குறிக்கும் பொருளில் தொகைச்சொல் எதுவும் வழங்கியதில்லை. இத்தொகைச் சொற்களில் இறை என்னும் சொல் தன் முதற்பொருளை இழவாது போற்றி வைத்திருப்பதாகக் கொள்ளலாம். மேலும், 'இறை' என்னும் சொல்லிலிருந்து அமைக்கப் பட்ட இறைமை என்னும் சொல் (பரிபாடல் 10. 127) செங்கோன்மை என்னும் பொருளில்தான் அன்று வழங் கியது. இப்பொருள் மரபினைப் பின்பற்றியே வள்ளுவரும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> இறை, இறைவன் என்னும் சொற்களைப் பொருட்பாலில் 'அரசர்' என்னும் பொருளில் ஆண்டிருக்கிறார் எனக் கொள்ளுதல் தவறாகாது[127]

என்று விளக்குவார்.

இந்தியச் சிந்தனையில் அரசர்களைக் கடவுள் பண்பு பொருந்தியவர்களாகக் காட்டும் மரபு தொடர்ந்து வந்துள்ளது. சமண, பௌத்த இலக்கியங்களில் அறநெறியின் நிலைக்களனாக விளங்கியவர்களாக மன்னர்கள் உருவகப்படுத்தப்பட்டிருந்தாலும், அவற்றில் தாமரை, ஒளி வட்டம் என்னும் இயற்கை மீறிய ஆற்றல் கொண்ட சின்னங்கள் உருவகிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வள்ளுவர், சமண பௌத்தக் கோட்பாடுகளுக்கு மாறாக,

> முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறைஎன்று வைக்கப்படும்

என்று கூறுகிறார்.

வள்ளுவர் குறிப்பிடும் முறை செய்து காப்பாற்றும் மன்னவன், வைதிக மரபு காட்டும் இந்திரனாகவோ, திருமாலாகவோ குறிக்கப் படவில்லை. அதைப் போன்றே தாமரை மலரையும், ஒளிவட்டத்தையும் கொண்ட சமண மன்னனாகவோ, அன்றி ஒளிவட்டம் வழி காட்ட நால்வகை அறங்களை நாடு முற்றிலும் பரப்பிய பௌத்த சமய 'திருட நேமி'யாகவோ குறிப்பிடப்படவில்லை. அப்படியாயின் வள்ளுவர் வேறு ஏதேனும் சிந்தனை மரபைப் பின்பற்றியுள்ளாரா?

> வள்ளுவர் கொள்கைதான் என்ன? வள்ளுவர் காட்டும் அரசன் தெய்வவழித் தோற்றம் பெற்றவன் அல்லன். அவனுக்குத் தெய்வீக உரிமையும் இல்லை. அவன் தான் ஆற்றும் கடமையின் தகுதியால் தெய்வம் ஆகலாம். ஆனால் இது (மேலைநாட்டுக் கோட்பாடுகளில் காண்பது போன்று) அவனுக்கு மட்டுமே உரிய தனிச் சிறப்பல்ல. அவனுடன் அமைச்சனும் குடிமக்களும் இத் தெய்வச் சிறப்புப் பெறத் தகுதி பெற்றவர்கள். வள்ளுவர் இவர்களுக்கு வழங்கும் இறைப் பண்பு (சில மேலைநாட்டு ஆராய்ச்சியாளர் சுட்டிக் காட்டுவது போன்று) விரிந்து பரந்துபட்ட பொருள் கொண்டது[128]

என்று பொதுப்படையாகக் கூறிச் சென்று விடுகிறார் தி. முருகரத்தனம்.

127. தி. முருகரத்தனம், வள்ளுவர் கண்ட அரசியல், ப. 76.
128. மே. நூ., ப. 77.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளுவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த நல்லவர்களைத் தெய்வமாகப் பார்க்கிறார். அத்துடன்,

> அய்யப்படாஅது அகத்தது உணர்வானைத்
> தெய்வத்தோ டொப்பக் கொளல்[129]

என்ற குறள்வழி, நல்ல அமைச்சர்களையும் தெய்வத்தோடு ஒப்பக் கொளல் வேண்டும் எனப் பரிந்துரைக்கின்றார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்களையும், அய்யப்படாது அகத்தது உணரும் நல்லமைச்சரையும் எந்த நோக்கில் தெய்வத்தோடு ஒப்பக் காண்கின்றாரோ, அதே அடிப்படையில்தான், முறை செய்து காப்பாற்றும் மன்னவனையும், மக்களின் இறையாகக் கருதுகின்றார் என்பது தெளிவாகின்றது.

உலகாய்தர் கருத்து

உலகாய்தர்கள் கடவுளை முற்றாக மறுத்தவர்கள். ஆனால் நாட்டின் நலனுக்காக, மன்னர்களைப் போற்றியவர்கள்.

மக்களின் நல்வாழ்வில் அக்கறை கொண்டவனாக, அகப்புறப் பகைகளிலிருந்து நாட்டைக் காக்கவல்ல ஆற்றல்மிக்கவனாக உள்ள அரசனை அதாவது உலகில் தோற்றம் கொண்டு நல்ல புகழுக்குரிய ஆட்சி புரியும் வேந்தனை 'உலகப் பிரசித்தனான ராஜாவை'ப் பரமேசுவரனாகக் கருதியுள்ளனர்.

எனவே உலகாய்தரின் கருத்துப்படி நாடாளும் மன்னவனைத் தவிர்த்த வேறு ஒரு கடவுள்—பரமேசுவரன்—இல்லை; புகழுக்குரிய கடமைகளை ஆற்றவல்ல மன்னவனே 'பரமேசுவரன்' ஆகிறான்.

இந்தப் பின்னணியில்,

> முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறைஎன்று வைக்கப் படும்[130]

என்ற குறளை ஆய்கின்றபோது, உலகாய்தரின் 'லோகப் பிரசித்த னான ராஜா பரமேசுவரன்' என்ற கருத்தின் விளக்கமாக அக்குறள் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. அத்துடன் வைதிக மரபில் அரசன் இந்திரனாக, விட்டுணுவாக உருவகிக்கப்படும்போது, அரசர்களின் ஆட்சி முறைமையும்—செங்கோலின் தன்மையும் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டு விடுகின்றன. மேலும்,

---

129. குறள். 702.

130. குறள். 388.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவன் கொடுங்கோலனாக இருந்தாலும் விட்டுணுவின் பண்பின னாகவே ஆகிவிடுவதால் ஆட்சியின் குறைகளைச் சுட்டிக் காட்ட வும் வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.

உலகப் புகழ்பெற்ற அரசன்—அதாவது தனது நல்லாட்சியின் காரணமாகப் புகழ் மிக்க அரசனைத் தவிர வேறு பரமேசுவரன் இல்லை என்ற உலகாய்தர்களின் கோட்பாடு நல்லாட்சியின் அடித் தளத்தை உருவாக்கும் வண்ணம் அமைந்திருக்கக் காணலாம்.

பொன்முடியார், தம் புறப்பாடலில்,

நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே

என்று அரச கடமையை விளக்குவதும் வருண நெறியற்ற ஓழி சமூகத்தின் வெளிப்பாடே என்பது தெளிவு.

உழவு—பசுக்காவல்—
வாணிகம்—செங்கோன்மை

உலகாய்தர்களின் அரசன், உழவுத்தொழிலை, பசுக்காவலைக் காப்பவனாகவும், வாணிகத்தைப் பேணுபவனாகவும், செங்கோல் முறைமையில் மாறுபடாதவனாகவும் திகழ்பவன்.

வள்ளுவர் உழவுக்கும், நடுவுநிலைமைக்கும் தனி அதிகாரங்கள் அமைத்துள்ளார்.

உழவுத்தொழிலை அரசனின் நேரடி அதிகாரத்திற்கு உட்பட்ட தாக விளக்குவார் சாணக்கியர்.

> உழவுத் தொழில் தலைவன், உழவு, நிலம், மரம் என்னும் இவற்றைப் பற்றிய நூல்களை அறிந்தவனாகவாதல் அறிந்தோரைத் துணைக்கொண்டவனாகவாதல் இருந்து எல்லா வகையான கூலம், மலர், பழம், கீரை, கிழங்கு, வேர், கொடியில் உண்டாவன மரவுரி பருத்தி இவைகளின் விதைகளை ஏற்ற பருவத்தில் தொகுத்துச் சேர்த்தல் வேண்டும்.
>
> தகுந்த நிலத்தில் அடிமை, பணியாளர், தண்ட ஈடுசெய் வோர் இவர்களைக் கொண்டு பலகால் நன்கு உழுது விதைத்தல் வேண்டும்.[131]

சாணக்கியர், உழுதலை அடிமை, பணியாளர் தண்ட ஈடுசெய் வோர் ஆகியோரின் தொழிலாகக் குறிப்பிடுதல் ஈண்டு நோக்கத் தக்கது.

---

131. கௌடலீயம், 2 : 23—45.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் வள்ளுவரோ உழுபவரை உலகத்தாரின் உயிர்நாடி யாக உயர்த்திப் பேசுகின்றார்.

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து[132]

என்பது குறள்.

வருணநெறி உருவாக்கிய நாலாஞ்சாதியினராகிய உழவர்களை —உலகத்தின் ஆணியாக வள்ளுவர் போற்றுவது குறிக்கத்தக்கது.

அரசர்களின் வெற்றிக்கும் உழவர்களே காரணம் என்பதை,

பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்[133]

என்ற குறளில் விளக்குவார்,

உழவின் பெருமையை விதந்து பேசும் வள்ளுவரைப் போலவே, வெள்ளைக்குடி நாகனாரும்,

வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
ஊன்று சால் மருங்கின் ஈன்றதன் பயனே[134]

என்று உழவின் பெருமையை விளக்குவார். அத்துடன்,

பகடுபுறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை யாயின் நின்
அடிபுறந் தருகுவர் அடங்கா தோரே[135]

என்று உழவுத் தொழிலைக் காப்பதையே அரசனின் கடமையாக வற்புறுத்துவதும் ஒப்புநோக்கத்தக்கது.

தமிழ் இலக்கியங்களில் 'நாகனார்' என்ற பெயரைப் பெற்றுள் ளவர்கள் அனைவரும் உலகாய்தக் கோட்பாட்டைச் சார்ந்தவர் களாகவே இருக்கவேண்டும் என்பது அவர்தம் பாடல்களால் தெரிய வருகின்றது. தமிழிலக்கியத்தில் தனிப்பட்ட ஆய்விற்குரிய செய்தி யும் 'நாகனார்'களின் பாடல்களில் உண்டு என்பது குறிக்கத் தக்கது.

---

132. குறள். 1032.
133. குறள். 1034.
134. புறம். 34 : 24—26.
135. புறம். 34 : 32—34.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருண நெறியை ஒப்புக்கொண்ட சிலப்பதிகாரத்தில் உழவர்கள்—கடைசியர்களாகப் புனையப்பட்டாலும், தமிழ் மரபு கருதி இளங்கோவடிகள்,

> இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
> உழவிடை விளைப்போர்[136]

என்று உழவர்களைப் பாராட்டுவார்.

பசுக்காவல்

நாகரிக வளர்ச்சியில் 'அரசு' தோற்றம் கொண்ட இடம் முல்லை நிலந்தான். வாணிபத்தில் பண்டமாற்றாக ஆநிரைகள் இடம் பெற்றதும் அம்முல்லை நிலத்தில்தான். எனவேதான் 'செல்வம்' என்ற பொருளைக் குறிக்க 'மாடு' என்ற சொல் தமிழில் இடம் பெற்றுள்ளது. ஒரு நாடு மற்ற நாட்டின்மீது படையெடுப்பதன் அடையாளமே, ஆநிரைகளைக் கவர்தலில்தான் தொடங்கும். வேளாண்மையின் அடித்தளமாகவும், அதன் இன்றியமையாத் தேவையாகவும் இருந்த பசுக்களை—ஆநிரைகளைக் காப்பது ஓர் அரசனின் தலையாய கடமையாகும். அரசன் வலிமையற்றவனாக இருப்பின், இவனது ஆநிரைகள் எல்லாம் மாற்றாரால் கவர்ந்து செல்லப்பட்டுவிடும். நாடும் வளத்தில் குன்றும்; தன் மதிப்பிழக்கும். கொடுங்கோலனாக ஒரு மன்னன் மாறுவானேல் அவனது தன்னலத்தாலும், ஆட்சிமுறையின் சீர்கேட்டினாலும் நாட்டின் செல்வ வளம் குன்றும். அதனால்தான் வள்ளுவர்,

> ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
> காவலன் காவான் எனின்[137]

என்று விளக்குவார்.

இக்குறளில் 'அறுதொழில்' என்பதற்குப் பரிமேலழகர்,

> ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என இவை. பசுக்கள் பால் குன்றியவழி அவி இன்மையானும், அது கொடுத்தர்க்குரியார் மந்திரம் கற்பம் என்பன ஓதாமையானும் வேள்வி நடவாதாம்[138]

என்று பொருள் கூறுவார்.

---

136. சிலம்பு, 10 : 49—50.
137. குறள். 560.
138. குறள். 560, பரிமேலழகர் உரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளுவர் வேள்விப் பண்பாட்டை மறுத்தவர்; கண்டித்தவர். 'அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின்' ஒன்றன் உயிரைக் கொல்லாமை நன்று என்பது அவர்தம் கருத்து. அத்துடன பிறப்பினால் வரும் உயர்வு தாழ்வுகளையும் ஒப்புக்கொள்ளாதவர்; 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று சமூகப் பொதுமை பேசியவர். ஆதலால் அறுதொழிலோர் நூல் மறப்பர் என்பதற்கும், ஆபயன் குன்றும் என்பதற்கும் வேள்வியோடு தொடர்புபடுத்திப் பொருள் கூறும் பரிமேலழகர் உரை பொருந்தாமல் முரணி நிற்கின்றது.

மன்னவன் காவா நாட்டில் ஆபயன் எவ்வாறு குன்றும் என்பதைப் பின்வரும் மேற்கோள் பாடல் எதிர்மறையாக உணர்த்தும்,

முலைபொழி தீம்பான் மண்சேறு படுப்ப
மலர்தலை வுலகம் ஓம்பும் என்ப
பாசிலைத் தொண்டைப் பல்லவ னாணையின்
வெட்சி தாயத்து வில்லேர் உழவர்
பொருந்தா வடுகர் முனைச்சுரங்
கடந்து கொண்ட பல்லா னிரையே[139]

தொண்டை நாடாண்ட பல்லவனுடைய சேனை, பகைவராகிய வடுகரது போரிலே கவர்ந்து வந்த பசுக் கூட்டங்கள், உலகத்தை ஊட்டிக் காக்கக் கூடியவை என்பதை அப்பாடல் உணர்த்துகின்றது.

அறுதொழிலோர்

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறு உறுப்புகளையும் குறைவறப்பெற்ற மன்னவனை, அரசருள் ஏறாகக் காட்டுவார் வள்ளுவர்.

படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு[140]

என்பது குறள்.

படை அமைத்தலும், குடியோம்பலும், பொருள் பெருக்கலும், நட்பை உருவாக்கலும், அரண் அமைத்தலும் ஆகிய ஆறு தொழில்களும் அரசின் தனித்தனித் துறைகளாம். இத்துறைகளில் தனித்தன்மை வாய்ந்த அறிஞர் பெருமக்கள் அரசனுக்குத் துணை நின்று தம் கடமை ஆற்றுவர். அத்தகைய அறிஞர் பெருமக்களே வள்ளுவரால் 'பெரியாராக'ச் சுட்டப்பட்டுள்ளனர். நல்ல அரசன்,

139. தொல். பொருள். 55, நச்.—உரை.

140. குறள். 381.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப் பெரியாரின் துணையைப் பெறவேண்டியதன் சிறப்பைப் 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற அதிகாரத்தில் விவரிப்பார்.

பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்[141]

என்ற குறளில், 'பெரியார்' தொடர்பின் சிறப்பை எதிர்மறையாக வும், உடன்பாடாகவும் விளக்குகின்றார்.

கொடுங்கோலனாகிய மன்னன், இடித்துரைக்கும் பெரியார் களின் துணையை விரும்பமாட்டான். பெரியார் தொடர்பு அறச் சிற்றினம் அரசனைச் சூழ்ந்துவிடும். சிற்றின நட்பால் அரசனது மனத்தியல்பும் மாறிவிடும். அதனால் நாடாளும் மன்னவனை இன்னல் சூழ்ந்து வருத்தும்.

நல்லினத்தின் ஊங்குத் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉ மில்[142]

என்பது குறள்.

எனவே 'அறுதொழிலோர் நூல் மறப்பர்' என்பதற்கு அரசின் ஆறு துறைகளிலும் துறைபோகிய நல்லறிஞர்கள் கொடுங்கோல னாட்சியில் பயன்பாடின்றிப் புறக்கணிக்கப்படுவார்கள். புறக் கணிக்கப்படவே அவர்கள் கற்ற கல்வியும், பெற்ற புலமையும் மக்களுக்கும் நாட்டிற்கும் பயன்படாதொழியும் என்பதே பொரு ளாதல் வெளிப்படை.

மேலே குறிப்பிட்ட ஆறு துறைகளிலும், மற்றும் அவற்றுடன் தொடர்பு கொண்ட பிற துறைகளிலும் துறைபோகிய அறிஞர்கள் நிறைந்திருந்தனர் என்பதைச் சாணக்கியரின் 'கவுடலீயம்' தெளிவு படுத்தும். அத்துடன் ஒவ்வொரு துறையும் பற்றி விரிவான முறை யில் பல அறிஞர்களால் எழுதப்பட்ட சிறந்த நூல்கள் மிகுந்திருந் தன என்பதைக் கவுடலீயத்தின் இரண்டாம் அதிகாரம் முழுமை யிலும் காணலாம்.

ஆக, 'ஆபயன் குன்றும்', 'அறுதொழிலோர் நூல் மறப்பர்' என்பதற்குப் பரிமேலழகர் கூற்றுப் பொருந்தவில்லை என்பது தெளிவு. அத்துடன் கொடுங்கோலன் ஆட்சியில் 'ஆபயன் குன்றும்' என்பதால் செங்கோல் வேந்தனின் நல்லாட்சியில் 'ஆபயன் மிகும்.' மிகவே பசுக்கள் பாதுகாக்கப்படும் என்பது தெளிவு. எனவேதான் உலகாய்தர்கள் நல்லரசனின் கடமையாகப் பசுக்காவலை வற் புறுத்துகின்றனர்.

141. குறள். 450.

142. குறள். 460.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாணிபம்

வள்ளுவர் வாணிகம் பற்றி மிகுதியாகக் கூறவில்லை. இருப்பினும் அறத்துப்பாலில் அதுவும் 'நடுவு நிலைமை' என்னும் அதிகாரத்துள்,

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமர்போற் செயின்[143]

என்று கூறியுள்ளதும், ''சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல்''[144] என நடுவுநிலையாளர்க்கு வணிகத்திற்குரிய துலாக்கோலை உவமையாகச் சொல்வதும் கருதத்தகும்.

அரசனுடைய ஆட்சியின் தன்மையைப் பொறுத்து வாணிகத்தின் தன்மைகளும் அமையும். திருமாவளவனின் நல்லாட்சியில், வாணிகம் சிறந்து விளங்கியதை,

கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்[145]

எனப் பட்டினப்பாலை புகழ்ந்துரைக்கும்.

சாணக்கியரும்,

> அரசன் தன்னாட்டில் உண்டான தன்னுடைய விலைப் பண்டங்களை ஒரே வாயிலாகவும், பிறநாட்டில் உண்டானவைகளைப் பலவாயிலாகவும், விற்கும்படிச் செய்தல் வேண்டும். இருவகைப் பொருட்களையும் குடிமக்களுக்குத் தீங்கு விளையாதவாறு செய்தல் வேண்டும். ஊதியம் பெரிதாயினும், குடிமக்களுக்குத் துன்பம் உண்டாக்குமாயின் விலக்கி விடுதல் வேண்டும்[146]

என்று வாணிகம் அரசின் நேரடிப் பார்வையில் நடக்கவேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துவார்.

143. குறள். 120.
144. குறள். 118.
145. பட்டினப்பாலை, 205—211.
146. கௌடலீயம் 2 : 37.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போக்குவரத்து வாய்ப்புக்களும், விளைதிறன், விளைவிசை ஆகிய அனைத்தும் சமூகத் தேவைக்கு ஏற்ப வளர்ச்சிபெறாத நிலையில், விளையும் பொருட்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்ல அரசின் பாதுகாப்பு மிகவும் தேவைப் பட்டது. அத்துடன் தனது நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருளையும், பிற பொருள்களையும் அரசே இறக்குமதி செய்தது. இறக்குமதி செய்த பொருட்களுக்கு அரச முத்திரைகளைப் பதித்து, சுங்கம் விதிக்கப்பட்டது. திருமாவளவன் புகழ்பாடும் பட்டினப் பாலை,

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய.........[147]

நிலையினைச் சுட்டும்.

அத்துடன், வாணிகப் பொருள்கள் அரசால் தருவிக்கப்பட்டு வாணிகர்க்கு வழங்கப் பெற்றன என்பதையும் பட்டினப்பாலை யால் அறியமுடிகிறது.

நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழில்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅ போல
வைகல்தொறும் அசைவின்றி
உல்குசெயக் குறைபடாது
... ...
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்

147. பட்டினப்பாலை, 185—193.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிப்பொறித்துப் புறம்போக்கி[148]

என்பது பாடற்பகுதி.

வாணிகப் பொருள்கட்குச் சுங்கம் விதித்த முறை, வாணிகத்தின்மீது அரசு கொண்டிருந்த மேலாண்மையை உணர்த்தவல்லது. சுங்க வரி நீக்கப்படும்போது, வாணிகம் வாணிகர்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டதாகிவிடும். அதனால் பதுக்கலும், பொருள் தட்டுப்பாடும் உண்டாகும்; மக்கள் இன்னலுக்கு ஆளாவர்.

பட்டினப்பாலையின் அமைப்பும் அதன் கருத்தமைதியும் நோக்க, உலகாய்தக் கோட்பாட்டின் பிழிவாகவே இப்பாடல் இயற்றப்பட்டிருக்க வேண்டும். மேலும் இப்பாடலைப் பாடிய புலவருக்குப் பரிசாக, ஆயிரத்து எண் கழஞ்சு பொன்னைக் கொடுத்த நிகழ்ச்சியும் மேற்சொன்ன கருத்துக்கு அரணாகின்றது. பட்டினப்பாலையைப்போல அமையாவிடினும், மதுரைக்காஞ்சி. உலகாய்தக் கோட்பாட்டை அடியொற்றி அமைந்துள்ளமை கருதத்தக்கது.

செங்கோன்மை

நல்லாட்சியின் அடையாளமாக விளங்குவது மன்னவனின் செங்கோலே ஆகும்.

> நீதியும் நேர்மையும் மிக்க அரசன் தன் மக்களிடம் எந்த அளவு அன்பு கொண்டவனாக இருப்பானோ அந்த அளவிற்குக் கட்டுப்பாடு மிகுந்தவனாகவும் விளங்குவான் என்பது உலகாய்தக் கோட்பாட்டின் அடிப்படை. அத்தகு அரசனின் ஆட்சியில்தான் மக்களின் நல்வாழ்வு பாதுகாக்கப்படும்[149]

என்று உலகாய்தர்களின் அரசியல் கோட்பாட்டினை விளக்குவார் அனிமா சென்குப்தா.

புறநானூற்றில் உலகாய்தக் கோட்பாட்டைச் சார்ந்தவர்களாகத் திகழும் மாங்குடி மருதனார், மோசிகீரனார், கோவூர் கிழார், நக்கீரர் முதலான புலவர்களின் பாடல்கள் அனைத்திலும் உள்ளோட்டமாகத் திகழ்வது இச் செங்கோன்மை பற்றிய கோட்பாடே ஆகும்.

148. பட்டினப்பாலை, 120—135.
149. Animasen Gupta, Essays on Sankya and other Systems of Indian Philosophy, p. 284,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வள்ளுவர் 'செங்கோன்மை' என்றோர் அதிகாரத்தை அமைத்திருப்பதும்,

> வேலன்று வென்றி தருவது மன்னவன்
> கோலதூஉம் கோடா தெனின்[150]

என்று வற்புறுத்துவதும் ஆழ்ந்த ஆய்விற்குரியவை.

பொருநராற்றுப்படை, அறத்தோடு புணர்ந்த பெருமைக்குரியதாகச் செங்கோலைப் புகழும்.

> பெரிதாண்ட பெருங்கேண்மை
> அறனொடு புணர்ந்த திறனறி செங்கோல்[151]

என்பது பாடல்.

பட்டினப்பாலையின் அமைப்பும் அழகும் சிந்தனைக்குப் பெரு விருந்தாகும். அதுவும் அரசனது மாண்புக்குரிய ஆட்சியினையும், போற்றற்குரிய வீரத்தையும், காதல் வாழ்வோடு தொடர்புபடுத்திப் பாடும் நயம் சுவைக்கத்தக்க ஒன்று.

பணியாத பிறவேந்தர்கள் அவனது அருளைப் பெரும் பொருட்டுப் பணிந்து நிற்கும் கழலணிந்த காலினன். பொன்னணி அணிந்த தன் புதல்வர், ஓடியாடியதாலும், முற்றிழை மகளிரின் முகிழ் முலைகளின் தழுவல்களாலும், பூசிய செஞ்சாந்து சிதைந்து தோன்றும் மார்பினன். சிங்க ஏறெனச் சிலிர்த்து நிற்கும் அத்திருமாவளவனின் செங்கோல் எத்தகையது?

'தனது அரும்பெரும் காதலியின் இனிய தோள்களைப் போலத் தண்ணியது' என்கிறான் தலைவன். பகைவர்க்குப் பேரிடரைத் தரும் அவனது வேலினையும், சார்ந்தோருக்குத் தண்ணளிபுரியும் அவனது செங்கோலின் மாண்பினையும்,

> அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
> திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
> வேலினும் வெய்ய கானம்அவன்
> கோலினும் தண்ணிய தடமென் தோளே[152]

என்று சிறப்பிப்பார்.

150. குறள். 546.
151. பொருநராற்றுப்படை 229—230.
152. பட்டினப்பாலை 298—301.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புனைந்துரைக்கும், தெய்விகப் பண்புகட்கும் அப்பாற்பட்டு, நடைமுறை வாழ்வின் இன்பங்களைத் துய்த்தும் தன் கடமைகளைக் குறைவறச் செய்தும், அறத்தின் வேலிகட்கு உட்பட்ட ஒரு வேந்தனாகவே திருமாவளவன் திகழ்கிறான்.

வள்ளுவர் செங்கோன்மையின் மேன்மையை உடன்பாடாகச் 'செங்கோன்மை' என்ற அதிகாரத்தில் விளக்கி, எதிர்மறையான 'கொடுங்கோன்மையை'த் தனித் தலைப்பிட்டு விளக்கியுள்ளார். செங்கோன்மையை,

> ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
> தேர்ந்துசெய் வஃதே முறை[153]

என்று விளக்குவார்.

வள்ளுவரின் மன்பதைப் பொதுமையை உணர்த்தும் வகையில் 'யார் மாட்டுந் தேர்ந்து செய்', 'அஃதே முறை' என்று கட்டளையாக அமைந்துள்ளதைக் காணலாம்.

மக்களின் இன்ப வாழ்விற்கும் அமைதிக்கும் அரசனின் ஆட்சியே அடிப்படை. அரசனது நல்லாட்சியின் காரணமாகத் தமக்கு நரையும் கவலையும் இல்லாதொழிந்தன என்ற பொருளில் பிசிராந்தையார், ''வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும்''[154] என விளக்கியுள்ளதும் நோக்கத்தக்கது.

உலகாய்தக் கோட்பாட்டின் அடிப்படையில், மாங்குடி மருதனார் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை,

> ஒண்டொடி மகளிர் பொலங்கலத் தேந்திய
> தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ்சிறந்து
> ஆங்கினிது ஒழுகுமதி பெரும ஆங்கது
> வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப தொல்லிசை
> மலர்தலை உலகத்துத் தோன்றிப்
> பலர்செலச் செல்லாது நின்றுவிளிந் தோரே[155]

என்று வாழ்த்துவார். இவ்வாறு வாழ்த்தப்பெற்ற அதே மன்னன் போர்க்களத்தில் சூளுரைக்கின்றபோது,

153. குறள். 541.

154. புறம். 191.

155. புறம். 2 ‹ : 31—36.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் இறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக![156]

எனச் செங்கோன்மையை முன்னிலைப்படுத்துவான்.

எனவே உலகாய்தர்கள் மக்களின் நல்வாழ்வை அடிப்படையாகக்கொண்ட அரசை விரும்பினர். 'அத்தகைய அரசை நல்க வல்ல வேந்தனின் நாட்டில் உழவு செழிக்கும்; பசுக்கள் வளம் பெருக்கும்; வாணிகம் தழைக்கும். அவன் செங்கோல் திறம்பாது அறத்தின் அடிப்படையில் குடிகளைப் பாதுகாப்பான்' என நம்பினர். ஆதலால் அவனைத் தவிர வேறு கடவுள் என்ற ஒன்று இல்லை என்பதை வலியுறுத்தினர்.

இத்தகையப் பின்னணியில்தான் திருக்குறளின் பொருட்பால் அமைந்துள்ளது. உலகாய்தக் கோட்பாட்டின்படி அரசன் மனிதனாகவே மதிக்கப்படுகிறான். அவனிடம் வேறு எத்தகைய கடவுட் பண்புகளும் இடம் பெறுவதில்லை. அரச முறையை நன்முறையில் இயக்குபவன்தான் மக்கட்கு இறை என்று வைக்கப்படுவான்.

இத்தகைய இயல்புகள், கடவுள் தன்மை பெற்ற வைதிக மரபிற்குரிய அரசர்களின் இயல்புகளோடு முற்றிலும் மாறுபட்டு நிற்கின்றன. இந்தியச் சிந்தனை முழுமையிலும் தன் தனித் தன்மையினைப் பேணிவந்துள்ள உலகாய்த—அய்ந்திர மரபின் வீச்சுக்களை அறிவதும், அறிந்தவாறு தொகுத்தளிப்பதும் நடுவு நிலையான ஆராய்ச்சியின் நோக்கமாக அமைதல் வேண்டும். அத்தகைய ஆய்வின் அடிப்படையில் சங்க இலக்கியங்கள் காட்டும் அரசு—அரசன், திருக்குறள் காட்டும் அரசு—அரசன் இயல்புகளை ஆராய்ந்தால் இந்தியத் துணைக்கண்டத்திற்குத் தமிழகம் நல்கிய கொடையின் அளவையும் சிறப்பையும் அறிந்தளிக்க முடியும்.

---

156. புறம். 72 : 8—12.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமூகவியற் கோட்பாடு

உண்பதும் உடுப்பதும் பொதுமையாக இருந்த இனக்குழு மக்களின் வாழ்க்கை நெறியாக வளர்ந்தது உலகாய்தம். மனித இனத்தின் வளர்ச்சிக்கு ஏற்ப அதுவும் வளர்ச்சி அடைந்து, சுரண்டலையும், மேலாண்மையையும் (ஆதிக்கம்) எதிர்த்துச் சமூக ஒப்புரவிற்காகக் குரல் கொடுத்தபடி உள்ளது.

இக்கோட்பாட்டைச் சார்ந்த புலவர்கள் இதை ஒரு குறிக்கோளாக மட்டுமல்லாமல், நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரு செயல் திட்டமாகவும் விளக்கியுள்ளனர். மனித நலங்கருதிய இச்சிந்தனையாளரின் கருத்துக்களை—சமூகவியல் பற்றிய இவர்களின் பாடல் கருத்துக்களை இனம் காண்பதும் இவ்வாய்வின் நோக்கங்களுள் ஒன்று.

ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் வாழ்க்கை முறை, அன்றாடத் தேவைகள், விளையாட்டு, குடும்ப அமைப்பு, சமூக பழக்கங்கள், ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரின் அன்றாடச் செயல்கள் அனைத்தையும் பற்றித் தெரிவிப்பதைச் சமூகவியலின் கூறுகளாகச் சொல்வார் கே. கே. பிள்ளை.[157]

சங்க காலச் சமூகம்

இன்றைய தமிழகத்தைப் போலச் சங்க காலச் சமூகம் சாதியச் சமூகமாக விளங்கவில்லை; மாறாக இனக்குழுக்கள் நிறைந்த ஓர் இனக்குழுச் சமூகமாக விளங்கியது. தமிழ் அகத்திணை மரபுகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற திணை அமைப்புக்கள் இதனை உணர்த்தும். நாகரிகத்தின் வளர்ச்சியை விளக்கும் இத் திணைப் பாகுபாடுகள் மட்டுமன்றி, பாணர், பொருநர், கூத்தர், வேளிர், வேட்டுவர், குறவர், உழவர் என்னும் அமைப்புக்கள் தமிழ்ச் சமூகம் தொழில்களின் அடிப்படையில் அமைந்திருந்தது என்பதை அறிவுறுத்தும்.

> பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
> செய்தொழில் வேற்றுமை யான்[158]

என வள்ளுவர் கூறுவது எண்ணத்தகும்.

---

157. K. K. Pillay, Social History of Tamils, p. 4.
158. குறள். 972.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமூக வாழ்க்கை

உழவு, வாணிகம், நெசவு ஆகிய தொழில்கள் மக்களின் பொருள் வாழ்வை வளப்படுத்தின. பட்டினப்பாலை உழவையும், வாணிகத்தையும் புகழ்ந்து பாடும். அத்துடன் மறவர்களாகிய இளைஞர்களின் செயல்களைச் சிறப்பாகப் புனைந்துரைக்கும்.

முதுமரத்த முரண்களரி
வரிமணல் அகன்திட்டை
இருங்கிளை இன்னொக்கற்
கருந்தொழில் கலிமாக்கள்
கடலிறவின் சூடுதின்றும்
வயலாமைப் புழுக்குண்டும்
வறளடும்பின் மலர்மலைந்தும்
புனலாம்பற் பூச்சூடியும்
நீள்நிற விசும்பின் வலனேர்பு திரிதரும்
நாள்மீன் விராய கோள்மீன் போல
மலர்தலை மன்றத்துப் பலருடன் குழீஇக்
கையினும் கலத்தினும் மெய்யுறத் தீண்டிப்
பெருஞ்சினத்தாற் புறக்கொடாஅது
இருஞ்செருவின் இகல்மொய்ம்பினோர்
கல்லெறியும் கவண்.........[159]

என்பது பாடல்.

வாத்சாயனர் இன்ப நுகர்ச்சிக்குரிய வாயில்களாகவும், சமூகக் கடமைகளாகவும் குறிப்பனவற்றுள் விளையாட்டுக்களையும் வகைப்படுத்துவார்.

அ. சமூக நிகழ்ச்சிகள்

1. விழாக்களில் கலந்து கொள்ளுதல்
2. சமுதாய நிகழ்ச்சிகள்
3. மதுவகை விருந்துகள்
4. பொழிலாடல்
5. திருவிழாக்கள்

---

159. பட்டினப்பாலை 59—73.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆ. விளையாட்டுக்கள்

இ. பிரிவுகள்

1. இரவு நிகழ்ச்சிகள்
2. நிலவுப் பயன்கொள்ளுதல்
3. வசந்த விழா என்னும் வேனில் விழா[160]

மேலே வாத்சாயனர் குறிப்பிடும் துறைகளில் பட்டினப்பாலையில் வரும் வீரர்கள் பற்றிய புனைந்துரை 'விளையாட்டு' என்னும் பிரிவில் அடங்கும்.

போரை நம்பி இருந்த ஒரு சமூக அமைப்பில் வீரர்கள், வீரத்தை வளர்க்கும் விளையாட்டுக்களில் கலந்துகொள்வது இன்றியமையாதது. இத்தகைய ஒரு சமூக அமைப்பில்தான், 'உன் மகன் எங்கே' எனக் கேட்ட ஓர் இளம் பெண்ணிற்கு மறுமொழியாக,

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே[161]

என்ற பாடல் பிறக்க முடியும்.

சமுதாயத்தின் அன்றாடப் பணிகளை வரையறுக்கும் வகையில் போர்கள் மலிந்திருந்தன. 'மூதின் முல்லை', 'மகட்பாற்காஞ்சி' என்னும் துறைகள் சமூக வாழ்வில் போரின் பங்கினை நேரிடையாக ஏற்பன; பாதிப்பன.

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே[162]

என்ற பொன்முடியாரின் பாடல் அக்காலச் சமூக வாழ்வின் படப்பிடிப்பு ஆகும்.

---

160. Vatsayana, Kamasastra, p. 3.
161. புறம். 86.
162. புறம். 312.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மக்களின் சமூக உணர்வினையும், தாம் சார்ந்த சமூகத்தின் கடமைகளைச் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும் என்ற கடமை உணர்ச்சியையும் வற்புறுத்தும் இப்பாடல் உலகாய்தக் கோட்பாட்டின் முழுமையான வெளிப்பாடாகும்.

இப்பாடலில், சமூகம் என்னும் வாழ்நிலையைத் தவிர்த்த வேறு எந்த நிகழ்ச்சியும் இடம் பெறவில்லை. மனிதன் சமூக உணர்வு படைத்தவன். அவனது சமூகத்தின் பாதுகாப்பே அம் மனிதனின் பாதுகாப்பாகும் என்ற இயல்பான வாழ்க்கை விளக்க மாகவும் இப்பாடல் அமைந்துள்ளது.

பிசிராந்தையாரின் உற்ற நண்பனாக விளங்கியவன் வேந்தன் கோப்பெருஞ்சோழன். அம்மன்னன் ஆசீவகச் சமயத்தைச் சார்ந் தவன். அச் சமயக் கோட்பாட்டிற்கு ஏற்ப வடக்கிருந்து உயிர் துறந்தவன். ஆனால் அப் பெருவேந்தனோடு உயிர் துறந்தவ ராகிய பிசிராந்தையாரின் பாடல்களோ முழுமையான உலகாய்தக் கோட்பாட்டிற்கு உரியனவாக அமைந்துள்ளன. சான்றாகத் தனக்கு நரை ஏன் தோன்றவில்லை என்பதற்கு அவர் தந்த விடை யைக் காட்டலாம்.

யாண்டு பலவாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே[163]

இப்பாடலில் மனிதனது இன்ப வாழ்வு அல்லது கவலைக்கான புறவயக் காரணங்களாகக் குடும்பம் (மனைவி, மக்கள்), சமூகத் தின் எதிர்காலத் தலைவர்களாகிய இளைஞர்கள், நல்லாட்சி புரியும் வேந்தன், வேந்தனையும் நன்னெறிப்படுத்தவல்ல ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்கள் ஆகியோர் வகைப் படுத்தப்பட்டுள்ளனர்.

மனிதனது சிந்தனை அவனது புறநிலைத் தாக்குதல்களால் உருவாகின்றது. குடும்பத்தால்—சமூகத்தின் இளைஞர்களால்— நாடாளும் வேந்தனால்—தூய சான்றோர்களால் காக்கப்படும் ஒரு சமூகச் சூழலில் தனக்கு ஏற்பட்ட நிறைவால் கவலை தோன்ற வில்லை. கவலையின்மையால் நரையும் தோன்றவில்லை என்று

163. புறம். 191.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லும் பிசிராந்தையாரின் சிந்தனை அவர் வாழ்ந்த சமூகத்தின் புறநிலைத் தாக்கம் ஆகும். இப்பாடல் பற்றி வானமாமலை,

> இக்காரணங்கள் புறவயமான காரணங்கள், உலகாயதர் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்ட சிந்தனைகள். இவை தந்திர யோக முயற்சிகளோ உள் மனத்தைத் தோண்டுவதோ, அம்ருத தாரையை இளக வைப்பதோ இன்பத்திற்குக் காரணங்கள் அல்ல. உலகியல் வாழ்க்கை அனுபவங்களே இன்பத்திற்குக் காரணம்[164]

என்று விளக்குவார்.

ஆற்றுப்படையும் ஈகையும்

சொத்துரிமை ஏற்பட்டு இனக்குழுத் தலைவர்கள் குறுநில மன்னர்களாகவும், முடிமன்னர்களாகவும் மாறிய ஒரு சமூக அமைப்பில் தோன்றிய அனைத்துச் சிக்கல்களையும் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. இல்லாமை ஒருபுறமும், செல்வக் குவிப்பு மறுபுறமுமாய் இருந்த நிலையில்தான் மக்களன்பு மிக்க புலவர்கள் ஒப்புரவையும் ஈகையையும் வற்புறுத்துகின்றனர்.

செல்வக் குவிப்பை எதிர்த்துப் புரட்சியில் ஈடுபடும் காலச் சூழலோ, அன்றிச் சமூக அமைப்போ இடந்தராத நிலையில், 'செல்வத்துப்பயன் ஈதலே' எனச் செல்வர்களிடம் வற்புறுத்தும் நிலை தோன்றியது. நக்கீரர்,

> தென்கடல் வளாகம் பொதுமை யின்றி
> வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
> நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
> கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
> உண்பது நாழி உடுப்பவை யிரண்டே
> பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
> செல்வத்துப் பயனே யீதல்
> துய்ப்போ மெனினே தப்புந பலவே[165]

என்று மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளாகிய உண்பதும் உடுப்பதும் அரசனாயினும் ஆண்டியாயினும் பொதுவே என வற்புறுத்துவார்.

'துய்ப்போமென்று பிறர் எவ்வம் களைய முன்வராத செல்வர்கள் இழப்பது மிகுதி' என்று கூறுவதன் மூலம் மக்களின் துன்பத்

164. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், பக். 20—21.

165. புறம். 189.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தைப் போக்க வேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்து வதை அறியலாம்.

பாண்பசிப் பகைஞன்[166]

இல்லோர் ஒக்கல் தலைவன்[167]

பசிப்பிணி மருத்துவன் பண்ணன்[168]

ஆகிய தொடர்கள் வறுமையைப் போக்க முனைந்த ஒப்புரவாளர்களின் பெருமையைப் பேசுவன. இச் சிந்தனையின் வளர்ச்சியைத் தான் ஆற்றுப்படை நூல்கள் விளக்குகின்றன.

பாணர், பொருநர், கூத்தர், விறலியர் ஆகியோர் சமுதாயத்திற்குக் கலைகள்வழி கருத்துக்களை விளக்கியவர்கள். அரசன் ஈடுபட்ட போர்களில் அவன் வெற்றிக்காகப் 'போர்க்களம்' பாடி, உழவர்களின் ஏர்முனையை வாழ்த்தி 'ஏர்க்களம்' பாடி, சமூக ஒருமைக்குப் பாலமாக விளங்கியவர்கள். நாட்டுப்புறக் கலை இலக்கியங்களின் தலைவர்களாக விளங்கிய இம் மக்கள், சமூகத்தின் பொதுச் சொத்தாக மதிக்கப்பட்டவர்கள்.

இத்தகைய மக்கள் தம் நிலையினின்று வழுவிய நிலையில், மக்களின் ஆதரவையும், மன்னர்களின் கொடையையும் எதிர்பார்த்து வாழும் நிலை தோன்றியபோது இவ் ஆற்றுப்படை இலக்கியங்கள் தோற்றம் கொள்கின்றன.

கடவுள் நம்பிக்கையோ, கடவுளின் அருளோ முற்றிலும் இடம் பெறாத நிலையில் தம்மை அல்லது தம் போன்ற கலைஞர்களை ஆதரித்த வள்ளல்களின் பெருந்தன்மையை—'ஊருணி நீராய் உதவும்' அவர்களின் கண்ணோட்டத்தைப் போற்றிப் புகழும் பாங்கே அவ்விலக்கியங்களின் உட்கிடையாகும்.

தம்மை ஆதரித்தவர்களிடத்துப் பிறரை அனுப்பும்போது பாடப்படும் ஆற்றுப்படைப் பாடல்களிலும் வாழ்க்கை உடன்பாட்டுக் கருத்தும், உலகாய்தக் கருத்தும் காணப்படுகின்றன. புலவர் ஒரு புரவலனை அடைந்து, பாடிப் பரிசில் பெற்றுத் திரும்புகிறான். அவனைச் சந்திக்கும் ஒரு புலவர் அல்லது பாணனிடம் தான் பரிசில் பெற்று வரும் புரவலனைப் புகழ்ந்தும் வாழ்த்தியும் கூறுவான். பிற்காலப்

166. புறம். 180.

167. புறம். 95.

168. புறம். 173.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> புலவர்கள் புரவலர்களை வாழ்த்தும்போது தெய்வங்கள் அவர்கள்மீது அருள்பொழிய வேண்டுமென்று வேண்டிக் கொள்வார்கள். ஆனால் ஆற்றுப்படைகள் எழுதிய புலவர்கள் கடவுளர் துணையை நாடுவதில்லை. தாமே நன்றியுணர்வுடன் வாழ்த்துவார்கள்.[169]

ஆற்றுப்படைப் பாடல்களில் நன்றியுணர்வு மிகுந்திருப்பது போன்றே, மன்னவனின் செங்கோன்மைச் சிறப்பும் வற்புறுத்தப் பட்டுள்ளது. இவ்வியல்புகளை இலக்கிய உத்திகளாகப் புலவர்கள் மேற்கொண்டிருந்தனர்.

கல்வி

ஒரு சமூகத்தில் நாகரிகம், பண்பாடு, வளர்ச்சி ஆகியவற்றை அறிந்துகொள்ளத் துணையாக இருப்பது அச்சமுகம் பின்பற்றும் கல்வி முறையேயாகும். வாழும் மனிதனுக்குக் கண்ணாக உருவகிக் கப்படும் இக்கல்வியின் பெருமை உலகந் தழுவியது. கற்றவனுக்கு நாடு, இனம், மொழி ஆகிய எல்லைகளைக் கடந்து புகழ் நிலைக் கும். அதனால் அனைவரும் கல்வியைக் கற்க வேண்டும் என்பார் வள்ளுவர்,

> **யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்**
> **சாந்துணையும் கல்லாத வாறு[170]**

என்பார்.

அறிவின் வாயிலான கல்வியைக் கற்றல், கேட்டல் என இரு வகையாகப் பகுத்து,

> **கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு**
> **ஒற்கத்தின் ஊற்றாம் துணை[171]**

என்று கற்க முடியாத நிலையினும் கேள்வியினால் வரும் அறிவைப் பெறவேண்டியதன் தேவையை வற்புறுத்துவார்.

வள்ளுவர் கல்வியைப் பொருட்பாலில் அரசன் பெறவேண்டிய வற்றுள் முதன்மையாகக் குறிப்பிட்டாலும், அதனை மனித இனத் தின் பொதுச் சொத்தாகவே குறித்துள்ளார்.

169. நா. வானமாமலை, தமிழர் பண்பாடும் தத்துவமும், ப. 206.

170. குறள். 397.

171. குறள். 414.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழகத்தில் கல்வி எந்த அளவு உயர்ந்திருந்தது என்பது 'அய்ந்திரம்' பற்றிய இயலிலும் விளக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் ஊரவைகளும், அரசவைகளும் கற்றறிந்தாரின் அறிவார்ந்த உரைகளால் ஒளி வீசின. வருண வேறுபாட்டையும், ஆண் பெண் என்ற வேறுபாட்டையும் கடந்து சமூகத்தின் அனைத்துப் பகுதிக்கும் கல்வி நீரோடை பரந்து பாய்ந்தது.

தமிழ் இலக்கியத்துள் காணப்பெறும் பெண்பாற் புலவர்களின் பாடல்கள், அவர்களின் அறிவாற்றலின் பெருஞ் சிறப்பை எதிரொலிப்பன; பெண்களின் அறிவுத் தலைமையை நிலைநாட்டுவன.

இத்தகைய சமூக அமைப்பில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் பாடல் வருண நெறியை எதிர்க்கும் வகையில் எழுந்த ஓர் உரிமை முழக்கமாகும்.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலால் தாயும்மனந் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே[172]

என்பது பாடல்.

'வேற்றுமை தெரிந்த நான்கு வருணத்துள்ளும் கீழ் வருணத்தைச் சார்ந்த ஒருவன் கற்றறிந்தவனாயின் மேல்வருணத்தானும் அவன் கீழ்ப் படுமே' என்று நாடாளும் வேந்தனே ஒரு சூளுரையாகச் சொல்ல வேண்டிய ஒரு தேவை—கட்டாயம் எழுந்துள்ளது. அப்படியாயின் அந்தத் தேவை எதனால் ஏற்பட்டது?

வருண நெறியின் அடிப்படையில் கல்வி நாலாம் வருணத்தானுக்கு மறுக்கப்பட்டது. பராசரமிருதி நாலாம் வருணத்தானைக் கழுதைக்கு ஒப்பிடும்.[173]

---

172. புறம். 183.

173. பராசரசுமிருதி, 8 : 33 (மத விசாரணை மேற்கோள்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தரும சாத்திரங்களில் சூத்திரனும் கல்வியும்

வருண நெறிகளை முறைப்படுத்தவும், ஒவ்வொரு வருணமும் தனது கடமைகளிலிருந்து வழுவாமல் பார்த்துக் கொள்ளவும் தரும சாத்திரங்கள் தோன்றின. வருணப் பாகுபாட்டின் பலிபீடத்தில் சூத்திரர்களின் வாழ்வும், பெண்களின் வாழ்வுமே பலிகொடுக்கப் பட்டன.

சூத்திரர்களுக்கும், பெண்களுக்கும் கல்வி மறுக்கப்பட்டது. சூத்திரன் புலையன், இழிசினன், கடையன், நாலாஞ்சாதி என்று ஆக்கப்பட்டதைப் போன்றே, பெண்ணும் அடிமையாக்கப்பட்டாள். இருவருக்கும் சொத்துரிமை மறுக்கப்கட்டது.

> நாய் முகந்தாலோ, பன்றி வாய் வைத்தாலோ, பறவை எச்சமிட்டாலோ தான், உணவு தூய்மை கெட்டுப் போகும். ஆனால் சூத்திரனின் பார்வை பட்ட மாத்திரத்திலேயே உணவு கெட்டுப் போகும்.
>
> கொழுத்த காளை, குளிப்பாட்டிய குதிரை, படித்த சூத்திரன் ஆபத்தானவர்கள்[174]

என்றெல்லாம் மனுதருமம் சூத்திரர்கட்குத் தடை விதிக்கும்.

சூத்திரர்களை இழிவுபடுத்துவதில் தருமசாத்திரங்கள் ஒன்றையொன்று விஞ்சி நிற்கின்றன. இச்சூழ்நிலை தமிழகத்திலும் தலையெடுக்க முயன்ற சூழலில்தான் நாடாளும் வேந்தனாகிய பாண்டியன் நெடுஞ்செழியன், சூத்திரர்களுக்குக் கல்வியை வற்புறுத்துவதுடன், அவர்களில் அறிவுடையோன் வழி இவ்வரசும் செல்லும் என உறுதி பொங்க உரைக்கின்றான்.

நெடுஞ்செழியனின் இச்சூளுரைக்குப் புத்தரின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை ஒப்பிடலாம். உலோகித்நியன் என்ற பார்ப்பனன் கல்வியைச் சூத்திரர்கட்குக் கொடுக்கக்கூடாது என்று வற்புறுத்தி வந்தான். அந்நிலையில் புத்தர் அவனிடம் நிகழ்த்திய கருத்துரை வருமாறு:

புத்தர் : உலோகித்தியா, யாராயினும் கல்வித் தத்துவத்தை அறிந்தால் அதை அவன் பிறருக்குச் சொல்லலாகாது என்ற கருத்தை நீ பரப்பி வருகிறாயா?

உலோகித்தியன் : ஆம்! கோதமரே

---

174. பெரியார் ஈ. வெ. ரா., மனுதர்மம், ப. 4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புத்தர் : உலோகித்தியா, நீ சாலவதிகை என்ற ஊரில் இருக்கிறாய். இப்போது ஒருவன் இந்தச் சாலவதிகையில் விளையும் பண்டம் அனைத்தையும், உலோகித்தியன் ஒருவனே ஆண்டு அனுபவிக்க வேண்டும்; வேறு யாருக்கும் அவற்றைக் கொடுக்கலாகாது என்று சொன்னால், அவன் உன்னைச் சார்ந்திருக்கும் ஊர் மக்களுக்குத் தீமை செய்தவன் ஆகமாட்டானா?

உலோகித்தியன் : ஆவான்.

புத்தர் : பிறருக்குத் தடை விதிப்பவன் அவர்-ளுடைய நன்மையில் நாட்டமுடையவனா? தீமையில் நாட்டமுடையவனா?

உலோகித்தியன் : தீமையில் நாட்டமுடையவன் கோதமரே!

புத்தர் : இத்தகையவனின் மனம் நட்பு மயமாக இருக்குமா? பகைமயமாக இருக்குமா?

உலோகித்தியன் : பகைமயமாக இருக்கும் கோதமரே!

புத்தர் : பகைமயமான மனமுடையவன் பொய்நோக்கு உடையவனாக இருப்பானா? மெய் நோக்கு உடையவனாக இருப்பானா?

உலோகித்தியன் : பொய் நோக்கு உடையவனாக இருப்பான் கோதமரே!

புத்தரும், உலோகித்தியனும் புரிந்த இந்தக் கருத்துரையாடலில் விளங்கும் உண்மைகள்:

1. கல்வியைப் பார்ப்பனர்கள் தமக்கு மட்டுமே உரிமை உடையதாகக் கருதினர்.

2. புத்தர், கல்வியைச் சமூக உரிமையானதாகக் கருதியதுடன், சமூகச் சொத்தாகிய கல்வியைத் தமக்கெனச் சொல்வோர் பிறர் சொத்தைக் கவர்ந்து கொள்பவர்கள் என்று அறிவுறுத்துகின்றார்[175]

என்பனவாம்.

சாதியத்தைக் கட்டிக்காத்து, பெண்ணடிமையைப் பேணி, பெண்களுக்குக் குழந்தை மணத்தை வற்புறுத்தி, கணவன் இறந்

175. Ambedkar, Buddha and His Dhamma (Lohitya).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தால் உடன்கட்டையேறும் கொடிய வழக்கத்தை நடைமுறைப் படுத்திச் சமூகத்தின் உயிர்க் கொடியையே தீய்த்துவிட்டன தரும சாத்திரங்கள்.

தருமசாத்திரங்கள் அனைத்தும் சூத்திரர்களின் இழிவை, பெண்ணடிமையின் உயர்வை எந்த அளவிற்கு வற்புறுத்துகின் றனவோ அந்த அளவிற்குப் பார்ப்பனர்களை, பார்ப்பன நெறியை ஏற்றிப் போற்றுகின்றன. அதனால்தான் உலகாய்தச் சிந்தனை யாளர்கள் அனைவரும் அதாவது மறுப்பியலை அடிப்படையாகக் கொண்ட அனைத்துச் சமயங்களும் பார்ப்பன நெறியை மிகவும் கண்டிக்கின்றன, கபிலரகவல்,

பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்
இறந்தவ ராய்உமை இவ்விடை இருத்திப்
பாவனை மந்திரம் பலபட உரைத்தே
உமக்குஅவர் புத்திரர் ஊட்டின போது
அடுபசியால் குலைந்து ஆங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது கண்டதுயார்? புகலீர்;
அருந்திய உண்டியால் யார்பசி கழிந்தது?[176]

என்று இறந்தவர்கட்கு உணவு (திதி) கொடுப்பதைக் கண்டிக் கிறது. மேலும், கிரேக்கம், சிங்களம், சோனகம், சீனம் முதலான பல்வேறு நாடுகளிலும் சாதிகளும், அவற்றால் உண்டாகும் பிளவு களும் இல்லை. அங்கெல்லாம் பார்ப்பனர்கள் இல்லாததுதான் காரணம் என்கின்றது.

ஒட்டியர், மிலேச்சர், ஊணர், சிங்களர்
இட்டிடைச் சோனகர், யவனர், சீனத்தர்
பற்பலர் நாட்டிலும் பார்ப்பார் இலையால்[177]

என்பது பாடல்.

சாதிகளைத் தோற்றுவித்தது யார் என்ற வினாவிற்கும்,

முற்படைப் பதனில் வேறாகிய முறைமைபோல்
நால்வகைச் சாதி இந்நாட்டினில் நாட்டினீர்
மேல்வகை கீழ்வகை விளங்குவது ஒழுக்கால்[178]

---

176. கபிலரகவல், 55—61.
177. கபிலரகவல், 62—64.
178. கபிலரகவல், 65—67.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று சாதிகளை உருவாக்கி, நிலைப்படுத்திவிட்டவர்களாகப் பார்ப்பனர்களையே சுட்டிக் காட்டுகின்றது. அத்துடன் ஒழுக்கந் தான் உயர்வு தாழ்விற்கு அடிப்படை என்பதையும் வலியுறுத்து கின்றது.

கபிலரகவலின் குற்றச்சாட்டிற்குச் சான்றாவதுபோல், மனு தருமத்தில் அமைந்துள்ள பகுதிகளாவன:

> ஒரு பார்ப்பனன் தர்மத்தை நிறைவேற்றவே பிறந்ததனால், உலகில் அனைத்தும் அவன் சொத்தே. அவன் பிறப்பின் மகிமையினால் அவன் அனைத்துக்கும் உரிமை உடையோன் ஆகிறான். ....எல்லா இறந்துபோகும் உயிரினங்களும் பார்ப்பனர்களால்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.[179]

> பார்ப்பனர்கள்மீது வரி விதிக்கக்கூடாது. அரசாங்கமே அவர்களை நிர்வகிக்க வேண்டும்.[180]

> பிர்மா சூத்திரர்களைப் பார்ப்பன சேவகத்திற்கென்றே படைத்தார்:[181]

மனு மற்றும் தருமசாத்திரங்களின் கோட்பாடு சங்ககாலத் தமிழகத்தில் நிலவியது என்பது முன்னரும் விளக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் வருண அடிப்படையில் குடியிருப்புகள் உருவாயின. அரண்மனைகளில் வேத முழக்கம் எதிரொலித்தது. அய்ங்குறுநூறு,

> பகைவர் புல்லார்க! பார்ப்பார் ஓதுக![182]

என்று வேண்டுகிறது. இச்சமூகப் பின்னணியில்தான் ஆரியப்படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியன் பாடல் அமைந்துள்ளது. மாங்குடி மருதனாரும்,

> துடியன் பாணன் பறையன் கடம்பனென்று
> இந்நான் கல்லது குடியும் இல்லை[183]

என்று குறிப்பிடுவதன்மூலம் வேறு ஒரு 'நான்கு குடி'களின் அமைப்பு முறையை எதிர்ப்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

---

179. Caravan, June, 1980 (15—30)
180. மனு. 7 : 133.
181. மனு. 10 : 125.
182. அய்ங். மருதம், 4.
183. புறம். 335 : 7—8,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கியங்களின் நெடிய வரலாற்றில் சாதி ஒழிப்பும், பார்ப்பன எதிர்ப்பும் 'இரட்டைக் குழல் துப்பாக்கி'களாகவே இயங்கி வந்துள்ளன. சமூகத்தில் ஒப்புரவையும் சமத்துவத்தையும் எதிர்பார்த்தவர்களும், அவற்றிற்காகப் பாடுபட்டவர்களும் ஆன அனைவரும் சாதிய ஏற்றத்தாழ்வுகளைப் போக்க அரும்பாடு பட்டுள்ளனர். சித்தரான சிவவாக்கியார்,

சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே
வேர்த்திரைப்பு வந்தபோது வேதம்வந் துதவுமோ[184]

என்றும்,

மாதமாதம் தூமைதான் மறந்துபோன தூமைதான்
மாதமற்று நின்றலோ வளர்ந்துரூபம் ஆனது
நாதமேது வேதமேது நாற்குலங்கள் ஏதடா
வேதமோதும் வேதியர் விளைந்தவாறு பேசடா[185]

என்றும் பெருஞ் சினத்துடன் கேட்பதும் சமூகச் சமத்துவத்தை நோக்கியே ஆகும்.

உலகாய்த எண்ணம் பரவி உலகாய்தக் கோட்பாடு செல்வாக்குப் பெற்றிருந்த காலம்வரை தமிழகத்தில் சாதி மோதல்கள் ஏற்படவில்லை. சமத்துவம் தழைத்தது. சமூக ஒப்புரவு நிலவியது. ஆனால், அரசுகளின் வல்லாண்மையுடன் கடவுளின் படைப்பாகச் சாதி நிலைநாட்டப்பட்டபோது, உலகாய்தர்கள் சண்டாளர்களாக — தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டபோது சமூக ஒப்புரவு சிதைந்தது; சாதி வல்லாண்மை மேலோங்கியது; குலநெறி நிலைபெற்றுவிட்டது.

சாதி வல்லாண்மையின் காரணமாகப் பெண்கள் பருவம் அடைவதற்கு முன்னரே திருமணம் செய்விக்க வற்புறுத்தப்பட்டனர். கணவன் இறந்தால் உடன்கட்டை ஏறல் வற்புறுத்தப்பட்டது. இந்நிலைமைகளை,

வருணாசிரமம் வேரூன்றியபோது, சூத்திரர்கள் மோட்சத்துக்குப் போகும் வழி பிராமணர்களுக்கு ஊழியம் செய்வதுதான் என்றானதுபோல் பெண்ணின் கடமை கணவனுக்குப் பணிசெய்து அடுக்களையில் கிடப்பதே என்று

---

184. சிவவாக்கியர் பாடல், சித்தர் பாடல்கள் (தொ. ஆ.) அரு. இராமநாதன், 13 : 1—2,

185. சிவவாக்கியர் பாடல், பா. 131.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> வந்தது. குழந்தை மணம், கணவன் வழிபாடு, மறுமணத் தடை, கல்வித்தடை ஆகியவற்றின் பொருள் இதுவே. பெண் விடுதலைக்கு உலை வைத்த இந்த ஏற்பாடெல்லாம் வருணாசிரமத்தின் வாரிசுகள். பெண்ணை ஓர் இனிய பலகாரம் ஆக்குவதுதான் ஆணின் முயற்சி. பையப்பைய அவள் அப்படி ஆகியும் விட்டாள்[186]

என்று குஞ்ஞன்பிள்ளை குறிப்பார். உலகாய்தச் சிந்தனை புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூக அமைப்பின் படப்பிடிப்பே மேற்காட்டிய பகுதி எனலாம்.

அகத்திணைக் கல்வியை இருபாலருக்கும் பொதுவாக்கிய தமிழ் மரபில் காதல் வாழ்வு போற்றப்பட்டது. காதலைப் போற்றும் ஒரு சமூக அமைப்பில் சாதி ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமில்லை. வருணமோ, பிறப்பு மேலாண்மையோ குறுக்கிடாத காதலை—அன்பின் அய்ந்திணையைத் தமிழ் இலக்கியங்கள் போற்றுவது குறிக்கத்தக்கது.

சாதி ஒழிப்பைத் தம் பெரும்பணியாகக் கொண்ட பெரியார் சாதிகள் ஒழிந்த கலப்பு மணத்தை ஊக்குவித்ததும், பெண் கல்வி, கைம்பெண் மறுமணம் முதலியவற்றை வற்புறுத்தியதும் உலகாய்தச் சிந்தனையின் மறுமலர்ச்சி எனலாம்.

186. குஞ்ஞன் பிள்ளை, பண்டைய கேரளம், ப. 209.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன்பியல் கோட்பாடு

இன்பத்தைத் துய்த்தல் உயிரின் இயற்கையாகும். ''காதல் அடைதல் உயிரியற்கை'' என்பார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். நீரில் வாழும் பாசி இனம் முதற்கொண்டு, நிலத்தில் வாழும் ஆறறிவு படைத்த மனித இனம் ஈறாக உள்ள அனைத்து உயிரினங்களும் இன்பநாட்டம் உடையனவாகவே உள்ளன. தொல்காப்பியர்,

> எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்[187]

என்று விளக்குவார்.

உயிரின் தேவையான இவ்வின்ப நாட்டம் உலகாய்தக் கோட்பாட்டில் மிகச்சிறந்த இடத்தினை வகிக்கின்றது. மறுபிறவியிலும் மேலுலகத்திலும் நம்பிக்கையற்ற உலகாய்தர்கள், இவ்வுலக வாழ்வையே பெரிதும் மதித்தனர்; போற்றினர். எனவே, இவ்வுலக வாழ்வில் இனப்பெருக்கத்திற்குக் காரணமாகிய பாலுறவைப் பெரிதும் வற்புறுத்தினர்.

நிலையாமையே இவ்வுலகில் நிலைபெற்றுள்ளது என்ற உண்மையை இவர்கள் உணர்ந்திருந்ததாலேயே இளமையில் எழும் இன்பத்தைத் துய்ப்பதன் தேவைகளை வற்புறுத்துகின்றனர். எந்த ஓர் இன்பமும் அப்படியே முழுமையாகக் கிடைப்பதில்லை. அதனுடன் கூடவே துன்பமும் தொடர்ந்தபடி இருக்கும். இருப்பினும் துன்பத்தைப் பொருட்படுத்தாது இன்பத்தை நுகரவேண்டும் என்று அறிவுறுத்தினர். முத்தை எடுக்க விரும்பும் மனிதன் கடலில் மூழ்கும் துன்பத்தை எப்படிப் பொருட்படுத்தக்கூடாதோ அவ்வாறே பெண்ணின்பம் துய்க்க விரும்பும் ஒருவன் அதனால் வரும் துன்பத்தையும் பொருட்படுத்தக்கூடாது. இதனை அழகிய உவமையால் உலகாய்தர்கள் விளக்குவர்.

> ஸ்திரீகளின் ஆலிங்கன முதலியவற்றால் உண்டாகும் சுகமே புருஷார்த்தம். இது துக்கசகிதமாய் இருக்கின்றமையின் புருஷார்த்தம் அன்று என்று கருதுதல் கூடாது; சுகத்துடன் சேர்ந்துள்ள துக்கத்தைப் பரிகரித்துக் கூடிய

187. தொல். பொருள். 219.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> வரையில் சுகமாத்திரத்தை அனுபவித்தல் நமக்கு இயற்கையாயிருத்தலின்.
>
> எங்ஙனம் மச்சத்தைப் புசிக்க விரும்புகின்றவன் முள் ளெலும்பு முதலியவற்றோடு கூடிய மச்சத்தை கிரகித்து (அதில்) எவ்வளவு வேண்டுமோ அவ்வளவெடுத்துக் கொண்டு, மற்றவற்றை நீக்கிவிடுகின்றானோ அல்லது தானியத்தை விரும்புகின்றவன் வைக்கோலுடன் கூடிய தானியத்தைக் கிரகித்துக்கொண்டு மற்றவற்றை நீக்கி விடுகின்றானோ, அங்ஙனமே சுகத்தோடு கூடிய துக்கத் தைப் பரிகரித்துக் கொண்டு சுகமாத்திரத்தை அனுபவித் தல் வேண்டும்.[188]

இந்த விளக்கத்துடன், ஆசிவக மதத்தின் தோற்றுநர்களில் ஒருவ ரும், தமிழகத்தைச் சார்ந்தவருமாகிய பக்குடுக்கை நன்கணியாரின்,

> இன்னா தம்ம இவ்வுலகம்
> இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே[189]

என்ற பாடல் அடிகளை ஒப்பிட்டால், ஆசீவகத்தில் உலகாயதத் தின் தாக்கம் எந்த அளவிற்கு ஊடுருவி இருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

அகத்திணையும் தமிழ் இலக்கியங்களும்

உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் காதல் இலக்கியங் கள் உள்ளன. ஆனால் காதல் இலக்கியங்களை மொழிக்குரிய இலக்கணப் பிரிவுகளில் அடக்கிப் பார்க்கும் மரபு தமிழ் மொழிக்கு மட்டுமே உரிய ஒன்றாக உள்ளது. தமிழ் என்ற சொல்லே இன்பம் என்ற பொருளில் அமைந்துள்ளதும் ஆய்விற்குரிய செய்தியாகும். தமிழ் இலக்கணத்துள் விளக்கப்படும் அகத்திணை மரபுகளைத் 'தமிழியம்' என்றே சிறப்பிப்பார் வ. சுப. மாணிக்கம்.

> அகத்திணைத் தோற்றம் சமுதாயவியல் மானிட நிலவியல் தொல் தமிழினத்தின் உளவியல் என்னும் முக்கூற்றுத் தன்மைகளைச் சார்ந்து நிற்பது. ஆதலின் இம் மூவகை யாலும் நாம் ஆராய வேண்டும். இம் மூவகையுள் அகத் திணைப் பிறப்புக்குச் சிறந்தது எது? என்று கணிக்க

---

188. கோ. வடிவேலுச் செட்டியார், சர்வதர்சன சங்கிரகம், ப. 3.

189. பக்குடுக்கை நன்கணியார், புறம். 194.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> முடியாது. மூன்றும் சிறந்தனவே. அகத்திணைக்குரிய இச்சிறப்பியலைத் தனித்தனியாக விளக்குவதற்கு முன்னர், பண்டைத் தமிழினத்தின் வாழ்க்கை முழுதும், சிறிய பெரிய எச்செயலகத்தும், உயிரென ஓடிக் கிடக்கும் ஒரு தமிழியத்தை—நினைவிலை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இவ் விளக்கமில்லாத் தமிழாராய்ச்சி மண்ணை விண்ணெனவும், மலையைக் கடலெனவும் கருதிய பெருங் குற்றப்படும். நாம் பிறந்து வாழும் இவ்வுலகம் உள் பொருளே; பெருகிய பொருள் நாகரிகம் வேண்டத்தக்கது; அறமும் வளமும் உடைய இவ்வுலக வாழ்வே வாழ்க்கை என்பது சங்கத்தமிழ் மன்பதை—சமுதாயம்—தெளிந்து கடைப்பிடித்த பெருநெறியாகும்[190]

என்று அத் தமிழியத்தை—அகத்திணைத் தோற்றப் பின்புலத்தை உலகியலாக விளக்குவார். தமிழ் அகத்திணையைத் தமிழ்க் காதலாக உருவகப்படுத்தியவர்; அது குறித்துத் தனியான ஆய்வை மேற்கொண்டவர். அவர் உலகாய்தக் கோட்பாட்டின் பின்புலத்தில் தமிழ் அகத்திணைப் பாடல்களை அணுகவில்லை; எனினும் அவர் தரும் விளக்கத்தில் உலகாய்தத்தின் எதிரொலிப்பைக் கேட்க முடிகின்றது.

அகத்திணையில் அளவையியல்

உலகாய்தர்களின் அளவையியல் 'காட்சி'யை அடிப்படையாகக் கொண்டது. காட்சியில் ஏற்படும் அய்யத்தை நீக்கித் தெளிதல் அதன் அடிப்படை. இவ் விளக்கத்தைத் தொல்காப்பியர், 'உரை' பற்றிய விளக்கத்தில்,

> ....
> அய்யமும் மருட்கையுஞ் செவ்விதின் நீக்கித்
> தெற்றென ஒருபொருள் ஒற்றுமை கொளீஇத்
> துணிவொடு நிற்றல் என்மனார் புலவர்[191]

என்பார்.

மன்பதையின் பொதுமையை விளக்கும் வள்ளுவர் காமத்துப் பாலை உலகாய்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே தொடங்குவது குறிப்பிடத்தக்கது.

---

190. வ. சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், பக். 109—110.
191. தொல். பொருள். மரபியல் 104 : 3—5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு[192]

என்பது குறள். இக்குறளில் காட்சி, அய்யம் தெளிதல், ஆகிய மூன்றும் நிரல்பட அமைந்திருக்கின்றது.

ஒரு மெய்யியலை ஏற்றுக்கொண்டவர்கள் தாம் விளக்கும் எந்த ஓர் உண்மையையும் தமக்குரிய அளவையைக் கொண்டே நிறுவுவர். அளவையியலின் தன்மைகளை நன்கு உணர்ந்து மெய்ப் பொருள் தேர்ந்த சான்றோர்கள் களவின்கண் நின்றொழுகமாட் டார் என்பார் வள்ளுவர்.

அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு[193]

என்பது குறள்.

காட்சி அளவையைக்கொண்ட பூதவியலாளனை (பூத வாதியை) உன் தாய் தந்தையரை உய்த்துணர்வால் அன்றிக் காட்சி யால் எவ்வாறு கண்டாய்? என்று மணிமேகலை வினவியதும் ஒப்பு நோக்கத்தக்கது.

இத்தகைய காட்சி அளவையை வள்ளுவர் எந்த அளவிற்குக் கையாண்டுள்ளார் என்பது முன்னரும் கூறப்பட்டுள்ளது.

அகத்திணைத் தலைவன், காதலுணர்வின் ஆணையினால் தலைமகளை முதன் முதலாகக் காணுகின்றான். தலைவி நிற்கும் சூழ்நிலை, அவள் அருகே நிற்போர் தன்மை ஆகியவற்றால் அவள் யாராக இருப்பாள் என்ற அய்யம் அவனது நெஞ்சை ஆட்கொண்டு விடுகின்றது. இந்நிலையில் அவள் சூடியுள்ள மலர், மலரில் மொய்க்கும் வண்டுகள் ஆகியவற்றின் துணையால் அவள் மானிடப் பெண்ணே எனத் தேர்கின்றான். இதனை,

சிறந்துழி அய்யம் சிறந்த தென்ப
இழிந்துழி இழிபே சுட்ட லான[194]

என்றும்,

192. குறள். 1018.

193. குறள். 288.

194. தொல். களவியல் 3.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப[195]

என்று இருநூற்பாக்களில் விளக்குவார் தொல்காப்பியர்.

முதன் முதலாகப் பேரழகியான ஒரு பெண்ணைக் காண நேர்ந்த ஓர் இளைஞனின் நெஞ்சில் தோன்றும் அய்யம் படிப்படியாக நீங்குகின்றது. அய்யத்தை நீக்கும் கருவிகளாக வண்டு, இழை, வள்ளி முதலானவை அமைய, அவன், இவள் 'மானிடப் பெண்ணே' எனத் தெளிகின்றான்.

இந்நூற்பா நாடகப் பாங்கில் அமைந்திருக்கின்றது. இருப்பினும், 'உரை' எப்படி இருக்கவேண்டும் என்று விளக்கும்போது சொல்லப்பட்ட காட்சி, அய்யம், தெளிதல் ஆகிய எண்ண வளர்ச்சி முறை, அதாவது உலகாய்தத்திற்குரிய அளவையியல் இங்கும் சொல்லப்பட்டிருக்கின்றது. அத்துடன், இம் மூன்று தன்மைகளையும் உள்ளடக்கியதாகக் காமத்துப்பாலின் முதற் குறளும் அமைந்துள்ளது நோக்க, உலகாய்தர்களின் அளவையியல் இங்கே முழுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளது என்பதையும் அறிந்து இன்புற முடிகின்றது.

உலகாய்தம்—பூதவியல்—அய்ந்திரம் ஆகிய பெயர்கள் ஒரே மெய்யியலை விளக்கும் பல பெயர்கள். தமிழகச் சிந்தனை வரலாற்றில் தலைமையிடம் வகிக்கும் அய்ந்திர மரபு, வானியலை, உயிரியலை, மருத்துவத்தை, அரசியலை, இன்னும் வாழ்வியலுக்கான அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கியது. எனவே அப்பல் துறைகளுள் அகத்திணையும் ஒரு துறையாக—கற்க வேண்டிய அறிவியல் துறையாக விளங்கியது என்பது ஒருதலை. அகத்திணைப் பாடல்களை அகத்திணைக் கல்வியாகவே காணும் வ. சுப. மாணிக்கம்,

> அகத்திணை ஓர் பாலிலக்கியம். பெயரில்லாதார் வாழ்க்கையிலிருந்து காம நுணுக்கங்களைக் கற்றுக் கொள்கின்றோம். காமம் பற்றிய ஆணுடல் பெண்ணுடல் கூறுகளையும், இயற்கை, செயற்கை, திரிபு ஆகிய மனக்கூறுகளையும் கரவின்றிப் பட்டாங்குச் சொல்வது பாலிலக்கண நூல். அந்நூல் வாழ்வைத் தொடாது, அறிவைத் தொடாது. அதனைக் கற்பவர் அறிவு நிலை பெறுவ

195. தொல். களவியல் 4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரன்றி காதலுக்கு இன்றியமையாத உணர்ச்சி நிலையைப் பெறார். சமுதாயத்தோடு இசைந்த புணர்ச்சி நிலையை எண்ணார். அகத்திணை வாழ்க்கை இலக்கியம் ஆதலால், உலக நடைமுறைக்கு ஒப்பதாயும், பெயரில்லாதாரின் காதல் இயல்புகளைப் புலப்படுத்துவதால் கற்பவர்க்குத் தமது என்ற உணர்ச்சியை ஊட்டுவதாயும் அமைந் துள்ளது[196]

என்று விளக்குவார்.

வடமொழியில் எழுதப்பட்டிருந்தாலும், தமிழக நடைமுறை யோடு அமைந்த வாத்சாயனரின் காமசாத்திரம் பாலுறவின் வகை களைக் கற்றற்குரிய கல்வியாகக் காட்டுகின்றது.

இப்பின்னணியில் ஆரிய அரசன் பிரமதத்தன் 'தமிழ்' கற்றதை யும் ஆராய்தல் இன்றியமையாதது.

ஆரிய அரசன் பிரமதத்தன் என்ற பெயரே அவனது நாடு, மொழி பற்றிய விளக்கத்தை உணர்த்தி நிற்கிறது. வடபுலத்தி லிருந்து, அதாவது வேற்று மொழி பேசும் நாட்டிலிருந்து வந்த அம் மன்னனுக்குக் கபிலர் தமிழ் அறிவுறுத்தும் பொருட்டுக் குறிஞ்சிப் பாட்டை—அகத்திணைக்குரிய 'தோழி அறத்தொடு நிற்றல்' துறை யிலமைந்த பாட்டைப் பாடுகின்றார். தமிழ் கற்ற அவ்வேந்தனும் தன் நன்றிக்கடனைச் செலுத்துவதைப் போல, ''கழறிய பாங்கற் குக் கிழவன் உரைத்தது'' என்ற துறையில் ஒரு பாடலைப் பாடு கின்றான்.

அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை
குறுக லோம்புமின் சிறுகுடிச் செலவே
இதற்கிது மாண்ட தென்னாது அதற்பட
ஆண்டொழிந் தன்றே மாண்டகை நெஞ்சம்
மயிற்கண் அன்ன மாண்முடிப் பாவை
நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉம் கான லானே[197]

என்பது பாடல்.

பரதவர் மடமகள் கண் வலையில் என் நெஞ்சம் பட்டு ஆண்டே தங்கிவிட்டது; இந்நிலை எனக்கு மட்டும் அமைந்ததன்று; யாராயினும் அவ்வலையில் படுவர்; இது

196. வ. சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், பக். 466—467.

197. குறுந். 184.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யான் அறிந்த உண்மை; ஆதலின் அங்கே ஒருவரும் செல்லற்க; செல்லின் துன்புறுவீர் என்னும் கருத்துப்பட தலைவன் கூறினான். இதனால், ''நீர் கண்டனிராயிற் கழறலிர்[198]

என்பது இதன் கருத்து.

ஆசிரியராகிய கபிலர் குறிஞ்சித்திணையில் தோழியின் கூற்றாகப் பாட, மாணவனாகிய மன்னவன் நெய்தல் திணையில் காதல் வயப்பட்ட தலைவனின் கூற்றாகப் பாடியுள்ளான். அகத்திணைப் பாடல்களில் குறிப்பாகக் குறுந்தொகைப் பாடல்களில் பல இதைப் போன்ற பின்னணியில் அமைந்திருக்கக் காணலாம்.

அய்ந்திர மரபாகிய உலகாய்தம் காதலை, காமத்தைச் சிறப்பிப்பது; துய்க்க வேண்டிய இன்பங்களுள் தலையானதாக வற்புறுத்துவது.

> கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
> மொண்டொடி கண்ணே யுள[199]

என்று வள்ளுவர் இதன் பெருமையை வியப்பார்.

உலகாய்தர்கள் போற்றும் இவ்வின்பத்தை, இவர்களை எதிர்ப்போர் மிகவும் கண்டிக்கின்றனர். உலகாய்தர்களின் தேவையே மூன்று 'மா'க்கள்தான். ஒன்று மது; மற்றொன்று மாது; மூன்றாவது மாமிசம் என்றும் எள்ளுவர். இக்குற்றச்சாட்டில் ஓரளவு உண்மை இருப்பினும், உலகாய்தர்கள் முற்றிலுமாக இம்மூன்றனுக்கும் அடிமை ஆயினர் என்றோ, அடிமை ஆகவேண்டும் என்றோ யாண்டும் கூறவில்லை என்பதும் எண்ணத்தக்கது.

போரின் கொடும்பிடிக்கு ஆட்பட்ட ஒரு சமூகத்தில், புண் தோய் குருதியில் பொலிந்த மைந்தர்கள் தம் வலியை மறக்க மதுவை அருந்தலும் அருந்தச் செய்தலும் உண்டு. மதுவிலக்கு நடைமுறையில் உள்ள இந்நாளிலும், சேனையில் உள்ள வீரர்கட்கு அரசே மதுவை வழங்குவது இந்தியப் படைத்துறையின் நடைமுறை ஆகும்.

போரில் அருஞ்சமம் சிதையத் தாக்கிய மானமறவர்கட்கு அரசன் கள்ளும், புலால் உணவாகிய பெருஞ்சோறும் வழங்கி அவ்வீரர்களோடு உடனுண்டு மகிழ்வான். எனவே, மது சமூகப் பழக்கத்தில் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று.

---

198. குறுந்., உ. வே. சா. உரை., ப. 357.

199. குறள். 1101.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இளமை இன்பத்தை நுகரவும் இம்மது பயன்பட்டது. பகலெல்லாம் போர்ப் பயிற்சியில் கலந்தும், வீர விளையாட்டுக்களில் திளைத்தும் மகிழ்கின்றனர் இளைஞர்கள். அவர்களே இரவுநேரத்தில் நாடகம் நயந்தும் பாடல்கள் கேட்டும் மகிழ்கின்றனர். இளம் மகளிரோ, கடல் நீராடி, அதன் தீது நீங்கப் புதுப் புனல் படிந்தும். அலவன் ஆட்டியும், திரைகளில் திளைத்தும் அகலாத காதலுடன் பகற்பொழுதெல்லாம் திளைத்தனர். இத்தகைய பெண்கள் இரவில் தம் காதற்கொழுநருடன் உறவாடி மகிழ்கின்றனர். இதனைப் பட்டினப்பாலை,

> துணைப்புணர்ந்த மடமங்கையர்
> பட்டுநீக்கித் துகிலுடுத்தும்
> மட்டுநீக்கி மதுமகிழ்ந்தும்
> மைந்தர்கண்ணி மகளிர்சூடவும்
> மகளிர்கோதை மைந்தர் மலையவும்[200]

எனச் சிறப்பிக்கும்.

இப்பாடற் பகுதியின் நயம் உணர்ந்து இன்புறத்தக்கது. பட்டு சற்று வன்மை வாய்ந்தது; உடலை முற்றாக மறைப்பது. துகிலோ மென்மையானது; உள்ளுறுப்புகளின் தோற்றப் பொலிவினை இலைமறை காயாகக் காட்டி ஆவலைத் தூண்டவல்லது. எனவே, துணைப்புணர்ந்த இளம் பெண்கள் தம் கணவர்களின் நெஞ்சில் ஆவலைத் தூண்டும் வண்ணம் மெல்லிய துகிலை உடுத்தினர்.

மட்டு—கள் பேரளவில் பருக வேண்டிய தன்மையது. நாட்டு வழக்கில் 'மொடாக்குடியன்' என்ற பழமொழி அதன் அளவு மிகுதி நோக்கி வழங்குவது. ஆனால் மதுவைக் குறைவாகப் பருகினாலே போதும். 'தேட் கடுப்பன்ன நாட்படு தேறல்' என்பது மதுவையே. புணர்ச்சிக்குரிய வேளையில் காதலர்கள் மட்டினை நீக்கினர். தாம் துய்க்க வேண்டிய பேரின்பம் நோக்கி மட்டினை நீக்கிய அவர்கள் மதுவை அருந்தினர் அருந்துதல்—சுவை பார்க்கும் அளவினது. இன்ப உணர்வைத் தூண்டும் அளவிற்கே அவர்கள் பருகியுள்ளனர். அதன் விளைவு தாம் தம்மை மறந்தவராய், 'மைந்தர் கண்ணி மகளிர் சூடவும், மகளிர் கோதை மைந்தர் மலையவுமான' இன்பக் கொள்ளையில் திளைத்தனர்.

காதலர்கள் ஆண் பெண் இருபாலாரும் மது அருந்துவதற்காகவே சில குறிப்பிட்ட நண்பர்களின் இல்லங்களில் கூடவேண்டும் என வாத்சாயனரும் தம் காமசாத்திரத்தில் வற்புறுத்துவார்.

---

200. பட்டினப்பாலை 106—110.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டினப்பாலையில் வரும் மேற்காட்டிய பகுதி, அந்நூலை உலகாய்தக் கோட்பாட்டிற்குரிய நூலாகக் காட்டும் சான்றுகளில் தலையான ஒன்றாக அமைகின்றது.

இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினீ துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூழி யையயே[201]

என்ற மதுரைக்காஞ்சியின் அடிகளையும் பட்டினப்பாலையோடு ஒப்பிட்டுக் காணலாம்.

காமம் கடியத்தக்க ஒன்றா?

பாவ புண்ணியங்களைப் பற்றிக் கவலைப்படாதவர்களாகவும், காம இன்பத்திலேயே திளைப்பவர்களாகவும் உலகாய்தர்களைக் குறை கூறுவார் குணரத்னா. உலகாய்தர்களை நோக்கி இத் தகைய குற்றச்சாட்டுகள் குணரத்னாவிற்கு முன்னரும் சுமத்தப்பட்டன. இதனைப் பரிபாடல் மிகத் தெளிவாக உணர்த்துகின்றது. நான்மறையாளர்களை விளித்துக் கூறும் அப்பகுதியாவது,

நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
காதற் காமம், காமத்துச் சிறந்தது
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி[202]

என்பதாம்.

இப்பகுதிக்கு வ. சுப. மாணிக்கம் தரும் விளக்கம் ஈண்டுக் குறிக்கத்தக்கது.

> பொதுவான மொழி வழக்கில் காதல் என்பது உள்ளப் பற்றையும், காமம் என்பது உடற்பற்றையும் குறிக்கும் என முன்னர்க் கண்டோம். இரு சொல்லின் பொருளையும் ஒருங்கு காட்டும் ஒரு தமிழ்ச் சொல் உண்டா? உண்டு; அதுவே அகம் என்னும் சொல். எனினும் முன்னிலைப் படுத்திக் கூறும் நான்மறையாளர்க்கு விளங்க வேண்டி, குன்றம்பூதனார் ''காதற் காமம்'' என்ற ஒரு புதுத் தொடரை ஆக்கினார். ஆக்கி, ''விரும்பு ஒரொத்து

201. மதுரைக்காஞ்சி. 779—782.

202. பரிபாடல் 9 : 12—15.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெய்யுறு புணர்ச்சி'' எனப் பொருளும் நிரல்பட விரித்துக் காட்டினார்.[203]

மிளைப்பெருங்கந்தன்

குன்றம் பூதனாரைப் போன்றே காமம் பற்றிய விளக்கத்தைத் தந்தவர் மிளைப்பெருங்கந்தன் என்ற சங்கச் சான்றோராவார். இவரது இரு பாடல்கள் காமம் என்ற சொல்லின் வரைவிலக்கண மாக அமைந்துள்ளன.

காமங் காம மென்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே யானை
குளகு மென்று ஆள்மதம் போலப்
பாணியும் உடைத்து காணுநர்ப் பெறினே.[204]

காமம் காமம் என்று உலகினர் அதனைக் குறை கூறுவர்; அக் காமமானது புதிதாகத் தோற்றும் துன்பமும், நோயும் அன்று. நுண்ணியதாகி மிகுதலும் குறைதலும் இல்லை. குளகு என்னும் தழையுணவை உண்டதனால் யானைக்கு ஏற்படும் மதத்தைப் போலக் கண்டு மகிழ்வாரைப் பெற்றால் அக் காமம் வெளிப்படும் செவ்வியை உடையது.

காமம் இயல்பாக ஒருவரிடம் இருந்து உரிய காலத்தில் வெளிப் படுவது. உரிய காலத்தில் வெளிப்படும் இவ்வுணர்வு வேட்கையை ஆங்கிலத்தில் பாலது இயக்கம் (Sex Drive) எனச் சுட்டுவர். தொல்காப்பியர் இவ்வியக்கத்தைப் பாலது ஆணை என்பார்.

ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை இன்றே[205]

என்பது நூற்பா.

ஆண், பெண் என்ற இருபாலிடத்தும் ஒன்றி வளர்ந்து செவ் வியை நோக்கி நிற்கும் பாலது ஆணையாகிய இன்ப நாட்டம்,

---

203. வ. சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், ப. 455.

204. குறுந். 136.

205. தொல். களவியல் 2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே[206]

என்ற நிலையில் ஒத்துள்ள தலைவன் தலைவியரிடையே தோன்றும். இதில் தலைவியைவிடத் தலைவன் வயதில் மிக்கோனாயினும் விலக்கு இல்லை என்பது பொருள்.

தொல்காப்பியர் 'பாலது ஆணை' என்றும், 'உருவு நிறுத்த காம வாயில்' என்றும் சுட்டிச் சொல்லும் இன்ப நாட்டத்தின் இயல்பினைத்தான், மிளைப்பெருங்கந்தனார், 'பாணியும் உடைத்து காணுநர்ப் பெறினே' என்று குறிக்கின்றார்.

உரிய பருவத்தில் தோன்றும் இயற்கை நிகழ்ச்சியாகிய இவ்வுணர்வு, நோயோ துன்பமோ அன்று. அது நினைக்க நினைக்க மகிழ்ச்சி தரும் ஒரு புதிய விருந்தே என்று மற்றொரு பாடலில் விளக்குவார்.

காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே! நினைப்பின்
முதைச்சுவல் கலித்த முற்றா இளம்புல்
மூதா தைவந் தாங்கு
விருந்தே காமம் பெருந்தோ ளோயே![207]

காமம் காமம் என்று அதனை அறியாதார் இழித்துரைப்பர். ஆனால் காமம் நோயும் துன்பமும் அன்று. முதிய பசு, மேட்டு நிலத்தில் செழித்துள்ள இளம் புல்லை நாவால் தடவி இன்புறுதலைப்போல, காமமும் நினைக்கின்ற போதெல்லாம் இன்பத்தைத் தரவல்லதாகும். இதே பொருளில் வள்ளுவரும் காமத்தை,

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு[208]

எனக் கள்ளோடு ஒப்பிட்டுரைப்பார்.

மனித அறிவின் எல்லைக்கு உட்பட்டது காமம். அது உரிய பருவத்தில் தோன்றுவது; உயிரின் இயற்கைக்கு உரியது. இத்தகைய

206. தொல். மெய்ப்பாட்டியல் 25.
207. குறுந். 204.
208. குறள். 1281.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காமத்தை இகழ்ந்து உரைத்தல் பேதைமை என்று விளங்க வைப்பதுபோல மிளைப்பெருங்கந்தனாரின் பாடல்கள் அமைந்துள்ளன.

இவ்விரு பாடல்களை, அவற்றிற்குரியனவாகக் குறித்துள்ள துறைகளை மறந்து காணும்போது தாம் கொண்ட கொள்கையினை மாற்றாருக்கு உணர்த்தும் பாங்கில் அவை அமைந்துள்ளமையை அறிய முடிகிறது. அத்துடன் அகத்திணை பற்றிய பல்வேறு ஆய்வுகளும் அக்காலத்தில் நடந்தன என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது.

சமூக வாழ்வில் தவிர்க்கக்கூடாத இக்காதலை நெறிப்படுத்தி, மனித மனத்தைத் தெளிவுபடுத்தும் உளவியற் கலையாகவும் ‘தமிழ்க் காதல்’ அமைந்துள்ளது. குடும்ப வாழ்வின் மலர்ச்சிக்கும் அடித்தளமாக இக்காதல் வாழ்வைத் தமிழ்ச் சான்றோர் அன்பின் அய்ந்திணையாக வளர்த்தனர். காதலின் சிறப்பினை பெட்ரண்டு ரசல்,

> சிற்றின்ப இயல்புணர்ச்சியை நாகரிக மக்கள் காதலுடனன்றி முழுமையாகத் தணித்துக்கொள்ள முடியாது. மனிதனுடைய முழு ஆற்றலும், அதாவது உடலுடன் மனமும், ஆண்—பெண் உறவில் ஈடுபட்டாலன்றிச் சிற்றின்பம் நாடும் இயல்புணர்ச்சி பூரணமாகத் திருப்தியுறாது. மகிழ்ச்சியான, பரஸ்பரக் காதலினால் விளையும் ஆழ்ந்த நெருக்க உணர்ச்சியையும், தோழமை உணர்ச்சியையும் அறியாதார். வாழ்க்கை அளிக்கும் மிகச் சிறந்தவற்றை அடையும் பேறுபெறாமற் போனவர்களேயாவர். அவர்களுடைய உணர்ச்சியுள்ள நிலையில் (Consciousness) தெரிந்தோ தெரியாமலோ மேற்சொன்ன பேறு இல்லாமையை அவர்கள் உணர நேருகையில் ஏற்படும் ஏமாற்றத்தால், பொறாமை, அடக்குமுறை, கொடுமை ஆகிய தீக் குணங்கள் தோன்றுகின்றன. பரஸ்பரமான ஆழ்ந்த காதலை அனுபவிக்காதவர்கள் இயற்கையையொட்டி முழு வளர்ச்சியுற இயலாது. உலகை மகிழ்ச்சியுடன் கூடிய தாராள மனத்துடன் காண இயலாது. அவ்வாறு உலகில் மற்ற உயிர்களுடன் வாழ முடியாதவர்களின் சமூகப் பணிகள் தீமை பயப்பனவாக இருக்குமாதலால், ஆழ்ந்த காதலுக்கு உரிய இடம் கொடுப்பது சமூக இயல் வல்லுநர்களின் கடமையாகும்[209]

என்று தரும் விளக்கம் ஒப்புநோக்கத்தக்கது.

---

209. பெட்ரண்டு ரசல், திருமணம், (த.ஆ.), மாதவன். கோ., ப. 135—136.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரசல் வற்புறுத்துகின்ற சமூகவியலாரின் கடமைகளை உள்ளடக்கியனவாகவே சங்கப் பாடல்கள் அமைந்துள்ளன. இன்பமும் பொருளும் வாழ்வின் துய்த்தற்குரிய இரு அடிப்படைத் தேவைகள். இத்தகைய தேவைகளையும்கூட வாய்ப்பு நேருகிறதே என்பதற்காக அறப்புறம்பான வகையில் நிறைவு செய்து கொள்ளக்கூடாது என்பதைச் சங்கச் சான்றோர்கள், அகத்திணைக் கல்வியின் மூலம் வற்புறுத்தியுள்ளனர்.

தன்மீது தலைவன் ஆராக் காதல் கொண்டவனாக விளங்கினும், தலைவன் சான்றோர் பழிக்கும் வகையில் இன்பத்தைத் துய்க்கமாட்டான் என்று உறுதிப்படுத்துகின்றாள் தலைவி.

> கழீஇயக் காதல ராயினும் சான்றோர்
> பழியொடு வருஉம் இன்பம் வெஃகார்[210]

என்பது பாடல்.

தான் கொண்ட காதலைப் பெற்றோருக்கு உணர்த்துவதும், தான் விரும்பிய காதலனே தனக்குக் கணவனாக அமைதல் வேண்டும் என்று வற்புறுத்தலும்கூட அறத்தையே அடித்தளமாகக் கொண்டிருந்தது. 'அறத்தொடு நிற்றல்' என்ற துறை, தமிழ் அகத்திணையின் பெருமைக்குச் சான்றாகும். தலைவியின் காதல் நெஞ்சையும், அறத்தின் பிடிப்பையும் உணர்ந்த தாய், மகளின் திருமணத்திற்கு ஆவண செய்வாள்.

> அறத்தொடு நின்றேனைக் கண்டு திறப்பட
> என்னையர்க் குய்த்துரைத்தாள் யாய்[211]

என்பது கலித்தொகை.

'உயரிய காதல் இன்பத்தைக் குறைவறத் துய்க்கும் நிறையுடையோர்கள், உலகை ஆழ்ந்த பேரன்புடன் நோக்குவார்கள்' என்ற ரசலின் உளவியல் ஆய்வுரையை மெய்ப்பிக்கும் வண்ணம் அமைந்துள்ள அகநானூற்றுப் பாடல் ஒன்றின் நயம் இங்கே ஒப்புநோக்கத் தக்கது.

போரின் காரணமாகத் தலைவன் பிரிந்து சென்றுள்ளான். அவனை நினைத்துத் தலைவி ஆராத்துயருடன் ஆற்றி இருக்கின்றாள். தலைவியின் துயரை மிகுவிக்கும் வண்ணம் கார்காலம்

210. அகம். 112.
211. கலி. குறிஞ்சி 39 : 20—21.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்துவிட்டது. அக் கார்காலத்தில் வந்துவிடுவதாகக் கூறிச் சென்ற தலைவனோ இன்னும் வரவில்லை. தலைவியின் துயருக் கான காரணங்களை நன்கு அறிந்த தோழி தலைவியை ஆற்றுவிக் கின்றாள்.

நம் தலைவன் குதிரைகள் பூட்டியதும், மணிகள் நிறைந்தது மாகிய தேரில் வந்தான். தேரின் மணிகள் குதிரைகளின் வேகத் திற்கேற்ப அதிர்ந்து முழங்கின. அம் முழக்கத்தைக் கேட்டதும், பூத்துள்ள மலர்களின் தாதினை உண்பதற்காகத் துணையுடன் புணர்ந்த வண்டுகள் அஞ்சி நடுங்கின. வண்டுகளின் அச்சத்தைக் கண்ட மாத்திரத்திலேயே தலைவன் தேரை நிறுத்தி, மணிகளில் உள்ள நாவினைக் கயிற்றால் பிணைத்து அவை ஒலிக்காது இருக்கச் செய்தான். வண்டுகளின் அச்சத்தைக்கூட களைய முனைந்த அப் பேரருளாளன், உன் அச்சத்தைப் போக்க உடனே வருவான்; கவலாதே.

முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்கால் கொன்றை மென்பிணி அவிழ
இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பில்
பரலவ லடைய விரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்பக்
கருவி வானம் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்
குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நரம்பார்த் தன்ன வாங்குவள் பரியப்
பூத்த பொங்கர்த் துணையோடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றுங் குறுமபொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாஅது
நெடும்பெருங் குன்றத்து அமர்ந்த காந்தள்
போதவிழ் அலரி நாறும்
ஆய்தொடி அரிவைநின் மாண்நலம் படர்ந்தே[212]

இப்பாடலை, செய்யுளில் பயிலும் 'நோக்கு' என்பதற்கு மேற் கோள் காட்டி இதன் நயத்தைச் சிறப்பிப்பார் பேராசிரியர்.

தலைவியோடு துய்க்கும் மெய்யின்பத்தை உயிரினும் மேலாகக் கருதும் உலகாய்தத் தலைவன், தலைவியோடு இன்பத்தைத் துய்த்

212. அகம். 4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துக்கொண்டிருக்கும்போதே உயிர் பிரிந்தால் எவ்வளவு இனிதாக இருக்கும் என்பான்.

பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு
உடனுயிர் போகுக தில்ல; கடனறிந்து
இருவே மாகிய உலகத்து
ஒருவே மாகிய புன்மைநா முயற்கே[213]

என்பது குறுந்தொகை.

மேற்காட்டிய பாடல், விருப்போரொத்த மெய்யுறு புணர்ச்சியின் மாண்பினை விளக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

காதல், மெய்யுறு புணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. இருப்பினும் உள்ளார்ந்த அன்பின் விளைநிலமாக அக்காதல் வாழ்வை அமைப்பது அகத்திணைக் கல்வி. 'நெஞ்சுதளை அவிழ்ந்த' புணர்ச்சிக்கு, அன்புடை நெஞ்சங்களின் கலப்பே சாலச் சிறந்தது. பருவமும் ஆண்மையும் ஒத்திருப்பினும், 'உருவு நிறுத்த காம வாயிற்' பொருத்தம் மிக்கிருப்பினும், தலைவியின் மன ஓட்டத்தைப் புரிந்துகொள்ளும் 'காமச் செவ்வியை' அறியத் துணை புரிவதே அகத்திணைக் கல்வியின் நோக்கம்.

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்[214]

என்று நுகர்ச்சியின் செவ்வியை—அதனை அறிய வேண்டிய நுட்பத்தை உணர்த்துவார் வள்ளுவர்.

இவ்வின்பச் செவ்வியை அறிந்த ஒரு தலைமகனின் அனபின் ஆழத்தைக் குறுந்தொகைப் பாடல் உணர்த்துகின்றது.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே[215]

213. குறுந்தொகை.
214. குறள். 1289.
215. குறுந். 40.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுத்தையும், சொல்லையும் கற்க வேண்டிய அறிவியலாக வற்புறுத்திய தமிழ் மரபு பொருள் வாழ்வையும் அவற்றுள் அடக்கி யுள்ளது ஏன்? அகத்திணைக் கல்வியின் செழிப்பை—தேவையை விளக்கி நிற்பதே பொருளிலக்கணத்தின் நோக்கம் எனலாம்.

> அகத்திணை இலக்கியத்தில் பன்மாணும் விரித்துப் புனையப்பெறுவது ஏனையதாகிய காமப்புணர்ச்சியே. புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல்களும் இவற்றின் நிமித்தங்களும் எல்லாம் காமப்புணர்ச்சியின் கூறுகளே. முதல் கருவெல்லாம் காமப்புணர்ச்சியின் விரிவுகளே. காமம் பிறப்பின் இயல்பானது, நல்லது, இனியது, இன்றியமையாதது என்பது தமிழியம். காமத்துறையில் எண்ணங்களை எண்ணுவது எப்படி? சொல்லுவது எப்படி? புணர்வைத் துய்த்தும், பிரிவைப் பொறுத்தும் வாழ்வது எப்படி? என்ற அறிவுரைகளை அகப்பாட்டுக் கற்பிக்கின்றது[216]

என்று வ. சுப. மாணிக்கம், அகப்பாடல்களில் அமைந்துள்ள வாழ்வியற் கல்வியை—அதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகின்றார்.

காதல் இன்பத்தைக் குறைவறத் துய்க்கப் புனலாடலையும், பொழிலிடைப் புகுதலையும் வற்புறுத்துவர் உலகாய்தர்கள். அத்துடன் பரத்தையர் உறவும் அங்கு இடம் பெறும். தமிழ் அகத்துறையில், பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, பொழில்தரு புணர்ச்சி என இவை இடம்பெறுகின்றன. அத்துடன் அகத்திணையில் 'பரத்தையர்' தலைமக்கள், தோழி இவர்களைப் போன்று சிறந்த இடத்தினை வகிக்கின்றனர். இவற்றையெல்லாம் தொகுத்துக் காணும்போது தமிழ் 'அகத்திணை' தமிழகத்தில் பல்கிப் பெருகி நின்ற உலகாய்தத்தின்—பூதவியலின் அடித்தளத்தைக் கொண்டு அமைந்துள்ளது என்பது தெளிவு.

பூதவியலைக் கற்பதற்காகவே பலர் தென்னாடு வந்தனர். பார்சுவரின் நிக்கந்தப் பிரிவைச் சார்ந்த நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார், ஆசீவகத் துறவியான கணியன் பூங்குன்றனார், ஆரிய அரசனாகிய யாழ் பிரமதத்தன் ஆகியோர் அகத்திணைப் பாடல்களைப் பாடி இருக்கின்றனர். பௌத்த சமயத்தை உணர்த்தும் பெயர்களுக்குரிய இளம்போதியாரும், சமண சமயத்தவராகக் கருதத்தகும் உலோச்சனாரும் பாடிய பாடல்கள் அகத்திணை இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இவற்றிற்கான காரணங்

216. வ. சுப. மாணிக்கம், தமிழ்க் காதல், பக். 457—458.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களை ஆராய்கின்றபோது தமிழகம் உலகாய்தத்தின்—பூதவியலின் பிறப்பிடமாகவும், பலரும் விரும்பிக் கற்கப் புகுந்த இருப்பிடமாக வும் விளங்கியது என்ற உண்மை மேலும் மேலும் வலுப்பெறு கின்றது.

மதுரையும் வையையும்

'தமிழ்' என்ற சொல் உலகாய்தத்தை உணர்த்துவது முன்னரும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

கள்ளொடு காமம் கலந்து கரைவாங்கும்
வெள்ளந் தருமிப் புனல்[217]

எனக் கள்ளோடும் காமத்தோடும் கலந்துவரும் வையை ஆற்றைத்,

தமிழ்வையைத் தண்ணம்புனல்[218]

எனக் குறிப்பதும், வையைக்கும் உலகாய்தத்திற்கும் உள்ள தொடர்பினைக் குறிக்கும் அடையாளமாகும்.

காதலர்களின் கூடலினாலும், அவர்கள் குடைந்து ஆடிய தாலும் வண்ணம் கலங்கிவரும் வையைப் புனலைக் கண்டு, பார்ப் பனர்கள் ஒதுங்குவதாகக் குறிப்பதும் உலகாய்தத்திற்கும் வைதிகத் திற்கும் நடந்த மோதலின் அடையாளக் குறியீடாகும்.

களிப்பர் குளிப்பர் காமங் கொடிவிட
அளிப்ப துளிப்ப ஆங்காங்கு ஆடுப
ஆடுவார் நெஞ்சத்து அலர்ந்தமைந்த காமம்
வாடற்க வையை நினக்கு[219]

என்று வையை ஆற்றை வாழ்த்தும் பகுதியுடன்,

தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மருகின் மதுரை[220]

என்ற அடிகளை ஒப்பிட்டால், மதுரைக்கும் உலகாய்தத்திற்கும் உள்ள உறவு தெளிவாகின்றது.

காதலர்களின் நீராடல் காரணமாகக் கலங்கிய வையை நீரைக் கண்டு 'புலம்புரி அந்தணர் கலங்கினர் மருண்டு' என்று குறிப்பார் நல்லந்துவனார். பார்ப்பன இளம் பெண்கள் தம் தாயர்

217. பரிபாடல் 10 : 69—70.
218. பரிபாடல் 10
219. பரிபாடல் 45 : 103—106.
220. சிறுபாணாற்றுப்படை 66—67.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அருகிருக்க நீராடுகின்றனர். நீராடிய குளிரைப் போக்கக் கரையோரத்தில் மூட்டிய வேள்வி நெருப்பில் குளிர் காய்கின்றனர். இத்தகைய காட்சியை விளக்கும் அதே புலவர்,

பொய்யாடல் ஆடும் புணர்ப்பின் அவரவர்
தீயெரிப் பாலும் செறிதவமுன் பற்றியோ
தாயருகா நின்று தவத்தைந்நீர் ஆடுதல்
நீயுரைத்தி வையை நதி[221]

என்று வினவுகின்றார்.

தாய் அருகே நிற்கத் தைந்நீராடும் அப் பார்ப்பன இளம் பெண்களின் நீராடல் பொய்யாடலாம். ஏன்?

காமமுங் கள்ளும் கலந்துடன் பாராட்டத்
தாமமர் காதலரொ டாடப் புணர்வித்தல்
பூமலி வையைக் கியல்பு[222]

என்ற வையையின் இயல்புக்கு மாறான நீராடலாக அவ்வாடல் அமைந்துவிட்டதால் அது பொய்யாடலாயிற்று.

இன்பத்தைப் புணர்விக்கும் இயல்பினதாகிய வையை, மதுரை மக்களின் வாழ்வோடு தொடர்பு கொண்டது. உலகாய்தத்தின் குறியீடாகவே வையை 'தமிழ்வையைத் தண்ணம் புனல்' என்று குறிக்கப்பட்டுள்ளது. கள்ளின் மகிழ்ச்சி எங்கும் நிறைந்திருக்கும் மதுரை 'தமிழ் நிலைபெற்ற தாங்கரும் மரபின் மதுரை' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை, மாங்குடி மருதனார்,

இலங்கிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
மணங்கமழ் தேறல் மடுப்ப நாளும்
மகிழ்ந்தினீ துறைமதி பெரும
வரைந்துநீ பெற்ற நல்லூழி யையே[223]

என்று வாழ்த்துவார். இப்பகுதி உலகாய்தத்தின் வாழ்க்கை நெறியாக அமைந்துள்ளதை அறியலாம்.

---

221. பரிபாடல் 20.

222. பரிபாடல் 20 : 109—111.

223. மாங்குடி மருதனார், மதுரைக்காஞ்சி, 779—782.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நம்பி நெடுஞ்செழியனின் மறைவு குறித்த பாடலும் உலகாய்தத்தின் பிழிவாகவே அமைந்துள்ளது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடல் வருண நெறியையும் மேல்வருணத்தின் மேலாண்மையையும் முற்றாக எதிர்த்த புரட்சி முழக்கம். அறிவுடைநம்பி இம்மை வாழ்வின் பயனுக்குக் காரணமாகிய மகப்பேற்றின் மாண்பினைக் கூறியவன். கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதியின் பாடல் மானிட இனத்தின் பொதுமையை—மனிதப் பண்பின் உயர்வை விளக்குவது.

நெடுநல்வாடையும் முல்லைப் பாட்டும் பாண்டிய வேந்தர்களோடு தொடர்பு கொண்ட அகத்துறைப் பாடல்கள். உலகாய்தத்திற்குரிய செங்கோலின் சிறப்பையும்—காதலின் உயர்வையும் புனைவன.

இத்தகு பின்புலத்தோடு ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் காலத்தில் மதுரை தீக்கிரையானதும், தீக்கடவுள் பார்ப்பனக் கோலத்தோடு வந்து மதுரைக்குத் தீ வைத்தது என்பதும் நோக்க, புத்தம் செழித்த நாளந்தா பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட நிலை, உலகாய்தம் நிலைபெற்றிருந்த மதுரைக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதே முடிவாகிறது.

ஆற்றுப்படை இலக்கியங்கள்

வள்ளல்களின் பெருமையை விளக்கும் ஓர் இலக்கிய வகையாக அமைந்தவை ஆற்றுப்படை பாடல்கள். இருப்பினும் பத்துப்பாட்டில் நெடும் பாடல்களாக அமைந்த சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படைப் பாடல்களை நோக்க, அவை சிதைந்து கொண்டிருந்த தமிழ்க் கலைஞர்களின் வாழ்க்கை அவலங்களைத் தாங்கி நிற்பவை என்பதை அறிய முடிகின்றது.

அரசர்களின் போர்க்களங்களைப் பாடிப் பொற்றாமரைகளைப் பரிசாகப் பெற்ற இக்கலைஞர்கள், வள்ளல்களை நாடி, ஊர் ஊராகச் சென்று கலைகளைக் காட்டித் தம் வறுமையைப் போக்கும் அளவிற்குத் தள்ளப்பட்டு விட்டனர். வருணப் பிரிவு தமிழகத்தில் காலூன்றியதன் விளைவால் பாணர்களின் நிலை தாழ்ந்து போயிற்று.

அழகிய இளம் பெண்களை—விறலிகளைப் பாணர்கள் தம்முடன் அழைத்துச் செல்வர். அப்பெண்கள் ஆடற்கலையிலும் இசைக்கலையிலும் தேர்ச்சி பெற்றவர்கள். பாணர்களின் இசைக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஏற்ப விறலியர் வள்ளல்களின் முன்னர் ஆடுவர். இவ் விறலியரைப் பற்றிய வருணனையே இங்குக் குறிக்கத்தக்க செய்தியாகும்.

தலை முதல் கால் வரை அவர்களின் உறுப்பு நலன்களை விவரிப்பது ஆற்றுப்படை இலக்கியங்களில்தான் முதன் முதல் தோற்றம் கொள்கின்றது.

அய்துவீழ் இருபெயல் அழகு கொண்டருளி
நெய்கனிந் திருளிய கதுப்பிற் கதுப்பென
மணிமயிற் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயில்மயிற் குளிக்குஞ் சாயல் சாஅய்
உயங்குநாய் நாவின் நல்லெழில் அசைஇ
வயங்கிழை யுலறிய அடியின் அடிதொடர்ந்து
ஈர்ந்து நிலந்தோயும் இரும்பிடித் தடக்கையிற்
சேர்ந்துடன் செறிந்த குறங்கிற் குறங்கென
மால்வரை ஒழுகிய வாழை வாழைப்
பூவெனப் பொலிந்த ஓதி ஓதி
நளிச்சினை வேங்கை நாள்மலர் நச்சிக்
களிச்சுரும் பரற்றுஞ் சுணங்கிற் சுணங்குபிதிர்ந்து
யாணர்க் கோங்கின் அவிர்முகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சே றிகுதரும் எயிற்றின் எயிற்றெனக்
குல்லையம் புறவின் குவிமுகை யவிழ்ந்த
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமா னோக்கின் வாணுதல் விறலியர்[224]

இவ்வழகுப் புனைந்துரை விறலியரைப் பிறந்த கோலமாகக் காட்டுகின்றது.

விறலி என்ற சொல்லிற்குச் சிறப்புற ஆடவல்லவள் என்பது பொருளாகும். உலக இன்பத்திற்குரிய கலைகளான இசையும் ஆடலும் தமிழகத்தில் செழித்து வளர்ந்தவை. உலகாய்த வாழ்க்கை நெறி வளர்த்த நுண்கலைகளான இசையும் ஆடலும் மக்களின் வாழ்வோடு இணைந்தவை. போரையும் காதலையும் அடியொற்றி வாழ்ந்தும் வளர்ந்தும் வந்த இக்கலைகளும் கலைஞர்களும் தமிழ் மன்னர்கள்—மக்களின் உயர்வோடு உயர்ந்தனர்.

அகத்திணை மாந்தர்களுள் பார்ப்பனப் பாங்கனோடு பாணனும் ஒப்ப வைத்து மதிக்கப்பட்டான். ஆனால் வருணநெறி தமிழகத்

224. சிறுபாணாற்றுப்படை, 13—31.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தில் செல்வாக்குப் பெற்றபோது பார்ப்பனப் பாங்கன் அந்தணனாக உயர்ந்தான். பாணனோ தாழ்ந்துவிட்டான். பழுமரம் நாடும் பறவைகளைப் போல் வள்ளல்களை நாடி ஊர் ஊராய், கோடை என்றும் பாலை என்றும் பாராது தம் சுற்றத்தோடு அலையும் அவலத்திற்கு ஆளானான். இந்தச் சூழ்நிலையில் ஆடல் மகளான விறலியின் அழகையும் இளமையையும் மற்றவர்களிடம் பறைசாற் றித் தம் வாழ்வை வளப்படுத்த வேண்டிய நிலை உருவாயிற்றோ என்ற அய்யத்தை விறலியின் வருணனைகள் உணர்த்துகின்றன.

ஆற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனைப் பாராட்டும் பகுதிகள் அனைத்தும் உலகாய்தக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்திருக்கின்றன.

அரசன் அவையில் வீற்றிருக்கின்றான். அவனது அறிவின் நுட் பத்தை—பல்துறை வல்லமையை அவ்வத் துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் ஏற்றிப் போற்றுகின்றனர். அவனது போராற்றலை—ஒருவனாய் நின்று வருபடை தாங்கும் வீரத்தைத் தறுகண்மை மிக்க வீரர்கள் பாராட்டுகின்றனர். செவ்வி பார்த்தும், தான் கருதியது முடிக்கவும், பெண்களின் மன ஓட்டத்தை அறிந்து அவர்களைக் காமுறப்படுத்தவுமான இன்பத்துறை ஆற்றலைப் பெண்கள் பாராட்டும் இயல்பினை உடையவன் என்றெல்லாம் வரும் பகுதி கள் உலகாய்தவழி அமைந்தன.

செய்ந்நன்றி அறிதலுஞ் சிற்றின மின்மையும்
இன்முகம் உடைமையும் இனிய னாதலும்
செறிந்து விளங்கு சிறப்பின் அறிந்தோர் ஏத்த
அஞ்சினர்க் களித்தலும் வெஞ்சின மின்மையும்
ஆணணி புகுதலும் அழிபடை தாங்கலும்
வாள்மீக் கூற்றத்து வயவர் ஏத்தக்
கருதியது முடித்தலும் காமுறப் படுத்தலும்
ஒருவழிப் படாமையும் ஓடிய துணர்தலும்
அரியேர் உண்கண் அரிவையர் ஏத்த
அறிவுமடம் படுதலும் அறிவுநன் குடைமையும்
வரிசை அறிதலும் வரையாது கொடுத்தலும்
பரிசில் வாழ்க்கைப் பரிசிலர் ஏத்தப்
பன்மீன் நடுவண் பான்மதி போல
இன்னகை ஆயமொடு இருந்தோன்......[225]

இத்தகு பெருமைக்குரியவர்கள், பாணன் என்றும், பொருநர் என் றும், புலவர் என்றும், அந்தணர் என்றும் வேறுபாடு காட்டாதவர் கள் என்ற பொருளில்,

225. சிறுபாணாற்றுப்படை, 206—220.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருநர்க் காயினும் புலவர்க் காயினும்
அருமறை நாவின் அந்தணர்க் காயினும்
... ...
அடையா வாயில்... ... ...[226]

என்ற அடிகள் அமைந்துள்ளன. இதனால் வேறுபாடு காட்டியவர்கள் இருந்தனர் என்பதும் பெறப்படுகிறது. இத்தகைய வேறுபாடுகளின் தொடக்கம்தான் உலகாயதத்தின் வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்துவிட்டது.

அத்துடன் புத்த சமண சமயங்களின் பரவல், வைதிகச் சமயத்தின் மேலாண்மை, சாதிகளின் தோற்றம் விளைத்த சமூகச் சீரழிவு, மேலுலக நம்பிக்கை ஆகிய புறநிலைத் தாக்கங்களுக்கு முன்னர் உலகாயதம் தன் நிலையிலிருந்து பின்னடையத் தொடங்கிற்று.

பௌத்தம், உலகாய்த நெறியைப் பின்பற்றிய நாகர்களை மனித ஊன் உண்பவர்களாகவும், வரம்பற்றுப் பெண்ணின்பத்தை நுகர்பவர்களாகவும் புனைந்தது. நாகர் தலைவனுக்கும் சாதுவனுக்கும் நடந்த உரையாடலில் இதனை அறியலாம்.

நம்பிக்கு இளையளோர் நங்கையைக் கொடுத்து
வெங்களும் ஊனும் வேண்டுவ கொடுமென
அவ்வுரை கேட்ட சாதுவன் அயர்ந்து
வெவ்வுரை கேட்டேன் வேண்டேன் என்றலும்
பெண்டிரும் உண்டியும் இன்றெனின் மாக்கட்கு
உண்டோ ஞாலத்து உறுபயன் உண்டெனில்
காண்குவம் யாங்களும் காட்டுவா யாகென......
தூண்டிய சினத்தினன் சொல்லெனச் சொல்லும்
மயக்கும் கள்ளும் மன்னுயிர் கோறலும்
கயக்கறு மாக்கள் கடிந்தனர்......[227]

என்பது பாடற்பகுதி.

மனித ஊன் உண்பவர்களாக மணிமேகலை அடையாளம் காட்டும் இந்நாகர்கள் சிலப்பதிகாரத்தில் பெற்றுள்ள இடம் மிகவும் உயர்ந்தது.

இன்ப வாழ்வின் நிலைக்களனாக விளங்கியது நாகநாடு எனச் சிலம்பு புகழும்.

226. சிறுபாணாற்றுப்படை, 203—206.
227. மணி. 16 : 76—85.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாகநீள் நகரொடுநாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்[228]

பரிபாடலும் நாகரின் பெருமைகளைப் பின்வருமாறு பேசும்.

புனைவினைப்பொலங் கோதையவரொடு
பாகர் இறைவழை மதுநுகர்பு களிபரந்து
நாகரின்நல் வளவினை வயவேற நளிபுணர்மார்
காரிகைமது ஒருவரின்ஒருவர் கண்ணிற் கவர்புறச்
சீரமை பாடற் பயத்தால்......[229]

'ஒளிவிடும் அணிமணிகளை அணிந்த இளம் பெண்களுடன் பாகுதங்கிய இளங்கள்ளைப் பருகி, மகிழ்ச்சி பெருக, நல்ல அறவினைகளைச் செய்த நாகர்களைப்போல விருப்பம் மேலும் மேலும் பெருக இடைவிடாது புணர்ந்து இனிய இசையைக் கேட்டு பயன் துய்ப்பர்' என்பது அப்பாடல் பகுதியின் பொருளாகும்.

இவ்வாறு காதலின்பத்திற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் களாகவும் செல்வச் செழிப்பும் அறச்செயல்களில் ஈடுபாடும் கொண்டவர்களாவும் சுட்டப்படும் நாகர்களை மணிமேகலை இழிவுபடப் புனைவதற்குச் சமயப் பூசலே காரணம் எனலாம்.

காமசாத்திரமும் சிலப்பதிகாரமும்

ஆற்றுப்படை இலக்கியங்களில் ஆடல்மகளிராக புனையப்படும் விறலியர்களே சிலப்பதிகாரத்தில் கணிகையராகக் குறிக்கப்படு கின்றனர். மெய்ப்பாடு தோற்றி, கைத்திறம் விளங்க ஆடவல்ல வர்கள் என்ற பொருளை உணர்த்தும் சொல்லே 'விறலி' என்ப தாகும். இவர்கள் விழாக் காலங்களில் மேடையேறி ஆடுவர்.

ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவி பனிநீர் இன்னிசை
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை இகக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலியாடு மயில்
விழவுக் களவிறலியிற் றோன்றும்......[230]

எனக் குறிப்பார் கபிலர்.

---

228. சிலம்பு 1 : 21—22.
229. பரிபாடல் 11 : 65—69.
230. அகம். 82 : 1—10.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்க இலக்கியங்களுள் பயிலும் 'விறலி' என்ற சொல் சிலப்பதிகாரத்திலும் அதற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கியங்களிலும் 'கணிகை' என்ற பொருளில் பயின்று வரலாயிற்று.

'கணிகை' என்ற சொல்லிற்கு நாட்டிய முத்திரைகளைக் காட்டும் கைகளை உடையவள் என்பது பொருள். கணித்த கையினள் கணிகை எனப்பட்டாள்.

'விறலி' என்ற பெயர் மாறி 'கணிகை' என்ற புதுப் பெயர் பெற்றாலும், தொழில் 'விழா நாட்களில் மேடையேறி ஆடுதலே' ஆகும். ஆனால் சமூக அமைப்பில் விறலிக்கு இருந்த இடம் கணிகைக்கு இல்லாது போய்விட்டது.

சங்க இலக்கியங்களில் வரும் பரத்தையின் தன்மைகளையும், விறலியின் ஆடற்கலையினையும் கொண்ட ஒரு புது நிலையைக் கணிகை அடைந்துவிட்டாள். 'நாடக மேத்தும் நாடகக் கணிகை' என்பது சிலம்பு.

இக்கணிகையர் செல்வர்களின் குறிப்பாக வணிக ஆடவர்களின் காமப் பொருளாக மாறிவிட்டனர். இவர்களின் வரலாற்றைச் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் விரிவாகப் பேசும். உலகாய்த வாழ்வை அடியொற்றியும், கணிகையரின் வாழ்க்கையை விவரித்தும் அமைந்த இன்பியல் நூல் காமசாத்திரம். இத் தன்மைகளையும் ஈண்டுக் காண்பது தேவைக்குரியது.

காமசாத்திரமும் கணிகையும்

தமிழ்ச் சொல்லான 'கணிகை'யே காமசாத்திரத்தில் 'கணிகா' என்று வழங்கப்பட்டுள்ளது. மானியர் வில்லியம்சின் வடமொழி அகராதியில் 'கணிகை' என்ற சொல் இடம் பெறாமையும் தமிழ் இலக்கியத்துள்ளும் தமிழ்ச் சமூகத்துள்ளும் 'கணிகையர்' இடம் பெற்றுள்ளதும் நோக்க, இச்சொல் தமிழ்ச் சொல்லே என்பது தெளிவு.

வாத்சாயனரின் காமசாத்திரத்தில் வரும் கணிகை காம இன்பத்தை (நகரத்தானுக்கு)க் குறைவற வழங்குபவள். ஆடல், பாடல் ஆகிய 64 கலைகளிலும் தேர்ந்தவள்.

சிலப்பதிகார மாதவியும், ''எண்ணெண் கலையும் இசைந்துடன் போகிய''[231] சிறப்பினள்.

231. சிலம்பு. அரங்கேற்றுக்காதை, 8 : 64.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக்கலைகள் கணிகையரின் குலத்தொழிற் கல்வியானதால் இவற்றைக் கற்பது அவர்களின் கடமை. இதனால், அக்கணிகையர் தெரு,

பண்ணும் கிளையும் பழித்த தீஞ்சொல்
எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்[232]

எனப்பட்டது.

இவர்களின் வீதியில் தங்கிச் செல்பவரை,

தவத்தோ ராயினும் தகைமலர் வண்டின்
நகைப்பதம் பார்க்கும் இளையோ ராயினும்
காம விருந்தின் மடவோ ராயினும்
ஏம வைகல் இன்றுயில் வதியும்[233]

எனப் பட்டியலிடும் சிலப்பதிகாரம்.

வாத்சாயனர்,

> இத்தகைய 64 கலைகளிலும் தேர்ச்சி பெற்ற பொது மகள் கணிகை எனப்படுவாள். இவளது கலைப் புலமை காரணமாக மற்றவர்களால் பெரிதும் மதிக்கப்படும் சிறப் பினைப் பெறுவாள். அரசர்களும் செல்வர்களும் விரும்பி இவர்களின் வளமனைகளில் தங்கிச் செல்வர். செல்வமும், ஆடல் பாடல் கலைகளில் தேர்ந்தும் அழகுபடுத்திக்கொள் வதில் ஆர்வமும் கொண்டுள்ள 'நகரத்தான்' இத்தகைய கணிகையர்களை விரைவில் தன்னகப்படுத்துவான்[234]

என்று கணிகையர்களின் இயல்பைச் சுட்டுவார்.

நகரத்தான்

வாத்சாயனரின் கருத்துப்படி, கணிகையர்களை நாடிச் செல் லும் இயல்பினன் 'நகரகா' எனப்படுவான். 'நகரகா' என்னும் இச் சொல் தமிழ் வணிகர்களைக் குறிக்கும் 'நகரத்தார்' என்ற சொல் லின் வடமொழி வடிவம் ஆகும்.

தனக்குரிய கலைகளிலும் கல்வியிலும் கற்றுத்தேர்ந்த நகரத் தான் (நகரகா) பூங்காவும், நிலவுப் பயன்கொள்ளும் நெடுநிலா முற்றங்களும் கொண்ட வளமனைகளை அமைத்து அதில்

232. சிலம்பு. 14 : 166—167.
233. சிலம்பு. 11 : 162—165.
234. Vatsayana, Kamasastra, III, p. 13.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கணிகையரோடு இன்பம் துய்ப்பான் என்று வாத்சாயனர் குறிப்பார்.

சிலப்பதிகாரம் இச்செல்வர்களை 'நகர நம்பியர்' என்றும், இவர்கள் திரியும் வீதியை ''நகர நம்பியர் திரிதரு மறுகு''[235] என்றும் குறிக்கும்.

சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் கணிகையரோடு தொடர்பு கொண்டவர்களாக வருபவர் அனைவரும் நகரத்தாராகிய வணிகர்களே என்பதும் கருதத்தக்கது.

வாத்சாயனரும்—திருமணமும்

வடமொழி தரும சாத்திரங்கள் அனைத்தும் குழந்தை மணத்தை வற்புறுத்துவன. அத்துடன் மண வகையை எட்டாகப் பிரித்து முதல் நான்கையும் இரு பிறப்பாளர்களுக்கு எனவும், பின்னைய நான்கினையும் சூத்திரர்கட்கு எனவும் வகைப்படுத்துவன.

தமிழ் அகத்திணைத் திருமணம் அன்பின் அடிப்படையில் அமைந்தது. பருவம் வாய்ந்த ஆணும் பெண்ணும் கூடித் துய்க்கப் பெறும் இன்பத்தை விளக்குவது.

வாத்சாயனர் தரும சாத்திரங்களைப் பின்பற்றாது, தமிழ் மரபுக்குரிய அன்பின் அய்ந்திணையை அடியொற்றியே மண முறையை விளக்குகின்றார்.

காமசாத்திரத்தின் 18வது இயல், மணத்திற்கு முந்திய காதல் வாழ்வின் தேவையை விளக்குகின்றது. தன்னால் விரும்பப்படும் காதலியின் ஒப்புதலைப் பெறுவது எப்படி என்பதையும், அவ்வொப்புதலுக்குத் துணையாகும் தோழியர்கள் யார் என்பதையும் அவ்வியல் நிரல்பட விளக்குகின்றது.

காதலர்களுக்குத் துணையாக வரும் தோழி, தலைவியின் வளர்ப்புத் தாயின் மகளாகவே இருக்கவேண்டும். காதலர்கள் தம் அன்பைப் புலப்படுத்தும் வண்ணம் மலர்களைக் கொய்தும், மாலைகள் தொடுத்தும் விளையாடுவர். ஆக மணவாழ்வுக்குக் காதல் மிகவும் தேவை என அவ்வியல் வற்புறுத்தும் செய்திகள் தமிழ் அகத்திணையின் 'களவியலோடு' பெரிதும் பொருந்தியுள்ளது.

இளைஞன் தான் விரும்பும் காதலியின் மனத்தைக் கவரும் வகையில் தன் வயதிற்கு ஏற்ற விளையாட்டுக்களில் அவ

235. சிலம்பு. 3 : 168.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஞுடன் ஈடுபடல் வேண்டும். அவ்விளையாட்டுக்கள் அச் சமூகத்தின் பழக்க வழக்கங்களோடு தொடர்பு கொண்ட தாகவும், காதலி விரும்பக்கூடியனவாகவும் இருத்தல் வேண்டும்.

உடல் வலிமையைக் காட்டும் வீர விளையாட்டுக்களி லும் ஈடுபடலாம். குறிப்பாக எதை எதைச் செய்தால் தன்னால் விரும்பப்படும் காதலி தன்னை விரும்புவாளோ அவற்றையெல்லாம் செய்ய வேண்டியது இளைஞனின் கடமை[236]

வாத்சாயனரின் அவ் விளக்கத்துடன் கலித்தொகை முல்லைக் கலியின் பாடல்களை ஒப்பிடலாம். சான்றாக,

... ...
புல்லினத் தாயர் மகளிரோ டெல்லாம்
ஒருங்கு விளையாட அவ்வழி வந்த
குருந்தம்பூங் கண்ணிப் பொதுவன்மற் றென்னை
முற்றிழை யேஎர் மடநல்லாய் நீயாடுஞ்
சிற்றில் புனைகோ சிறிதென்றான் எல்லாநீ
பெற்றேம் யாமென்று பிறர்செய்த இல்லிருப்பாய்
கற்ற திலைமன்ற காணென்றேன் முற்றிழாய்
... ...
சொல்லிய வாறெல்லாம் மாறுமாறு யான்பெயர்ப்ப
அல்லாந்தான் போலப் பெயர்ந்தான் அவனைநீ
ஆயர் மகளிர் இயல்புரைத்து எந்தையும்
யாயும் அறிய உரைத்தீயின் யானுற்ற
நோயும் களைகுவை மன்[237]

இப்பாடல் நயம்பட அமைந்து இளைஞர்களின் காதல் உணர் வினை வெளிப்படுத்தக் காணலாம்.

கந்தருவம்ணம

எட்டு வகை மணமுறைகளை வகைப்படுத்திக் காட்டும் வாத்சாயனர், கந்தருவ மணத்தைப் பற்றிக் குறிப்பது மிகுந்த ஆய்விற்குரியது.

கந்தருவமணம் நடுவனாக வைத்துச் சொல்லப்பட்டிருப் பினும், சிறந்த திருமண வாழ்வின் பயனை நல்க வல்லது;

236. Vatsayana, Kamasastra, p. 118.
237. முல்லைக்கலி. 11.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதிக்கத்தகுந்தது; காதல் உணர்வு தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது.

கந்தருவமணம் அன்பையும் நிறைவையும் பெருக்க வல்லது. மேலும், பிற மணவகைகளில் ஏற்படும் எவ்வித இடையூறுகளும் இல்லாதமைந்தது. எனவே எண்வகை மணங்களுள் இதுவே மிகமிகச் சிறந்ததாகும்.[238]

இவ்விளக்கத்தைத் தொல்காப்பியத்தின்,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த அய்ந்திணை மருங்கின்
காமக் கூட்டம் காணுங் காலை
மறையோன் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ் துணைமையோர் இயல்பே[239]

என்ற நூற்பாவுடன் ஒப்பிட்டுக் காணலாம்.

வடமொழியில் அமைந்த தருமசாத்திரங்கள் குழந்தை மணத்தை வற்புறுத்துவன; கந்தருவ மணத்தைச் சூத்திரர்க்கு உரியதாக்கி அதற்குரிய சமூக ஒப்புதலை அளிக்க மறுப்பன. இந்நிலையில் வாத்சாயனர் வடமொழி மரபை ஒட்டித் தம் நூலை எழுதி இருப்பாராயின் கந்தருவமணத்தை ''எண்வகை மணங்களுள் இதுவே மிகமிகச் சிறந்ததாகும்'' என்று உயர்த்திப் பேசி இருக்கமாட்டார். அத்துடன் தமிழ் மரபுக்குரிய 'அறம், பொருள், இன்பம்' ஆகிய வாழ்வியற்கூறுகளை அப்படியே பின்பற்றியிருக்கவும் மாட்டார்.

காமசாத்திரத்தின் தொடக்கமே 'அறம், பொருள், இன்பம்' என்ற மூன்று உறுதிப் பொருள்களின் சிறப்போடு தொடங்குகின்றது.

தொல்காப்பியமும் அன்பின் அய்ந்திணையை அம்மூன்று உறுதிப்பொருள்களோடு தொடர்புபடுத்தியுள்ளமை முன்பே விளக்கப்பட்டது.

வடமொழி தருமசாத்திரங்கள் நான்கு வகை உறுதிப்பொருள்களை வற்புறுத்த காமசாத்திரம் தமிழ் மரபிற்கேற்ப மூன்றைச் சொல்வதும், அவற்றுள் காமத்தை ஓர் அறிவியல் கல்வியாக—

---

238. Vatsayana, Kamasastra, p. 137.

239. தொல். களவியல், 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனித வாழ்வின் நிறைவிற்குக் காரணமாகிய அடிப்படைக் கல்வி யாக வற்புறுத்தியுள்ளது.

காமம்—சொல்லும் பொருளும்

காமம் என்ற சொல் 'கமம்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்தது. கமம் என்ற சொல்லிற்கு நிறைவு, நிறைதல் என்பன பொருள்களாகும்.

கமநிறைந் தியலும்[240]

என்பது தொல்காப்பியம்.

வாழ்க்கையின் நிறைவு அவன் துய்க்கும் இன்பங்களினால் வருவது. இன்பத் துய்ப்பிலும் காதலின்பம் தலையாயது. காதல் இன்பத்தின் விளைபயனால் வருவது மக்கட்பேறு. மக்கட்பேற்றின் சிறப்பில்லாதவர்கள் எவ்வளவு செல்வம் பெற்றிருப்பினும் நிறைவு பெறாதவர்களே.

மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே[241]

என்பது பாண்டியன் அறிவுடைநம்பியின் பாடல்.

தொல்காப்பியரும் வாழ்க்கையின் நிறைவை ''காமம் சான்ற கடைக்கோட் காலை'' என்றே குறிக்கின்றார்.

தமிழ் இலக்கியங்கள் 'காமம்' என்ற சொல்லைப் பேரளவில் பயன்படுத்தியுள்ளன. காமம் என்ற சொல் வடமொழியில் முதன் முதலாக அதர்வண வேதத்தில் காணப்படுவதாக சிம்மர் குறிப்பார்.[242]

அதர்வண வேதம் தொல்காப்பியத்திற்குப் பிந்தியது.

காமசாத்திரம் 'காமம்' என்ற தமிழ்ச் சொல்லால் ஆனது. தமிழ் மரபிற்குரிய அறம், பொருள், இன்பங்களை ஏற்றுக்கொண்டது; மணமுறையில் வடமொழி தருமசாத்திரங்களின் விதிகளை மீறிக் கந்தருவ மணத்தைச் சிறப்பிப்பது. தமிழ்ச் சொல்லாகிய நகரத்தாரையும், கணிகையரையும் அடிப்படையாகக் கொண்டு காமவியலின் நுட்பத்தை விளக்குவது.

ஆக, இத்தகைய காரணங்களால் காமசாத்திரம் முதலில் தமிழில் தோன்றிப் பின்னர் சமற்கிருதத்தில் மொழியாக்கம் செய்

---

240. தொல். சொல். உரியியல் 355.
241. புறம். 188.
242. Zimmer, Philosophies of India.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. தமிழில் அமைந்த மூலநூல்கள் பல இவ்வாறு மொழியாக்கம் செய்யப்பட்டு மூலப்படிகளை இழந்திருக்கின்றன. அவற்றுள் பஞ்சதந்திரக் கதைகளும் அடங்கும். திருக்குறள்—ஆசீவகம் ஆகியவற்றின் பின்புலத்தில் பஞ்சதந்திரக் கதைகளைத் தனி ஆய்வாகவே மேற்கொள்ளலாம்.

காமசாத்திரம் மனிதப் பொதுமையாகிய இன்பத்தை ஒரு குறிப்பிட்ட வகுப்பாருக்காக மாற்றிவிட்டது; இருப்பினும், உலகாய்தக் கோட்பாட்டின் எச்சங்களைத் தாங்கி நிற்கும் ஒரு நூலாக அது விளங்குவதைப் புறக்கணிக்க முடியாது.

உலகாய்தம் மனித வாழ்வின் சிறப்புக்களை வற்புறுத்தியது; அறிவியல் அணுகுமுறையுடன் கூடிய கல்வியைத் தந்தது; பேச்சாற்றலையும் காதல் வாழ்வையும் அறிவியலாகவே வளர்த்தது. இத்தகைய உலகாய்தத்தின் சுவடுகள் அனைத்தும் இன்றும் தமிழ் இலக்கியங்களுள் பொதிந்து கிடக்கின்றன உலகாய்தத்தின் பிறப்பிடமாகிய இத்தமிழகத்தில் மாற்றுச் சமயங்கள் மேலோங்கிய போது மக்களின் பொதுமைக்காகக் குரல் கொடுத்த உலகாய்தம், அந்த மக்கள் வாழ்விலிருந்தே ஒதுங்கிவிட்டது காலக் கொடுமையாகும்.

மணிமேகலை, நீலகேசி, சிவஞானசித்தியார் ஆகிய சமய நூல்களில் உலகாய்தம் இடம் பெறுவது ஆராய்ச்சிச்சாலையில் ஆய்விற்காக வைக்கப்பட்டிருக்கும் எலும்புக்கூட்டையே ஒக்கும். எலும்புக்கூட்டிலிருந்தும் மண்டையோட்டின் அமைப்பிலிருந்தும் மனித உருவத்தைக் காண முயல்வதைப் போன்றுதான் உலகாய்தத்தை மறுத்தவர்களின் நூல்களிலிருந்து உலகாய்தத்தைக் காண முயலும் முயற்சியுமாகும்.

இத்தகைய உலகாய்தத்தின் வாழ்வு சங்க இலக்கியங்களுடன் முடிந்துவிட்டாலும், அதற்குப் பின்னர் மீண்டும் அது 'சுயமரியாதைத் தத்துவ'மாகப் பிறப்பெடுத்துள்ளது ஒரு வரலாற்றின் கட்டாயமே ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயல்—ஆறு

பெரியாரியல்

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை, நெறிகளை மறுப்பதாகாது; எதையும் காரணங்கண்டு ஆராய்ந்து உண்மை காண்பதாகும். போலித்தனமான எண்ணங்களை, செயல்களை அழித்தொழிப்பதுதான் பகுத்தறிவு ஆகும்...... சாதி முறையை எதிர்த்துப் போர் தொடுத்திடுங்கள்...... விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழமுடியாத மூடப் பழக்கங்களுக்கு எதிராகப் போர் தொடுக்கும்படியும் உங்களை வேண்டுகிறேன்.....நமது தமிழகத்தின் முதல் பேராசிரியர் பெரியார்.

அறிஞர் அண்ணா—'பெரியார் ஒரு சகாப்தம்'
பக்கங்கள் 30 & 36.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and with the Compliments of the Dept: of Education, Govt: of India New Delhi

பெரியாரியல்

பல்வேறு தடைகளுக்கும் மறுப்புகளுக்கும் உட்பட்டிருந்த உலகாய்தம் இருபதாம் நூற்றாண்டில் புதிய திருப்பத்தைக் கண்டது. பகுத்தறிவையும் சமூக ஒப்புரவையும் அடிப்படையாகக் கொண்ட புரட்சி இயக்கமாகவும், மக்கள் இயக்கமாகவும் அது வடிவம் கொண்டது. இப்புதிய போக்கினை உருவாக்கியவர் பெரியார் ஈ. வெ. இராமசாமி ஆவார்.

'பேத நிலையே மனித வாழ்வின் கவலைகளுக்கெல்லாம் காரணம் என்றும், அப்பேத நிலையை அகற்றுவதன் மூலம் மனித சமூகத்தை அமைதியும் இன்பமும் நிறைந்ததாக மாற்ற முடியும், எனவும் கண்ட பெரியார், அப்பணிக்காக அமைத்த இயக்கமே 'சுயமரியாதை இயக்கம்' என்னும் தன்மான இயக்கமாகும். இதன் கோட்பாடுகளைப் பெரியாரியல் எனக் குறிப்பர்.[1]

பெரியாரியலின் சமூகப் பின்புலம்

இந்தியச் சமூக அமைப்பில் வருணநெறியும் மனுநெறியும் மீற முடியா விதிகளாயின. மனித வாழ்வின் அனைத்துப் பகுதிகளிலும் இவையே ஊடுருவி நின்றன. இதன் விளைவால் சாதிகளின் தோற்றம் தவிர்க்க இயலாததாயிற்று. சாதிகள் ஒன்றிலிருந்து மற்றொன்றாய்க் கிளைத்தாலும் ஒன்றோடு ஒன்று இணையவோ ஒப்புரவு கொள்ளவோ இயலாதவாறு தனிமைப்படுத்தப்பட்டன.

வருணநெறியில் கடைசியராக இருந்த 'சூத்திரர்'களுக்கும் கீழாகப் 'பஞ்சமர்' எனும் சாதி அமைப்புப் புதிதாக உருவாயிற்று.[2] வருணநெறிக்கு உட்படாதவர்களான இவர்களை வருணமற்றவர் என்ற பொருளில் 'அவர்ணசுத்தர்' என்று அழைத்தனர்.

1. கி. வீரமணி, விடுதலை (நாளிதழ்), 20-3-78.
2. பஞ்சமன்—அய்ந்தாம் சாதி, தமிழ்மொழி அகராதி, ப. 928.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருணநெறியில் சூத்திரர்கட்கு மறுக்கப்பட்டிருந்த கல்வி, பொருளீட்டல், கோவில் நுழைவு, சமூக ஒப்புரவு ஆகிய அனைத்தும் பஞ்சமர்கட்கும் விரிவுபடுத்தப்பட்டன. அத்துடன் பஞ்சமர்களின் நிழல் படுவதும் கொடுங்குற்றமாகக் கருதப்பட்டது. சிலர் தீண்டத்தகாதவராகவும், சிலர் காணத்தகாதவராகவும் ஆயினர். இவர்களின் குடியிருப்புகள் ஊர்களுக்கு வெளியே அமைக்கப்பட்டன. மனுதர்மம் இதனை,

> சண்டாளர்களின் குடியிருப்புகள் கிராமத்திற்கு வெளியே தான் இருக்கவேண்டும். அவர்கள் இரந்து உண்பவர்களாக ஆக்கப்பட வேண்டும். நாய்களையும்—கழுதைகளையும் மட்டுமே அவர்கள் சொத்தாக வைத்திருக்கலாம்.
>
> செத்தவர்களுடைய ஆடைகளையே அவர்கள் தம் ஆடைகளாக உடுக்கவேண்டும். அவர்கள் தம் உணவினை உடைந்த சட்டிகளிலேயே சாப்பிட வேண்டும். துருப்பிடித்த இரும்பினாலான ஆபரணங்களையே அவர்கள் அணிதல் வேண்டும். எப்போதும் அவர்கள் இடம் விட்டு இடம் அலைநது கொண்டேயிருக்க வேண்டும்[3]

என்று குறிக்கும்.

இத்தகைய விளைவுகளால் இந்தியச் சமூகம் மாற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் வழியில்லாது தேக்கமுற்ற சமூகமாக, சாதியச் சமூகமாக நிலைத்துவிட்டது. கல்வி அறிவு மறுக்கப்பட்டதால் அறியாமை அரசோச்சியது.

> இந்த அமைதியான கிராமச் சமூகங்கள் சாதுக்களாகத் தோன்றிய போதிலும், கீழ்க்கண்ட கொடுங்கோன்மைகளுக்குத் திட்டமான அடிப்படையாக இருந்தன என்பதை நாம் மறக்க முடியாது; அந்தச் சமூகங்கள் மனித மூளையைச் சின்னஞ்சிறு கூட்டுக்குள் அடைத்து அதை மூடநம்பிக்கையின் சுலபமான கருவிகளாகவும், பரம்பரைச் சம்பிரதாய விதிகளின் அடிமையாகவும் ஆக்கியதையும் சகல வகைப்பட்ட சிறப்புக்களையும் சரித்திரபூர்வமான சக்திகளையும் மனித மூளை பெறமுடியாமல் செய்ததையும் நாம் மறக்க முடியாது.
>
> இந்தச் சிறு சமூகங்கள் சாதிவேறுபாடுகளாலும் அடிமை முறைகளாலும் களங்கமடைந்திருந்தன. மனித

3. அம்பேத்கார், மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு, (த. ஆ.), தலித் அகாடமி, ப. 34.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> னைச் சூழ்நிலைக்கு எசமானனாக்குவதற்குப் பதிலாக அவனைச் சுற்றுப்புறச் சார்புக்கு அடிமைப்படுத்தின. தானாக வளர்ந்து கொண்டிருந்த சமூக நிலையை, ஒரு பொழுதும் மாறாத இயற்கை விதியாய்ச் செய்தன......... இயற்கையின் எசமானனாகிய மனிதன் குரங்காகிய அனுமான் முன்பும், பசுமாட்டின் முன்பும் தெண்டனிட்டு வணங்கியதில் இந்தச் சிறுமை காட்சியளித்தது.
>
> மாண்புக்கும் முன்னேற்றத்துக்கும் இடமில்லாத இந்தத் தேக்கமான செயலற்ற வாழ்க்கை நேர்மாறான விளைவுகளை உண்டாக்கிக் குறியோ நெறியோ இல்லாத அழிவுச் சக்திகளைத் தாண்டவமாடச் செய்து, நரபலி யையே இந்தியாவின் சமயச் சடங்காக ஆக்கியது என்பதையும் நாம் மறக்கக்கூடாது[4]

என்று காரல் மார்க்சு இந்தியச் சமூகத்தின் தன்மைகளை விளக்குவார். இத்தகைய சூழலே பெரியாரியல் தோன்றுவதற்கானப் பின்புலத்தை அமைத்தது.

வருணநெறியில் சூத்திரன்

வருணப் பாகுபாடு மனிதனைப் பிரித்தது. சாதிப் பாகுபாடு அவனை ஒன்றுசேர விடாது தடுத்தது. இவ் வருணத்தையும் சாதியையும் 'தருமசாத்திரங்கள்' நிலைப்படுத்தின—பாதுகாத்தன. தருமசாத்திரங்களின் இத்தகைய கருத்துக்கள் எல்லாம் இந்து மதத்தின் கோட்பாடுகளாயின. வருணங்களைக் கடவுளே படைத்தார் என்பதால் வருணநெறியை மீறுதல் கடுங்குற்றமாகக் கருதப்பட்டது. அத்தகைய குற்றங்களைச் சூத்திரர்கள் செய்யின் தண்டனை மிகமிகக் கடுமையாக இருக்கும்.

> சூத்திரன் பிராமணனுக்குப் பணிசெய்வதை விட்டுவிட்டு வேறேதேனும் தொழிலைச் செய்வானேல் நரகத்தை அடைவான்[5]

எனப் பராசரரும்,

> சூத்திரன் வேதத்தை வாயினால் சொன்னால் நாக்கை அறுக்கவேண்டும். உணர்ந்து வைத்திருந்தால் நெஞ்சைப் பிளக்க வேண்டும்[6]

---

4. காரல் மார்க்சு, இந்தியாவைப்பற்றி(த.ஆ.), எஸ். இராமகிருஷ்ணன், பக். 26—27.
5. சிவானந்த சரசுவதி, மதவிசாரணை, ப. 118.
6. சிவானந்த சரசுவதி, ஞானசூரியன், ப. 77.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று பிரம்மசூத்திர உரையில் சங்கராச்சாரியும் தண்டனைகளின் தன்மைகளை விளக்குவர்.

எனவே மதத்தின் பேராலும், தருமசாத்திரங்களின் பேராலும் மறுக்கப்பட்ட மனித உரிமைகளை மீட்பதும், மனிதர்களைத் தன்மானத்தோடு வாழச் செய்வதும் ஆகிய பெரும் பணியைப் பெரியார் தொடங்கினார்.

மனிதனை மனிதன் அடிமைப்படுத்தவும், இழிவுபடுத்தவும் காரணமாக இருந்த சாதி அமைப்பை மதமும் மத நிறுவனங்களும் பாதுகாத்தன. விடுதலை பெற்ற இந்தியாவிலும் இதே நிலைமை தான் தொடர்கிறது. 1979 டிசம்பர் திங்கள் பம்பாய் உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்று 'சூத்திரன் சன்னியாசி ஆவதைத் தடுத்தது' என்ற செய்தி மேற்கூறிய கருத்தை வலியுறுத்தும்.

இவ்வாறு சாதியின் பேராலும், மதத்தின் பேராலும், கடவுளின் பேராலும், சாத்திரங்களின் பேராலும் மனித உரிமைகள் மறுக்கப்பட்டதன் விளைவாகப் பெரியார் 'கடவுளை மற; மனிதனை நினை' என்று தமது கோட்பாட்டை விளக்கினார்.

இந்தியாவில் தோன்றிய உலகாய்தம், ஆசீவகம், பௌத்தம் முதலான கோட்பாடுகளைப் போன்றே பெரியாரியலும் சாதி ஒழிப்பை முதன்மைப்படுத்தி அதற்கு அடித்தளமாக அமைந்த அனைத்தையும் கண்டிக்கின்றது.

> கடவுள் என்பது காட்டுமிராண்டிக் கண்டுபிடிப்பு
> வேதம் என்பது சூது நிறைந்தது
> இதிகாசம் என்பது சதிமோசமானது
> புராணம் என்பது புளுகு மூட்டை
> சாத்திரமென்பது மோசடிக் குவியல்[7]

என்று 'பகுத்தறிவு அகராதி'யாகத் தொகுப்பார் பெரியார்.

பெரியாரியல்

உலகாய்தர்களின் அய்ம்பூதக் கோட்பாடும் புத்தரின் சமூகக் கோட்பாடும் இணைந்து பெற்ற புது வடிவமே பெரியாரின் மெய்யியல்.

> புத்தம் என்றாலே அது ஒரு மதம் என்றே மக்களுக்குத் தவறாக உணர்த்தப்பட்டிருக்கின்றது. அது மதம் என்றே ஏன்னிடம் பலர் வாதாடி உள்ளனர்.

---

[7] ...னமுத்து (தொ. ஆ.) பெரியார் ஈ. வெ. ரா. ...கள், தொகுதி 1, முன்னுரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> புத்தர் என்று சொன்னது அவருடைய பெயரல்ல; அவர் பெயர் சித்தார்த்தர் என்பது.

> புத்தன் என்றால் அறிவினைப் பயன்படுத்தி அதன்படி ஒழுகுபவன். எவர் எவர் அறிவைக்கொண்டு சிந்தித்துக் காரியம் ஆற்றுகின்றார்களோ அவர்கள் எல்லாம் புத்தர்கள் தாம். புத்தம் ஒரு மதமல்ல; அது ஒரு கொள்கை[8]

என விளக்கும் பெரியார், புத்தரின் கோட்பாட்டிற்கும் தமது இயக்கத்திற்கும் உள்ள தொடர்பினை,

> ஆகவே புத்தர் வள்ளுவர் ஆகிய இருவருக்குப் பிறகு திராவிடர் கழகத்தாராகிய நாங்கள்தாம் இந்த சாதி, கடவுள், மூடநம்பிக்கைகள் இவற்றை எதிர்த்து வருகின்றோம்[9]

என்று உறுதிப்படுத்துகின்றார்.

மெட்டீரியலிசம்

மரபுவழிபட்ட உலகாயதத்தை மக்கள் இயக்கமாக்கிய பெரியாரியல், சுரண்டலற்ற ஒரு சமூகத்தை அமைக்கப் பெரிதும் முனைகிறது. அம் முனைப்பில், சுரண்டலுக்கு வித்தாக அமைந்தவற்றை வகைப்படுத்தி விளக்கும் பெரியார் எழுதிய நூலே பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம் என்பதாகும்.

> கஷ்டப்படும் மக்களின் துன்பம் நீங்கி அவர்களுக்கு அறிவு ஆற்றல் இன்பம் ஆகியவைகளில் உள்ள கட்டுப்பாட்டை உடைத்து விடுதலையை உண்டாக்க வேண்டும் என்பதே முக்கிய கவலை...... அதுவும் பலர் நம்முடைய இம் முயற்சியில் கடவுளையும் மதத்தையும் கொண்டு வந்து குறுக்கே போட்டுவிட்டதால்தான் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டியதாயிற்றே ஒழிய, உண்மையில் கடவுளையும் மதத்தையும் பற்றிப் பேச வேண்டும் என்கின்ற அவசியத்தையோ, ஆசையையோ கொண்டு நாம் அதில் பிரவேசிக்கவில்லை[10]

என்று அந்நூலை எழுதுவதற்கான காரணத்தை விளக்குவார்.

---

8. மே. நூ., ப. 321,
9. மே. நூ., ப. 321.
10. தந்தை பெரியார், பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரிய லிசம், ப. 1.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கடவுள்

இந்திய மெய்யியல் வரலாற்றில் கடவுள் மறுப்புப் பற்றிய விளக்கம் பெரியாரியலில் முழுமை பெறுகின்றது. உலகின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் கடவுளின் பங்கோ துணையோ இல்லை என்பதை உலகாய்தம் வரையறை செய்ததைப் போன்றே பெரியாரியல், கடவுளின் தோற்றம் எந்த வகையில் அமைந்தது என்பதையும், அதனைப் படைத்துக் கொண்டவர்களின் நோக்கம் எத்தகையது என்பதையும் தெளிவுபடுத்துகின்றது.

> கடவுள் என்பது—கடவுள், சாமி, அல்லா, காட் என்ற தமிழ், சமஸ்கிருதம், அராபி, ஆங்கிலம் முதலிய பாஷைகளில் பல சொற்களாக இருந்தாலும் குறியில்—அர்த்தத்தில் உலகத் தோற்றத்திற்கும், நடப்பிற்கும் அழிவிற்கும் காரணமாகிய ஒரு சக்தியையே குறிப்பிடுவதாகவும், அதாவது சிலரால் இயற்கை என்று சொல்லப்படுமானால் அவ்வியற்கையின் இயங்குதலுக்கும், பஞ்சபூதக் கூட்டு என்று சொல்லப்படுமானால் அக்கூட்டின் சேர்க்கைக்கும் ஏதாவது ஒரு சக்தி இருந்துதானே ஆகவேண்டும் என்பதும் அந்த சக்திதான் கடவுள், எல்லாம் வல்ல ஆண்டவன், அல்லா, காட் என்று சொல்லப்படுகிறதென்று சொல்வதானாலும் அந்த சக்தி என்னும் கடவுளே எப்படி மக்கள் மனதிற்கு வந்தார் என்பதுதான் இங்கு விசாரிக்கத் தக்கதாயிருக்கின்றது[11]

என்று 'கடவுள்' என்ற தன்மையை விளக்கும் பெரியார், 'அறிவு வளர்ச்சியும் ஆராய்ச்சிக் கவலையும் இல்லாதபோது ஏற்பட்டவையே கடவுள் சம்பந்தமான எண்ணங்கள்' என்று கூறுவதன் மூலம் அது தோன்றிய காலச் சூழலையும் விளக்குவார்.

கடவுளைப் பற்றிய சிந்தனைகள் மனிதனது கற்பனைத் திறனுக்கேற்ற வண்ணம் வளர்ந்து, சமூகத்தில் தனியுடைமை தோன்றிய காலத்தில் நிலைத்துவிட்டது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இதனை,

> கடவுள் கடவு ளென்றெதற்கும்
> கதறுகின்ற மனிதர்காள்
> கடவுள் என்ற நாமதேயம்
> கழறிடாத நாளிலும்

11. தந்தை பெரியார், பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம், பக். 4—5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடைமையாவும் பொதுமையாக
உலகுநன்று வாழ்ந்ததாம்;
'கடையர்' 'செல்வர்' என்ற தொல்லை
கடவுள்பேர் இழைத்ததே![12]

என்று விளக்குவார்.

தனியுடைமைச் சமூகத்தின் வளர்ச்சியில்தான் கடவுள் கொள்கை மத நிறுவனங்களுடன் இணைக்கப்படுகிறது. இவ்விணைப்பின் விளைவால் கடவுளின் ஆற்றலைவிட மதங்களின் நடைமுறைகள் மீறமுடியா விதிகளாகின்றன. சடங்குகளும் குறிகளும் மதங்களின் அடையாளங்களாயின. அரசின் ஆணையைவிட மதத்தின் ஆளுமை உயர்ந்ததாயிற்று. இதன் விளைவுகளைப் பெரியார் பின்வருமாறு வகைப்படுத்துவார்.

> முதலாவது, மதம் மனிதனின் அறிவையே அடியோடு கெடுத்து விடுகிறது.
>
> இரண்டாவது, மனிதர்களின் ஒற்றுமைக்குப் பதிலாக மனிதனை மனிதன் பிரித்துக் காட்டவே மதம் உதவுகிறது.
>
> மூன்றாவது, மதமானது மனிதனை வேடத்திலேயே திருப்தி அடையச் செய்கின்றதேயொழிய ஒழுக்கத்தில் சிறிதும் கவலை செலுத்த நிர்ப்பந்திப்பதில்லை.
>
> நான்காவது, எந்த மதத்திலும் பகுத்தறிவிற்குச் சிறிதும் இடமில்லை.
>
> அய்ந்தாவது, மதமானது கடவுளுக்கும் நமக்கும் இடையில் தரகர்களை உண்டாக்கி, அத்தரகர்களின் நடவடிக்கையையும் வார்த்தையையும் அது எவ்வளவு அசம்பாவிதமானாலும், சொந்த அறிவைவிட, பிரத்யட்ச அனுபவத்தைவிட மேலானதாக நினைக்கச் செய்கின்றது. அன்றியும் மதமானது பணச் செலவு செய்யும் அளவுக்கு மோட்சமும் பாவமன்னிப்பும் இருப்பதாகவும், எவ்வித அக்கிரமங்களுக்கும் வணக்கத்தின்மூலம் மன்னிப்பு இருப்பதாகவும் நம்பச் செய்வதால் மனிதனை அக்கிரமம் செய்யவும் அவ்வாறு செய்வதன்மூலம் பணம் சம்பாதிக்கவும் தூண்டுகிறது. சோம்பேறிப் பிழைப்புக்கு மதம் தாராளமாய் இடம் கொடுக்கிறது......

12. பாரதிதாசன் கவிதைகள் (மு.தொ.), தளை அறு, ப. 156.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வளவும் தவிர ஒருவனுடைய உழைப்பில், மற்றும் ஒருவனை வாழும்படிச் செய்கிறது.[13]

கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்றும், கடவுளை நம்பி மத ஒழுக்கங்களில் சிறந்து வாழ்வோர் இறப்பதில்லை என்றும், ஆன்மா அழிவற்றது என்றும் மதவாதிகள் தமது கருத்துக்களைப் பரப்புகின்றனர். அழிவில்லாதது என்றும் அடுத்தடுத்த பிறவிகளுக்குக் காரணமாக இருப்பது என்றும் சொல்லப்படும் ஆன்மா பற்றியும் பெரியாரின் பிரகிருதிவாதம் தெளிவுபடுத்துகின்றது.

ஆன்மா

'ஆன்மா என்பது மனித உடலில் நிலைகொண்டுள்ள ஒரு பொருள்; அது கண்ணுக்குப் புலப்படாத சூக்குமத் தன்மை கொண்டது; அதற்குப் பிறப்பு இறப்பு இல்லை' என்பதாக இதனை விளக்குவர் மதவாதிகள். இத்தகைய விளக்கங்கள் அனைத்தும் மனிதனது ஆன்மாவிற்கு மட்டுமே சொல்லப்பட்டுள்ளனவேயன்றிப் பறவை மற்றும் விலங்குகளுக்கு இவை பொருத்திக் காட்டப்படவில்லை.

உயிரை அறிவின் அடிப்படையில் பகுத்துக் காட்டிய அய்ந்திர மரபில், ஆன்மா என்பதாக ஒன்று இடம்பெறவில்லை. அத்துடன் அது மறுக்கப்பட்டும் வந்துள்ளது என்பது முன்னர் விளக்கப்பட்டுள்ளது. பெரியாரும்,

> ஜீவ வர்க்கங்கள் என்பனவாகிய சகல ஜீவப் பிராணிகளும் சாயல், உருவம், தோற்றம், குணம் முதலியவை தவிர, அவற்றின் மூலப்பொருள்களும் தத்துவமும் ஒன்றேயாகும்[14]

என விளக்குவார். மேலும், 'மனித ஆன்மா மனித உடலில் இருக்கும்போது அது செய்த வினைக்கு ஏற்ற பலனை, உடலைவிட்டுப் பிரிந்த பின்னர் அனுபவிக்கின்றது, என்பது போலவே மற்ற புல் பூண்டு, ஊர்வன, நடப்பன, பறப்பன முதலியவற்றின் ஆன்மாக்களும் அவ்வவற்றின் உடலை விட்டு நீங்கிய பின்னர் அவைகளின் வினைக்குத் தகுந்த பலனை அனுபவிக்கின்றனவா?' என்றும் வினவுவார்.[15]

---

13. தந்தை பெரியார், பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம், பக். 11—12.
14. மே. நூ., ப. 21,
15. மே. நூ., ப. 20,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான்

இந்தியக் கருத்து முதலியலைச் சார்ந்தோர் அனைவரும் 'நான்' என்னும் 'ஆத்மன்' என்பதைப் பற்றிப் பேரளவில் விளக்க முனைந்துள்ளனர். பெரும்பான்மை உபநிடதங்கள் 'நான்' என்பதைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டுள்ளன. சாந்தோக்கிய உபநிடதம், இந்திரன் வீரோசனன் ஆகிய இருவரும் இவ்வாய்வை மேற்கொள்ள பிரசாபதியிடம் சென்றனர் என்பதை விளக்கும்.

> நான் (ஆத்மன்) என்பது தீமைகளிலிருந்து விடுதலை பெற்றது, மூப்பற்றது, இறப்பற்றது, துன்பமற்றது, பசியற்றது, நீர்வேட்கையற்றது.[16]

இதைப் போன்றே முண்டோக்கிய உபநிடதம்,

> எதை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும்? என்ற கேள்விக்கு எல்லாவற்றிற்கும் காரணமான பரமாத்மாவை அறிந்தால் எல்லாம் அறியப்பட்டதாகும்...... எல்லாப் பிராணிகளின் இருதயக் குகையில் இருக்கும் அமிருதமாகிய பரம்பொருளை 'நானே இது' என்று எவன் அறிகிறானோ அவன் அந்த அறிவால் இங்கு ஜீவித்துக் கொண்டிருக்கையிலேயே அறியாமையின் சிக்கலினின்று விடுபட்டு அவித்தையின் வாசனையை நாசம் செய்கிறான்[17]

என்று 'நான்' என்பதைப் பற்றி விளக்கும்.

இந்த 'நான்' பற்றிய ஆய்வில் உலகாய்தர்கள் எவ்விதக் கவலையும் கொள்ளவில்லை. மாறாக உயிரோடு கூடிய உடலே 'நான்' என்பதாக அவர்கள் விளக்கினர். உடலை 'நான்' எனக் கூறும் உலகாய்தர்களின் கருத்தைக் கருத்து முதலியலைச் சார்ந்தோர் வன்மையாகக் கண்டித்தனர்.

> கல்வி அறிவற்றவர்களும் உலகாய்தர்களுமே புலனறிவோடு பொதிந்துள்ள உடலை நான் என்பர். ஆனால் உண்மையில் நான் என்பது புலன் உணர்வே[18]

என்பார் ஆதிசங்கராச்சாரி.

---

16. மே. நூ., ப. 20.
17. முண்டோக்கிய உபநிடதம் (தமிழ்), பக். 2 : 2—3.
18. D. Chattopadhyaya, Lokayata, p. 45.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு 'நான்' என்பதை அறியும் அறிவே உண்மையான அறிவின் அடையாளமாகவும், அத்தகைய அறிவைப் பெற்றவனே மெய்யுணர்வை எய்தியவன் என்று மதிக்கப்படும் நிலையும் ஏற்பட்டது.

'நான்' என்பதைப் பற்றிய பெரியாரின் விளக்கம் உலகாய்தத்தின் கருத்தாகவே அமைந்துள்ளது.

> உலகத்தில் பெயரும் உருவமும் உள்ள வஸ்துக்கள் எல்லாம் ஒருவிதச் சேர்க்கையால் அதாவது பல கூட்டுப் பொருள்களால் சேர்ந்து இருக்கும் வடிவத்தையே பெரிதும் உணர்த்துவதாகும்.[19]

> உலகத்தில் உள்ள எந்தப் பெயருக்கும் மாறுதலடையாத ஒரு தனி வஸ்து என்பது கிடையவே கிடையாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் எந்தப் பெயரும் ஒரு தோற்றத்திற்கு அல்லது ஒரு உருவத்திற்கு அல்லது ஒரு வடிவத்திற்குத்தான் உபயோகப்பட்டு —சொல்லப்பட்டு வருகின்றதே அல்லாமல் வஸ்துவுக்குப் பெயர் சொல்லப்படுவதில்லை[20]

என்று 'நான்' என்பது ஒரு பொருளல்ல என்பதையும், ஒரு பொருளுக்கு 'நான்' என்ற பெயர் இருக்கமுடியாது என்பதையும் விளக்குவார்.

கிறித்துவமும் இசுலாமும் இத்தகைய ஆய்வில் ஈடுபடவில்லை. பௌத்தமும் 'ஆத்மன்' என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை. நிலையான ஒரு பொருள் உண்டு என்பதை பௌத்தம் ஏற்பதில்லை.

> யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்[21]

என்ற குறளில் வள்ளுவர் உணர்த்தும் 'யான்—எனது' என்ற சொற்களும், துறவு நெறியை மேற்கொண்ட துறவிகளுக்கு இருக்கக்கூடாத பற்றுகளைப் பற்றியேயாகும். ஆனால் 'நான்' என்பதைப் பற்றிய பல்வேறு சிக்கல்களையும் எழுப்பி, அதைப்பற்றி

---

19. தந்தை பெரியார், பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம், ப. 26.
20. மே. நூ., ப. 26.
21. குறள். 346.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மிகுதியான கவலைகளை உருவாக்கியது வைதிக மதமான இந்து மதமே என்பார் பெரியார்.

> இந்து மதக்காரர்கள் என்பவர்கள் மாத்திரம் ஆத்மா சூட்சும சரீரம், மோட்சலோகம், நரகலோகம், மறுபிறப்பு அதுவும் பலவிதமாய்—அதாவது 'புல்லாகிப் பூண்டாகி' என்று படிப்படியாய் ஏற்பட்டது என்றும் இவை எல்லா வற்றையும்விட மற்றொருவிதமாய் அதாவது ஆத்மாக்கள் பிதுர்தேவதைகளாகிப் பிதிர்லோகம் என்பதில் இருந்து கொண்டு பிள்ளைகள், சந்ததியார்கள் முதலியவர்களால் இந்த உலகத்தில் பிராமணர்களுக்குக் கொடுக்கப்படுவதை அவர்களது மந்திர சக்தியின் மூலமாய்ப் பெற்று வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் இன்னும் பல விதமாய்ச் சொல் லப்படுகின்றன. ஆகவே இவை தானாகவே ஒன்றுக் கொன்று முரண்பாடுள்ள கட்டுக்கதைகளாய்த் தென்படு கின்றன[22]

என்பது அவரின் முடிபுரை.

வீடு—நரகம்

நான் என்பதும் ஆன்மா என்பதும் கடவுள் என்பதும் வாழும் காலத்திய கவலைகள் என்றால் வீட்டுலகு, நரகம் என்பவை இறப் பிற்குப் பின்னர்க் கிடைக்கும் இடங்கள் பற்றிய கவலைகளாகும். வீடும் நரகமும் ஒவ்வொரு மனிதனும் செய்த நல்வினை (புண்ணி யம்) தீவினை (பாவம்)களுக்கு ஏற்பக் கிடைப்பன எனக் கற்பிக்கப் பட்டவை.

மனிதனை வாழும் காலத்திய சிக்கல்களிலிருந்து தப்புவிக்கச் செய்யவும் சமூக முறைகேடுகளை எதிர்க்கும் நெஞ்சுரத்தை அழிக்கவும் வருண—சாதீய நெறிகள் கட்டுக்குலையாமல் காப்பாற் றப்படவுமே, இம் மோட்ச நரகங்கள் மதவாதிகளால் பயன்படுத் தப்பட்டுள்ளன.

வீரர் காலத்திய (Heroic Age) சமூகத்தின் படைப்பாகிய அமரர் உலகம் திராவிடர்கட்குரிய ஒன்று என்பார் சிம்மர். அமர் என்ற தமிழ்ச் சொல்லிற்குப் பொருந்துதல், போரிடுதல் முதலான பொருள்கள் உண்டு. வீரர்களைப் போற்றி வணங்கியதன் மூலம் புதியபுதிய வீரர்களை உருவாக்குதல் அக்கோட்பாட்டின்

22. தந்தை பெரியார், பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரிய லிசம், ப. 30.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோக்கம். ஆனால் அதுவே சமயங்கள் செல்வாக்குப் பெற்ற காலத்தில் சமயவாதிகளின் தன்னலத்துக்குத் துணையாக அமைந்து விட்டது.

> மக்கள் உலகில் வறுமையும் ஏமாற்றும் அக்கிரமங்களும் இந்த மோட்ச நரகப் பைத்தியத்தினாலும் பிராயச்சித்தம் என்னும் பித்தலாட்டத்தாலும் பெருகி வளர்ந்து வருகிறது என்பது மறக்கமுடியா உண்மையாகும்[23]

எனக் கண்டிக்கும் பெரியார், இரண்டினாலும் ஏற்பட்ட விளைவு களையும் தெளிவுபடுத்துகின்றார்.

> சகோதரர்களே! இந்த மோட்ச உணர்ச்சி ஒழிக்கப்பட வேண்டியதைப் போலவே நரக உணர்ச்சியும் அழிக்கப்பட வேண்டும். மோட்ச உணர்ச்சி எப்படிப் பேராசையின் பிரதிபிம்பமோ அது போலவே நரக உணர்ச்சியும் அடிமைத்தனத்தினுடையவும் பயங்காளித்தனத்தினுடைய வும் பிரதிபிம்பமாகும். நரகத்திற்குப் பயப்படுவதாலேயே அநீதிகளுக்கு மனிதன் ஆளாகிறான்; தைரியமில்லாத கோழையாயிருக்கின்றான்.... ஆகையால் சகோதரர்களே! நீங்கள் இந்த நாட்டின் முற்போக்கிற்கும் உண்மை விடுதலைக்கும் மனிதத் தன்மைக்கும் பாடுபட வேண்டு மானால், மேற்கண்ட காரியங்களில் உங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும்[24]

என்று வேண்டுகோள் விடுக்கின்றார்.

தருமமும் பாவபுண்ணியமும்

மனிதன் பெறவேண்டிய உறுதிப் பொருள்களில் வீடு இறுதி யாகச் சேர்க்கப்பட்டது என்பதும் அது தமிழ்க் கோட்பாட்டிற்குப் புறம்பானது என்பதும் முன்னர் விளக்கப்பட்டுள்ளது. சமயங்கள் செல்வாக்குப் பெற்ற பின்னர் அவரவர் சமய நெறிக்கும் கடவுள் அன்பிற்கும் ஏற்ப வீட்டை அடைவார்கள் என்னும் கருத்து வலுப் பெற்றது. இந்நிலையில்தான் மனித வாழ்வில் வீடு கருதி வழங்கப் பெறும் 'தருமமும்' அதன் விளைவால் தோன்றும் புண்ணியங் களும், தருமம் மீறப்படும்போது கிடைக்கும் பாவங்களும், தண் டனைகளும் வற்புறுத்தப்பட்டன.

தருமம் என்ற பேராலும், புண்ணியம் என்ற பேராலும் ஏற்படும் செலவினங்கள் மனிதவாழ்வை வறுமையிலும்

23. தந்தை பெரியார், பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரிய லிசம், ப. 32.

24. மே. நூ., ப. 32.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> துன்பத்திலும் ஆழ்த்துகின்றன. இத்தகைய பொருளற்ற தத்துவங்களை ஒழித்துப் பிறருக்கு எவ்விதத்தில் உபகாரமோ அதைச் செய்து மக்களுக்குள் சமத்துவமும் ஜீவ காருண்யமும் பரவச் செய்வதற்கு வழி தேட வேண்டும்[25]

என்று பெரியார் வற்புறுத்துகின்றார்.

ஒழுக்கம்

மனித சமூகத்தைக் கட்டுக்கோப்போடு வைத்திருப்பதும், தனி மனித வாழ்வில் அன்பும் இன்பமும் நிலவவும் துணையாக இருப்பதும் அச்சமூகங்கள் பின்பற்றி வரும் ஒழுக்க முறைகளேயாகும். இவ்வொழுக்க முறைகள் சமூகத்திற்குச் சமூகம் நாட்டிற்கு நாடு காலத்திற்குக் காலம் வேறுபடலாம். இருப்பினும் அதன் நோக்கம் தனி மனித வாழ்வையும் சமூக வாழ்வையும் நெறிப்படுத்துவதே.

தமிழ் இலக்கியங்களில் இவ்வொழுக்கம் திணை என்று சுட்டப் படுகிறது. அக வாழ்விற்குரிய ஒழுக்கம் அகத்திணை என்றும் புற வாழ்விற்குரிய ஒழுக்கம் புறத்திணை என்றும் வகுக்கப்பட்டுள்ளன. இவ்வொழுக்கம் அவ்வச் சூழலுக்கேற்ப வகுக்கப்பட்டவை என்பதை அகப்புறப் பிரிவுகளின் பெயர்களே சுட்டி நிற்கின்றன.

மன்பதைக்குப் பொதுவான இந்த ஒழுகலாறுகள் மதத்தின் எல்லைக்குள் வந்தவுடன் தன் சிறப்பினை இழந்து வருணந்தோறும் வேறுபடலாயிற்று. பரிமேலழகர் 'அறம் என்பது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' என்று விளக்குவார். பராசரர்,

> பார்ப்பனன் இழிதொழிலினனாகவே இருக்கட்டும். அப்போதும் வழிபடத்தக்கவனே யாவன். சூத்திரன் உயரிய நற்குணங்களே உருவெடுத்தவனாயினுஞ் சரி அவனை வழிபடலாகாது. ஏனென்றால் கன்று போட்ட பசுவொன்று துட்டத்தனம் பண்ணிக் கொண்டிருக்கிறது. குட்டி போட்ட கழுதையொன்று சாதுவாகவும் வீட்டிலிருக்கிறது. இவ்விரு மிருகங்களில் அறிஞன் பசுவை விட்டு விட்டு கழுதையைக் கறந்து பாலைக் கிரகிப்பானா?[26]

என்று வினவுவார்.

---

25. தந்தை பெரியார், பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம் ப. 46.

26. சிவானந்த சரசுவதி, மத விசாரணை, ப. 127.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எவ்வகைக் குற்றத்தையும் செய்யாதிருப்பினும் 'சூத்திரர்கள் பறையைப்போல அடிக்க அடிக்க நற்பயன் விளைவிப்பார் கள்'[27] என்று சாணக்கிய நீதி தர்ப்பனம் வற்புறுத்தும்.

மனித நெறிகள் மறுக்கப்பட்டு மனுநெறியே அரசியல் சட்டங் களானபோது மோசடிக்கும் சுரண்டலுக்கும் துணை போகும் வண்ணம் ஒழுக்கம் வரையறுக்கப்பட்டுவிட்டது என்பதை மேற் காட்டிய சான்றுகள் மெய்ப்பிக்கின்றன. இதனைப் பெரியார்,

> உலகில் கற்பு, காதல் என்பன போன்ற வார்த்தைகள் எப்படிப் பெண்மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆள வென்று ஏற்படுத்திப் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவோ அது போலவேதான் ஒழுக்கம் என்னும் வார்த்தையும் எளியோரையும், பாமர மக்களையும் ஏமாற்றி மற்றவர் கள் வாழப் பயன்படுத்தி வரும் ஒரு சூழ்ச்சி ஆயுதமேயல் லாமல், அதில் உண்மையோ சத்தோ ஒன்றும் கிடை யாது[28]

என்பார். மேலும்,

> ஒழுக்கம் என்பதும் ஒழுக்கக்குறைவு என்பதும் அவற்றைச் செய்யும் ஆட்களின் வலிமையையும் அறிவையும் கொண்டு மதிக்கப்படுகிறதே அல்லாமல், அக்காரியங்களைக்கொண்டு மதிக்கப்படுவதில்லை. திருட்டு, பொய், ஏமாற்றம் போன்ற குணங்கள்தான் ஒழுக்கமற்ற செயல்கள் என்று சொல்வதானால் அந்தக் குணங்கள் பெரிதும் நிலைபெற் றுள்ள இடங்கள் அரசர்கள், குருமார்கள், வியாபாரிகள், வக்கீல்கள், தேசியவாதிகள் போன்ற கூட்டத்தார்களிடமே ஆகும். மனிதர்களுக்குத் துன்பம் இழைத்து அவர்களின் அமைதியைக் கெடுத்து ஏமாற்றி வஞ்சித்து வாழும் கூட் டங்கள் மேற்கண்ட கூட்டங்களாகவே உள்ளன[29]

என்றும் குறிப்பார். அத்துடன் ஒழுக்கம் என்பதைச் சூழல்களுக்கு ஏற்ப அமைவதாகக் கருதாது அதனை உலகப் பொதுமைக்குரிய தாக விளக்குவார்.

---

27. சிவானந்த சரசுவதி, மத விசாரணை, ப.120.
28. தந்தை பெரியார், பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரிய லிசம், ப. 48.
29. தந்தை பெரியார், அறிவுச் சுடர், ப. 6.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> இந்நிலையில் நாம் கூறிவரும் ஒழுக்கம் என்னவென்றால் நம்மிடம் பிறர் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? பிறர் நம்மை எப்படி மதிக்கவேண்டும்? என்று நினைக்கிறோமோ அதுவும், மற்றும் என்னஎன்னவெல்லாம் நாம் பிறரிடம் இருந்து எதிர்பார்க்கிறோமோ அவைகள் அனைத்தையும் நாம் பிறருக்கு அளிக்க வேண்டும். நம்மிடம் இருந்து பிறர் எதிர்பார்க்க உரிமை உண்டு என்று எண்ணி அதன்படி ஒழுகுவதுதான் 'ஒழுக்கம்' என்று சொல்லு கின்றோம்[30]

என்பது ஒழுக்கத்திற்கு அவர் தரும் விளக்கமாகும்.

இத்தகைய எதிர்பார்ப்புகள் வாழ்க்கையின் நடைமுறை யானால் மனித இனம் பேதங்களுக்கும் ஏற்றத்தாழ்வுகளுக்கும் இட மில்லாது உயரிய, சமத்துவ நிலையை அடையும் என்பது உறுதி.

நாத்திகம்

'பிரகிருதிவாதம்' என்ற நூலின் இறுதி இயலாகப் பெரியார் விளக்குவது நாத்திகம் பற்றி ஆகும். 'முரணற்ற நாத்திகர்' என்றும் 'பகுத்தறிவின் சிகரம்' என்றும் புகழப்படும் பெரியார், மரபு வழிப்பட்ட உலகாய்தத்திற்கு எத்தகைய புது வடிவத்தை வழங்கி யுள்ளார் என்பதை இப்பகுதி தெளிவுபடுத்துகின்றது.

கருத்தரங்குகளிலும் கலந்துரையாடல்களிலும் அறிஞர்களின் எழுத்தாகவும் கருத்துரையாகவும் முடங்கி இருந்த நாத்திகத்தை மக்கள் மன்றத்திற்குக் கொண்டு சென்றவர் பெரியார். இவ் வளர்ச்சிப் போக்கினை,

> இந்தியச் சிந்தனையாளர்களில் குறிப்பாக நாத்திகச் சிந்தனையாளர்களின் கருத்தோடை பெரியார் என்ற எல்லைக்குள் வரும்போதுதான் அது பொங்கிப் பரவும் புதுவெள்ளப் பெருக்காகி மனித சமூகத்தின் வளர்ச்சிக் காகப் பரந்து பாய்ந்தோடுகிறது[31]

என்று குறிப்பர்.

மனிதநலச் சிந்தனையாளரான பெரியார், மனித வாழ்வின் துன்பத்திற்கான காரணங்களை—அடிப்படையாய் அமைந்த நோய்

---

30. தந்தை பெரியார், அறிவுச் சுடர், ப. 7.
31. க. நெடுஞ்செழியன், இந்திய நாத்திகத்தில் தந்தை பெரியார், 'உண்மை' மார்ச் 1982, ப. 16.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூலங்களை அறிந்ததுடன் அவற்றை அகற்றுதற்கான மருந்தாகவும் நாத்திகத்தை உருவாக்குகின்றார்.

> நமது நாட்டினர்களே ஏழைகளை வஞ்சித்துக் கொள்ளை அடிக்கிறார்கள். பாமர மக்கள் கடவுள் செயல் என்று கருதிக் கொள்வதால் தினமும் ஏய்த்துக்கொண்டே வருகின்றார்கள். அப்படிப்பட்ட பாமர மக்களை விழிக்கச் செய்து, நீங்கள் ஏழைகளாய் தரித்திரர்களாய் இருப்பதற்குக் கடவுள் செயல் காரணம் அல்ல, உங்கள் முட்டாள் தனம்தான் காரணம். ஆதலால் நீங்கள் கடவுள் செயலை லட்சியம் செய்யாதீர்கள் என்று சொன்னால்தான் செல்வந்தர்களின் அக்கிரமங்களை பாமரமக்கள் அறியக்கூடும். அப்பொழுது கடவுள் செயலையும் அதிக மூடர்களிடம் கடவுளையும் மறுத்துத்தான் ஆகவேண்டும்[32]

'நாத்திக விளக்கம்' என்ற தலைப்பில் பெரியாரால் சொல்லப் பட்ட இக் கருத்தினைக் கவிதை வடிவமாகப் பாரதிதாசன்,

> நடவுசெய்த தோழர்கூலி
> நாலணாவை ஏற்பதும்
> உடலுழைப்பி லாதசெல்வர்
> உலகைஆண் டுலாவலும்
> கடவுளாணை என்றுரைத்த
> கயவர் கூட்டமீதிலே
> கடவுள்என்ற கட்டறுத்துத்
> தொழிலாளரை ஏவுவோம்![33]

எனப் பாடுவார்.

இந்தியச் சமூகம் சாதீயச் சமூகம். சாதிகள் கடவுளின் படைப்பு என நம்பும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சமூகம். அத்தகைய சமூக அமைப்பில் மண்டிக் கிடக்கும் வேறுபாடுகளை அழிக்க வேண்டியது மனிதநலச் சிந்தனையாளர்களான அனைவரது கடமையுமாக இருந்துள்ளது. இந்த அடிப்படையில் உருவாக்கப் பட்டதுதான் பெரியாரின் தன்மான இயக்கம்.

> சுயமரியாதை இயக்கம் இந்நாட்டு மக்களுக்கு மான உணர்ச்சி ஏற்படவும் எல்லா மக்களையும் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் சமப்படுத்தி ஒன்று சேர்க்கவும் ஏற்பட்டதாகும்.........

---

32. தந்தை பெரியார், குடிஅரசு, 21-5-49.
33. பாரதிதாசன் கவிதைகள், (மு. தொ.), ப. 134.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> இந்தக் காரியங்கள் செய்வதில் மதங்களோ, கடவுள்களோ வேறு எவைகளானாலும் சரி, அத்தொண்டிற்குத் தடையாய் இருந்தால் அவற்றையும் ஒழிப்பதில் சுயமரியாதை இயக்கம் பின்வாங்காது[34]

என இவ்வியக்கத்தின் நோக்கத்தை விளக்குவார் பெரியார்.

பெரியாரியல் தன்மான இயக்கமாகச் செயல்வடிவம் பெற்றதனால் தமிழகத்தில் சிறந்ததொரு விழிப்புணர்ச்சி உருவாயிற்று. தமிழ் இன, மொழிப்பற்றில் புதிய வேகம் உருவாயிற்று. தாழ்ந்தவர்கள் என்போருக்குச் சமூகம் விதித்திருந்த தடைகள் உடையலாயிற்று. மண்ணாக, மரமாக மதிக்கப்பட்ட மனிதன், தன்னை மனிதனாக உணரும் நிலை தோற்றுவிக்கப்பட்டது. கோவில்களின் கதவுகள் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் முதன் முதலாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் திறக்கப்பட்டது. கல்வி மறுக்கப்பட்ட சூத்திர பஞ்சமர் பகுதிக்கெல்லாம் கல்வி நீரோடை பரவிப் பாயலாயிற்று. சுருங்கக் கூறினால்,

> பாராட்டிப் போற்றிவந்த
> பழமை லோகம்
> ஈரோட்டுப் பூகம்பத்தால்
> இடியுது பார்[35]

என்ற கலைஞர் மு. கருணாநிதியின் கவிதைக்கு ஏற்ப, பழமைக் கோட்பாடுகள் அனைத்தும் சிதையத் தொடங்கின. இதனை,

> சுயமரியாதைத் தத்துவம் இயக்க உருவம் பெற்றுப், பாமர மக்களிடத்தும் படித்தவரிடத்தும் ஊடுருவிச் செயல் விளக்கம் பெற்றதன் விளைவாக, மனித சமுதாயத்தின் கட்டுக்கோப்பிற்கு ஆதாரமாக உள்ள அமைப்புக்களைத் திருத்தவும் அழிக்கவும், புதிய முறையில் உருவாக்கவும் சுயமரியாதைக் கருத்தியல் பயன்பட்டுள்ளது. இந்து சமூகத்தின் சாதி முறைக்கும், வருணாசிரம தருமத்திற்கும் சுயமரியாதைத் தத்துவம் சவாலாக அமைந்தது. சாதி வேறுபாடுகளை அல்ல சாதிகளையே ஒழித்திடச் சுயமரியாதைத் தத்துவம் வழி வகுத்தது. ஏனெனில் மனித ஆளுமையை அழித்து கீழ்சாதி—சூத்திரன் என்ற மனித இழிவினை

---

34. தந்தை பெரியார், குடிஅரசு, 19-12-37.
35. கலைஞர் மு. கருணாநிதி, சென்னை பெரியார் திடல், பெரியார் சிலை பீடத்தில் உள்ள கவிதை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> நிலை நிறுத்தும் வருணாசிரம தர்மத்திற்குத் தத்துவ ரீதியாகச் சுய அறிவு மரியாதையை உள்ளடக்கிய சுயமரியாதைச் சித்தாந்தம் எதிர்ப்புக் காட்டுவது இயல்பே[36]

என விளக்குவார் சுப்பிரமணியம்.

தத்துவ விளக்கம்

பெரியாரின் மெய்யியல் கோட்பாட்டை விளக்குவதில் பிரகிருதிவாதம் என்ற நூலை அடுத்து வருவது அவரது 'தத்துவ விளக்கம்' என்ற நூல். 1947இல் சேலம் கல்லூரி தத்துவத்துறையின் சார்பாக மாணவர்கள் திடீரென ஏற்பாடு செய்த ஒரு கூட்டத்தில் பெரியார் ஆற்றிய சொற்பொழிவே அந்நூலாக வடிவம் பெற்றுள்ளது.

> பெரியார் அவர்களைப் பற்றி, 'உயர் எண்ணங்கள் மலரும் சோலை' என்று கூறுகின்றார் நமது புரட்சிக் கவிஞர். அதற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குவது இந்நூல்[37]

என்ற முன்னுரையோடு வெளிப்பட்டிருந்தாலும், இந்நூல் அவரது பிரகிருதிவாதத்தின் தொடர்ச்சியாகவே அமைந்துள்ளது.

பெரியாரியலின் படிமுறை வளர்ச்சி

செல்வக்குடும்பத்தில் பிறந்த பெரியார் ஓர் இளம் வணிகராகத் தமது வாழ்க்கையைத் தொடங்குகிறார். பொதுநலத் தொண்டராக, ஈரோடு நகர் மன்றத் தலைவராக, பேராயக் கட்சி (காங்கிரசு)யின் உறுப்பினராக, அதன் மாநிலத் தலைவராக—அதனை வளர்த்தவராக—சாதி ஒழிப்பு வீரராக—தன்மான இயக்கத்தின் தலைவராக—இவ்வாறு அவரது பொதுவாழ்வின் கூறுகள் பலவாக விரிந்து வளர்ந்தாலும் இவற்றினூடே ஊடாடி நிற்பது அவரது மெய்யியல் உணர்வுகளாகும். அவர் தொடங்கிய செய்தி இதழ்களின் பெயர்களே இதனை உணர்த்துகின்றன.

பெரியார் தொடங்கிய முதல் இதழ் 'குடிஅரசு'. இப்பெயர் அவரது அரசியல் கோட்பாட்டை உணர்த்தும். குடியரசுக்கு இடையூறு ஏற்பட்டதால் அடுத்துத் தோன்றியது 'புரட்சி' என்பதாகும். புரட்சியுடன் 'விடுதலை'யும் வருகின்றது. விடுதலையை அடுத்து 'பகுத்தறிவு' என்ற இதழைத் தொடங்குகின்றார். பகுத்தறிவின் பின் 'உண்மை' என்னும் இதழ் மலர்கிறது. குடிஅரசி

36. எம். கே. சுப்பிரமணியம், 'உண்மை', 15-5-70.

37. தந்தை பெரியார், தத்துவ விளக்கம், முன்னுரை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விருந்து உண்மை வரையிலான அவ்விடைப்பட்ட காலத்தில் அவரது சிந்தனை 'நாத்திகம்' என்ற இலக்கை நோக்கிச் சிந்தாமல் சிதறாமல் சென்று முழுமை பெறுகிறது. 24-5-1967இல் தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம் விடயபுரம் என்னும் சிற்றூரில் பெரியார் தம் இளம் மாணவர்கட்குப் பயிற்சிப் பள்ளியை நடத்தினார். அப்பயிற்சியின் போது வெளியிட்ட 'உண்மை' முடிபுகளே

கடவுள் இல்லை; கடவுள் இல்லை
கடவுள் இல்லவே இல்லை
கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்
கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்
கடவுளை வணங்குகின்றவன் காட்டுமிராண்டி[38]

என்பவை.

புத்தர் மெய்யறிவு பெற்றவுடன் வாரணாசியை அடுத்த மான்பூங்காவில் தம் பழைய தோழர்களைக் கண்டபோது ஆற்றிய விளக்கங்கள் எவ்வாறு, புத்தநெறியாக மலர்ந்தனவோ அதைப் போலவே விடயபுரத்தில் ஓர் அழகிய தோட்டத்தில் பெரியார் வெளியிட்ட இம்முடிபுகள் அவரை மனிதநேயம் தழுவிய நாத்திகத்தின் கொடுமுடியாக உயர்த்தியது எனலாம்.

பெரியார் ஈ. வெ. ரா. பழுத்த தத்துவ அறிவாளர் மட்டுமன்று. இருபதாவது நூற்றாண்டின் இந்திய பகுத்தறிவின் சிகரம்.

அவர் திருப்பெயர் மக்களிடை நிலைத்து நிற்கும்[39]

என்பது நடுநிலைக் கணிப்பு.

தத்துவ விளக்கமும்—அதன் அணுகுமுறையும்

'குடிஅரசு'க்கும் 'உண்மை'க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் வெளிவந்த 'தத்துவ விளக்கம்' பெரியாரின் அளவை இயலையும், மெய்ப்பொருளை அவர் அணுகும் முறையினையும் தெளிவு படுத்துகின்றது.

பிரகிருதிவாதத்தில் இடம் பெற்றுள்ள கடவுள், ஆன்மா, உயிர், நான் ஆகிய தலைப்புக்கள் இந்நூலிலும் இடம் பெற்றுள்

38. கி. வீரமணி, (தொ. ஆ.) பெரியார் களஞ்சியம் (மு. தொ.), ப. 253.
39. ஏ. எஸ். கே., பகுத்தறிவின் சிகரம் தந்தை பெரியார் ப. 131.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என. இருப்பினும் பெரியாரின் நாத்திகக் கோட்பாட்டின் வளர்ச்சி நிலையைத் தத்துவ விளக்கத்தில் தெளிவாக அறிய முடிகின்றது.

மேலும் இந்நூலில் இடம் பெற்றுள்ள தத்துவம் பற்றிய விளக்கம் குறிக்கத்தக்க சிறப்பினைப் பெற்றுள்ளது. இந்திய மெய்யியல் வரலாற்றில் ஒவ்வொரு மெய்யியலாளரும் தத்தம் கோட்பாடே உயரியது; அதுவே உண்மைப் பொருளைக் கொண்டுள்ளது எனக் கூறுவதுடன் மாற்றுக் கோட்பாடுகளைப் பொய்யானவை என்றும் கண்டிக்கத்தக்கவை என்றும் தூற்றுவர். ஆனால் பெரியார்,

> தத்துவக் காட்சி, தத்துவ உணர்வு என்பன உண்மை. அதாவது உள்ளதை உள்ளபடிக் காண்பதும் அறிவது மாகும். இயற்கை ஞானம் என்றும் சொல்லலாம்[40]

என்று தத்துவம் என்ற சொல்லின் தன்மைகளை விளக்குவார்.

உள்ளதை உள்ளபடி காண்பது என்பது எப்படி? உண்மைகளைப் பட்டாங்கமாய்—பச்சை உண்மையாய்க் காண வேண்டுவது எவ்வாறு? அப்படிப் பட்டாங்கமாய்—பச்சையாய்க் காணப்படும் 'உண்மை' எந்த அளவு வரவேற்பைப் பெறும்? இக்கேள்விகளுக்குப் பெரியார் தரும் விளக்கம் வருமாறு:

> நாம் தத்துவத்தையும் இயற்கையையும் வேறுபடுத்திய காட்சியையும் குணத்தையும் உணர்வையும் கொண்டவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட நமக்கு வெறும் பச்சை உண்மை—தத்துவம் என்பது சங்கடமான காட்சியாகவும் கேள்வியாகவும்தான் இருக்கும். உதாரணம் வேண்டுமானால் ஒன்று சொல்லுகிறேன். ஒரு மனிதனைக் காண்பது என்பது இயற்கையை மறைத்துச் சாயலை வேறுபடுத்திய தோற்றத்தைக் காண்பது என்பதாகும். ஆனால் அதே மனிதனை இயற்கையாய் உள்ளபடிக் காண்பது என்பது அவனை நிர்வாணமாக எவ்வித மறைவும் மாற்றமும் இல்லாமல் காண்பது என்பதாகும். இந்தக் காட்சி இன்றைய உலகுக்குப் பிடிக்காது......... அப்படியே இன்றைய ஒவ்வொரு தன்மையையும் நிலைமையையும் நிர்வாணமாய், உண்மையாய்க் காண்பது என்பது இன்றைய உலகுக்கு வெறுப்பாகவும் அரூசையாகவும் அதிருப்தியாகவும் இருக்கும்[41]

என்பதாகும்.

---

40. தந்தை பெரியார், தத்துவ விளக்கம், ப. 1.
41. மே. நூ., பக். 1—2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மையைக் காண்பது என்பதில் பலருக்கு மனக்குறைவு ஏற்படும் என்பதை அறிந்திருந்தாலும், பெரியார் கண்டதும் காட்டியதும் பட்டாங்கமான உண்மைகளைத்தான். இந்த உண்மைகளைக் கேட்டு மருட்சி கொண்டு பின் தெளிந்தவர்களில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் ஒருவர். இதனை,

எமை அகத்தும் புறத்தும் திருத்து தற்கே
எம்பெருமான் சொன்ன தெல்லாம்
இமயமலை இல்லையெனச் சொன்னதுபோல்
எண்ணினோம் பின்தெளிந்தோம்[42]

என்று பாடுவார்.

இந்த அளவுகோலைக் கொண்டுதான் அதாவது உண்மைகளைப் பட்டாங்கமாகக் காணவேண்டும் என்ற அடிப்படையில்தான் பெரியார் கடவுளைப் பற்றிய ஆய்வைத் தொடருகின்றார். ஒவ்வொரு பொருளைப் பற்றியும் முழுமையாக அறிய வேண்டுமானால், என்ன, ஏன், எதற்காக, எப்படி, எங்கே, எப்போது என்பன போன்ற கேள்விகளைத் தொடுத்து நிறைவான பதிலைப் பெற வேண்டும் என்பது அவரது கருத்து.

> எதற்காகக் கடவுள்? ஏன் கடவுள்? எது கடவுள்? என்கின்ற விளக்கம் அவசியம் ஒவ்வொரு தத்துவ விசாரணைக்காரனுக்கும் விளங்கி ஆக வேண்டும். மனிதனுக்குப் பகுத்தறிவு இருக்கிறது. அது ஆராய்ச்சிக்காக ஏற்பட்டதே தவிர கண்மூடித்தனமான மிருகத்தன்மைக்கு ஏற்பட்டதல்ல. பகுத்தறிவை மனிதன் தப்பாகப் பயன்படுத்தி அதிகமான தொல்லையில் மாட்டிக் கொண்டிருக்கிறான். இந்தத் தொல்லைக்குப் பரிகாரமாகக் கடவுளைச் சிருஷ்டித்துக் கொண்டான். அரசன் ஏன்? குடிகள் ஏன்? ஏழை பணக்காரன் ஏன்? மேல்சாதி, கீழ்சாதி ஏன்? உழைப்பாளி அடிமையும் சோம்பேறி எசமானனும் ஏன்? பிச்சைக்காரன் பிரபு ஏன்? இந்தத் தன்மைகளை ஏற்படுத்தவும் நிலை நிறுத்தவும் பாதுகாக்கவும் அல்லாமல் கடவுளால் கண்ட பயன் என்ன? அவர் செய்த நல்ல காரியம் என்ன?[43]

42. பாரதிதாசன் கவிதை, மேற்கோள், நா. இராமநாதன், அஞ்சல் வழிக் கல்வி பாடத் தொகுப்பு.

43. தந்தை பெரியார், தத்துவ விளக்கம், ப. 8.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று கேட்டு, 'வினாவும் செப்பே வினா எதிர்வரினே' என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு ஏற்ப விடையாகவே அவ்வினாக்களை அமைக்கின்றார்.

தன்னலமும் ஏமாற்றும் ஏற்பட்ட நிலையில் சிறுபான்மையினர் பெரும்பான்மையோர் மீது ஆதிக்கம் செலுத்தும்வண்ணம் உருவாக்கப்பட்டவையே கடவுளும் மதமும் சாதியும். எனவே அவற்றின் தன்மைகளை மனிதன் தன் இயல்பான பகுத்தறிவால் அறிந்து அவற்றின் தீமைகளிலிருந்து விடுபடல் வேண்டும். அத்தகைய விடுதலைக்கான முயற்சியே அறிவு ஆராய்ச்சியின் பயனாக இருக்க முடியும்.

தத்துவ ஆராய்ச்சி என்றால் என்ன? என்ற கேள்விக்கு,

> 'பொய்ப்பால பொய்யே ஆயின; பொய்யல்லாத
> மெய்ப்பால மெய்யாயி னவே'
>
> என்று பாடினதுபோல உண்மையாய் இருக்கமுடியாதவையெல்லாம் பட்டாங்கமாய்ப் பொய் ஆகவேண்டும்; மறையவேண்டும். உண்மைகள் உண்மை ஆகவேண்டும். பட்டாங்கமாய் வெளியாக வேண்டும். அப்படி இல்லையானால் அதற்குத் தத்துவ விசாரணை என்ற பெயர், செயல் பொருந்தாது. அப்படி இல்லையானால், அது தத்துவ விளக்கம் என்னும் பேரால் பொய்யை மெய்யாக்குவது என்பதாகத்தான் முடியும். பொய்க்கு தத்துவமும் உதவி செய்வதால் அது பகுத்தறிவுள்ள மனிதத்தன்மை என்பதற்கு மிக இழிவாகும்[44]

என்று விளக்கமளிப்பார்.

இவ்வாறு எப்பொருளும் அது எத்தன்மைத்தாயினும் அதன் நுணுக்கங்களை ஆராயவும், அதன் அடிப்படையைப் புரிந்து கொள்ளவும் அறிவைப் பயன்படுத்த வேண்டும். அத்தகைய முயற்சியினால் மட்டுமே உண்மைகளை—அதன் இயல்புகளை உள்ளவாறே அறிய இயலும். அதுவே பகுத்தறிவின் நோக்கமாகும் என்பது பெரியார் வற்புறுத்திய கருத்தாகும்.

அளவை இயலும் பெரியாரும்

பெரியாரியலில் உலகாய்தம் எவ்வாறு முழுமை பெறுகிறதோ அவ்வாறே அதன் அளவை இயலின் காட்சி, அய்யம், தெளிதல் என்ற படிமுறைகளும் இயல்பாகவே அமைந்துள்ளன. மரபு வழிப்பட்ட இவ்வளவை இயல் பெரியாரியலுக்குப் புது மெருகினை ஏற்றுகின்றது. மெய்யறிவாளனின் இலக்கணமாக வள்ளுவர்,

44. தந்தை பெரியார், தத்துவ விளக்கம், ப. 12.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு[45]

என்று வரையறை செய்வார். கடவுளாயினும் மதமாயினும், ஆன்மா, மோட்சம், நரகம் ஆகிய எதுவாயினும் அதன் தொடக்க நிலைக்கே சென்று அதன் தன்மைகளை நடுவுநிலையோடு ஆராய்கின்ற இயல்பு கொண்டவராகப் பெரியார் திகழ்கின்றார். அதுவே அவரின் சிறப்பாகவும் அமைந்துள்ளது.

பகுத்தறிவு கொண்டு கருத்துக்களை ஆய்ந்து ஏற்கும் முறையினை இக்கால மெய்யியலார் 'அறிவியல் சார்ந்த மெய்ப்பொருள்' என்பர்.[46] அம்மெய்ப்பொருள் கோட்பாட்டை 'அறிவு வழிக் கொள்கை' என்றும் குறிப்பர். அறிவு வழிக் கொள்கையாளரின் தன்மைகள் என்ன என்பதை,

> தத்துவ முறையை அறிவு சார்ந்த என்ற சொல் உணர்த்தும். தொகுப்பு வழியில் உலகைப் பற்றி அறியப் பயன்படும் அறிவு வழி என்று சிந்தனையைத் தத்துவ அறிஞன் கருதுகின்றான். அவ்வாறு பெறும் அறிவைச் சரி பார்க்க அவனுக்குப் புலக்காட்சி தேவை இல்லை[47]

என்று விளக்குவார் கான்சு ராய்க்கன் பாக். இந்த விளக்கம் பெரியாருக்கு முற்றாகப் பொருந்தும்.

அறிவை எவ்விதக் கட்டுக்குள்ளும் அடக்கிவிடாது நடுவுநிலையோடு ஆராயும் இயல்பு அவருக்குரியது. தமது பேச்சிலும் எழுத்திலும் பிறரது கருத்துக்களை அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று மேற்கோள் காட்டாது பேசும் இலக்கணத்தைப் படைத்தவர் அவர். அவர் பெற்ற 'அறிவு விடுதலையை' கட்டற்ற சிந்தனையைப் பிறரிடமிருந்தும் எதிர்பார்க்கின்றார். அறிவுக்கு விடுதலை கிடைக்காத இடத்தில் 'முடிபுகள்' ஒருதலையாகிவிடும் என்பதை ஒரு வேண்டுகோளாகவே விடுக்கின்றார்.

> நான் ஒரு சுதந்திர மனிதன். எனக்குச் சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி உண்டு. அதை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். நீங்கள் என்னைப் போலவே உங்களது சுதந்திர நினைப்பு, சுதந்திர அனுபவம், சுதந்திர உணர்ச்சி ஆகியவைகளால் பரிசீலனை

---

45. குறள். 355.
46. கான்ஸ்ராய்க்கன்பாக், அறிவியல் சார்ந்த மெய்ப்பொருளியலின் தோற்றம், (த. ஆ.) சி. இராமலிங்கம், ப. 33,
47. மே. நூ., ப. 33.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> செய்து ஒப்பக்கூடியவைகளை ஒப்பி, தள்ளக்கூடியவை களைத் தள்ளிவிடுங்கள் என்கின்ற நிபந்தனையின் பேரிலே தான் எதையும் தெரிவிக்கின்றேன்.
>
> எப்படிப்பட்ட பழமை விரும்பிகளானாலும் இதற்கு இடம் கொடுக்கவில்லையானால் அது நியாயமும் ஒழுக்க மும் ஆகாது. உங்கட்கு இவை உண்மை எனப் புலப்படுமா யின் அவைகளை உண்மை என ஒப்புக்கொள்வதில் மட்டும் பிரயோசனம் இல்லை. அவைகளை அனுட்டானத்தில் கொண்டுவந்து அதன்படி நடக்க முயற்சி செய்யுங்கள். எனது சொந்த அனுபவங்களை நானறிந்து உங்களுக்கு உரைப்பதுதான் என்னுடைய விடுதலை. அவைகளை ஆராய்ந்து அதன்படி நடப்பதுதான் உங்கள் விடுதலை[48]

என்ற இந்த விளக்கம் கான்சின் இலக்கணத்தின் இலக்கியமாகும்.

அளவை முறைகள்

அறிவைப் பெறும் வாயிலான இவ் அளவை முறை, தொகுப்பு வழி அளவை என்றும் பகுப்பு வழி அளவை என்றும் இருவகைப் படும். இவற்றுள், தொகுப்புவழி அளவை (Induction) அறிவிய லைச் சார்ந்த முறை என்று அறிஞர்கள் கூறுவர்.

தொகுப்புவழி அளவை

உலகு தழுவிய உண்மைகளை—இயற்கை விதிகளை அடிப் படையாகக் கொண்டு அமைந்த அளவைமுறை இதுவாகும். இயற்கையின் விதிகளுக்கான காரணங்களை ஏன் எதற்கு என்று அறியக்கூடிய வழிமுறைகளைக் காட்டுவது இவ் அளவையியல். 'பழம் மரத்திலிருந்து வீழ்வதற்குப் புவிஈர்ப்பே காரணம்' என்று கண்டறிந்த அறிவியல் முடிவை இதற்குச் சான்றாகக் காட்டலாம். 'தனிப்பட்ட நிகழ்ச்சியிலிருந்து உலகு தழுவிய உண்மைகளைக் கண்டறிவது இத்தொகுப்பு வழி அளவையின் நோக்கம்.[49] அறிவிற் கும் பட்டறிவிற்கும் உட்பட்ட உய்த்துணர்வுகளையும் இது ஏற்றுக் கொள்கிறது.

> அறிவியல் முறை புதியதைக் காண்பதற்காக அமைவது. அதற்குத் துணை நிற்பது தொகுப்புவழி அளவையாகும்.

---

48. நா. இராமநாதன், பெரியாரியல் ஓர் அறிமுகம், ப. 22.
49. A. Asirvatham, Concise of Logic, p. 4.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> அதாவது முன்னர் புலக்காட்சியின் வாயிலாக அறியப் பெற்றனவற்றைத் தொகுத்து அறிதல் மட்டும் தொகுப்பு வழி அளவையின் நோக்கமன்று. முன்னறிந்து அறிவிக்கக் கூடியதாக அறிவிக்கும் கருவியாகத் தொகுப்புவழி அளவை அமைகிறது[50]

என்ற விளக்கம் நடப்பு நிலையிலிருந்து வருங்கால முன்னேற்றத்தை அல்லது அறிவு வளர்ச்சியை உய்த்துரைக்கும் தன்மைகளை ஏற்பதை அறியலாம். மேற்காட்டிய விளக்கம் பெரியாரின் 'இனி வரும் உலகம்' என்ற சிறியதொரு நூலுக்கு முற்றாகப் பொருந்தும்.

இனிவரும் உலகம்

அறிவியல் வளர்ச்சியின் தலைவாயிலில் 20ஆம் நூற்றாண்டு நுழைந்துவிட்டது. 16 கோடி கற்களுக்கு அப்பால் உள்ள செவ்வாய் மண்டிலத்தின் மண்ணை அள்ளிக்கொண்டு வந்துவிட்டது மனிதனின் கண்டுபிடிப்பு. பேரண்டத்தில் ஒரு சிறு துளியென இயங்கும் கதிரவன் குடும்பத்திலிருந்து அண்டவெளியை நோக்கி ஏவுகணை அனுப்பப்பட்டுவிட்டது. இத்தகைய வளர்ச்சிப் போக்குகள் கடந்த இருபது முப்பது ஆண்டுகளுக்குள் நிகழ்ந்தவை. மனித அறிவின் ஆற்றலை உணர்த்தும் வெளிப்பாடு இவை. இத்தகைய முயற்சிகள் தோற்றம் கொள்வதற்கு முன்னர் பெரியார் உருசியப் பயணத்தை முடித்து வந்த பின்னர், எதிர்கால விளைவுகள் எப்படி இருக்கும் என்பது குறித்து கி. பி. 1933க்கும் 1943க்கும் இடையில் எழுதிய நூலே 'இனிவரும் உலகம்' என்பதாகும். பகுத்தறிவாளனுக்கும், பழமைப் போக்குள்ள பண்டிதருக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குவதுடன் இந்நூல் தொடங்குகின்றது.

> பண்டிதர்கள்—பழங்காலத்தையே சரியென்று கருதிக் கொண்டு அதற்கே 'புது உலகம்' என்று பெயர் கொடுத்து, அங்கே செல்லவேண்டும் என்ற அவாவுடையவர்கள். பகுத்தறிவுவாதிகள்—வரும் ஓரொரு விநாடியும் புதிய காலமாகக் கருதிப் புதிய உலகத்திற்குப் போவதில் ஆர்வமுள்ளவர்கள்.[51]

இத்தகைய புதிய உலகில் திருட்டோ, பரத்தமையோ, ஒழுக்கக் குறைவோ இருக்காது; ஏற்படவும் முடியாது. ஏனெனில்

---

50. கான்ஸ்ராய்க்கன்பாக், அறிவியல் சார்ந்த மெய்ப்பொருளியலின் தோற்றம் (த ஆ.), சி. இராமலிங்கம், ப. 255.

51. ஆனைமுத்து, பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், தொகுதி 3, ப. 2001.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதத் தேவைக்குரிய அனைத்தும் தாராளமாகக் கிடைக்கும், கங்கைக்கரையில் இருக்கும் ஒருவன் தண்ணீரை நாளைக்கு வேண்டும் என்று எப்படிச் சேர்த்து வைக்கமாட்டானோ அவ்வாறே வருங்கால மனிதனும் நாளையத் தேவைகளைப் பற்றிக் கவலைப்படமாட்டான்.

> போக்குவரவு எங்கும் ஆகாய விமானமும் அதிவேக சாதனமுமாகவே இருக்கும்.
>
> கம்பியில்லாத் தந்திச் சாதனம்—ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும்.
>
> ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப்பட்டிருக்கும்.
>
> உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து, ஆளுக்கு ஆள் உருவம் காட்டிப் பேசிக்கொள்ளத்தக்க சவுகரியங்கள் ஏற்படும்.
>
> ஆண் பெண் சேர்க்கைக்கும் குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.
>
> மக்கள் பிறப்பு கட்டுப்படுத்தப்பட்டு ஓர் அளவுக்குள் கொண்டு வரப்படும்.[52]

என்றெல்லாம் கற்பனை செய்த பெரியாரின் உய்த்துணர்வு இன்றைக்கு நடைமுறையாய் வந்துவிட்டது. கார் மற்றும் எந்திரப் பொறிகளுக்கு எப்படித் தனித்தனியான உதிரிப் பாகங்கள் கடைகளில் கிடைக்கின்றனவோ அப்படியே மனித உறுப்புகளும் வேண்டியவாறு கிடைக்கும் என்பார். அவ்வுலகத்தில் மாந்தர் அனைவரும்,

> 'வாழ்க்கை என்றால் பெருஞ்சுமை' என்று சலித்துக் கொண்டும், வாழ்க்கை என்றால் போராட்டம் என்று திகைத்துக் கொண்டும் இருக்கிற நிலைமை போய் வாழ்க்கை என்றால் மக்களின் இன்ப உரிமை உண்டாக வேண்டும் என்றும் ஆவலுடன் பணியாற்றி வருவார்கள்[53]

என்று மனித நேயத்துடன் அவ்வுலகத்தை எதிர்பார்க்கின்றார்.

---

52. ஆனைமுத்து, பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், தொகுதி 3, ப. 2006.

53. மே. நூ., ப. 2008.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரியார் காண விரும்பிய அந்த வருங்கால இனிய உலகைப் பாரதிதாசன் 'சுயமரியாதை உலகு' என்று பெயர் சூட்டி மகிழ்வார். நாட்டின் அனைத்துத் துறைகளிலும்,

சம தருமம்
சம ஈவு
சம உடைமை
சம ஆட்சித் தன்மை
சம நோக்கு
சம நுகர்ச்சி
சம அனுபவம்
இருக்க வேண்டும்
ஏற்பட வேண்டும்
ஏற்படுத்தப்பட வேண்டும்
ஏற்பட்டாக வேண்டும்[54]

என்ற கட்டளைகளைக் கொண்டதான உலகில் சாதி, மத பேதங்களுக்கும் சண்டை சச்சரவுகளுக்கும் இடம் ஏது? எனவே தோழர்களே வாருங்கள் புதிய உலகு காண்போம்! என அழைப்பு விடுப்பார் பாரதிதாசன்.

சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
    தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகிதனை
ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம்; பின்னர்
    ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்!
பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப்
    பேசு சுயமரியாதை உலகு எனப் பேர்வைப்போம்!
ஈதேகாண்! சமூகமே யாம் சொன்னவழியில்
    ஏறுநீ! ஏறுநீ!! ஏறுநீ!!! ஏறே[55]

---

54. பகுத்தறிவாளர் கழக நாட்குறிப்பு, 1984, முன்னுரை.
55. பாரதிதாசன் கவிதைகள், (மு. தொ.), முன்னேறு., ப. 146.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரிந்துரை

95 ஆண்டு வாழ்வில் ஏறத்தாழ 60 ஆண்டுகள் மக்கள் தொண்டாற்றியவர் பெரியார். நாள், வார, திங்கள் இதழ்களின் வாயிலாக அவர் எழுதியவையும், மக்கள் மன்றத்தில் அவர் பேசியவையுமாக வெளிவந்தவற்றைத் தொகுத்தால் 100 பகுதிகளாகத் தொகுக்கலாம். அத்தொகுதிகளைத் தனிப்பட்ட நிறுவனங்களோ, இயக்கமோ செய்வதுடன் பல்கலைக் கழகங்களும் அரசும் இணைந்து அப்பணியை மேற்கொள்ள வேண்டும்.

தன்மான இயக்கத்தைக் கண்டு, அதை வாழ்க்கை நெறியாக மாற்றிய பெரியார் மரபு வழிபட்ட உலகாய்தத்திற்குப் புது வடிவம் கொடுத்தவர். அவரைப் பற்றியோ, அவரது மெய்யியல் பற்றியோ போதுமான ஆய்வுகள் இதுகாறும் முறையாக மேற்கொள்ளப்படவில்லை.

அத்தகைய ஆய்வுகள் தொடங்கப் பல்கலைக் கழகங்களில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். சமூகவியல், அரசியல், கலை இலக்கியம் ஆகியவற்றுள் ஊடுருவி நிற்கும் பெரியாரியலை வகையாகவும் தொகையாகவும் ஆராய்வது ஒரு புதிய சமூகத்தை உருவாக்கும் பெரும் பணிக்குக் கால்கோள் எடுப்பதாகும்.

அவர் கருத்துக்கள் அனைத்தும் அவர் காலத்திலேயே இலக்கிய வடிவம் கொண்டன. கவிதைகளாகவும், நாடகங்களாகவும் அவர் முன்னிலையிலேயே மக்கள் மன்றில் அரங்கேறின. இத்தகைய இலக்கிய வடிவம் கொடுத்தவர்களில் முன்னோடியாய்த் திகழ்பவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆவார். அவரது படைப்புகள் பெரியாரியலை ஒட்டியே ஆய்வு செய்யப்பட வேண்டும். பெரியாரின் நாத்திகப் படிமுறைகளும் அவரின் புரட்சிப் போக்குகளும் பாரதிதாசன் கவிதைகளின் உயிரோட்டமாய்த் திகழ்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிவுரை

உலகைப் பற்றிய ஆய்வு என்ற அறிவியல் அடிப்படையில் தொடங்கி, மக்கள் வாழ்வின் மாண்பினை உயர்த்துதல் என்ற எல்லையில் முடிவது உலகாய்தம். இந்தியாவில் தோன்றிய மெய்யியல்களுள் தொன்மையும் தலைமையும் சான்ற இம் மெய்யியல் தமிழர்கட்குரியது. இதன் தோற்ற வளர்ச்சியின் மூலச் சுவடுகளைத் தமிழ் இலக்கியங்களில் மட்டுமே தெளிவாகக் காண முடிகின்றது.

சிந்துவெளி நாகரிகத்திலேயே இம் மெய்யியல் சிறந்த வளர்ச்சியினைக் கொண்டிருந்தது என்பதனைப் பின்வரும் செய்தி உணர்த்துகின்றது. 'வானிலை மாற்றமே சிந்துவெளி நாகரிக மறைவுக்குக் காரணம்' என்ற தலைப்பில் 14-10-85 அன்று தினமணி வெளியிட்டதாவது:

''மாஸ்கோ, அக். 13. சிந்துவெளி நாகரிகம் அழிந்ததற்கு உலகில் ஏற்பட்ட வானிலை மாற்றமே காரணம் என்றும் ஆரியர்களுக்கும் ஹரப்பா மக்களுக்கும் இடையேயான மோதல் எதுவும் காரணம் இல்லை என்றும் மாஸ்கோவில் நடந்த மகாநாடு முடிவு செய்துள்ளது.

மாஸ்கோவில் இன ஆராய்ச்சிக் கழகத்தில் நடந்த மகாநாட்டில் பல விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர்.

இந்தியாவுக்குள் ஆரியர்கள் வருவதற்கு முன்னரே சிந்து சமவெளி நாகரிகம் புகழோங்கி இருந்ததை அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

ஹரப்பா (சிந்து சமவெளி) நாகரிகம் தாழ்வடைந்த காலத்தில் உலகில் மற்ற நாகரிகங்களும் தாழ்ந்தநிலையை அடைந்துள்ளன. தெற்கு அய்ரோப்பாவில் கிரீட், மைசீனிய நாகரிகமும் தாழ்ந்தது.

'பூமியின் அடிப்பரப்பில் ஏற்பட்ட நடுக்கங்கள், அசைவுகளால் நில அதிர்ச்சிகள் ஏற்பட்டன. இதனால் ஆறுகளின் போக்கு மாறியது. இதனால் நிலச்சரிவு ஏற்பட்டது. ஆறுகளின் போக்கு மாறியதால் சிந்து சமவெளி வறண்டது' என்று மகாநாட்டிற்கு வந்த அறிஞர்கள் கூறினர்.

மகாநாட்டின் விவரங்கள், ''நானியே சிலா'' என்ற பத்திரிக்கையில் வெளியாகியுள்ளன.

ஹரப்பா பற்றி ஆரியர் புத்தகங்கள் ஏன் குறிப்பிடவில்லை என்ற பிரச்சனையும் ஆராயப்பட்டது. இருந்த போதிலும், ஹரப்பா பண்பாட்டின் சில அம்சங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலத்தை வென்று நீடித்ததை ரஷ்ய அறிஞர் டாக்டர் யூரி நாரஜோவ் சுட்டிக் காட்டினார்.

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூத கோட்பாடு, மற்றும் நேரத்தை அறுபது என்ற எண்ணிக்கையில் கணக்கிடுவது (60 வினாடி 60 நிமிடம்) ஆகியன இந்தியாவில் ஆரம்ப காலம் முதலே உள்ளது. இதுவரை இந்த முறை சுமேரியாவில் தோன்றியதாகக் கருதப்பட்டு வந்தது.

60 ஆண்டுகள் சுழற்சி, ஒரு ஆண்டை 60 நாட்கள் (2 மாதம்) கொண்ட பருவமாகப் பிரித்தல் முதலியனவும் ஆரம்ப முதலே உள்ளன என்று அறிஞர்கள் சுட்டிக் காட்டினர். இந்தியாவின் கால நிலைக்கேற்ற விதத்தில் இது அமைந்துள்ளது.

........5000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்துசமவெளியில் பரவி இருந்த நாகரிகம் எகிப்திய மெசபடோமிய நாகரிகங்களைவிட அதிகமான பரப்பில் பரவி இருந்ததையும் அறிஞர்கள் சுட்டிக் காட்டினர்.

பிளவும் கலப்பும் அறியாத தமிழகத்தில்—நாவலந்தீவில் தோன்றி வளர்ந்த இக்கோட்பாடு உலக அறிவியலுக்கெல்லாம் அடித்தளமாய் அமைந்தது. கி. மு. 9ஆம் நூற்றாண்டளவில் சீனத்தில் பரவத் தொடங்கியது. அதனை அடுத்து கிரேக்கத்தை வளப்படுத்தியது.

இதன் வளர்ச்சியையும் செழிப்பையும் தடுக்கும் வகையிலேயே உபநிடதங்கள் தோன்றின. இதிகாசங்கள் எழுந்தன.

தமிழினம் போற்றி வளர்த்த அறிவுப் பள்ளியாகிய இவ் உலகாய்தம் தமிழர்களின் உயர்வோடு உயர்ந்தது. இவர்களின் தாழ்வோடு தாழ்ந்தது. தமிழர்களின் தன்மானத்திற்கும் உயர்விற்கும் மறுமலர்ச்சிக்கும் பாடுபட்ட பெரியார் ஈ. வெ. ராமசாமியால் பலநூறு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அது உயிர்ப்பிக்கப் பட்டுள்ளது. இதன் வளர்ச்சி, தமிழர்களின் எழுச்சியோடு தொடர்புபட்டது. இதன் கடந்த கால வரலாற்றை ஆராய்வதற்குச் சீன—கிரேக்க மெய்யியல்களுடன் ஓர் ஒப்பாய்வு தொடங்கப் பெறல் வேண்டும். அத்தகைய ஆய்வுகளின் வழியாக மட்டுமே பல புதிய உண்மைகளை வெளிப்படுத்த முடியும்.

முந்தய நாளினில் அறிவு மிலாது
மொய்த்தநல் மனிதராம் புதுப்புனல் மீது
செந்தா மரைக்காடு பூத்தது போலே
செழித்தஎன் தமிழே உயிரே வாழி!

—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

❑ ❑ ❑

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணைநூற் பட்டியல்

1. அண்ணாதுரை, சி. என்., ஆரியமாயை, திராவிடப் பண்ணை, திருச்சி, 1977, 14-ஆம் பதிப்பு.

2. அண்ணாமலை, ப., தொல்காப்பியர், (ப. இ.), (ஆ. இ.).

3. அப்பாதுரை, கா., இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு, கழகம், சென்னை, 1976, இரண்டாம் பதிப்பு.

4. அம்பேத்கார், பி. ஆர்., மண்ணின் மைந்தர்களின் மறைக்கப்பட்ட வரலாறு, தலித் சாகித்ய அகாடமி, சென்னை, 1984, முதற்பதிப்பு.

5. அலெக்ஸாந்தர் கோந்த்ர தோவ், மாக்கடல் மர்மங்கள், ஆர். பி. எஸ்., (மொ. பெ.), என். சி. பி. எச்., சென்னை, 1981, முதற்பதிப்பு.

6. அனந்தநாத நயினார், திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும், (இ.இ.), 1932.

7. அன்தோனவா, கொ. அ., முதலியவர்கள், இந்தியாவின் வரலாறு, தொகுதி 1, சோமசுந்தரம், பூ., (மொ. பெ), முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1973, முதற் பதிப்பு.

8. ஆபிரகாம் பண்டிதர், மு., கருணாமிர்த சாகரம், தஞ்சை, 1917.

9. ஆனைமுத்து, வே., (ப.ஆ.) பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், தொகுதி 1, சிந்தனையாளர் கழகம், திருச்சி, 1974, முதற்பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

10. ஆனைமுத்து, வே., (ப.ஆ.) பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், தொகுதி 2, சிந்தனையாளர் கழகம், திருச்சி, 1974, முதற்பதிப்பு.

1. ,, பெரியார் ஈ. வெ. ரா. சிந்தனைகள், தொகுதி 3, சிந்தனையாளர் கழகம், திருச்சி, 1974, முதற்பதிப்பு.

12. இராகவய்யங்கார், மு., தொல்காப்பிய ஆராய்ச்சி, (ப. இ.), (ஆ. இ.).

13. இராதாகிருஷ்ணன், சர்வபள்ளி, முதலியவர்கள், கீழைமேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, தொகுதி 1, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1979 முதற்பதிப்பு.

14. ,, கீழைமேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு, தொகுதி 2, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1979, முதற்பதிப்பு.

15. இராமசாமி சாஸ்திரி, கே. எஸ்., மகரிஷிகள் வரலாறு, தமிழகம், சென்னை, 1959, முதற்பதிப்பு.

16. இராமநாதன், அரு., (ப. ஆ.), சித்தர் பாடல்கள், பிரேமா பிரசுரம், சென்னை-24, மூன்றாம் பதிப்பு, செப். 1968.

17. இராமநாத பிள்ளை, ப., சிவஞான சித்தியார் பரபக்கம், கழகம், 1968, முதற்பதிப்பு.

18. ,, சிவஞான போதமும் சிவஞான முனிவர் அருளிச்செய்த சிற்றுரையும், கழகம், 1968, முதற்பதிப்பு.

19. இராமானுசாச்சாரி, இர., அறிவு ஆராய்ச்சி இயல், தமிழ் வெளியீட்டுக் கழகம், (இ.இ.), 1966, முதற்பதிப்பு.

20. பெரியகருப்பன், இராம., மற்றும் இலக்குமணன், எம். எஸ்., ஆய்வியல் அறிமுகம், மதுரை, (ப.இ.), (ஆ.இ.).

21. இலட்சுமணன், இந்திய தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1960.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

22. இளம்பூரணர், (உ. ஆ.), தொல்காப்பியம் — பொருளதிகாரம், கழகம், சென்னை, 1964, முதற்பதிப்பு (மறுஅச்சு).

23. ,, தொல்காப்பியம் — எழுத்ததிகாரம், கழகம், சென்னை, 1964, (மறுஅச்சு).

24. ,, தொல்காப்பியம் — சொல்லதிகாரம், கழகம், சென்னை, 1964, (மறுஅச்சு).

25. இளந்திரையன், சாலை., புரட்சி முழக்கம், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978, முதற்பதிப்பு.

26. எங்கெல்ஸ், பி., இயற்கையின் இயக்க இயல், பாண்டுரங்கன், ஆர். கே., (மொ. பெ.), முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, (ஆ.இ.).

27. ,, குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, (ஆ.இ.), மூன்றாம் பதிப்பு.

28. ஏ. எஸ். கே., பகுத்தறிவின் சிகரம் பெரியார் ஈ. வெ. ரா., பகத் ஹவுஸ், சென்னை, 1974, முதற் பதிப்பு.

29. கதிரேசச் செட்டியார், மு., & இராமானுஜாசாரி, பி. ஸ்ரீ., (மொ. பெ.), கௌடலீயம் பொருணூல், முதல் பகுதி அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1980.

30. ,, கௌடலீயம் பொருணூல், இரண்டாம் பகுதி, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1980.

31. கந்தசாமி, சோ. ந., தொல்காப்பியத் தெளிவு, அபிராமி பதிப்பகம், 19᾽7, முதற் பதிப்பு.

32. ,, பரிபாடலின் காலம், அபிராமி பதிப்பகம், 1972, முதற் பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

33.	கந்தசாமி, சோ. ந.,	பௌத்தம், சென்னைப் பல்கலைக் கழகம், 1977.
34.	கந்தசாமியார் & தேவநேயப் பாவாணர், ஞா.,	தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையருள், கழகம், 1952, முதற்பதிப்பு.
35.	கணேசர், தி.,	மானுடத்துவமும் தாந்திரிகமும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1981, முதற் பதிப்பு.
36.	கருணாநிதி, மு., கலைஞர்,	யாரால்? யாரால்? யாரால்? பாரதி நிலையம், சென்னை, 1981.
37.	காசிநாதன், நடன., & தாமோதரன், கு., (தொ. ஆ.)	கல்வெட்டு, தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை, 1976, இரண்டாம் பதிப்பு.
38.	காந்திமதிநாத பிள்ளை, வி. பி.,	சிவஞானபோதச் சொற்பொழிவு நூல், கழகம், 1960, (மறு அச்சு).
39.	குஞ்ஞுன்பிள்ளை, இளங்குளம்.,	பண்டைய கேரளம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1970, முதற்பதிப்பு.
40.	குணா.,	தமிழர் மெய்யியல், பொதுமை வெளியீடு, சென்னை, 1980, முதற்பதிப்பு.
41.	கைலாசபதி, க.,	அடியும் முடியும், பாரி நிலையம், சென்னை, 1970, முதற் பதிப்பு.
42.	,,	சமூகவியலும் இலக்கியமும், என். சி. பி. எச்., சென்னை, 1979, முதற்பதிப்பு.
43.	கோபால கிருஷ்ணமா சார்யர், வை.மு., (உ.ஆ.)	கம்பராமாயணம், கிட்கிந்தா காண்டம், வை. மு. கோ. கம்பெனி, சென்னை, 1964, ஏழாம் பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

44. கோபால கிருஷ்ணமாசார்யர், வை.மு., (உ.ஆ.) கம்பராமாயணம், யுத்த காண்டம், 1961.

45. ,, கம்பராமாயணம், ஆரண்ய காண்டம், 1964.

46. சக்கரவர்த்தி நயினார், திருக்குறள் வழங்கும் செய்தி, பாரி நிலையம், சென்னை, 1959, முதற்பதிப்பு.

47. சஞ்சீவி, ந., திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடக நலனும், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1973, முதற்பதிப்பு.

48. சதாசிவம், ச., உயிர்வேதிய மரபியல், என். சி. பி. எச்., சென்னை, 1979, முதற்பதிப்பு.

49. சாமி, பி. எல்., இலக்கியத்தில் அறிவியல், சேகர் பதிப்பகம், சென்னை, 1981, முதற்பதிப்பு.

50. சாமிநாத சர்மா, வெ., புராதன இந்தியாவில் அரசியல், பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், புதுக்கோட்டை, 1963, இரண்டாம் பதிப்பு.

51. ,, ராஜதந்திர—யுத்தகளப் பிரசங்கங்கள், பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், புதுக்கோட்டை, 1964, இரண்டாம் பதிப்பு.

52. சாமிநாதய்யர், உ. வே., குறுந்தொகை மூலமும் உரையும், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1962, நான்காம் பதிப்பு.

53. ,, சிலப்பதிகார மூலமும் அரும்பதவுரையும், ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1950, அய்ந்தாம் பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

54. சாமிநாதய்யர். உ.வே., திருத்தக்க தேவரியற்றிய சீவக சிந்தாமணி மூலமும், நச்சி னார்க்கினியருரையும், ஸ்ரீ தியாக ராச விலாச வெளியீடு, சென்னை, 1969, ஏழாம் பதிப்பு.

55. ,, புறநானூறு மூலமும் உரையும், ஸ்ரீ தியாகராச விலாச வெளி யீடு, சென்னை, 1963, ஆறாம் பதிப்பு.

56. சிவஞான சுவாமிகள், சிவஞான போதமும் சிவஞான பாடியமும், சைவ சித்தாந்த மகா சமாஜம், (இ.இ.), 1936.

57. சிவத்தம்பி, கார்த்திகேசு., இலக்கணமும் சமூக உறவு களும், என். சி. பி. எச்., சென்னை, 1982, முதற்பதிப்பு.

58. சிவலிங்கனார், ஆ., தொல்காப்பியம் (சிறப்புப்பாயி ரம்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1980, முதற்பதிப்பு.

59. சிவானந்த சரஸ்வதி, சுவாமி., ஞான சூரியன், பெரியார் சு. பி, நி., சென்னை, 1982, 16-ஆம் பதிப்பு.

90. ,, மத விசாரணை, (இ. இ.), (ஆ. இ.).

61. சீனிவாசாச்சாரியார், டி.வி., மகாபாரதம்—பீசுமபருவம், சென்னை, 1919.

62. சுந்தரம், எம். வி., இந்திய ஆத்திகமும் தேச பக்த நாத்திகமும், என். சி. பி. எச்., சென்னை, 1981, முதற்பதிப்பு.

63. சுந்தரமூர்த்தி, இ., திருக்குறள் அணிநலம், சென் னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1971, முதற்பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

64. சுந்தரமூர்த்தி, கு.. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை, (இ.இ.), 1965, முதற்பதிப்பு.

65. சுந்தரவடிவேலு, நெ. து., புரட்சியாளர் பெரியார், சந்த் அண்டு கம்பெனி லிமிடெட்., சென்னை, 1979, முதற்பதிப்பு.

66. சுப்பிரமணிய அய்யர், ஏ.வி., தமிழ் இலக்கியத்தில் அறுவகைச் சமயம் (ஓர் ஆராய்ச்சி), நூலாசிரியர் வெளியீடு, திருநெல்வேலி, 1973, முதற்பதிப்பு.

67. சுப்பிரமணிய சாஸ்திரி, பி. எஸ்., சங்க நூல்களும் வைதிக மார்க்கமும், யுனைடெட் பிரிண்டர்ஸ், திருச்சி, 1951.

68. சுப்பிரமணிய பிள்ளை, கா., தமிழர் சமயம், கழகம், சென்னை, 1953, இரண்டாம் பதிப்பு.

69. சுப்பிரமணியன், க., நெல்லை, சாங்கிய காரிகை, உமா நூலகம், திருநெல்வேலி, 1980, முதற்பதிப்பு.

70. செர்கேயெவ், ப. பீ., அனைவருக்குமான உடல் இயங்கு இயல், கதிரேசன், அ., (மொ. பெ.), மீர் பதிப்பகம், மாஸ்கோ, 1983.

71. செல்வராசன், மா., பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர், வண்ணமலர் வெளியீடு, பாரி நிலையம் (வி. உ.), சென்னை, 1979, முதற்பதிப்பு.

72. சேக்கிழார், திருத்தொண்டர் புராணம், காசி மடம், திருப்பனந்தாள், 1961.

73. சோமசுந்தரனார், பொ. வே., (உ, ஆ.) அகநானூறு—களிற்றியானை நிரை, கழகம், சென்னை, 1970, முதற்பதிப்பு, 1974, (மறுஅச்சு).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

74.	சோமசுந்தரனார், பொ. வே., (உ.ஆ.)	அகநானூறு—மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை, கழகம், சென்னை, 1970, முதற் பதிப்பு.
75.	,,	ஐங்குறுநூறு, கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1972, (மறுஅச்சு).
76.	,,	கல்லாடம் கழகம், சென்னை.
77.	,,	கலித்தொகை நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும், கழகம், சென்னை, 1973, முதற்பதிப்பு.
78.	,,	சிறுபாணாற்றுப்படை, கழகம், சென்னை.
79.	,,	நீலகேசி, கழகம், சென்னை. 1964, முதற்பதிப்பு.
80.	,,	நெடுநல்வாடை, கழகம், சென்னை.
81.	,,	பட்டிணபாலை, கழகம், சென்னை.
82.	,,	பரிபாடல் மூலமும் உரையும், முதற்பதிப்பு, கழகம், சென்னை, 1969, (மறுஅச்சு).
83.	,,	பொருநராற்றுப்படை, கழகம், சென்னை.
84.	,,	புறப்பொருள் வெண்பாமாலை, கழகம், சென்னை, முதற் பதிப்பு, 1955.
85.	,,	மதுரைக்காஞ்சி, கழகம், சென்னை, 1956, முதற்பதிப்பு.
86.	,,	மலைபடுகடாம், கழகம், சென்னை.
87.	,,	மணிமேகலை, (மூலமும் உரையும்) கழகம், சென்னை, 1971, முதற்பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

88. சேனாவரையார், (உரை. ஆ.) — தொல்காப்பியம் — சொல்லதிகாரம், கழகம், சென்னை, 1964. (மறுஅச்சு).

89. ஞானப்பிரகாசம், வி. மி., & அறவாணன், க. ப., — தமிழில் அறிவியல் கருத்துக்கள், பாரி நிலையம், சென்னை, 1975, முதற்பதிப்பு.

90. டாங்கே, எஸ். ஏ,, — பண்டைக்கால இந்தியா, ராமகிருஷ்ணன், எஸ்.,(மொ.பெ.), என். சி. பி. எச்., சென்னை, 1955, முதற்பதிப்பு.

91. தர்மானந்த கோஸாம்பி, — பகவான் புத்தர், கா. ஸ்ரீ. ஸ்ரீ., (மொ. பெ.), சாகித்திய அகாடமிக்காக, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5, முதற் பதிப்பு, 1957.

92. தங்கையா நாடார், வ., — தென்னிந்திய தமிழ் சாசனங்கள், சைவ சித்தாந்தக் கழகம், சென்னை-1, 1967.

93. தண்டபாணி தேசிகர், ச., (உ. ஆ.) — நன்னூல் விருத்தியுரை, பாரி நிலையம், சென்னை, 1971.

94. தாதாசாரியார், அ. ரா., — வரலாற்றில் பிறந்த வைணவம், ஸ்ரீ சாரங்கபாணி சுவாமி தேவஸ்தானம், கும்பகோணம், (ஆ. இ.).

95. திருஞானசம்பந்தர், — தேவாரம், காசி மடம், திருப்பனந்தாள், 1961.

96. திருநாவுக்கரசர், — தேவாரம், காசி மடம், திருப்பனந்தாள், 1963.

97. திருநாவுக்கரசு, க. த., — ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம், நான்காவது கருத்தரங்க மலர், இ. ப. த. ம. வெளியீடு, 1972.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

98. திருநாவுக்கரசு, க. த., சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979, முதற்பதிப்பு.

99. ,, திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1971.

100. ,, திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1978, முதற்பதிப்பு.

101. திருமூலர், திருமந்திரம், குமரகுருபரன், டி. எம்., (ப.ஆ.), 1968.

102. திருவிளங்கம், மு., சிவப்பிரகாசம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், 1974, முதற்பதிப்பு.

103. துரைசாமிப் பிள்ளை, சு., ஔவை, (ப. ஆ.) சிவஞானபோத மூலமும் சிற்றுரையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1968, முதற்பதிப்பு.

104. துரைசாமிப் பிள்ளை, சு., ஔவை, (உ.ஆ.) பதிற்றுப்பத்து (மூலமும் உரையும்), கழகம், சென்னை, 1973, மறுஅச்சு.

105. ,, புறநானூறு, பகுதி 1, கழகம், சென்னை, (ஆ.இ.).

106. ,, புறநானூறு, பகுதி 2, கழகம், சென்னை, (ஆ.இ.).

107. தெய்வச்சிலையார், (உரை. ஆ) தொல்காப்பியம் — சொல்லதிகாரம், கழகம், சென்னை.

108. தேவநேயன், ஞா., ஒப்பியன் மொழி நூல், (வெ. இ.), திருச்சி, 1940, (ப.இ.).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

109. தேவநேயன், ஞா., தமிழ் வரலாறு, நேசமணி பதிப்பகம், வட ஆற்காடு, 1967, முதற்பதிப்பு.

110. ,, தமிழர் மதம், நேசமணி பதிப்பகம், வட ஆற்காடு, 1972, முதற்பதிப்பு.

111. ,, திருக்குறள் தமிழ் மரபுரை, நேசமணி பதிப்பகம், வட ஆற்காடு, 1969, முதற்பதிப்பு.

112. ,, வேர்ச்சொற் கட்டுரைகள், கழகம், சென்னை, 1973, முதற்பதிப்பு.

113, நக்கீரனார், (உ.ஆ.) களவியல் என்ற இறையனார் அகப்பொருள், கழகம், சென்னை, 1953, முதற்பதிப்பு.

114. நச்சினார்க்கினியர், (உ.ஆ.) தொல்காப்பியம் — பொருளதிகாரம், கழகம், சென்னை, 1955, (ப.இ.).

115. ,, தொல்காப்பியம் — சொல்லதிகாரம், கழகம், சென்னை, 1955, (ப.இ.).

116. நடராஜன், அ. லெ., பஞ்சதந்திரக் கதைகள், பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1983, மூன்றாம் பதிப்பு.

117. நடேச கவுண்டர், கு., நியாயக் களஞ்சியம், (வெ.இ.), 1973, முதல் பதிப்பு.

118. நடேச சாஸ்திரி, கடலங்குடி, பிரம்ம சூத்திரம் சங்கர பாஷ்யம் பகுதி 1, ஆர்யமத சம்வர்த்தனி அச்சகம், (இ.இ.), 1929, முதற் பதிப்பு.

119, ,, பிரம்ம சூத்திரம் சங்கர பாஷ்யம் பகுதி 2, ஆர்யமத சம்வர்த்தனி அச்சகம், 1929, முதற்பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

120. நடேச சாஸ்திரி, கடலங்குடி, — பிரம்ம சூத்திர சங்கர பாஷ்யம் பகுதி 3, ஆர்யமத சம்வர்த்தனி அச்சகம், 1929, முதற்பதிப்பு.

121. நல்லபெருமாள், ர. சு., — பிரும்ம இரகசியம், வானதி பதிப்பகம், சென்னை, 1981, இரண்டாம் பதிப்பு.

122. நாராயணசாமி ஐயர் & சோமசுந்தரனார், பொ. வெ., (உ.ஆ.) — நற்றிணை நானூறு, கழகம், சென்னை, 1967, நான்காம் பதிப்பு.

123. நால்வர், (ப.ஆ.) — கல்வெட்டியல், தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை, 1972, முதற்பதிப்பு.

124. நிகாம், என். ஏ., & ரிச்சர்ட் மக்கியோன், — அசோக சாசனங்கள், குப் பண்ணா சாஸ்திரி, (மொ.பெ.), நேஷனல் புக் டிரஸ்ட், புது டில்லி, 1967, (ப.இ.).

125. ——— — பல்லவர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, (ஆ.இ.). (ப.இ.).

126. ——— — பாண்டியர் செப்பேடுகள் பத்து, தமிழ் வரலாற்றுக் கழகம், சென்னை, (ஆ.இ.), (ப.இ.).

127. நெடுஞ்செழியன், க., — இந்தியப் பண்பாட்டில் தமிழும் தமிழகமும், மனிதம் வெளியீடு, திருச்சி-21, முதற்பதிப்பு, மார்ச்சு 1989.

128. பழனிவேல் பிள்ளை, பெ., — கலிங்கத்துப் பரணி, கழகம், சென்னை, 1950, (ப.இ.).

129. பாம், ஏ. ஜே., — மெய்ப்பொருளியல்—ஓர் அறிமுகம், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1971, (ப.இ.).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

130.	பாரதிதாசன்,	பாரதிதாசன் கவிதைகள், முதற் தொகுதி, செந்தமிழ் நிலையம், புதுக்கோட்டை, 1983, 25-வது பதிப்பு.
131.	பெட்ரண்டு ரசல்,	திருமண முறைகள், (மொ. பெ.), மாதவன் கோ., பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-5, 1965.
132.	பெர்னர்தன், தெ. சேன்பியர்,	இந்தியக் குடிசை, (வெ.இ.), புதுவை, 1962, முதற்பதிப்பு.
133.	பெரல்மான், யா.,	பொழுபோக்கு பௌதிகம், மீர் பதிப்பகம், மாஸ்கோ, 1978, மூன்றாம் பதிப்பு.
134.	பெரியார் ராமசாமி, ஈ.வெ.,	அறிவுச்சுடர் (முதற்பாகம்), குடி அரசு பதிப்பகம், ஈரோடு, 1961, (ப.இ.).
135.	பெரியார் ராமசாமி, ஈ.வெ.,	இனிவரும் உலகம், பெ. சு. ம., பி. நி. வெளியீடு, சென்னை, 1977, ஐந்தாம் பதிப்பு.
136.	,,	பெரியார் பொன்மொழிகள், பெ. சு. ம. பி. நி. வெளியீடு, சென்னை.
137.	,,	தத்துவ விளக்கம், பெ. சு. ம.பி. நி. வெளியீடு, சென்னை, 1982, 9-ஆம் பதிப்பு.
138.	,,	திராவிடர்—ஆரியர் உண்மை, பெ. சு. ம. பி. நி. வெளியீடு, சென்னை, 1978, 8-ஆம் பதிப்பு.
139.	,,	பிரகிருதிவாதம் அல்லது மெட்டீரியலிசம், பெ. சு. ம. பி. நி. வெளியீடு, சென்னை, 1970, மூன்றாம் பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

140. பெரியார் ராமசாமி, ஈ.வே., மனுநீதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி, பெ. சு. ம. பி. நி. வெளியீடு, சென்னை, 1984, எட்டாம் பதிப்பு.

141. பெரும்பற்றப் புலியூர்நம்பி, திருவிளையாடற் புராணம், சாமிநாதையர் (ப.ஆ) ஸ்ரீ தியாகராச விலாச வெளியீடு, சென்னை, 1972, மூன்றாம் பதிப்பு.

142. பேராசிரியர், (உ.ஆ.) தொல்காப்பியம் — பொருளதிகாரம், கழகம், சென்னை, 1951, (ப.இ.).

143. மாணிக்கம், வ. சுப., தமிழ்க் காதல், பாரி நிலையம், சென்னை, 1962, முதற்பதிப்பு.

144. மாணிக்கவாசகர், திருக்கோவையார், குமரகுருபரன், டி. எம்., (ப.ஆ.), காசிமடம், திருபனந்தாள், 1952.

145. ,, திருவாசகம், புலியூர்க்கேசிகன், (ப.ஆ.), அப்பர் புத்தக நிலையம், தஞ்சாவூர், 1963, முதற்பதிப்பு.

146. மார்க்ஸ். கார்ல் & எங்கல்ஸ் பிரெடெரிக், இந்தியாவைப் பற்றி, என்.சி.பி.எச்., சென்னை, 1971, முதற்பதிப்பு.

147. முருகரத்தனம், தி., குறள் கூறும் இறைமாட்சி, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1974, முதற்பதிப்பு.

148. முருகரத்தினம், தி. (தொ.ஆ.), வள்ளுவர் வகுத்த அரசியல், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1974, முதற்பதிப்பு.

149. ,, வள்ளுவர் வகுத்த பொருளியல், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1975, முதற்பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

150. வால்மீகி, இராமாயணம், கிட்கிந்தை காண்டம், கிருஷ்ணசாமி அய்யர் (மொ.பெ.), ஸ்ரீராம் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1972, மூன்றாம் பதிப்பு.

151. ,, இராமாயணம், யுத்த காண்டம், கிருஷ்ணசாமி அய்யர் (மொ. பெ.), ஸ்ரீராம் பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1972, மூன்றாம் பதிப்பு.

152. ராகுல சாங்கிருத்தியாயன், விஞ்ஞான லோகாயத வாதம், (மொ. பெ.), ஏ. ஜி. எத்திராஜுலு, பி. ஏ., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், முதற்பதிப்பு, ஆகஸ்ட் 1985.

153. வானமாமலை, நா., இந்திய நாத்திகமும் மார்க்சீயத் தத்துவமும், என். சி. பி. எச்., 1978, முதற்பதிப்பு.

154. ,, தமிழர் பண்பாடும் தத்துவமும், என். சி. பி. எச்., 1973, முதற் பதிப்பு.

155. ,, மார்க்சீய அறிவுத்தோற்றவியல், என். சி. பி. எச்., 1978, முதற் பதிப்பு.

156. வித்தியாரண்ணிய சுவாமிகள், சர்வதர்சன சங்கிரகம், வடிவேலு செட்டியார், கோ, (மொ. பெ.), (வெ. இ.), சென்னை, 1910, (ப. இ).

157. விவேகி, எஸ்.டி., வேதமும் விஞ்ஞானமும், அங்கப்பா அறிவகம், மதுரை, (ஆ. இ.), முதற்பதிப்பு.

158. வீரமணி, கி., சக்தி வழிபாடு, பெ.சு.ம.பி.நி. வெளியீடு, சென்னை, 1982, முதற்பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

159. வீரமணி. கி., (தொ. ஆ), பெரியார் களஞ்சியம், தொகுதி 1, பெ. சு. ம. பி. நி. வெளியீடு, 1977, முதற்பதிப்பு.

160. ,, பெரியார் களஞ்சியம் தொகுதி 2, பெ. சு. ம. பி. நி. வெளியீடு, 1978, முதற்பதிப்பு.

161. வெள்ளை வாரணனார், க., தொல்காப்பியம் (தமிழிலக்கிய வரலாறு), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1970, (ப.இ.).

162. ,, தொல்காப்பியம்—நன்னூல் சொல்லதிகாரம், பொற்றடங் கண்ணி பதிப்பகம், சிதம்பரம், 1971, முதற்பதிப்பு.

163. வேங்கடசாமி, சீனி., மயிலை, சமணமும் தமிழும், கழகம், 1980, (ப.இ.).

164. ,, பௌத்தமும் தமிழும், கழகம், 1950, மறுஅச்சு.

165. வேங்கடசாமி நாட்டார், ந. மு., (உ.ஆ.), சிலப்பதிகார மூலம், கழகம், சென்னை, 1966, (ப.இ.).

166. வையாபுரிப்பிள்ளை. எஸ்., சங்க இலக்கியம், தொகுதி 1, பாரி நிலையம், சென்னை, 1967, முதற்பதிப்பு.

167. ,, சங்க இலக்கியம், தொகுதி 2, பாரி நிலையம், சென்னை, 1967, முதற்பதிப்பு.

168. லந்தாவு, லெ., & ரூமர், யூ., சார்பியல் தத்துவம் என்பது என்ன?, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1974, (ப.இ).

169. லூர்து, தே., (ப.ஆ.) நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், தொகுதி 1, பாரிவேல் பதிப்பகம், திருநெல்வேலி, 1981, முதற்பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

170. லெனின், வி. இ., இயக்கவியல் பொருள்முதல் வாதமும் வரலாற்றுப் பொருள் முதல் வாதமும், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1978, (ப.இ.).

171. ஜார்ஜ் பொலிட்ஸர், மார்க்ஸீய மெய்ஞ்ஞானம், கண்ணன், ஆர். கே., (மொ.பெ.), என். சி. பி. எச்., சென்னை, 1959, முதற்பதிப்பு.

172. ஜீன்ஸ் & ஜேம்ஸ்., நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1965, முதற்பதிப்பு.

173. ஹரியண்ணா, எம்., இந்தியத் தத்துவம்-1, தேவ சேனாபதி, வ. ஆ., & சண்முக சுந்தரம், ப. நா., (மொ.பெ.) தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1966, முதற்பதிப்பு,

174. ஹான்ஸ் ராய்க்கன் பாக், அறிவியல் சார்ந்த மெய்ப்பொருளியலின் தோற்றம், இராமலிங்கம், சி., (மொ.பெ.), தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை, 1973, முதற்பதிப்பு.

175. ஸ்ரீநிவாசராகவாச்சாரியார், ஸ்ரீ விஷ்ணுபுராணம், பி. இரத்தின நாயகர் & சன்ஸ், சென்னை, 1969, (ப.இ.).

176. ஸ்ரீபால் ஜீவபந்து, டி.எஸ்., தமிழகத்தில் ஜைனம், ஜைன மடம், கோலாப்பூர், 1975, முதற்பதிப்பு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருத்தரங்கக் கட்டுரைகள்

1.	அகத்தியலிங்கம், ச.,	இலக்கிய ஆய்வுக் கட்டுரைகள்
2.	திருஞானசம்பந்தன், பெ.,	இந்திய வீடுபேற்று நூல்களி டையே திருக்குறள், திருக்குறள் ஆய்வகம், மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1978.
3.	முருகரத்தனம், தி.,	இந்தியக் காம நூல்களிடையே திருக்குறள், திருக்குறள் ஆய் வகம், மதுரைப் பல்கலைக்கழ கம், மதுரை, 1978.
4.	வேலாயுதம், பே. க.,	புராணம்—பொருளும் விளக்க மும், தமிழ்த்துறை, பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி, திருச்சி, 1982.
5.	,,	வேல் அட்டவணை, தமிழ்த் துறை, பெரியார் ஈ. வெ. ரா கல்லூரி, திருச்சி, 1982.

ஆய்வேடுகள்

1.	இளங்கோவன், கு. இரா.,	''குடி அரசு'' இதழ்க் கவிதை கள், எம். ஃபில்., பட்ட ஆய் வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், 1984.
2.	சக்குபாய், இரா.,	பெரியார் ஈ. வெ. ரா. வின் இலக்கியக் கொள்கை, எம். ஃபில்., பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1979.
3.	நெடுஞ்செழியன், க.,	மெய்க்கீர்த்திகள், எம். ஃபில்., பட்ட ஆய்வேடு, மதுரைப் பல்கலைக்கழகம், 1978.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அஞ்சல் வழிக் கல்விப் பாடங்கள்

1. இராமநாதன், ந., பெரியாரியல் ஓர் அறிமுகம், பெரியார் சு.ம.பி.நி. அஞ்சல் வழிக் கல்லூரி பாடத் தொகுப்பு 1, சென்னை, 1982—83.

கலைக் களஞ்சியம்

1. கலைக் களஞ்சியம் தொகுதி 1 தமிழ் வளர்ச்சிக் கழகம்
2. கலைக் களஞ்சியம் தொகுதி 2 தமிழ் வளர்ச்சிக் கழகம்
3. கலைக் களஞ்சியம் தொகுதி 3 தமிழ் வளர்ச்சிக் கழகம்
4. கலைக் களஞ்சியம் தொகுதி 8 தமிழ் வளர்ச்சிக் கழகம்
5. திருவாங்கூர் ஆர்க்கியாலஜிக்கல் வெளியீடு எண் 28 & 29
6. கூத்த நூல்.

நாளிதழ்

1. வீரமணி, கி., (ஆசிரியர்) விடுதலை, 20-3-78, பெரியார் சு. ம. பி. நி. வெளியீடு' சென்னை.

கிழமை இதழ்

1. தந்தை பெரியார், குடியரசு, 19-12-37.

திங்கள் ஈரிதழ்

1. இமயவரம்பன், கோ., (ஆசிரியர்) உண்மை, மே, 1970, பெரியார் சு. ம. பி. நி. வெளியீடு, சென்னை.
2. ,, உண்மை, மார்ச்சு, 1982, பெரியார் சு. ம. பி. நி. வெளியீடு, சென்னை.
3. ,, உண்மை, ஏப்ரல், 1982, பெரியார் சு. ம. பி. நி. வெளியீடு, சென்னை.

திங்களிதழ்

1. ——— சோவியத்து நாடு, ஏப். 1985.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆண்டு மலர்

1. நெடுஞ்செழியன், க., மயங்கா மரபு, பெரியார் ஈ. வெ. ரா. கல்லூரி, ஆண்டு மலர், 1982.

2. மீனாட்சிசுந்தரம், தெ. பொ., கழகத்தின் 1008-வது வெளியீட்டு விழா மலர், கழகம், சென்னை, 1961.

நாட் குறிப்புக்கள்

1. பகுத்தறிவாளர் நாட்குறிப்பு, 1980, பெரியாராண்டு 101-102
2. பகுத்தறிவாளர் நாட்குறிப்பு, 1981, பெரியாராண்டு 102-103
3. பகுத்தறிவாளர் நாட்குறிப்பு, 1982, பெரியாராண்டு 103-104
4. பகுத்தறிவாளர் நாட்குறிப்பு, 1983, பெரியாராண்டு 104-105
5. பகுத்தறிவாளர் நாட்குறிப்பு, 1984, பெரியாராண்டு 105-106
6. பகுத்தறிவாளர் நாட்குறிப்பு, 1985, பெரியாராண்டு 106-107

வெளியீடு : பகுத்தறிவாளர் கழகம், தஞ்சை.

அகராதி முதலியன

1. கதிரைவேற்பிள்ளை, நா., தமிழ் மொழியகராதி, ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி, 1984, ஆறாம் பதிப்பு.

2. சிங்காரவேலு முதலியார், ஆ., அபிதான சிந்தாமணி, ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி, 1983, மூன்றாம்பதிப்பு.

3. ——— பரிசுத்த வேதாகமம், இந்தியா. பாகிஸ்தான், இலங்கை வேதாகமச் சங்கம், (ப.இ.),(ஆ.இ.),

4. ——— முண்டோக்கிய உபநிடதம், தமிழ்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

BIBLIOGRAPHY

1. Aiyar, A.V.S. — Kabilarahaval,

2 Aiyankar, K. — Some Contributions of South India to Indian Culture, Cosmo Publication, New Delhi, 1983.

3. Aiyangar, S.K. — Journal of Indian History, G.S.Press, Madras, 1944.

4. Aiyangar, T.R.S. — The ancient Dravidians, The Tamil University Publishing House, Madras, 1925.

5. Ambedhkar, B.R. — The Buddha and His Dhamma, Siddharth Publications, Bombay, 1974.

6. Anaimuthu, V. — Periyar E.V.R. to the Progress of Atheism, Periyar Publications, Trichy.

7. Andronov, M. — Two Lectures on the History of Language Families, Annamalai University, 1968.

8. Animasen Gupta — Essays on Sankya and other Systems of Indian Philosophy, (Part I & II), M.R. Son, Allahabad.

9. Annemarie D-Waal Malefijt — Images of Man, Alfired Aknopt, New York, 1975.

10. Antonova, K. & Others — A History of India (Books I & II), Progress Publishers, Moscow, 1978 & 79.

1. Asirvatham, A. — Concise of Logic, Tirucby, 1977.

12. Ayyar, G.V.N. — Orgin and Early History of Saivisam in South India, Madras, 1936.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13. Baker & Fredrick — Astronomy, Van Nastrand Rein hold company, New York, 1971, 9th Edition.

14. Basham, A.L. — Aspects of Ancient Indian Culture, Asia Publishing House, 1970.

15. Basham, A.L. — History and Doctrines of Ajivikas, Luzac & Co., Ltd. London, 1951.

16. Basham, A.L. — The wonder that was India, Rupa & Co., Delhi, 1971.

17. Bhattacharya, B. — Saivism and the Phallic World, Vol. I & II, Oxford & IBH Publishing Co., 1975.

18. Bhattacharya, H. — The Cultural Heritage of India, Vol.III, The Ramakrishna Mission Institute of Calcutta, 1969.

19. Bishop Donald, H. — Indian Thought—an Introduction, Wiley Eastern P. Ltd., New Delhi, 1975.

20. Brown, Percy — Indian Architecture, (Budhist & Hindu), 1959.

21. Burnell — On The Aindra School of Sanskrit Grammarians, London, 1875.

22. Campbell, Joseph — Philosophies of India, Routledge & Kegan Paul Ltd., London.

23. Chakravarthi Nayanar, A. — Humanism and Indian thought, Principal Miller Lectures, 1935.

24. Charless Drekonier — Kingship in Early India.

25. Chatterji, S.K. — Dravidian, Annamalai University, 1965.

26. Chatterji, S.K. & Others — The Cultural Heritage of India, Vol. I & II, The Ramakrishna Mission Institute of Calcutta, 1970.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

27. Chattopadhyaya, Debiprasad — Indian Atheism, Peoples Publishing House, New Delhi, 1980.

28. Chattopadhyaya, Debiprasad — Lokayata, Peoples Publishing House, 1977,

29. Chattopadhyaya, Debiprasad — What is Living and What is Dead in Indian Philosophy, Peoples Publishing House, 1977.

30. Ch'en, Jerome — Mao Papers, Oxford University Press, India, 1971.

31. Cowell — Sarvadharsana Samgraha, K. P. & Co, London.

32. Das Gupta, S.N. — A History of Indian Philosophy, Vol. I-III, Cambridge, 1940.

33. Desai, P.B. — Jainism in South India, J.S.S.S. Sholapur, 1957.

34. Devdoss, T.S. — Hindu Family and Marriage, University of Madras, 1979.

35. Dhakshin Ranjan Sastri — A Short History of Indian Materialism, Book Company.

36. Durant, Will — Our Oriental Heritage, Simon & Schuster, Newyork, 1954.

37. Dutt, N.K. — Orgin and Growth of Caste in India, Calcutta, 1965.

38. Fairservis, Walter, A. — The Harappan Calender (Essay), IATR, Vol. I, 1980.

39. Fergusson, James — Tree and Serpent Worship, Indological Book House, Delhi, 1971.

40. Frazer, James — Totomism and Exogamy, MC Millan and Company, 1910.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

41. Griffith, T.H. Ralph — The Hymns of the RG.VEDA, Motilal Banarsidas, Patna, 1976, Reprint.

42. Hanumantha Rao, B.S.L. — Religion in Andhra, Hindu College Guntur.

43. Havel — The History of Aryan rule in India George G Harrap & Pvt. Ltd., London.

44. Hirianna — Outlines of Indian Philosophy, G.A. & Unwin, India, 1973.

45. Hirianna — Essentials of Indian Philosophy, G.A. & Unwin, India, 1973.

46. Jain, M.U.K. — Jain Sects and Schools, Concept Publishing House, Delhi, 1975.

47. John Jacob Meyar — Sexual Life in Ancient India, Motilal Banarsidas, Delhi, 1971.

48. Kalidoss Sikdar — Materialist Dialectics, PPH, New Delhi, 1977.

49. Kamaliah, K. C. — Preface in the Kural, Shashalam & Co., Jaffna, 1973.

50. Kane, P.V. — History of Dharmasastra, Vol. I to V, BORI, Pune, 1955.

51. Kannaiyan, V. — Scripts in and Around India, Govt Museum, Bulletin, Madras.

52. Keith, Arthur. — Man's Origin, 1926.

53. Kumar, P. — Sakti Cult in Ancient India, BPH, Varanasi, 1974.

54. Lorenzen, David, N. — The Kapalikas and Kalamukhas, Thomson Press India Ltd., New Delhi, 1972.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

55. Majumdar, A.K. — Indian Culture, Bharatiya Vidya Bavan, 1972.

56. Maxmuller, K.M. — The Six Systems of Indian Philosophy, Longman Green and Co., London, 1912.

57. Meenakshisundaram, T.P. — Advaitha in Tamil, University of Madras.

58. Nagaswamy, R. — Seminar on Herostones, TNDA, 1974.

59. Nourse, Allan, E. — Nine Planets, The Pyramid Publication, inc. Newyork, 1962.

60. Pillay, K. K. — A Social History of the Tamils, Vol. I, University of Madras, 1971.

61. Radhakrishnan, S. — Religion and Culture, Orient Paper Books, Delhi, 1968.

62. Rowland, Benjamin — The Art and Architecture of India, Penguin, 1959.

63. Sabnius, P. J. — 'Charwak' R.L. Foundation, Bombay, 1956.,

64. Sankrityayan, R. & Others — Buddhism-The Marxist Approach PPH, New Delhi.

65. Satish Chandra — History of Indian Logic, Calcutta University, 1921.

66. Shetty, V.T.R. — Brahiminism, Dalit Sahitya Academy, Bangalore.

67. Singh, R.C.P. — Kingship in Northern India, Motilal Banarsidas, Delhi, 1966.

68. Srinivas, M.N. — Social Change in Modern India, Orient Longman, 1977.

69. Srivatsa — Sun Worship in Early India,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

70. Subrahmaniya Sastri, P.S. — Tolkappiyam—Porul Atikaram, Kuppusamy Sastri Research Institute, Madras, 1956.

71. Suryanarayana Sastri, S.S. — The Sankhya Karika of Isvara Krsna, University of Madras, 1973.

72. Thirugnana Sambandam, P. — Indian Culture-An amalgam of Dravidian and Aryan, BITC, Madras.

73. Vatsayana — Kamasutra, (Tr) Dr. B. N. Basu, Medical Book Campany, Calcutta, April 1943.

74. Warder, A.K. — Indian Buddhism, Motilal Banarsidas, Delhi.

75. Zimmer, Heinrich — Philosophies of India, Routledge & Kegan Paul Ltd., London, E.C. 4, 1951.

ESSAYS AND PUBLICATIONS

1, A Note on Aintiram (Essay), Subramaniam, V.I,

2. Bulletin of the Institute of Traditional and Cultures

3. Caravan, June '80 (15—30)

4. Dictionaries of Philosophy, Progress Publishers, Moscow, 1967

5. Encyclopaedia Britanica, Vol. 5, 6, 7 & 17.

6. Encyclopaedia Philosophy

7. Encyclopaedia of Religion and Ethics

8 'Notes on SwestikaIndian Antiquity', Vol. 10, Swell

9, Sanserit Dictionary, Monior Williams

10. The Book of Knowledge, The Waverly Book Co. Pvt..Ltd., London.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிழை திருத்தம்

பக்கமும்	வரியும்	பிழை	திருத்தம்
4	1	பதனளியோர்	பதனெளியோர்
12		அடிக்குறிப்பு 3, 4	வானமாமலை த. ப. த., ப. 250, சிவப்பிர காசம்
14	10	காலாரா	காலாற
22	18	உறும்	ஊறும்
28	32	நட்பு	நடப்பு
41	13	பொய்யோரது	பொய்யோராது
51	2	ஆசிரியர்	ஆரியர்
60	2	உணர்வே	உணவே
63	1	அசுரசர்கள்	அசுரர்கள்
66	24	நாகரிகத்திற்கு	நாகரிகத்திற்குரிய
70	22	இந்திரத்தத்துவம்	இந்திரத்துவம்
101	22	என்று	என்ற
114	11	நொடியோன்	நெடியோன்
134	3	கூறியவாராம்	கூறியவாறாம்
135	7	வேண்டிய	வேண்டியே
150	4	நுற்பொருள்	நூற்பொருள்
156	2	காற்றிணை	காற்றினை
156	4	எழுத்துர	எழுத்துரு
156	8	புறந்திசைக்கும்	புறத்திசைக்கும்
175	6	கிளையென	கிளையாவன
176	18	புகுதைத்	புகுவதைத்
177	8	பெற்றான்	பெற்றாம்
197	12	மண்டினி	மண்டிணி
224	2	பேரறிவர்ளராகிய	பேரறிவாளராகிய
243	20	இசைப்புறனாகநின்	இசைப்புறனாகநீ
250	22	பெருந்தினைப்	பெருந்திணைப்
250	32	அரியத்	அறியத்
256	13	மனிலநலங்	மனிதநலங்
293	6	தேயத்து	தேஎத்து
302	13	மாக்கடலினன்	மாக்கடவினன்
303	14	நகரத்தில்	நரகத்தில்
318	24	ஒப்பணையிலும்	ஒப்பனையிலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

319	26	திணைப்புனத்தில்	தினைப்புனத்தில்
321	3	குறுகார்	குருகார்
353	5	திகழ்பவன்	திகழ்பவனுக்கு
367	24	தொழில்மர்க்கள்	தொழில்மாக்கள்
368	14	ஆயிரத்துஎண்	பதினாறுநூறாயிரம் பொன்
373	8	இன்னொக்கற்	இனனொக்கற்
373	14	நீள்நிற	நீல்நிற
376	21	தென்கடல்	தெண்கடல்
376	28	துய்ப்போ	துய்ப்பே
378	18	நாடாமல்	நாடாமால்
398	20	ஆவண	ஆவன
898	30	ஆராத்	ஆறாத்
402	24	மருகின்	மறுகின்
403	27	நல்லுழி	நல்லூழி
412	26	கந்தருவம்ணம	கந்தருவமணம்
412	30	நடுவனாக	நடுவணாக
413	11	மறையோன்	மறையோர்
430	23	புண்ணியுமும்	புண்ணியமும்
445	21	அலக்கழிப்போம்	அலைக்கழிப்போம்

7948

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரையிலிருந்து

தமிழ் இலக்கியத்தில் 'உலகாய்தம்' என்னும் ஆய்வு நூலைப் படித்தேன். கற்றுத் தேர்ந்து தெளிந்த சிந்தனையுடன் வரையப்பட்ட பயனுள்ள நூல் என்பது கண்டு மகிழ்ந்தேன்.

பலவற்றைப் படித்தறிவது ஒரு நிலை. அவற்றை ஒரு முறையான சிந்தனைக்கு உளப்படுத்தி, கருத்து விளக்கம் அமையத் தொடுப்பதும், அவற்றின்வழி தெளியப்படாத உண்மைகளைத் தெளிவிப்பதும் - சில முடிவுகளை நாட்டுவதும் ஆய்வுத் திறனுடையார்க்கே ஒல்லுவதாம்.

இந்த நூலை வரைந்த முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்களின் அறிவாற்றலும், ஆய்வுத் திறனும், நுண்ணுணர்வும், நடைத்தெளிவும், ஏது காட்டலும், கொள்கை நாட்டும் திறனும் பாராட்டத் தக்கவை என்பேன்.

....

தமிழினம் - தன்மானமுள்ள இனமாகத் தலைநிமிர்ந்திட மூடநம்பிக்கைகளை அலசி ஆராய்ந்து நீக்கிப் புத்துணர்வு பெற்றிட, தந்தை பெரியார் - ஈன்று புறந்தந்து வளர்ந்த 'சுயமரியாதை இயக்கம்', அந்த நாள் தமிழர்களிடையே மலர்ந்திருந்த உலகாய்தச் சிந்தனைகளின் மறுதாக்கம் - புதிய விளைவு என்று எடுத்துக்கூறும் திறன் போற்றத் தகும்.

தமிழர் வாழ்வினில் ஆர்வம் கொண்டவர்களும், தத்தம் சமயவழிச் சிந்தனைகளை மறு ஆய்வு செய்யக் கருதுபவர்களும் - வைதிகப் போலிச் சமய மயக்கத்திலிருந்து மக்களை விடுவிக்க விழைவாரும், தவறாது படித்தறிய வேண்டிய பலப்பல கருத்துக்களைச் சிந்தனைக்கு விருந்தாக்கியுள்ளார் இதன் ஆசிரியர் எனது பாராட்டுக்குரிய முனைவர் க.நெடுஞ்செழியன் அவர்கள்.

— பேராசிரியர் க.அன்பழகன்

கல்வி அமைச்சர்
தமிழ்நாடு அரசு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar